இளங்குமரனார்

# தமிழ்வளம்

## 27

### 1. கழக ஆட்சியர் வ.சு.வரலாறு

*ஆசிரியர் :*

*முது முனைவர்* **இரா.இளங்குமரன்**

**வளவன் பதிப்பகம்**

*சென்னை - 600 017.*

நூற் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : **இளங்குமரனார் - தமிழ்வளம் 27** |
| ஆசிரியர் | : இரா. இளங்குமரன் |
| பதிப்பாளர் | : கோ. இளவழகன் |
| பதிப்பு | : 2010 |
| தாள் | : 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : 1/8 தெம்மி |
| எழுத்து | : 11 புள்ளி |
| பக்கம் | : 368 + 16 = 384 |
| நூல் கட்டமைப்பு | : இயல்பு (சாதாரணம்) |
| விலை | : உருபா. **360/-** |
| படிகள் | : 1000 |
| நூலாக்கம் | : செவன்த்சென்ஸ் கம்யூனிகேசன்ஸ் |
| அட்டை ஓவியம் | : ஓவியர் மருது |
| அட்டை வடிவமைப்பு | : வ. மலர் |
| அச்சிட்டோர் | : ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்சு இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**வளவன் பதிப்பகம்**

எண் : 2 சிங்கார வேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

# பதிப்புரை

இலக்கிய இலக்கணச் செம்மல் முதுமுனைவர் **அய்யா இளங்குமரனார்** அவர்கள் எழுபத்தைந்து ஆண்டு நிறைவு எய்தியதைப் போற்றும் வகையில் தமிழ் இளையர்க்கென்று அவர் எழுதிய நூல்களையெல்லாம் சேர்த்து எழுபத்தைந்து நூல்கள் கடந்த 2005 - ஆம் ஆண்டு திருச்சித் திருநகரில் வெளியிட்டு எம் பதிப்புப் பணிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டோம்.

இப்பெருந்தமிழ் அறிஞர் எழுதிய படைப்புகளை 20 தொகுதிகளாக (1 முதல் 20 வரை) அவரின் 81-ஆம் ஆண்டு நிறைவையொட்டி கடந்த 2009 ஆம் ஆண்டில் வெளியிட்டுப் பெருமை சேர்த்தோம். பெருமைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அவர் தம் அறிவு விளைச்சலை **21 முதல் 40 வரை** 20 தொகுதிகளை 83-ஆம் ஆண்டு (2012) நிறைவையொட்டி தமிழுலகம் பயன்கொண்டு செழிக்கும் வகையில் வெளியிடுகிறோம். அவர் தம் அருந்தமிழ்ப் பணியை வணங்கி மகிழ்கிறோம்.

இப்பெருமகன் வாழும் காலத்திலேயே இவர் எழுதிய எழுத்துக்கள், பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிடுவது என்பது தமிழ்நூல் பதிப்பு வரலாற்றில் போற்றி மகிழ்வதற்கான, அனைவரும் பின்பற்றுவதற்கான அரும்பெரும் தமிழ்ப் பணியாகும்.

இவர் தந்நலம் கருதாமல் தமிழ் நலம் காத்து வருபவர். தம்மைமுன்னிறுத்தாது தமிழை முன்னிறுத்தும் பெருந்தமிழறிஞர். தமக்கென வாழாது தமிழ்க்கென வாழ்பவர். ஒருநாளின் முழுப் பொழுதும் தமிழாகவே வாழும் தமிழ்ப் போராளி. சங்கச் சான்றோர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க அருந்தமிழறிஞர். தமிழ் இலக்கண - இலக்கிய மரபைக் காத்து வரும் மரபு வழி அறிஞர். ஆரவாரம் மிகுந்த இன்றைய சூழ்நிலையில் படாடோபம் இன்றியும், விளம்பரப் போலிமை இன்றியும், தமிழ் மொழியின் ஆழ

அகலங்களை அகழ்ந்து காட்டும் தொல்தமிழறிஞர். மொழிநூல் கதிரவன் பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வில் அவர் காட்டிய வழியில் தம் தமிழாய்வைத் தொடர்பவர்.

தமிழாய்வுக் களத்தில் தம் ஆய்வுப்பயணத்தைத் தொடங்கும் தமிழ் ஆய்வாளர்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் தங்கத் தட்டில் வைத்துப் பொற் குவியலாகத் தந்துள்ளோம். எம் தமிழ் நூல் பதிப்புப் பயணத்தில், தமிழ்த்தென்றல் திரு.வி.க.வையும், தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளையும், மொழிநூல் கதிரவன் பாவாணரையும், தமிழ் மொழிக்காவலர் இலக்குவனாரையும் வழிகாட்டியாகக் கொண்டு தமிழ்நூல் பரப்பின் எல்லையைக் கண்டு காட்டும் சங்கத்தமிழ்ச் சான்றோராக விளங்கும் **ஐயா இளங்குமரனார்** வாழும் காலத்திலேயே அவர் எழுதிய நூல்களை வெளியிடுவதை யாம் பெற்ற பேறாகக் கருதுகிறோம். தமிழர் இல்லம்தோறும் இருக்கத்தக்க இவ்வருந்தமிழ்ச் செல்வங்களைத் தமிழ் இளம் தலைமுறைக்கு வைப்பாகக் கொடுத்துள்ளோம்.

**“ சலுகை போனால் போகட்டும் – என்**
**அலுவல் போனால் போகட்டும்**
**தலைமுறை ஒருகோடி கண்ட – என்**
**தமிழ் விடுதலை ஆகட்டும்.”**

பாவேந்தர் வரிகளை நினைவில் கொள்வோம்.

**- பதிப்பாளர்.**

# பெறும் பேறு

**வளம்** *எங்கே இருக்கிறது?*

*வளம் எங்கேயும் இருக்கிறது! அஃது இல்லாத இடமே இல்லை!*

*வளம் எங்கும் இருப்பதை எப்படி அறியலாம்?*

*வளத்தைத் தேடும்* **உளம்** *இருந்தால், வளம் எங்கேயும் இருப்பதை அறியலாம்?*

*வளத்தின் அளவு என்ன?*

***வளத்தின் அளவும் உளத்தின் அளவேயாம்!***

*உளத்தில் வளம் இல்லையானால், உள்ள வளமும் உடையவனுக்கும் உதவாது ஊருக்கும் உலகுக்கும் உதவாது!*

*வளத்தைத் தரும் உளத்தை ஒருவர் வாய்க்கப் பெற்றால் போதும்!*

**அவ்வளம் குன்றியளவானால் என்ன?**

**குன்றத்தனைய வளமானால் என்ன?**

**தினை அளவானால் என்ன?**

**பனை அளவானால் என்ன?**

**வளம் வளமே!**

*தேனீ வளம்? தினைத்தனை அளவுப் பூவில், தேனீ கொள்ளும் தேன் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணரும் தேன் வளம் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணர்வதே வளம், தேனீ கொணர்வது வளமில்லை என எவராவது கூறுவாரா?*

*வளம் வளமே! அவரவர் உழைப்பு, அறிவுத்திறம், உண்மையறிவு, பட்டறிவு, கால-இட-சூழல் கொடை- ஆகியவற்றைப் பொறுத்தது அது.*

**பொருள் மட்டுமா வளம்?**

**புலமை வளமில்லையா?**

*ஊக்குதல் உதவுதல் உறுதுணையாதல் ஒன்றுதல் ஆயவை - வளமில்லையா?*

*எல்லாம் வளமே! "மல்லல் வளனே" என்பது தொல்காப்பியம்.* ***(உரி.7)*** *உடலாலும் வளம்; உழைப்பாலும் வளம்; உணர்வாலும் வளம்; உரையாலும் வளம்;* "**வளம் பட** *வாழ"* *வேண்டாதார் எவர்?* **வளம் பெற** *வேண்டாதார் எவர்?*

**"வளந்தலை மயங்கிய வஞ்சி முற்றம்"**

*என்பது சிலம்பு! வளத்தின் அளவு,* ***"அளந்து கடை அறியாவளம்"*** *என்பது* ***(25:33-34)***

**"நாடென்ப நாடா வளத்தன"**

*என்பது நாட்டின் இலக்கணம்!* ***எளிமை, இனிமை, இறைமை, நிறைமை*** *என மக்கள் வாழ்ந்த நாள் இலக்கணம்! இன்றோ,*

**நானில வளங்களையும் நாடா நாடில்லை!**

**எந்த நாடு ஏற்றுமதி செய்யவில்லை?**

**எந்த நாடு இறக்குமதி செய்யவில்லை?**

*பாலைவளத்தை நாடிச்சோலை நிற்றல் வெளிப்படை என்றால், சொல்வானேன்?*

*நாடாவளத்தில் குப்பைக்கீரை சேராதா? குறுந்தூறு சேராதா?*

***வளத்தை வழங்குதல் தான் பிறவிக் கடனே யன்றி அளவிடும் பொறுப்பு வழங்குவார்க்கு இல்லை! பெறுவார் பொறுப்பு.*** *ஆனால்,*

*வளம் பெற்றுப் பெற்றுப் பெருகி வாழ்ந்தவர், அவ்வளத்தைத் தமக்கு வழங்கிய மண்ணுக்கு மறித்து வழங்கிப் 'பெற்ற கடனைத் தீர்க்காமல் போனால்' கடன்காரராகவே போவது மட்டுமன்றி, பிறவி அடையாளமே இல்லாமலும் போய்விடுவார்!*

*பெற்றவர் வழியாகக் கருவிலே பெற்ற திரு என்ன! கற்ற கல்வியால் பெற்ற வளம் என்ன! பட்டறிவால் - ஆழ்மன ஆய்வால் - தேடிக் கொண்ட வளங்கள் என்ன என்ன!* **பிஞ்சுப் பருவ முதல் பெரும் பிரிவு வரை பெற்றவற்றை, அந்நிலைப்பருவத்தர்க்குப் பருவமழை போலப் பலப்பல வகையாலும் வழங்குதல் வாழ்வார் வாழ்வுச் சீர்மையாதல் வேண்டும்!**

*புரிவு தெரிந்த நாள் முதல் புலமை பெருகிவரும் அளவுக்குத் தகத்-தகத் தொல்காப்பியர் ஆணை வழி,*

**"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
**ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"**

*என்னும்* **நால்நெறிக் கடன்களையும் நிறைவேற்றல் வேண்டும்! கூற்றையும் ஆடல் கொள்ளும் கொள்கை இதுவென உணர்வார் ஓயார், ஒழியார்; சாயார்; சரிந்தும் போகார்!**

*என் இளந்தைப் பருவமே, ஆசிரியப் பருவமாகிவிட்டது. அக்காலச் சூழல் அது.*

*பிறந்தநாள் : **30.01.1930***

*ஆசிரியப் பணி ஏற்ற நாள்: **08.04.1946***

*கால் சட்டை போடும் மாணவப்பருவத்தில் வேட்டி கட்டும் ஆசிரியனாகி விட்டேன்! "மூன்றாண்டு ஆசிரியப் பணி செய்தால் போதும்! புலவர் தேர்வைத் தனியாக எழுதலாம்" என்னும் வாய்ப்பு! அவ்வாய்ப்பைச் சிக்கெனப் பற்றியமையால் **1949, 1950, 1951** ஆகிய மூவாண்டுகளில் தொடர்ந்து நுழைவுத் தேர்வு, புலவர் இடைநிலைத் தேர்வு, புலவர் நிறை நிலைத் தேர்வு எனச் சிறப்புற வெற்றி வாய்ப்பு எய்தியது. உயர்பள்ளி, மேல்பள்ளி என்பவற்றிலும் பல்கலைக் கழகத் தமிழியல் ஆய்வுக் களத்திலுமாக ஏறத்தாழ **43***

ஆண்டுகள் தமிழ்வாழ்வாக வாழ வாய்த்தது. தமிழ்த்தொண்டும், தமிழ்நெறித் தொண்டும் என்றும் விடுதல் அறியா விருப்பொடு செய்து கொண்டிருத்தலே இயற்கையோடு இயைந்த வாழ்வாகி விட்டது!

புலமைத் தேர்வுக்குரிய பாடத்தளவிலோ, நூல்களின் அளவிலோ என் கல்வி நின்றது இல்லை! தொல்காப்பியம் முதல் இற்றைநாள் நூல்கள் வரை இயன்ற அளவால் தமிழ்வளம் பெறுதலை நோன்பாகக் கொண்டு கற்கும் பேறுபெற்றேன். பேராசிரியர் சி.இலக்குவனார், மொழிஞாயிறு பாவாணர், நாவலர் ச.சோ.பாரதியார், வரலாற்றுச் செம்மல் அரசமாணிக்கனார், பைந்தமிழ்ப் பாவலர் அ.கி.பரந்தாமனார், உரைவேந்தர் ஒளவை சு.துரைசாமியார், மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார், தாமரைச் செல்வர் வ.சுப்பையனார், ஈரோடு வேலா, குழித்தலை மீ.சு. இளமுருகு பொற்செல்வி, பதிப்புச் செம்மல் மெய்யப்பனார், பாரதி சோ.சாமிநாதனார், தமிழ்ப்போராளி இளவழகனார், தமிழ் மீட்புக்குத் தலைநின்ற ஆனாரூனா, பாவாணர் அறக்கட்டளையர் கோவலங்கண்ணனார், மலையக மாரியப்பனார் இன்னர் நெருக்கத் தொடர்புகள் வாய்த்தன.

இளந்தைப் பருவத்திலேயே பாவேந்தர், ஓகி சுத்தானந்த பாரதியார், கவிமணியார், கவிராச பண்டித செகவீர பாண்டியனார், அறிஞர் மு.வ. ஆயோர் அரிய காட்சியும் சின்முறைச் சந்திப்புகளும் என்னுள் பசுமை நல்கின.

தமிழ்ப் பொழிவுகளும், ஆய்வுக் கட்டுரைகளும், குடும்பச் சடங்குகளும் என் மீட்டெடுப்புப் பணிகள் ஆயின!

எம் குடும்பக் கடமைகள் எம் பணியையோ தொண்டையோ கவர்ந்து கொள்ளா வகையில் இனிய துணையும் மக்களும் அமைந்தனர்.

அதனால், காலமெல்லாம் கற்கவும் கற்பிக்கவும் நூல் படைக்கவும் வாய்த்த வாய்ப்புப் பெரிதாயிற்று.

“அன்பும் அறிவும்” என்னும் நூல் தொடங்கிச் ‘செந்தமிழ்ச் சொற்பொருள் களஞ்சியம்’ எனத் தொடர்ந்து ஏறத்தாழ 400 நூல்கள் இயற்றவும் வெளியிடவும் வாய்த்தன.

குழந்தை நூல்கள், நூலக நூல்கள், ஆய்வு நூல்கள், அகராதிகள், உரைநூல்கள், பதிப்பு நூல்கள், பா நூல்கள், காப்பியங்கள், கதைகள், கட்டுரைகள், தொகுப்புகள் இலக்கண நூல்கள் எனப் பலப்பல திறத்தனவாய்ப் பால் வாய்ப் பருவத்தர் முதல் பல்கலைக் கழக ஆய்வர் வரைக்கும் பயன் கொள்ளும் வகையில் அவை அமைந்தன.

எதை எடுத்தாலும் பாடலாக்கல் ஒருகாலம்; கதையும் நாடகமும் ஆக்கல் ஒருகாலம்; பதிப்புப் பணியே ஒரு காலம்; உரை காணலே ஒரு காலம்; படிப்படியே சொல்லாய்வே வாழ்வென ஆகிவிட்ட காலம் என அமைந்தன.

இக் கொடைகள் வழங்கியவை பாரதி பதிப்பகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மணி பதிப்பகம், முருகன் பதிப்பகம், வேலா பதிப்பகம், மணிவாசகர் பதிப்பகம், வேமன் பதிப்பகம், மூவேந்தர் பதிப்பகம், பாவாணர் அறக்கட்டளை, சாகித்திய அகாதெமி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்மண் பதிப்பகம், அமிழ்தம் பதிப்பகம், வளவன் பதிப்பகம், மாணவர் பதிப்பகம், அமிழ்தமணி பதிப்பகம், திருவள்ளுவர் தவச்சாலை அறக்கட்டளை வெளியீடுகள் என விரிந்தன.

நூலுருப் பெற்று அச்சக வழியும் பதிப்பக வழியும் காணப்பெறாமலும் எதிர்பாரா மறைவுகளாலும் ஏறத்தாழச் சிறிதும் பெரிதுமாய் ஒழிந்தவை இருபதுக்கு மேல் ஆயின.

செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பாவை, குறள் நெறி, குறளியம், மலர்கள், ஆய்வரங்கங்கள் எனக் கட்டுரைகள் பெருகின. அச்சுக்கு வராதவையும் ஆகின! இவை என்றும் ஒருமுகமாய்க் கிடைக்க வாய்ப்பில்லை.

எம் நூல்கள் எம்மிடமே முப்பதுக்குமேல் இல்லாமல் மறைந்தன. எழுதியன எல்லாவற்றையும் ஒருமுகமாகப் பெறப் பலர் அவாவினார். தவத்திரு **ஆத்துமானந்த அடிகளார்** (ஆருயிர்க்கு அன்பர்) **அதில் தலைப்பட்டு நின்றார். ஆயர் ஆண்டகை சூசைமாணிக்கனார் சுடரேற்றினார்.** பாரதிதாசன் பல்கலைக்கழகம் மதிப்புறு முதுமுனைவர் பட்டம் வழங்கியது.

அதற்கு மகிழ்வுற்ற வகையால் பாவாணர் தமிழியக்கம் முதலாம் அமைப்புகளும், முனைவர் **திருமாறனார் முதலாம்** ஆர்வலர்களும் விழா ஒன்று எடுத்தனர். அவ்விழாத் தலைமையைத் திருத்தகு துணைவேந்தர் **பொன்னவைக்கோ** ஏற்றார். தவத்திரு ஆத்துமானந்த அடிகளார் வாழ்த்துரைத்தார். பொறிஞர் தமிழறிஞர் **பாலகங்காதரனார்** என் நூல்கள் சிலவற்றை ஒளிப்படியாக்கி உயரட்டைக் கட்டில் வழங்கி அவற்றை முழுதுறப் பெற மீளச்சிடுதல் வேண்டும் என்றார். தமிழாக்கப் பதிப்பே வாழ்வாக ஒன்றிய இளவழகனார் முழுதுற அச்சிட ஒப்பினார். அடிகளார் வெளியீட்டுப் பொறுப்பு ஏற்பதாகக் கூறினார். கிடைக்கும் நூல்கள் தவிர்த்துப் பிறவற்றையெல்லாம் அச்சிடும் திட்டம் கொண்டு ஏறத்தாழ இருபது, இருபது தொகுதிகளாக வெளியிடுவது என உறுதிப்படுத்தப் பட்டது. அவ்வகையில் வாய்ப்பதே, **“இளங்குமரனார் தமிழ்வளம்”** என்னும் இத் தொகை நூல்களாம்! இத் தொகையில் விடுபடும் நூல்கள் கட்டுரைகள், பாடல்கள் பலபல; தொகுக்க வாய்க்கா வகையில் கிட்டாவகையில் மறப்பு வகையில் விடுபாடுடையவை உள. எனினும் தொண்ணூறு விழுக்காடேனும் ஒரு முகமாகப் பெறும் பேறு வாய்க்கின்றது என்பது மகிழ்வூட்டுவதாம்!

மக்கள் வாழ்வு வளர்நிலையது! நூல்களும் வளர் நிலையவை! ஆதலால் ஒருவாழ்வுக் கொடை மட்டுமன்று ஈது; ஒருவாழ்வு பெறத் தக்க பல்பருவக் கொடையுமாம் எனல் சாலும்! இதன் அடிப்படையாம் எத்தேடலிலும் பெரிதும் தோயாமல் தமிழ்வளத் தேடலிலேயே காலமெல்லாம் சோம்பலைச் சுட்டெரித்து, இடுக்கணுக்கு இடுக்கண் ஆக்கி வாழ்ந்த வாழ்வுக் கொடையாம் இது!

இவ்வளத்தை முழுதுற எண்ணின் ஒன்று உறுதியாக வெளிப்படும். “நலவாழ்வு நல்வாழ்வு கருதாத - இயற்கை இறைமைப் பொதுமை கருதாத - எப்படைப்பும் எம்படைப்பில் இரா” என்பதேயாம். இவற்றைப் பயில்வார் பெறும் பேறும் அதுவாக அமையின் அப்பேறே யாம் **பெறும் பேறாம்.**

*இவ்வளம் வெளிவர விரும்பினோர் உழைத்தோர் உதவினோர் ஆய அனைவர்க்கும் நன்றிக் கடப்பாடுடையேன்! வாழிய நலனே! வாழிய நிலனே!*

*"நெல்லுக்கு உமியுண்டு"*

*"நீருக்கு நுரையுண்டு"*

*"புல்லிதழ் பூவுக்கும் உண்டு"*

*"குறைகளைந்து நிறை பெய்து"*

*"கற்றல், கற்போர் கடனெனல் முந்தையர் முறை"*

*இன்ப அன்புடன்,*

**இரா. இளங்குமரன்**

# உள்ளடக்கம்

பதிப்புரை ........ iii
பெறும் பேறு ........ vi

## நூல்

### கழக ஆட்சியர் வ.சு.வரலாறு

1. ஒரு பெருவிழா ........ 19
2. ஒரு மனிதர் ........ 23
3. பெருமகனார் பிறந்தார் ........ 26
4. இளமையும் கல்வியும் ........ 28
5. எப்பொருளும் ஆன திருவரங்கர் ........ 34
6. நூற்பதிப்புக் கழகப் பெருமை ........ 37
7. கழகக் கால்கோள் ........ 44
8. கழக நோக்கச் சிறப்பு ........ 48
9. ஆட்சியின் அருமை ........ 52
10. சென்னையில் முகவர் ........ 59
11. அடிமேல் அடி ........ 68
12. கோடையில் குளிர்தரு ........ 71
13. வீசு தென்றல் ........ 76

14. இரு பேரிடிகள் ........ 81

15. அடுத்தடுத்தும் அடை மழை ........ 86

16. இணைமலர்ப்பிணையல் ........ 93

17, தூண்டித் துலக்குதல் ........ 99

18. மூலவர் ........ 109

19. வியத்தகு வெளியீடுகள் ........ 114

20. துறைதோறும் தொண்டு ........ 124

21. செந்தமிழ்க் காவலர் ........ 131

22. வாரிபெருக்கி வளப்படுத்தல் ........ 144

23. புதுவழி புதுக்குநர் ........ 158

24. விழவறா விழுப்புகழ் ........ 164

25. தேடித்தொகுத்தலும் பேணிக்காத்தலும் ........ 179

26. உலகுவக்கும் ஒரு பணி ........ 197

27. மறைமலை மருகர் ........ 210

28. அறம்வளர் திறவோர் ........ 220

29. பேராசிரியப் பெருநிலை ........ 227

30. புலவரைப் போற்றும் புகழ்மை ........ 235

31. பேரும் புகழும் ........ 242

32. பலர்புகழ் பண்புகள் ........ 259

33. விழுமிய வேட்கை ........................................................................ 288

34. உரைமணி மாலை ........................................................................ 296

35. பாமணி மாலை ........................................................................ 307

36. நறுமலர் நாயகர் ........................................................................ 311

பின்னைணைப்பு :

1 புலமையர் வழங்கிய புகழுரை ..................................................... 314

2. புரவலர் வழங்கிய போற்றுரை ................................................. 327

3. கழக ஆட்சியர் வ.சு. அவர்கள் வரலாற்றில் இடம் பெற்றுள்ள காலக்குறிப்புகள் சில .......................................... 335

4. கழகம் நடத்திய மாநாடுகள், விழாக்கள் முதலியன .......... 338

5. சிறப்புப் பெயர் அகரவரிசை ..................................................... 343

6. கழக ஆட்சியர் பவள விழா மலரின் மாண்பு ........................ 360

37. குறிப்புகள் ........................................................................ 362

**சமய குரவர் நால்வர்**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
துணைவேந்தர், டாக்டர். வ.சுப.மாணிக்கம்
அவர்கள் அன்புடன் அளித்த

# அணிந்துரை

*தாமரைச் செல்வர் தமிழ்ப் பெருமகன் சுப்பையா பிள்ளை வரலாறு தனியொருவர் வரலாறன்று, நூற்றிதழ்த் தாமரை போலத் தமிழ்மொழிக் காப்பையும் வளர்ச்சியையும் பெருமையையும் புலமையையும் தன்னுட்கொண்ட மாபெரு வரலாறாகும். தனித் தமிழியக்கம், இந்தியெதிர்ப்பு இயக்கம், தமிழிசைக் கிளர்ச்சி, தமிழ் வழிபாடு, தமிழாட்சி, தூய தமிழிதழ், அச்சகம், நூல்நிலையம், தமிழ்க் கலைகள், புலவர் விழா, புலவரைப் போற்றல் என்பனவெல்லாம் இவர் வரலாற்றொடு தொடர்புடையவை.*

*பெரியவர் வ. சுப்பையா பிள்ளை தமிழ்வளர்ச்சிக்குத் தாமே கண்ட பதிப்பு நெறிகளும் நூன்முறைகளும் தலைப்புகளும் வியக்கத்தக்கவை. 'சொற்பொழிவு' என்ற நூல் வகையில் சங்க முதல் தமிழிலக்கியம் எல்லாம் காலத்திற்கேற்ற கைவடிவு பெற்றன, நூற்றுக்கு மேலான அறிஞர்களின் மதிநுட்பத்தையும் எழுத்து வன்மையையும் திருவுருவங்களையும் 'சொற்பொழிவு' என்னும் இவ்வுரை நடைச் சிற்றிலக்கியம் பொதிந்து வைத்திருக்கின்றது. எதிர்கால ஆய்ஞர்க்கு இவை தொடுமணற் கேணியாகும். சங்க இலக்கியப் பேழை என்பது தமிழுக்குத் தங்க இல்லப் பேழை என்பதனை வரலாறு சொல்லும். குழவியர், சிறார், இளைஞர், முதியோர், பெண்டிர், அயலோர், மாற்று மொழியினர் என அனைதிறத்தினர்க்கும் பக்குவ நூல்கள் வெளியிட்ட பார் புகழ் தமிழ்த்தொண்டு திருவரங்கனார் தோற்றிய வ. சுப்பையா பிள்ளை நிலைநாட்டிய கழகத்திற்கே உரியது.*

*மறைமலையடிகள் நூல்நிலையம் என்பது விலைமதிக்க முடியாத அருங்கலை மாளிகையாகும். தாமரைச்செல்வர் தம் முயற்சியால் தமிழன்னைக்குக் கட்டிய தமிழணி நிலையம் என்று உலகறிஞர் பாராட்டுகின்றனர். எவ்வளவு இளைய அறிவுடை நம்பிகள் இந்நிலையத்திற்கு நாள்தொறும் சென்று*

இருந்து குறிப்புத் தொகுத்து ஆய்வை விதைக்கின்றனர். இஃது அறிவாற்றுப்படையாக விளங்குகின்றது.

எதிர்மறையாகப் பார்த்தாற்றான் மெய்த் தொண்டுகளின் ஏற்றங்கள் புலப்படும். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என ஓர் அமைப்பு இல்லாதிருந்தால், கழகப் பாடநூல்கள் இல்லாதிருந்தால், சங்கவிலக்கியங்கட்கும், காப்பியங்கட்கும், தொல்காப்பிய முதலான இலக்கணங்கட்கும் சிற்றிலக்கியங் கட்கும், உரைப் பதிப்புக்களும், மேலுரைப் பதிப்புக்களும், அடக்கப் பதிப்புக்களும், உரைநடைப் பதிப்புக்களும் இல்லாதிருந்தால், மு.வ.வின் தெளிவுரை, திருக்குறள் நாட் குறிப்பு, திருவள்ளுவர் மலர் முதலான மலர்கள், மொழி பெயர்ப்புகள், புலவர் வரலாறுகள், அறிவியற் கொத்துக்கள், வடமொழி தமிழகர வரிசைகள், செந்தமிழ்ச்செல்வி இல்லாதிருந்தால், மலைகளிற் சிறந்த தமிழ்மலையான மறைமலையடிகளின் கடலனைய நூல்நிலையம் இல்லாதிருந்தால், இத்துணைக்கும் வினைமுதல்வரான திருவரங்கனாரின் இளவலான தாமரைச் செல்வரின் தெய்வவுணர்வும், குறிக்கோள் வீரமும், நீடிய ஆயுளும் இல்லாதிருந்தால், இருபதாம் நூற்றாண்டுத் தமிழன்னை ஒரு குழந்தை தூக்கிச் செல்லும் மெல்லுருவமாக இருந்திருப்பபாள். தாமரைப்பிள்ளையும் கழகமும் தோன்றி வளர்ந்து ஆற்றிய உழவுத்தொண்டினால் நம் தமிழன்னை தலைபலவும், கைகால் ப்லவும் பெற்று நாடி நரம்பெல்லாம் நூல்முறுக்கேறிக் குருதி அறிவொளி பெருகி, திசை நான்கும் ஓடி, ஐந்து கோடி மக்களும் பத்துககோடித் தோளில் செம்மாந்து தூக்குமளவு உயிர்வளம் தழைத்திருக்கின்றாள். இப்புகழ்ச்சி பெருமிகையன்று.

தொண்டாற்பழுத்த தமிழ்க் கிழவர் வ. சுப்பையாபிள்ளை வரலாற்றினைத் தொய்யா நடையில் முருகுபட எழுதியுள்ளார் புலவர் இளங்குமரனார். பகுதித் தலைப்புகள் இலக்கிய மணங் கமழ்கின்றன. கால முறையாகச் செய்திப் புனைவின்றியும் நடைப்புனைவோடும் இவ்வ வரலாறு அமைந்துள்ளது. தாமரைச் செல்வரின் வாழ்வு விரிவை அறிந்தார் இந்நூலை ஓர் அடக்கப் பதிப்பாகவே கருதுவார். எனினும் இம் முதற் பதிப்பு புதிய செய்திகள் பல பொதிந்த மூலப்பதிப்பாகும்.

இவ் வரலாற்றைப் படிப்பார், தமிழைப் படிப்பார், தமிழ்த் தொண்டு செய்வார், தொண்டாளர்களை மதிப்பார், தமிழ்ப் பிறப்பை மனங் கொள்வார். தமிழ்த் தொண்டினால் தமக்கும் ஒரு வரலாறு வரும்படி தமிழ்வாழ்வு நடத்துவார். இதுவே தாமரைச் செல்வர் தமிழர்பால் எதிர்பார்க்கும் தன்னலம்.

# FOREWORD

**Dr. K.R.SRINIVASA IYENGAR**
Retd. Vice-Chancellor
Andhra University.
Former Vice - President
Sathithya Akademi, Delhi.

It is with pleasure that I Write this Foreword to Pulavar R. Ilankumaran's detailed account of the life-work and times of Tiru Va Subbiah Pillau, whose name has become almost synonymous with the Personality, drive and achievements of the Tirunelveli South India Saiva Siddhanta Book- Publishing Kazhagam and its several affiliated instittuions. I have been a distant admirer of Tiru Va. Su for many years, and since my boyhood years in Tirunelveli. I have watched the Saiva Siddhanta Book-Publishing Society grow from its early auspicious beginings to its prsent impressive strength and healthy wide-ranging influence. I therefore welcome this opportunity to offer my own tribute to the Man and the Kaxhagam he has fostered with such care and clear sense of direction.

Dr. Johnson's words "slow rises worth by poverty depressed" had a close application to the first phase of Tiru Va Su's life and career, Tlhe fourth son of Vairamuthu Pillai and Sundarathammayar of Palayamkottai, Subbiah losthis father when barely three, and two of his brothers and his only sister before he was twenty-five. On his elder brother, Tiruvaranganar, senior by seven years, fell the responsibility of sustaining the family throught its difficult years. He found employment in a commercial establishment in Colombo in 1907, and during the next ten years, his monthly remittance were the mainstay of the family. In the meantime, Subbiah passed his S.S.L.C. in 1916 from St. Xavier's High School, Palayamkottai, and proceeded to Colombo to continue his studies. But not long after, illness made him return to Palayamkottai, however, he duly passed the London Matric in 1917 as a private candidate. Failing to secure admissin to the Madras Medical College in 1918, Va Su groped about for a while, till he presently found his great mission in life as salesman of the nectar of Tamil letters.

During his sojourn inColombo, Va Su's brother, Tiru varanganar, made the acquaintance of the notred Tamil scholar and writer, Maraimalai Adigal, arranged for the savant's memorable first visit to Colombo in 1914, and stimulated the sale of his books. It was during his second visit in 1917 that Va Su met the Adigal andlaid the foundation of his Boswellian relationship to the Master. That year also saw the establishment by Tiruvaranganar of Tiru - Sankar Company, a bookshop in Colimbo for the sale of the works of Maraimalai Adigal and other scholars. Tiruvaranganar, however, Soon realised that his real work lay inTamil Nadu, and hence moved to Coral Merchant Street, Madras, to organise the bookshop Tiru-Sankar Company, while asking Va Su to open in the family home at Palayamkottai a branch of the firm. Tiruvaranganar and Va Su firmly believed that the sale of good books, being verily the commerce of idean and knowledge and values., blessed the givers and takers alkie; no surfeit in the receiving, and no loss in the giving!

Tlhe next decisinve turn was the incorporation by the brothers, on 21 September 1920, of the Tirunelveli South India Saiva Siddhanta Book-publishing Kazhagam. The brother received much encouragement from Tiru M. Diraviyam Pillai and Tiru T.S. Visvanatha Pillai, and the Kazhagam commenced its career with and authorised capital of Rs. 50,000, made up of 5000 shares, each of Rs. 10. The capital was to be increased in 1952 to Rs. 1 lakh, and in 1963 to Rs. 2 lakhs. With the opening of the Madras Branch of the Kazhagam in February 1921, with Va Su as Manager on Rs. 35 per month (Tiruvaranganar shifting to the Tirunelveli Head Office), the Tirunelveli - Madras axis startedfunctioning with quiet efficiency and a change of missinary zeal.

The new publishing firm was active from the very beginning. The bookshop Tiru - Sankar Company. and the Saiva Siddhanta Book-publishing Corporation teamed together and merged, and in 1923 a Tamil monthly literary journal, 'Senthamil Selvi', waslaunched as an auciliary force pointing towards the same end. In book-publishing, the new firm aimed at the

diffusionof religious (especially Saiva), ethical, and worthy secular literature, classical as well as modern, and worthy secular literature, classicalas well as modern, and also at promoting a two-way Suez Canal-like traffic in letters:: Tamil into other languages,and Singnificant literature in other languages (notably English) into Tamil. There was to the a stress also on Scholarship, exegesis research, literary criticism and interpretaton. The first book to be issued under the Kazhagam imprint was, appropriately enough, Tiruvadi Pugazhamalai, and while the first year saw the publication of five books, the 2nd saw seven, the 3rdthriteen, the 4th twenty, and so on. Forty years after, In 1961, the 1008th book came out, and today the total in 1750 or more, averaging 25 per year, or one bookfor every 13 days during the entire 60-year period of the Kazhagam's existence.

Tiruvaranganar at Tirunelveli and Va Su at Madrasconstituted between them a resourceful and energetic publishing duumvirate for about 25 years, from 1920 to 1944. Good book-publishing is a taxing and trcky vocation that calls for a rare union of secular and spiritual qualities. A book has a soul as well as a body, aham and not alone puram it calls for the mobilisation of several instruments of production. Buildings, printing facilities, finance, editorial expertise,talent for marketing. pleasing and effective public relations, and above all a flair for the location of writing talent and its mobilisation :: all are needed. AndTiruvaranganar and Va. Su. were able to assemble a dedicated group of writers andeditors, and publish a body of literature (mainly in Tamil), both impressive in bulk and marked by a varegated richness. Tiruvaranganar's marriage to Maraimalai Adigal's daughter, Nilambikai, in 1927, and Va Su's to Mangayarkarasi (daughterof Tiru Aundiappa Pillai of Palayamkottai), in 1935 brought a humanising influence to the brothers' lives; and Tiruvaranganar in Tirunelvaly and Va Su in Madras worked in perfect co-ordination devoted to the claims of the hearth and equally to the exaction demands of book-publishing as well as advancing the other aims of the Kazhagam.

The untimely death of Tiruvaranganar, th Father of the Kazhagam, in 1944, followed by that of Nilambikai Ammal next year, was a double blow under which the publishing firm could not but reel for a time. It now became necessary for Va Su's wife, Mangayakarasi, to shift to Palayamkottai with her two daughters, so as to be able to look after Tiruvaranganar;s children and the aged mother-in-law., During the next eight years, Va Su gallan-tly contined at Madras, cookming his own meals, and living a life of simplicity, austerity and infallible regularity. And he laboured with redoubled dedication and saw that the progress of the Kazhagam didn't suffer,whether in Madras or at Tirunelveli, He bought the Janasakthi Press for Rs.20,000, re named it Appar Achakam, and had it opened by Omandur Ramaswami Reddiar in 1948. This gave a push to the Kazhagam's book-publishing activities and helped it to build an opulently diversified body of publications in a variety of formats;; mini, medium and large, paperback, calico, rexine,popular, and gold-lettered deluxe! learned commentaries on Tolappiyam, and other works of grammar;; the whole ensemble of the Sangam Classics;; the minor but no less significant literary forms (ula, kalambakam, thoothu, Kuravanji, andadi, pillaithamizh etc.) ;; the celebrated Tirukkural in a diversity of editons, one of them (with Mu Varadarjanar's paraphrase) achieving a sale of a million;; the classics of religions divination and ecastasy like Tirumandiram, Tevaram, Tiruvasagam and Tiruppugazh;; philosophical classics like Meikandar's;; the Sangam Classics in prose or in summary reecitals;; collections of speeches and conference papers;; historical and scientific works;; secular literature like fiction, essays and drama; children's literature; the works of Maraimalai Adigal; translations; research monographs in Tamil and in English; biographies, dictionaries..........well, God's plenty, in fact. The Kazhagam's list is a composite and comprehensive library by itself. No wonder it has been remarked that the Kazhagam, as an instittution, is older than the Annamalai,and Madurai KamarajUniversities; and its record of scholoarly publications in Tamil is more outstanding than that of the University of Mazdras.

In September 1950, the death of Maraimalai Adigal left a big void in theTamil world. By his last will and testament, he hadbequeathed his very considerable privare library of rare Tamil books and other scholarly works to the Kazhagam, and this priceless collection of about 4000 books was to become the necleusof the Maraimalai Adigal Memorial Library, which was duly opened by Tiru. M. Bhaktavatsalam on 24th August 1958, in a historic building in Linghi Chetti Street, The building has seminal associations with Ramalinga Vallalar, who is said to have delivered his rirst impromptu discourse there to and astonished assembly. The Library began with the 4000 of the Maraimalai Adigal collection and anothe 5000 in the Kazhagam's garner. Since then there have been steady accessions, includiug whole libraries like that of the historian,the late V. Rangachari; and today the library has about 35,000 books and rare manuscripts. Although located in a crowded part of the city, the Library is the haunt of Tamil scholars old and yound; and, for the committed, it is what anideal Library shouldbe, a Houseof Perpetual Enlightenment. I may be added that Maraimalai Adigal's ownhouse in Pallavaramhas also been turned by the Kazhagaminto a memorial Kalai Manram, and is serving the cause of arts and letters during the last two decades.

What becomes clear when lone reads Pulavar Ilan kumaran's account of the life of Tiru.Va. Subbiah Pilai is that the biography merges with the history of a dedicated family, as also with that of Kazhagamand its collateral institutions, and even with that of the Pure Tamil movement and the Tamil literary renaissance witnessed during the last sixty years. Tiruvaranganar and Va Su were closely linkedwith Maraimalai Adigal as disciples and heirs to his ministry in the service of Tamil. If Tiruvaranganar became the Adigal's son-in-law also, on Va Su fell the responsibility of cherishing and fostering the Maraimalai tradiontgs of integrity and high seriousness in Tamil scholarship. After performing the marriage of Tiruvaranganar's daughters, Mayilamami and Muthammal, Va Su thought of the marriageof his own daughters Vadivazhagiar and Vairamaniyar. The former was married in 1956 to Kalyansundaram, Va Su's

brother-in-law's elder son. The younger son, Mutukumaraswamy married Vairamani in 1959. And in yound Muthukumaraswamy - young but fully trained in Library Science- the Maraimalai Adigal Library has found a seasoned libratian,who has fosteredits growth in the right directions andmade it a veritable mecca for advanced Tamil studies and research.

Between 1920,the year of the Kazhagam's foundation, and today over sixty years have passed, For the first 25 years, the Tiruvarangam-Va Su duumvirate gave the right leadership to the Kazhagam. After 1944, althoughg Va Suhad to take upon himself the responsibilities at Madrasa swell as at Tirunelveli, he had good collaborators, and found in his sons-in-law admirable executants. At Tirunelveli, the Sivagnana Munivar's Library, the Thiruvalluvar Tamil College and the Kumaraguruparar Nursery School came up one after another. Branches of the Kazhagam have been established at Madurai, Coimbatore, Kumbakonam and Tiruchirappalli. Although never in exceptionally robust health (he had a period of acute illness at Jaffna in 1951), Va Su has both kept going the different institutions under his charge in a high pitch of efficiency and also constantly endeavoured to add new dimensins to their activities. He is a master builder, really:: he is a Kazhagam by himself, and always a power for good.

The incorporation of the Saiva Siddhanta Book-Publishing Foundation was an act of faith, a blow struck in favour of Tamil language, literature and culture. Like Maraimalai Adigal,the Kazhagam and Va Su have been advocation with evangelical fervour the 'Pure Tami' movement, it was Suryanarayena Sastri who first changed his Sanskritised name into the Tamil 'Parithimar Kalaignar' Likewise 'Swami Vedachalam' underwent a sea-change into '<araimalai Adigal'. In the pase there had doubtles been a priod of heavy and sometimes humourless Sanskritisation of Tamil with its native, homely and beautiful usages. This corresponded to the Latinisation, in mediaveval times, of English (or Anglo-Saxon) forms. In the 19th century, however,there was a determined move in England to prefer always the Saxon to the more recondite or polysyllabic Latin

word. But this too some times led to absurdities, and in course of time, after the swong between thesis and antithesis, the English language has been trying to arrive at a sensible, intelligible and lively synthesis, with a broad baseof unity that nevertheless permits surface variations depending on the locality, occasion or speaker, In Tamil Nadu, again.,the earlier Sanskritisation and the ,ore recent Anglicisation have tended to obscure the native hue and force and beautyy of Tamil, and the determined effort to return to easy and natural Tamil usage is certainly to be welcomed. On the other hand, linguistic 'purism' - in any extremely narrow sense of the term - is no virtue, and in the modern world teeming with new ideas, siturations and technologies, can even hamper the natural growth of a language. In hisintroduction to my Literature and Authorship in India (1943), E.M<. Forster described himself as a 'convinced impurist", implying that linguistic purism should not be pursued at the expense of intelligibility and the dynamic of linguistic growth in a fast-changing world. While without question there should be broadly understood norms of spoken and written language, a single adamantiune- law cannot be made to apply to all speakers and users of a language, pursuing as they may diversoccupatons, and caughtin all kinds of situations.

The Kazhagam's and Tiru Va Su's meritorious efforst to safeguard the sovereign interests of Tamil and to resist aggression by otehr languages (Hindi, for example) areworthy of all praise, but I also feel that within a broad framework of unity and uniformity, a certain play of variation in individual and situational usage is inevitable, and will be a signof healthy growth, And great and ancient and uniquely rich as is the Tamil language, it cannot quite ignore the need to build bridgesof understanding with the other languages of India, the classical Sanskrit and the living regional languages.

It is worth mentioning also that the Kazhagam, under Va Su's sleepless stewardship, has organised conferencesand Tamil Vizhas (festivals) to emplore the richesof Tamil leters and popularise the values and verities of the literature, are and cultureof the Tamil country. Thus there have been almost 20

conferences (at Tirunelveli, Madras and Madurai) on classics like pathuppattu, Nattrinai, Ettuthohai, Kalithohai, Purananooru, Theshorter epics and so on, and the lecturesgiven and the papers presented have been collected and published by the Kazhagam. As for the festivals, there was the first Tiruvalluvar Vizha at Pachayappa's College in 1935, amemorable event. Othershave follwed, theannual Maraimalai Adigal festivals, periodic festivals for book-releases or in commemoration of particular poetes and literary celebrities, seminarson select themes, the festival in 1977 in connection with Senbthamil SElvi's golden junbilee - these and other vixhas, carefully planned and organish\ed with every attention to detail by Va Su and his collegues, hav \e done their best ot keep the Flame of Tamil letters and culture alive and aloft.

Aside from his manifold activities directed towards the realisations of the far aims of the Kazhagam and its connected institutions, VA Suis knownin his own right as a writer, especially of books for children. He wrote for his children first, and his books have since become a legacy for all children, Besides, the kazhagam has sponsored the publication of about 300 books for children. For Va Su the past is his foundation, the present the arena of activity, and the future the threatre of his dreams and hopes and plans. He was one of the spirits behind the Tamil Protection SAngam launched in 1937, and he has outlined his 21-point programmed for the conservation and development of Tamil. With his uncanny flair for recognising and enlisting writing talent for engineering effectively the renaissance in Tamil letters, he has been able to build the Kazhagam's massive and may- sided publishing list. He takes a midwife's personal interestin almost every book that appears over the Kazhagam imprint, and he is said to attend to proof-reading even today.

And in sun, how shale we take the measure of the man VA Su or of his work spread over 60 years and in so many directions? Pulavar Illankumaran has gathered together a number of tributes, in prose and in verse, to VA Su by a galaxy of his contemporaries, admirers and friends. A dutiful son, brother, householder and patriarch of the family; a man of

ceaselessindustrylabbouring always unmindful of reward and unafraid of possible failure; a man with no need for vacations; a Karmayogi with skill in works and a will to do his best, and every waiting on Grace; the lover of all loversof Tamil, without distinction of caste, creedor positon; editor of Senthamil Selvi for 55 years; a publisher with a rare knowledgeof the instruments he has to deploy, and with a talent for choosing the right people for the work on hand; a leader evoking loyalty all roundand eliciting their fullest co-operation; a visionary with a feelong for the future and its paramount needs; ‘Padma Sri’ and ‘Senthamil Selvar;; stauch adherent of aram, or dharma: such has been, and such is, Tiru VA Su, who has sustained himself woith the Kazhagam’s ideals and inspirations, and also sustained the Kazhagam with his very life-breath. Agent, Secretary Managing Director, the designations haven’t mattered mu;ch to him, for total dedication has been the sole criterion of his sevice. While these achievem,ents undert the Kazhagam’s banner have been phenomenal enough, Va Suis without pride, and he is far from complacent. He knows that there is still a long way to go. He is a man of simple food haits, wedded to simplicity and austerity; and he can readily forget and forgive an injury. He abhors waste, idleness and gossip; and, deep within, he is strong with the strength of his religious faith and reliance on the Grace Divine. Admirers have hailed him as a university in hikself, and as a waling library, but these desfcriptions canot exhaust the Manor his work. He lightly carries the weight of his 84 years, and he has not still ceasedto hanker afterfurther goals of aspiration and achievement. He is indeed the Happy Warrior who has made his life a grand God-given opportunity for unselfish unblemished and unending service to Tamil. On this occasion I wish his many more years of active and useful life, and all joy of fulfilment in the new tasks that he may undertake.

**K.R.SRINIVASA IIYENGAR**

152, Kutchery Road,
Mylapore, Madras : 600004
24th August, 1981

# நூலாசிரியர் நுதல்வு

*கழக இலக்கியச் செம்மல்*

**புலவர் இரா. இளங்குமரன்**

*தலைமைத் தமிழாசிரியர்*

*மு.மு.உ. பள்ளி, மதுரை.*

*“சுருங்கச் சொல்லல்” என்பது பத்துவகை அழகுகளுள் தலையாயது. சுருக்கி எழுதுக என்பது இந்நாள் தேர்வுப் பயிற்சிகளுள் ஒன்று! ஆனால், “விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்” என்று கழகச் சான்றோர் உரைத்தது போன்ற தொரு பெரு வரலாற்றைச் சுருக்கி வரைவதன் அருமை எழுதத் தொடங்கிய பின்னர் நன்கு தெளிவாயிற்று!*

*‘பன்னூல் தொகுதி’களாக எழுதப்பெற வேண்டிய வரலாறு, இச் ‘சின்னூல்’ அளவில் எழுதப்பெற்றிருப்பது உண்மை; ஆனால், வரலாற்றுச் செய்திகள் அனைத்தும் முழுதுற இடம் பெறா விடினும், வரலாற்றில் சுட்ட வேண்டிய இன்றியமையாப் பகுதிகள் விடுபெறவில்லை என்றே எண்ணுகின்றேன்; எனினும், ஒவ்வொரு தலைப்பும் விரித்தெழுதத்தக்க விழுப்பமுடையதே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!*

“நீடிருங் குன்றம், நிழல்காலும் மண்டிலத்துக்  
கோடு கோடாய்த் தோன்றும் கொள்கைத்தே”

*என்னும் சிலப்பதிகாரம் தொடர்பான பழம் பாடற் குறிப்பு இவ் வரலாற்றுக்கும் ஏற்கும்!*

*தமிழன்னையின் நிலைமக்களுள் தலைமக்களாகத் தோன்றி யோர் பலர்; அவர்கள் படைப்பாளர்; உரையாளர்; பதிப்பாளர்; பரப்பாளர்; காப்பாளர் எனப் பல திறத்தர். அன்ன வரை எல்லாம் தமிழ்கூறு நல்லுலகப் பரப்பெல்லாம் ‘இன்னார்’ என்று ஒப்பாரும் மிக்காரும் இல்லா நிலையில பரப்பிக் கொண்டிருக்கும் ஏந்தல் இவ் வரலாறுடையார்!*

*“தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்” என்றும், தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்பகை*

*செய்தல் வேண்டும் என்றும், திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்றும் உணர்வுப் படைப்பாளிகள் கட்டளையிடுதல் எளிது. ஆனால் அவற்றை உணர்ந்து உருப்படியாய்க் கடமைபுரியும் செயல்வீரர் காண்டற்கு அரியர்; மிக மிக அரியர்! இவ்வரியராய்ச் செயற்கரிய செய்யும் பெரியராய், அறுபான் ஆண்டுகளுக்கு மேலும் தடைப்பாடும் இடைப்பாடும் இன்றித் தொடர்ந்து செயலாற்றிக் கொண்டுவரும் உரவோர் இவ்வரலாற்று நாயகர் என்பது நாடறிந்த செய்தி!*

"சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்நம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த்தி தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே? மாமறைநூல் தானெங்கே?
எந்தைபிரன் ஐந்தெழுத்தெங் கே"

*என்று* ***சிவானந்த மாலை*** *எங்கே? எங்கே? எங்கே? என வினா எழுப்புகின்றது. இவ் வரலாற்று நாயகர் தோன்றாவிடின், திருவரங்கனார்க்குப் பதிப்புக் காதல் கிளர்ந்து கழகக் கனி மர வித்து ஊன்றாதிருந்திருக்கப்பெறின், எத்தனை எத்தனை 'எங்கேக்களைக்' கேட்பது?*

*கழக நூலாசிரியர்கள் ஓரிடத்தார் அல்லர்; ஓரினத்தார் அல்லர்; ஒரு காலத்தார் அல்லர்; ஒரு துறையார் அல்லர்; ஒரு நிலையார் அல்லர்; ஒரு சமயத்தார் அல்லர்; ஒரு பாலார் அல்லர்; இவரும், ஒரு நூற்றுவர் இருநூற்றுவர்அல்லர்; பன்னூற்றுவர்! இக் கழக நூலாசிரியர்கள் மட்டுமோ இவர் தொடர்பளார்?*

*விழுமிய விழாத் தலைமையேற்றோர் எத்துணைர்? பொழிவு செய்து பொலிவுறுத்தியோர் எத்துணையர்? அலுவல் தொடர்பால்அணுக்கராயோர் எத்துணையர்? அரசியல் வல்லுநர், நீதித்துறைச் சான்றோர், கல்வித் துறை, கலைத் துறை சார்ந்தேர் - இவர்கள் எத்துணையர்? இவர்கள் அனைவர் நெருக்கமும் நேயமும் ஒன்றுவிடாமல் எழுதப் புகின் இவ் வரலாறு எத்துணை விரிவாம்?*

*ஒரோ ஒரு நூல் வெளியீட்டிலேயே தொக்கிக் கிடக்கும் வரலாறுகள் எத்துணையோ உண்டு! ஒரோ ஒரு நூலாசிரியர் தொடர்பிலேயே எத்துணையோ வரலாற்றுக் குறிப்புகள் தொக்கிக் கிடப்பது உண்டு! இவ்வாறாக ஏறக்குறைய 1725 நூல்களை வெளியிட்ட வெளியீட்டு வேந்தரின் வரலாற்றில்,*

வெளியிட்ட ஒரு நூலுக்கு ஒரு பக்கம் எழுதுவது என்றாலும், இந்நூல் எவ்வளவு விரிந்து போகும்! ஒரு பானை சோற்றுக்கு ஓரவிழ் பதம் என்று இவ் வரலாற்றைக் கொள்க.

தொகுப்புக் கலை ஏந்தலாகிய இவர், கடிதக்கலைக் காவலர் என்பதைக் கட்டாயம் குறிப்பிடல் வேண்டும். இவர் எழுதிய கடிதங்கள் ஓராயிரமா? ஈராயிரமா? பன்னாயிரம் என்க. இக் கடிதங்களுங்கு வைப்புப் படிகள் உண்டு என்றால், இவர் கடித வைப்பர் என்பதில்என்னே ஐயம்! இவர் எழுதிய கடிதங்கள் இத்துணை என்றால், இவருக்கு அறிஞர்கள் எழுதிய கடிதங்கள் எத்துணை! கட்டுக் கட்டாகவும், கோப்புக் கோப்பாகவும் வைக்கப்பெற்றுள! அவை ஆவணக் காப்பகம் போலக் கடிதக் காப்பகமாக அமைத்தற்கு உரியவை. அவற்றை ஒழுங்குறுத்தி விரிந்த வரலாறு எழுதுவதாயின் ஆயிரம் ஆயிரம் பக்கமாக நூல் விரியும். அவ்விரிந்த நூல், தமிழகத்தின் இவ்விருபதாம் நூற்றாண்டின் 'வரலாற்றுக் கலைக் கருவூல'மாகத் திகழும்!

எளியேன் வாழ்வில் இயல்பாகப் பெற்ற அரிய பேறுகள் சில உண்டு. அவற்றுள் தலையாய ஒன்று கழக ஆட்சியாளர் அவர்களின் கணிப்பரும்கட்டிலாக் காதன்மைத் தொடர்பு! அத் தொடர்பால் அமைந்த பெரும்பேறு, எளியேன் வாழ்வு, முழுதுறும் அமிழ்தத் தமிழ் வாழ்வு ஆகியதேயாம்! இன்பத் தமிழில் இடையறாது தோய்ந்து, எய்ப்பிலா நலத்தை என்றென்றும் எய்திக்கொண்டிருக்கும் பேறு எளிதில் எவர்க்கும் வாய்ப்பதோ? அவ் வாய்ப்பின் இடையே வாய்த்த தனிப்பெரும் பேறு - செயலாற்றுதலைச் செழுந்தவமாகக் கொண்ட இச் செந்தமிழ்ச் செல்வர் வரலாற்றை எழுதும் பேறாகும். என்னெனின், இவ் வரலாறுடையார் இடத்திலிருந்து ததும்பி வழியும் தனித்தமிழ்ப் பற்று எவர்க்கே வாய்க்கும்? இத் தனித் தமிழ்த் தொண்டு செய்ய எத்துணைப் பேர் முனைந்தார்? அம் முனைப்பை என்றும் அயராமல் சோராமல் முழுதுறச் செலுத்தி எத்துணைப் பேர் செயலாற்றினார்? இவர்தம் செயலாண்மைத் திறத்திற்கு இத் துறையில் இவர்க்கு ஒப்பாகவாதல், உயர் வாகவாதல் எவரே இருந்தார்? இவரைப் போல் பயனில நினையாமை, பயனில சொல்லாமை, பயனிலு செய்யாமை எவரே பாரித்துச் சிக்கெனப் போற்றியிருந்தார்? இவரைப்போல் பயனில எவரே பாரித்துச் சிக்கெனப் போற்றியிருந்தார்? இவரைப் போல் மறைமலைக்குப் பரப்புநராகவும், கூட்டுப்பங்கு நிறுவனத் திற்குக் காட்டுநராகவும் எவரே இருந்தார்? இருக்கின்றார்?

"படம் பார்த்தல், வெற்றிலை போடுதல், புகைபுடித்தல், காப்பி தேநீர் ஆகியவை குடித்தல், இழிந்த பாடல்களைக் கேட்டல், தகவற்ற நூல்களைப் படித்தல் - ஆகியவை இவர் கனவினும் கருதாதவை!

"சீட்டு விளையாடுதல், பரிசுச்சீட்டு நடத்துதல், குதிரைப் பந்தயத்திற்குப் போதல், ஏமாற்று ஆட்டங்களில் ஈடுபடுதல் ஆகியவை இவரால் வெறுத்து ஒதுக்கப்படுபவை!"

"வீண் பேச்சுப் பேசுதல், வாளா பொழுதைக் கழித்தல், கேலிகிண்டல் நையாண்டி செய்தல் ஆகியவற்றில் என்றும் ஈடுபட்டறியார்! தக்கவர் தொடர்பை அன்றிப் பிறர் தொடர்பை வலக்காரமாக விலக்குவார்! வாட்டும் நோயின் இடையேயும், ஊட்டும் மருந்தின் இடையேயும் ஓய்வின்றி உழைப்பதை ஒரு பெருந்தவமாகக் கொண்டுள்ள தகவுடையார்! தகுதி வாய்ந்த பணிகளைத்தேர்ந்து செய்தால்வாழும் நாளும் நீளும் என்பதைப் பலப்பல சான்றுகளால்நிறுவிக் காட்டித் தம் வாழ்வையும் அவ்வண்ணமே உய்த்துச் செல்வதால் என்றும் இளையராய் வாழும் பெற்றியார்! இச் சீர்மைகளை நினைந்து நினைந்து உணர்ந்து வரலாறு எழுதும் போது, அந்நினைவாலும் அவ் வுணர்வாலும் ஆட்கொள்ளப் பெற்றுச் சார்ந்தனன் வண்ணமாக அழுந்திப்போகும் பேற்றினும் அரிய பேறு ஒருவருக்கு வேண்டுமோ? அத்தகு உயிரூதியப் பேறு' திருவருள் அருளியதே என்பது ஒரு தலை!

"நூற்றிதழ் அலரி நிரை கண்டாற்போல, நூறு பல்லாண்டு உரையும் பாட்டும் உடையோராய் வாழ்கதில்" என்பது மாணிக்க மொழி! ஆம்; முனைவர் வ. சுப. மாணிக்கனார் இவர்க்கு உரைத்த வாழ்த்து மொழி. அம் மொழியால் மொழி வளர்க்கும் ஏந்தலை வாழ்த்தி இவ் வரலாற்றுப் படையலை 'அடியுறை' செய்து மகிழ்கின்றேன்.

| | |
|---|---|
| செல்வம் | தமிழ்த்தொண்டன் |
| திருநகர், | **இரா. இளங்குமரன்** |
| மதுரை-6 | 30-7-81. |

**மறைத்திரு மறைமலையடிகள்**

**1876 - 1950**

**கழகம் தோன்றுவதற்கு முதற்காரணர்**
**திருவருட்செல்வர்**
**தி.செ.விசுவநாதபிள்ளை, பி.ஏ.,**
**1880 - 1971**

# 1. ஒரு பெருவிழா

*(பனிநீர் பலமுறை தெளித்தார்; சந்தனம் அளித்தார்; மாலை சூட்டி மகிழ்ந்தார்; பாராட்டெடுத்துப் பரவச முற்றார்; அவற்றையெல்லாம் ஒருங்கே திரும்பப்பெற வாய்த்தவேளையில் திக்குமுக்காடிப் போனார்.)*

சென்னையிலே ஒரு பெருவிழா. அவ்விழாவில் அரசியல் தலைவர்களும் அறிஞர் பெருமக்களும் குழுமியுள்ளனர். விழா நாயகருக்குப் புகழ்மாலை சூட்டுகின்றனர்.

"எனக்குத் தெரிந்த வரையில் திரு.வ.சுப்பையாபிள்ளை அவர்களைக் கொலம்பசுக்கு ஒப்பிடலாம். கொலம்பசு அமெரிக்காவைக் கண்டுபிடித்ததுபோல் இவர்மனிதனைக் கண்டுபிடித்தார். தமிழ் நாட்டில் யார் யார்மனிதராக இருக்கின்றார்கள், எழுத்தாளர்களாக இருக்கின்றார்கள், அறிஞராக இருக்கின்றார்கள், எவரெல்லாம் நூலாசிரியராக இருக்கத் தகுதியுள்ளவராக இருக்கின்றார்கள் என்று கண்டுபிடித்தார்கள். ஆசிரியர்களாக இல்லாதவர்களை ஆசிரியர்களாக்கினார்கள். நூலாசிரியர் ஆக்கினார்கள்."

"ஒரு பாசுவெல் இல்லையானல் எப்படி சான்சன் இல்லையோ அபோல் ம்றைமலையடிகளுக்குப் பெரும் விளம்பரத்தைத் தேடித் தந்தவர்கள் திரு. சுப்பையா பிள்ளை அவர்களே."

"திரு. சுப்பையாபிள்ளை அவர்கள் ஒரு புத்தக வணிகர் மட்டுமல்லர். அவர் ஒரு செந்தமிழ்க் காவலர், புலவர், புரவலர், பல்துறை அறிவு பரப்புநர்: இந் நாட்டு முன்னேற்றத் தொண்டர்களுள் ஒருவர்."

"அவர் ஓர் இயல்பான புத்தக வெளியீட்டாளர் மட்டுமல்லர்; அவரிடத்தில் இருக்கும் ஒருபெரும் சிறப்பு என்னவென்றால், அவரே ஒரு சிறந்த எழுத்தாளர். அவரே ஒரு புத்தக விற்பனையாளர்; அவரே ஒரு புத்தக வெளியீட்டாளர்; அவரே ஒரு நூலகர்; அவரே ஒரு வாசகர்; ஓர் இதழாசிரியராகவும் இருக்கிறார்."

"ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இந்த நிலையம் துவங்கும் பொழுது எந்த அளவுக்குத் தனித்தமிழ்ப்பற்றாளராக இருந்தாரோ, அந்தத் தனித்தமிழ்ப் பற்றில் இருந்து கொஞ்சம் கூடப் பிறழ்ந்து கலப்புத் தமிழுக்கு அவர் மாறவில்லை. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நிலையத்தின் பொறுப்பை இவர் ஏற்கும்போது எப்படித் தம்மை ஒப்படைத்தாரோ, அதற்குப் பின்பு எந்தக் கவர்ச்சியும், எந்த அதிர்ச்சியும் தம்மை மாற்றவிடாமல் இதற்கே தம்மை ஒப்படைத்துவிட்டார். இப்படி ஒருவர் இருப்பது இந்த இருபதாம் நூற்றாண்டின் நாகரிகத்தை மீறிய செயல்"

"ஐம்பது ஆண்டுகளில் இவரைவிடச் சிறந்த தொண்டாற்றியவர்கள் இருக்க முடியுமா?"

"இறைவன் அவருக்குக் கொடுத்திருக்கும் நல்ல பண்பு, அவருக்கு யாரும் பகையில்லை."

"ஒருவன் எந்தச் சமயத்தில் இருந்தாலும் அவன் தமிழுக்கு அன்புடையவனாக இருந்தால் அவனைச் 'சைவன்' என்று கருதுவார்கள்."

"தமிழ் படித்தவர்கள் தமிழ் உணர்ந்தவர்கள் யாராக இருந்தாலும் நம்முடைய பிள்ளை அவர்களைப் போலத்தான் இருக்க வேண்டும்."

"விழா நாயகர் அவர்களே, ஒரு நல்ல நூல்; அந்த நல்ல நூலுக்கு உள்ள பொருள் 'தமிழ்' ஒன்றுதான்"

"அவர்கள் தொகுத்து வைத்துள்ள நூல் ஒவ்வொன்றும் ஒரு கதை சொல்லும்"

"மதிப்புக்குரிய நூல் நிலையங்களே, நிறைந்திருக்கும் உங்கள் பேழைகளில் இல்லாத, ஆனால் உங்களுக்கு மிக மிகத் தேவையானவற்றை நானேகொண்டு வருகிறேன்" என்றான் வால்ட்டு விட்மன். அந்தக் கவிஞனைப் பொறுத்தவரை அஃது உண்மையோ? பொய்யோ? நானறியேன்; ஆனால் தமிழன்னையின் எளிய நூல்நிலையத்தில் இல்லாத, ஆனால் இன்றியமையாது தேவைப்பட்ட எண்ணற்ற நூல்களைத் திரு. பிள்ளையவர்கள் கொண்டு தந்தார்கள்

"தமிழ் வாழ வாழ்ந்த உமது தவத்தை இன்றைய தமிழகம் உணர்ந்து போற்றுகிறது. எதிர்காலத் தமிழகம் நினைந்து நன்றி செலுத்தும்; தமிழ் வரலாறு உமது தொண்டிற்குத் தலை வணங்கும்."

"பிள்ளை அவர்களின் தொண்டினைப் பற்றிக் கூற வேண்டுமானால் அவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கவை என்றே கூறவேண்டும்."

"அவர்கள் செய்தவரும் தமிழ்த்தொண்டு எதிர்காலத்தில் கல்வெட்டுக்களில் பொறிக்கு மளவுக்குப் பெருமையுடைய தாகும்."

"உண்மையிலேயே சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகும் என்றால் சுப்பையாபிள்ளைதாம். சுப்பையாபிள்ளை என்றால் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்தான்."

ஒரு சிறப்பான துணையை ஆண்டவன் அவருக்கு அளித்திருக்கிறார்.

- இவ்வாறு அறிஞர் பலர்தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கட்குப் புகழாரம் சூட்டுகின்றனர்.

விழா நாயகர் எழுபத்தைந்தாண்டு இளைஞர் (1973 ஆம் ஆண்டில்) ஏற்புரை வழங்குகின்றார். அப்பொழுது தெறித்த மணிகள்;

"நான் எப்போதும் இளமையைத்தான் விரும்புவேன்"

என்னை யாராவது முதியவர் என்று சொன்னால் அதை நான் சுவைப்பதில்லை"

"தமிழ்நாட்டு வரலாற்றை எழுத வேண்டுமானால் - தமிழ் மொழியின் வரலாற்றை எழுத வேண்டுமானால் - என் தமையனார் திருவரங்கர் வரலாற்றைத்தான் முதன் முதலில் எழுத வேண்டும். என் தமையனார் இல்லாவிட்டால் மறைமலையடிகளாரின் பெருமை இவ்வளவு விளக்க முற்றிருக்காது என்பதை நான் அறிவேன்."

தமிழுக்கு என்ன செய்யலாம், தமிழர்க்கு வருகிற இடையூறுகளை எப்படிப் போக்கலாம் - இவையே எனக்கு எப்போதும் சிந்தனை.

"ஒய்வு ஒழிச்சல் என்பவை எனக்குப் பிடிக்காதவை"

"எனக்குக் கிடைக்கப்பெறும் புகழுக்கும் பெருமைக்கும் உரியவர்கள் என் அருமைத் தமையனார்திருவரங்கனார் அவர்களும், தனித் தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரும் ஆவர்"

"எனக்கு விழா எடுப்பதை நான் விரும்புவதில்லை. ஆனால் இந்த விழா ஏன் எடுக்கப்பட்டது என்றால், நான் எப்படியெல்லாம் பெரும்புலவர்களோடு தொடர்பு கொண்டேன் என்பது அவர்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காகவே. நூலாசிரியர்களுக்கெல்லாம் எழுதி அவர்கள் கருத்தை அறியச்செய்து அதன் மூலம் அவர்களும் என்னைப்போல் பெருமக்களுடைய அன்பையும் ஆதரவையும் பெறவேண்டும் என்பதற்காகவும், என்னைப்போல் அவர்களும் ஊக்கம் பெறவேண்டும் என்பதற்காகவுமே இவ் விழா எடுக்கப்பட்டதே அன்றி எனது பெருமையைத் தெரிவிப்பதற் காக அன்று."

இப் பொழிவு மணிகளும், ஏற்புரை மணிகளும் மேல்வரும் வரலாற்றின் மேல்வரிச் சட்டம் போல்வனவாம்.

# 2. ஒரு மனிதர்

(ஒருவன் தன் தோளிலேயே தன் பிள்ளையை வைத்துக் கொண்டு அதனைத் தெருத் தெருவாகத் தேடினான். அதுபோல் உலகம் மனிதனைத் தன்னருகில் வைத்துக் கொண்டே மனிதனைத் தேடி எங்கெங்கோ அலைகின்றது.)

பட்டப்பகலிலே ஒருவர் தம் தலைமேல் விளக்கைத் தாங்கிக் கொண்டு வந்தார். தெருவில்போகின்றவரும் வருகின்ற வரும், "பகலிலே விளக்கேந்திப்போகும் இந்தப் பைத்தியத்தைப் பார்" எனப் பேசி நகைத்தனர். ஒருவர் "பெரியவரே, பகலிலே ஏன் விளக்கேந்திக்கொண்டு அலைகிறீர்?" என வினாவினார். "நான் மனிதனைத்தேடி அலைகிறேன்" என்றார் அந்த மனிதர். 'தயாசீனசு' என்பது அவர் பெயர். மனிதரை மனிதர் தேடுவதும், மனிதரைமனிதர் கண்டு கொண்டாடுவதும் உலகில் காணும் நிகழ்ச்சிகளே.

விளக்கேந்திக்கொண்டு வீதியிலே அலைந்து மனிதரைத் தேடியது மேலைநாடு. தமிழ்நாடு, திண்ணையிலேயிருந்து மனிதரைக் கண்டு களிப்புற்றது.

திருவொற்றியூரில் தேரடித் தெருத்திண்ணையில் இருந்தார் ஒரு துறவி. ஆங்கு இருந்துகொண்டு, போகும் மக்களைப் பார்த்து அவரவர் தன்மைக்குத் தக்கவாறு அது போகிறது", "இது போகிறது" என்று கூறிக்கொண்டிருந்தார். அவ் வழியாக ஒரு நாள் வள்ளலார் வரக் கண்டார் துறவி; பணிவோடு எழுந்தார்; உயர்ந்தமனிதர் வருகின்றார் என்றார். பேரருள் பெருக்கமே ஒருருவாகித் தொண்டிலே துலங்கும் வள்ளலாரே உயர்ந்த மனிதர் எனக் கொண்டார், அத் துறவி. மனிதரை மனிதர் கண்டு கொண்டார்.

மனிதப்பிறவி எடுத்தாலும் மனிதராகக் காட்சியளித் தாலும்மனிதத்தன்மை இல்லதவரும் உலகில் வாழ்தல் கண்கூடு. திருவள்ளுவர் இத்தகையவர்களை, மக்களே போல்வர் கயவர் என்றார். பாரதியார், "வேடிக்கை மனிதர்" என்றார். அவ்வேடிக்கை மனிதர் இயல்புகளை அவர் விரித்துக் கூறினார்.

"தேடிச் சோறுநிதம் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவம் எய்திக் - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதர்."

*அரிதில் எல்லாம் அரிதாம் மானிடப்பிறவியை ஊணுக்கும், வெட்டிப் பொழுது போக்குக்கும், வெறுக்கும் செயல்களுக்குமே உரிமையாக்கியவர் 'வேடிக்கை மனிதர்' என்பதில் வியப்பில்லையே! அதே பொழுதில், எள்ளைத்தனைப் பொழுதும் பயனின்றி இராது, திட்டமிட்ட வகையிலே திருத்தொண்டு செய்பவர்மனிதருள் மனிதர் என்பதிலும் வியப்பில்லையே!*

*மனிதருள் மனிதராக ஒருவரை ஆக்குபவர் யார்? அவரேதம்மை ஆக்கிக்கொள்ளல் வேண்டும். "நல்ல நிலையிலே தம்மை நிறுத்துபவரும், அந்நிலையிலே இருந்துதம்மைத் தாழ்த்துபவரும், தாம் இருக்கும் நிலையிலே இருந்து, மேலும் மேலும் உயர்த்திக் கொண்டு போபவரும், எவர்க்கும் தலைமையானவராகத் தம்மைச் செய்பவரும் தாமேயன்றிப் பிறரல்லர்" எனப் பேசும் ஒரு நாலடிப்பாட்டு. இந்நிலை எவர்க்கு உண்டாம்? திருமூலர் இதற்குத் தெளிவான விடை பகர்கிறார் :*

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செயு மாறே"

*என்பது அது.*

*இறைவன் படைப்பின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு, இதற்காகவே என்னைப் படைத்தான்; அவ்விறைவன் படைப்பின் நோக்கத்தை என்னால் எவ்வளவு இயலுமோ அவ்வளவு அரிதின் முயன்று நிறைவேற்றுதலே என் பிறவிப்பயன்" எனக்கொண்டு பாடுபடுபவரே பண்பட்ட மனிதர்! இத்தகையவரையே "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்" என்பார் திருவள்ளுவர்.*

*பெருமை மிக்க மனிதராக வாழ்பவர் எவரோ அவர், தாம் பிறந்த மண்ணுக்கும், தாம் பிறந்த இனத்துக்கும், தாம் இருந்த காலத்துக்கும், தாம் செய்யும் தொழிலுக்கும் பெருமை*

சேர்க்கின்றனர். இத்தகையோர் பெருமையே, எதிர்கால மாந்தரால் எடுத்துக்காட்டாகக் கொள்ளும் ஏற்றம் பெறுகிறது. இவர்கள் செய்த தொண்டு எல்லை கடந்த ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் எண்ணிப்பார்ப்பதாய்ப் பயன்படுவதாய் இருக்கும். இவ்வகையில், தமிழ்மொழியும், தமிழ்நாடும், தமிழ் இனமும் உள்ளவரை 'உள்ளவராய்' வாழும் பெருமையைத் தம்மோடு சேர்த்துக்கொண்ட பெருந்தகை தாமரைச் செல்வர் வ. சுப்பையாபிள்ளை ஆவர். தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றைத் தோற்றுவிக்காத தமிழகத் தீயூழுக்கு இடையே நல்லூழாக வாய்த்தவர் அத் திருவாளர்! அவர் வாழ்வாராக! மனிதரைத் தேடித் தேடிக்கண்டு, "மூலையில் இருந்தாரை முற்றத்தில் வைத்த சாலப் பெரிய" ராம் அவர் நெடிதூழி வாழ்வாராக!

## 3. பெருமகனார் பிறந்தார்

*(பிறக்கும்போதே 'மரு'வும் மணக்கும்; மருக்கொழுந்தும் மணக்கும்; துளசியும் மணக்கும்; ஆனால், துளசி மணம்பெருக்குவதுடன் வழிபடு பொருளாகவும் பெருமை பெற்றுவிடுகிறது.)*

தமிழ்ச்சொல்லுக்குத் தனிச்சிறப்பு உண்டு. ஒவ்வொரு சொல்லையும் உன்னிப்பாக நோக்கினால், அஃது ஒரு வரலாற்று ஓவியமாக விளங்கும். 'மகன்' 'மகள்' என்னும் சொற்கள் அச் சொற்குடையார் உயர உயர மான், மாள் என உயர்ந்து விடுகின்றது. பெருமகன் 'பெருமான்' ஆகின்றான். பெருமகள் பெருமாள் ஆகின்றாள்! பெண்பெருமாள் வேண்மாள் முதலிய பெண்பாற் பெயர்களை அறிவோர் 'பெருமாள்' என்பது பெண்பாற் பெயர் என்பதை ஐயுறார்:

'அகல்' 'ஆல்' ஆகவில்லையா? அகன்ற புலமையும், அகன்ற உளமும் உடைய அகன்றோர் ஆன்றோர் அல்லரோ! இவ்வாறே பெருமகன் 'பெருமான்' ஆகின்றான்; சேக்கிழார் பெருமான் சீரடி போற்றி, வள்ளுவர் பெருமான் வளர்புகழ் பாடி, சிவபெருமான் செழுங்கழல் வாழ்வே வாழ்வாகக் கொண்ட பெருமகன் சுப்பையா பிள்ளை தோன்றினார். "தோன்றிற் புகழொடு தோன்றுக!" என்பதற்கு இலக்கியமாகத் தோன்றினார்: பெருமகன், 'பெருமான்' ஆனார்!

"செந்தமிழும் சந்தனமும் திசையெல்லாம் பரிமளிக்கப் புகழ் மணக்கும் திருநாடு பொருநைநாடு. அந்நாட்டிற்கு அணிசெய்யு திருநகர் 'நெல்லை' எனப்பெறும் 'திருநெல்வேலி'. அதற்குக் கீழ்பால், பெருகி வளர்ந்த பேரூர் பாளையங்கோட்டை. அப் பாளையங்கோட்டையிலே பிறந்தார் திரு.வ.சு."

மதுரையை அடுத்து வடபால் மோகூர் என்னும் பாழைமையானதோர் ஊர் உளது. அவ்வூரைப் பழநாளில் ஆட்சிசெய்தவன் பழையன் மாறன் என்பான். அவன் இளையோன் இளம் பழையன் மாறன் என்பான். அவன்,

கோட்டையெழுப்பிக் குடியமைத்துக் கோலோச்சிய இடம் பழையன் கோட்டை. அப் பழையன் கோட்டை பின்னை நாளில் பளையன் கோட்டையாய்ப், பாளையங் கோட்டையாய்ப், பாளை யாள் மருவியுளது. சங்கப்புலவர் பெருமக்கள் பாடுபுகழுக்கு உரியவனாக விளங்கிய பழையன் மாறன் ஊரிலே 'சங்கநூற்பேழை' தரவந்த பெருமகனார் பிறந்தது நினைவுகூரத் தக்கதாம்.

பாளையங்கோட்டையில் வாழ்ந்த திருவாளர் ஒருவர் வயிர முத்துப் பிள்ளை என்பார். அவர்தம் அருமைக் கிழத்தியார் சுந்தரத்தம்மையார். வயிரமும், முத்தும் அழகொடும் விளங்குவதை எவரே அறியார்?

"ஒன்றன் கூறு ஆடை உடுப்பவர் ஆயினும் ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை" என்பார் ஒரு சங்கச்சான்றோர். "ஓர் ஆடையை இருகூறு ஆக்கி உடுத்துக்கொண்டால்தான் என்ன? ஈருடலும் ஒருயிரும் போன்று வாழும் வாழ்வே வாழ்வு" எனக்கண்ட அவ்வுயில் கலந்து ஒன்றிய உயர்ந்த வாழ்வை வயிரமுத்தரும் சுந்தரத்தம்மையும் கொண்டனர். அவர்கள் இல்லறவாழ்வுப் பயனாக மக்கள் ஐவர் தோன்றினர்.

மூத்தவர் முத்துசாமி, அடுத்தவர் திருவரங்கர். மூன்றாமவர் ஐயம் பெருமாள், நான்காமவர் இவ்வரலாற்று நாயகர் சுப்பையா; இவர்களுக்கெல்லாம் தங்கை குப்பம்மாள் ஐந்தாமவர். திரு. வ.சு. பிறந்தது 1897 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 22ஆம் நாள் ஆகும். தமிழ்மொழி காக்க வந்த தலைமகனைத் தம் கடைசி மகனாகத் தந்தார் சுந்தரத்தம்மையார். கடைப்பட்டார் தலைப்பட்டார் என்னும் பழமொழி மெய்யாயிற்று. அன்றியும் தமிழ் அன்னை செய்த தவப்பெருந் திருநாளும் அந்நாள் ஆயிற்று!

# 4. இளமையும் கல்வியும்

(இளமை, கல்விக்குரியது; ஆனால், அவ் விளமை எத்தனையோ இடர்களைச் சந்திக்க வேண்டியதாகவும் அமைந்துவிடுகிறது. அவ் விடர் வெள்ளத்தில் எதிர் நீச்சல் அடிக்க வல்லவர்க்கு அவ் விளமை என்ன செய்கின்றது? என்றும் இளமையாய் இருக்கும் பேற்றை அருளிவிடுகிறது.)

மக்களின் கல்வி தந்தையரைச் சேர்ந்தது என்பது முந்தையோர் முறை. "தந்தையொடு கல்விபோம்" என்று அவர்கள் உரத்துக்கூறியதும் உண்டு.

வயிரமுத்துப்பிள்ளை தம் மக்களுக்குக் கல்விதரும் வேட்கையில் முந்தி நின்றார். முயன்றும் செய்தார். ஆனால் அதனை முற்றுவிக்க அவர் இருந்தால்தானே முடியும்?ஓடும் உயிரை நிறுத்தி வைக்க எவரால்தாம் முடிகின்றது? வயிரமுத்துப பிள்ளை 1900 ஆம் ஆண்டு பிறைமுடிப் பெருமான் திருவடியடைந்தார்.

நல்லிளமைப் பருவத்திலேயே நாயகனை இழந்தார் சுந்தரத்தம்மையார். அவர் என்ன செய்வார்? தமக்கு நேர்ந்த தீயூழை எண்ணித் தெருமந்து நோவாரா? பதின்மூன்றாண்டு முத்துசாமியையும், பத்தாண்டுத் திருவரங்கரையும், ஏழாண்டு ஐயம் பெருமாளையும், மூன்றாண்டுச் சுப்பையாவையும், ஓராண்டும் நிரம்பாத குப்பம்மாளையும் எண்ணி எண்ணிப் புண்படுவாரா? தம்பியர் உளராக வேண்டும் என்னும் தனிப்பெரும் தயையால் உயிர் வாழ்ந்த திலகவதியார் போலத் தம் இளஞ்செல்வங்களின் எதிர்கால வாழ்வை நோக்கி, அம்பொன்மணி நூல் தாங்காமல் அருள் தாங்கி நின்றார்.

ஆலின் அடிமரம் கறையானால் அரிக்கப்பெற்று வீழ்ந்தாலும், மரம் வீழ்ந்து படாமல், அதன் வீழ்துகள் காக்கும். அதுபோல் தந்தையில்லாக் குடும்பத்தைத் தாங்க முற்பட்டார் மூத்தவர் முத்துசாமி, அவர்க்குத் தந்தையார் செய்துவந்த வணிகத்தில் ஓரளவு முன்னரே பயிற்சியிருந்தது. அப் பயிற்சியும்

ஆர்வமும் கைகொடுத்து உதவ வணிகத்தில் ஈடுபட்டார். திறமும் தேர்ச்சியும் மிக்கவர்கள் செய்யும் வணிகமே திடுமென்று சாய்ந்துவிடக் காண்கிறோம். இவ்விளைஞரால் போட்டிமிக்க வணிக உலகில் ஈடுகொடுக்க இயலுமா? இயலாமல் போகவே வணிகம் இழப்பில் முடிந்தது.

பொருள் என்னும் செல்வச் செவிலி இருந்தால் குடும்பம் குறைவின்றி நடக்கும். தாங்குவாரும் தரிப்பாரும் பலராக வருவர். தலைவர் இல்லா வீடு, இருந்த பொருளும் இழப்புக்கு ஆகிய குடும்பம்; இந்நிலையில் என்ன செய்ய முடியும்? "கொடிது கொடிது வறுமை கொடிது; அதனினும் கொடிது இளமையில் வறுமை" என்று புலம்பலாம். உண்டாகிய பள்ளத்தை மேடாக்க வகை வேண்டுமே!

படிப்பிலே பேரார்வம் உடைய அரங்கனார் தம் படிப்பை மூன்றாம் படிவ அளவிலே விடுத்து வேலை தேடினார். வழக்குரைஞர் ஒருவரிடம் எழுத்தர் வேலையில் அமர்ந்தார். அவ் வேலையில் அரங்கர்க்கு ஈடுபாடு ஏற்படவில்லை. வேறு வேலை தேடித் தூத்துக்குடிக்குச் சென்றார். ஆங்கிருந்த வழுதூர் அழகிய சுந்தரம்பிள்ளை என்பார் துணையினால் கப்பல் ஏறிக் கொழும்புக்குச் சென்றார். ஆங்கிருந்த எழுத்தர் பணியில் அமர்ந்தார். இது நிகழ்ந்தது 1907 ஆம் ஆண்டில் ஆகும்.

தமையனார் இருவரும் தம் அயரா உழைப்பால் குடும்பப் பொறையைத் தாங்கிக்கொள்ளவே, இளையவர் வ.சு. பாளையிலுள்ள தூய சவேரியார் உயர்பள்ளியில் சேர்ந்து பயின்றார். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கு ஏற்றவாறு கல்வியில் கருத்துடையவராக விளங்கினார்.

பெரிய குடும்பத்தைத் தாய் தாங்கி நிற்கும் பெருமை; அக் குடும்ப வருவாய்க்காகக் கல்வியை விடுத்தும் தொழிற் கடமையிலே ஈடுபட்ட மூத்தவர்கள் நல்லுள்ளம்; இயல்பிலே தமக்கு அமைந்த பண்பாடு -இவையெல்லாம் இளம்பருவத்திலேயே வ.சு.வைச் 'சிறுப் பெரியார்' ஆக்கிவிட்டன. ஆதலால் காலம் தவறாமை, கடமையில் கண்ணாக இருத்தல், ஒழுக்கத்தால் உயர்தல் ஆகியவை யெல்லாம் ஒருங்கே வளர வளர்ந்து வந்தார். இதனால் ஆசிரியர்கள் பாராட்டுக்கு உரியவராய் விளங்கினார்.

ஆண்டுதோறும் தேர்வுகளில் சீருறத் தேறி வகுப்பில் சிறப்பிடம் பெற்றார்; கணக்குப் பாடத்திலும்

பொழிப்பாடங்களிலும் இணையற்ற திறம் காட்டிப் பரிசுகள் பெற்றார்.

கல்வியில் ஈடுபாடு காட்டும் சிலர் வீட்டுக்கு உதவியாக இருப்பது இல்லை. ஆனால் வ.சு. அன்னைக்கு எவ்வளவு உதவியாக இருக்க முடியுமோ அவ்வளவு உதவியாக இருந்தார். வீட்டுப் பொறுப்புகளை விருப்பொடு செய்தார். வீதிக்குச் சென்று வெட்டிப் பொழுது போக்குவதோ அரட்டைஅடித்துப் பொழுதை வீணாக்குவதோ இளம் பருவத்திலிருந்தே இவர் அறியாதவை.

பொழுதை வீண்படுத்தாத நல்ல வழக்கம் வாளா ஒழியுமோ? பொருள் வகையிலும் சிக்கனமாக இருக்கவும், சிறு சிறு தொகையையும் சேமித்து வைக்கவும் தூண்டுதலாக அமைந்தது. கொழும்பில் இருந்து அருமைத் தமையனார்அனுப்பும் பணம் இவர் பெயருக்கே வரும். வீட்டுக்குச் சேர்க்க வேண்டிய தொகையை வீட்டுக்குச் சேர்ப்பதுடன், தமக்கெனத் தனியே வரும் தொகையையும் கணக்கிட்டுச் சிக்கனமாகச் செலவிட்டார்.

சிக்கனப் பண்பிற்கு அண்ணல் காந்தியடிகளையும் தந்தை பெரியாரையும் எடுத்துக்காட்டாகக் கூறுவர். அவ்வாறே ஒவ்வொரு சிறுவகையிலும் சிக்கனத்தைப் போற்றிய செம்மல் வ. சு. ஆவர். இன்றியமையாத் தேவைக்கே அன்றிப் பிறிது எதற்கும் செலவழித்தலைச் சால்பாகக் கொள்ளாத சான்றாண்மை இளமை தொட்டே இருந்தமையால, இவர் தம் வாழ்வில் தீயவை எவையும் புகாமல் தடுத்தாட்கொள்ளும் திருப்பேறு வாய்க்கப் பெற்றார்.

இளமையிலே இச்சீரிய சால்பு சிறந்தோங்கக் காரணமாக இருந்தவை பலப்பல. அவற்றுள் தலையாய ஒன்று, ஒவ்வொரு நாளும் தவறாமல் வரவு செலவு எழுதும் நற்பழக்கமாகும். பொருளியல் அறிஞர்கள் வலியுறுத்தும் இம் முதல் திட்டத்தை முதன்மையாகக் கொண்டு எவரும் ஓதுவிக்காமல் உணர்ந்து கடைப்பிடித்தது அவ் விளம்பருவத்தில் செயற்கரும் செயல் என்பதை எவரும் அறிவர்.

கல்வித் திறத்திலும், பண்பாட்டிலும் சிறந்து வளர்ந்த வ. சு. 1916 ஆம் ஆண்டு பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றார். கல்லூரியில் கால் வைக்க விரும்பினார். ஆனால் பொல்லாப் பொருள்முடை வல்லாண்மை காட்டித் தடுத்தது.

அப்போது வாய்ப்பாக இருந்த அஞ்சலகப் பணியில் சேர விரும்பினார். ஆனால் அண்ணல் அரங்கனார் பேருள்ளம் வேறாக இருந்தது. தம் கல்வியைப்போல் தம்பியார் கல்வியும் தடைப்பட்டு விடுதல் ஆகாது என எண்ணினார். அதற்குத் தக்க திட்டமிட்டார். தம்பியைக் கொழும்புக்கு வருமாறு எழுதினார். இளவல் உள்ளமும் அண்ணலார் எண்ணத்தை உவந்து ஏற்று ஆங்குச் செல்ல முந்தியது.

1916 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் வ.சு. கொழும்புக்குச் சென்றார். ஆங்கிருந்த முதனிலைக் கல்லூரியில் படிக்கத் தொடங்கினார். இலண்டன் மாநகர ஆசிரியர்கல்லூரி நடத்தும் தேர்வு எழுதுவதற்கு அக் கல்லூரி பயிற்சி தரும். அத் தேர்வு எழுதி வெற்றி பெற்றோர், மருத்துவக் கல்லூரியில் சேர்தற்கு வாய்ப்பு உண்டு. ஆதலால் அத் தேர்வு பெறுதற்குப் பேரார்வம் கொண்டார் வ. சு. அரங்கனார் ஆர்வமோ தாம் பெறாப் பேற்றைத் தம்பியரேனும் பெற வேண்டும் என்ற முனைப்பிலே இருந்தது. ஆனால், தொடர்ந்து பயில்வதற்கு இயலாமல் ஒரு குறுக்கீடு உண்டாயிற்று.

இலங்கை வாழ்வு வ.சு. உடல்நிலைக்கு ஏற்றுக் கொள்ள வில்லை. நீர்க்கோவை உண்டாகி நீங்காமல் வாட்டியது. ஓயாத் தடிம நோயுடன் எவ்வளவு காலம்தான் போராட முடியும்? முடியாமல் கொழும்பில் இருந்து பாளையங்கோட்டைக்கே திரும்பினார்.

எடுத்த பணிக்குத் தடையுண்டானால் பலர் சோர்ந்துவிடுவர். வாழ்விலே எரிச்சலும் வெறுப்பும் அடைவர். ஆனால், கொள்கையில் உறுதியாக நின்ற வ. சு. சோர்ந்துவிடவில்லை. உறுதியில் தளரவில்லை. உரிய பாடங்களை யெல்லாம் தம் ஊரில் இருந்து கொண்டே பயின்றார். முயற்சி மெய்வருத்தக் கூலி தராமல் போகாதே!

பாளையில் இருந்தே பயின்ற வ.சு. தேர்வுக்குரிய காலத்தில் மீண்டும் கொழும்புக்குச் சென்றார். தேர்வைத் திறமாக எழுதினார். ஒரே முறையில் தேர்ச்சியும் பெற்றார். இம்முறை கொழும்புக்குச் சென்றது இவர்தம் பிறவிப் பயனை நிலைபெறுத்தத் தக்க ஒரு வாய்ப்பாக அமைந்தது.

அரங்கனார் கொழும்புக்குச் செல்லு முன்னரே தூத்துக்குடி அழகிய சுந்தரம்பிள்ளை அவர்களால் மறைமலையடிகளாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார்.

அதன்பின்னே அடிகளார் இயற்றிய அரிய நூல்களைத் தருவித்துக் கற்று வந்தார். அடிகளாரின் சிவத்தொண்டுக்கும், செந்தமிழ்த்தொண்டுக்கும் தம் உள்ளத்தைப் பறிகொடுத்து மெய்யடியாராக விளங்கினார். அடிகளாரைக் கொழும்புக்கு அழைத்து அவர்தம் வாயுரை கேட்கவும் பெருவிருப்பாயினார். அதனால் அடிகளாரை ஆங்கு அழைத்தார்.

அடிகளார் அரங்கனாரைக் கொழும்பிலே 1914 ஆம் ஆண்டில் முதற்கண் கண்டார். கழிபேருவகை யடைந்தார். இளம்பருவச் செவ்வியும், வளம்பெருகிய உள்ளமும், பயின்றொழுகும் பண்பாடும், தாளாண்மை மிக்க வேளாண்மையும், தம்மாட்டுக் கொண்டுள்ள மாறாத அன்பும் அடிகளாரைக் கவர்ந்தன. விழா மேடையிலேயே அறுபத்து மூவர் நாயன்மார்களை யான் அறிவேன். ஆனால் இங்கே 64 ஆவது நாயனார் உண்மையை அறிந்து அளவிலா மகிழ்வுற்றேன்" என்று கூறி அவர் இவரே என்று அரங்கனாரை அவையினர்க்கு அறிமுகப்படுத்தி வியப்பில் ஆழ்த்தினார். அரங்கனாரை முன்னரே அறிந்திருந்தவர்கள் 'ஆமாம்' என ஏற்றனர். புதிதாக அறிந்தோர் புன்முறுவர் பூத்து வரவேற்றனர். வள்ளுவரால் பாராட்டுப்பெற்ற வளர்புகழ் வணிகச் செல்வன்போல, அடிகளார் பாராட்டு அரங்கனார்க்கு வாய்த்தது.

இவ்வாறு அரும்பி வளர்ந்த அடிகளார் அரங்கர் தொடர்பு பின்னே மேலும் வலுப்பெற்றது. அடிகளாரின் நூல் வெளியீடு விற்பனை ஆகியவற்றுக்கு உதவியதுடன் பெரும்பொருளை நன்கொடையாகத் தண்டியும் உதவினார் அரங்கர். 1917 ஆம் ஆண்டு மீண்டும் அடிகளாரைக் கொழும்புக்கு அழைத்தார். அப்பொழுது இளவல் வ.சு. கொழும்புக்குத் தேர்வு எழுதுவதற்காகச் சென்றிருந்த காலம். ஆதலால், அடிகளார் தொடர்பு இவருக்கு வாய்ப்பதாயிற்று.

அடிகளார் குலசேகரபட்டினம் செந்திலாறுமுகம்பிள்ளை அவர்கள் வளமனையில் தங்கியிருந்தார். அவரோடு உடனுறைந்து உரையாடி மகிழும் பேறு இவர்க்கு உண்டாயது. பின்னாளில் யாழ்நூல் இயற்றிய பெரும்பேரிசையாசிரியர் விபுலானந்த அடிகளார் அந்நாளில் மயில்வாகனர் என்னும் பெயருடன் கல்லூரி மாணவராக விளங்கினார். அவர்அடிகளார் உறையும் வளமனைக்கு வந்து பைந்தமிழ் மொழி குறித்தும், செந்தமிழ்ச்சிவநெறி குறித்தும் ஆர்வமுறக்

கேட்டும், ஐயுற்றன வினாவித் தெளிந்தும் செல்வார். அப்பொழுதெல்லாம் உடனிருந்து இன்பம் மாந்தும் பெரும்பேறு இவர்க்கு வாய்த்தது. அவ் வாய்ப்பால் அடிகளார்மேல்கொண்ட பற்றுப் பெருகிப் பெருகி முழுமதியாக இந்நாள் விளங்குதல் கண்கூடு.

இலண்டன் மாநகரத் தேர்வின் தேர்ச்சி முடிவு வந்தது. அதில் வெற்றி பெற்றார் வ.சு. அடுத்த முயற்சி என்ன? சென்னை மருத்துவக் கல்லூரியில்சேர்ந்து பயில முயற்சி மேற்கொண்டார். 1918 ஆம் ஆண்டு சூன் திங்கள் பல்லாவரத்திற்குச் சென்று அடிகளார் வளமனையில் தங்கிக்கொண்டு சென்னை மருத்துவக்கல்லூரியில் சேர முயன்றார். அம் முயற்சி வெற்றிதராமையால் மீண்டும் பாளையங்கோட்டைக்குத் திரும்பினார்.

படிப்பார்வம் இடையீடு இன்றி உந்தியாமையால் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் சேர்ந்து, இரண்டாண்டுகள் பயின்றார். அவ்வளவில் கல்லூரிக்கல்வி முற்றுப்பெற்றது. ஆனால் தாமே கற்கும் கல்விக்குக் கால எல்லை உண்டோ? 'அறிதோறு அறியாமை கண்டற்று' என்னும் வள்ளுவர் வாக்குக்கு ஏற்பத் துறைதோறும் புத்தறிவைப் பெருக்கிக் கொள்ளலானார்.

# 5. எப்பொருளும் ஆன திருவரங்கர்

*("உடன்பிறந்தே கொல்லும் நோய்; உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா" என்று தேர்ந்துரைத்ததும் இந்த மண்தான். "தம்பியை இன்றிக் கிடப்பனோ தமையன் மண்மேல்" என்றதும் இந்த மண்தான். தனித்தனி நாடி பார்த்து முடிவு செய்யும் தமிழ் மருத்துவ முறைப்படி முடிவு செய்யவேண்டியது இது.)*

"தேனமரும் சோலைத் திருவரங்கர் எப்பொருளும் ஆனவர் காண் அம்மானை" எனத் திருவரங்கக் கலம்பகம் பாடும் திருவரங்கர், எப்பொருளும் ஆனவர் என்பதை இவர்க்கும் கூறத்தகும்.

"சற்று வழுக்கையுடன் கூடிய கனத்த பெரிய தலை, நீறு விளங்கும் பரந்த நெற்றி; பெரிய கண்கள்; இனிக்க இனிக்கப் பேசும் குறுநகைமுகம்; அகன்ற மார்பு; வெள்ளை உட்சட்டை; இவைகள் எல்லாவற்றிலும் பலவகைக்கடிதக் கட்டுகள் உடையதும், பொத்தான் போடப்படாதுதும் ஆகிய மேற்சட்டை; இடுப்பிற் சுற்றியுள்ள செம்பட்டு, கணுக்காலுக்கு மேற்பட்ட வெள்ளை வேட்டி; ஐந்தடி உயரம்; நிமிர்ந்து எதிர்நோக்கி நடக்கும் வீரநடை" - இவை திருவரங்கரின் ஓவியம்.

திருவரங்கர் ஆர்வம் அடிகளாரைக் கொழும்புக்கு அழைத்ததோடு நின்றதோ? அவர்க்கு அணுக்கராகி நிற்கும் அளவில் அமைந்ததோ? இல்லை! இல்லை! அவர் நூல்களைத் தருவித்து விற்கவும், அவர் இயற்றிய நூல்களை வெளியிடுதற்கு ஆகும் வகையில் பொருள் தண்டி விடுக்கவும் ஆக வளர்ந்தது அன்றோ! அம்மட்டோ? அடிகளாரின் நூல்களை விற்று உதவுதற் கென்றே ஒரு விற்பனை நிலையத்தைக் கொழும்பில் தொடங்கவும் அவ் வுள்ளன்பு தூண்டியது. அன்பு என்னதான் செய்யாது?

அரங்கனாரின் கெழுதகை நண்பர்வி. சங்கரநாராயண பிள்ளை என்பார்.தம் பெயரையும் அவர் பெயரையும்

இணைத்துக் திருசங்கர் கம்பெனி (திருவரங்கர் சங்கரநாராயணர் கம்பெனி) என்னும் நிறுவனத்தை 1917 இல் நிறுவினார். அதன் கிளை நிலையத்தை 1918 இல் சென்னையிலும் தோற்றுவித்தார். இந் நிறுவனமே சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தோன்றுதற்கு வாய்த்த முன்னோடியாக அமைந்தது. அன்றியும் அடிகளாரின் நூல்கள் சீரிய வகையில் வெளிப்பட்டுச் செந்தமிழர் செல்வமாக விளங்குதற்கு வகையும் செய்தது. அடிகளாரின் ஆராய்ச்சிக் கருவூலமான திருவாசக விரிவுரை இந் நிறுவனத்தின் வழியாகவே செந்தமிழ்க் களஞ்சியம் என்னும் பெயரில் முதற்கண் வெளிப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

திருவரங்கர் இயல்பிலேயே கூர்ந்த மூளையர்; மாந்தர் இயல்பை ஊடுருவி நோக்க வல்ல ஆற்றல் படைத்தவர்; முயற்சி, சுறுசுறுப்பு, கடைப்பிடி, இனிமை,. ஒப்புரவு முதலியவற்றின் தழும்பேறியவர்; பெருமக்களிடம் நட்பாடும் பாங்கும் அவர்களிடம் பணிகொள்ளும் பான்மையும் கைவரப் பெற்றவர். எப் பணியையும் அருமையுடைத்து என்று அயர்தல் அறியாதவர்; கண்காணிப்பிற் கண்டிப்பும், பகையில் விழிப்பும், பழமையில் கண்ணோட்டமும் கவினப் பெற்றவர்.

கடிதம் வரைதலில் காலம் தவறாக் கருத்துணர்வாளர். அவரை அவ் வகையில் வெற்றி கொள்வார் அரியர்; ஆங்கிலம் அருந்தமிழ் ஆகிய இருமொழிகளிலும் திருத்தமாக எழுதும் திறலர்; எழுதும கடிதங்களில் பழந்தமிழ் நூல் மேற்கோள்களை ஊடாட விட்டு உணர்ச்சியூட்ட வல்வர்.

தொகுப்புக் கலைச்செல்வர் அவர். சட்டைப் பைகள் புடைத்து நிற்கத் தொகுப்புக் குறிப்புகள், கடிதக் கற்றைகள், அடைத்துக் கொண்டு இருக்கும். பழஞ்சுவடிகள், இதழ்கள், திங்கள் முத்திங்கள் ஆண்டு வெளியீடுகள் ஆகியவற்றைத் தொகுத்தும், தொகுத்தவற்றை வனப்புற வகுத்தும், வகுத்தவற்றை வளமுறப் பேணிக்காத்தும் அவர் தாமே எண்ணி எண்ணி இடையீடு இன்றிச் செய்த செயற்கரும் செயல்கள் நினைதோறும் இன்பம் பயப்பனவாம். இவ் வியற்கைத் திறனால்இவர்சேர்த்து வைத்த அருங்கலைச் செல்வங்கள் இன்றைய நோக்கில் மதிப்பில் அடங்குதற்கு உரியன அல்ல. மற்றொன்று இவர்தம் அரும்பெருந் திறல்கள் எல்லாம் விஞ்சிப் பெருக்கெடுத்துக் குன்றின்மேல் இட்ட விளக்காகி நாட்டுக்கு நற்பயன் விளைக்க ஒரு தம்பி வ. சு. வை உருவாக்கியது.

அந் நாளில் அரங்கர் செய்த வழிகாட்டுதல் - அவர் ஓதாது கற்றவற்றை உடனிருந்து ஓதி ஓதி இளவல் வ. சு. உணர்ந்த பேற்றால், நாடு பெற்ற நலம் ஏடுமணக்க எழுதத் தக்கதாம். ஆதலால்தான் அண்ணனும் தம்பியுமாகிய இவர்களை நெடுங்காலம் அறிந்து நேரில் பழகி அறிந்தவர்கள் "தமது தொண்டு விளங்குதற்கான தம்பியைப் பெற்ற பேறு இவருக்கே வாய்த்தது" என்று உளமாரப் பாராட்டுவாராயினர். "எம்பியை ஈங்குப் பெற்றேன் என்னெனக்கரிய தென்றான்" என்னும் வாக்கைக் கட்டிக் காக்கப் பிறந்த உடன்பிறந்தார் அரங்கரும் வ. சு. வும் என்பதில் ஐயமில்லையாம்.

# 6. நூற்பதிப்புக் கழகப்பெருமை

*("எதிரே செல்கிறாரே அவர் கோடி கோடியாகத் தேடி வைத்துள் செல்வர். ஆனால், நான் மனப்பாடம் செய்துள்ள இலக்கியச் செல்வத்திற்கு இணையாகுமா அவர் செல்வம்?"*

*"புல்லைக் காட்டிக்கொண்டு போகின்றவனைத் தொடரும் ஆவைப்போல், நூலைத் தொகுத்து வைத்திருப் பானைத் தேடி நான் போகின்றேன்").*

**- சுவைஞர் இருவர் சொன்மொழி.**

*"பொருள் இல்லார்க்கு இவ் வுலகம் இல்லை" - உண்மைதான். "பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும், பொருளல்லதில்லை பொருள்" - இதுவும் உண்மைதான். பொருளினால் ஆகும் எல்லாம் என்பதற்காக அப் பொருளை எப்படியும் தேடுவது தகுமா? தக்கவர்களுக்குத் தகுமா?*

*பொருள் தேடுதற்குரிய வாயில்களுள் தலையாயது வாணிகம். ஆனால், எல்லா வாணிகங்களும் செய்யத்தக்கனவே எனினும் சான்றோர் உள்ளம் அவற்றில் ஈடுபடுவது இல்லை. மாசு மறுவற்ற பெருமை தருவதுடன் மதிக்கத்தக்க பயனையும் நாட்டுக்குத் தருவதாகத் தம் வாணிகக் கடமை இருப்பது நலமென் அன்னோர் எண்ணி ஈடுபடுவர். பொருள் ஒன்றே அவர்கள் பொருட்டாக எண்ணி ஈடுபடாத வணிகநெறி அது.*

*கொள்ளையோ கொள்ளை என்று கூறுமாறு எத்தனை எத்தனை வணிகப் பகற்கொள்ளைகள், எத்தனைஎத்தனை கலப்படங்கள், கையூட்டுகள், கள்ளச் சந்தைகள், கடத்தல்கள், பதுக்கல்கள் இவையெல்லாம் ஒரு சிறிதும் இல்லாத வணிகமும் உண்டோ? உண்டு என்பதும் உண்மையே!*

*சங்கச்சான்றோர் கூறியதுபோலக் கொள்வதும் மிகை கொளாது, கொடுப்பதும் குறைகொடாத அறவிலி வாணிகமே ஒருவர் புரியினும், அவர் எடுத்துக்கொண்ட வாணிகத்தைப் பொறுத்து அவர்தம் உளப்பான்மை வெளிப்படுமாம். உயிர் காக்கும் உணவுவகை, மானங்காக்கும் உடைவகை, உற்றவகையில்*

கழக தொடக்க அமைச்சர்
வ.திருவரங்கம்பிள்ளை
1920 - 1944

தனித்தமிழ் திருவாட்டி
திருவரங்க நீலாம்பிகை அம்மையார்

**கழகத் தொடக்கச் செயற்குழுத் தலைவர்**
**மா.வே.நெல்லையப்பபிள்ளை, பி.ஏ.,**
**1920 - 1938**

**இடர்நீக்கித் தழைத்தோங்கச் செய்த**
**கழகத் தலைவர்**
**நாகர்கோயில் வழக்குரைஞர்**
**ப.சிதம்பரம்பிள்ளை, பி.ஏ.பி.எல்.,**
**1938 - 1949**

# கழக செயற்குழுத் தலைவர்
# மூன்றாமவர்

**பாகனேரி**
**மு.காசிவிசுநாதன் செட்டியார்**
**1949 முதல்**

எல்லாம் உதவும் வலவகைப் பயன் பொருள்கள், பலசரக்கு, அழகுப் பொருள்கள் ஆகிய வணிகங்கள் எல்லாம் உலகியல் நடைமுறைக்கு வேண்டுவனவே; மேற்கொள்ளத் தக்கனவே! இவ்வாணிகங்களில் நேர்மை காணப்பெறின் அருமையாம். அஃது அதில் ஈடுபட்டுள்ள நன்மக்கள் உள்ளத்து ஊற்றெடுத்த பெருங்குணத்தின் வெற்றியால் அமைந்ததே எனலாம்.

ஆனால், இவ்வெல்லா வாணிகங்களினும் தலையாயது ஒன்று உண்டு எனின், அஃது அறிவு நூல் வாணிகமே எனத் துணிந்து கூறலாம்.

மரத்தின் வளைவை நேராக்கவா, கல்லை நேராய் உடைக்கவா, மனையிடத்தை நேராய் அறுக்கவா, நூல்அடித்தே செய்யபடும். அதுபோல் மனத்திலுள்ள கோணல்களை அகற்றி நேராக்க வல்லது அறிவு நூல். அவ்வறிவு நூல்களை வெளியிட்டு, விற்பனை செய்யும் வணிகத்தை மேற்கொள்வது கண்ணொளி இல்லார்க்குக் கண்ணொளி வழங்கும் வள்ளன்மை போல்வதாம்! அறங்கள் எனச் சொல்லப்படும், எல்லாவற்றையும் செய்யும் அருமையிலும் அவ் வறத்திற்கு நிலைக்களமாக நின்று என்றும் காக்கும் நூல்களை வெளியிடுதல் மிகு பெருமைக்குரியதேயாம்.

நூல்கள் வெளியீடு என்பதிலும் எத்தகைய புன்மைகள் பல்கியுள? இளைஞர் வாழ்வைக் கெடுத்து என்றும் கடைத்தேற ஒட்டா இழிவில் தள்ளும் கீழ்நிலை நூல்கள் எத்தனை? கையால் தொட்டாலும் கண்ணால் கண்டாலும் சவர்க்காரம் இட்டுக் கழுவினாலும் தூய்மையாகாத கயமை நூல்கள் எத்தனை? பிறந்த மேனிப் படங்களை வெளியிட்டுப் பேதையர் உள்ளத்தை வயப்படுத்தி அழிக்கும் இழிதகை நூல்கள் எத்தனை? இவற்றை எழுதுவித்தும் பதிப்பித்தும் வாணிகம் செய்வதை நூல் வணிகம் என்று சொல்லலும் இழிவேயாம். இவை எத்தீய வணிகத்தினும் தீய வணிகமாம். ஏனெனில் மற்றைத் தீய வணிகங்கள் வழிவழிஉடலையும் பொருளையும் மட்டுமே கெடுக்கும். இத்தீய வணிகமோ, உயிர்ப்பையே ஒடுக்குவது! உயிர்ப்பை ஒடுக்கிய பின்னே உய்வேதும் உண்டோ? யாதும்இல்லையதாம்!

அறிவுநூல் வாணிகத்தில் தலைப்படுவார்க்குத் தனித்தகுதிகள் வேண்டும் பிற வாணிகங்களுக்குப் பொருளும் முயற்சியும் இருப்பின் வெற்றியாம். ஆனால் அறிவு நூல் வாணிகம் செய்தற்கு அறிவுக் கூர்ப்பும், அறவுணர்வும், அருட்பெருக்கும் இன்றியமையாது வேண்டடத்தக்கவை. ஒரு

பள்ளி ஆசிரியன் செய்யும் பிழை அப் பள்ளியளவில் கேடு செய்து செய்து அமையும். ஆனால், ஒரு நூலாசிரியன் செய்யும் பிழை நாட்டையே நலிவிக்கும் என்னும் பெரு நெஞ்சம் வாய்ந்த பெருமக்களே இத்துறையில் தலைப்படத் தக்கவர்கள். இவ்வகையால் நோக்கின் ஒரு பல்கலைக்கழகப் பணியினும் மேம்பட்ட பணியென்று சொல்லத்தக்கது அறிவுநூல் பதிப்பகப்பணி என்று மலைமேல் ஏறிநின்று தலைநிமிர்ந்து கூறுத்தக்க தனிப்பெருமையுடையதாம்.

புழுவாய்ப் பூச்சியாய் வீழ்ந்து மடிய இருப்பாரை, இருசிறகு, எழுப்ப எழும்பும் பறவைபோல உயரத்தின் உயரத்தில் பறக்க விடுவது எதுவோ, நிலைபெறா வாழ்வை நிலைபெறுத்த வல்லது எதுவோ, நம்பிக்கை இழந்துபோய் நலியும் வாழ்வை, நம்பிக்கையூட்டித் தட்டி நிறுத்தி நல்லபல செய்தற்கு ஏவுவது எதுவோ, தொய்வில்லாத் துணிவும், எழுச்சியும் தொடர்ந்து தரவல்லது எதுவோ, மாசுகளை அகற்றி மணியாக ஒளிவிடச் செய்ய வல்லது எதுவோ, கோட்டத்தை நிமிர்த்தி நேராக்க வல்லது எதுவோ. கொள்கையில் பிறழாக் கொழுமையைக் கொண்டொழுக வைப்பது எதுவோ, இவன் சான்றோன் என்று பல்லாயிரவர் இடையே இருந்தாலும் ஒருவனை இனங்கண்டு தலைவணங்கச் செய்யும் தகவளிப்பது எதுவோ அதுவே அறிவுநூல் ஆதலின், அத்தகு நூல்களை வெளியிடும் நிறுவனத் தொண்டுக்கு இணை அதுவே யென்று கூறுவது அன்றி வேறொன்று கூறுதற்கு இல்லையாம்.

இன்னும் அறிவுநூல் வெளியீடே அறப்பணியாய் இருக்க, அப்பணியால் அடையவரும் ஊதியத்தில் செம்பாதியை அறவழிகளுக்கே செலவிட வேண்டுமென வரம்புகட்டி வாய்க்கால் கோலி அறப்பயிரை வளர்த்து வருதற்குத் திட்டம் தீட்டியதும், அதனைச் சிக்கெனக் கடைப்பிடித்துச் சீரிய அறநிறுவனங்கள் பலவற்றைத் தோற்றுவித்துக் கண்ணின் மணியாய்க் காத்து வருவதும், பொன் மலருக்குப் புதுமணமும் வாய்த்தது போன்ற பெருமைக்கு உரியதாம். இவற்றையெல்லாம் எண்ணி உணர்வோர், இற்றைக்கு அறுபது யாண்டுகளின் முன்னே சைவசித்தாந்தக் கழகக்கூட்டுப் பங்கு நிறுவனம் தோற்றுவித்த அருமையை நினைந்து வியந்து போற்றாமல் இரார். கூட்டுறவு அமைப்பு முறையிலும், புத்தக வெளியீட்டு நிறுவனத் தன்மையிலும் இச் சைவசித்தாந்தக் கழகம் தன்னிகரற்ற தனிச் சிறப்பால், உலகுக்கு ஒரு மாமணியாய் விளங்குதலை இவ்வரலாற்றின்கண் ஆங்காங்கு அறிந்து மகிழ்க.

# 7. கழகக் கால்கோள்

*(ஓடத்தை ஓட்டுதற்காகத் துடுப்பு வலிக்க முனைந்தான் அவன். ஆனால், ஒரு கப்பற்காரன் தானே அவனைத் தேடிவந்து அக் கப்பலுக்கு மீகாமன் ஆக்கி விட்டான்.)*

நூற்பதிப்புக் கழகத்தின் சிறப்பை அறிந்தோம். நூற்பதிப்புக் கழகச் சிறப்பு என்பது என்ன? அதனைத் தோற்றுவித்துக் கட்டிக் காப்பவர் சிறப்பேயன்றோ!

கொழும்பிலே தோன்றிய திருசங்கர் கம்பெனி ஓராண்டே ஆங்கு நடைபெற்றது. அந் நிறுவனத்தின் மேல் அரங்கர்க்கு உண்டாகிய பற்றும், தொழில் திறமும் அதனையே தம் வாழ்வுக் கடமையாகக் கொள்ள ஏவியது. ஆதலால் அதனைத் தாய்த் தமிழகத்திலே நிறுவிப் பணிசெய்வதே முறைமையும் கடமையுமாம் என முடிவு செய்தார். முடிவு ஒன்று எடுத்துவிட்டால் உடனே அதில் முழுமூச்சாக இறங்கிப் பணிசெய்வது அவர் தன்மை. ஆதலால் கொழும்பில் இருந்து பாளைக்கு வந்தார். ஆங்கிருந்து சென்னைக்குச் சென்றார். அடிகளாருடன் கலந்து உரையாடினார். பின்னர்ச் சென்னை, பவழக்காரத்தெரு 2 ஆம்எண் (புது எண் 87) கட்டிடத்தில் இருந்த தெருப்பக்கத்து அறையில் திருசங்கர் கம்பெனியைத் தொடங்கினார்.

திருசங்கர் கம்பெனியைச் சென்னையில் தொடங்கிய அன்றே பாளையங்கோட்டையில் உள்ள தம் இல்லத்தில் அதன் கிளை நிலையம் தொடங்கப்பெற்றது. அரங்கர் சென்னை நிலையப் பொறுப்பைப் பார்த்துக் கொண்டார். இளவல் வ.சு. கிளைநிலையப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். தமிழகத்தின் வட எல்லையிலும், தென் எல்லையிலும் திருசங்கர் கம்பெனி ஒரேவேளையில்இருகிளைகளை விரித்தது. அது தமிழ் உலக முழுவதும் தண்ணிழல் பரப்புதற்குரிய ஒரு பெருவாய்ப்பு உண்டாதற்குத் தூண்டுகோலாயிற்று. “நாள் செய்வதை நல்லவர் செய்யார்” என்பது பழமொழி. நாளும் நல்லவரும் சேர்ந்து செய்தால்நடவாதனவும் நடக்கும்; நிகழாதனவும் நிகழும்!

அடிகளார்க்கு அன்பராய் நெல்லையிலே திரு. மா. திரவியம்பிள்ளை என்பார் ஒருவர் திகழ்ந்தார். அவர் அடிகளாரைப் பன்முறை நெல்லைக்கு அழைப்பித்துச் சொன் மழை பொழியச் செய்தார். அடிகளாரின் அறிவுப் பயிர் வளர்ச்சிக்கு அவர் திரவிய மாகவும் இருந்தார். அவர்க்கு அன்பர்திரு. செ. விசுவநாதபிள்ளை என்பார். அவர் தமிழும் சைவமும் தழைத்தோங்கவேண்டும் என்பதில் தீராக்காதலர். நம்மக்கள் எத்தனையோ புதுப்புதுத் தொழில்முறைகளில் ஈடுபடுகின்றனர். உயிர்க்கு ஊதியமாம். இப்பணியில் ஈடுபடுவார் ,லரே என்னும் எண்ணம் உடையவராக இருந்தார். தம் கருத்தைத் திருவியம் பிள்ளையினிடம் வெளியிட்டார். திரவியம்பிள்ளைஅடிகளார் துணையை அவாவினார். அடிகளார்எண்ணம் அரங்கர்மேல் படிந்தது.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்."

என்பதற்கு ஏற்ப அடிகளார் அரங்கரை அணுகுமாறு ஆற்றுப்படுத்தினார். அடிகளார்வழிவந்தஅவ்வாற்றுப்படை அருந்தமிழ் அரங்கர்க்கு அளப்பிலா ஆனந்தத்தேனாக அமைந்தது.

திரவியம்பிள்ளை, வழக்குரைஞர் ஒருவரிடம் எழுத்த ராகப் பணி செய்து வந்தவர். தென்னிந்திய வங்கி விதிகளைத் திறமாக அமைத்துத் தந்தவர் அவர். ஆகலின் கழக விதிகளை அருமையாய் அமைத்தார். அப்பொழுது உடனிருந்து உதவினார்இளவலார் வ. சு. சீரிய மாளிகை எழுப்புதற்கு முன்னே வரையும் வரைபடத்தில் அன்றோ அதன் அமைப்பும் அழகும் அருமையும் வளர்ச்சி வாய்ப்பும் எல்லாம் அடங்கிக் கிடக்கின்றன.ஆலின் வித்தில் அப் பெருமரப் பகுதியெல்லாம் அடங்கிக் கிடத்தல்போல, அமைப்பு விதிகளிலேதாம் அடங்கிக் கிடக்கின்றன, ஒருநிறுவனத்தின் செயன்முறைகள் என்பது உண்மையாம். இதனை எதிர்கால வளர்ச்சிக் கண்ணோட்டத் தோடு வகுத்தமைக்கத் துணை நின்றார், வ. சு. என்பது அவ்விளமைக்கே பெருமை தருவதாம். திட்டமிட்டுத் தெரிந்தமைந்த கழக விதிமுறைகளை வழக்குரைஞர் திரு. தி. கோமதி நாயகம்பிள்ளை அவர்கள் சரிபார்த்து உதவினார்.

கழகத்தின் முதற்பொருள் உரூ. 50,000 என்றும், அது பங்கு ஒன்றுக்கு உரூ.10 விழுக்காடு 5000 பங்குகளாகக் கொடுக்கப்படும்

என்றும், திருவரங்கனாரும் திரவியம்பிள்ளையும் கூட்டமைச்சர் களாக இருந்து கழகத்தை நடத்துவது என்றும், கழகம் பதிவு செய்யப் பெற்ற காலம் முதல் இருபத்தைந்து ஆண்டுகள் அவர்களும் அவர்கள் வழித்தோன்றல்களும் அமைச்சர் களாகவும் கழகச் செயல் குழு உறுப்பினர்களாகவும் விளங்கிக் கழகத்தை நடாத்தும் உரிமை உடையவர் என்றும் உறுதிமுறி எழுதப்பெற்றது. பின் 'திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்' எனும் பெயரால் 21-9-1920 இல் திருநெல்வேலியில் கழகம் பதிவு செய்யப்பெற்றது. திரு. வ.சு. பிறந்த செப்டம்பர் 22ஆம் நாள். கழகம்பதிவு செய்யப்பெற்ற நாள் செப்டம்பர் 21 ஆம் நாள். இந் நாள்நெருக்கம், இவர்க்கும் கழகத்திற்கும் உள்ள நெருக்கத்தைக் காட்டும் முதற்குறிப்புப் போலும்.

கழகம் பதிவானதும் அரங்கனார் திருநெல்வேலியிலேயே தங்குதற்கு நேர்ந்தது. அதனால்அவர் சென்னையில் நடத்திவந்த திருசங்கர் கம்பெனி புத்தக வணிகத்தைத் தொடர்ந்து நடத்தும் பொறுப்பினை இளவலாரிடம் ஒப்படைத்தார். 1921 பிப்ரவரித் திங்களில் 'திருசங்கர்கம்பெனி' இருந்த பவழக்காரத்தெரு இரண்டாம் எண் அறையிலேயே கழகக் கிளைநிலையம் தொடங்கப்பெற்றது. அதன் முகவராக வ. சு. அமர்ந்தார். அது முதல் புத்தகவணிகம் கழகத்தின் பெயராலலேயே நடை பெறலாயிற்று! திருசங்கர் கம்பெனி என்னும் சிற்றாறு, கழகப் பேராற்றுடன் கலந்து ஒன்றாகி அமைந்தது.

கழகத்திற்குத் திரவியம்பிள்ளை வழியாக வித்திட்டவர் திரு. விசுவநாதபிள்ளை அல்லரோ! அவர் பத்து உரூபா பெறுமான நூறு பங்குகளை உவப்புடன் ஏற்றுக்கொண்டார். திட்டப்படி 5000 பங்குகள் அல்லவோ வேண்டும்? அமைச்சர்கள் இருவரும் பங்குகள் சேர்ப்பதில் முனைந்தனர். திரவியம்பிள்ளை பலதிறப்பணிகளில் ஈடுபட்டவர். வாய்த்த பொழுதுகிளில் மட்டும் கழகப்பணிகளில் கருத்துக் கொள்வார். அரங்கரோ 'ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்' கழகத்தொண்டுக்கே ஆளாக்கிப் பணிசெய்தார். கழகம் கால்கொண்டது.

கழகம் கால் கொண்டு கவினுறத் துலங்குவதை அறிந்தார் தமிழ் நூல் தொகுப்பார்வலர் பாகனேரி மு. காசிவிசுவநாதன் செட்டியார். கழகத் திட்டங்களும், கண்ணைக்கவரும் அதன் பதிப்புகளும் அவரைக் கவர்ந்தன. தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்கத் தலைவராகவும், புரவலராகவும், திகழும் அவர்

கழகப் புரவலராகவும் அமைய ஆர்வம் கொண்டார். பத்து உரூபா பெறுமான நூறு பங்குகளை அவர் ஏற்றுக் கொண்டார். இதனால், "கழகத்தொடக்கத்தில் நூறு பங்கு எடுத்துக்கொண்ட விசுவநாதர் கழகத்திற்கு வித்திட்டவர் என்றால், இவ் விசுவநாதர் கழகப்பயிர் செழித்து நற்பயன் வழங்க வேலியிட்ட வித்தகர்ஆவர்" எனச் சான்றோர்களால் புகழும் பேறு பெற்றார். இருவரும் விசுவநாதப் பேருடையார் என்பது கருதத்தகும் சிறப்பன்றோ!

## 8. கழக நோக்கச் சிறப்பு

*(தனக்காகவே பிறர் வாழவேண்டும் என்பது ஆணவநோக்கு, தானே வாழவேண்டும் என்பது மிக மிகக் குறுகிய நோக்கு, தானும் வாழவேண்டும் பிறரும் வாழவேண்டும் என்பது பொது நோக்கு; தனக்காகப் பிறரும், பிறருக்காகத் தானும் வாழவேண்டும்என்பது ஒப்புநோக்கு; பிறருக்காகவே தான்வாழ வேண்டும் என்பது பெருநோக்கு. இந் நோக்கம் உடையவரால் தான் உலகம் உண்கிறது.)*

'நோக்கு' என்பது பழந்தமிழ்ச் சொல். செய்யுளியல் கூறவந்த ஆசிரியர் தொல்காப்பியனார் அதன் உறுப்புகளைக் கூறுங்கால் நோக்கு என்பதொன்றையும் குறிப்பிடுகின்றார். அதன் இலக்கணம் இன்னதெனவும் தெளிவிக்கிறார். முழுதுற நோக்கிக் கழி பேரின்பம் கொள்வதே நோக்கு' என்பது அவர் கருதும் பொருளாகும்.

பார்வை பரந்துபட்டுச் செல்வது; காட்சி கண்ணுக்குக் களிப்பூட்டுவது; நோக்கு உள்ளத்திற்கு உவகையூட்டுவது.

பார்வை கண்களை இயல்பாய் அகலத் திறக்கப் பிறந்து எணும் பொருளிலும் பரவிச் செல்லும்.

காட்சி கண்ணை ஆர்வத்தால் திறப்பித்து உணர்வை உண்டாக்கிப் பாராட்ட வைக்கும்.

நோக்கோ, குவிந்து சென்று உள்ளத்தின் ஆழத்தில் பதிந்து உணர்வை உண்டாக்கி மெய்ம்மறக்க வைக்கும். இந் நோக்கை நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே' என நயமிகக் குறித்தார் தொல்காப்பியனார். 'கவிகண் நோக்கு' என நோக்கினை ஓவியமாக்கிக் காட்டினார் ஒரு சங்கச் சான்றோர். நோக்கு, காதல் பொருட்டாதலை வள்ளுவர் முதலாகச் சொல்லியல் உணர்ந்த புலவர்கள் எல்லாரும் சுவைகெழுமப் பாடினர்.

நோக்கில் இருந்து கிளர்ந்தது நோக்கம். நோக்கம் ஆர்வமிக்க கடைப்பிடியாயிற்று. அதுவே குறிக்கோள் ஆயிற்று.

*கோள் என்பது என்ன? கொள்ளுகை, கடைப்பிடி என்க. மாந்தர் வாழ்வு, நேர்க்கொடு பட்டது. இல்லையெனில், போக்கொடு போய்க் கெட்டொழிந்ததேயாம். இத்தகைய நோக்கின் நுட்பமும், பயனும், இன்றியமையாமையும் உணர்ந்து அமைக்கப்பட்டதே கழக நோக்கம் ஆகும்.*

"தனியாடு மேய்ப்பதினும் கூட்டாடு நன்றாம்;
இனிநாடே கூட்டு றவை நாடு"

*என்பது கூட்டுறவின் சிறப்பு வலியுறுத்தல். கூட்டாடு மேய்த்தல் நாட்டுப் புறங்களில் காணக்கூடியதே. கால்வலுவாக ஊன்றவு மாட்டாத - ஊன்றுதலை எண்ணவும் மாட்டாத - காலத்தே, நூற்பதிப்பு நிறுவனத்தில் புகுத்தியதே சீரிய நோக்காகும். இந் நோக்கில் துவங்கிச் சிறந்த பணிசெய்துவரும் பொதுக் கழகம் தென்னாட்டில் இஃது ஒன்றேயாகும்.*

*"கழக ஊதியத்தில் இருந்து நூற்றுக்கு ஆறு விழுக்காட்டுக்கு மேல் பங்காளிகள் ஊதியம் பெறுதற்கு உரிமை இல்லை" என்பது அறந்தழுவிய - பொருளே முதன்மையெனக் கருதாத - ஒரு நோக்கம் ஆகும்.*

*மற்றொன்று, "கழகத்துக்கு ஏற்படும் செலவு நீக்கிக் கிடைக்கும் ஊதியத்தில் சரிபாதி இக் கழகத்தின் ஆட்சியில் உள்ள தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்திற்கும், தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்கும் கொடுக்கப் பெறுதல் வேண்டும் என்பது. இத் தேர்ச்சி மிக்க திட்டத்தால் இச் சங்கங்கள் சைவ உலகுக்கும் தமிழ் உலகுக்கும் செய்துள்ள - செய்துவரும் - சிறந்த தொண்டுகள் மதிப்பிடற்கு அரியன.*

*இன்னும், எந்தவொரு வெளியீட்டகமும் இதுகாறும் மேற்கொள்ளப்பெறாத நிகரற்ற இரண்டு திட்டங்களை வகுத்துக் கொண்டது கழகம்.*

*ஒன்று : ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணை யாகத்தக்க வகையில் கிடைத்தற்கு அரிய நூல்களையெல்லாம் தொகுத்து நூல்நிலையம் ஆக்குதல் என்பது. இத் திட்டத்தால் இவ்வுலகின் எந்த ஒரு நூல் நிலையத்திலும் திட்டவட்டமாகப் பெறுதற்கு முடியவே முடியாது எனத்தக்க பல்லாயிரம் அருந்தமிழ் நூல்களை அந்நாள் முதலே தொகுத்து வைக்கும் பேறு வாய்த்தது. இஃது உலகமெங்கும் உள்ள எந்த வெளியீட்டு நிறுவனமும் செய்தறியாத செயலாகும்.*

*மற்றொன்று: இதழ் வெளியிடுதல் என்னும் நோக்கம். இந் நோக்கத்தால் அருங்கலைச் செல்வமென மதித்து அட்டை கட்டி, வைத்துப் பேழையுள் என்றும் போற்றிக் காக்கத்தக்க கருவூலமாகச் 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் திங்களிதழ் தடைப்படுதல் இல்லாமல் 1923 ஆம் ஆண்டுத் தொடக்க முதலே அரும்பெருந் தொண்டாற்றி வருகிறது.*

*இவையெல்லாம் கழக நோக்கச் சிறப்பின் அடிப்படை யால் நாடு பெற்ற நற்பயன்களாம்.*

*இனி, நூல்களிலும் எந்நூல் ஆயினும் வெளியிட்டு விடுவதா? இல்லை! அவற்றையும் முன்னதாகவே அறுதியிட்டு உறுதிப் படுத்தப் பெற்றுள்ளன.*

*"சைவசித்தாந்த நூல்களையும் அவற்றின் கருத்துக்கு மாறுபாடில்லாத பழைய அடிறவு நூல்கள், கருவி நூல்கள், உலக நூல்கள் முதலியவற்றையும் இதுவரை அச்சுக்கு வராதவையும், இப்போது கிடைத்தற்கு அரியவாயுள்ளனவு மான நூல்களையும் பதிப்பித்து விற்பனை செய்தல்,*

*"மேற்குறித்த நூல்களுக்கு அறிவுடைய பெரியார் பலரைக் கொண்டு ஆராய்ச்சிகள், விளக்கவுரைகள் முதலியன எழுதுவித்து அவற்றைப் பதிப்பித்து விற்பனை செய்தல்."*

*"வடமொழியிலும் மற்றும் பிறமொழிகளிலுமுள்ள அறிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பதிப்பித்தல், விற்றுமுதல்செய்தல்."*

*"தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் பிறமொழிகளிலும் மொழி பெயர்த்துப் பதிப்பித்து விற்றுமுதல் செய்தல்."*

*- இவையெல்லாம் எத்தகைய எதிர்கால நோக்கொடு அமைக்கப் பெற்றவை என்பதைக் கருதி மகிழ்க.*

*இன்னொன்று : தமிழ்மொழி இந்நாளில் எவ்வெத் துறைகளில் பெற்றிருக்கும் ஏற்றங்களுக்கும் அடிப்படையாக அமைந்த கழகத்தின் திட்டமிட்ட பணிகளேயாம்.. தனித்தமிழ் இயக்கப் பாசறையாகத் திகழ்ந்து வருவதும் கழகமேயாம். இவற்றுக் கெல்லாம் காரணராக இருந்தவர் எவர்? அரங்கனாரும், அவர் அருமை இளவல் வ. சு. வுமே ஆவர் அன்றோ!*

*கழகம் என்னும் சொல் பழங்காலத்தில் பெருமைப் பொருள் தருவதாய் இல்லை. திவாகரமுனிவர், பரஞ்சோதி*

முனிவர் ஆகியோர் காலத்துக்குப் பின்னே தான் கழகம் என்பது சான்றோர் அவையம் என்னும் பொருட்சிறப்புடைய சொல்லாயிற்று. அச் சொல்லை நாடறிந்த பெருமைச் சொல்லாக மாற்றி வழங்குவித்தது இச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமேயாம். இக் கழகம் தோன்றிச் சீரிய பணிகள் செய்து கழகச் சொல்லுக்குத் தனிப் பெருமை சேர்த்த பின்னரே, கட்சிகளும் அமைப்புகளும் அவையங்களும் கழகப் பெயர் கொண்டன. இவையெல்லாம் எண்ணி மகிழத் தக்கவை என்க.

# 9. ஆட்சியின் அருமை

*(ஏர் உழுதலினும் நலமாகும் எருவிடுதல்; எரு விடுதலினும் நலமாகும் களையெடுத்தல்; களையெடுத்தலினும் நலமாகும் நீர்ப்பாய்ச்சுதல்; நீர்ப்பாய்ச்சுதலினும் நலமாகும் காவல் புரிதல்; காவல் சோர்ந்தால்கைப்பிடி தவசமேனும் களஞ்சியத்திற்கு வந்து சேருமோ?)*

ஆளுகை, ஆளுதல், ஆட்சி என்பனவெல்லாம் ஒரு பொருள் தரும் சொற்கள். ஒவ்வோர் ஆளும் - ஆண் ஆள் எனினும் பெண் ஆள் எனினும் - ஆளுகைத் திறம் வாய்ந்தவர் என்பதே இத் தமிழ்ச் சொல்லின் குறிப்புப்பொருளாகும். ஆனால், இப் பொருள் விளங்க வாழ்ந்து காட்டியவர் விரல் விட்டு எண்ணத்தக்கவராகவே உள்ளனர் என்பது வரலாறு காட்டும் உண்மை.

ஓர் ஆட்சிப்பரப்பு, நாடாக இருந்தால்என்ன? வீடாக இருந்தால் என்ன? ஒரு நிறுவனமாக இருந்தால் என்ன? ஓர் அமைப்பாக இருந்தால் என்ன? அதன் சிறப்பு அதனை ஆள்பவர் சீர்மையைப் பொறுத்தே அமைகின்றது.

மன்னன் எப்படி, மக்கள் அப்படி என்பது முடியாட்சிக் காலப் பழமொழி. ‘ஆள்பவர் எப்படி, வாழ்பவர் அப்படி’ என்பது குடியாட்சிக்காலப் புதுமொழி. மேல்நிலையில் இருந்து ஆணையிடுபவர் செம்மையிலராயின் அவர்க்குக் கீழ்நிலையில் இருந்து பணிபுரிவாரிடம் செம்மை தங்குமோ? செம்மை தங்கவில்லை எனக் கீழ்நிலையில் இருப்பாரை மேல்நிலையில் இருப்பார் தட்டிக் கேட்கவும் இயலுமோ?

இதனைச் சங்கச்சான்றோர் ஒருவர் தெள்ளிதின் விளக்கினார். அவர் தொண்டைமான் இளந்திரையன் என்பார். ஆட்சிப்பொறுப்பில் இருந்த அவர் ஆட்சிபற்றிக் கூறிய அறிவுரை அவர் பட்டறிவால்வெளிப்பட்டதாகலின் போற்றிக் கொள்ளத்தக்கது என்பதில் ஐயமின்றாம்.

"உருளையையும் பாரையும் கோத்து உலகின்கண்ணே செலுத்தும் காவலுடைய வண்டி, அதனைச் செலுத்துவோன் மாண்புடையன் ஆயின் ஊறுபாடு இல்லாமல் வழியில் இனிதாகச் செல்லும். அவன் அதனை இனிதாகச் செலுத்துதலைத் தெளிய மாட்டாதவன் ஆயின் அது நாள்தோறும் பகையாகிச், செறிந்த சேற்றுள் அழுந்தி மிகப்பல தீய துன்பத்தை மேலும் மேலும் உண்டாக்கும்" என்பது அவர் சொல்லிய அறிவுரையாம்.*

கழக வண்டியைச் செலுத்துதலிலும் இடர்கள் மிகப்பல உண்டாயின; எதிரிட்டன. எனினும் அதனைச் செலுத்துவோர் திறம், ஊறுபாடுகளை யெல்லாம் அறவே அகற்றிச் செவ்விய சாலையில் செம்மாந்து செல்ல உதவியது'.

குழந்தைகளுக்கு எளிதில் நோய் பற்றிக்கொள்ளல் உலகறிந்த உண்மை. அவ்வாறே எந்த அமைப்புக்கும் தொடக்கத்தில் தொல்லைகளும் துயர்களும் வந்து முட்டுதல்தவிர்க்கமுடியாதவை. அவ் வேளைகளில் எல்லாம் ஆட்சிப் பொறுப்புடையார் திறங்களே அமைப்பைக் கட்டிக்காத்துள்ளன. அவ் விதிக்குக் கழகமும் உரிமை பூண்டதேயாம்.

1920 ஆம் ஆண்டில் கழகம் தொடங்கிய நாள்முதல் ஆட்சிப் பொறுப்பில் இருந்து அரும்பாடுபட்டவர் திருவரங்கனார். அக்காலத்தில் கழகப்பங்குகள் சேர்க்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு அளவே இல்லை. பெரும்பாலான பங்குகளைத் திரட்டிக் கழகத்தை நிலைபெறுத்திய 'கழகக் காவலர் அவரே எனில் மிகையன்றாம்.

அக்காலத்தில் இளவலார் வ. சு. சென்னைக் கிளையின் முகவராக இருந்தார். அவர் நூல் வெளியீட்டுக்காகவும் அவற்றை விற்பதற்காகவும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அளவில் அடங்காதன. இவ்விருவகை முயற்சிகளும் இருபாலும் இனிதின் இயங்கியமையால்தான் கழகம் தன் காலை வலிமையாக ஊன்றி நிலைபெறலாயிற்று.

அண்ணல் அரங்கனார்க்குப் பின்னே 1945 ஆம் ஆண்டில் ஆட்சிப்பொறுப்பேற்று நாளிது வரை நடாத்திவருபவர் வ. சு. அவர்கள். அண்ணல் அரங்கர் 'காவல் குழவி கெள்பவர்

* புறம். 185

**கழக ஆட்சியர், தாமரைச் செல்வர்**
**வ.சுப்பையா**

**கழக ஆட்சியரின் தவத்திரு அன்னையார்**
**வயிரமுத்து சுந்தரத்தம்மை**
**1868 - 1952**

**கழகத்தை நிறுவிய அமைச்சர் திருவரங்கரும்**
**தம்பி ஆட்சியரும்**

கழக ஆட்சியரும் குடும்பத்தவரும்

போலக்' கழகத்தைக் காத்தனர் என்றால், அவர்களுடன் அணுக்கமாக இருந்து அறிவன அறிந்து அவர்கள் வழித்தடத்துச் செல்வதே வாழ்வாக வகுத்துக்கொண்ட இளவலார் வ. சு. கழகக் குழந்தைக்குச் செல்வச் செவிலியாகி வளர்த்துப் பொன்னும் மணியும் பூட்டிப் பொற்புறுத்தி மகிழும் புகழ்த்தொண்டராகத் திகழ்கிறார்! இப்படித் தகுதி வாய்ந்த ஆடசிமுறையால்வாழ்ந்து, தகவினால் வளர்ந்தமை யால்தான்,. அறிஞர்க்கு அறிஞராம் அண்ணா அவர்கள்,

"ஒரு காலத்தில், தமிழில் எத்தனைபுத்தகங்கள் இருக்கின்றன" என்று சிலர் கேட்டதுண்டு. ஆனால் இன்றைக்கு ஓர் ஐயாயிரம் ரூபாய் எடுத்துக் கொண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துக்குப் போனால், அத்தனைக்கும் தமிழ்ப் புத்தகங்கள் வாங்கிக் கொண்டு திரும்பமுடியும். அந்த அளவு தமிழில் இன்று புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன".

என்று பாராட்டும் திருவாழ்வு கழகத்திற்கு அமைந்தது என்க.

முற்காலத்தில் ஒரு நூலை இயற்றியவர் அந்நூலின் இறுதியில், இந்நூலைப் படித்தவரும், படிக்கக்கேட்டவரும், விரும்பிப் படியெடுத்துக் காத்தவரும், பிறருக்கு உதவியாகத் தந்தவரும்இன்ன இன்ன நலங்களை யெல்லாம் பெற்றுப் பேரின்பமும் எய்துவர் என்று எழுதுவது உண்டு! அவ்வகையில் தமிழன்னைக்கு அணிகலமாகிய ஆயிரத்து எழுநூற்றைம்பது நூல்களை அழகொழுக வெளியிட்டுத் தமிழின் தனிபெருஞ் சிறப்பை உலகெல்லாம் பரப்பிய கழகப்பணியில் ஈடுபட்ட பெருமக்கள் எவராயின் என்ன, அவரெல்லாம் பெற்றபேறு பிறர்க்கு வாய்க்கா அருமையேயாம் என்றால், அதன் கண்மணிகளெனத் திகழ்ந்த அரங்கர்க்கும் அவர் இளவல் வ.சு. விற்கும் தமிழகம் எத்துணைக் கடமைப்பட்டுள்ளது என்பது சொல்லாமலே விளங்கும்.

# 10. சென்னையில் முகவர்

*(மாடத்திற்கு எழில், ஓவியம்; மாநகருக்குச்சீர், கோபுரம்; நூலுக்கு நயம், முன்னுரை; இவற்றைப் போல் ஒரு நிறுவனத்திற்கு வளம், முகவர்.)*

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நெல்லையில் கால்கொண்ட நாளிலேயே சென்னையிலும் ஒரு கிளையைத் தோற்றுவித்தது. அத் தோற்றம், தமிழகத்தின் தென்னெல்லை வடவெல்லைகளை ஒருங்கிணைத்துப், பறவைக்கு அமைந்த இரு சிறகுகள் என எழுச்சிகொண்டு உயர்ந்தோங்க வகையாயிற்று. தமிழகச் சமுதாய ஒப்புதற்கு ஏற்பத் தென்பால் நெல்லையில் இருந்துகொண்டு செய்தலை மூத்தவர் அரங்கர் மேற்கொண்டார்; வடபால் சென்னையில் இருந்து வளர்பணி புரிதலை இளையவர் வ. சு. மேற்கொண்டார். மூத்தவர் பொறுப்போ, கழகத்தின் மேலாண்மைக் கடன் புரியும் அமைச்சர் பொறுப்பு; இளையவர் பதவியோ, முகவர் என்பது.

ஏனை வணிகங்களுக்கும் நூல் வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகளை முன்னர்க் கண்டோம். ஆங்குச் சுட்டப்பெறாத ஒருவேறுபாடு இவண் நோக்கத்தக்கது. பொருளான் ஆம் ஏனை வணிகங்கள். ஆனால் நூல்வெளியீட்டு வணிகம் பொருளான் ஆம் என்ற அளவில் அமைவது இல்லை. நூல் வணிகம் என்பது என்ன? வணிகமா? அச்சுத் தொழிலா? கட்ட வேலையா? அலுவலக ஆட்சியா? ஆய்வுக் களப்பணியா? பரப்பவை மன்றச் செயலா? எல்லாம் கூடிய ஒன்றே நூல் வணிகப்பணி!

ஒருவர் இன்று ஒரு வாணிகம், தொடங்கினாராயின். தொடங்கிய நொடிமுதலே பெட்டிக்குச் காசு வந்து கொண்டிருக்கும்; கற்றை கற்றையாய்ப்பணம் வெளியேறிப் பண்டமாக வந்திறங்கிக் கொண்டிருக்கும். அவர்கள் பொருள்களை உண்டாக்குவது இல்லை; உண்டாக்கி வைத்திருப்பவர் அல்லது வாங்கி வைத்திருப்பவரிடம் வாங்கி விற்பது அவர்கள் வேலை. நூல் வாணிகப்பணி, நூல்களை

உருவாக்கியே விற்கத் தொடங்கும் பணி. வெளியிடத்தக்க நூல்களைத் தேடுதல், அச்சகம் தேடுதல் - தாள் தேடுதல் - ஓவியரைத் தேடுதல் - பட அச்சுக் கட்டைகளை ஆக்குதல் - அட்டை கட்டுதல் - இன்னபல கடமைகளையெல்லாம் பலகால் பலர் இணைந்து செய்த பின்னரே ஒரு நூலை வெளியிட்டு ஊரெல்லாம் சுற்றி விற்றால், அடுத்த நூல் வெளியிட இயலுமா? போக்குவரவுச் செலவிலேயே போய்ப் படுத்துவிடுமே வெளியீட்டுப்பணி - ஆதலால், தொடர் தொடராக நூல்கள் வெளிப்பட வேண்டும். பிறர் வெளியீட்டு நூல்களை வாங்கி விற்றலும் வேண்டும்; இப்பணிக்கு நெல்லையினும் சென்னையே மிக்க வாய்ப்புள்ள இடமாம் என்பதை எவரும் அறிவர். ஆதலால் கழகப்பங்கு நிறுவனத்திற்குப் பணமுதலீட்டாளக்ளைத் தேடும் பணியைத் திறமாக நெல்லையில் இருந்து அரங்கனார் புரிந்தார். வெளியீட்டுப் பணியைச் சென்னையில் இருந்து தம்பியார் வ.சு. புரிந்தார். ஆதலின், கழகப் பேரால மரத்தின் இருகவடுகளாக இருவரும் இருந்து பணிசெய்தமையே அதன் பெருவளர்ச்சிக்கு இடமாயிற்று என்பது அறிந்து இன்புறுதற்குரியது.

கழகம் வெளியிட்ட முதல் வெளியீடு ‘திருவடிப் புகழ்மாலை’. ஆகும். இறைவன் திருவடிப் போற்றிலே பெரிதும் தோய்ந்து பிறரும் கண்டடைய நூலாக்கிய பெருநாவலர் திருவள்ளுவர். அவர் இயற்றிய கடவுள் வாழ்த்துப் பத்துப் பாடல்களில் ஏழு பாடல்கள் திருவடிப் புகழ்ச்சியே எனின் அதன் சீர்மை செவ்விதின் விளங்கும்; வள்ளுவர் உள்ளத்தை வாழ்வாக்கிக்கொண்டு வழிகாட்டிய பெருமகனார் வள்ளலார்.. அவர் பாடிய திருவடிப் புகழ்ச்சியின் பெருமை, பொருட்சிறப்பால் மட்டுமன்றி எவரும் இதுகாறும் பாடி அறியா அடியளவாலும் வெளிப்படும்! 224 சீர்களால் அமைந்த கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் (128 அடிகளான் அமைந்தது) பாடினார். இத்தகைய பெருமை வாய்ந்த திருவடிப் புகழ்ச்சியிலே முதல் வெளியீட்டு நூல் தொடங்கியமை ஒரு புகழ்நூல் வெளியீடாவது அன்றிக் கழகப் புகழுக்குத் தோற்றுவாயாகவும் அமைந்தது. இதனைச் செய்த பெருமகனார் இவ் வரலாற்று நாயகரே ஆவர்.

கழகம் தொடங்கிய முதல் ஆண்டில் ஐந்து நூல்களும், இரண்டாவது ஆண்டில் ஏழு நூல்களும், மூன்றாவது ஆண்டில் 13 நூல்களும், நான்காவது ஆண்டில் 20 நூல்களும் என நூல் வெளியீடு ஆண்டுதோறும் வளர்ந்தன. 1961 ஆம் ஆண்டில்

*அதன் 1008 ஆவது வெளியீட்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் வெளியீடுகள் மிகுந்து வந்தன. ஏறத்தாழ ஆண்டுக்கு 25 நூல்கள் விழுக்காடு தொடர்ந்து வெளியிட்டு வந்த பெருமை கழகத்திற்கு உண்டாயிற்று. அன்றியும் மூன்றாம் ஆண்டிலேயே கழக வளர்ச்சிக்கும் மொழிநலம் காத்தற்கும் செவிலியாக அமைந்த 'செந்தமிழ்ச் செல்வி' இதழ் தொடங்கிற்று. ஆதலால், ஆண்டுக்குப் பன்னிரண்டு இதழ்கள் வெளியிடும் பணியும் நூல் வெளியீட்டுப் பணியுடன் கழக முகவர்க்கு இணைந்து கொண்டதாம். கழக முகவர் பணிக்குக் கிடைத்த சம்பளம் உருபா 35; தொகையைக் கருதிச் செய்யும் தொழில் வேறு, தொண்டு வேறேயன்றோ? இனிக் கழக முகவர் வெளியீட்டுப் பணியை கருதும்போது நம் நினைவில் முன்வருவோர் இருவர் ஆவர். அவர்கள் திரு. சி. மு. கோவிந்தராச முதலியாரும், திரு. காழி. சிவ. கண்ணுசாமிப் பிள்ளையும் ஆவர்.*

*கோவிந்தராசனார் சிறுமணவூர் முனுசாமி முதலியார் புதல்வர் 1920 ஆம் ஆண்டில் 'சிவகாமி விலாச'அச்சுக்கூடம் என்பதை இலிங்கிச் செட்டித் தெரு 41 ஆம் எண் வீட்டில் நடத்திவந்தவர் அப்போது கழகக்கிளை 297 தம்புசெட்டித் தெருவில் நடந்து வந்தது. 'சிவகாமி விலாச' அச்சகத்தில் 'சிவஞான சித்தியார் சுபக்கம்இருவர் உரை' அச்சிடப்பெற்றது. பின்னர்க் கழகம்இலிங்கிச் செட்டித் தெருவு 306 ஆம் எண் வீட்டுக்கு மாறி சென்றது. ஆங்குக் கழகம் மேல் மாடியிலும்சிவகாமி அச்சகம் கீழ்ப்பகுதியிலுமாக இயங்கும் வாய்ப்புளதாயிற்று. இவ் வியைபுகள் கோவிந்தராசரையும் கழக முகவர் வ.சு. வையும் நெருக்கமாக இணைத்தன. இவ் விணைப்போ செந்தமிழ்ச் செல்வியைக் கொணரவும் வாய்ப்பாயிற்று. கழகத்தின் நூற்பணிகள் எல்லாம் சிவகாமி அச்சக வழியே நிகழலாயின.*

*கோவிந்தராசனார் அச்சுக்கலையில் அருந்திறலர். கண்கவர் வனப்பில் அச்சிடத் தேர்ந்தவர். அரும் பரிசுகள் பல, கழக நூற்பதிப்புக்கும் கட்டத்திறனுக்கும் கிடைக்க மூலமாக இருந்தவர்; திருக்குறள் என்னும் நூற்பெயருக்கு ஏற்பக் குறள்வடிவில் நூல் வெளியிட்டு உலாப்போதரச் செய்ததில் பெரும் பங்காளர் கோவிந்தராசாரே. பின்னர்த் திருவாசக மூலம் முதலியவற்றை அழகிய குறுவடிவில் கொணர உதவியவரும், அறிஞர் மு.வ. இயற்றிய 'திருக்குறள் தெளிவுரை' இடப்பால்*

உரையும் பலப்பால் பாடலுமாய் இனிதின் அமைய, எழிலுறப் பதிப்பிக்கத் துணை நிற் பெருமையரும்இக் கோவிந்தராசனாரே ஆவர். இவர்தம் குடும்பச் சூழலால் தம் அச்சகத்தை விற்ற பின்னர் அவ் வச்சகத்தை விலைக்கு வாங்கிய ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்திற்கு அச்சக மேலாண்மைப் பொறுப்பாளராக விளங்கினார். அதன் பின்னே கழகத்திற்கு அப்பர் அச்சகம் கால்கொண்டபோது அதன் மேலாண்மைப் பொறுப்பாளராக அணி செய்தார். கழக வெளியீட்டுக்குத் தொடக்க நாள் முதல் பெருமை சேர்த்த பெருமக்களுள் கோவிந்தராசனார்க்கும் சிறந்த இடம் உண்டு. அவரை வயப்படுத்தி ஆட்கொண்டு அருங்கலைச் செல்வர் அவரெனத் தமிழகத்திற்குக் காட்டுவித்த பெருமை வ.சு.வுக்கு உண்டு.

இனி நூல் வெளியீட்டுத் துறையில் வ.சு. அவர்களுடன் உடன்பிறப்பாக இருந்து உழுவலன்புடன் உதவியவர் காழி சிவ. கண்ணுசாமிப்பிள்ளையவர்கள். சீர்காழிப் பதியிலே பிறந்த இவர் கல்லூரிப் பட்டப்படிப்பில் தேர்ந்து ‘அஞ்சலக ஆட்சித் தலைமை அலுவலக’த்தில் எழுத்தராகப் பணிபுரிந்தார். எழுத்தாற்றலுடையவர். தமிழை ஆங்கிலத்திலும் ஆங்கிலத்தைத் தமிழிலும் மொழி பெயர்த்தலில் தேர்ச்சி மிக்கவர். கழகம் பவழக்காரத் தெருவுக்கு 1927 இல் மாறிவந்தபோது, அதே தெருவில் அண்மையில் குடியிருந்த காழிக்கண்ணர் கழக முகவர்க்கு அணுக்கரும் அன்பரும் ஆயினார்; உடன் பிறப்பாக ஒன்றினார். கழக வெளியீட்டுத் துறையில் சிறந்த பங்கேற்றார் அச்சுப்படி பார்த்தலில் தொடங்கிய துணை பின்னே செல்விக்குக் கட்டுரை வழங்குநராகச் செய்தது. நூலாசிரியரும் ஆக்கிற்று! கழக வெளியீடுகளை ஒல்லும் வகையில் அழகுறுத்தும ஒப்பனைச் செல்வரும் ஆக்கிற்று!

செல்வி ஆறாம்இதழிலே தொடக்குகின்றது இவர் எழுத்துப் பணி. அவ் விதழிலே ஆங்கிலப் பேரறிஞர் ‘பேக்கனார்’ கட்டுரை தமிழாக்கம் பெறுகின்றது. தனித்தமிழில் செறிவுமிக்கதான அப்பெயர்ப்புக் கட்டுரைகள், பொருட் சிறப்பாலும் மொழிநடைத் திறத்தாலும் பொலிகின்றன. ஒவ்வொரு கட்டுரையின் இறுதியிலும் ‘பொருளின் பிண்டக் கருத்துகள்’ என்னும் ஒரு பகுதியும் பேக்கனார் கொண்ட பொருள் நிலைக்கு ஒப்பான தமிழ்நூற் பாடல்கள் பழமொழிகள் ஆகியவற்றை ‘மேற்கோள்’ காட்டும் ஒரு பகுதியும் இடம்பெற்றுத் தனக்கென ஓரமைப்பைக் கொண்டுள்ளது. பெற்றோரும் மக்களும் எனத் தொடங்கும் அக்காழிக் கண்ணர்

கட்டுரைத் தொடர் வாய்மை, வெகுளி, ஒறுத்தல், கற்கை, இறப்பு, மணவாழ்க்கை, காதல், வறுமை என வளர்ந்து, பெரு நிலக்கிழவர்பேக்கன் என்னும்கட்டுரையாய் நிறைகின்றது. ஆற்றலுடையாரை அரவணைத்து அவர்கள் திறன் நாட்டுக்கு நற்பொருளாம் வகையில் தொண்டு செய்தலில் தேர்ந்த வ.சு. அவர்களின் ஒப்பற்ற தன்மைக்கு வாய்த்த அரிய சான்றுகளுள் இஃதொன்றாம்.

கழக வழியே நூல்களை அச்சிடுதற்குத் தேர்ச்சிமிக்க சில திட்டங்களைத் தொடக்க நாளிலேயே கொண்டிருந்தார் வ.சு. அத்திட்டங்களை அறிந்துகொள்ளுதல் அவர்தம் சிறப்புகளை உணர்த்துவதுடன், வெளியீட்டாளர்களுக்கும் பயனுடையது மாம்.

"அச்சிடுதற்குத் தொகுக்கப்பெற்றிருக்கும் கையெழுத்துப் படிகளைச் சரிபார்த்துப் பொருள்வாரியாக நூலாசிரியர் உரையாசிரியர் பெயர்களுடன் பட்டி எழுதி ஒழுங்குபடுத்தி வைத்தல் வேண்டும். அவற்றில் எதனை அச்சிடுதற்கு எடுப்பினும் கழகப் புலவர்களைக் கொண்டு முதற்கண் சரிபார்க்கச் செய்தல் வேண்டும். அதன்பின் என்ன அளவில் என்ன எழுத்தில் எத்தனை படிகள் அச்சிட வேண்டும் என்று முடிவுசெய்து அச்சுக் கோப்பதற்குக் கொடுத்தல் வேண்டும். அந் நூலுக்குரிய தாள் போதுமான அளவில் இருப்பு உள்ளதா என்பதையும் பார்க்க வேண்டும்.

"தட்டப் படிவத்தையும், பக்கப் படிவத்தையும் மூலப்படியோடு ஒத்துப் படிக்கச் செய்து திருத்துதல் வேண்டும். நூலாசிரியர் இருப்பின் அவர் திருத்தத்துக்கும் பக்கப்படிவத்தை அனுப்புதல் வேண்டும்"

"அந் நூலில் படங்கள் வரவேண்டியிருப்பின் நூலாசிரியரைக் கலந்து, ஓவியரைக் கொண்டு படங்களை எழுதுவித்து அச்சுக்கட்டை செய்து வாங்கித் தட்டப்படிவ மெய்ப்பிலே உரிய இடங்களில் அமைத்துப் பக்கமெய்ப்பு எடுத்தல் வேண்டும்."

"தனியே மெய்ப்பினைத் திருத்துபவர் ஓசைபடாமல் ஒலித்துத் திருத்துதல் வேண்டும். அவ்வாறு செய்தால் பிழைகள் எளிதில் புலப்படும். கையெழுத்துப் படியில் கூடுமானவரை முன்னதாகச் சேர்க்க வேண்டுவனவற்றை எழுதிச் சேர்த்து விடுவது நல்லது. அப்படிச் சேர்க்க விடுபட்டுப் போயினும்

தட்டப் படிவத்திலே சேர்க்கலாம். இம் முறையைக் கடைப்பிடிப்பின் அச்சுக் கோப்பவர்களுக்குத் தொல்லை இல்லை.''

''பத்தி பிரிக்க வேண்டிய இடங்கள் இருப்பின் கையெழுத்துப படியிலேயே பிரித்து விடுதல் வேண்டும். அவ்வாறு செய்யாமல் விட்டுப்போனால் தட்டப் படிவத்தில் கட்டாயம் செய்தல் வேண்டும்.''

''ஒரு நூலுக்குப் பின்னிணைப்பாகப் பாட்டு முதற்குறிப்பு அகர வரிசையோ, அருஞ்சொற்பொருள் அகரவரிசையோ, மேற்கோள் நூல் அகரவரிசையோ சேர்க்க வேண்டுமானால், கூடுதல் படிவங்கள் உள் நூல்களுக்கு நூல் முடியும்வரை காத்திராமல் சில படிவங்கள் அச்சிடப் பெற்றதும் புள்ளியிடப்பெற்ற நெடுந்தாள்களில் தனித்தனி எழுதி வருதல் வேண்டும். நூல் முடிந்ததும் தனித்தனித் துண்டுகளாக்கி அகரவரிசைப்படுத்தி அகல நீளமுள்ள பெரிய தாளில் பத்தி பத்தியாக ஒட்டி அச்சுக்கோப்பதற்குக் கொடுத்தல் வேண்டும். நூல் அச்சு முடிவதற்குச் சிறிது முன்பே பதிப்புரை, முன்னுரை, பொருளடக்கம்ஆகியவற்றை எழுதுதல் வேண்டும். அப்படிச் செய்வதால் காலந் தாழ்க்காமல் நூல் வேலை முடிவுபெறும். நூல் அச்சு முடியும் நிலையில் அதனைக் கட்டம் செய்தற்கு வேண்டியவற்றைத் திட்டப்படுத்திக்கொள்ள வேண்டும்.''

''இவ்வாறு முறையே செய்துவரின் எண்ணியவாறு நூல் வெளிவந்து விற்பனைக்கு அணியமாகிவிடும். மேலும், அதன் அடக்கவிலையை முன்கூட்டியேமதிப்பிடுதற்கும் வாய்ப்பாக இருக்கும்.''

அச்சிட்டு முடித்த படிவங்களையும், நூல்களையும், எப்படிப் பாதுகாப்பது என்பதைப் பற்றிய இவர்கள் கருத்தையும் இவ்விடத்தே தெரிந்துகொள்ளுதல் பயனுடையதாம்.

''அச்சிடப் பெற்றுவரும் தாள் கட்டுகளையோ, மடிக்கப்பெற்ற கட்டுகளையோ தரையில் வைக்கக்கூடாது. சிமெண்டும், செங்கல்லும் சேர்க்கப்பெற்ற திண்டுகள் ஓர் அடி உயரத்தில் செய்து அவற்றை இடைடையே நிறுத்தி மேலே, மாம்பலகை போட்டு, அப் பலகைமேல் இவற்றை வைத்தல் வேண்டும். தேக்குச் சட்டங்களால் உயரமும், அகலமுள்ள நிலைத்தாங்குகள் செய்து அவற்றின் தட்டுகளில், உருவான புத்தகக் கட்டுகளை வைத்தல் வேண்டும். கட்டுகளின் என்புறம்

புத்தகப் பெயரும், படி எண்களும் கையால் எழுதப்பெற்ற அல்லது அச்சிடப்பெற்ற துண்டுத் தாள்களை ஒட்டுதல் வேண்டும்.

"புத்தக இருப்பு வைத்திருக்கும் அறைகளில் சுவர்களின் ஓரத்திலும், கீழே பாவு கற்களுக்கு இடையிலும் செல்மருந்து திங்களுக்கு ஒருமுறை அடித்தல் வேண்டும். இருப்பு வைத்திருக்கும் அறையில் தூசி தும்புகள் சேராமலும் துண்டுத்தாள்கள் கீழே சிதறிக் கிடவாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். எந்தப் பணியையும் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போடாமல் உடனே செய்துவிடுதல் வேண்டும். புத்தக இருப்பு உள்ள அறைகளில் எலிகள் நுழைதற்கு வழியில்லாமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். எலிகள் வரவது தெரியின் பொறி வைத்துப் பிடித்துவிடுதல் வேண்டும். புத்தக இருப்புள்ள அறைகளில் மின்னிணைப்பும் மின்கம்பியும் செவ்வையாக உள்ளனவா என்பதை உன்னிப்பாகவும் இடையிடையேயும் கண்காணித்து கொள்ளுதல் வேண்டும்.

புத்தக வெளியீட்டு நிறுவனப்பணியிலே எத்தனை பணிகள் தொக்கிக் கிடக்கின்றன :

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும்"

என்னும் ஆட்சிப்பணிகள் நான்கும்,

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும நன்றதன் காப்பு"

என்னும் உழவுப் பணிகள் ஐந்தும்,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்னும் மருத்துவப்பணி நான்கும் ஆகியன வெல்லாம் ஒருங்கே கொண்டது போலும் நூல் வெளியீட்டுப்பணி!

"திருவடிப்புகழ்மாலை என்னும் நூல், கழகத்தின் முதல் வெளியீடாக என் பார்வையிலேயே வெளியிடப்பெற்றது. திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி உரை கழகத்தின் இரண்டாவது வெளியீடாகவும், சோமேசர் முதுமொழி வெண்பா உரை மூன்றாவது வெளியீடாகவும் வெளியிடப் பெற்றன.

“அத்தொடக்க நாளில் என்ன என்ன நூல்களை முதற்கண் வெளியிட்டால் விற்பனையாகும் என்று கருத்துக் கொள்ளவில்லை. தொல்காப்பியம் மிகுதியாகப் பரவாதிருந்த காலம். அதனால் தொல்காப்பியம் எழுத்து நச்சினார்க்கினியத்தையும், சொல் சேனாவரையத்தையும் அச்சிடவேண்டுமென்று கருதினோம்.ககழகம் சைவசித்தாந்தம் பரப்பவேண்டுமென்ற நோக்கத்தோடு அதன் பெயரையே சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமென் அமைத்தமையால் சைவ நூல்களை வெளியிட வேண்டுமென்ற முதன்மையான நோக்கத்தைக் கொண்டு அருணந்திசிவாசாரியார் இயற்றியருளிய சிவஞான சித்தியாரைச் சிவஞானமுனிவர் பொழிப்புரையுடனும் சுப்பிரமணிய தேசிகர் எழுதிய விருத்தியுரையுடனும், ‘சிவஞானசித்தியார் இருவருரை’ என்ற தலைப்பில் வெளியிட்டோம். தொல்காப்பியம் எழுத்து நச்சினார்க்கினியர் உரைக்குத் தாகூர் சட்ட புரிவுரையாளர் பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை அவர்களைக்கொண்டு ஆங்கிலத்திலும், தமிழிலும் முன்னுரை எழுதச் செய்தோம். இம் மூன்று நூல்களும் சிறந்த முறையில் வெளியிடப் பெற்றிருப்பினும், அவை விற்பதற்கு இருபது ஆண்டுகள் ஆயின எனின், அஃது உங்களுக்கு வியப்பாகவே இருக்கும்”

தொடக்ககால வெளியீடு பற்றி வ.சு. அவர்கள் எழுதிய இக் குறிப்புகள் கழகம் செந்தமிழும், சிவநெறியும் இரு கண்களெனப் போற்றி வளர்க்கக் கிளர்ந்த சிறப்பையும் பொருள்தேடல் ஒன்றுமே கழகத்திற்குப் பொருட்டன்று; நாடு எய்தும் நலமே பொருட்டு என்னும் சீரிய கோட்பாட்டையும் வெளிப்படுத்தவல்லன. தொடக்க வெளியீட்டு வரிசையிலேயே தொல்காப்பியம் இடம்பெற்றமை கழகப்பதிப்புச் சிறப்புக்கு வாய்த்த தனிப்பெரு முத்திரையாகும்.

கழகப்பதிப்புகள், ஏடுகளைக்கொண்டு ஆய்ந்து வெளியிடப் பெற்றுள்ள முதற்பதிப்புகள் அல். எனினும், ஏடுகொண்டு ஆய்ந்து பதிப்பித்தோர் பதிப்புகளில் காணப்பெற்ற வழுக்களையும் களைந்து, கழகம் செப்பமாகவெளிப்படுத்தியுள்ளது. எப்படி? கழகச் சொல்லதிகாரம் சேனாவரையப்பதிப்பின் (1923) உரிமையுரையில் வரும் ஒரு குறிப்பு:

“யான் மதுரைத் தமிழ்ச்சங்கத்துக் கல்லூரியில் கல்வி பயிலுங்காலத்து அச் சங்கத்துத் தொல்காப்பிய ஏட்டுப்பிரதி

ஒன்றை உடன் வைத்துப் பயின்று வந்தேன். அப் பிரதியில் சில பாடபேதங்களும், திருத்தங்களும் கிடைத்தன. பின்னர்த், திருவாவடுதுறை யாதீன மடத்திற் கல்வி பயிலுங் காலத்து அவ்வாதீனத்துப் பிரதிகளிற் சில பாடபேதங்களும் திருத்தங்களும் கிடைத்தன. இத் திருத்தங்களும் பாட பேதங்களும் சொல்லதிகாரம் பயில்வார்க்குப் பெரிதும் பயன் படுமென வுன்னித் தன்னலங் கருதாது தமிழ்நலமொன்றே கருதி யுழைத்து வருபவரும், என் இன்னுயிர் நண்பருமாயி உயர்சைவத் திருவாளர் திருவரங்கம் பிள்ளையவர்கள் தங்கள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வாயிலாக இத் திருத்தங்களுடன் சொல்லதிகாரத்தை அச்சுவாகனமேற்றி வெளியிட்டுள்ளார்கள் என்று அத்தொல்காப்பியப்பதிப்பில் மேற்கோள்களை விளக்கியும், திருத்தங் காட்டியும், குறிப்புரை வரைந்தும், அச்சுவழுக் களைந்தும் உதவி புரிந்த பேராசிரியர் சோழவந்தான் கந்தசாமியார் வரைந்துள்ளார். இக்குறிப்பு, கழகப்பதிப்புகளின் கட்டுக்கோப்பை நன்கு விளக்க வல்லதாகும்."

## 11. அடிமேல் அடி

*(உரலுக்கு ஒரு பக்கம் இடி; மத்தளத்திற்கோ இரு பக்கமும் இடி; சிலர் வாழ்விலோ எப்பக்கமும் இடி!)*

*கழக முகவராகச் சென்னையில் தங்கினார் வ.சு. கடையுணவு வீட்டுணவு ஆகுமா? கடையுணவாகவே, பெயருக்கு ஏற்ப இருந்தது! இயல்பாகவே இளமை முதல் நோய்க்கு ஆட்பட்ட வ.சு. விற்குக் கடையுணவும் உண்ண நேர்ந்தமை பெருநலக்கேடு ஆயிற்று.*

*இவருக்கு ஓரகவை நிரம்பா முன்னரே ஒருநாள், உடம்பெல்லாம் குளிர்ந்து 'உண்டோ? இல்லையோ?' என்னும் நிலைமை உண்டாயிற்று. பாளையங்கோட்டைத் தூயசவேரியர் உயர்பள்ளியில் நான்காம் வகுப்புப் பயின்றுகொண்டிருக்கும் போதிலேயே, நெஞ்சு வலி தாக்கியது. ஆங்கே, இரண்டாம் படிவம் பயிலும்போது குருதி குறைந்து சோகைநோய் ஆயிற்று. ஐந்தாம் படிவம் பயின்று கொண்டிருந்தபோதிலேயே மலச்சிக்கல் தொடுத்து. பள்ளி இறுதித்தேர்வு முடித்துக் கொழும்பு மையக் கல்லூரியில்* (Central College) *சேர்ந்து பயின்றுவந்த போதில், பருவ நிலை ஏற்றுக்கொள்ளாமல் ஊருக்குத் திரும்பிவர நேர்ந்தது. சென்னையில்கழகமுகவர் பொறுப்பில் இருந்தபோது 1922 பிப்ரவரித் திங்களில் கடுமையான மலேரியாக் காய்ச்சலுக்கு ஆட்பட்டார்.*

*முன்னேஏற்பட்ட நோய்களை உடனுக்குடன் ஒருவாறு தீர்த்து ஒழிக்க முடிந்தது. மலேரியாக் காய்ச்சல் தன் உரமெல்லாம் காட்டி ஒடுக்கியது; உடலை உரக்கி உறுத்துத் தாக்கியது. வெப்பம் 105 வரை' '106 வரை' என ஏறியது; வெப்பம் தணிந்து, வாழைத்தண்டெனத் தண்ணிதாய் மாறியது! ஒரு நிலைப்படாமல்இவ்வாறு உலுக்கியது.*

*இராயபுரம் மருத்துவமனையில் நோய் ஆய்வியல்* (Pathology Professor) *மருத்துவராகத் திரு. செ. சின்னசாமிபிள்ளை* (M.B.C.M.) *என்பார் ஒருவர் இருந்தார். அவர் சிவநெறியிலும், செந்தமிழிலும் சீரிய பற்றாளர். ஆதலால்,*

இவர்க்கு ஆர்வத்தால் மருத்துவம் புரிந்தார். அரிதின் முயன்று விரைவின் நோய் தீர்க்கப் பாடுபட்டார். அதனால், ஒரு திங்கள் சம்பளமில்லா விடுமுறை பெற்று, நெல்லையில் ஓய்வு கொண்டு திரும்பும் அளவில் அத்துயர் தீர்ந்தது.

1925 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள்முதல் நெஞ்சில் கோழை உறைந்து இருமல் உண்டாயிற்று; உணவு செல்ல மாட்டமல் உடல் நலிந்தது. மாலையில் உடலில் வெப்பம் ஏற்பட்டு இரவு 10 மணிக்கு வியர்வை உண்டாகி வெப்பம்குறையும். நாள்தோறும் இந்நிலை தொடர்ந்தது. இராயபுரம் மருத்துவர் சின்ன சாமிபிள்ளையேமருத்துவம் புரிந்தார். அவர், வீட்டுணவு கொள்ளுதல் வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆதலால், பாளையில் இருந்து, அன்னையாரை வரச்செய்து அவர்ஆக்கித்தந்த உணவு உண்டார். ஆயினும் நோய் தீர்ந்தபாடில்லை! அரங்கர் சென்னைக்கு வந்தார். தம்பியார் உடல்நிலை அறிந்து வருந்தினார். அன்னையாயையும் தம்பியாரையும் பாளையங் கோட்டைக்கே அனுப்பி மருத்துவம் செய்விக்க வழிகண்டார்.

பாளையங்கோட்டையில் ஒரு சித்த மருத்துவர் இருந்தார். அவர் கீழைப்பாட்டம் திரு. பிச்சாண்டியாபிள்ளை என்பார். அவர் திறமிக்க சித்தமருத்துவர்; மலர்ந்த முகத்தர்; அன்புருவர். அவர்தம் உள்ளார்ந்த அன்போடு கூடிய மருத்துவத்தால்உடல் நலம் விரைந்து உண்டாகியது.

"முதற்கண் அவர்கள் பவளபற்பம் (நீறு) தந்து அதனை முசுமுசுக்கை இலையில் வைத்துக் காலையிலும் மாலையிலுமாக இரு வேளைகள் இருபத்தொரு நாள்கள் சுவைத்து விழுங்குமாறு கூறினார்கள். அவ்வாறு அம் மருந்தை உண்டபின் அறைவை மருந்து (செந்தூரம்) ஒன்று செய்து தந்தார்கள். அதனையும்அப்படியே இருபத்தொரு நாள்கள் பசுவெண்ணெயில் குழம்பி உண்ணுமாறு சொன்னார்கள். அவ்வாறு உண்டு வருகையில், வெப்பம் படிப்படியே குறைந்து வரலாயிற்று. அறைவை மருந்து உண்டு முடிந்தபின் இடிமருந்து (சூரணம்) கொடுத்து அதனைச் சருக்கரையில் விரவி உண்ணுமாறு சொன்னார்கள். அப்படி உண்டு வருகையில் ஒருநாள் வெப்பமானி (Thermometer) உடைந்ததும் வெப்பம் உரிய நிலைக்கு வந்ததும் திருவருட்செயலெனக் கருதிச் சிவபெருமான் திருவடிகளுக்கு வணக்கம் செலுத்தினேன்."

இவர்தம் நோய் நீங்கி உடல் வலிமை பெற நான்கு திங்கள் ஆயின. ஆயின், சென்னைக்கு வந்து பணிசெய்ய உடல்நிலை

உடனே இடந்தராதெனக் கருதித் திருநெல்வேலித் தலையை நிலையத்திலே பணிபுரியுமாறு கட்டளை கிடைக்கப்பெற்றது ஆதலால், பாளையங்கோட்டையில் இருந்துகொண்டு திருநெல்வேலிக்குச் சென்று பணி செய்து வந்தார். நோயிலும் நெல்லை தலைமை நிலையப் பணியிலுமாக ஒன்பது திங்கள் சென்றன. பின்னே சென்னைப் பணிக்கு மீண்டும் சென்றார்.

சென்னைக்கு வந்தபின்னரும் இடைடையே இருமல் வாட்டியது. மலச்சிக்கலும் வலுத்தது. இடைஇடையே நீரேற்றக் கொண்டு குடரைத் தூய்மை செய்துகொள்ள நேர்ந்தது. குடலைத் சீர் செய்துகொண் அளவில் நலம்பெற்று விடுவதும் இல்லை! நெஞ்சில் கோழையும், பித்தமும் கூடித் துன்புறுத்தும். மீண்டும் திருவாளர் சின்னசாமிபிள்ளை மருத்துவமே துணையாயிற்று. இத்தனை நோய்த் தாக்கங்களுக்கும் இடையேதான் முயற்சியாளர் தம் கடமையில் ஊன்றி நிற்கின்றனர். வெற்றி மிக்க வாழ்வினரெல்லாம் ‘தொட்டாற் சருங்கி’யாக இருந்ததும் இல்லை! ‘அழுகுணிச்சித்தரா’கப் புலம்பியதும் இல்லை.

“மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து.”

என்னும் பொன்மொழியைப் போற்றி ஒழுகினார் இவர்.

வாட்டிய நோய்கள் போதாவா? வ. சு. அவர்கள் குடும்பத்தை வருந்திய இழப்புகள், அம்மவோ! கொடுமை! கொடுமையினும் கொடுமை.

இவர்தம் மூன்றாம் அகவையிலேயே தந்தையை இழந்ததை அறிவோம். பதினேழாம் அகவையில், உடன் பிறந்த ஐயம் பெருமாள் இயற்கை எய்தினார். தம் பதினெட்டாம் ஆண்டிலே மூத்த அண்ணன் முத்துசாமி இயற்கை எய்தினார். அதற்கு அடுத்த ஆறாம் ஆண்டிலே திருஞானம் என்னும் செல்வக் குழந்தையை விட்டு வைத்து விண்ணுலகு புக்கார், செப்பருங்குணத்துக் குப்பம்மாள். அசையா உள்ளத்தையும் அசைக்கும் ஆறாத் துயரங்கள் அடுக்கடுக்காய் வந்தன. ஆனால் அரவணைத்துக் காக்க ஓர் அருமைஅண்ணன் திருவரங்கர் உடனிருந்தார்; வயிரமுத்துப்பிள்ளை வழங்கிய வள்ளற் செல்வங்களாகிய திருவரங்கரும், இளவலாரும் இணையிலா வயிரமும் முத்துமாக இலங்கினர்; உள்ளம் தளர்ந்தவர்களால் தாங்கிக் கொள்ளத்தக்க இழப்புகளோ இவை!

# 12. கோடையில் குளிர்தரு

*(பாலைக்கு இடையேயும் பசுஞ்சோலை உண்டு; பாறைக்கு இடையேயும் பனிநீர் உண்டு; காரிருளுக்கு இடையேயும் கைவிளக்கு உண்டு; வாட்டும் வறுமைக்கு இடையேயும் ஊட்டும் உள்ளம் உண்டு. இவையே ஆற்றாமையை ஆற்றி அருள் செய்வன.)*

தவத்திரு மறைமலையடிகளார் தொடர்பு அரங்கனார்க்கு முதற்கண் தமிழ்த் தொடர்பாகிப் பின்னர் உயிரொடும் ஒன்றிய கெழுதகைமைத் தொடர்பாக விரிந்தது. 'திரிசங்கர் கம்பெனி' யைத் தொடங்குமுன் அடிகளார் வளமனையில் அரங்கனார் சின்னாள்கள் உறைந்தார் அன்றோ! அந் நாளில் அடிகளார் திருமகளார் நீலாம்பிகையாரைக் கண்டு களிகூர்ந்தார்; காதல் கொண்டார். அம்பிகையாரும்ஆருயிர்க் காதலராக அரங்கரைக் கொண்டு கனிந்து உருகினார். ஆனால், நூல் பதிப்பு வகையில்அடிகளார்க்கும் அரங்கர்க்கும் உண்டாகியிருந்த ஒரு பிணக்கு திருமணத்தைச் சில ஆண்டுகள் தடுத்து நிறுத்தியது! காதலர் இருவரும் கருத்திலே ஒருமித்து நின்றனர்; அடிகாளர் மெல்லுள்ளமும் உருகியது. அறிவறிந்த சான்றோர்களும் அணுகி உரைத்தனர். அந் நிலையில் 2-9-1927 இல் திருமயிலைக் கபாலீசுவரர் திருக்கோயிலில் தமிழுலகின் இணையற்ற புலவர்களெல்லாரும் ஒருங்கிருந்து வாழ்த்தத் திருமணம் இனிது நிகழ்ந்தது.

அண்ணலார் திருமணமே அவர்தம் முப்பத்தேழாம் அகவையில் நிகழ்ந்தது. அவர்தம் அறிவறிந்த இளவலார் அதற்குப் பின்னரும் கடமை உணர்ச்சிமிகுதலால் தம் திருமணத்தைக் கருதினார் அல்லர். கடமையேகாதற்கிழத்தி எனக்கொண்டு கழகப்பணிகளிலேயே இடையீடுபடாமல் உழைத்தார். பொழுதுஎன வரம்பு செய்து கடனாற்றுவது இவர் அறியாத ஒன்று. கூட்டுப் பங்கு நிறுவனத்து ஊழியரே தாம் எனினும், வீட்டுப்பணியினும் விழுமிதாக எண்ணி முழுதார்வத்தால் உழைப்பதை அன்றி ஓய்வோ ஒழிவோ கொள்வதை அறியார்.

நூலாசிரியர்களைக் காணுதல், நூல்கள் அச்சிடுதல், விற்பனைக்குப் பாடுபடுதல், பள்ளிகளில் நூல்களைப் பாடமாக வைத்தற்கெனச் சலிப்பின்றி அலைதல் - இவ்வாறே நாளும் பொழுதும் செலவிட்டார். "மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார். செவ்வி அருமையும் பாரார், அவமதிப்பும் கொள்ளார் என்னும் அருமை மொழிக்கு முற்றும் பொருந்திய எடுத்துக்காட்டாகிக் கருமமே கண்ணாக விளங்கினார். இந்நிலையில் ஆண்டுகள் உருண்டன; ஒன்றா, இரண்டா? எட்டாண்டுகள் உருண்டன.

"இருமனம் கூடினால்திருமணம்" என்பது காதல் மணத்திற்குப் பொருந்துவது. அதற்குமே இப்பொழுது பலர்மனம் ஒன்று படவேண்டி உள்ளது என்பது நாடறிந்த செய்தி. அவ்வாறகப், பெற்றோரும் பெரியோரும் பார்த்து முடிக்கும் திருமணத்திற்குப் பல மனங்களின் கூட்டுறவு இல்லாமல் முடியுமா?

நெல்லை மாவட்டத்துத திருவை குண்டத்திற்கு அணித்தாக அமைந்ததோர் ஊர் வெள்ளூர் என்பது. சிற்றூரே அஃதெனினும் பேருள்ளம் படைத்தோரால் பெருமைபெற்ற ஊர். ஆங்கே ஆண்டியப்ப பிள்ளை என்பார் ஒருவர் இருந்தார். அவர்தம் அருமைக் கிழத்தியார் சங்கரவடிவு அம்மையார். இவர்கள் அருந்தவப்பயனாக மக்கள் அறுவர் தோன்றினார். அவர்கள் இலக்குமணப்பிள்ளை, இராசகோபால் பிள்ளை, வேங்கடாசலப் பெருமாள்பிள்ளை, சுப்பையாபிள்ளை, ஆவுடையம்மாள், மங்கையர்க்கு டஅரசியார் என்பார்.

பாளை வயிரமுத்துப்பிள்ளை குடும்பமும், வெள்ளூர் ஆண்டியப்பபிள்ளை குடும்பமும் நெருங்கிய உறவுமுறை யுடையன. ஒருவருக்கொருவர் அறிந்து கொண்டும் புரிந்து கொண்டும் விளங்கினர். இந்நிலையில் கழக முகவர் வ.சு. அவர்களை ஆண்டியப்பிள்ளை குடும்பத்தார் நன்கு அறிதற்கு வாய்ப்பு இயல்பாகவே உண்டாயற்று. அவர்தம் குணநலங்களையும், இயல் செயல்களையும், பணி மேம் பாட்டையும் உணர்ந்து உள்ளத்தால் ஒன்றுபட்டு உயர்ந்து விளங்கினார் திரு. இராசகோபால்பிள்ளை. அவர் உடன் பிறந்தார் திரு. சுப்பையாபிள்ளை கழகத்திலேயே பணியில் அமர்ந்திருந்தார். மற்றை உடன்பிறந்தார்களும் இனிய பெற்றோர்களும் இணைந்து மங்கையர்க்கு அரசியாரை வ.சு. அவர்களுக்கு வாழ்க்கைத் துணையாக்க இசைந்தனர்.

எந்த ஒரு செயலும் நிறைவேறுதற்குக் காலமும் இடமும் கனிய வேண்டுவது இன்றியமையாதது; அவ்வகையில் எதிர் பாராமலும் காலமும் இடமும் கனிந்து கைகொடுத்து நன்மை செய்யும். அதனையே திருவருள் என்றும் ஊழ் என்றும் கூறுவர்.

திருவாளர் இராசகோபால்பிள்ளை இராலி உடன்பிறந்தார் (Rallis Brothers) நிறுவனத்தில் பணிபுரிந்தார். இவர் உடன் பறிந்தார் வேங்கடாசலப் பெருமாள் பிள்ளையும் அந் நிறுவனத்திலேயே பணிபுரிந்தார். தூத்துககுடியிலே தொடங்கிய திரு. இராசகோபால் பிள்ளையின் பணி, இராசபாளையம், திருவண்ணாமலை, வேலூர் ஆகிய இடங்களுக்கு மாறி 1932 ஆம் ஆண்டில் சென்னைக்கு வாய்த்தது. அப்பொழுது அவர் சென்னை இராமசாமித் தெருவில் குடியிருந்தார். ஆதலால் வெள்ளூர் ஆண்டியப்பிள்ளை குடும்பமும், பாளை வயிரமுத்துப்பிள்ளை குடும்பமும் சென்னையில் நெருங்கி உறவாடுதற்கு வாய்த்தது. இவ் வாய்ப்பே பழைய உறவைப் புதுபபித்து வழிவழியாகத் தொடரும் வளத்தை ஆக்கிற்று.

மங்கையர்க்கு அரசியார் பெண்மைச்சிறப்பாலும் பெருகிய மனை மாண்பாலும் மங்கையர்க்கு அரசியாராகவே திகழ்பவர். "பங்கயச் செல்வி" என்றும், "திருநுதற் செல்வி" என்றும் "சிவன் திருநீற்றினை வளர்க்கும் பத்தியார்கின்ற பாண்டிமாதேவி" என்றும், "பண்ணின் நேர் மொழியாள்" என்றும், "பன்னலம் புணரும் பாண்டிமாதேவி" என்றும் ஆளுடையபிள்ளையார் அருளின்மை போல அரும்பெரும் நலங்கள் எல்லாம் அமைந்து பெண்மையின் பெருந்திருவாக விளங்கினார். கணவரின் சீரும் சிறப்பும் பேரும் புகழும் பெருகுதற்கு ஏற்ற வாழ்க்கைத் துணையானார்.

தனித்தமிழ்க் காவலராகத் திகழ்ந்தவர் திருவரங்கனார். அவரோ தனித்தமிழ் மலையாம் மறைமலையடிகள் திருமகனார் நீலாம்பிகையை உயிர்துணைவியாகக் கொண்ட உயர்பெரு" செல்வர். அவர்தம் அருமைத்தம்பியார் வ.சு. திருமணம், எம்முறையில் நிகழ்ந்திருக்கும்?

செந்தமிழ்ப்புலவர் குழாம் சூழ்ந்திருக்க, அன்பர்களும் ஆர்வலர்களும், திரண்டிருக்க மணமக்களின் இருபெரு குடும்பத்தாரும் இனிதின் இணைந்திருக்க, திரு. சுந்தர ஓதுவாமூர்த்திகள் திருமணச் சடங்குகளைச் செவ்விதின் நிகழ்த்த, சிவாகம நெறிப் படியே செவ்விதில் திருமணம்

நிகழ்ந்தது. திருமணம் நிகழ்ந்த நாள் 7-7-1935. (யுவ ஆண்டு ஆனித்திங்கள் 23 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை.)

வீடு என்பது என்ன? விடுதலையாம்; துன்பத்தில் இருந்து விடுதலை பெற்று இன்புறும் இடமே வீடு! அதனை இன்பக்களம் ஆககுவாள் இல்லாள்: அவ்வில்லாளை, வாழ்க்கைத் துணையெனக் கொண்டவர் வாழ்வு இன்பநிலையமாம்; நல்ல மனைவியைப் பெற்றவர் வாழ்வு நாளும் சிறக்கும்; நாடுபுகழ் பேறும் நல்கும்! இல்லதென் இல்லவள் மாண்பானால் என்னும் பொன்மொழி இதனைத் தெளிவிக்கும்.

நன்மனைவி வாயாதவர் தலைநிமிர்ந்து நடக்கவும் இயலார்! அதிலும், பொதுப்பணியில் புகுந்தார்க்கு அவர்தம் மனைவியாரே ஆக்கமும் கேடுமாய் அமைவோர்! பொதுப்பணியில் புகழ்பெற்ற பெருமக்கள் புகழ்வாழ்வில் ஒருபாதி - ஏன் மறுபாதியில் மிகுதிப் பங்கும் கூட - அவர்தம் இல்லக்கிழத்தியார் அன்பும் பண்பும் அரவணைப்பும் தூண்டுதலும் துணையும் துணிவும் கனிவும் பிறவு மாகியவற்றால் அமைந்தனவேயாம்! “கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி” என்னும் மொழியில் கொண்டானின் சிறப்புக்கெல்லாம் உரியவள் அவளே என்பது விளங்கும். அவன் கொண்டான் எனக் கொண்டாடப்படுவதே அவளால்தான்! ‘தம்பொருள் என்ப தம்மக்கள்’ என்பர்! மக்களே பொருள்! அவர்களையுடையவனே பொருளாளன். மனைவியே கொள்ளத் தக்கவள் அவளைக் கொண்டவனே கொண்டான் ஆதலால் நன் மனைவியாம் மங்கையர்க்கரசியாரைப் பெற்ற பேறே வ.சு. அவர்கள் வாழ்வின் பின்னைக் கடமைச் சிறப்புகளுக்கெல்லாம் அடிப்படையாய் அமைந்தது என்க!

மங்கையர்க்கு அரசியார் மலர்முகத்தர்; இனிய மொழியர்; கனிவு நெஞ்சர்; கணவரை உயிராகப் போற்றும் கடமையா; தம் பெற்றோரைப் போற்றிவந்த பெருநிலைபோலவே, தம் கணவரைப் பெற்ற தயாரையும் பேரன்பால் போற்றி ஒழுகினார். தம் உடன் பிறந்தாரையும் உறவாரையும் போற்றிக் காத்ததுபோலவே, தம் கணவனார் குடும்பம் சார்ந்தாரையும் அரவணைத்துக கொண்டார். தம் பெருந்தவப்பேற்றால் வாய்த்திருந்த தமக்கையார் நீலாம்பிகையார்க்கு நேயம் பெருகிய தங்கையாய்த் திகழ்ந்தார். தமையனார் தம்பியரை

உளங்கொண்டு உவந்து போற்றுதலும் தம்பியார் தமையனாரை வழிகாட்டியாகக்கொண்டு அடிபற்றிச் செல்லுதலும் போலவே, அக்கையும், தங்கையும் அமைந்து குடும்பம் நடாத்தினர்! இவ்வன்பு நெறியே தமிழர்நெறி என்பதை வாழ்வால் மெய்ப்பித்தனர்.

சென்னை, பவழக்காரத்தெருவில் உள்ள கழக மனையில் இவர்கள் இல்லறம் தொடங்கிது. கழகப்பணிகளே தலைக்குமேல் இருக்க, இவர் வீட்டுப் பொறுப்பை ஏற்றுச் செய்வரோ? செய்தற்கு உள்ளமும், எடுத்துகொண்ட பணியு இடம் தருவனவோ? தாராவல்லவோ! ஆதலால், தொடக்கநாள் முதலே மங்கையர்க்கரசியார் மனையரசியாராகப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள நேர்ந்தது!

அரசுக்கு எத்தனை துறைகள் உண்டு? சிறிய குடும்பம் ஆயினும் பெரிய குடும்பம் ஆயினும் அத்தனை துறைகளும் குடுமபத்திற்கும் உண்டு. அத்தனை துறைகளையும் செவ்வையாய்ச் செய்து முடிக்கவேண்டிய பொறுப்பு முழுமையும் அரசியார்க்கே வாய்த்தது. செலவுக்கு வேண்டும் பொருளைத் தந்துவிடுவார் வ.சு. அதனைக் கொண்டு ஆகும் கடமைகளை யெல்லாம் அருமையாகச் செய்தலில் தேர்ந்தார் அரசியார். இத்திறன் அவர்க்கு வாய்த்தற்கும் அது செவ்விதாக நிகழ்ந்ததற்கும் மூலமாக இருந்தவை அம்மையார்க்கு அவர்தம் பெற்றோர் தந்திருந்த பயிற்சியும், உடன் பிறந்தவர்கள் காலத்தில் தவறாமல் கனிவோடு செய்து வந்த உதவிகளுமேயாம். நாட்டில் இவ்வாறு எத்தனை குடும்பங்கள் புரிந்து கொண்டு கடனாற்றுகின்றன!

“மருவிய காதல் மனையாளும் தானும்
இருவரும் பூண்டுய்ப்பின் அல்லால் - ஒருவரால்
இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று”

என்பது அறநெறிச்சாரம். இச் சாரம் சார்ந்தது வ.சு. வாழ்வு!

# 13. வீசு தென்றல்

*(குழந்தைகளை வருங்காலப் பெரியவர்கள் ஆக்க வேண்டும் என்றால், பெரியவர்கள் இப்போது குழந்தையோடு குழந்தையாகி விடவேண்டும்.)*

*கோடை வெயிலுக்குக் குளிர்தரு நிழல்கிடைப்பது இன்பமே! அதனினும், அதனை அடுத்தே மாலை மதியமும் வீசுதென்றலும் வரின் பேரின்பமேயன்றோ! அதனாலன்றோ, "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த குளிர்தருவே தருநிழலே" எனத் தொடங்கிய வள்ளலார், "மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே மென்காற்றில் விளை சுகமே சுகத்திலுறும் பயனே" என்று விரித்தார்!*

*ஒருவர் இல்லறம் மேற்கொள்ளுதல், 'கோடையிலே குளிர்தரு' கிடைத்தல் போன்றது என்றால், நன்மக்களைப் பெற்று நலமோம்பி மகிழ்தல் வீசு தென்றலால் இன்புறுதல் போன்றதாம்!*

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்"

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

*இப் பாக்களின் சொல்லிலும் பொருளிலும் இரண்டும் கலந்த ஒருமையிலும் ஒன்றி ஒன்றித் திளைக்கும் மனம் எந்நிலை எய்தும்? அம்மனத்தைத் தொல்லை யுறுத்துங்கொல், என எழுதினார் தமிழ்த் தென்றல் திரு.வி.க. (திருக்குறள் விரிவுரை: அணிந்துரை) தொல்லையிலா மனம் எவ்வகையால் அமைகின்றது? குறிப்பாக உணர்த்துகிறார்: குழந்தைகளால், குழந்தையரோடு, குழந்தையராக அளவளாவுதலால், குழந்தையரைப்பற்றிப் படித்தலால், குழந்தையரொடு ஆடலால்,*

பாடலால் என்பதை! பிறவியின் நோக்கம் நிறைவேறுதலில், பிள்ளைப்பேறு பெரும்பங்கு கொள்கிறது என்பது உலகறிந்த உண்மையே!

திரு. வ.சு. மங்கையர்க்கரசியார் அன்பொத்த இல்வாழ்வின் அரும்பயனாக மக்கள் இருவர் தோன்றினர். அவர்கள் வடிவழகியார் வயிரமணியார் ஆவர்.

வடிவழகியார் 1939 இந்தி எதிர்ப்பின்போது தோன்றிய எழிற்செல்வியார். தவத்திரு அடிகளாரும் தமிழகப் புலவர் பெரு மக்களும் இந்தி எதிர்ப்பில் முனைந்திருந்த காலம் அது. எப்பொழுதும் புலவர் தோழராகவும், தமிழ்மொழிக் காப்பாளராகவும் திகழ்ந்தவர் திரு.வ.சு. ஆதலால் அவர்கள் இல்லம் புலவர் அவையமாகவும், இந்தியெதிர்ப்புப் பாசறையாகவும் திகழ்ந்தது. அப் பொழுதில் அழகேஒரு வடிவாகி எழிலுறத் தவழ்ந்தும், மழலை மொழிந்து புலவர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டார் வடிவழகியார். ஆதலால் ‘தமிழரசியார்’ என்று அவர் அழைக்கப்பெற்றார். பிறவி முதலே புகழ்பூத்த பூங்கொடியாக விளங்கினார். தமிழிசை தனிவிருப்புடன் கற்றுத் தேர்ந்தார். கல்லூரிப் படிப்பும் கனிந்து வளர்ந்தார்.

இளைய செல்வி வயிரமணியார் தாத்தாவின் பெயரைத் தாங்கிய நன்மணியார். “பொன்னும் துகிரும்முத்தும மன்னிய, மாமலை பயந்த காமரு மணியும் மாலையாய் அமைந்தது போன்ற பண்புச் செல்வயிார். கற்பன கற்றுத் கவினுற வளர்ந்தார். இரட்டைப் பிணையலோ, இணைப்புறாக்களோ என்னுமாறு அக்கையும், தங்கையும் இனிது வளர்ந்தனர்.

தமிழரசியாரும், வயிரமணியாரும் பெற்றோருக்கும், உற்றோருக்கும் எத்துணை இன்பம் நல்கி அறிவு திருவுடன் வளர்ந்தவனர் என்பதைஅவர்கள் அன்புத் தந்தையார் திரு.வ.சு. எளிமையும் இனிமையும் சீர்மையும் தவழ எழுதிய குழந்தைப் பேச்சு, பிழையின்றிப் பேசுக, பழமொழிக் கதைகள், விளையாட்டுப் பந்தயம், எங்களூர்ச் சந்தை முதலிய நூல்களில் வரும் உரையாடல்ரகளாலும் செய்திகளாலும் நன்கு அறியலாம்.

1943 இல் வெளிவந்த நூல் ‘விளையாட்டுப் பந்தயம்’. அதில் நல்ல குடும்பம் சிறந்த பள்ளிக்கூடம் ஆவதைக் காண்கிறோம். “தமிழரசியும், வயிரமணியும் பெண்பள்ளிக்

கூடத்தில் படித்து வந்தனர். அவர்கள் ஆசிரியர் பெயர் நல்லம்மையார். அவர் மிகவும் நல்லவர். பிள்ளைகள் அவரிடத்தில் அன்பால் இருந்தனர்'' என நூல் தொடங்குகிறது.

“இப்போது ஆறாண்டுப் பிள்ளைகளுக்கெல்லாம் ஓட்டப் பந்தயம்'' என்று நல்லம்மையார் குறிப்பிட்டார்.

“எனக்கு ஆறாண்டு அம்மா? நான் ஓடுவதைப் பாருங்கள் அம்மா'' என்று தமிழரசி வேண்டினாள்.

“வயிரமணி! நீ ஐந்தாண்டு! நீ இந்தப் பரிசைப் பெற வேண்டும்; பார்க்கலாம்!'' என்று அவள் அன்னையார் ஊக்கினார். வயிரமணிக்கே அந்தப் பந்தயத்தில் வெற்றி! அவள் பரிசு பெற்றாள்.

“தமிழரசிக்கு மட்டும் இரண்டு பரிசு'' என்று சொல்லி நல்லம்மையார் அவளைப் பாராட்டினார்.

“தமிழரசியும், வயிரமணியும் கைகோத்துக்கொண்டு அன்னையுடன் பந்தயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே வீடு திரும்பினர்.''

ஒரு தந்தை தம் மக்கள் பண்பாட்டிலும், கல்வியிலும், பரிசு பாராட்டுகளிலும், எப்படிச் சிறந்து விளங்க வேண்டும் என்று எவ்வளவு ஆர்வம் கொள்கிறார் என்பதை அருமையாக விளக்கிக் காட்டுகிறது விளையாட்டுப் பந்தயம்!

இதிலே வரும் மற்றைப் பெயர்கள், நல்லம்மை, பொன்னம்மை, முத்தம்மை, இன்பவல்லி, நல்லதங்கை, பொன்முடி, தங்கமணி, தமிழ்க் கொடி, மயிலம்மை என்பன. வாயினிக்கச் சொல்லும் இப் பெயர்கள் வழக்கில் வரவேண்டும் என்னும் ஆர்வம் விளையாட்டுக் கதையிலும் மின்னலிடுகின்றது!

‘பிழையின்றிப் பேசுக’ என்னும் நூல் தமிழரசி கூறுவதாக அமைந்தது. “ஒருநாள் காலையில் என் அருமைத் தந்தையார் என்னை அழைத்து அம்மா! தமிழரசி! உன் தங்கை வயிரமணி படுக்கையில் இருந்து எழுந்துவிட்டாளா?'' என்று கேட்டார்கள்.

“அப்பா! படுக்கையில் முழிச்சிக்கொண்டு படுத்திருக்கின்றாள்'' என்றேன். “அம்மா! முழிச்சிக்கொண்டு என்பது பிழையான சொல். விழித்துக்கொண்டு என்பதே திருத்தமான சொல். கண்விழி என்று கேட்கவில்லையா? சொற்களைத் திருத்தமாகச் சொன்னால் மட்டும் அவற்றைப்

பிழையின்றித் திருத்தமாக எழுதலாம் என்றார்கள்'' இவ்வாறு 'பிழையின்றிப் பேசுக' என்னும் நூல் தொடங்குகிறது.

"இங்கே உனக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். பன்னிரண்டு ஆண்டுகளுக்குமுன் (1932) சென்னையில் திரு.பா. மாணிக்கநாயக்கர்என்னும் பேரறிஞர் ஒருவர் இருந்தார். அவர் தமிழ் ஒலி ஆராய்ச்சியில் மிக வல்லவர். பிறமொழி கலவா தமிழைத் திருத்தமாகப் பேசுவார்; எழுதுவார்; அவர் பொறித்துணை கண்காணிப்பாளராக (சூப்பரின்டெண்டிங் எஞ்சினியர்) விளங்கினார். இப்போதுஅமைந்திருக்கும் மேட்டூர் அணைக்கட்டுக்கு இவர் பார்த்துக் குறித்துக கொடுத்த அறிஞர் இவரே. இவர் மனைவி ஒருநாள் இவருக்கு எழுதிய கடிதத்தில் பிண்ணாக்கு என்ற சொல்லைப் 'புண்ணாக்கு' என்று பிழைபட எழுதியிருந்தாராம். அதனைப் பார்த்து நாயக்கர் தம்மனைவியார்க்கு அனுப்பிய விடையில் 'கடிதத்தில் கண்ட புண்ணாக்கு என் மனத்தை பெரிதும் புண்ணாக்கிவிட்டது' என்று எழுதினாராம்; என்று அப்பா சொன்னார்கள். அதைக் கேட்டு நாங்கள் சிரித்த சிரிப்பில் எங்கள் வயிறும் புண்ணாய்விட்டது.''

இளந்தைப் பருவத்திலேயே இவ்வாறு குழந்தைகள் பிழையின்றிப் பேசுதற்குப் பொறுப்பு எடுத்துக்கொண்டால் அவர் உரையாடலும் எழுத்தும் எவ்வளவு சிறப்பாக அமையும்!

குழந்தைப் பேச்சு, எங்களூர்ச்சந்தை ஆகிய நூல்கள் தமிழரசி கூறுவதாகவே அமைந்தவை. அக்கையும், தங்கையும் எப்படி இருக்வேண்டும் என்று எண்ணி எண்ணித் தேக்கெ நெஞ்சத்தின் வெளிப்பாடே இவ் வுரையாடல் நூல்களும், நூல்களும் என்பது வெளிப்படை.

குழந்தைகள் எப்படியெல்லாம் வளரவேண்டும் என்ற ஆர்வத்தூண்டலை ஒவ்வொரு சொல்லிலும் காணுமாறு அமைந்துள்ள சிறு நூல்கள் இவை. 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்பதை எளிமையாக விளக்கிக் காட்டுபவை!

இந் நூலில் காணும் கனவுகள் நனவுகளாய் ஒவ்வொரு குடும்பத்திலும் நிகழுமாயின் வீழ்ச்சியுறும் உலகம், எழு கொள்ளும் என்பதற்கு ஐயமில்லை!

பெற்றோர்கள் குழந்தைகளுடன் அளவளாவுதல் பெருங்கலை; பயன்கலை! இருபாலும் நலம் பெருக்கும் குழந்தைகளால் பெற்றோர் பெறும் இன்பம், தீரா நோய்களை

ஆறாத் துயர்களையும் அறவே நீக்கும் மருந்து; குழந்தைகளுக்கோ, "எம்மைப் பெற்ற பெருமையரே பெருமையர்" என்னும் பெருமிதவழியே எழும்பும் பூரிப்பு; இவை குடும்பத்தை இன்ப உலகாக்கும் இணையிலாச் செல்வங்கள். இச் செல்வங்களைத் தாம் அடைந்து இன்புறுவதுடன், உலகும் அடைந்து இன்புற வேண்டும் என அவவாவியவர் திரு.வ.சு. இதற்கு இவராக்கிய குழந்தை நூல்கள் சான்று.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்
காமுறுவர் கற்றறிந் தார்"

## 14. இரு பேரிடிகள்

(குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ (டு) உயிரிடை நட்பு)

– **திருக்குறள்**

*கழக அமைச்சர் திருவரங்கரும் அவர்தம் அருமைக்கிழத்தியார் நீலாம்பிகையாரும் ஈடும் எடுப்புமில்லா இல்லறம் நடாத்தி மக்கள் எண்மரைப் பெற்று இனிது வாழ்ந்தனர். இந்நிலையில் ஒருநாள் இளவல் வ.சு. அவர்களுக்குப் பின்விளைவை அறிவிக்கும் அடையாளம்போல உண்ணவும், உறங்கவும், அமைந்து இருக்கவும் இயலாத ஒரு பரபரப்பான குழப்பநிலை உண்டாயிற்று. அதனால் அன்றிரவே, சென்னையிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலையில் பாளையங்கோட்டை போய்ச் சேர்ந்தார்.*

*தமிழ்த் திருவாட்டி நீலாம்பிகையார்க்கு உடல்நலம் குன்றியிருந்தது. அவர்க்கு மருத்துவம் செய்வதற்காகத் திருவரங்கர், டோனாவூர்க்கு அழைத்துச் சென்றிருந்தார். சென்றவர் அன்று மாலையிலே திரும்பினார். திரும்பி வரும்போதே அரங்கர் உடல்நிலை இரங்கத்தக்கதாக இருந்தது. நெஞ்சு வலி கண்டு நெக்குருகிப் போனார். உயர்ந்த மருத்துவர்களை அழைத்து உடனே மருத்துவம் செய்வித்தும் உடல்நிலை சரிப்படவில்லை. அந்தோ! தமிழ்த்தாயின் தலைமகனாராக விளங்கி, அவளுக்குப் பொன்னும் மணியும் பூட்டிய புகழ்மகனார் திருவரங்கர் ஆருயிர் 28-4-1944 இரவு ஒன்பது மணிக்குப் பிரிந்து அம்மை அம்பலவாணர் பொன்னார் திருவடிகளில் ஒன்றியது.*

*அரங்கர் ஆருயிர் எவ்வாறு பிரிந்தது? ஆருயிர்த்தம்பியார் மார்பில் சாய்ந்த நிலையிலேயே அரங்கர் ஆருயிர் பிரிந்தது! இருவர் உயிரன்பும் ஒருவரோடு ஒருவர் ஒன்றிக்கிடந்த ஒருநிலையை உலகுக்கு அறிவிக்கும் திருக்குறிப்புப் போலும் இது!*

*திருவரங்கர் கழகத்தந்தை; முயற்சி ஏறு; கடமைக்காதலர்; கனிந்துதவும் கருத்தாளர்; சிவநெறி மறவாச் சிந்தையர்; பண்பாட்டின் கொள்கலம்; அவர்தம் இழப்பு அருமைக் கிழத்தியாரை, ஆருயிர்த் தாயாரை, அன்புத் தம்பியாரை, இனிய செல்வங்களை உருகி உருகி ஓயாது அழப்படுத்தியது! தமிழறிந்த நெஞ்சங்களைக் கண்ணீர் விட்டுக் கலங்க வைத்தது! திருவரங்கர் செல்வரல்லர்; ஆனால் செல்வரும் செய்தற்கு அரிய செயல்களைச் செய்து மெய்ச் செல்வராக விளங்கினார். அவர் பெருங்கல்வியாளர் அல்லர்; ஆனால் கற்றோர் பலரும் நயக்குமாறு கல்வித்துறையில் கடமை புரிந்தார். அவரினும் முயற்சியாளர் பலர் நாட்டில் உண்டு. ஆனால் நாட்டின் நன்மைக்கு நிலைத்த பணி அவரைப்போல் செய்தால் அரியர்.*

*"ஒரு சிலர் நூல் எழுதுவர்; ஒரு சிலர் நூல் பதிப்பர்; ஒரு சிலர் உரை எழுதுவர்; ஒரு சிலர் இத்தகைய அறிஞர்க்கு உதவியாக இருப்பர்; ஒரு சிலர் நூல் வெளியிடுவர்; ஒரு சிலர் விற்றுப்பரப்புவர்; ஒரு சிலர் மாநாடு கூட்டுவர்; ஒரு சிலர் அமைப்புகள் நடத்துவர்; ஒருசிலர் கற்றோர்க்கு உதவுவர். ஆனால் அனைத்தையும் ஒருங்கு செய்வித்துக்கொண்டு அனைத்திற்கும் அச்சாணியாக விளங்கினார் திருவரங்கர்"*

*"பேராசிரியர் பெருந்தகைமையும், பெருநாவலர் சிறப்பும் முதுபெரும்புலமையும் பூண்டுள்ள எங்கள் மறைமலையடி களாரின் மருகராயிற்றே".*

*"எங்கள் தமிழ்ப்பெருமாட்டி புலவர் போற்றும் தனித்தமிழ் செல்வி நீலாம்பிகையின் கணவராயிற்றே!"*

*"வீறுற்ற தமிழரை எல்லாம் ஒருங்குதிரட்டி ஒப்புயர்வற்ற கட்டுரை, சொற்பொழிவு, நூல்வெளியீடு இவற்றால் தமிழகம் ஒரு நாளும் திருப்பணி பூண்டொழுகும் பெருந்தமிழ்த் தளபதி திரு. சுப்பையாபிள்ளை தமையனார் ஆயிற்றே" எனப் பலரும் இரங்கி ஆற்றாமல் ஆறுதல் உரைக்கத் திருவரங்கர் வாழ்வு அமைந்தது. ஆனால், அருந்தமிழ்ச் செல்வி திருவரங்க நீலாம்பிகையாரோ உருகி உருகி ஓடாய்த் தேய்ந்தார். நொந்துபோய்க் கிடந்த அந்த உடலுக்கு இந்த இடியைத் தாங்கிக்கொள்ளக் கூடவில்லை; கண்ணீரும் கம்பலையுமாய் நாள்களை எண்ணிக் கழித்தார்.*

*"கற்றுத்துறை போய கற்பரசியார் ஆகிய தங்களுக்குக் குழந்தைகள் சின்னஞ்சிறுவராக இருக்கும் இந்நிலையில்*

*கணவனார் பிரிவு நேர்ந்தது; ஆற்றொணாத் துயர் விளைப்பதொன்றே. நிலையாமையின் இயல்பு இருந்தவாறு இதுவெனக்கொண்டு ஆறுதல் அடையவேண்டும். உள்ள நிலையைத் துயரத்திற்கு உள்ளாக் காமல் மக்களைப் பேணுங்கள்; தமிழ் நூல்களை ஆராய்ந்து புதிய நூல்களை எழுதுங்கள்; இச் செயலே ஆறுதல் எய்துதற்குரிய நெறியாகும்."*

*என்பனபோல உரைத்த ஆறுதல் மொழிகள் எல்லாம் அவரளவில் பயன்படாது ஒழிந்தன.*

*உயிரன்பு கூர்ந்தஅவர், தம் உண்மைக் காதலைக் கைப்பிடிக்கத் தடை நேர்ந்த காலையில் ஒன்பது ஆண்டுகள் காதற்றவம் புரிந்த காரிகையார்; கருதியவாறே கணவனைக் கைப்பிடித்து "நீயாகியர்என் கணவனை, யானாகியர் நின் நெஞ்சு நேர்பவேள" என ஈருடல் ஒருயிராக ஒன்றி வாழ்ந்தவர். ஆதலால் அவர்தம் உள்ளம் பிரிவைத் தாங்கிக்கொள்ள ஆற்றல் இன்றி ஒழிந்தது. அதற்கு ஏற்ப உடல்நியும் தாங்கமாட்டாததாய்த் தளர்ந்தது. உயிர்போன உடலம்போல அல்லாடிக்கொண்டே வதிந்தார்.*

*10-10-45 இல் அம்மையார் காய்ச்சலால் படுத்தார். ஒரு கிழமையாகியும் அது தணியவில்லை. வெம்மை 104 வரைக்கும் சென்றது. 102 வரைக்குக் குறைந்தபாடு இல்லை. அவர்நோயிற் படுதத்தற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர்த்தான் பாளையில்இருந்து சென்னைக்குச் சென்றிருந்தார் திரு.வ.சு. அவர்தம் அன்பு மனைவி மங்கையர்க்கரசியார் தம் அக்கைக்குத் துணையாக அரங்கனார் பிரிவுக்குப் பின் பாளையிலேயே தங்கியிருந்தார். செய்தியறிந்து உடனே பாளைக்குத் திரும்பினார் வ.சு. அறிவும், உலகியல் உணர்வும் அகவையும் நிறைந்த டாக்டர் திரு. சோமசுந்தரம்பிள்ளை உன்னிப்பாக ஆராய்ந்து மருத்துவம் புரிந்தார். எனினும் நோய் தீருமாறு இல்லை.*

*3-11-45 இல் காய்ச்சலுடன் இருமலும் கலந்துகொண்டது. இருமல் சளியுடன் இரத்தமும் கொட்டியது. பின்னே கை கால்களை அசைத்தல், உணர்வு இழந்து பேசுதல் ஆகியவையும் தொடர்நதன. 4-11-45 அன்று அருமை மைத்துனர் வ.சு. அவர்களை அழைத்தார். "இனி யான் பிழைக்கமாட்டேன்; என் மக்களை அன்புடன் பாதுகாத்தல் வேண்டும்; எனக்கு உயிர்விட விருப்பமில்லை; பிள்ளைகளுக்காக வாழவே விரும்புகிறேன்; ஆனால் சிவபிரான் என்னை அழைக்கிறான்" என்றார்.*

*“புண்ணியனே உன்னடிக்கே போதுகின்றேன்.” என்று திருத்தாண்டகம் இசைத்தார். 5-11-45 திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு மேல் இறப்புத் துன்பத்திற்கு ஆட்பட்டார். அவர் வாய் அம்மையே அப்பா என்றும் நமசிவாய என்றும் கூறிக்கொண்டிருந்தது. அம்பலக்கூத்தன் படத்தை மார்பிலே வைத்துக்கொண்டு கைகூப்பி வணங்கினார்; திருநீறணி வேண்டித் திருநீறும் அணிந்துகொண்டார். பகல் 1-16 மணிக்கு அவர் ஆருயிர் அம்பலவன் அடிக்கண் அமைந்தது!*

*இடிமேல் இடி இடித்தால் எவரால்தான் ஆற்ற முடியும்!*

“பட்ட காலிலே படுமெனும் பழமொழி
பட்ட அரங்கனார் பத்தினி பிள்ளைமைப்
பட்ட எண்மரை விட்டிறந் துண்மை கைப்
பட்ட போதியான் பட்டதை என் சொல்வேன்”

“மக்களொரு பாற்புலம்ப மாமியொரு பாலலற
ஒக்கலெலாம் கூடி ஒலிபெருக்க - மிக்கதமிழ்
அன்னை இரங்க அலுவலகத் தார்புலம்ப
என்னைநீ லாபிரிந்தாய் இங்கு”

*எனத் தமிழ் நெஞ்சுடையார் ஊற்றுக்கண் திறந்து ஆறாய்ப் பெருக்கிக் கண்ணீர் ஒழுக நின்றனர்.*

*பொருவரும் அண்ணலார்அண்ணியார் ஆகிய இருவரும் இல்லாக் குடும்பத்திற்குத் தாயும் தந்தையுமாம் கடமையை மேற்கொண்டார் வ.சு. மங்கையர்க்கரசியார் நிலையாகப் பாளையிலேயே தங்கி இளைய மக்களையும் முதிய மாமியாரையும் பேணும் பணி பூண்டார்; இனியார் அவரை அன்றி, ‘இனி யார்’ அக் குடும்பத்தைத் தாங்குதற்கு உரியார்?*

*வீடு தகுதி வாய்ந்த தலைமகனாரை இழந்தது! கழகம் தன்னைத் தோற்றுவித்து வளர்த்து வளமாக்கிய ஆட்சியாளரை - அமைச்சரை இழந்தது! இவ் விருவகைப் பொறுக்கலாற்றாச் சுமைகளும் ஒருங்கே ஒரேவேளையில் கழக முகவர்மேல் வீழ்ந்தது; கழக முகவர் கழக அமைச்சர்ஆனார். ஆனால், குடும்பம் பாளையிலேயே இருந்தது. ஏன்? முதிய அன்னையாரைப் பேணுதல் முறையானகடமையாயிற்றே!*

*“பாளையங்கோட்டை என்னும் ஊரில் எங்கள் ஆய்ச்சி இருக்கின்றாள். நாங்கள் அங்கே பேயிருந்தோம். அவள் எங்களுக்குக் காலையில் முகத்தைக் கழுவித் திருநீறு பூசுவாள்.*

இட்டலி அவித்துக் கொடுப்பாள்; தோசை சுட்டுக் கொடுப்பாள்! தயிர் கடைவாள்; தயிர்கடைந்து கொண்டிருக்கும் போது நாங்கள் பக்கத்தில் போவோம். எங்களுக்குக் கையில் வெண்ணெய் தருவாள். அதனை நாங்கள் தின்போம்'' என்று தமிழரசி கூறுவதாகக் 'குழந்தைப் பேச்சில்' எழுதுவதுஇவர்தம் உள்ளார்ந்தஉண்மை வெளிப்பாடேயாம். இத்தகையவர் இளங்குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்து தாயின் அரவணைப்பிலே வளர்ந்தவர். அந்த அன்னையைப் பேணுதலை உயிர்க்கடனாகக் கொண்டார். அதற்காகவே தம் அருமை மனைவி மக்களைப் பாளையிலேயே தங்க வைத்திருந்தார். அதனால் சென்னைக்கும் பாளைக்குமாக அலைந்து அல்லலுற்றார். இப்படி ஓராண்டு ஈராண்டுகளா? எட்டாண்டுகள்; ஆயினும் அப் பணி செய்தலில் ஓர் அமைதி கண்டு மகிழ்ந்தார்.

''தமிழுக்கும் தொண்டு செய்தோர்செத்ததில்லை''

– **பாவேந்தர்.**

## 15. அடுத்தடுத்தும் அடைமழை

("இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடுமபத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு")

**- திருக்குறள் 1029**

*திரு.வ.சு. அவர்களும், திருவாட்டி மங்கையர்க்கரசியாரும் தம் இனிய மக்கள் தமிழரசி, வயிரமணி ஆகியவர்களுடன், அருமை அண்ணல் அரங்கனார் மக்களுக்கும் தந்தையும் தாயுமாக விளங்கினர். தம் இருகுழந்தைகளுடன் அவ் வெண்மருமாகப்பதின்மரையும்அரவணைத்துப் போற்றி வந்தனர். இவ் வன்புச்சூழல் ஓரளவுக்கு அன்னையார் சுந்தரத்தம்மையார்க்கு - ஆறுதல்தந்தது. தம் பேரப் பிள்ளைகளைக் கொண்டணைத்துக் குளிர்ந்தார். தம் மைந்தனார் செயலையும், மருமகளார்பான்மையையும்எண்ணி இறைவன் திருவருள் இருந்தவாறு எனப் போற்றி வழிபட்டார். இவ்வகையில் ஆண்டுகள் சில நகர்ந்தன.*

*நீலாம்பிகையார் மறைந்தபோது, அவர்தம் மூத்த மகளார்க்கு அகவை பதினைந்து.அவர்க்கு அடுத்தவருக்கு அகவை பதின் மூன்று. அவர்கள் இருவருக்கும் திருமணம் கூட வேண்டிய பொழுதாக இப்பொழுது இருந்தது. அதனை நிறைவேற்றுதற்கு வ. சு. அவர்களும், அவர்தம் அன்பு மனைவியாரும் தலைப்பட்டனர்.*

*நெல்லைத்தலைமைக் கழகத்தில் புலியூர்க்குறிச்சி திரு.க. சொக்கலிங்கம் தலைமை எழுத்தராகப் பணிபுரிந்து வந்தார். அவர்அரங்கனாரால் பணி அமர்த்தம் செய்யப்பெற்றுப் பணியாற்றிக் கொண்டுவந்தார். அவருக்கு அரங்கரின் மூத்த செல்வியார் மயிலம்மையை மணமுடித்து வைத்தனர். இவர்கள் திருமணம்1947 இல் நிகழ்ந்தது.*

*அடுத்த மகளார் முத்தம்மாள் என்பர். இவரை நெல்லை நகராட்சியில் எழுத்தராகப் பணிபுரிந்து வந்த திரு க. பா. முத்தையா பிள்ளைக்கு 1949 இல் மணம் செய்வித்தனர். இம்*

*மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைத் தம் தாய் தந்தையர் போலவே இவர்கள் முன்னின்று நடத்தினர். பின்னே செய்யும் சீர்களையும் பெரிது உவந்து நடாத்தினர்.*

*“குடும்பப் பொறுப்பு இவ்வாறு நடந்துவந்தபோது கழக பொறுப்பும் விரிவடைந்து கொண்டு வந்தது. பல்வேறு மாநாடுகளும், விழாக்களும் நிகழ்த்தப்பெற்றன. ‘அப்பர் அச்சகம்’ என்னும் பெயரில் ஓரச்சகம் 1948 இல்நிறுவப்பெற்றுக் கழகப் பணியைக் கவினுறச் செய்து வந்தது. 1950 இல் சிவஞானமுனிவர் நூல்நிலையம் நெல்லையில் தோற்றுவிக்கப் பெற்றது. இவற்றால் அரங்கனாரை இற்றைக்கு இருநான்கு ஆண்டுகளுக்கு முன் இழக்க நேர்ந்தது நமக்கு ஏற்பட்ட துனபத்தையும், துயரத்தையும்துடைக்கத்தக்க தகுதி வாய்ந்த உடன் பிறப்பாளர் அவர் உடன் பிறப்பாளராகிய நம் சுப்பையாபிள்ளை அவர்களே. தமையானார் ஆணைவழி ஒழுகி அவர் தம் பணிகளை எல்லாம்அணிபெற ஆற்றுவிக்கும் ஆற்றல் படைத்த நம் ஆட்சிப் பொறுப்பாளர் சுப்பையாபிள்ளை அவர்கள் தம் தமையனாரும், இக் கழக நிறைவேற்றற் கூட்டத்தாரும் எடுத்த பணியைத்தொடுத்து முடிக்கும் முயற்சி சிறந்தே விளங்குகின்றார்கள். இதுவரை இக் கழகத்தில் ஏற்பட்டுள்ள * முத்தலைவர்களின் மனநிலை முற்றும் உணர்ந்து திருந்திய முறையைக் கைகொண்டு வெற்றி பெற்றுச் சிறக்கும் நம் ஆட்சிப் பொறுப்பாளர் திறத்தில் நம் முழு நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது” என்று கழகத்தலைவர் திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள் கழகப்பங்காளிகள் கூட்டத்தில் பாராட்டியுரைத்துச் சிறப்பித்தார். (செ.செ. 26.365)*

*தொண்டுகள் இவ்வாறு விரிந்தும் பரந்தும் வரும் வேளையில் எதிர்பாராவகையில் தமிழுலகை ஒரு காரிருள் வளைத்துக் கப்பிக் கொண்டது. அது தவத்திரு மறைமலையடிகளார் உடல்நிலைக் கேடாகும்.*

*அடிகளார் சிவநெறியாலும் செந்தமிழாலும் அரங்கரை ஆட் கொண்டார். அவ்வாட்கொள்ளலே அரங்கரை மருகராகக் கொள்ளும் நலஞ்செய்தது. அரங்கர் “திருசங்கர் கம்பெனி” தொடங்கியதே அடிகளார் நூல் வெளியீடு விற்பனை*

---

* திரு. மா. வே. நெல்லையப்பபிள்ளை பி. ஏ. (1920- 33)
திரு. ப. சிதம்பரம்பிள்ளை பி.ஏ, பி.எல். (1938-48)
திரு. வ. திருவரங்கம்பிள்ளை (அமைச்சர்)

குறித்தேயாம்என்பதையும் அறிவோம். பின்னர்ச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தொடங்கியதும் அடிகளார் தம் ஆய்வுரையின்படியேதான் என்பதும் நாமறிந்ததே. கழகத்தின் தனித்தமிழ்க்கொள்கையும் வேற்றுமொழித் திணிப்பு எதிர்ப்பும், பல்துறையில் தமிழ் வளர்க்கும் முனைப்பும் அடிகளார் தொடர்பால் அமைந்தவையேயாம் என்பதும் நாடறிந்த உண்மை. இத்தகைய அடிகளார் நலங்குன்றினார் என்னும் செய்தி திரு.வ.சு. வை உலுக்கியது. அடிகளார் போலும் ஒரு தமிழ்மலையினை எண்மையில் காணவும்கூடுமோ? அடிகளார் 15-8-1950 இல் நலமின்றிப்படுத்தார். அவர் பொன்னுடல் படுக்கையில் வாடி வதங்கிக் கிடந்தது. அறிவுக்களை இருந்தது அப்பொழுதும்! ஆனால் உடல் பெரிதும் தளர்ந்துவிட்டது. நல்லுணர்வோடு இருக்கும்போதே தமக்குப்பின்னேதம்உரிமைப் பொருள்களைப் பிரிந்தது வழங்க வேண்டுதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய விரும்பினார். தாம் இனிப் பிழைப்பது இயலாது என்பதை அப்பொழுதே அடிகளார் உணர்ந்துகொண்டார். தாம் அரிதின் முயன்று தொகுத்து வாழ்நாள் எல்லாம் வகையோடு கையாண்டு வனப்புறுத்தி வைத்துள்ள நூற்களஞ்சியம் தமக்குப் பின்னரும் தமிழுலகுக்குத் தக்கவண்ணம் பயன்படவேண்டும் என்று விரும்பினார். அதற்குத் தக்க நிலையம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகமே என்றும் அதனை நிறுவிக் காட்டவல்ல செயலாண்மையாளர் தம் மருகரின் இளவலும் கழக ஆட்சியாளரும் ஆகிய திரு. சுப்பையா பிள்ளையே என்பதையும் உள்ளார்ந்த தெளிவால் உணர்ந்தார். அவ்வரிய பணிக்குத் தம்மை ஆட்கொண்ட அம்பலவாணர் நினைவாக இருந்து ஆட்சியாளர் உட்பட எழுவர் செயல் உறுப்பினராகவும் இறுதி முறிவும் எழுதினார். வாரமுறைப்படியாகக் கழகமே தம் நூல்களை வெளியிட்டு அதன் வருவாயையும் எஞ்சிய தம் சொத்தின் வருவாயையும் தம்குடும்பத்தினர்கது இன்ன இன்னவாறு பிரித்துக் கொடுக்கவேண்டும் எனவும் எழுதித் தம் கையொப்பமும் இட்டார். இது நிகழ்ந்தது 9-9-1950 ஆம் நாள்.

அடிகளார் எவ்வாறேனும் பிழைத்தெழவேண்டும் என டாக்டர் திரு. ஆனந்தர் அவர்களும் திரு.வ.சு. அவர்களும் மிகக்கவலையோடு உன்னிப்பாகப் பலவகைகளினும் முயன்றனர். மனித முயற்சியால் எவ்வளவு கூடுமோ அவ்வளவும் செய்து பார்த்தனர். தமிழும் தமிழரும், அடிகளார் பிழைத்து, மேலும் அரும்பெரும் பணிகள் செய்யும் பேற்றைப் பெறவில்லை.

*15-9-1950 வெள்ளிக்கிழமை மாலை 3-30 மணிக்கு அடிகளார் ஆருயிர் அவர் தம் பொன்னுடலைவிட்டு நீங்கி இறையடி சேர்ந்தது.*

*தமிழகம் கலங்கியது. தமிழ்ப்பெருமக்கள் தவித்தனர். செய்தித்தாள்கள் கரைந்தன. 16-9-1950 இல் அன்புத்தமிழர் கண்ணீர்ப் பெருக்குக்கிடையே அடிகளால் இறுதி முறியில் எழுதி வைத்தவாறு பல்லாவரம் இடுகாட்டில்அவர்கள் திருவுடல் எரியூட்டப்பெற்றது. அனைத்து ஏற்பாடுகளும் தம் ஆற்றாமைக்கு இடையேயும் செய்யும் தவபேறு பெற்றார் திரு. வ. சு. அடிகளார் படுத்த நாள்முதலாக நிகழ்ந்தவற்றை நினைத்தும் உரைத்தும் முப்பது ஆண்டுகள் கழிந்த பின்னரும் நெக்கு நெக்குருகி நிற்கும் இவர், அன்று என்ன பாடுபட்டிருப்பார்!*

*அடிகளார் மெய்யுணர்வுப் பேரொளியர்; ஊடுருவிக் கண்டு உண்மை தெளிய வல்லவர். அவர் அன்று தேர்ந்து தெளிந்து கண்ட உண்மை, இன்று மெய்யாய்க் கனிந்து நிற்றல், மாறுபட்டாரும், மறுக்கமாட்டாத உண்மையாகும்! மறைமலையடிகள் கலைமன்றம், மறைமலையடிகள் நூல்நிலையம், மறைமலையடிகள் பாலம், மறைமலையடிகள் நகர் என நினைவுச் சின்னங்கள் எழுப்பச் செய்து அடிகளாரை அழியா வாழ்வினர் ஆக்கிக்கொண்டு வரும் அருந்திறலர் வ.சு. அவர்களே என்பதை நாம் உணரும் போது அடிகளார் கூர்த்த மதியையே போற்றிப்புகழ வேண்டியுளது. ஏன்? அடிகளார் நம்பிக்கை அவ்வளவு வலுவுடையது. அவர்தம் இறுதி முறி அத்தகைய திட்பமுடையது!*

*"நல்லது செய்தற்கு நாலு தடை" என்பது பழமொழி. "நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்று சொல்லவேண்டா நன்னாளும் உலகில் வருமோ? அதிலும் இத்தமிழ் மண்ணில் என்றேனும் வருமோ? அடிகளார் முறி தொடர்பாக எழுந்த வம்புகளும் வழக்குகளும் தொடர்கதையாயின். வந்து சேரும் வரிசை வரிசையான தொல்லைகளுக்கு நொந்து ஆவது என்ன?*

*1951 ஏப்பிரல் திங்கள் இறுதியில் யாழ்ப்பாணத்தில் 'நான் காவது தமிழ் விழா' நிகழ இருந்தது. அவ் விழாவுக்குரிய ஏற்பாட்டை அந்நாள் தமிழ்நாடு அரசின் கல்வியமைச்சர் திரு. தி.சு. அவிநாசிலிங்கம் செட்டியார் செய்திருந்தார். முதல்விழா மதுரையிலும், இரண்டாம் விழா கோவையிலும், மூன்றாம் விழா*

திருவாரூரிலும் நிகழ்ந்தன. பின்னே நிகழவேண்டிய ஐந்தாம் விழாவை நெல்லையிலே நிகழ்த்த வேண்டும் என்பது அவர்தம் எல்லையிலா ஆர்வம். அதனைச் செய்யவல்லார் எவர்? கழக ஆட்சியாளர்மேல், கல்வியமைச்சர் கருத்து உறைந்தது. அழைப்பு விடுத்தார், விழாவுக்கு வருமாறு! ஈழத்திற்குச் சென்று யாழ்ப்பாணத்தில் நிகழும் விழாவிலே கலந்து கொண்டு அவ்விழாவின் இறுதியிலே அடுத்த விழா நெல்லையிலே நிகழும் என்பதை அறிவிக்க வேண்டும் என்று திட்டமாகியது. அவ்வாறே வ. சு. வானூர்தி வழியே ஈழம் சேர்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் நெல்லையைச் சேர்ந்த உறவினர்களும் நண்பர்களும் பலர் இருந்தனர். அவர்களோடும், 30-4-51 காலையில் கடற்கரை ஓரமுள்ள கீரிமலை ஊற்று நீர்த்தேக்கத்தில் குளிக்கச் சென்றார். குளித்து வெளியேறும் போது உடலில் நடுக்கம் உண்டாகியது. உடலைத் துண்டால் துடைத்து வெயிலில் காய்ந்து கொண்டு தங்குமிடம் வந்து சேர்ந்தார். மறுநாள் காலையில், முதல் நாள் விழாத் தொடங்கியது. அவ் விழாவில் அன்பர்களுடன் கலந்து கொண்டார். மாலையிலே சோர்வு மிகுந்தது; உடலில் கொப்புளங்கள் கண்டன. மறுநாள் விழாவுக்குச் செல்ல முடியவில்லை. தோன்றியிருப்பவை அம்மைக் கொப்புளங்கள் என உறுதிப்பட்டன. ஆதலால் யாழ்ப்பாணக் கடற்கரை ஓரத்தே அமைந்துள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் சேர்த்து விட்டனர். சேர்த்தது முதல் மூன்று நாள்கள் வரை உணர்வற்ற நிலையிலே இருந்தார். உணர்வு வந்தபோது தாம் வாழைக்குருத்து இலைகளைப்பரப்பி அதில் படுத்திருப்பதை அறிந்தார்.

மருத்துவமனையில் தலைமை மருந்து கலப்பவர் திரு. விசுவலிங்கம் என்பார். அவர் நன்கு பேணினார். அவர்தம் மைத்துனர் திரு. கணபதி என்பவர் உதவியாளராக இருந்தார். குறிப்பறிந்தும் உடல் நிலையறிந்தும் அவர் செய்த உதவி, பெரிது. பெற்ற அன்னையெனப் பேருள்ளத்தோடு அவர் அப்பொழுது செய்த உதவி மதிப்பிடற்கரியது. தொற்றுநோய் மருத்துவ மனையில் முப்பதுநாள் தங்கியிருக்க நேர்ந்தது. அதன் பின்னரே தலைக்கு நீர்விட்டுத் திரு. வைத்தியலிங்கம் பிள்ளையின் வீட்டில் தங்கினார்.

மருத்துவமனையில் தங்கியிருந்த போதில் நடுவண் கல்லூரி முதல்வர் திரு. சு. நடேசபிள்ளை, பேராசிரியர் திரு. தி.க.

இராசசேகரன், நகராண்மை நலத்துறை மேற்பார்வையாளர் திரு. நாகலிங்கம் ஆகியோரும் வேறு சில நண்பர்களும் வந்து பார்த்து நலம்வினவிச் சென்றனர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற திருஞான சம்பந்தர் குருபூசை விழாவுக்கு வந்திருந்த கோவை சிவக்கவிமணி, சுப்பிரமணிய முதலியார் அவர்களும், ஆரணி உயர்நிலைப்பள்ளிப் புலவர் முத்துசு. மாணிக்கவாசகமுதலியார் அவர்களும் இவர் மருத்துவமனையில் இருப்பதை அறிந்து ஆங்கு வந்து பார்த்தனர். இவர்தம் நிலை கண்டு வருந்தி ஒருவாறு உள்ளத்தைத் தேற்றிக் கொண்டு "நீர் ஒரு நொடியும் சும்மா இருக்கமாட்டிடீர்; தமிழ்த் தொண்டு சமயத்தொண்டு செய்வதிலேயே கருத்தாக இருந்தீர். உமக்குக் கட்டாய ஓய்வு கொடுக்கும் பொருட்டே இக் கொடிய நோயை இறைவன் உமக்குத் தந்துள்ளார். விரைவில் நோய் நீங்கி நீடுவாழ்வீர். உம் தொண்டு சிறக்கும்" என வாழ்த்தினர். யாழ்ப்பாணத்தில் இருந்து வானூர்தி வழியே திருச்சிக்கு 10-6-51 இல் வந்து சேர்ந்தார். திருச்சி தில்லைநகர் திரு. தில்லைவேல் முதலியார் திருச்சியில் இருந்து நெல்லைக்குத் தொடர் வண்டியில் வாய்ப்பாகச் செல்வதற்குரிய வசதிகளை உண்டாக்கித் தந்தார். நெல்லைக்குச் சேர்ந்த பின்னர் மறுநாளே குற்றாலம் சென்று தங்குதல் நலம் பயக்குமெனப் போய்த் தங்கினார்.

குடும்பப் பொறுப்பு, கழகப்பணி ஆகியவற்றால் ஆங்குத் தொடர்ந்து ஓய்வு கொள்ள முடியவில்லை. எனினும் அதன் இயற்கையின்பமும், அருவிநீராட்டும், நல்ல ஓய்வும் விரைவில் உடல்நலத்தை அளித்தன. இரண்டரைத்திங்கள் ஆங்குத் தங்கி நலம் பெற்றபின் பாளைக்கு வந்தார். குடும்பம் பாளையிலேதான் இருந்தது. மேலும் அங்கேயே இருக்க வேண்டிய கட்டாயமும் இருந்தது. ஆதலாதல் பழையபடியே நெல்லைக்கும், சென்னைக்குமாக அலைய நேரிட்டது. பத்துப்பாட்டு மாநாட்டுப் பணியும் சித்தாந்த மாநாட்டுப்பணியும் நடைபெற்றன. ஓரளவும் உடல்நிலை வலுப்பெற்று வேலை செய்வதற்கு ஒத்த நிலைக்கு வந்தது.

அகவை முதிர்ந்த அன்னை சுந்தரத்தம்மையாரின் உடல் வலு குறைந்துகொண்டே வந்தது. அவர்தம் உடல்நலக்குறை உள்ளத்தின் ஆழத்தில் பதிந்து கிடந்த ஆறாப் புண்ணால் வலுத்துக்கொண்டே வந்ததுபோலும்! "இளையவர்கள் இருந்து என்போன்ற முதியவர்களுக்குக் கடமை செய்யவேண்டும். அவர்கள் போய்விட நான் இருந்து பார்க்க விதித்திருக்கிறது"

என்று நொந்துகொண்டே இருந்தார். இளமையிலேயே கைம்மைத்துயரும், பின்னே அடுத்தடுத்த இழப்புத்துயரும் பட்ட அந்த இளகிய உள்ளம் முதுமை நெருங்க நெருங்க ஆற்றிக்கொள்ள முடியவில்லை. அந்நிலையில் அவர்தம் ஆருயிர் 2-9-52 இல் அமைதியடைந்தது.

"முன்னையிட்ட தீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ அடிவ யிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே"

என முற்றும் துறந்த பட்டினத்தடிகளையே அரற்ற வைத்த அன்னையின் பிரிவு இவரை எளிதில் வாட்டடதிருக்குமோ?

அன்னையைப் பேணுதற்கெனவே தம் குடும்பத்தைப் பாளையில் தங்க வைத்திருந்த வ.சு. 1953 இல் சென்னைக்கு அழைத்துச் சென்றார். அவர் முன்னே தங்கியிருந்த மனை அரங்கர் நினைவாகத் திருவரங்க நிலையம் ஆயிற்று. 'பெருவரங்கள் அருளரங்கர்' நினைவிலே தோய்ந்து அவர்தம் பெயர் விளங்கவும், தம் பிறவிக் கடன் சிறக்கவும் தக்க வகையில் பணியினைத் தொடர்ந்தார்.

# 16. இணைமலர்ப் பிணையல்

(கண்ணே புகழ்சால் தாமரை அலரிணைப் பிணையல்)

பரிபா. 2-53.

*கழக ஆட்சியாளர் வ. சு. மங்கையர்க்கரசியார்குடிவிளக்க வந்த குலக்கொழுந்துகள் தமிழரசியார், வயிரமணியார் என்பதை முன்னரே கண்டோம். அவர்கள் வளத்தாலும் உளத்தாலும் நிறைந்த பூங்கொம்பெனப் பொலிவுறு பருவத்தராய் விளங்கினர். 'அறிவு, திரு, ஓர்ப்பு, கடைப்பிடி' எனப் புகழ்ந்து பேசப்பெறும் பெண்மைச் சிறப்புகள் கனிந்து சிறந்தனர். பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்து மகிழும் கடமைகளுள் தலையாயது மணம் செய்விக்கும் கடமை அன்றோ! 'பெண்ணைக் கொடுத்தேனோ கண்ணைக் கொடுத்தேனோ' எனக்கூறும் முதுமொழியை அறியார் எவர்?*

*கழக ஆட்சியாளர் மனைவியார் மங்கையர்க்கரசியாரின் உடன் பிறந்தாருள் திரு. இராசகோபால் பிள்ளை ஒருவர் என்பதை அறிவோம். அவர் கற்பன கற்றுச் சிறந்தவர். இராலி உடன் பிறந்தார் நிறுவனத்தில் பணிபெற்று, உயர்நிலைக்கு வந்தவர். அறிவு நலமும், பண்புநலமும் செயல்திறனும், செம்மையும் அறிவும் ஒருங்கே அமைந்து உடன்பணி புரிவோராலும், நிறுவனத்தினராலும் பொதுமக்களாலும் ஒருங்கே பாராட்டப்பெற்றவர். இவர்க்குக் கலியாணசுந்தரம், முத்துக்குமாரசாமி, சங்கரவடிவு, சுப்புலட்சுமி என ஆண்மக்கள் இருவரும் பெண்மகளார் இருவருமாக மக்கள் நால்வர் இருந்தனர்.*

*திரு. கலியாணசுந்தரர் கல்லூரியில் பயின்று பி. எஸ்ஸி பட்டம் பெற்றவர். சீரிய சிந்தனையாளர். ஆங்கில மொழியிலும் கணக்கு வைப்பிலும் தெளிவு அடைந்தவர். அறிவியல் புலமையும் ஆர்வமும் மீக்கூர்ந்தவர். தம் தந்தையாரிடம் நெருங்கிப் பழகி அவர்தம் சிறப்புகளை ஒருங்கே கைவரப்பெற்று அவரை வழிகாட்டியாகக் கொண்டு வளர்ந்தவர். பட்டப்படிப்பு*

*முடிந்த பின்னர்க் கழக ஆட்சியாளர் அவர்கள், கழகப்பணிக்குத் தகுதி வாய்ந்த இவரைப் பயன்படுத்திக் கொள்ளுதல் சிறப்பாக இருக்கும் எனத் தேர்ந்தார். இயல்பாகவே அமைந்த உறவு முறையும், இவர்தம் பண்பு நலம் அறிவுக்கூர்ப்பு, செயல் திறன் ஆகியவற்றால் அமைந்த பற்றுதலும் கழகத்துணை மேலாளர் ஆக்குதற்கு முன்னின்றன திரு. கலியாணசுந்தரர் கழகத் துணைமேலாளராகிச் செய்த கடமைகளும், தம்மிடம் நடந்துகொண்ட பண்பான நடைமுறையும் அன்பும் ஆட்சியாளரைப் பெரிதும் கவர்ந்தன. அக் கவர்ச்சி, தம் மகளார் தமிழரசியின் நல்வாழ்வின்மேல் படிந்தது. மங்கையர்க்கரசி யாரும் மகளார் அரசியாரும் அத்திட்டத்தில் ஆர்வம் உடையவராக இருந்தனர். பழம்நழுவிப் பாலில் விழுந்தது போல இரு வீட்டாரும் இனிதுமகிழ்ந்தனர். தாய்மாமனார் பிள்ளைக்கும் தம் மகளைக் கொடுப்பது இருபாலும் இனிக்கும் செய்திதானே. இவர்கள் திருமணம் சான்றோர் வாழ்த்தச் சைவ நெறிப்படி 11-6-1956 இல் நிகழ்ந்தது.*

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்; மூர்த்தி
அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்;
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்''

*என்பதுபோல் உசாவி அறிந்து ஒவ்வொன்றாகத் தெரிந்துகொள்ளும் நிலையில் இவர்கள் திருமணம் நடந்ததில்லை. கொண்டவர்களும், கொடுப்பவர்களும் பழகிப்பயின்ற பான்மையர்! ஒருகுடும்பமும் ஒரு கலப்புமாகிய உறவினர்! இத்தகைய வாய்ப்பு மேலும் மேலும் நெருக்கத்தை உண்டாக்கவே பெரிதும் உதவும். கலியாணசுந்தரர் - வடிவழகியார் திருமண நிகழ்ச்சியை அறிந்த சான்றோர் வாழ்த்தினார். பாவலர் பாட்டிசைத்தனர். உள்ளார்ந்த அன்பர் திருமணம் எவருக்கே உவகை தாராது?*

''இப்பாரில் முதன்முதலாய் வள்ளுவர்நாள் கண்டோன்;
ஏற்றமுறும் தமிழ்க்கொடியை எழிலுறவே அமைத்தோன்;
தப்பாமல் வரலாற்றுச் சான்றுகள்தாம் மிளிரச்
சங்கம்வளர் காலமுதல் தற்காலம் வரையில்
ஒப்பில்லாத் தமிழ்நூல்கள் பலப்பலவும் ஆக்கி
உலகத்துக் குதவுகின்றோன்; உயர்கலைஞன்எங்கள்
சுப்பையா பிள்ளைதவச் செல்விவடி வழகி
தூய திரு மணமிந்நாள் வாழிமண மக்கள்!

எல்லார்க்கும் நல்லவனாம் இராசகோபால் பிள்ளை
எழின்மைந்தன் கலியாண சுந்தரம்தான் வாழ்க!
வல்லானாம்விஞ்ஞானப் பெருங்கலைஞன் வாழ்க!
வடிவழகி தனைமணந்தான் மாண்புடையான் வாழ்க!

நல்லார்கள் பலர்வாழ்ந்த இல்லறமேற் கொள்ளும்
நம்பியொடு நங்கையிவர் நலமுடனே வாழ்க
பல்லாண்டு பல்லாண்டு இன்றேபோல் இவர்கள்
பாங்குடனே அன்புற்றும் இன்புற்றும் வாழ்க!"

*என்று பாடுபுகழ்ப் பேற்றோடு பைந்தமிழர் இல்லறம் மேற் கொண்டனர். "தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து, முந்தியிருப்பச் செயல்" போல,தக்கோரைத் தேடித் தகுமணம் செய்வித்தலும்தனிப்பெரும் கடமையாயிற்றே! அக் கடமை போலத் தந்தைக்கும் தாய்க்கும் தளிர்ப்பளிக்கும் செயல் பிறிதொன்று இல்லையே! யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்என்னும் பெருநிலை உலகில் மலர உய்க்கும் முதற்பள்ளி இல்றேம என்பதை எவரே அறியார்!*

*திரு. கலியாணசுந்தரனார் உடன்பிறந்த இளவலார் திரு. முத்துக்குமாரசாமி. அவர் எம். ஏ. என்னும் மேல்நிலைப்பட்டம் பெற்றவர். நூலகக்கலைப்பட்டமாகிய பி.லிப் என்னும் தொழில் பட்டமும் பெற்றவர். திருவருள் கூட்டியதுபோல் தவத்திரு மறைமலையடிகளார் எழுதி வைத்த இறுதி முறிப்படி, அடிகளார் தொகுத்து வைத்த நூல்களோடு கழகம் அதுகாறும் தொகுத்து வைத்திருந்த நூல்களையும் கொண்டு இலிங்கிச் செட்டித்தெரு 105 எண் (புதுஎண் 261) வளமனையில் 24-8-1958 இல் தவத்திரு மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்புவிழா நிகழ்ந்தது. அந்நூலகத்திற்குத் தகுதி வாய்ந்த தமிழாய்ந்த ஒரு நூலகர் வேண்டுமன்றே! அதற்குத் திரு. முத்துக்குமாரசாமி தக்காராக விளங்கினார். அவர் நூலகராக நியமிக்கப்பெற்றார். அப் பேறும் அவர்தம் தகைமையும் பணிநேர்த்தியும் உறவு உரிமையும் ஆட்சியாளர் உள்ளத்தில் ஊன்றி நின்றன! தவத்திரு. அடிகளாரொடு ஆவியுலகத்தொடர்பு கொண்டிருந்த நெல்லை. திரு. குற்றாலலிங்கம் பிள்ளை என்பாரும் அடிகளார் வேட்கையும் அஃது என்பதை வலியுறுத்தினார். ஆதலால் இளைய மகளார் வயிர மணியை முத்துக்கு மணம் செய்துதரப் பெற்றவர்களும் பெரியவர்களும் ஒரு நன்முடிவு செய்தனர்.*

*21-6-59 இல் கழக நிறுவனர் திருவரங்கர் திருமகளார் மங்கையர்க்கரசியார்க்கும் பாம்புக்கோயில் திரு.சே. அணைந்த பெருமாப்பிள்ளை அவர்கள் மகனார் கோமதி நாயகத்திற்கும் திருப்பரங்குன்றத்தில் திருமணம் நிகழ்ந்தது. அத் திருமண ஏற்பாடுகளைச் செய்தவர்கள் திரு. வ. சு. அவர்களும் அவர்தம் அருமை மனைவியார் மங்கையர்க்கரசியாருமே என்பது வெளிப்படை.*

*இத் திருமணம் நிகழ்ந்தபின் மூன்றாம் நாள் (24-6-59)இல் அதே இடத்தில்திரு. முத்துக்குமாரசாமி அவர்களுக்கும் வயிரமணியம் மைக்கும் திருமணம் சைவத் தமிழ் முறையில் நிகழ்ந்தது. இத் திருமணங்கள் இரண்டையும் கழகப்புலவர் சித்தாந்த பண்டிதர் ப. இராமநாத பிள்ளையவர்கள் இயற்றினார்.*

*"ஒப்பனை செய்து வனப்புற அமைக்கப்பெற்ற திருமண அறையின்மீது கிழக்கு நோக்கித் திருமணமக்கள் இருவரும் வீற்றிருப்ப அவர்கட்கு நேர்முகமாய் வடகிழக்கு மூலையில் இருந்து முறையே பிள்ளையார், நிறைநெல் நாழி, நிறைகுடம், திருவிளக்கு ஆகிய நாற்பெரும் பொருளும் நன்குற நாட்டப்பெற்று அவற்றிற்குத் திருமுறை வழிபாடு ஆற்றப்பெற்றது. மணவறையின் நாப்பண் விழைதரு தழலோம்பல் நிகழ்ந்தது. திருமுறைப் பாட்டுகள் பண்ணொடும்ஓதப்பெற்றன. திருப்பூட்டியதும் சுற்றமும் நண்பும் சூழ மணமக்கள் திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டு மனையறம் புகுந்தனர்".*

*திரு. வ. சு. வுக்குப் பொழுது எல்லாம்! கடமை! கடமையே அதுவும் புகுந்ததோ விரிந்து செல்லும் பொதுநலப்பெரும் பணி! அப் பணிக்கென்றே தம்மைத்தாமே ஆட்படுத்திக் கொண்ட தவப்பெருந்தொண்டர்! 'பொழுது கிட்டவில்லை' என்பது நாள்வழி நிகழ்ச்சியே அன்றிப் பொழுது போகவில்லையே பொழுதுபோக்கு வேண்டுமே' என்பவை இவர் இளமை முதலே அறியாதவை.*

*இத்தகையர் மனைவியாக இருக்கும் மங்கையர்க்கு அரசியார் பொறுப்பு - குடும்பப் பொறுப்பு - எவ்வளவு பெரிது! அதிலும் அரங்கனார் குடும்பச்சுமையையும் அமைந்து தாங்கும் பொறுப்பும் தலைமேல் கொண்டவர்க்கு எத்தகைய பொறுப்பு இருக்கும்!*

மங்கையர்க்கு அரசியார் உள்ளம் மெல்லிது; இனிது; அன்பின் உருவினது; உருக்கம் என்பதற்குப் பொருளாக அமைந்தது. விரிய விரிய விரந்து, விரும்பி விருந்தோம்புதலும் உதவுதலும் செய்து மகிழும் விழுப்பம் மிக்கது. இத்தகைய தன்மைகள் எல்லாம் பிறவி முதலே வந்தவை; பிறந்த குடும்பத்தின் முதலீடாகவும் புகுந்த குடும்பத்தின் சீராகவும் அமைந்தவை.

துணிக்கடைக்குப் போக வேண்டுமே! நகைக் கடைக்குச் செல்ல வேண்டுமே! ஒரு திருமணத்திற்கு எத்தனை எத்தனை பொருள்களை ஏறி இறங்கி வாங்க வேண்டும்? எத்தனை எத்தனை முன்னேற்பாடுகள் செய்யவேண்டும்? 'காரை வீடு கட்டிப்பார், கலியாணம் செய்துபார்' என்பதெல்லாம் பட்டறிவால்கிளர்ந்த பழமொழியன்றோ! எத்தனை விருந்துகள்! எத்தனை அழைப்புகள்! வாராத வன்பு துன்பு எல்லாமும் கூட, நல்லதும் பொல்லதும் நிகழும்போதுதானே வந்து தீரும்; அப்பொழுது இவற்றுக் கெல்லாம் எவ்வளவு நயமான செயலாற்றல் வேண்டும்! இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்க்கும்போதுதான் மங்கையர்க்கரசியார் குணநலன்களை உணரமுடியும். அவர்தம் உடன்பிறந்தவர்களாக அமைந்து ஓடி ஓடி உள்ளார்ந்த அன்பால் உதவி நின்ற பெரு மக்கள் உயர்வும் புலப்படும்; 'காய் புளித்ததோ வாய் புளித்ததோ', என்று இருக்கும் எத்தனை குடும்பங்களை நாட்டிலே காண்கிறோம்! அவ் வகையில் பேறு பெற்றவர் பெரியவர் வ. சு. அவர்கள்; நாட்டுக்குப் பெரியவர் வீட்டுக்கும் நல்ல பெரியவர், என்று ஆக்கிக் கொண்டிருக்கும் அருமை பெருமைகளுக்கெல்லாம் அமைதிப் பிழம்பாக இருக்கும் அம்மையாரே காரணர் என்று அறிந்தோர் உள்ளம் வாழ்த்தத் தவறாது.

இனி, இருவரும் ஒருவராய்த் திகழ்ந்த அண்ணல் அரங்கராலும் இளவல் வ. சு.வினாலும் தொடங்கி வளமுற வளர்க்கப்பெற்று வருவது கழகம். இக் கழக ஆட்சிப் பொறுப்பையும், அறநிறுவனங்களையும் சீர்மையுற நடத்துதற்குத் தேர்ந்து தெளிந்து எடுக்கப் பெற்ற இருவரும் ஒருவராம் உடன் பிறந்தார்களே; மேலும் இவர்தம் இல்லக்கிழமை பூண்டாரும் இருவரும் ஒருவராம் உடன் பிறந்தார்களே! இத்தகு அருமை ஒரு குடும்பத்திற்கோ ஓர் அமைப்புக்கோ வாய்த்தல் அரிதினும் அரிதாம்! மேலாண்மைப் பொறுப்பிலே மூத்தவர் கலியாணசுந்தரர் இருந்தார். நூலகப்

*பட்டம் பெற்ற இளையவர் முத்துக்குமாரசாமி தவத்திரு அடிகளார் நூல்நிலையப் பொறுப்பாளராக இருந்தார். வழி வழியாகப் பேணி வளர்த்துப் பெருமை சேர்ப்பாரே 'மருகர்' என்ப பெறுவது பழந்தமிழர் கொள்கை. அக் கொள்கைக்குப் புதுப் பொலிவூட்டி வந்தனர்.இருவரும். இந்நிலையில், 1-5-80 முதல் மூத்தவர் கலியாணசுந்தரர் தாமே தனித்து நூல் வணிக நிறுவனம் ஒன்றைத் தோற்றுவித்துக் கழகப் பணியில் இருந்து விலகிக் கொண்டார். ஆகலின், இளையவர் நூலகப் பொறுப்பில் இருந்து விடுபெற்றுப் பொதுமேலாளர் பொறுப்பை ஏற்றுப் பணியாற்றி வருகின்றார்.*

# 17. தூண்டித்துலக்குதல்

*(மரத்தில் இருந்து உதிரும் பழம், மண்ணில் வீழ்வதில் ஒன்றும் புதுமை இல்லை. ஆனால், அத் தூண்டலைக் கொண்டு புவிஈர்ப்பாற்றலைக் கண்டு கொண்ட ஐசக் நியூட்டன் செயலே புதுமை. "சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்" என்பது தமிழ்ப் பழமொழி.)*

துலக்கமிக்கோர் பலர் உலகில் உள்ளனர். அவர்கள் தங்களைச் சூழ்ந்துள்ள மக்களிடையில்துலக்கமாகத் திகழ்வர்; குன்றின்மேல் இட்ட விளக்காகவும் சுடர் விடுவர். ஆனால், அவர்கள் பிறரைத் துலக்கமாக்கத் திறமில்லாராகக்கூட இருப்பர். இது கண்கூடு.

கழக ஆட்சியாளர் வ.சு. துலக்கமிக்கவர்; தாம் துலக்கமாகத் திகழ்வதுடன் பிறரைத் துலக்கமாக்கவும் வல்லவர். அவர் தூண்டித் துலக்குதலில்நீண்ட செயல் வீரர்! காலந்தோறும் அவரால் தூண்டப்பெற்றுத் துலக்கமிக்கோராய்க் கடமை புரிந்தவர்கள் எண்ணற்றோர்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்பதற்கு ஏற்பத் தோன்றிய திறலோரும், மடியென்னும் முடிவிலாப் பகைக்கு இரையாகி வாளா அமைவதுண்டு. வீண் செயலிலும் வேண்டா அரட்டையிலும் பொழுதைப் பாழாக்குவதுண்டு; எடுத்துப் போற்றுவார், எழில் செய்து காண்பார் இல்லாமல் ஏமாற்ற மீக்கூர்ந்து 'எப்படியோ ஒழிகிறது' என்று வெறுப்பால் ஓய்வாரும் உண்டு; நமக்கு அத் திறம் உண்டா? நாம் செய்து தானா நாடு ஏற்கப் போகிறது? எனத் தாழ்வு மனத்தால் கடனாற்றாதமைவாரும் உளர். இத்தகையரைத் தட்டி எழுப்பியும், தூண்டித்துலக்கியும் நாடு மதிக்கும் நற்செயல் வீரர் ஆக்கிய பெருமைக்குரியவர் அரியர். அவ் வருஞ்செயலைச் செய்து செய்து தழும்பேறிப்போய தனிப்பெருந்தகையர் வ.சு. சுடரொளியைத் தன்னிடத்துக் கொண்டு நூல் பல யாத்த நுண்ணளிவுச் செல்வர் பலர் நினைவு கூர்ந்து இவர்தம் தூண்டித் துலக்கலுக்கு மெய்யார்ந்த சான்றுகளாக உள்ளனர்.

தமிழன்னை செய்த நெடுந்தவத்தால் தோன்றிய தலைமகனார் தமிழின் தொன்மை முன்மை முதலாயவற்றை மறுக்கொணா வகையில்நிலைநாட்டி மாந்தன் முதுன்மொழி தமிழே என்பதை நிலைநிறுத்தியவர் மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் ஆவர். அவர் கூறுமாறு, "சென்ற நூற்றாண்டின் இறுதியிலே, சூரிய நாராயண சாத்திரியார் தம் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றித் தமிழர்க்குத் தனித்தமிழ் உணர்ச்சியூட்டி னாரேனும், அது செயலளவில் தொடராது உணர்ச்சி யளவிலேயே நின்றுவிட்டது. ஆனால், தேனும் பாலும் போன்ற தூய தீந்தமிழ்ச் சொற்களால் உரைநடையும் செய்யுளுமாகிய இருவடிவலும் பல்துறை தழுவி ஐம்பதிற்கு மேற்பட்ட அருநூலியற்றி முதலிரு கழக நிலைக்குத் தமிழைப் புதுக்கி அதற்குப் புத்துயிரளித்தவர், மாநிலத்தில் மக்கள் உள்ளவரைமறையாப் புகழ்பெற்ற மறைமலையடிகளே. அவ் வடிகளார்க்குப் பின்ன அவர் விட்டும் தொட்டும் சென்ற அரும்பணியை ஆழ்ந்து அகன்ற நுண்ணிய அறிவால் தமிழைப் பண்டைத் தூயநிலைக்குக் கொண்டு போய் வைத்துப் புதுமையெல்லாம் பிறங்கிச் செறியச் செய்த செந்தமிழ்ச் செம்மல் பாவாணர் அவர்களே; அவர்தம் அரிய ஆராய்ச்சிச் சுவடிகள் அனைத்தும் நம் நல்வினைப் பயத்தால் அடைந்துதுய்த்தற்குத் தூண்டி நின்றோர் யார்? அவர், நம்அயராத் தொண்டர்வ. சு. அவர்களே.

"1938 இல் நான் திருச்சிப்புதூர் ஈபர் மேற்காணியார் (Bishop Heber) உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியனாக இருந்த போது திரு. (G) அரசகோபாலாச்சாரியார் தமிழ்நாட்டு முதலமைச்சராகி இருநூறு உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாகப் புகுத்தினார். உடனே தமிழர் எதிர்ப்பு எழுந்தது. இந்தி புகுத்தப்பட்ட பள்ளிகட்குமுன் மறியல் செய்த தமிழ்த்தொண்டர் சிறையிலிடப்பட்டனர். பெரியாரும் அதற்கு ஆளாயினார். முறைப்பட்ட தமிழ்க்காப்பு, வகுப்பு வேற்றுமைக் கிளர்ச்சியாகத் திரிக்கப்பட்டது. சிறைத் தண்டனையுற்ற தமிழ்த் தொண்டரின் தற்காப்பிற்காக 'ஒப்பியன் மொழிநூல்' முதற் புத்தகம் - முதற்பாகம் என்னும் நூலை எழுதினேன். ஆயின், அதனை வெளியிடம் தமிழ்ச் செல்வரும் தமிழ்க்கட்சித் தலைவரும் முன்வரவில்லை. சிறு தொகையும் உதவவில்லை. அதனால், என் அடங்காத் தமிழ்ப்பற்றும் மடங்காத் தன்மானமும், என் கைப் பொருள் கொண்டு அதனை

வெளியிட்டு ஓராயிரம் ரூபா இழக்கச் செய்தன. அங்ஙனந் தாங்கொணாச் சூடு கண்டதினால்அதன்பின் என் சொந்தச் செலவில் எத்தகைய நூலையும் வெளியிட மிகவும் அஞ்சினேன். துணிந்து வெளியிடப் பொருளும் என்னிடமில்லை.

"அந்நிலையில், இலக்கணம், சொல்லராய்ச்சி, மொழியாராய்ச்சி அரசியல் வரலாறு, விளையாட்டு முதலிய இலக்கியப் பொருள் பற்றியனவும், புலமக்கள் அன்றிப் பொதுமக்கள் வாங்காதனவும், விரைந்து விலையாகாதனவும், ஆரிய வெறியர்க்கு மாறானவும், வெளியீட்டிற்குப் பெருஞ் செலவு செய்ய வேண்டியனவும், சிறியவற்றோடு பெரியனவுமான இயற்றமிழ் இலக்கணம், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், திரவிடத்தாய், சுட்டு விளக்கம், முதற்றாய்மொழி, பழந்தமிழாட்சி, மாணவர் உயர்தரக் கட்டுரை இலக்கணம் (2 பாகம்) என்னும் எண்ணூல்களோடு நான் ஏற்கனவே வெளியிட்ட கட்டுரை வரைவியல் என்னும் நூலையும் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சி மேலாளரான தாமரைத் திரு.வ. சுப்பையாபிள்ளை அவர்கள் வாரமுறையில் (Royalty System) ஒவ்வொன்றாக வெளியிட்டு விற்பு விலையில்ஒப்ந்தத்திற்கு ஏற்ப உரிமைத் தொகையும் ஆண்டிற்கு இருமுறை கணித்து ஒழுங்காக அனுப்பிவந்திருக்கின்றார்கள். இதனால் நான் ஒருபோதும் வெளியிட்டிருக்கமுடியாத பல அரிய நூல்கள் வெளிவந்து என்பெயர் உள்நாடும், வெளிநாடும் பரவியதுடன் என் தமிழ்த்தொண்டும் பன்மடங்கு சிறந்து வந்திருக்கின்றது. அவர்கள் ஒப்பந்தப்படி விடுத்து வந்தஅரையாட்டைத்தொகை என் குறைந்த சம்பளக் காலத்தும் வேலையில்லாக் காலத்தும் பெரிதும் உதவியதென்பதை நான் சொல்ல வேண்டுவதில்லை.

"வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன், மெய்கூறுவல்" என்னும் கொள்கையில் அசையாத பாவாணர் பகர்ந்துள்ள குறிப்பு வ.சு. அவர்கள் துலக்கிய மாண்பை மலையிலக்கென வெளிப்படுத்தும் அன்றோ?

பன்மொழிப் பெரும்புலவர் குறள்மணிவிளக்கக்கோமான் கா. அப்பாத்துரையார் கூறுகின்றார்: அவர்கள் ஆர்வக்கனவில் முயற்சித்துடிப்பில் தன்னம்பிக்கைத் தறுகண்மையில்சிக்கும் பேறு பெற்ற தமிழர் எவரும் ஆர்வத்தால் அரிய செய்வர், முயற்சியின் முகடெய்துவர், தன்னம்பிக்கை பெற்று அவர் ஆர்வத்தைத் தம் செயலாக்கி வெற்றி பெறுவர். இதற்கு என்

வாழ்க்கை சான்று. பிற மொழிகளுக்கே நான் என் வாழ்வைக் கொடுத்திருக்கக்கூடும். அரசியற் பணிகட்கோ அரசியலுக்கோ கூட, என் ஆற்றலும் ஆர்வமும் முழுதும் ஆளாகியிருக்கக்கூடும். முழுதும் தனி வாழ்வே நான் வாழ்நதிருக்கக் கூடும். என்னைத் தடுத்தாட் கொண்டு தமிழுக்கும் தமிழிலக்கிய வாழ்வுக்கும் தமிழர் வாழ்வுக்கும் ஒரு கருவியாக்கிய பெருமையில் வ.தி. அவர்களுக்கு ஒரு முனை முகமும், வ. சு. அவர்களுக்கே மீந்த முழு முகமும் உரித்தாகும் என்பதை நான் என்றும் மறவேன்."

தூண்டித்துலக்கும் தொண்டர்தம் சீர்மைக்கு இன்னும் என்ன சான்று வேண்டும்? துறைதோறும் துறைதோறும் நூல்கள் வடித்துத் தந்த பெருமக்கள் நெஞ்சார நினைந்து வாயாரப் பாராட்டித் தம்மையே சான்றாக்கியுள்ளனர்.

'யாருமில்லை தானே களவன்' (சான்றாளன்) என்னும், நெஞ்சம் பொய்க்கும் வஞ்ச மாந்தர் வாயினின்று வரும் சொற்களைப் புனைந்துரையெனப் போக்கிவிடலாம்: ஆனால் "செய்யா கூறிக் கிளத்தல் எய்யாதாகின்று எம் சிறுசெந் நாவே" என்னும் சீரியர் உரை எவ்வளவு மதிப்பிற்குரியது :

ஓய்வுபெற்ற மாவட்டததுணைத் தலைவர் பெரும் புலவர் திரு.கு. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் முதற்குறள் உவமை, நெடுநல்வாடை, ஆராய்ச்சி முதலிய அரிய நூல்களின் ஆசிரியர்; தமிழ்ப்பண்ணாராய்ச்சி வித்தகர்; அவர் தம் நூல்கள் வெளிவந்து உலாவிய வகையினை குறிப்பிடுகின்றார்:

"அரசியல் பணியாளானகிய என்னைத் தமிழ்ப்பற்று எவ்வாறோ பற்றிக் கொண்டது. நூல்கள் சில எழுதலுற்றேன். நான் புலவனல்லேன், வித்துவானும் அல்லேன், ஆதலின் புலவர்கள் தொடக்க காலத்தில் என் நூல்களைப் புறக்கணித்தனர். என் நூல்களின் கருத்துக்கள் ஆழமுடையவை. ஆதலின் பொது மக்களுக்கு அவை எளிதே விளங்குதல் அரிதாகியது. ஆதலின், என் நூல்களை விரும்பி வாங்குவார் இலர் ஆயினர். இந்நிலையில் நான் எழுதிய நூல்களில் சில அச்சிடப்பெறாமலும் சில அச்சிடப் பெற்றும் நடமாட்டம் இன்றியும் உறங்கின."

"இந்நூல்கள் தக்கவை, அவற்றுள் பொதிந்த கருத்துகள் தமிழ்மக்களிடையே பரவுதல் வேண்டும் எனத் திரு. வ. சுப்பையா பிள்ளை எவ்வாறோ அறிந்தனர். அவற்றை வெளியிட முன் வந்தார். அவர் துணிவைத் தெரிந்து நான் வியப்படைத்நதேன்.

'தமிழ் ஆக்கம் கருதி முதலிழக்கும்' செயலாகுமே என்று கூடக் கருதினேன்."

தமிழாட்சி ஒருகாலத்தில் நடந்தது. தொடக்கநாள் முதல் ஆங்கிலவர் வரும்வரை நடந்த தமிழாட்சி ஆங்கிலம் புகுந்ததால் அகன்றது. இப்பொழுது ஆங்கிலமோ, ஆங்கிலவர் போயும்கூடப் பேய்விடவில்லை. ஆட்சியில் ஆங்கிலம் இருந்துகொண்டது என்றால், கோயிலை வடமொழி முற்றுகையிட்டு வாடையென வண்டமிழை வெருட்டியடித்தது. அந்நிலை இன்றும் மாறிற்றறில்லை. இசையரங்கோ தெலுங்குக்கு இரையாகிவிட்டது: ஒட்டகத்துக்கு ஒருபக்கமா கோணல்? தமிழுக்கு ஒரு பக்கமா கேடு?

உணர்வுடையார் நெஞ்சத்தெல்லாம் தண்டமிழ், பண்டை நிலையை அடைந்தே ஆக வேண்டும் என்றுனும் ஆர்வம் எழுந்தது. ஆனால் செயலுக்கு எவரே கொணர்ந்தார்? செயலுக்குக் கொண்டு வரமுனைந்தவர்களுள், முன்னேறி வெற்றி கண்டவர் திரு.வ.சு. அவர்களே.

'அறங்கூறு அவையம்' சிறந்த பணி செய்த மண்ணிலே, ஒரு பெண்மணியே மன்னன் அவை புக்கு 'வழக்குரையாடி' வெற்றி கொண்ட மண்ணிலே, வழக்குரைக்க அந்த மண்ணின் மக்கள் மொழி வகைகெட்டுப் போயிற்றோ? என வ. சு. எண்ணினார். ஏங்கினார். எழுச்சி கூர்ந்தார். உரையாடலைக் கேட்போம்:

"நீண்ட நாள்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேனே, சட்டத்தைப்பற்றிய தமிழ் நூல்கள் எழுதவேண்டும் என்று? எப்பொதும் எழுதப் போகிறீர்கள்? விரைவிலே எழுதிக்கொடுங்கள்."

'சட்ட நூல்களைத் தமிழில் நான் எழுதினால் யார் வாங்கப் போகிறார்கள்? உங்களுக்கு இழப்பல்லவா ஏற்படும்?"

"சட்ட நூல்களைத் தமிழில் நான் வெளியிட விரும்புவது ஊதியத்திற்காக அன்று. ஊதியம் ஒன்றையே குறியாகக் கொண்டு கழகம் இயங்கவில்லை. புதிய துறைகளிலே தமிழ்நூல்களைக் கொண்டு வர வேண்டும் என்பதுதான் எனது அவா, கழகத்தின் குறிக்கோள்."

"சரி, அப்படியானால் சட்டத்தின் அடிப்படைக் கருத்துக்களைக் கூறும் நூலான 'சட்ட இயல்' (Jurisprudance) என்பதைத் தமிழில் எழுதி அனுப்புகிறேன்."

**திருவாட்டி சௌந்தரம் கைலாசம் அம்மையார் அவர்களிடம்**
**மாண்புமிகு கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள்**
**செடி கொடி விளக்க நூலை வழங்குதல்**

# குறள் கூறும் சட்ட நெறி
# சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்
# வெளியீட்டு விழா 3.12.1967

கழக ஆட்சியாளர் வரவேற்புரை நிகழ்த்துதல்

"இன்னும் ஆறு மாதத்திற்குள் அதை எழுதி அனுப்புங்கள் காலந்தாழ்த்தாமல் எழுதி முடித்துவிட வேண்டுகிறேன்."

"இது நடந்து ஒரு மாதத்திற்குள் கழக மேலாட்சியாளர் அவர்களிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. மேலே கூறப்பட்ட உரையாடலை நினைவுபடுத்தி, சட்டநூலை எழுதும்பணி எந்நிலையில்உள்ளது என்று அக் கடிதத்தில் அவர்கள் கேட்டிருந்தார்கள். இந்நூல் எழுதும் வேலை எவ்வளவு முன்னேறியிருக்கிறது என்று வினவித் திங்களுக்கு ஒரு முறை அவர்களிடமிருந்து கடிதம் வந்து கொண்டிருந்தது. இத்தகைய இடைவிடாத் தூண்டுதலால், ஊக்கத்தால் உந்தப்பட்டே ''சட்ட இயல்'' என்ற நூலை நான் எழுதி முடித்தேன்."

வழக்கறிஞராய், மாவட்டத் துணை நடுவராய், சட்டப்பேரவை துறைத் துணைச்செயலராய், ஆட்சி மொழிச் சட்டத்துறைக்குழுவில் செயலுறுப்பினராய் விளங்கிய திரு. மா. சண்முகசுப்பிரமணியம் அவர்களுக்கும் வ.சு. அவர்களுக்கும் நிகழ்ந்த உரையாடலும் செயலுமே மேற்கூறப்பெற்றவை. இத்தகைய இடைவிடாத தூண்டுதலால் ஊக்கத்தல் உந்தப்பட்டுச் 'சட்டஇயல்' என்னும் நூல் ஒன்று மட்டுமோ ஆக்கினார்? சட்டத்துறை தொடர்பாகவே, குற்றமும் தண்டனையும், தீங்கியல் சட்டம், குற்ற இயல், சட்டத் தமிழ், குறள் கூறு சட்டநெறி முதலிய நூல்களையும் பிறநூல்களையும் எழுதிப் பழந்தமிழில் செல்வம் பொலியச் செய்தார்.

சட்டஇயல் தொண்டு ஈது என்றால் ஆட்சிமொழி இயல் தொண்டு எத்தகையது? தமிழ்நாட்டில் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை என்று பாடினாரே பாவேந்தர். தமிழறிந்தோன் இந்நாட்டின் முதலமைச்சராய் வரவேண்டும் என்ற பாவேந்தர் வேட்கை நிறைவேறியும், தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் தக்க வகையில் வளம் பெற்றதில்லையே? ஊராட்சி, நகராட்சிநடைமுறையுமா தமிழுக்கு வரக்கூடாது? தூண்டினார் திரு.வ.சு. துலங்கினார் ஒருபெரு மகனார். அவர் ஆட்சிமொழிக் காவலர், கலைச் சொல்லாக்க ஏந்தல் கீ. இராமலிங்கனார்.

"கல்லையும் கனியாக்கும் கலைவல்லவர்கள் ஆதலின் எளிதில் இயங்கா இயல்புடைய என்னையும் இப் பணியில் ஈடுகொள்ள வைத்தது, எனக்கே வியப்பளிக்கும் செய்தியாக என்றும் இருந்து வரும் பாங்கினதாகும். எண்ணத்தால் திட்டமிட்டஅளவிலேயே நின்று கொண்டு, எழுதுவதில் முன்னேற்றம் இல்லாது இருந்ததுகண்டு தம்எழுத்தர் ஒருவரை

அன்றாடம் எனது இல்லத்திற்கு அனுப்பி வைக்கலானார்கள். இரண்டொரு மணிநேரம் நான் சொல்லச் சொல்ல அவர் எழுதிக்கொண்டே வந்தார்.

"எறும்பூரக் கல்லும் குழிந்தது. பத்துத்திங்களில் நூலும்அச்சுப் பொறியேறும் அளவினதாயிற்று.

"தமிழில் எழுதி மாட்டப்பெறும் பெயர்ப்பலகைகள் - பெரும்பாலும் வணிக நிறுவனங்களுக்குரியன - பொருத்தமான வடிவில் திருத்தமான மொழியில் பிழையின்றி எழுதப் பெற்றிருப்பதைக் காண்பது அரிதாக இருக்கின்றது. இதைக் கூறிக்கூறித் துன்புறுவார்கள் திரு. பிள்ளையவர்கள்.

தம் எழுத்தர்களைத் தெருவு தோறும் ஏவி ஆங்காங்கு இடம் பெற்றுள்ள பலகைகளில் காணும் சொல் உருவங்களைத் திரட்டி வரச்செய்து என்னிடம் ஒரு படியைத்தந்துள்ளார்கள். நல்ல தூய தமிழிலே அப் பலகைகளை அமைப்பதற்கு வணிகர்களுக்கு ஊக்கம் ஊட்டும் வகையிலே அச்சிட்டு வழங்க அப் பெயர்களுக்குத் திருந்திய உருவமைத்துத்தருமாறு என்னைப் பலமுறை பார்த்து வலியுறுத்திக்கூறியபடி இருக்கின்றார்கள். எனக்கும் இப் பணியை இனிது முடிக்க அவா உந்தாமல் இல்லை. எனினும் அவர்களது இடைவிடாத் தூண்டுகோலே இத் தொண்டில் என்னை விரைந்து ஈடுபடுத்தி வெற்றியோடு இதனை முற்றுவிக்கத் துணைபுரியும் ஆற்றலுடையதாகும்."

"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை"

"சொல்லவும் கூடுவ தில்லை - அவை
சொல்லும் திறமை தமிழ்மொழிக் கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்"

"என்றந்தப் பேதை உரைத்தான்- ஆ!
இந்தவசைஎனக் கெய்திட லாமோ?
சென்றிடு வீர் எட்டுத் திக்கும் -கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்று தமிழ்த்தாய் மொழிவதாகப் பாரதியார் பாடினார். அந்தச் சுப்பு சொல்லய மொழிஇ இந்தச் 'சுப்பு' உள்ளத்தில் சுடர்ந்தது. பேரொளி செய்தது. அறிவியல்கலைகளை அருந்தமிழில் கொணர்தல் வேண்டும். புத்தம் புதுக்கலைகளை யெல்லாம் பொலிவுறுத்தும் புது நூல்கள் ஆக்க வேண்டும். என்னும் பேராவல் உந்தியது. அவ்வுந்துதல் ஒரு வேலனையும் ஒரு சாமியையும் தமிழுலகுக்குத் தந்தது.வேலன் திருவாளர் என். கே. வேலன், சாமி திருவாளயர் பி.எல். சாமி.

"மின்சாரத்தின் அற்புதங்களைப் பற்றிக் குழந்தைகளுக் கான முறையில் ஒரு நூல் எழுதலாம் என்றார்கள். உடனே எழுதிக் கொடுத்தேன். அதனை அழகாக அச்சிட்டு வெளியிட்டார்கள். அதற்கு அரசினர் பரிசு ரூ. 500 கிடைத்தது. கலிவரின் யாத்திரை என்ற நூலை எழுதினேன். இன்னும் சற்று விரிவாக எழுதலாம் என்றார்கள். குறிப்பிட்ட நேரத்தில் எழுதிக் கொடுத்தேன். விரைவாக எழுதும் ஆற்றல் உங்களிடம் இருக்கின்றது, அதனைப் பயன்படுத்த வேண்டும்' என்றார்கள். 'நிலவைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இப்பொழுது நிலவைப் பற்றி எழுதுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்' என்றார்கள். நிலவைச் சுற்றிய கதை என்ற நூலை எழுதினேன்". இவை வேலன் அவர்கள் விடுக்கும் செய்தி. காவல் துறைத் துணை ஆணையர் பதவியாளர் தமிழில் அறிவியல் எழுதினார் என்றால், ஆட்சியாளர் வ.சு. வின் தூண்டலுக்கு எவ்வளவு பயன்!

சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் என்னும் அரிய நூல்களை ஆக்கித் தமக்கென எழுத்துத் துறையில் ஒருசீரிய இடத்தைக் கொண்டவர் திரு. பி. எல். சாமி, ஐ.ஏ. எசு. அவர் புதுவை அரசில் பெருநிலைப் பதவி தாங்கியிருப்பவர். அவர்கூறுகிறார்: "நீங்கள் சங்கநூற் செய்திகளை அறிவியலுடன் தொடர்புபடுத்தி விளக்கம் தரும் நூல்களைக் கழக வாயிலாக வெளியிட வேண்டும்என்று தூண்டினார். தொடர்ந்து என்னை நினைவுறுத்தி எழுதச் சொல்லிக் கொண்டிருந்தார். அரசு அலுவல் செய்யு என்னை நூலாசிரியன் ஆக்கியவர் திரு. சுப்பையா பிள்ளையவர்கள் என்றால் இது மிகைக் கூற்று அன்று".

## 18. மூலவர்

*(மாசு துடைத்து மணியாக்குதல் ஒப்பற்ற ஒரு பணி; ஆனால் மறைந்து கிடக்கும் மணியைக் கொணர்ந்து மன்றத்தில் வைத்து ஒளி செய்ய விடுவது மற்றொரு பெரும்பணி; பணிவில் இருந்துதான் புலப்படுவதோ பணி.)*

*"தனியாக ஒரு மூலையில் ஒதுங்கிக் கிடந்த புலவர் பெருமக்களை முற்றத்தில் கொண்டுவந்து அவர்களைப் பாராட்டிப் போற்றி வரும் திரு, பிள்ளை அவர்களின் அரிய பண்புகளை யான் உளமாரப் பாராட்டுகின்றேன்.*

'மூலை இருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென்றுந்தீபற
தவத்தில் தலைவரென் றுந்தீபற'

*என்ற திருவுந்தியாரின் திருப்பாடலுக்குத் திரு. பிள்ளை அவர்கள் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளார்கள்" என்று தாம்பரம் கிறித்தவக் கல்லூரிப் பேராசிரியர் திரு. பூ. ஆலால சுந்தரனார் குறிப்பிடுகின்றார். அவ்வகைத் தொண்டால் வ.சு. அவர்கள் தனிச் சிறப்புறும் ஒரோ ஒருவர் ஆகின்றார். தேடி வருவாரைப் போற்றுதலே அருமையாய் இருக்கும் உலகத்தே, தக்காரைத் தேடிப்போய்க் கொணர்ந்து போற்றிச் சிறப்பிப்பாரை எப் பதிப்பகத்து உரிமையாளர் வாழ்விலும் காண்டற்குக் கூடுமோ?*

*கழக அமைச்சர் அரங்கர் கொழும்பு வணிக நிலையத்தில் பணி செய்து கொண்டிருந்த நாளிலேயே அவருடன் பயின்று பழகியவர் சைவப் புலவர்சித்தாந்த பண்டிதர் திரு.ப. இராமநாதபிள்ளை அவரைத் திரு. வ.சு. அவர்கள் தக்கையில் பயன்படுத்திக் கொள்ள விரும்பினார். அரும்பெரும்புலமை, ஆரும் அறியாமல் குடத்துள் விளக்காக அமைந்துவிடுதலை அறவே விரும்பாத உணர்வு வ. சு. அவர்களுக்கு இயல்பாகவே பெருகியிருந்தது. ஆதலால் கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி போல அரும்புலவர்களைத் தெரிந்து கழகத்தோடு இணைத்தார். கழகப் புலவர்களாக்கிக் கவின்*

செய்தார். அவ்வகையில் 1946 இல் புலவர்தம் 56 ஆம் அகவையில் தமிழ்ப்பணி ஆற்றவும், சமயப்பணி ஆற்றவும் தலைமைப் புலவராக ஏற்றுச் சிறப்பித்தார். சமயச் சடங்குகள் நடத்திச் சிறப்பிக்கும் ஏற்பாடுகளைப் பிறரைத் தூண்டியும் இவரால் செய்வித்தார். இவர் தம் பணிச் சிறப்பால் சாத்திர நூல்களை அனைத்தும் செவ்விய திருந்திய பதிப்புகளைப் பெற்றன. உரை காண்டற்கு அரிய திருமுறை நூல்களும் சாத்திர நூல்கள் சிலவும் இவரால் உரை கண்டன.

கழகப் புலவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் திரு. சு.அ. இராமசாமிப்புலவர். அவர்தொடர்பு கழக ஆட்சியாளர்கக்கு ஏற்பட்டதனால் பல அரிய தொகுப்பு நூல்களும் வெளிப்பட்டன. எழுநூறுக்கு மேற்பட்ட புலவர்களின் வரலாறுகள் முப்பத்தொரு நூல்களாக வெளிவந்துள்ளன. திருக்குறள், நாலடியார், பழமொழி முதலிய பல நூல்களுக்கு விளக்கக் கதைகள் வெளிப்பட்டுள்ளன. இவர் தொகுத்த சிறப்புப் பெயர் அகரவரிசை, சிலேடை விளக்க அகர வரிசை, மேற்கோள் விளக்கக் கதைகள், தனிப்பாடல் திரட்டுகள் ஆகியவை ஆராய்வார்க்குக் கருவி நூல்களாகப் பயன்படுத்தற் குரியன.

இனி இப் புலவர் தொண்டு நாட்டுக்குப் பயன்படச் செய்ததுடன், இப் புலவரால் மற்றொரு பெரும்புலவர் கழகத்திற்குக் கிடைத்தார். அவர் பெருமழைப்புலவர் பொ. வே. சோமசுந்தரனார் ஆவர்.

“உரையில்லாத சூளாமணிக்கு உரை எழுத வேண்டுமென்று யான் கருதியபோது கழகப்புலவர் திரு.சு.அ. இராமசாமிப்புலவர் தமதூர்ப்பக்கம் தம்மினத்தவர் புலவர் சோமசுந்தரனார் இருக்கிறார். அவர் நுண்மாண் நுழைபுல மிக்கவர். அவரைத் துணைக்கமர்த்தித் தாம் சூளாமணிக்கு உரை எழுதுவதாகச் சொன்னார். திரு. சோம சுந்தரனாரைக் கொண்டு சில பாடல்கட்கு உரை எழுதச் செய்வித்து வாங்கியனுப்பினார். அவ்வுரை பண்டை உரையாசிரியர் நடைக் கொத்துத் தெளிவும் விளக்கமும் உடையதாக இருப்பது கண்டு தொடர்ந்து எழுதுமாறு சொன்னேன். சூளாமணி முழுமைக்கும் புலவர் இருவருமாக உரை எழுதி முடித்தனர். அடுத்துப் புலவர் சோமசுந்தரனார் தாமே தனித்த முறையில் கழகம் விரும்பும் நூல்கட்கெல்லாம் உரை எழுத ஒப்புக் கொண்டார்.”

*பெருமழைப் புலவர் தொடர்பு ஒரு பெருநலத்தைத் தமிழ் நிலத்துக்கு உருவாக்கித் தந்தது. அது, 'பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூற்பேழையினை' உருவாக்கித் தருதற்கு ஆட்சியாளர் வ.சு. அவர்களைத் தூண்டுவித்ததாகும். 'தூண்டுதலால் துலங்கப்பெறுதலும், துலங்குதலால் தூண்டப்பெறுதலும்' இணைந்து தொர்பவை போலும்!*

*'மறைமலையடிகளார்க்குக் கிடைத்த பாசுவெல்' என்று வ.சு. அவர்களைப் பாராட்டும் பண்டித வித்துவான் மு. பொன். இராமநாதன் செட்டியார் இன்று யான் பிழைதிருத்தஞ் செய்யும்திறமை படைத்தவனாகவும், நூலாசரியனாகவும், பதிப்பாசிரியனாகவும், விளங்குகின்றேன் என்றால் அதற்குக் காரணமாக விளங்குபவரும் பிள்ளை யவர்களேயாவர்" என்கிறார்.*

*"1961 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருந்த யான் ஒருநாள் திரு. சுப்பையா பிள்ளை அவர்களைக் காணச் சென்றேன். யான் எழுதிய ஓரிரு கட்டுரைகளைப் படித்துப் பார்த்து உடனே என் தகுதிகளையறிந்து அன்றே கழகத்தில் பணி செய்யுமாறு கூறி வேலைக்கு அமர்த்திக்கொண்டார்கள். 'கழகத்தோடு வளர்ந்து புகழ் பெறுக' என்று ஆசி கூறினார்கள். அன்று முதல் அவர்கள் மேற்பார்வையில் மூன்றரை யாண்டுகள் கழகப் புலவராகப் பணியாற்றும் நற்பேற்றினைப் பெற்றேன். அக் காலமே என் வாழ்க்கையின் பொற்காலம். என் வாழ்க்கையின் திருப்புமையம். அதுவரை இடையறாது நூல்களைப் படித்துக்கொண்டே காலங் கழித்த என்னை ஐயா அவர்கள், 'நிறைய எழுதுக, எழுதுக' என்று ஊக்கினார்கள். கட்டுரை, மொழிபெயர்ப்பு, அகராதி, திறனாய்வு, மதிப்புரை, தலையங்கம், பதிப்பித்தல் முதலிய பல்துறைகளிலும் எனக்குப் பயிற்சியளித்தார்கள். எழுத்துத் துறையில் எனக்குக் குருவாக விளங்கினார்கள். தந்தையைப்போல் அன்பு காட்டினார்கள்" என்று அரிதின் முயன்று அகரவரிசை நூற்பணி செய்வதே கடனாகக் கொண்டு உழைக்கும் திரு. மு. சதாசிவம் குறிப்பிடுகிறார். ஒருவர் வாழ்வு எத்துணைப் பேரைத் தட்டி எழுப்பியிருக்கிறது! தாங்கி, உயரத்தின் உயரத்தில் நிறுத்தி வைத்திருக்கிறது!*

இன்னொரு முதுபெரும் புலவர் இயம்புவதைக் கேட்போம். "திருஞான சம்பந்தர் தேவாரத்திற்கு விரிவான ஆராய்ச்சி எழுது விரும்பி ஓர் ஆராய்ச்சி நூலை எழுதினேன்.

அதை அச்சிட்டால் எவ்வளவு தூரம் பயன்டும் என்பதைக் குறித்துச் சிந்தித்தேன். பயப்டுமோ, இல்லையோ, அச்சிடலாம் என்று துணிந்து ஒரு சில பகுதியை அச்சிட்டேன். அதற்குமேல் அச்சிடப் பொருளுமில்லை. அதனால் துணிவுமில்லை, பேசாமல் கட்டி வைத்துவிட்டேன். என்னிடம் வந்த ஓர் அன்பரிடம் இந் நிகழ்ச்சியைக் கூறினேன். சிலநாள் கழித்து அவர் கழக ஆட்சியாளர் திரு.வ. சுப்பையா பிள்ளையுடன் என்னிடம் வந்தார். பிள்ளை அவர்கள், 'இந்த ஆராய்ச்சி, ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயன்படும்' என்று கூறித் தாம் அச்சிடுவதாகச் சொல்லி அப்படியே எழுதியவற்றை எடுத்துக்கொண்டு போய் இரண்டு பாகங்களில் முடித்தார். முதல் பாகம் 250 பிரதிகளே யான் அச்சிட்டிருந்தபடியால் அவர் அந்தப் பாகத்தையும் அச்சில் பதிப்பித்து மூன்று பாகங்காகச் சம்பந்தர் தேவார (ஒளிநெறி) உரைநடையை முடித்து வைத்தனர். நான் எழுதிய ஆராய்ச்சிக்கு ஒளிநெறிக் கட்டுரை ஒன்றும் எழுதி வைத்திருந்தேன். அதையும் அவர் அச்சிடுவித்தார். அவ்வாறே அப்பர் தேவார ஒளிநெறி இரண்டு பாகங்களாகவும் அதன் கட்டுரை ஒரு பாகமாகவும், சுந்தரர் தேவார ஒளிநெறி ஒருபாகமாகவும், கட்டுரை ஒருபாகமாகவும், திருவாசக ஒளிநெறி ஒரு பாகமாகவும் அதன் கட்டுரை ஒரு பாகமாகவும் என்னை எழுதுவைத்து, தாமே அவற்றை அச்சிட்டு முடித்தார். அதன் பின்னர், திருக்கோவையார் ஒளிநெறியும் கட்டுரையும் என்னை எழுதுமபடி சொல்லி அவை தம்மை இப்போது (1973) அச்சிட்டு வருகிறார். இவ்வாறு எட்டுத் திருமுறைகள் உரைநடையும் கட்டுரையும் எழுதி முடித்து அச்சிலும் ஏறிவிட்டன".

"இங்ஙனம் அவர் என்னைத் தூண்டியிராவிட்டால் இவ்வெட்டுத் திருமுறைகள் ஒளிநெறியும் கட்டுரையும் அச்சில் எறியிரா என்பது திண்ணம்." இவ்வாறு கூறுபவர் தணிகைமணி. வ.சு. செங்கல்வராயபிள்ளை அவர்கள்.

இவ்வாறாக மூலையில் இருந்தாரை முற்றத்தில் வைத்த பெருமை வ.சு. அவர்களுக்கு உண்டு என்றால், அதன் பயன் அவர் மட்டுக்கோ அமைவது? தமிழ் உலகப் பயனாகத் தளிர்ப்பது அன்றோ! பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தது போலப் பைந்தமிழர்க்கெல்லாம் பயன்படும் கலைச் செல்வங்களைப் படைப்பாரைத் தேடிக் கண்டு நாட்டுச் செல்வமாக்கிய நல்லவர் நம் வ.சு. அவர்கள். 'இசைச்சொல் அளவைக்கு எந்நா நிமிராது' என்றே கூறல் அமையும்.

*“கம்பன் மாபெரும்புலவன். அவன் செயலால் இந்நாடு முக்காலத்தும் பெருமையுறுகின்றது. ஆயினும் என்னை? வெண்ணெய்ச் சடையன் என்னும் புரவலன் ஒருவனை அக் கம்பனோடே ஒருசேரக் கடவுள் படைத்திரான் எனின் கம்பன் தன் மாபெரும்காப்பியத்தையே படைத்திரான் என்பதில் சிறிதும் ஐயமில்லை என்று மூலையில் இருந்து முற்றத்துக்கு வந்த ஒருவர் அவரைக் குறித்து இயம்புவது இவ்விடத்தே எண்ணத்தக்கது.”*

## 19. வியத்தகு வெளியீடுகள்

*(வள்ளன்மையாளர்க்கு வறுமை, பிறர்க்கு உதவி செய்ய முடியாத ஒரு நிலைமையே. அவ்வாறே அரிய நூல் வெளியீட்டாளர்க்குத் தளர்ச்சி, அடுக்கடுக்காக நூல்களை வெளிக்கொண்டு வரமுடியாத ஒரு நிலைமையே)*

"கழக வெளியீடுகள் கண்கவர் வனப்பின, கருத்துச் செறிவு உடையன. கட்டடச் சீர்மை கவிந்தன, பிழையற்றன. கற்கும் ஆர்வத்தைத் தூண்டி ஈர்ப்பன, தனித்தமிழ் நாட்டத்தை ஊட்டுவன. என்றும் நிலைபெறும் ஏற்றம் மிக்கன" என்பதைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும்.

கழக நூல்கள் மேனாட்டாரும் வியக்கும் வண்ணம் அமைந்தவை எனப் பலப்பல அறிஞரும் பாராட்டுவர். பாராட்டுவது மட்டுமில்லாமல் நடுவண் அரசும், அச்சகக் கழகமும் பல்கால் பதிப்புச் சிறப்புக்கும் கட்டச் சீர்மைக்குமாகப் பரிசும் பாராட்டும் வழங்கியுள்ளன.

கழக நூல்கள் தமிழர் பழஞ்செல்வப் பேழை எனத் தக்கவை. இடைக்காலக் கருவூலங்களாக இயல்பவை. நிகழ்கால வளங்கள் அனைத்தும் நேரில் குவித்து வைக்கப்பெற்றுள்ள மணிமலைகள்; முத்துக்குவியல்கள் போன்றவை.

"அறிவுச் செல்வங்கள் எல்லாம் இக் கழகத்தில் ஒரு சேரக் குன்றெனக் குவிந்து கிடக்கின்றன. இக் குன்றம் மண்ணாலும் கல்லாலும் இயன்ற வறுங்குன்றம் அன்று. இது நங்குலம்தரும் வான் பொருட் குன்றம். இவை படைப்புக் காலந்தொட்டு வழி வழியாக மேம்பட்டு வருகின்ற நம் தமிழ்ச் சான்றோர் அறிவால் இயன்ற குணப் பெருங் குன்றம்" - இது கழக நூல்களுக்கு ஒருவர் தரும் பரிசு.

குணப்பெருங் குன்றமாய நூல்களைக் குவிக்க வேண்டுமென்றால், குவிப்போர் குணப் பெருங்குன்றமாகவே இருத்தல் வேண்டும். ஏனெனில் குணக்கேடர் கைப்பட்டுக் குணநூல் வெளிப்படுமோ? குணக்கேட்டுக் குப்பையே

கோலோச்சிக் குடி கெடுக்க வன்றோ செய்யும்? குணம் மட்டும் குணக்குன்ற நூல்களைக் குவிக்கப் போதுமோ? குன்றா உழைப்பும் வேண்டுமே!

கழகநூல் வெளியீட்டுக்கு முதற்கண் வெளிப்படையான ஒரு தகுதி உண்டு. அது தனித்தமிழ். கொச்சை கலவாத - பிறமொழிச் சொல் கலவாத - இழிநடை இயையாத - தூய தமிழே கழக நூலின் முதல் தகுதி. அத் தகுதியைக் கட்டிக் காத்தனர் அரங்கரும் வ.சு.வும். அதற்கென ஓர்உரைகல் - உண்டு! அஃது அடிகளார் உரைநடை.

"திரு. பிள்ளையவர்கள் தாம் பதிப்பிக்கத் தொடங்கும் நூலின் கண் தமிழ் தூய்மையாக இருக்கின்றதா? என்று உணர்ந்து கோடற்கு ஆசிரியர்மறைமலையடிகளாருடைய உரைநடையையும்கருத்துகளையுமே உரையாணியாகக் கைக்கொள்கின்றனர். அப் பொன் போன்ற தமிழின் மாற்றுச் சிறிது குறைந்தாலும் அத்தகைய நூலை அச்சேற்றுதற்கு அவர் உடன்படுவதில்லை. இஃது அவர்க்கு ஒரு நோன்பு".

உரையாணி போட்டவை உயர்ந்தவை. ஆணிப்பொன், ஆணிமுத்து என்பவை உரையாணியிட்டு முத்திரை வைக்கப் பெற்ற சிறப்பினவை. அவ் வுரையிட்டு உயர்வு காணும் திறம் எவர்க்கும் வாய்ப்பதோ? வாய்த்துள்ளது வ.சு. அவர்களுக்கு. எப்படி வாய்த்தது?

"இவர்கள் புலவர் பற்பலர் உறவாலும் பனுவல்களைப் பிழை பார்த்தும் திருத்திய பயிற்சியாலும்கல்வி கேள்விகளாலும் பெரிய புலவராய் விளங்குகிறார். சில வேளைகளில் புலவர்களையும் திண்டாட வைக்கிறார்" - இவர் திண்டாட மட்டுமோ வைக்கிறார்! புலவர்களைக் கொண்டாடவும் வைக்கிறார்! பட்டறிவு மிகுதியால் பதிப்புத் துறையிலேயே தோய்ந்தமையால், அறிவுநூல் வெளியீட்டிலேயே தம் வாழ்வையெல்லாம் செலவிட்டே வருதலால், வெளியிடப் பெற்ற எந்த ஒரு நூலின் ஓரெழுத்தும் விடுபடாமல் மெய்ப்புப் பார்த்த மேதைமையால் புலவர்கள் திண்டாடவும், அதே பொழுதில் கொண்டாடவும் வைக்கிறார். கழக நூல்கள் ஒன்றா இரண்டா? 1750 நூல்கள்! கழகம்தோன்றிய நாள்முதல் 13 நாள்களுக்கு ஒரு நூலாம். அறிஞரொருவர் கணக்கிட்டு உரைக்கிறார்! இவ்வளவு நூல்களையும்முறையாக - முழுமையாக - உன்னிப்பாகப் பயின்ற பயிற்சி எவ்வளவு அழுத்தமாக அமைந்திருக்கும்! கல்லின் மேல் எழுத்து, எனக்

காட்டலாம். இப் பயிற்சியின் விளைவு நூல்களில் மொழிப் பிழை, கருத்துப்பிழை இல்லாமல் காக்கின்றது, நயமும் சுவையும் நன்கு சேர்க்கின்றது.

“கழக நூல்கள் பிழையின்றி வருவதற்கு முக்கிய காரணம் ஐயா அவர்களே. புலவர்கள் மூவர் திருத்திய பின்னும் ஏதாவது அச்சுப்பிழை இருக்கின்றதா என்று துருவிப்பார்த்துப் பிழை கண்டு பிடித்துக் காட்டும்போது நாங்கள் வியந்திருக்கிறோம். அவர்களுடைய ஆழ்ந்த இலக்கண அறிவையும் கண்டு போற்றியிருக்கிறோம். ஐயா அவர்கள் படுக்கையில் கூடப் பிழைதிருத்துவதற்குரிய அச்சுப்படிகள் எப்போதும் இருக்கும். தூக்கம் வரும் வரையிலும் பிழைதிருத்துவார்கள்; தூங்கி எழுந்ததும் பிழை திருத்துவார்கள்; உடல் நலமில்லாது போனாலும், வெளியூர்களுக்குச் சென்றாலும் பிழைதிருத்தும் படிகளைக்கையிலே வைத்துக் கொண்டிருப்பார்கள். அச்சுப்பிழை எதுவும் இன்றி நூல்களை அச்சிட வேண்டும் என்னும் இந்த ஆர்வம் பிற எல்லா வெளியீட்டாளர்களும் பின்பற்றுதற்குரியது. ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சு முதலிய பல்கலைக் கழகங்களின் வெளியீடுகளைப்போலத் தரமும் கவர்ச்சியும் வனப்பும் வாய்ந்தவை கழகநூல்கள் என்பதை அனைவரும் அறிவர்.”

கழகப் புலவராக இருந்து நேரில் கண்டதைக் கண்டபடி எழுதியவர் குறிப்பு இது. கழக நூலாசிரியர் ஒருவர் உரைக்கிறார்:

“கட்டிடக் கலை வல்லான் ஒருவன் தான் எடுக்கும் கட்டிடம் உறுதியுடையதாக இருத்தற்பொருட்டு அதற்கு அடுக்குகின்ற ஒவ்வொரு செங்கல்லையும் நன்கு சுண்ணம் (சிமிண்டு) அப்பி அடுக்கப் படுகின்றதா என்று பார்வையிடுமாறு போலவே, திரு. பிள்ளையவர்கள் தமது கழகத்தின் வாயிலாக வெளியிட்டிருக்கின்ற 1460 நூல்களிலும் (1973) அமைந்த ஒவ்வோர் எழுத்தையும் தாம் தமது கண்ணாலேயே சரிபார்த்தே அச்சிட்டுப் பதித்து நூலாக்கித் தந்துள்ளனர் என்னும் உண்மையை யான் எழுதிய நூல்களை அவர் வெளியிட்ட முறையைக் கண்கூடாகக் கண்டே எழுதுகிறேன்.

‘அச்சுப் பணியோ, நச்சுப் பணியோ’ என்பது பழமொழி ‘நச்சு’ என்பது நஞ்சு, நச்சரிப்பு என்னும் இருபொருளுக்கும் இயைந்த சொல். கொடுமையும் தொல்லையும் வாய்ந்தது

*என்பதாம்; 'பல்லக்கு ஏறுவதும் சொல்லாலே, பல் உடைபடுவதும் சொல்லாலே, பல் உடைபடுவதும் சொல்லாலே' ஆதலால் சொல்லைப் பக்குவமாகச் சொல்லத் தெரிய வேண்டுவதுபோலவே சொற்பிழை வராமல் அச்சிடம் தெரியவும் வேண்டும். 'கல்லாரும் கற்றாரும் சொல்லாலே வெளிப்படுவர்' என்பது மட்டுமன்று; "காக்கப்படுவன இந்திரியம் ஐந்தினினும் நாக்கல்ல தில்லை நனிவெல்லுமாறே" என்பதுபோல், காவாவிடின் வெல்லும் சொல்லே, கொல்லும் சொல்லாய்க் குலை நடுங்கச் செய்யும்! குடிகெடச் செய்யும்! ஆதலால்தான் வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள்,*

"தட்டா னிடத்தினில் தங்கப் பணிகள் சமைப்பதுவும்
வட்டாடு வாரைத் திருத்திநல் மார்க்கத்தில் வைப்பதுவும்
பட்டாங்கில் உள்ளதைக் காகிதத் தச்சிற் பதிப்பதுவும்
தொட்டார் மனத்தைப் பலப்பல நாளும் துயர்செய்யுமே"

*எனப் பாடினார்.*

*இத்தகு துயர்மிக்க அச்சுப் பணியில் தோய்ந்த சுப்பையவேள் எத்தகு நூல்களைத் தோற்றுவித்தனார் என்பதை விளக்குகிறார் பாவேந்தர் :*

"நூலெல்லாம் விளையுமிங்கே நூறாயி ரக்கணக்கில்,
நூல்ஒவ்வொன்றின்
மேலெல்லாம் அழகு செய்யும் **சுப்பையன்** மிகுதிறமை!
அதுவுமின்றிக்
காலெல்லாம் சிலம்பொலிக்கத் தமிழரசி உலகரங்கு
காணும்வண்ணம்
தோலெல்லாம் சளைப்பயன் கொள் புதும்புது நூல்
தோற்றுவிப்பான் அந்த மேலோன்,"

*"ஒவ்வொரு புத்தகத்துக்கும் அக அழகும் உண்டு, புற அழகும் உண்டு. அக அழகு என்பது நூலில் உணர்த்தப்படும் கருத்துக் களின் தூய்மை, உயர்வு என்பனவும் மொழிநடையின் செம்மை சிறப்பு என்பனவும் ஆகும். புற அழகு என்பது அச்செழுத்துகளின் செம்மையும் தாளின் உயர்வும் புத்தகக் கட்டின் உறுதியும் மேலுறையின் அழகும் ஆகும். இந்த நூற்றாண்டில் அசைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தோன்றியபின் தமிழ்ப் புத்தகங்கள் இந்த இருவகை அழகும் பெற்று வெளிவரலாயின. தொடக்கத்தில் அறிஞர் திருவரங்கம்பிள்ளை ஆற்றிய தொண்டு*

காரணம் என்பது உண்மை. அதை மேலும் வளர்த்துத் தொடர்ந்து மேன் மேலும் உயர்வுறச் செய்த பெருமை திரு. சுப்பையாபிள்ளை அவர்களைச் சாரும்'' அழகின் சுவைஞராம் அழகர் மு.வ. கூறிய அழகு மொழி இது.

கண்டதைச் செய்வான் பண்டிதன், கண்பார்க்கக் கையால் எழுதுவான் அறிவாளி! பள்ளியில் பயிலும்போதே பிள்ளையவர்களுக்கு ஓர் ஆர்வம் உண்டு. கையடக்கப் பதிப்பு ஒன்றைக் கண்டு இவ் வாங்கிலப் பதிப்புப்போல் தமிழ்த் திருக்குறள் வெளிப்பட வேண்டுமென்று! அப்படியே 'தீபெட்டித் திருக்குறள்' வந்ததே! பையில்வைத்துக் கொண்டு செல்லும் போது அறியாப் புகையர் கிலர் தீப்பெட்டி கேட்டதுண்டு, அது திரு. வ.சு. செய்த மயக்கு, நூலுக்கு எத்தனை எழிற்கட்டம்! பட்டுத்தோல்- பொன் எழுத்து - மூலை வெட்டு - கலிக்காக்கட்டு - மேலுறைக்கு மேலுறை! இப்படி எத்தனை நலப்பாடுகள்! இப் பணிக்கு எனவே, வ.சு. அவர்களுக்குக் கிடைத்த புத்தகக் கட்டடக் கட்டுக் கலைஞர் திரு. மாணிக்காசமி! கட்டடப் பரிசுக்குக் காரணர்அவரே என வியந்து வியந்து பாராட்டுவார் வ.சு.

தூண்டித் துலக்குதல், முற்றத்தில் வைத்த மூலவர் என்னும் பகுதிகள் இரண்டிலும் அறிஞர் பெருமக்கள் சிலர் தொடர்புகளையும் நூல் வெளியீடுகளையும் கண்டுள்ளோம். இப் பகுதியில் சிலரையும் அவர்கள் தொடர்பால் வெளிப்பட்ட சிறந்த வெளியீடுகளையும் காண்போம். அனைவரையும் அவர்கள் எழுதிய அனைத்து நூல்களையும் குறிப்பிடுவதாயின் அதுவே தனி நூலாகும். ஆகலின் சுருங்கிய அளவில் காண்போம்.

மலர் இருக்கும் இடத்தைத் தேனீ தேடிப்போகும். தேனீயைத் தேடி மலர் வாராது. ஆனால் கழகத் தேன் கூடோ, தேனீக்கள் தேடி எடுத்துவந்த தேனாலும் நிரம்பிது. தேடிவந்து மலர்களே பொழிந்த தேனாலும் நிரம்பியது. இவ்வாறு தேடிச் சென்று சேர்த்ததும், தேடிவந்து சேர்த்ததும் ஆகிய இருபால் தேனாலும் நிரம்பிய கழகம், 'சாந்தில் தொடுத்த தீந்தேன்' என்று கூறத்தகுந்த நூல் விருந்து படைத்துச் செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும்' வேளாண்மையில் வயங்குகிறது.

தாகூர் சட்ட விரிவுரையாளர் திரு. கா.சு. பிள்ளை சென்னைச் சட்டக் கல்லூரியில் 1921 முதல் பணி செய்தார். அவர் கழக ஆட்சியாளர்களுக்கு அன்பர், அணுக்கர். ஆதலால் கழகத் தொடக்க நாள் பதிப்பே, அறிவறிந்த பெருமகனாராகிய அவர்

படைப்புகளைத் தாங்கும் பேறு பெற்றது. அப்பரடிகள் திருஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், தாயுமானவர், பட்டினத்தார், குமரகுருபரர், சிவஞான முனிவர், மெய்கண்டார்ஆகியவர் வரலாறுகளையும் அவர்கள் நூலாராய்ச்சியையும் தனித்தனியே எழுதுமாறு செய்து வெளியிட்டனர். கா.சு. பிள்ளை எழுதிய திருக்குறள் பொழிப்புரை நூல் வந்த வரலாற்றைக் குறிக்கிறார் வ.சு.

"யான் பகலில் கழகப் பணியை முடித்து விட்டு இரவு 7 மணியளவில் பேராசிரியர் பிள்ளை இல்லத்துக்குப் போவேன். எனக்கு உறக்கம் வரும்பரை அவர் சொல்வதை எழுதுவேன். உறக்கத்தினின்று காலையில் முன்னதாக விழித்தெழுந்திருப்பின், அப்போதும் சிறிது நேரம் அவர் சொல்வதை எழுதுவேன். அப்படி எழுதப் பெற்றதே திருக்குறள் பொழிப்புரை".

ஒரு நூலைக் கொண்டு வருவதற்கு எப்படி எப்படி முயற்சி யெல்லாம் செய்ய வேண்டியுள்ளது! மாந்தர்களுக்கு வரலாறு இருப்பதுபோல ஒவ்வொரு நூலுக்கும் அது வந்த வரலாற்றை எழுதுதலும், ஆராய்தலும் வேண்டும் போலும்! அதனை ஒரு தனித்துறையாக்கி வளர்த்தலும் வேண்டும் போலும்!

கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் தொடர்பு, மூவர் தேவாரங்களையும் பண்முறை சிதையாமல் சீர் சந்தி பிரித்துப் பதிகக் குறிப்புகளும் செப்பமாய் விளங்க அழகிய படங்களுடன் வெளிவரச் செய்தது. அவ்வாறே நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் தொடர்பால், திருவிளையாடற்புராணம் மூன்று காண்டங்களும் விளக்கவுரையும், விளக்கப் படங்களும் பெற்றுத் தனித்தனியே அழகிய பதிப்புகளாக வெளிவந்தன. மேலும் பல உரை நூல்களும், உரை நடை நூல்களும் அவரால் வெளிப்படுத்தப்பெற்றன.

பள்ளிக் கல்வித் துணை ஆய்வாளாராக இருந்தசிவசைலம் பிள்ளை அவர்களால்எழுதப்பெற்ற பாடநூல்கள் சிலவற்றைக் கழகம் வெளியிட்டது. அது கழக வருவாயைப் பெருக்குதற்கு உதவியது.

1935 ஆம் ஆண்டு முதல் அறிஞர் மு. வரதராசனார் நட்பு ஆட்சியாளர்க்கு வாய்த்தது. 1939 இல் பச்சையப்பன் கல்லூரிப் பணிக்கு மு.வ. வந்தமையால் முன்னைத் தொடர்பு வலுத்தது. அவர்கள் வழியாகச் சிறுவர் நூல்கள், இலக்கிய நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் பல வெளிவந்தன. அவர்களால் எழுதப்

பெற்ற திருக்குறள் தெளிவுரை குறிப்பிடத்தக்க ஒருநூலாகும். கழக நூல்களுள் மட்டுமன்றித் தமிழ் நூல்களுள் எவ்வொன்றும் விற்றிராத அளவில் 10 இலக்கம் படிகள் இருகாறும் விற்கப்பெற்றுள.

இவ்விருபதாம் நூற்றாண்டில் விளங்கிய சிறந்த சமயச் சொற் பொழிவாளர்களுள் தலையாய ஒருவர் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகள். அவர்களின் விரிவுரைகளுள் கந்தபுராண விரிவுரை சாலச் சிறந்ததாகும். அவற்றைக் கேட்டு இன்புற்ற வ.சு. அவர்கள் அடிகளார் மாணவராகிய திரு. மு. இராசாக்கண்ணாரைக் கொண்டு எழுதச் செய்து கந்தர் சட்டிச் சொற்பொழிவு நூலாக வெளியிட்டனர். தலைசிறந்த சமயச் சொற்பொழிவாளராகிய அவ்வடிகளார் பெயரால் இலங்கும் நூல் அவ்வொன்றேயாம்.

உரைவேந்தர் சித்தாந்த கலாநிதி ஔவை . சு. துரைசாமிப் பிள்ளை அவர்களுக்கும் ஆட்சியாளர்க்கும் அன்புத் தொடர்பு உண்டாயிற்று. அதனால் காப்பியச் சுருக்க நூல்கள் ஆராய்ச்சி நூல்கள் பல வெளிவந்தன. புறநானூற்றுக்கும், பதிற்றுப் பத்துக்கும், யசோதர காவியத்திற்கும் சீரிய உரை விளக்கம் கிடைத்தன.

பூவிருந்தவல்லித் தமிழாசிரியர் புலவர் அரசு அவர்கள் நெருக்கத்தால் நாடக நூல்கள், வரலாற்று நூல்கள், காப்பியக் கதைகள் எனத் தொடர் நூல்கள் பல வெளிவந்தன.

கருவிலே திருவுடைய நுண்மான் நுழைபுலச் செம்மல் இளவழகனார் சில ஆண்டுகள் கழகப் புலவராக அமர்ந்து கன்னித் தமிழ்த் தொண்டு புரிந்தனர். சில அரிய நூல்கள் அதனால் உரை விளக்கம் பெற்றன. செந்தமிழ்ச் செல்வியில் பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை, பொருளியல் வாழ்க்கை என்பன போன்ற சிறந்த கட்டுரைத் தொடர்கள் வெளிவந்து நூலுருப் பெற்றன. அவர்கள் திரட்டிய சங்க இலக்கிய இன்கவித் திரட்டு அறிஞர் உள்ளங்களைக் கவர்ந்தது. ஆங்கிலத்திலும் அது பெயர்க்கப் பெற்றுப் பெருமையுற்றது.

பெரும்புலவர் பு.சி. புன்னைவனநாத முதலியார் திருநெல்வேலி நிலையத்தில் கழகப் புலவராகவும், சிவஞான முனிவர் நூல் நிலையத்தின் நூலகராகவும் பணி செய்தார். திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியில் பேராசிரியராகத் திகழ்ந்ததுடன் சில சிற்றிலக்கிய நூல்களுக்கு உரையும் வரைந்தார்.

வ.சு. அவர்களுக்குச் சங்கப் புலவர்கள் புரவலர்கள் வரலாறுகளைச் செவ்விதின் வெளியிட வேண்டும் என்னும் ஆர்வம் உண்டாயிற்று. அதனை முற்றுவித்துத் தந்தவர் புலவர் கா. கோவிந்தன் ஆவர். கால்டுவெல் பெருமகனார் இயற்றிய ஒப்பிலக்கணத்தைத் தமிழாக்கம் செய்த தந்தவரும் கோவிந்தனாரே ஆவர்.

போராசிரியர். திரு. ந. சேதுரகுநாதன் கழகத் தொடர்பு கொண்டார். அதனால் முத்தொள்ளாயிரமும், முக்கூடற் பள்ளும் அருமையான உரை பெற்று உலாவந்தன.

அன்பரும் தொண்டருமாக விளங்கிய புலவர். அ.க. நவநீத கிருட்டிணன் அவர்கள் கழக ஆட்சியாளர் உள்ளத்துச் சீரிய இடம் பெற்றவர். அவ்விடப்பேற்றால், ‘வள்ளுவர் சொல்லமுதம்’ என்னும் வரிசையில் நான்கு நூல்களும், வில்லிசைப் பாடல் நூல்கள் சிலவும், துணை நூல்கள் சிலவும் செவ்விய நிலையில் வரைந்து உதவினார்.

ஆராய்ச்சிப் பேரறிஞர்மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் வ.சு. அவர்களால் நன்கு அறிந்து போற்றப்பெற்ற பேரன்பு உடையவர். அவர் வரைந்த ஆராய்ச்சி நூல்கள் ‘கிறித்தவமும் தமிழும்’, ‘பௌத்தமும் தமிழும்’ ‘சமணமும் தமிழும்’ இன்னபிற வெளிவந்துள்ளன. நகைச்சுவை ததும்ப எழுதுதலில் தேர்ந்தவர் திரு. க.ப. சந்தோசம் (மகிழ்நன்) அவர்கள் தொடர்பு, செல்வியில் இனிய கட்டுரைகளைக் கொணர்ந்தது. பின்னே நூலுருப் பெற்று விளங்கின. அவர் தனி நூல்கள் சிலவும் செய்து வழங்கினார்.

கழகப் புலவர்களுள் ஒருவராக விளங்கியவர் திரு. தி. சங்குப் புலவர். அவரால் தமிழ்விடுதூதும், கைந்நிலையும் உரைவளம் பெற்றன. சில இலக்கண நூல்களும் துணை நூல்களும் வரைந்தார்.

மாவட்டக்கல்வி அலுவலராகத் திகழ்ந்த திரு. பாலகிருட்டிணன் (இளங்கண்ணனார்) ஆங்கிலமும் தமிழும் கைவரப்பெற்ற பெரும் புலமையாளர். அவர் சங்க இலக்கிய இன்கவித் திரட்டினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். கீழ்க் கணக்கு நூல்களில் திருக்குறளும் நாடியாரும் நீங்கிய பதினாறு நூல்களும் அவரால் ஆங்கில ஆக்கம் பெற்றன.

புகழ் வாய்ந்த ஆங்கிலக் கதை நூல்களைத் தமிழ்மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென வ.சு.

விரும்பினார். அதனால் திரு.கு. பரமசிவம் அவர்களைக் கொண்டு ஐவன்கோ, டேவிட் காப்பர் பீல்டு முதலிய நூல்களை வெளிப்படுத்தினார். திரு. மு. சதாசிவம், திரு. க.வ. முத்தையா, திரு.எசு. தாசு. திரு. இரா. முத்துக்குமாரசாமி ஆகியவர்கள் வழியாகவும் பல ஆங்கில நூல்கள் தமிழாக்கம் பெற்று வெளிவந்தன.

தமிழ் இலக்கியப் பெருமையையும் வரலாற்றுப் பெருமையையும் பிற நாட்டார் அறியுமாறு செய்ய ஆட்சியாளர் விரும்பினார். அதனால் மாவட்டக் கல்வி அலுவலராக இருந்து பன்மொழிப் புலவர் தி. பொ. கிருட்டிணசாமி முதலியார் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஆத்திசூடி முதல் அறநெறிச்சாரம் முடிய நீதி நூல்கள் பத்தும் (Ten Tamil Ethiscs) அழகுறக் கழகம் பதிப்பித்துள்ளது. டாக்டர். ஜி.யு. போப்பையரின் திருக்குறள், நாலடியார் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்கள் எட்வர்ட் ஜுலிட் ராபின்சன் என்பாரது “Tamil Wisdon” என்னும் நூல் திரு. கனக சபைப் பிள்ளை அவர்களின் “Tamils 1800 Years ago” என்னும் நூல், பேராசிரியர் பூரணலிங்கம் அவர்களின் “Tamil India” என்னும் நூல், டாக்டர். மு.வ. வின் “The Nature in Sangam Literature” என்னும் நூல், டாக்டர் வ.சுப. மாணிக்கனாரின் “The Concept of love” என்னும் நூல், திரு. ஜே. வி. செல்லையாவின் ‘Paththu Pattu’ என்னும் நூல் முதலாகப் பழைய நூல்கள் அழகிய முறையில் ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்றன.

ஜேம்ஸ் ஆலன் இயற்றிய ஆங்கில நூல்கள் அனைத்தும் தொடராக வெளிப்படுத்தப்பெற்றுள, இஃது ஓர் அரிய செயலென அறிஞர் போற்றுகின்றனர். இனிச் சங்க இலக்கியம் அனைத்தும் ஆங்கில உலகம் பெற்றுத் தமிழின் சிறப்பெல்லாம் உணர்ந்திடச் செய்தலில் பேரார்வம் கொண்டுள்ளார். திரு. வ. சு. அச் செயலுக்கு அரசின் அரவணைப்புக் கட்டாயம் வேண்டத்தக்கது என்பது எவரும் அறிந்ததே.

கழகத்தோடும், ஆட்சியாளரோடும் தொடர்பு கொண்டுள்ள புலவர்கள் எண்ணற்றோர். அவர்கள் அனைவர் பெயரையும் வரிசைப் படுத்தின் மிகநீண்டு செல்லும் என்பது வெளிப்படையான தலைப்பு நோக்கி ஒருசிலர் பெயரே சுட்டப்பெற்றன என்க. கழக தோன்றிய நாள்முதல் தமிழ் உலகில் விளங்கிய புலமையாளர் எவரும் கழக வட்டத்துள் அமையாமல்நின்றது இல்லை என்று கூறுல் தகும்.

*கழக ஆசிரியர்கள் ஓரிடத்தார் அல்லர், ஓரினத்தார் அல்லர், ஒரு துறையார் அல்லர், ஒரு நிலையார் அல்லர், ஒரு பாலினர் அல்லர், இத்தகையரும் ஒருநூற்றுவர் இருநூற்றுவர் அல்லர், பன்னூற்றுவர். இவர்களை யெல்லாம் தொடர்பு கொண்டு, தொண்டராக்கிய பெருமை எளிமையானதோ? காந்தமன்ன ஆற்றல் உடையார்க்கே அமைவது. பிறரை ஆட்படுத்தும் ஆளுமை, வயப்படுத்தும் வண்மை, நல்லன போற்றும் நெஞ்சம், பழைமை பாராட்டும் கெழுதகைமை ஆகியனவெல்லாம் அமைந்திருத்தல் வேண்டும். இவற்றினும் புவியன்ன பொறையும், மலரன்ன மலர்ச்சியும், தேனன்ன சொல்லும், வேற்றுமையில் ஒற்றுமை காணும் பேருள்ளமும் மல்கியிருத்தலும் வேண்டும். இவையெல்லாம் ஒருங்கே அமைந்து விளங்கும் ஒருவரலலேதான் இயலுவது என அறிவார் வ.சு. அவர்களை மலையினும் மாணப்பெரியராய்த் தலை நிமிர்ந்து கூறுவர் என்பதில் ஐயமில்லை.*

# 20. துறைதோறும் தொண்டு

("தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறும்
துறைதோறும் துடித்தெ ழுந்தே")

**- பாவேந்தர்**

*உழவுத் தொழில் செய்வார், உயரறச் செயலில் ஈடுபட்டார். அவர் வேறு அறம் செய்தல் இலராயினும், அவர் செய்யும் தொழிலே அறமாய் அமைந்து அரும்பெரும் நலங்களைச் செய்ய வல்லதாம். உண்டியும் உடையும் உறையுளும் அன்றிக் கண்டதோர் அறமில்லை என்பது மணிமேகலையார் வாக்கு. இம் மூன்றறங்களுக்கும் மூலமாக அமைந்தவர் வேளாண் தொழிலில்அமைந்தவரே. இவ்வாறே அறிவுநூல்வெளியீடே, அரும் பெரும் தொண்டாயிருக்கப் பிறிதும் தொண்டு செய்தலும் வேண்டுமோ? பிறிதும் தொண்டு செய்தலுடையராயின் அது, 'பொற் குடத்திற்குப் பொட்டும்' வைத்தது போன்ற பொலிவினதாகும்.*

*வ.சு. அவர்களின் நூல் வெளியீடுகளைப் பற்றி மேலே கண்டுள்ளோம். பிற தொண்டுகளுள் சிலவற்றை இங்கே காணலாம்.*

*"திருசங்கர் கம்பெனி" நடந்த காலத்திலும், சைவ சித்தாந்தநூற்பதிப்புக் கழகம் தொடங்கிய காலத்திலும் அதற்கு முன்னர் அரிய நூல்கள் சிலவற்றை வெளியிட்டு நொடித்துப் போன குடும்பங்களுக்கு அரங்கனாரும் வ.சு.வும் ஓர் உதவி புரிந்தனர். அவ் வுதவி, அவர்கள் வீடுகளில் விலை போகாமல் முடங்கிக் கிடந்த நூல்களை வாங்கி விற்றுத் தந்ததாகும்.*

*பெருவாயில் கிருட்டிணசாமி முதலியார் என்பார் பெரிய புராணத்தை 1887, 1889, 1895, 1898 ஆகிய ஆண்டுகளில் நான்கு பாகங்களாக ஆறுமுகத் தம்பிரான் எழுதிய உரையுடன் வெளியிட்டார். அதன் படிகள் மிகப்பலவாகத் தேங்கிக் கிடந்தன. அவற்றை வாங்கிக் கட்டஞ்செய்து விற்று அக் குடும்பத்திற்கு உதவியமை பேருதவியாக இருந்தது.*

திருவிளையாடற் புராணம் சோடசாவதானம் திரு.தி.க. சுப்பராய செட்டியார் இயற்றிய பதவுரை விளக்கவுரைகளுடன் 1884 இல் வெளிவந்தது. உரையாசிரியரின் உறவினர் ஒருவர் எழுமூர்ப் பெரியதெருப் பக்கமுள்ள ஒரு சந்தில் குடியிருந்தார். அவர் வீட்டில் 300 படிகள் விலை போகாமல்கிடந்தன. அவற்றை வாங்கிக் கட்டடஞ் செய்து விற்றுத் தந்தனர்.

இப் பணியால் தம் நிறுவனத்திற்கு விற்பனை ஊதியம் ஓரளவு கிடைக்கும் எனினும், விற்றுத் தருதலால் அவர்களுக்குக் காலத்தால் கிடைக்கும் பேருதவி மிகச் சிறந்த ஒன்றாகும் என்பது கருதத் தக்கது. இத்தகைய வாய்ப்பு பலருக்குக் கிடைக்காமையால் பழையதாள் விலைக்கு நிறுத்துப் போட்டவர்களும், குப்பையாக மடித்துப்போக அள்ளிப் போட்டவர்களும் உண்டு என்பதை அறிபவர்கள் இவ்வுதவியை நன்கு நினைவு கூர்வர்.

ஒரு நூற் பதிப்பாளர், இன்னொரு நூற்பதிப்பாளருக்கு உதவுதல் இந்நாட்டில் அருகாமையினும் அருமையார். தடையாக இல்லாமல் இருந்தாலே பெருமையான செய்தி. இன்ன நூல் அச்சாகின்றது என்று தெரியாமலே அச்சிடுவதும், அவ்வாறு அச்சிடப் பெறும் நூலையும் கரவாகத் தெரிந்து அதற்கு முன்னரே அந்நூலை எதிர்பாராவகையில் வெளியிட்டுத் தாம் நலம் பெறுவதுடன், அயற் பதிப்பகத்தாருக்குக் கேடு சூழ்வதும் நிகழக்கூடியனவே, அதிலும் ஏட்டுச் சுவடியை ஆய்ந்து வெளியிட்ட காலத்தில் இது பெருவழக்காக இருந்தது. பிறரொருவர் பதிப்பதற்குத் தம்மிடமுள்ள ஏட்டுச் சுவடியை ஒப்பு நோக்குதற்கும் உதவாத உதவியாளர்களும் இருந்தனர். இத்தகையவர்களுக்கு இடையேயும் எவ்வாறேனும் நூல் செவ்வையாக வெளிவந்தால் போதும், அதனை யாம் வெளியிட்டால் என்ன? அவர் வெளியிட்டால் என்ன? இந்நாட்டுக்கு அவ்வறிவுக் கருவூலம் தட்டின்றிக் கிடைத்தால் போதும என்னும் எண்ணம் உள்ளவர்களும் சிலர் இருந்துள்ளனர். அவர்களால்தாம் நாடும் மொழியும் இனமும் நலம் பல பெற்றுள்ளன. திரு.வ.சு. பிறர் நூல் வெளியீட்டுக்குச் செய்துள்ள உதவி, பாராட்டுக்கு உரியதும், நினைதோறும் இன்பம் நல்குவதுமாம்.

"அவர்கள் என் சொந்த வெளியீடான தமிழ் வரலாறு, வட மொழி வரலாறு, இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்? வண்ணனை மொழி நூலின் வழுவியல், திருக்குறள் தமிழ்

*மரபுரை என்னும் நூல்கள் அச்சானபோதும் எனக்கு, மறைமலையடிகள் நூல்நிலையத்தில் தங்க இடம் தந்தும், இறுதிப் படிவ மெய்ப்புக்களை யெல்லாம் மூலத்துடன் ஒப்பு நோக்கிப் பொறுமையாகவும் செவ்வையாகவும் திருத்திக் கொடுத்தும், அச்சானவுடன் அழகாகக் குறித்த காலத்திற்குள் கட்டடம் செய்வித்தும் அனுப்பச் சொன்ன இடங்கட்கெல்லாம் தப்பாது அனுப்புவித்தும் வேண்டும்போதெல்லாம் வேண்டிய அளவு கடன் தந்துதவியும் பல்வேறு வகையிற் செய்து வந்த உதவியும் வேளாண்மையும் முற்றச் சொல்லுந் திறத்தன வல்ல" என்று மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் குறித்தல் இவர்தம் வேளாண்மைத் திறனை வெளிப்படுத்தும். "நாடு பெறும் பயனே நம் பயன், நாடு இப் பயனைப் பெறுதற்கு நம் உதவியும் செய்தற்கு வாய்த்ததே" என்று எண்ணும் பெருமனத்தார்க்கு அன்றிப் பிறர்க்கு இத் தன்மை இயல்வதன்றாம். இதனாலேதான்,*

"சுழன்றும் தமிழுலகம் சுப்பையாப் பின்னாம்
உழந்தும் அவனே தலை"

*என்று வள்ளுவத்தை அடியொற்றி அவ்வொற்றியரால் பாராட்டப் பெறும் பேறுற்றார். (திருக்குறள் தமிழ் மரபுரை)*

*தவத்திரு. மறைமலையடிகளார் வரலாற்றை அவர் திருமகனார் மறை. திருநாவுக்கரசு விரிவாக எழுதி அச்சிட்டு வந்தார். அவ்வச்சீட்டுப் பணியில் பல இடர்கள் நேரிட்டன. நூலை முற்றுவித்து வெளிப்படுத்துதலும் அருமையாகி நின்ற நிலையில் திரு வ.சு. தலையிட்டு உதவினார். காலத்தால் செய்த உதவியைக் கருதிப் பாராட்டுகிறார் நூலாசிரியர். "அடிகளார் வரலாறு 640 பக்கம் அச்சாகியது. அவ்வளவில் பணி தடைப்பட்டு நின்றது. அந்நிலையில் என் அன்பிற்குரிய அத்தான் வ. சுப்பையாபிள்ளை ஏற்பாட்டின் படி மேற்கொண்டு நூற்பதிப்பைச் சென்னையில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகச் சார்பில் அப்பர் அச்சகத்தில் பதிப்பிடுவதென ஓர் ஒப்பந்தம் எனக்கும் அவர்கட்கும் இடையே ஏற்பட்டது. அதன்படி மேற்கொண்டு ஏறத்தாழ 328 பக்கங்கள் அங்குப் பதிப்பாயின." (முகவுரை, மறைமலையடிகள் வரலாறு).*

*மக்களாட்சி நடைபெற்றுவரும் நம் நாட்டுத் தேர்தல் மேடைகள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை அறிவோம். பிறரை வசை பாடுதற்கு அமைந்த கூட்டமைப்பு மேடை தேர்தல் களமேடை. கட்சி மேடையும் அவ்வாறே ஆயிற்று. தம்மையுணர்ந்து தகவுணர்ந்து பேசுவார் அரியர் என்பது*

மட்டும் இல்லை. இலர் என்றே கூறலாம். இவ்வாறே ஒரு பதிப்பாளர் பிறர் பதிப்பு நூல்களைப் பாராட்டுவதே அரிது. பிறர் பதிப்பு நூலுக்கு விளம்பரமும் தருவரோ? அதனைச் செய்யும் சீர்மையும் படைத்தவர் வ.சு. என்பதை 'உடையவரே' உரைக்கும் உரையால் உவந்து கேட்போம்:

"அக் காட்சி கழக வெளியீடுகள் பலவற்றையும் பரப்பி வைத்துக் காட்டும் ஒரு விளம்பர உத்தியாகலாம் என நினைத்துச் சென்ற பலரும் தங்கள் கண்முன்னே விலை மதிப்பற்ற தமிழ் நவமணிகளை - பொற்கலன்களைப் - பரப்பி வைத்து ஒளிவீசச் செய்திருந்த காட்சியைக் கண்டு வியந்து நின்றனர், நயந்து போற்றினர்." என்று தாம் நேரில் கண்ட காட்சியை உரைக்கிறார் பேராசிரியர். அ.மா. பரிமணம்.

"பொறாமை உள்ளம் கொண்டவர் எவரேனும் இது சைவ சித்தாந்தக் கழகத்தின் புத்தகக் கடை வியாபாரம் என எண்ணுவாராயின் அது பெருந்தவறு என்பதற்கு ஒரு சான்று தருவேன். எனது தமிழ் அகராதிக்கலை என்னும் நூலை இந்தக் காட்சியில் கண்டேன். என் கண்களை என்னால் நம்பவே முடியவில்லை. இந்த நூலை வெளியிட்டு விற்பனை உரிமை பெற்றிருப்பது வேறு பதிப்பகம். இந்தநூலுக்கும் கழகத்திற்கும் நெருக்கமான தொடர்பு இல்லை. இந்த நிலையில் இந்நூல் காட்சியில் இடம் பெறுவானேன்? அகராதிக்கலை பற்றித் தமிழில் வெளிவந்துள்ள முதல் பெரிய ஆராய்ச்சி நூல் இதுதான். எனவே, கலையுணர்வோடும், தமிழ் வளர்க்கும் பற்றுள்ளத்தோடும் கழகத்தினர் இந் நூலைக் காட்சியில் வைத்து மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர் என்பது தெளிவாகிறது" என்று குறிப்பிடுகிறார் புலவர் சுந்தர சண்முகனார். இவை திரு.வ.சு. அவர்கள் அரிதின் முயன்று தொகுத்து வைத்துள்ள காட்சிக் கருவூலத்தைக் கண்டு களித்தஅறிஞர் இருவர் உரைகாளம். எஞ்சிய காட்சிச் சிறப்பு தொகுத்தலும் வகுத்தலும்என்னும் தலைப்பில் காணலாம்.

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. முத்துராசாக் கண்ணனார் கழக ஆட்சியாளர் திரு.வ.சு. அவர்களிடம் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றக் கூட்டத்தில் ஆய்தற்கு உரிய பொருளாக எவ்வெவற்றைத் தேர்ந்துகொள்ளலாம்என வினாவியிருந்தார். அவ்வாய்வுக் குழுவின் ஓர் உறுப்பினராக வ.சு. இருந்தமையால் அவர்களிடம் கருத்துக் கேட்க நேரிட்டது. தமிழாக்கம் குறித்த நல்ல பல திட்டங்களை

நடைமுறைப்படுத்திவரும் செயலாண்மையர் இவராதலின், தேர்ந்து தெளிந்து இருபத்தொரு திட்டங்களை முறைப்படுத்தி அவற்றை ஆய்வுக்கு வைக்குமாறு கேட்டுக் கொண்டார். அவற்றுள் சிலவற்றைக் காண்க.

1. கல்வி, தொழில், சட்டம், நிதி, பொதுப்பணி முதலிய துறைகளைப் போலத் தமிழ் வளர்ச்சிக்குத் தனித்துறை ஏற்படுத்திச் செயலர் ஒருவரை அமர்த்துதல்.

2. தமிழ் வளர்ச்சித் துறையின் கீழ் (1) ஆட்சிமொழிப் பகுதி (2) தமிழ்ப் புத்தக வெளியீட்டுப் பகுதி (3) மொழி பெயர்ப்புப் பகுதி ஆகிய மூன்றையும் கொண்டு வருதல்.

3. பழம்பொருள் ஆய்வுப் பணிமனை (Archallogic Department) யினையும் தமிழ் வளர்ச்சித் துறையின் கீழ்க் கொண்டுவருதல்.

4. ஆட்சிச் சொற்களுக்கும், கலைச் சொற்களுக்கும் தனித் தனி அறிஞர் குழு அமைத்து முன்புள்ள சொற்களைத் திருத்தி அமைப்பதோடு புதிய சொற்கட்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை அமைத்தல்.

9. கல்வெட்டுத் துறையில் பயிற்சி பெற்ற அறிஞர்களைக் கொண்டு அச்சிடப்பெற்ற கல்வெட்டுகளிலிருந்தும் பதிவெடுக்கப்பெற்று அச்சிடப்பெறாமலிருக்கும் கல்வெட்டுகளிலிருந்தும் சொற்களை எடுத்து அகரவரிசைப் படுத்துதல்.

10. பதிவெடுக்கப்பெறாமல் இருக்கும் கல்வெட்டுகள் யாவை என்பதை அறிந்து அவற்றைப் பதிவெடுப்பதற்கு ஆவன செய்தல்.

11. சொல்லாராய்ச்சி வல்ல அறிஞர்கள் ஓரிருவரை ஆந்திரம், கன்னடம், மலையாளம் ஆகிய திராவிட மொழிகள் பேசும் மாநிலங்கட்கு அனுப்பித் தமிழகத்திலே வழக்கிழந்து அம் மாநிலங்களிலே வழக்கிலிருக்கும் தமிழ்ச் சொற்களைத் திரட்டி வெளியிடுதல்.

12. தமிழ் வேர்ச்சொல் அகரவரிசை வெளியிடுவதற்கு அறிஞர் குழுவொன்று அமைத்தல்.

13. தமிழக அரசு அலுவலகங்கள், தொழிலகங்கள் எல்லா வற்றிலும் உள்ள அறிக்கைப் பலகைகள் எல்லா வற்றையும் திருத்தமாகத் தமிழில் எழுதச் செய்தல்.

16. தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் உயர்மட்ட அரசு அலுவலகங்கட்குச் சென்று அங்கங்கே ஆட்சியில் தமிழ் செவ்வனே கையாளப்படுகின்றதா என்பதை மேற்பார்வையிட்டுச் செயல்படுத்துதற்கு ஏற்ப அவருடைய தகுதியைக் கூட்டுச் செயலர் (Additional Secretary) நிலைக்கு உயர்த்துதல்.

20. தமிழில் செய்தி இதழ்கள் நடத்துவோர் அவற்றிற்கு ஆசிரியராகவும் துணையாசிரியராகவும் தமிழ்ப்புலவர் களையும் தமிழ்ப் பேராசிரியரிகளையுமே அமர்த்தச் செய்தல்.

24-11-1969 இல் இத் திட்டங்கள் தரப்பட்டன. ஆயப்பெற்றன. ஆனால் நிலைமை என்னவோ அப்படியேதான் இருக்கிறது. 'தமிழ் வளர்ச்சித்துறை' ஓர் இயக்குநர் பொறுப்பிலே இயங்கிக்கொண்டுதான் வருகிறது. தமிழர் நலங் குறித்த அரசு என்றும், "தமிழே எங்கள் பேச்சும் மூச்சும்" என்றும், "எல்லாம் தமிழ் எங்கும் தமிழ்" என்றும் மேடை முழக்கமும் பறை சாற்றலும் நிகழ்ந்துகொண்டுதான் உள்ளன. உருப்படியான செயலாக்கம்...? வாக்குகளைச் சேர்த்துத் தருதற்கு வாய்ப்பறையை அன்றி வளர்ச்சிப் பணியில் ஒன்றுவதாக வில்லை. தமிழ்மக்கள் விழிப்புணர்ச்சியும் அப்படி இருக்கிறது! இத்தகைய மக்களுக்கும் அரசுக்கும் இடையேதான் என்கடன் பணிசெய்து கிடப்பதே என்று நாளெல்லாம் தொண்டு செய்தவரும் நற்றமிழ்த் தொண்டர் வ.சு. தமிழ்மக்கள் தவப்பேற்றால் வாய்த்துளார். அவர் தொண்டு வாழ்வதாக.

1937 இல் பாளையங்கோட்டையில் 'பலிவிலக்குச் சங்கம்' என ஒரு சங்கம் தோன்றியது. இச் சங்கத்தின் பெயரே அதன் நோக்கத்தை வெளிப்படுத்த வல்லதாம். குழந்தைக்குச் சோறு தருதலைக் 'குழவிபலி' (சிறுபஞ் - 79) என்பர். அதனைப் பேதையுலகம் 'குழவிப்பலி' யாக்கிக் கொலைக்கும் முற்பட்டது. இறைவனுக்குப் பூவைப் படைத்தலைப் பூப்லியாகக் கண்ட தமிழகம் 'புலைப்பலிக்கும்' இடந் தந்துவிட்டது. அதனால், 'உயிர்ப்பலியுண்ட மயிர்க்கண் முரசம்' என்ச சங்கப் பாடலே சாற்ற நேர்ந்தது. இவ் வுயிர்ப்பலி விலக்குதற்குத் தோன்றிய அமைப்பே பலி விலக்குச் சங்க' மாம்.

பாளையங் கோட்டையில் உள்ளது ஆயிரத்தம்மன் கோயில். அக் கோயிலில் பன்னீராண்டுகளுக்கு ஒருமுறை ஓர் எருமைக்கடா, கருக்கொண்ட ஓர் ஆடு, ஒரு பன்றி

ஆகியவற்றைப் பலியிடுவர். இவ் வழக்கம் அதற்கு 48 ஆண்டுகள் முன்தொட்டே நடந்து வந்தது. அதனை நிறுத்துதற்கே இச் சங்கம் தோன்றியது.

பாளையங்கோட்டை வட்டாரத்தில் இருந்த அருளுள்ளங் கொண்ட அனைவோரும் இப் பணியில் ஆர்வம் காட்டினர். திருவரங்கனார் தலைநின்றார். திரு.வ.சு. முதலியவர்கள் துணைநின்றனர். அருளாளர் திரு. ஸ்ரீபால், அவர்களும் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களும் கேட்டவர் உள்ளம் உருக அருளுரையாற்றினர். ஆனால், பலியூட்டும் ஆர்வலர்களுக்குப் பரிவுணர்வு வருதற்கு மாறாகப் பகையுணர்வு விஞ்சியது. 'வெட்டுக்குத்து கொலை கொள்ளை' நடக்குமென அச்சுறுத்தல் உண்டாயது. அறங்காவலர் உள்ளம் அருளாளர் பக்கம் சார்ந்தது. அறமன்றில் முறையீடு நிகழ்ந்தது. 27-7-37 இல் துணைத் தண்டனை அலுவலர் (Sub Magistrate) 144 தடை ஆணை பிறப்பித்தார். காந்தியடிகளும். சவகர்லால் நேருவும், பலியூட்டைக் கண்டித்துத் 'தொலை வரைவு' வழங்கினர். ஒரு திங்கள் போராட்டம் - ஊர்வலம் - சுவரொட்டி - பறைசாற்று - சொற்பொழிவு இன்னபிற நிகழ்ந்து ஓய்ந்தன. அரசுத் தடை ஆணையுடன், மக்கள் முயற்சியும் இணைந்த சீரால் பலியிடுதற்காகக் கொணர்ந்த எருமைக்கடா முதலியன பிழைத்தன. காவல் துறையின்ர கண்காணிப்பில் கோயிலில் அவை நலமாக உய்ந்தன.

இந் நிகழ்ச்சியில் சீரிய பங்கு கொண்டு விளம்பரப் பொறுப்பையும் இனிது மேற்கொண்டு வெற்றி கண்டவர் திரு. திருவரங்கனார்; துணை நின்றவர் திரு.வ.சு. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 15, பரல் 12, சிலம்பு 16 பரல் 1 - ஆகியவற்றில் இச் செய்திகள் இடம் பெற்றுள. "கொல்லா விரதம் குவலய மெல்லாம் ஓங்க வேண்டும்" என விரும்பும் இவர் உள்ளம் இச் செயலால் வெளிப்படும். இவர்தம் பிற தொண்டுகளை மேல்வரும் பகுதிகளில் தொடர்ந்து காண்போம்.

# 21. செந்தமிழ்க் காவலர்

("மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பா னல்னோ")

**- சேக்கிழாரடிகள்**

காவல் இருவகைப்படும். அவை அகக்காவல், புறக்காவல் என்பன. வீட்டுள் இருக்க வேண்டுபவை வெளியே போய் விடாமல் காக்கவும் வேண்டும். வீட்டுக்குக் கூறியவை நாட்டுக்கும் மொழிக்கும் பொருந்துபவையே.

நயத்தக்க சிற்பி ஒருவன் நாளும் நாளும் உள்ளம் அள்ளூறித் தான் விரும்பும் கலைத்திறமிக்க சிற்பங்களை யெல்லாம் உள்ளத்து உருவெழுதி உளியால் விளையாட விட்டு உருக்கொடுத்து, உயரிய பீடமமைத்து ஒப்பனை யெல்லாம் உவந்து செய்து ஓலக்கம் கொள்ள வைத்திருப்பது போலவும், மணியணிகளை வணிகம் செய்வான் ஒருவன், ஒளியும் உயர்வுமிக்க மணிகளைத் தேர்ந்து தேர்ந்து கலைத்திறம் வல்லாரால் கைவினை பொலியச் செய்வித்துக் காண்பார் கண்ணும் கருத்தும் ஒருங்கே கவருமாப்போலக் கவின் பேழைக்கண் தகுமாறு வைத்திருக்கும் தகவு போலவும் தமிழுக்கு உயிர்ப்பும் உறுப்பும் ஒளியும் உயர்வுமெல்லாம் ஒருங்கு சேர்க்கும் ஓராயிரத்து எழுநூற்றைம்பது நூல்களைத் தமிழன்னையின் திருவடிகளுக்கு அடியுறையக்கி "அடியார்க்கும் அடியேன்" என நின்றிறைஞ்சி, அன்னை வாழ்க என் வாழ்த்துரைக்கும் அரும் பெருந்தொண்டர் வ.சு. அவர்களின் சீரியநூல் வெளியீட்டுப்பணி ஒன்றே இத் தமிழ் மண்ணில் பிறந்தார் எவர்க்கும் தாழாத காவல் வேந்தர் அவர் என்பதைக் காட்டற்குப் போதுமான எடுத்துக் காட்டாக, அவர் செய்துவரும் பிற காவற் கடமைகளும் மிகப் பலவாம். அவையெல்லாம் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து வளையமிடும் பொற்றொடர் (பொற் சங்கிலி) போன்றனவாம்.

*1937இல் திரு. இராசகோபாலாச்சாரியார் சென்னை முதலமைச்சராகப் பதவியேற்றதும் இந்திமொழியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாகப் புகுத்தினார். அதனை எதிர்த்துத் தமிழ்நாடு தழுவிய எதிர்ப்புப்போர் கிளர்ந்தது. ஆங்காங்குக் கண்டனக் கூட்டங்கள் நிகழ்ந்தன. அதனை ஒரு நிலைத்த அமைப்பாகவே ஆக்கித் தொண்டாற்ற முன்வந்தது சைவ சித்தாந்தக் கழகம்.*

*சைவ சித்தாந்தக் கழகத்தின் ஒருகிளை தென்னிந்திய தமிழ்ச் சங்கம் என்பதைஅறிவோம். அதன் செயற் பிரிவுகளுள் ஒன்றாகத் 'தமிழ்ப் பாதுகாப்புச் சங்கம்' திருநெல்வேலியில் தோன்றியது. அதன் தலைவராகச் செந்தமிழ்ச் செல்வி இதழாசிரியர் கூட்டத் தலைவர் திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை தேர்ந்தெடுக்கப் பெற்றார். திரு. சோ. சிவஞான தேசிகர், திரு.தூ.சு. கந்தசாமி முதலியார், திரு. வ. திருவரங்கனார் ஆகியோர் அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். இச் சங்கம் எதற்காகத் தோன்றியது? என்று தோன்றியது?*

## தமிழ்ப் பாதுகாப்புச் சங்கம், திருநெல்வேலி

*"நாட்டில் தாய்மொழியாம் தமிழ்மொழிக் கேட்டுக்குக் காரணமான முறையில் தற்கால அரசியல் தலைவர் சூழ் செயலின் பயனாக இந்திமொழி நடுத்தரப்பள்ளி வகுப்புகட்குக் கட்டாயப் பாடமாக வைக்கப்பட இருப்பதைத் தடுத்து, உயர் தனிச் செம்மொழியாகியதும் தென்னாட்டுக்கிளை மொழிகட்குத் தாய்மொழியாய் இலங்குவதுமாகிய தமிழைப் பள்ளிக்கூட வகுப்புகட்கெல்லாம் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று வற்புறுத்தித் தமிழ்மொழியைக் காப்பாற்றும் நோக்கத்துடன் 29-8-1937 மாலை திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச் சங்கச் சார்பில் கூடிய தமிழ்மக்கள் பொதுக்கூட்டத்தில் மேற்படி பெயருடன் கூடிய சங்கம் நிறுவப்பெற்றது."*

**– செந்தமிழ்ச் செல்வி. 16 : 51**

*தோன்றும் பொழுது சங்கமாகத் தோன்றிய இவ்வமைப்பு பின்னே 'கழகம்' ஆகியது. தமிழ்ப் பாதுகாப்புக் கழகச் சார்பில் அழைப்பிதழ் எழுதுமுறை, வடசொல் தமிழ் அகரவரிசை, பிழை நீக்கி எழுதுமுறை, பழமொழி அகரவரிசை, உவமை அகரவரிசை, மரபுத் தொடர் அகரவரிசை, மக்கட் பெயர் அகரவரிசை, இல்லப் பெயர் அகரவரிசை முதலிய நூல்கள் வெளிவந்து*

மொழியாக்கம் புரிந்தன. 'தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டு' எனத் திரட்டாக்கியும் வெளியிடப்பெற்றது. ஒரு திட்டத்தை மேற்கொண்டால் அதனை வெற்றியாக நிறைவேற்றுதற்குரிய வழிதுறைகளை யெல்லாம் செவ்வையாக வகுத்துக் கொண்டு அதே கடைப்பிடியாக இருந்து வெற்றி காண்பது வ.சு. அவர்களின் தழும்பேறிப்போய இயல்பு ஆகலின், இத்தகைய நூல்களைத் தமிழ்ப்பாதுகாப்புக்கென வழங்கினார். நூல் வெளியீடு மட்டுமின்றித் துண்டு வெளியீடுகள் பல வெளியிட்டார்.

கூட்டங்கள் கூட்டி அரசுக்கு எட்டச்செய்தார். செந்தமிழ்ச் செல்வி இந்தி எதிர்ப்பின் விளம்பரத் துறையாகவும், வ.சு.வின் இல்லம் இந்தி எதிர்ப்புப் பாசறையாகவும் விளங்கின என்பதைச் செந்தமிழ்ச் செல்வி 1937 ஆம் ஆண்டுச் சிலம்பு முதல் (16) தொடர்ந்து "செய்திகளும் குறிப்புக்களும்" என்னும் பகுதியைக் காண்பார் உண்மை கண்டு மகிழ்வார். தொண்டின் திறம் போற்றுவர். இந்தி எதிர்ப்பாளர்க்குக் கொடி ஒன்று வேண்டுவதாயிற்று. அக் கொடியைத் திட்டமிட்டுத தந்தவர் வ.சு. அவர்களே. வில்லும் கயலும் புலியும் விளங்கும் மூவேந்தர் கொடியை இந்தி எதிர்ப்பாளர் ஏந்திய கொடியாக்கிய திட்பமும் நுட்பமும் போற்றுதற்குரியதாம். இன்று இம் மூன்று இலச்சினைகளையும் கொண்ட கொடிகள் பலப்பல உலாவரக் காண்பதெல்லாம் திரு.வ. சு. அவர்கள் அன்று கண்டதன் வழி வந்தனவேயாம்.

இன்னும், "இந்தியால் தமிழ்கெடுமா?" எனத் தலைப்பமைத்து வினாத்தாள் ஒன்று அச்சிட்டு மொழித்துறை, அரசியல்துறை வல்லார்க்கெல்லாம் விடுத்து அவர்கள் கருத்துகளை எழுதிப் பெற்றுப் பல்லாயிரம் படிகள் அச்சிட்டு நாடெங்கும் வழங்கினார். "இந்தி ஒழிக; தமிழ் வாழ்க" என அட்டைகள் அச்சிட்டு வழங்கினார். தமிழுக்கு ஜே என்னும் முழக்கத்தைத் 'தமிழ் வாழ்க' என மாற்றிய பெருமை வ.சு. அவர்களுக்கு உண்டு.

தவத்திரு. மறைமலையடிகளாரை அணுகி இந்திபொது மொழியா? என்னும் தலைப்பில் அது பொதுமொழி யாதற்குரிய தகுதி சிறிதும் அற்றது என்பதை அறுதியிட்டு உரைக்கும் நூலை எழுதி வாங்கி, ஈழத்துச் சிவானந்த அடிகள் துணையால் 15,000 படிகள் அச்சிட்டு இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைப் பரவச் செய்தார் வ.சு.

நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் இந்தி எதிர்ப்புப் பணியில் முந்தி நின்று பாடுபட்டார். மாநாடுகளிலும் அவைகளிலும் முழங்கினார். இந்திமொழி பற்றிய தம் கருத்துகளைத் தொகுத்து வெளிப்படைக் கடிதம் ஒன்று எழுதித் திரு. இராசகோபாலாச்சாரியார்க்கு அனுப்பினார். அவ்வறிக்கையைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பரப்பும் பொறுப்பைத் திரு.வ.சு. மேற்கொண்டார்.

1943 அக்டோபர்த் திங்களில் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் தலைமையில் சென்னைத் தொண்டை மண்டல உயர் நிலைப் பள்ளியில் முதலாவது தமிழ் உணர்ச்சி மாநாடு நடத்தினார். அம் மாநாட்டில் திரு.கு. கோதண்டபாணிப் பிள்ளை, மொழி நூல் அறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் முதலிய அறிஞர் பெருமக்கள் கலந்துகொண்டு உணர்ச்சிமிக்க உரையாற்றினர்.

அதே ஆண்டு திசம்பர்த் திங்களில் சேலம் நகரவைக் கல்லூரியில் அக் கல்லூரி முதல்வர் திரு. அ. இராமசாமிக் கவுண்டர் தலைமையில் இரண்டாவது தமிழுணர்ச்சி மாநாடு நடந்தது. அப் பொழுது திரு.வ.சு. "தமிழ் மக்கள் பெயர்கள் அனைத்தும் தூய தமிழாக இருத்தல், தமிழர் வாழ் இல்லங் களுக்குத் தமிழ்ப் பெயர் அமைத்தல், தமிழர்கள் தமிழிலேயே யாண்டும் எழுதுதலும், பேசுதலும் செய்தல், பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பெற்றும் திரிபுற்றும் வழங்கப்பெறும் ஊர்ப்பெயர்கள், திருக்கோயிலில் உள் இறைவன் இறைவியர் பெயர்கள் பண்டு போலத் தூய தமிழில் மாற்றியமைத்தல், திருக்கோயில்களில் தூய தமிழிலேயே மலர் வழிபாடு புரிதல், வணிக நிலையங்களின் பெயர்களும் தொழில் நிலையங்களின் பெயர்களும் தூய தமிழிலேயே அமைத்தல், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களையும் த்யீழலேயே பயிற்றுவித்தல், தமிழர் இல்லங்களில் நடைபெறும் சடங்குகள் அனைத்தும் தமிழிலேயே நடைபெறுதல், இசையரங்கு களிலெல்லாம் தமிழ்ப்பாடல்களையே பாடுதல், ஆட்சிமுறைகள் அனைத்தும் தூய தமிழிலேயே நடத்துதல் ஆகியவெல்லாம் நிகழ வேண்டும் என அழுத்தமாக வலியுறுத்திப் பேசினார்.

இதனை அடுத்துப் பேச்சு வழக்கில் மிகுதியாகப் பயன்படுத்தப் பெறும் பிறமொழிச் சொற்களை விலக்கும் பொருட்டு எடுத்துக் காட்டாக நூறு பிறமொழிச் சொற்களைத்

தொகுத்து அவற்றுக்கு நேரான தூய தமிழ்ச் சொற்களையும் பொறித்துத் துண்டு வெளியீடு அச்சிட்டு நாடெங்கும் பரப்பினார் திரு.வ.சு.

இவ் வெளியீட்டைக் கண்ணுற்ற திரு. சி.பி. இராமசாமி ஐயர் ' தமிழ் எங்ஙனம் தனித்தியங்க இயலும்' என்று எள்ளி நகைத்து இந்துத் தாளில் எழுதினார். "இருக்கு வேதத்திலே 'ஆணி' என்னும் சொல் உள்ளது. அச் சொல்லைத் தமிழர் கடன் வாங்கினர், என்று ஆராய்ந்து பாராமல் மொழித் துறையில் புகுந்து விளையாடினார். அதற்கு வ.சு. 'ஆணித்தரமான விடை' என மறுப்பெழுதி அச்சிட்டு அவர்க்கு அனுப்பினார். பிறர்க்கும் வழங்கினார்.

இவ்வாறு அறிக்கைகள் வெளியிட்டு அரும்பணி செய்தற்கெனத் திரு.வ.சு. தம் இல்லத்தை அலுவலகமாக்கி அறிஞர் பெருமக்கள் சிலரைக் கலந்து ஆய்ந்து அவர்கள் துணையுடன் "தமிழறிஞர் கழகம்" என ஓர் அமைப்பினையும் உருவாக்கினார். அதன் ஆறாம் அறிக்கையை ஒரு சான்றாகக் காண்க. அது தனித் தமிழில் பேசுதற்கு எளியதொரு வகையைக் குறிப்பிடுகிறது.

## தனித் தமிழில் பேசுதற்கு எளிதான முறை

இல்லங்களிலும் பள்ளிகளிலும் கழகங்களிலும் உண்டியல் வைத்துத் தனித் தமிழ் மக்கள் கலந்து பேசும் வடசொல் ஒவ்வொன்றுக்கும் காலணா தண்டம் போட உறுதி செய்துகொள்ளுதல் வேண்டும்.

பேச்சு வழக்கில் ஏறக்குறைய 300 வடசொற்களே மிகுதியாய்க் கலந்து பேசப்படுகின்றன. அவற்றிற்கு நேரான நல்ல தமிழ்ச சொற்கள் இருக்கின்றன. அத் தமிழ்ச் சொற்கள் பேசப்படாமையால் அவை வழக்கழிந்து ஒழிந்து வருகின்றன.

சோறு, தண்ணீர், முழுக்கு, நோய் என்ற தமிழ்ச் சொற்கள் ஒழிந்து சாதம், ஜலம், ஸ்நானம், வியாதி என்னும் வடசொற்கள் வந்துவிட்டனவன்றோ!. எனவே, கட்டுப்பாடாக நாம் வட சொற்களை நீக்கிப் பேச வேண்டியவர்களாகின்றோம்.

## நீக்கும் முறை

முதற்கண் ஒரு மாதம் வரை இதன் பின்பக்கத்துப பட்டியிலுள்ள 100 வடசொற்களை நீக்கிப் பேசப் பழகிக்

கொள்ளுதல் வேண்டும். பின்னர் 3 மாதம் வரை இதிலுள்ள வடசொற்களைத் தவறாகக் கலந்து பேசினால் கலந்து பேசும் ஒவ்சவொரு வட சொல்லுக்கும் காலணா தண்டம் உண்டியலில் போடுதல் வேண்டும்.

இங்ஙனம் ஓராண்டுவரை ஒவ்வொரு நான்காவது மாதத் தொடக்கத்திலும் 100 சொற்கள் அடங்கிய பட்டியொன்று அச்சிட்டு அனுப்பப்படும். இவ்வாறாக ஓராண்டில் 300 வடசொற்களை நீக்கிப் பேசக் கற்றுக்கொள்ளலாம். இதனால் வடசொல் கலவாமல் பேசுதலும் எழுதுதலும் எளிதிலே முடியும்.

குறிப்பு : 1. 1944 சனவரி மாதத்தில் இம்முறையினை அன்பர்கள் கடைப்பிடிப்பார்களாக.

2. உண்டியலில் சேரும் தண்டத் தொகையினைச் சென்னைத் தமிழறிஞர் கழகத்தாருக்கு அனுப்பினால் துண்டு அறிக்கைகள் அச்சிடுதற்குப் பயனாகும்.

3. இதே வழியினைக் கலந்து பேசும் ஆங்கிலச்சொல் ஒவ்வொன்றுக்கும் ஏற்படுத்தலாம். அதற்குச் சொற்பட்டி ஆயத்தமாகின்றது.

147, பவழக்காரத் தெரு, தமிழறிஞர் கழகத்தார்.

சென்னை.

12-1-1943

இவ்வறிக்கையைத் தொடர்ந்து நூறு வடசொற்களும் அவற்றுக்குத் தக்க தமிழ்ச் சொற்களும் பட்டியல் இட்டுத் தரப் பெற்றுள (சிலம்பு 21, பக் 93)

இனிய தமிழ்ப் பெயர்களை யெல்லாம் வடமொழியாக்கும் கொடுமையும் அக் கொடுமையை ஏற்றுக் கொள்ளும் அறிவறியா மடமையும், அதனினும் அவ் வடமொழிப் பெயரே முதன்மையாய் இருந்ததென வழக்கிடும் நெறியறியா அறிவாளர்களும், "எது நடந்தாலும் எமக்கென்ன? மொழியென்ன சோறோ துணியோ வீடோ மாடோ தருமோ? புரிந்தால் போதும் அவ்வளவுதானே! என்னும் வகையறியா மக்களும், ஒருவரின் விஞ்சி ஒருவராகத் தமிழ்மொழிக்குக் கேடு சூழ்ந்து வந்துளர். இந்நாளிலும் அறவே நின்றபாடில்லை. வடமொழியாளர் ஏமாற்றும் எத்தும் கூடிய வேலை இவ்வாறாக, ஆங்கில மொழியும் அதன் தாக்குதலை ஆட்சிப்

பெயரால் நடாத்தியது. உரலுக்கு ஒருபக்கம் இடி, மத்தளத்திற்கு இருபக்கமும் இடி என்ற அளவில் அமையாமல் பலப்பல வகைகளில் தமிழ் சீரழிந்து வந்தது. ஒவ்வொருவரும் அன்னைமொழிக்கு உண்டாகிய ஊறுகளைக் களைதல் கடமையாக்க கொண்டிருப்பராயின், "இளைதாக முள்மரம் கொல்க" என்பதற்கு ஏற்பக் களையப்பட்டிருக்கும். இக் களைகளைக் களைந்தெறிவார் வேண்டுமே! அதுவும் மேடையேறிச் சொல்லிய அளவில் கடன் தீர்ந்தது என்று இல்லாமல் தொடர்ந்து பணிசெய்ய வேண்டமே! இவ்வாறு தொடுத்துமுடித்தலில் வல்லவர் திரு.வ.சு. அவர் அயரா முயற்சியால் தென்னிந்திய தொடர் வண்டி நிலையங்களின் பெயர்கள் சிலவும் ஊர்ப் பெயர்கள் சிலவும் திருத்தம் பெற்றன. இப்பணிக்கு முன்னாள் கல்வியமைச்சர் திரு. தி.சு. அவிநாசிலிங்கம் செட்டியார் துணைநின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

'பீச்சு' கடற்கரை எனவும் 'போர்ட்' கோட்டை எனவும், 'பார்க்', பூங்கா எனவும், 'ஜங்சன்', சந்திப்பு எனவும் 'தின்னவேலி' 'திருநெல்வேலி' எனவும் திருவாலூர், திருவாரூர் எனவும், மாயவரம் மாயூரம்எனவும் இந்நாள் வழங்கப்படுகின்றன எனின் அப் பணி செய்தவர் திரு.வ.சு. அவர்களே என்க.

தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் தமிழ்மக்களுக்காகத் தமிழ் வேந்தர்களாலும் தமிழ்ச்செல்வர்களாலும் தமிழ்நாட்டுச் செல்வத்தால் தமிழ்நாட்டு உழைப்பாளர் கலைத்திறத்தால் கட்டப் பெற்றவையாகும். மூவர் முதலிகளும், ஆழ்வார் பெருமக்களும் அருணகிரியார் முதலிய அடியார் பெருமக்களும் பண்ணிசைத்துப் பாடிய தமிழ் இசைப்பாடல்களை வரித்துக்கொண்டு வானோங்கி நிற்பன. ஆயினும் அக் கோயிலுக்குள் தமிழ் ஆட்சி இல்லை, தமிழ் வழிபாடு இல்லை, தன்னை வயிறு வாய்த்து உயிராய், உணர் வாய் ஓம்பி நின்ற நற்றாயை ஒட்டுக் குடியில் இருக்கவும் கூட இடம் தராது ஒதுக்கித்தள்ளி, வெற்றியும் கொண்ட அறக் கேடாக செயல் இது. இதனை உணர்ந்து தமிழ் வழிபாடு நடாத்துற்கு முனைந்து பாடுபடுபவர்களுள் திரு.வ.சு. அவர்களும் ஒருவர்; குறிப்பிடத்தக்க ஒருவர். இது தொடர்பாக அவர்கள் எடுத்துக்கட்டாகச் சில குறிப்புகளைக் காண்போம். 'செந்தமிழ்ச் செல்வியில்' 'செய்திகளும் குறிப்புகளும்' என இதழ்தோறும் அவர்களால் எழுதப் பெறும் குறிப்புகள் இவை.

# இதற்குமா எதிர்ப்பு?

*“12-8-71 மாலை சென்னை தங்கசாலைத் தெருவிலுள்ள ஏகாம்பரேசுவரர் கோயிலில் தமிழக அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள் தலைமையில் திரு முருக கிருபானந்தவாரியார் தமிழில் மலர் வழிபாட்டினைத் துவக்கி வைத்தார். அப்போது பார்ப்பனர் ஒருவர் தலைமையில் ஒருசிலர் கூடித் தமிழில் அர்ச்சனை கூடாது என்ற சொற்றொடர் அடங்கிய அட்டையைப் பிடித்து நின்று மறியல் செய்தார்களாம். அப்படிச் செய்தவர்கள் வேறு யாரும் இல்லை. எங்கு எப்பொழுது தமிழுக்கு ஆக்கம் தேடப்படுகிறதோ அங்கெல்லாம் இந்த நந்திகள் குறுக்கிட்டுப் பேச்சாலும் எழுத்தாலும் பிற குறும்புத்தனங்களாலும் மறைக்கும் பழக்கத்தை மேற்கொண்டவர்கள்தாம். எனவே, இந்த எதிர்ப்பு நமக்குப் புதிதன்று.*

*“முன்னர்த் தமிழிசை இயக்கம் தோன்றிய காலத்திலும், அதற்கு முன்னர் மறைமலையடிகள் காலத்தில் தனித்தமிழ் இயக்கம் தோன்றிய காலத்திலும், ஆங்கிலத்தில் உள்ள ஆட்சிச் சொற்களுக்கும் அறிவியற் சொற்களுக்கும் தூய தமிழ்ச்சொற்களை அமைக்கும் காலத்திலும் அவற்றை எதிர்த்தவர்கள் தாம் இன்று தமிழ் அருச்சனையையும் எதிர்க்கிறார்கள். இறைவனை வழிபடுவதிலும் குறுக்கிடும் இக் கோணல் மதியினரைக் கண்டு இதற்குமா எதிர்ப்பு? என மக்கள் வியந்து பேசுகின்றனர்.”*

எதிர்ப்பு அட்டை பிடித்து மறியல் செய்த அளவுடன் நில்லாமல் நீதிமன்றத்திற்குச் சென்றது ‘தமிழில் மலர் வழிபாடு செய்தல் கூடாது என்றும் கூட்டம்! அதனைப்பற்றி விளக்கி எழுதி, தேவார திருவாசகச் சீர்த்தியால் திகழ்ந்த மடங்கள் திசை கெட்டுப்போகும் நிலையையும், எடுப்பார் கைப்பிள்ளையாய்த் திருமடங்களின் தலைவர்கள் இருக்கும் மடிமையையும் குறித்துக் காட்டுகின்றார் வ.சு.

*“தமிழ்நாட்டில் தமிழ் இசைக்கு எதிர்ப்பு, தமிழ் ஆட்சி மொழிக்கு எதிர்ப்பு, கல்லூரிப்பாடமொழி தமிழ் எனின் எதிர்ப்பு, திரிபுற்ற பிறமொழிகளிலுள்ள ஊர்ப்பெயர்களையும் நிலையப் பெயர்களையும தூய தமிழில் மாற்றினால் எதிர்ப்பு, சென்னை இராச்சியத்தைத் தமிழ்நாடு என மாற்றியபோது எதிர்ப்பு, இல்லச் சடங்குகள் தமிழில் நடைபெற*

வேண்டுமானால் எதிர்ப்பு, தனித்தமிழ் என்றாலே எதிர்ப்பு இங்ஙனமெல்லாம் எதிர்ப்புகள் தோன்றிய போது தமிழ் அருச்சனைக்கு ஏற்பட்டதுபற்றி வியப்புறுதற்கில்லை.''

''சென்னை உயர்நீதி மன்றத்தில் திருவாளர்கள் தேவநாதன் முனிரத்தினம் ஆகியோரால் தமிழக அரசு திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்தல் வேண்டும் என்று பிறப்பித்த ஆணையைத் தள்ளுபடி செய்யுமாறு வேண்டித் தாக்கல் செய்த ரிட் (வழக்கு) விண்ணப்பத்தின் பேரில் யாரெனும் வைணவ மடத் தலைவ (ஜீய) ரோ சைவமடாதிபதியோ ஆணைப்பத்திரம் தாக்கல் செய்தால் மட்டுமே வழக்கு ஆய்வுக்கு எடுக்கப்பெறும் என்று உயர்நீதி மன்ற நடுவர்கட்டளை இட்டனர்.

''இதன்பேரில் திருப் (ஸ்ரீ) பெரும்புதூர்வைணவ மடத் தலைவரான திரு. இராமானுசசீயர், திரு. வானமாமலை வைணவமடத்தலைவர், காஞ்சிபுரம் ஞானப்பிரகாசர் மடத்துத் தலைவர் அருட்டிரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் ஆகிய மூவரும் திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்வது ஆகமநெறிக்கு முற்றிலும் மாறுபட்டது என்றும் சமற்கிருதத்திலுள்ளதைத் தமிழில் மொழி பெயர்த்துச் சொல்வதால் தெய்வத்திருவருள் விளக்கம் கெட்டு விடுமென்றும், ஆகம வழிவந்த அருச்சனை முறையை மாற்றுவதற்கு நமக்கு உரிமை இல்லை என்றும் 2000 ஆண்டுகட்கு மேல் சமற்கிருத நாமாவளிதான் கோயில்களில் கடைப்பிடித்து ஓதப் படுகிறது என்றும், சமற்கிருதத்திலுள்ள 'நமஹ' என்பதன் பொருள் 'போற்றி' என்பதில் இல்லை என்றும் தங்களுடைய ஆணைப் பத்திரங்களில் தெரிவித்தனர்.

இச் செய்திகளை எல்லாம் அறிந்த வ.சு. வின் உள்ளம் துடித்தது. திரு. ஞானப்பிரகாசர் போட்டுவரும் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தத் துணிந்தார்.

''காஞ்சிபுரம் அருட்டிரு ஞானப்பிரகாச அடிகளார் எங்ஙனம் தமிழ் அருச்சனையை எதிர்த்து ஆணைப்பத்திரம் கொடுத்தார்கள் என்பதுதான் வியப்பையும் வருத்தத்தையும் தருகிறது. அடிகளார் தவத்தந்தையார் காமக்கூர் சுந்தர முதலியார் அவர்கள் தமிழ்ப் பெரும் புலவர் ஆவர். அவர்களிடம் முறையாகப் பாடம் கேட்டுப் புலவரானவர்கள் பலருண்டு. அடிகளார் துறவுநிலை மேற்கொள்வதற்கு முன் புலவர்முத்துசு. மாணிக்கவாசக முதலியார் என்னும் பெயரைத்

தாங்கியவராய்ப் பல ஆண்டுகள் பள்ளித் தமிழாசிரியராகவும் புலவர் கல்லூரிப் பேராசிரியராகவும் முதல்வராகவும் தொண்டாற்றியுள்ளார். துறவுபூண்டு ஞானப்பிரகாசர் திருமடத்துத் தலைவரானபின் அவர்களோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவர்கள் சென்னை மறைமலையடிகள் நூல்நிலையத்திலே சிலநாள்கள் தங்கியுள்ளனர். கழக விழாவிலே தலைமை தாங்கிப் பேசியுள்ளனர். தனித்தமிழிலே மிக்க ஆரவமுள்ளவர்கள். அதனால் தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரிடம் மிக்க அன்பும் வைத்திருந்தார்கள்.

"1954 முதல் கழகம் வெளியிட்ட மலர் வழிபாட்டு நூல்களைப் பற்றி என்னிடம் பாராட்டிப் பேசியுள்ளார்கள். கழகம் வெளியிட்டுள்ள பழந்தமிழ் இலக்கண இலக்கியங்கள் அடங்கிய பேழையினைப் பாராட்டித் தமது மடத்துக்கு ஒருபேழை வாங்கியுள்ளனர். இவர்கள் எப்படித் தமிழ் அருச்சனையை எதிர்த்து ஆணைப்பத்திரம் கொடுத்தார்கள் என்பது விளங்கவில்லை.

"இவர்கள் காஞ்சியிலுள்ள சங்கராச்சாரிய சுவாமிகள் திருமடத்திற்கு அழைக்கப்பெற்றே தமிழ் அருச்சனைக்கு மாறான கருத்துகளை எழுதச் செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. தமக்கு மாறுபட்ட கருத்துடைய எவரையும்தம் பக்கம் இழுக்கக் கூடிய சக்தி ஆச்சாரிய சுவாமிகளிடம் இருக்கும் போலும்!

"அடிகளார் தமது ஆணைப்பத்திரத்தில் 'அருச்சனை முடிவில் அந்தந்தக் கோயிலில் உள்ள சுவாமிகளின் திருநாமத்தை 'ஸ்ரீஅபிதகுசாம்பாள் சமேத அருணாசலேஸ்வர ஸ்வாமி நமஹ' என்பது போலத் திருநாமத்தைச் சொல்லி முடிப்பது அறுதிமுடிவு. இதை உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவனே போற்றி என்றால் மேற்குறித்த பற்றறும் பயிற்சிக்கு எள்ளளவேனும் இடமுண்டா?' என்று எழுதியிருப்பது அடிகளார் கைவழி வந்திருக்குமா என்ற பெரியதோர் ஐயத்தை விளைவிக்கின்றது.

தேவார ஆசிரியர்களில் நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர் உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன் என்றும், அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே என்றும் பாடியுள்ளார். திருநாவுக்கரசனாரும், அண்ணாமலை யுளானே நீதியால் நின்னையல்லால்நினையுமா நினைவிலேனே' என்றும், 'அண்ணாமலை கைதொழ ஓடிப்போம் நமதுள்ள வினைகளே' என்றும் பாடியுள்ளனர். தேவார காலத்தில்

வழங்கப்பெற்ற 'அண்ணாமலை என்ற தூய தமிழ்ப் பெயராகிய திருக்கோயில் பெயர் அருணாசலம்என்றும், உண்ணாமுலை என்ற இறைவியின் தூய தமிழ்ப் பெயர் அபிதகுசாம்பாள் என்றும் மாற்றப்பெற்ற பிற்காலத்திலேதான் சமஸ்கிருத நாமாவளி நம் திருக்கோயில்களில் புகுத்தப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது வெள்ளிடைமலை!

தமிழ்வழிபாட்டை நீதிமன்றத்திலே நிறுத்தித் தமிழ் நெஞ்சக் கொலைக்கு ஆளடிமைப்பட்டுக் கிடந்தவரைத் தமிழ்மக்கள் முன்னிலையில் நிறுத்தி வழக்குத் தொடுத்துள்ளார் திரு.வ.சு. மரபும் மாண்பும் எடுத்துரைத்து, மறைமலை யடிகளார்தொடர்பை உரைத்து, தம் கெழுதகை உறவை உரைத்து, அண்ணாமலையார் ஆணையை உரைத்து 'நீவிர்' செய்தது முறைதானா? என வினாவுகின்றார்.

"அண்ணாமலையாரிடத்திருந்து கழுவாய் பெற வேண்டுமானால் தாம் செய்த தவற்றை உணர்ந்து ஞானப் பிரகாச அடிகளாரே பிறர்க்கெல்லாம் வழிகாட்டியாகித் தமிழ் வழிபாட்டு இயக்கத்தைத்தாமே முன்னின்று வளர்த்தல் வேண்டும். தடைபடுத்த நினைக்கும்அவர் ஒதுங்கி நின்றேனும் உய்வாரா?" என்பது வ.சு. அவர்களின் உட்கிடையாக இருந்தது.

திரு. வ.சு. ஆழமாக எண்ணுவார். எண்ணியதைத் திண்ணமாக உரைப்பார். உரைத்ததை உரைத்தவாறு செய்தற்கு முனைவார், முடிப்பார்; சொல்வேறு செயல்வேறாம்இருநிலை அவர்பால் இருப்பது இல்லை!

தமிழில் மலர்வழிபாட்டுக்காக, பிள்ளையார், முருகப் பெருமான், சிவபெருமான், உமையம்மை, அம்பலவாணர், திருமகள், கலைமகள் ஆகிய தெய்வங்களுக்கு வழிபாட்டு நூல்களும் நோய்நீக்கும் பொருட்டு மூவர் திருவாய் மலர்ந்தருளிய உள்ளம் உருக்கும் பதிகங்களைத் தொகுத்து வேண்டுகோள் பதிகங்கள் என்னும் தலைப்பில் ஐந்து நூல்களும் வெளியிட்டுள்ளார்கள்.

தமிழக அரசு திருக்கோயில்களில் தமிழால் மலர்வழிபாடு செய்தல் வேண்டும் என்னும் சட்டம் வகுத்தற்கு உவந்து பாராட்டும் வ.சு. அதனை நிறைவேற்றுதற்குரியசில வழிமுறைகளை உரைக்கிறார்.

(1) ஒரேவகையான மலர்வழிபாட்டு நூலையே பயன்படுத்துமாறு செய்தல்.

(2) கோயில் குருக்கள்மார் தங்களைத் தமிழரென உணருமாறு செய்தல்.

(3) தமிழ்க்குருக்கள் புரியக்கூடிய தமிழ் மொழியில் அருச்சனை செய்தால் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்பதை மெய்ப்பித்துக் காட்டுதல்.

(4) கழகம் வெளியிட்டிருக்கிற போற்றித்தாள்களைத் திருக்கோயில்களில் கண்ணாடிச் சட்டம் போட்டு மாட்டச் செய்தல்.

(5) நன்றாக அர்ச்சனை செய்துவரும் குருக்கள் மார்கட்குப் பரிசு அளித்தல்.

(6) மலர்வழிபாட்டுப் போற்றித் தொடர்கட்கு எல்லோரும் எளிதாக ஓதக் கூடியபடி இனிய இசையமைத்து இசைத்தட்டிற ப்திவு செய்து 'சுப்ரபாதம்' போல் பரப்புதல்.

இத்திட்டங்களை வகுத்துக்காட்டியதுடன் தாமே முன்னின்று இவ்வழிகளிலெல்லாம் செயலாற்றினார் திரு.வ.சு. மலர்வழிபாட்டு நூல்களுள் ஒன்றாகிய 'பிள்ளையார் வழிபாட்டு நூல்' திருமதி சீதாமணி சீனிவாசன் அவர்கள் பாட இந்திய இசைத்தட்டு நிறுவனத்தார் வழியாக இசைத்ததட்டில் பதிவு செய்யப்பெற்றுள்ளது. இவ்வாறே பிற மலர்வழிபாட்டு நூல்களையும் முயன்று இசைத் தட்டில் கொணர்ந்தனர் திரு.வ.சு. முருகன் வழிபாட்டு நூல் திரு. சீர்காழி கோவிந்தராசன் அவர்களாலும் அம்மை வழிபாட்டு நூல் சேலம் திருமதி செயலக்குமி அவர்களாலும் பாடப் பெற்று இசைத்தட்டாக வெளிவந்துள.

அரசு பின்னே செய்தற்கு ஏற்கும் திட்டங்கள் பலவற்றை முன்னோடியாகச் செய்து காட்டிவருபவர் திரு.வ.சு. 'ஆட்சியாளர்' என்னும் பொறுப்பில் உள்ள பெயர்த்தொடர்பு, இத்தகைய செயல் தொடர்புக்குச் சான்று போலும்!

"வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்"

என்பதற்கு ஏற்ப இவர்தரும் செந்தமிழ்க்காவற் செயல்களால் அரசு மதித்துப் பாராட்டும் பல்வேறு பெருமைகளைப் பெற்றமை மேலே காணலாம்.

இவர்தம் தனித்தமிழ்க் கடைப்பிடி, கலைச் சொல்லாக்கப் பணி, ஆட்சிச் சொல் ஆக்கப்பணி, அறிவியல் நூல்கள் வெளியீடு, இலக்கியமா நாடுகளும் புலவர் மாநாடுகளும் நடத்துதல், தமிழிசைக் காதல் ஆகியனவெல்லாம் இவர்தம் செந்தமிழ்க்காவல் திறத்தை வெளிப்படுத்துவன. இவையெல்லாம் வெவ்வேறு பகுதிகளில் கூறப்பெற்றனவும், கூறப்பெறுவனவுமாம்.

"இந்தியக் கூட்டரசின் ஒரே மொழியாக இந்தி ஆட்சி செலுத்தப்போகின்றது என்பதனை அறிந்தவுடன், செந்தமிழ் மொழியின் சீர் உரிமை காத்திட, போர் எனப்புகலும் புனைகழல்மறவராய்ப் போர்ப்படை அமைத்துப் புறப்பட்ட தானைத்தலைவர் தண்டமிழ்க் காப்பாளராம் சுப்பையா அல்லரோ" என்று சி. இலக்குவனார் இயம்புவது எண்ணத் தக்கது.

# 22. வாரிபெருக்கி வளப்படுத்தல்

*(குழந்தை வளர்ந்து குலம் விளக்கும் பெருமையதாகின்றது. அக் குழந்தை பிறந்து, குடியும் குலமும் உலகும் நலம் எய்துதலும் கண்கூடே! குழந்தை வாழ்வினும் ஓர் அமைப்பின் வாழ்வு சீரிதாம்! ஏனெனில் அக் குழந்தை வாழ்வுக்கு எல்லையுண்டு. அமைப்பின் வாழ்வு வழிவழியாகச் சிறந்தோங்கும். வழிவழியாக வரும் நல்லோர் அரவணைப்பெல்லாம் கொள்ளும் பெற்றியது ஒரு நல்ல அமைப்பு.)*

*"பொருள் வரும் வழிகளை மிகுதிப்படுத்தி, அப் பொருள் வளத்தை மேம்படுத்தி நிகழ்ந்துள்ள செயல்களின் இயல்புகளை ஆராய்பவன் வினைகளைச் செய்வானாக" என்றார் திருவள்ளுவர். அத்தகைய வினைத்திறம் வாய்ந்தார் விரல் விட்டு எண்ணத்தக்க சுருங்கிய அளவினர். அத்தகையருள் ஒருவர் கழக ஆட்சியாளர் வ.சு. அவர்கள்.*

*கூட்டுப்பங்கு நிறுவனமாகிய கழகத்தையே கொண்டாடும் குழந்தையாக ஊட்டிவளர்த்துக்,குலதெய்வமாகப் போற்றிப் பொன் கொழிக்கும் வயலாக வளப்படுத்தி அவ் வளத்தால் இனம் மொழி நாடு உய்க்கும் செயல் வளர் செம்மல்வ.சு. அவர்களே!*

*பங்கு ஒன்றுக்குப் பத்து ரூபா விழுக்காடு 5000 பங்குகள் திரட்டுதற்குத் திட்டமிட்டது கழகம். அதன்படி கழக நிறுவனர் அரங்கனார் தாமே தனித்து நின்று 2003 பங்குகள் திரட்டினார். கழகத்தின் மற்றோர் அமைச்சர் மா. திரவியம்பிள்ளை அவர்களுடன் சேர்ந்து 1120 பங்குகள் திரட்டினார். திரவியம் பிள்ளை தாமாக 124 பங்கும், அவர் மகனார் மாணிக்கவாசகம் பிள்ளை 12 பங்கும் திரட்டினார். இப் பங்குகளைத் திரட்டுதற்கே ஆறாண்கஙள செஙனறன. எஞ்சிய 1741 பங்குகளைத் திரட்டுதற்கு 19 ஆண்டுகள் வேண்டியிருந்தன. அவற்றைத்திரட்டி முழுமைப்படுத்தியவர்கள் அரங்கர் அவர்களும். வ.சு. அவர்களுமே.*

*எத்தகைய பொருட் சிக்கலில்கழகத்தொடக்கநிலை இருந்தது என்பதைக் குறித்தற்கே அதன் பங்குத் தொகுப்புகளைக் குறிக்க நேர்ந்ததாம். அத் தொகுப்பில் அரங்கர்க்குள்ள அயரா முயற்சியைக் கோடிட்டுக் காட்டுதற்குமாம். இக் கூட்டுப்பங்கு நிறுவனத்தின் அமைப்புநிதித் தீர்மானம் வருமாறு :*

*"இக் கழகத்தின் மூலதனம் ஒரு நூறாயிர (ரூ 1,00,000) மும்பங்கு 1க்கு ரூ 10 விழுக்காடு பதினாயிரம் (10,000) பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. மூலதனத்தை அதிகப்படுத்துவதற் காகப் பங்குகளை அதிகப்படுத்த இக் கழகத்தாருக்கு அதிகாரமுண்டு."*

## இது 14-3-52 இல் கழகம் தன் பங்காளிகள் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானம் :

*இக் கழகத்தின் மூலதனம் ஒரு நூறாயிர (ரூ.1,00,000) மும்பங்கு 1க்கு ரூ 10 விழுக்காடு பதினாயிரம் (10,000) பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. மூலதனத்தை அதிகப்படுத்துவதற் காகப் பங்குகளை அதிகப்படுத்த இக் கழகத்தாருக்கு அதிகாரமுண்டு.*

## 15-2-1963 இல் பங்காளிகள் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானம்

*இக் கழகத்தின் மூலதனம் இரண்டு நூறாயிர (ரூ. 2,00,000)மும் பங்கு 1க்கு ரூ 10 விழுக்காடு இருபதினாயிரம் (20,000) பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. மூலதனத்தை அதிகப்படுத்துவதற்காகப் பங்குகளை அதிகப்படுத்த இக்கழகத்தாருக்கு அதிகாரமுண்டு",*

*இத்தீர்மானங்கள் என்ன சொல்கின்றன? கழகம் தொடங்கி 31 ஆண்டுகள் ஆகும்போது அதன் மூலதனம் இருமடங்காகிறது. அதற்குப்பின் 11 ஆண்டுகளில் அது மேலும் இரு மடங்காக அல்லது முதல் தொகைக்கு நான்கு மடங்காக வளர்கிறது என்பதே. இவ் வளர்ச்சி நோக்கொடு பார்க்கும் போதுதான் அதற்கெனப் பாடுபட்ட அயரா உழைப்பாளர் அருமை புலப்படும் என்க.*

இனி, இவ் வளர்ச்சிப் பங்குகள்தாமும் புதிதாகத் திரட்டப்பெற்றவையோ எனின் இல்லை என்பதே வியப்புக்குரிய செய்தி. அமைப்பு விதிகளின்படி பங்காளிகளுக்கு அவர்கள் போட்ட பணத்திற்கு நூற்றுக்கு ஆறு விழுக்காடு ஊதியம் ஆண்டுதோறும் வழங்கியபின் காப்பு நிதியில் இருந்த தொகையில் இருந்து விருப்ப ஊதியப் பங்குகளாக வழங்கப்பெற்றனவே இவை ஆகும். ஆதலால் ஒப்பந்த ஊதியத்தொகை வழங்கியதுபோக, ஒருபங்கு எடுத்தார்க்கும், நான்கு பங்கு முதலாக்கி வைத்த பொது அமைப்பு இப்புகழ் அமைப்பு என்பதை நினைவு கூர்வோர் பாராட்டாமல் இருக்க இயலாது. இவ் வகையில் கூட்டாக இயங்கும் பொது அமைப்பு களுக்குச் சீரிய எடுத்துக்காட்டாகத் திகழ்வது இக் கழக அமைப்பு எனின் அப் பாராட்டுக்குரியவர் தாமரைச்செல்வர் என்பது சொல்லாமலே விளங்கும்.

ஒரு நூல் வெளியீட்டுக் கழகத்திற்குத் தகுதிவாய்ந்த நூலாசிரியர்களும், விற்பனை நிலையங்களும், சிறந்த நூல் வாங்கிகளும், எத்துணை இன்றியமையாதவையோ, அத்துணை இன்றியமையாதது அச்சக வாய்ப்பு. ஆதலால் தனக்கென ஓர் அச்சகம் அமைத்துக்கொள்ள விரும்பியது கழகம். அவ் விருப்பம் அதன் வளர்ச்சிப்படிகளில்குறிப்பிடத்தக்க ஒன்று என்பது வெளிப்படை. "அச்சுத்தொழிலோ, நச்சுத்தொழிலோ?" என்பதொரு பழமொழி, பட்டறிவு மிக்கோரால் சொல்லப் பட்டனவே பெரும்பான்மையான பழிமொழிகள் என்பதை உணர்வோர் அத் தொழிலைச் செவ்விதாய் நிறுவி இயக்கி வெற்றி கொள்ளும் அருமையை நன்றாக விளங்கிக் கொள்வர். கழக அச்சகத் தொடக்கப்பாடிலேயே இவ் உண்மை விளங்குகிறது.

சென்னை 'டேவிட்சன்' தெருவில் 'சனசக்தி' அச்சகம் நடந்து வந்தது. அவ்வச்சகம் அரசின் ஆணையால் வேலை நடை பெறாமல் நின்று போனது. அதனை அச்சுத்துறையில் அருந்திறம் பெற்றவரும் கழக நூல்களைச் சிறந்தவகையில் அச்சிட்டுப் புகழீட்டித்தந்தவரும் ஆகிய சிறுமணவூர் மு. கேவிந்தராச முதலியார் அவர்களைக்கொண்டு சனசக்தி அச்சகத்தை விலைக்கு வாங்கும் முயற்சி மேற்கொள்ளப் பெற்றது. அவ்வாறே, பன்னீராயிர ரூபா என மதிப்பிடப்பெற்று அதுவிலைக்கு வாங்கி முடிக்கப்பெற்றது.

*திறப்பு விழா 4-10-48 இல் நிகழ்ந்தது. திறப்பு விழாத் தலைவராக அந்நாள் தமிழ்நாட்டு முதலமைச்சர்உயர்திரு. ஓமந்தூர் இராமசாமி இரெட்டியார் அவர்கள் அமர்ந்தனர். கழக ஆட்சியாளரும் இந்நூல் நாயகரும் ஆகிய வ.சு. அவர்கள் வரவேற்புரையும் நன்றியுரையும் வழங்கினர்.*

*“நூல்கள் பலவாகப்பெருகப் பெருக அச்சகத்தின் இன்றியமையாமை தோன்றிவந்தது. எனினும் அப்போதுள்ள பணநிலையால்அச்சகம் வாங்க வாய்ப்பு இல்லை. புத்தகங்கள் அச்சிடவே பணம் போதாததாக இருந்தது.*

*“1945 ஆம் ஆண்டு ஒருவகையாக அச்சகம் வாங்கும் பொருள் நிலை வாய்த்தது. அதுமுதல் முயன்றும் 1948 இல் தான் திருவருள் கூட்டிவைக்கும் வாய்ப்புக் கிடைத்தது.*

*“இப் புது அச்சகத்துக்குப் பெயர் சூட்டுவது என எண்ணிய பொழுது என் நண்பர் கோவிந்தராச முதலியார் உள்ளத்தில் தோன்றியது ‘அப்பர் பெருமான்’ திருப்பெயராகும். அது போலவே என் உள்ளத்திலும் தோன்றியது. ஆகவே அப்பெயரே திருவுள்ளச்சம்மதம் எனக்கருதிச் சூட்டலானோம்.*

*“அப்பர் அச்சகத்தைத் திறந்து வைப்பதற்குத் தக்கார் ஒருவர் வேண்டுமென எண்ணியபொழுது உள்ளத்தில் தோன்றியவர்கள் இப்பொழுது இங்கு அருளொடும் வீற்றிருக்கும் நம் பெரியார் முதலமைச்சர் ஒருவரே யாவர். இவர்கள், அப்பர் பெருமான் போன்று தெய்வநாட்டமும், மக்கட்குத் தொண்டு இயற்றுவதே கடவுள் தொண்டாகக் கருதும் மாண்பும், காலத்தாலும் சீலத்தாலும் கோலத்தாலும் பெரும்பாலும் ஒத்திருத்தலும் அடக்கம், பொறுமை அஞ்சாமை, துணிவு, தக்கவாறு முறை செய்தல், வாய்மை தூய்மை முதலிய பல நலன்களும் பொருந்தியிருத்தலும் உள்ளவர்களாகக் காட்சியளித்தனர். இவர்களை அண்மி உள்ளக்கிடக் கையைப் பிள்ளைகள் பெற்றோர்மாட்டுக் கூறுவதுபான்று கூறினேன். அவர்களும் உடனே இணக்கம்தந்தருளினர் என்று வரவேற்றார் திரு.வ.சு.*

*“அச்சகத்திற்கு அப்பர் பெருமான் திருப்பெயர் அமைந்தது சாலப் பொருத்தமுடையது. அப்பர் பெருமான் இருவகைத் தொண்டும் ஒருங்கு செய்தருளினர். அன்னார் திருப்பெயர் தாங்கும் இவ்வச்சகமும் கைத்தொண்டு ஒத்துக் கருவியால் அச்சியற்றலும், வாய்த்தொண்டு ஒத்து நூலாக்கிப்*

பலர்க்குப் பயனளித்தலும் இடையறாது செய்து தமிழகமும், உலகமும் வாழத் தனிப்பெருந் தொண்டியற்றும்''.

"அப்பர் பெருமான் உறுதி போன்றதே திருவாளர் வ.சுப்பையா பிள்ளை அவர்கள் உறுதியும். எத்துணை இடுக்கண் உறினும் தொண்டினை - நூல்வெளியீட்டைச் செம்மையுறச் செய்து யாவர்க்கும் பயனுற நல்குவர்'' என்று தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளை எம்.ஏ., அவர்கள் வாழ்த்துரைத்தார்.

முதலமைச்சர் ஓமந்தூரார் அச்சகத்தைத் திறந்து வைத்து வாழ்த்துரைத்தார்.

"எனக்குப் பதினெட்டு ஆண்டுகளாக இவர்களைத் தெரியும். இவர்கள் புத்தகங்களே நான் வாங்கிப்படிப்பது. ஏன்? பிழையின்றியும் அழகாகவும் தெளிவாகவும் இருப்பதினாலே யாம்.''

"நம் முன்னோர்கள் நமக்கு அழியாக் கருவூலங்களாக உணர்வு விளக்காகத் தந்த சுவடிகளை நாம் பொன்னினும் மணியினும் புகழ்மிக்க உயிரினும் போற்றிவரல் வேண்டும்.''

"எனக்குத் தெரிந்தவரை திரு. ஆறுமுகநாவலர் அவர்களே முதன் முதல் செந்தமிழ்ச்சீரிய நூல்களைப் பிழையின்றி அழகுறப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள். அதன்பின் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் அத் தொண்டினைச் செவ்வனே செய்து வருகின்றார்கள். அம்மட்டுமின்றிப் புதிய முறைகளையும் கையாண்டு பல்வேறு சிறப்புக் கட்டம் அமைந்த பதிப்புக்களும் வெளியிட்டு வருகின்றார்கள். படிப்பு புத்தகம், படம், கேள்வி என்னும் என்றாலும் பரவவேண்டும், அம் மூன்றினையும் இக் கழகத்தார் செவ்வனே செய்து வருகின்றார்கள்.

"இருபத்தெட்டு ஆண்டுகளாகப் பல அச்சுக் கூடங்களில் பதிப்பித்துத் தனக்கென உரிய அச்சகம் இல்லாதிருந்த பெருங்குறை இன்று நீங்குகிறது. அச்சகத்துக்கு வழங்கும் திருப்பெயர் அப்பர் பெருமான் திருப்பெயராகும். அவர் நாமார்க்கும் குடியல்லோம் என்று உரங்கொண்டு மொழிந்து வெளிப்பட்டெழுந்து வெற்றியுடன் திகழ்ந்த தமிழ் நாட்டு முதல் சத்தியாக்கிரகி (அறப் போராளி) மக்களைக் கடவுள் தன்மைக்குக் கொண்டுபோவதே பெரியோர் குறிக்கோள். அவ் வுண்மை காட்டவே இப் பெயர் இங்கு அமைத்தனர் போலும்'' என்று நலஞ்சிறக்க வாழ்த்தினார் முதல்வர்.

அப்பர் அச்சகத்திறப்பு அருமையாய் முடிந்தது. ஆனால் அடுத்து வந்தது என்ன?

அச்சகம் இருந்த இடம், தாள் வணிகர் 'அசலணிமக்கள்' என்னும் நிறுவனத்தார்க்கு உரிமையானது. அவர்கள் நீதிமன்றத்தின் வழியே முயன்று அந்தக் கட்டடத்தைத் தம்மிடம் ஒப்பிக்கும்படி கட்டளை பெற்றிருந்தனர். ஆனால் உடனே நெருக்கடி மிக்க சென்னையிலே இடம் வாய்க்க வேண்டுமே! இலைபோட்டு அமர்ந்த பின்னே உண்ணாமல் எழுந்து செல்ல வேண்டிய நிலைபோல ஆயிற்று.

கழக ஆட்சியாளர்க்குத் தொடர்பு உடையவரே அத் தாள் நிறுவனத்தார். கழகத்துக்கு வேண்டும் தாள்கள் அவர்கள் நிறுவனத்திலே வாங்குவது உண்டு. ஆதலின் அவ் வுரிமை காட்டி வ.சு. அவர்கள் முயன்றார்கள். ஆனால், அவ் வுரிமையாளர் தமக்கே அக் கட்டம் கட்டாயமாக வேண்டும் என்று கூறி மறுத்துவிட்டார். அச்சகத்திற்குக் கட்டாயமாக இடம் வேண்டிய இக்கட்டில் ஒற்றியூர்வரை இடம் பார்த்தும் ஆயிற்று. ஓரிடமும் வாய்க்கப் பெறவில்லை. இதற்குள் கட்டட உரிமையாளர் இடத்தைக் காலிசெய்து தம்மிடம் ஒப்படைப்பதற்கு நீதிமன்றத்தின் வழியே அறிக்கையும் விடுத்தார்.

அந் நாளில் நீதிமன்ற நடுவராக இருந்தவர் திரு.வி. சுப்பிரமணியாநாடார் என்பார். அவர் கழகப் பணிகளையும் திரு. வ.சு. அவர்கள் தொண்டுகளையும் நன்கு அறிந்தவர்கள். ஆகலின் நல்ல பணிக்குக் குறுக்கீடு உண்டாகிறதே என்று வருத்தியவராய்க் காலிசெய்து ஒப்படைத்தற்குரிய காலத்தை நீட்டித்துக் கொடுத்து வந்தார். அந் நிலையில் கோடை விடுமுறை வந்தது. விடுமுறைக் கால நடுவரிடம் அவ்வழக்கு வரவே 'அச்சகத்திக் கட்டாயமாக உடனே எடுத்துச் செல்லாவிடில் அபபுறப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும்' என ஆணை பிறப்பிக்கப்பெற்றது. அவரிடம் கழக வழக்கறிஞரைக் கொண்டு நிலைமையை எடுத்துக்கூறிக் கோடை விடுமுறைக்குப் பின்னர்அறிக்கை கொடுக்குமாறு கட்டளை பெறப்பெற்றது. கோடை விடுமுறைக்குப்பின்னர் அவ் வழக்கு திரு.வி. சுப்பிரமணியநாடார் அவர்களிடமே வந்தது. அப்பொழுது திருவருளால் ஒரு திருப்பம் வாய்த்தது.

பிரகாசம் சாலையில் (பிராட்வேயில்) ஆனந்தவிகடன் நிறுவனத்தார் தம் அலுவலகத்தை வைத்திருந்தனர். அவர்கள்

தங்கள் அலுவலகத்தை மலைச்சாலையில் அண்ணா சிலைக்குத் தென்பாலுள்ள இந்து செய்தித்தாள் நிறுவனத்திற்கு உரிய கட்டடத்திற்குக் கொண்டு சென்றனர். ஆனந்தவிகடம் இருந்த கட்டடத்தை அப்பர் அச்சகத்திற்குப் பெறும் முயற்சியை மேற்கொண்டார் வ.சு.

பிரகாசம் சாலையில் உள்ள கட்டடம் 'சோன்சு' தெருவிலுள்ள ஒரு பள்ளிவாசலுக்கு உரிமையானது. எனினும் கட்டடங்களின் மேலாண்மைப் பொறுப்பு உயர்நீதிமன்ற ஆட்சியின் கீழுள்ள அறநிலையப் பொறுப்பு அலுவலடம் (Official Trustee) இருந்தது. அந்நாளில் இரண்டாம் உலகப் போர் முடிந்தும் அதன் நெருக்கடி நீங்கா நிலைமை இருந்தது. அரசு அலுவலகங்களுகேகேநிரம்பக் கட்டடங்கள் வேண்டியிருந்தன. ஆகலின் அரசின் இசைவு இன்றி எக் கட்டடத்தையும் எவரும் எவருக்கும் வாடகைக்குக் கொடுக்க இயலாது. எக் கட்டடத்தையும் அரசு தனக்கெனக் குறிப்பிட்ட வாடகைக்கு எடுத்துக்கொள்ள உரிமை உடையதாக இருந்தது. அதற்கென வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டமும் கொண்டு வரப்பெற்று நீதிமன்றங்களும் அமைக்கப்பெற்றிருந்தன.

பின்னர், முதல்வர் ஓமந்தூரர் பதவி விலகித் திரு. குமாரசாமிராசா அவர்கள் முதல்வராக இருந்தார். அவரும் கழகத்தை நன்கறிந்தவர். அதன் தமிழ்ப்பணியைப் போற்றுபவர். வ.சு. அவர்களின் பெருந்தொண்டை மதிப்பவர். ஆகலின், அரசு அக் கட்டடத்தைத் தனக்கு எடுத்துக் கொள்ளாமல் கழகத் திற்குத் தர இசைந்தது. அவ்விசைவாணையைக் கொண்ட வ.சு. அவர்கள் அக் கட்டடத்தைப் பொறுதற்கு முயன்றார்.

அக் கட்டட அலுவல் பொறுப்பாளராக இருந்தவர் திரு. வேங்கடராமநாயுடு என்பார். அவர், பள்ளிவாசல் உறுப்பினர்கள் கழகத்திற்கு இக் கட்டடத்தைத் தருதற்கு இசையவில்லை என்று மறுத்தார். 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத கதை' யாகி விடுமோ என்னும் நிலையில் அந்நாள் உள்ளாட்சித்துறை அமைச்சர் டாக்டர் சுப்ராயன் அவர்கள் உதவி வாய்த்தது.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் கழக நற்பணிக்கு இக் கட்டடம் இருக்க வேண்டுவதே என்பதை உணர்ந்து அந்நாள் மாநில உள்ளாட்சித் தலைமைச் செயலாளர் திரு. புல்லாரெட்டி அவர்களுக்குப் பரிந்துரைத்தார். திரு. புல்லாரெட்டியும் திரு. வேங்கடராமநாயுடுவும் உடன்

பயின்றவர்களாதலோடு பணி ஒன்றிப்பும் உடையவர்கள். ஆகலின் அப் பரிந்துரை நற்பயன் அளிப்பதாயிற்று. இவ் வகையில் திரு. குமாரசாமிராசா அவர்களும், டாக்டர் சுப்பராயன் அவர்களும் கழகத்திற்குச் செய்தஉதவி காலத்தாற் செய்த பெருமைக்குரியதாகும். இதனால், ஆனந்த விகடன் நிறுவனத்தார் தந்த வாடகைத் தொகை ரூ. 345. ஐயே கழகம் தருமாறு ஒப்பந்தம் உண்டாகியது. இப்பொழுது உள்ள அச்சகப் பகுதியும், விற்பனை நிலையப் பகுதியுமாக இருக்கும் கட்டங்களே அவை என்பதை நினைக்கும்போது வியப்பு மேலிடல் உண்மை. இக் கட்டங்கள் ‘பெரியாரைத் துணைக்கோடல்’ என்பதன் பெற்றியை நன்கு விளக்கிக் கொண்டிருப்பவை எனல் தகும்.

நூல் வெளியீடு பெருகப் பெருக அச்சகப்பணியும் பெருக்க முறல் இயல்பே. ஆகலின் அப்பர்அச்சகத்தில் மட்டும் கழக நூல் வெளியீடு அமைவதாக இல்லை. இராயபுரம் அரத்தூள் சாலையில் அச்சகமும், அச்சிட்ட படிவங்களின் வைப்பகமும் அமைத்துக்கொள்ள வாய்த்தது. அவ்வச்சகம் கழக முன்னவர் திருவரங்கர் பெயர் தாங்கிப் பணியாற்றி வருகின்றது.

கழகம் தோன்றிய நாள்முதல்பதின்மூன்று நாள்களுக்கு ஒரு நூல் விழுக்காடு இதுவரை (1980) வெளிவந்துள்ளது. இப் பொழுது அதன் வெளியீட்டு வரிசை 1700 ஐத் தாண்டி நடையிடுகின்றது. அதன் 1008 வது வெளியீடு 21-8-1961 இல் பெருவிழாவாகக் கொண்டாடப்பெற்றது. ஆயிரத்து எட்டாவது வெளியீட்டு விழா மலர்ஒன்றும் மலர்ந்தது. முதல்ஆயிரத்து எட்டு நூல்களின் பாராட்டு விழா நூற்பட்டி ஒன்றும் அவ் விழாப்போழ்திலேயே தொகுத்து 1009 ஆம் வெளியீடாகவும் வெளியிடப் பெற்றது. 1008 ஆவது வெளியீடு ‘பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு’ ஆகும்.

1008 ஆவது நூல் வெளியீட்டு விழா சென்னை இராசாசி மண்டபத்தில் நிகழ்ந்தது. தமிழக ஆளுநர் மேற்கு விட்ணுராம் மேதி விழாத் தலைமையேற்றிருந்தார். ஆங்கிலத்தமிழ் அகராதி ஆசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. வி. சுப்பிரமணியம், இந்து அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திரு. மீ. பக்தவத்சலம், உயர் நீதிமன்ற நடுவர் திரு. கணபதியாபிள்ளை ஆகியோர் விழாவில் பங்கு கொண்டனர்.

திரு. வ.சு. அவர்கள் "என் அரிய நண்பர் ஒருவர் அருச்சனைக்குரிய எண் 1008 ஆக இருப்பதாலும், கழகம் சைவ சித்தாந்தக் கழகமாகப் பெயர்பெற்று இருப்பதாலும் அம்முறையில் கழகத்தின் ஆயிரத்து எட்டாவது நூல் வெளியீட்டினை ஒரு பெரு விழாவாகக் கொண்டாடுவது பொருத்தமாகும் என்று கருத்துரைத்தார். அது மிகவும் போற்றுதற்குரியதாக இருந்தமையால் அவ்வாறு செய்வதென எண்ணினேன்" என்று விழாக்கொண்ட நேரத்தில் வெளியிட்டுரைத்தனர்.

கழக நூல் வெளியீட்டு வளர்ச்சி குறித்து அவ் விழாவில் வரவேற்புரையாற்றிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் குறிப்பிட்ட கருத்துகள் கருதத்தக்கன.

"தொடக்கத்தில் கழகமானது பெரும்பாலும் சமயச்சார்புடைய நூல்களையே வெளியிட்டுக் கொண்டிருந்தது. நாளடைவில் இலக்கிய நூல்களின் எண் மிகுந்தது. சங்ககால இலக்கியங்களைப் பற்றிய அறிவு மக்களிடம் பரவுதற்கு முதல்நூல்களை மட்டும் வெளியிட்டால் போதாது. முதல்நூல்களைத் தாமாகவே படித்துப் பொருள் தெரிந்துகொள்ளக்கூடிய அளவு தமிழறிவு படைத்த மக்கள் நம் நாட்டில்மிகச் சிலரே உளர். நம்முடைய பள்ளிகளில் தமிழ் இலக்கியங்களை இப்பொழுது சில நாட்களுக்கு முன்வரை மிகுதியாகக் கற்பிக்காததாலும், தமிழ் இலக்கியங்களைத் தெரிந்து கொள்ளக்கூடிய அளவு தமிழறிவு உள்ள மக்கள் பெரும்பாலும் நாட்டில் இல்லாமையாலும் தமிழ் இலக்கியங்களைப் பற்றிய அறிவு தமிழ்மக்களிடையே வளர்வதற்காகச் சிந்தாமணி வசனம், பெரியபுராண வசனம், திருவிளையாடல் வசனம் முதலிய வசன நூல்கள்இக் கழகத்தால் வெளியிடப்பெற்றன. சிலப்பதிகாரச் சுருக்கம், சிந்தாமணிச் சுருக்கம், பெருங்கதைச் சுருக்கம் முதலிய நூல்களை விளக்கக் குறிப்புரையுடன் கழகம் வெளியிட்டது. சங்க கால நூல்களுக்கும் பிற்கால நூல்களுக்கும் தகுந்த புலவர்களைக் கொண்டு உரை இயற்றுவித்து அந்நூல்கள் வெளியிடப்பெற்றன.

"சங்க நூல்களை ஆய்ந்து அவைகளினின்றும் விளங்கும் பொருள்களைக் கொண்டு ஆய்வு நூல்கள் வெளிப்பட்டன. திருக்குறள் முதலிய நூல்களின் பெருமைகளை விளக்ககூடிய ஆராய்ச்சி நூல்கள் பல வெளியிடப்பெற்றிருக்கின்றன. இப்பணிகள் எல்லாம் செவ்வையாக நிறைவேறுதற்காக இக்

*கழகம் தொடக்கத்தில் இருந்தே தமிழில் புலமைகொண்ட தமிழ்மக்கள் அனைவருடனும் நெருங்கிய தொடர்புகொண்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுத்து அவர்களால் கிடைக்ககூடிய பயன்களைப் பெற்றுத் தமிழ் உலகுக்கு வழங்கியிருக்கின்றது"*

*பள்ளி மாமணவர்களுக்குச் செந்தமிழ் உணர்ச்சியைச் சிறப்பாக ஊட்டும் முறையில் கழகம் பல தமிழ்ப்பாட நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறது. கல்வித்துறையில் பதவி வகித்திருந்த அறிஞர்கள் பலர்இப் பணியில் கழகத்துககு மிகவும் ஊக்கமும, உதவியும் தந்திருக்கிறார்கள். இவ்வாறே மொழிபெயர்ப்பு முதலிய வகை நூல்களின் வெளியீடு குறித்தும் விளக்குகிறார். ஆனால் அதற்குப்பின்னே அறிவியல் துறை, பொருளியல் துறை, பொறியியல் துறை, ஆட்சிமொழித்துறை, கலைச்சொல்லாக்கத் துறை, சட்டத்துறை, மருத்துவத்துறை, இன்னவாறாகப் பல துறைகளிலும் செய்துவரும் தொண்டுகள் முன்னரே காணப்பெற்றனவாம். (துறைதோறும் தொண்டு காண்க')*

*கழக நூல்கள் கொள்கை அடிப்படையில் வெளியிடப்பெறுபவை நாட்டுக்கும் மொழிக்கும் நலம் பயப்பவை அன்றிப் பிறவற்றை வெளியிட ஏறிட்டுப் பார்த்தலும் இல்லாத ஏற்றம் உடையவர் ஆட்சியாளர் வ.சு. புற்றீசல் பேலப் புல புல எனக் "கிளர்ந்து" நாட்டைக் கெடுக்கும் நூல்களைக் கேட்ட அளவிலும் தாங்கிக்கொள்ளாத அசுணமா அன்னவர்! பழிவரின் உலகுடன் பெறினும் கொள்ளலர்' என்னும் கொள்கைக் கொள்கலமாகத் திகழ்பவர். ஆகலின் உணர்வைத் தூண்டி இளைய உள்ளங்களை யெல்லாம் கெடுத்து இன்பப்பொருள் காணவல்ல எளிய மாந்தர் செயலை எண்ணிப்பார்க்கவும் மாட்டாத இவ்வேந்தலின் வெளியீடுகள் எடுத்த எடுப்பிலேயே ஆயிரம் ஆயிரமாக விலை போகிவிடுமா? விற்பனை பெருகி விழுப்பொன் காய்க்கும் பருவமறியாப் பொன்மரமெனப் பூத்துக்குலுங்குமா, புத்தக வெளியீட்டகம்?*

*1923 ஆம் ஆண்டிலேயே 17 ஆம் 18 ஆம் வெளியீடுகளாக வெளியிடப்பெற்றன தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியமும், சொல்லதிகாரம் சேனாவரையமும்! இவற்றில் போகடப் பட்டப்படிகள்தாம் எத்தனை? 1000! ஆனால் இவற்றில் மறுபதிப்புகள் எப்பொழுது வருகின்றன? முறையே 1944, 1946, ஆகிய ஆண்டுகளில் வெளிவருகின்றன. இத்தமிழ் உலகிலும், கடல்கடந்த தமிழ் உலகத்திலுமாக 1000*

*படிகளை விற்பனை செய்தற்கு இருபது ஆணடுகளுக்குமேல் வண்டியிருக்னின்றன! நான்கு முதல் ஆறு கோடி தமிழர்கள் வாழும் உலகில் முழுமுதல் தமிழ் இலக்கண நூலாம் தொல்காப்பியம் ஆண்டுக்கு 50 விற்பனை யாகியிருக்கிறது! எவ்வளவு பெருமைப்பட்டுக்கொள்ள வேண்டிய செய்தி! இப்பொழுதும்தான் என்ன? தமிழ்ப்புலவர்கள், தமிழ்ப்பேராசிரியர்கள், முனைவர்கள், ஆராய்ச்சிமாணவர்கள் ஆர்வலர்கள் என்பார் ஏறத்தாழ 25,000 பேர்கள் உளர். பள்ளிகள் கல்லூரிகள் நூலகங்களுடன் இயங்குகின்றன. பொதுமக்கள் ூநலகங்களும் நிறைந்துள்ளன. ஆயினும் என்ன? அவற்றுள் பெரும்பாலனவும் எந்த நூல்களை ஏந்திக் கொஞ்சி மகிழ்கின்றன - குலாவுகின்றன - என்பதை மேலோட்டமாக நூற்படிட்டியைப் பார்ப்பாருமஅறிந்துகொள்வர். இத்தகைய இடர்மிக்க நூற் பதிப்புப்பணியில்புகுந்துகொண்டு, புகுந்த துறைக்குப் பெருமையும், அமைப்புக்கு ஆக்கமும், மொழிக்குப் பாதுகாவலும், இனத்துக்குப் பேறும், விளைத்துக்கொண்டு தொடர்ந்து திரு. வ.சு. பணிசெய்துகொண்டிருக்கிறார்என்றால் அவர்தம்வினைத்திறவித்தகச் சிறப்பேயாம்.*

*ஆக்கமிக்கதும் நிலைபெற்றதும், எளிதில்விலையாகாததும் ஆனால், அரிய பயன் விளைப்பதும் வெளியிட்டே தீரவேண்டியதும் ஆகிய நூல்களை வெளியிடவேண்டுமானால், அவ் வெளியீட்டுக் குரிய தொகையை வேறு வழியிலேயே திரடியாகவேண்டும். அவ்வழியும், நூல் வெளியீட்டு வழியாகவும் கொள்கையில் குன்றாததாகவும் வருங்கால மக்களுக்கு ஆக்கம் செய்வதாகவும் இருக்கவேண்டும்என்று திட்டமிட்டுப் பள்ளிமாணவர்கருப் பயன்படும் பாடநூல்களை வெளியிட்டார். அப் பாடநூல்களும், அவ்வத் துறையில் வல்லார்களைக்கொண்டே எழுதச் செய்தார். கல்வித் துறை ஆய்வாளர்களையும், அறிஞர்களையும் பயன்படுத்திக் கொண்டார். இவ்வகையில் குறிப்பிடத்தக்வர்கள் திரு. சிவசைலம்பிள்ளை எம்.ஏ.எல்.டி., புலவர் அரசு, டாக்டர் மு. வரதராசனார், திரு. இளங்கண்ணனார் திரு. பாவாணர் முதலியவர்கள் ஆவர்.*

*பள்ளிப்பாடநூல்களும் துணைநூல்களும் இலக்கண நூல்களும் வெளியிடத் தொடங்கிய பின்னேதான் கழக வருவாய் பெருகலாயிற்று. எனினும் போட்டிமிக்க அத்துறையிலும் கழக ஆக்கச்செயலை அறிந்துகொண்டு*

உதவும் நல்லோர்கள் ஆங்காங்கு இருந்தமையால்தான் அவ் வருவாயும் வாய்ப்பதாயிற்று என்று குறிப்பிடுவது தகும்.

இனி அப் பாடநூல்கள் தேர்விலும்இடர்கள் மிகுந்தன. விரும்பும் வழிகளில் எல்லாம் கழிவு தந்தும்,குறுக்குவழி தேர்ந்தும் செல்லுதற்கு ஆட்சியாளர் வ.சு. விரும்புவதும் இல்லை. வெறுப்பவரும் அவர்! இந்நிலையில் உள்ளூர்ப் பதிப்பகங்களை ஊக்குதல் என்னும் முறையால் பலநகராட்சி மன்றங்களிலும், மாவட்டக்கழகப் பள்ளிகளிலும் பாடநூல் வைத்தற்கு இயலாமை ஏற்பட்டது உண்டு. இச் சிக்கலுக்கு இடையேயும் "தகுதிவாய்ந்த நூல்களுக்கு உரிய வாய்பைத் தந்தே தீர்வோம்" என்று உறுதி கொண்டிருந்த நல்லவர்களாலும், கழகப் பணிநலச் சீர்மையை அறிந்த கடனுணர்ந்த பெருமக்களின் அன்பார்ந்த ஒத்துழைப்பாலும் கழகப் பாடநூல்கள் பாடமாக வைக்கப்பெற்று வந்தன.

"சுப்பையாபிள்ளை உம் தொண்டை அறிவோம். நீர் செய்துவரும் உயர்ந்த பணிக்குரிய பொழுதை விடுத்து, இப் பாடப் புத்தகத்தைப் பாடமாக வைத்தற்காக வரவேண்டுமா? இதனைச் செய்ய வேண்டியது எங்கள் கடமை அல்லவோ? மீண்டும் இப்படி உம் பொழுதை வீண்படுத்த வேண்டியது இல்லை," என்று உரிமையால் கடிந்துபேசி உள்ளன்போடு உதவியவர்களை யெல்லாம், இன்று நினைத்து நன்றிப் பெருக்கால் உருகும் காட்சியை வ.சு. அவர்களிடம் நெருங்கிப் பழகுவோர் அனைவரும் அறிவர்.

இத்தகைய நல்லெண்ணம் படைத்தவர்கள் உதவியாலேதான் கழகம் வளர்ந்தது. அரிய நூல்களையெல்லாம் வெளியிடும் பேற்றைப் பெற்றது. ஆனால், பாடநூல்களையெல்லாம் அரசே வெளியிட வேண்டும் என்னும் திட்டம் பதிப்புத் துறையை ஆட்டங்காண வைத்துவிட்டது மட்டுமன்றி, வேரைப் பறிக்கும் அளவுக்கும் போய்விட்டது என்று அவர்கள் இப்பொழுதும் கூறுவதில் உள்ள உண்மை அவர்கள் பட்டறிவால் கண்ட மெய்மையேயாம்.

வளந்தந்த பாடநூல் வெளியீடு பறிபோனால் இனி என்ன செய்வது? அவ் வருவாயைக் கருதித் தொடங்கிவிட்ட அற நிறுவனங்களைத் தொடர்ந்து நடத்துவது எப்படி? புதிய நூல்களை வெளிக் கொணர்வது எப்படி? இப்படி அடுக்கடுக்காகச் சிக்கல்கள் கிளைத்தன. சிக்கல்கள் வரும்போது

இயன்ற அளவும் முயன்று அவிழ்த்துத் தீர வழி கண்டாக வேண்டுமே! அவ் வழியில் துணிந்தார் திரு.வ.சு.

1960 இல் மதுரையில் திரு.மி. சண்முகம் என்பார் கழக நூல்களை விற்பதற்கு ஒரு நிலையம் தொடங்க விழைந்தார். அவர் விழைவை ஏற்றுக்கொண்டு திரு.வ.சு. அவர்கள் சைவ சித்தாந்தப்புத்தக நிலையத் தொடங்க இசைவு தந்தனர். தாமும் நேரில் வந்து நிலையத்தைத் திறந்து வைத்துச் சிறப்பித்தனர். ஆனால், அந்நிலையச் செயற்பாட்டில் நிறைவு உண்டாகவில்லை. ஆகவே புத்தகம் வழங்குதலை நிறுத்திக்கொள்ள நேரிட்டது

. இப்பட்டறிவு கட்டாயம் பெருநகரங்களில் எல்லாம் கழக நூல் விற்பனை நிலையங்களைத் தோற்றுவித்தல் வேண்டும் என்னும் ஆர்வத்தைத் தூண்டிற்று. அவற்றைக் கழகமே தொடங்கி நடாத்த வேண்டுமே யன்றிப் பிறர்பொறுப்பில் விடுதல் கூடாது என்னும் தெளிவையும் தந்தது. ஆதலால் தமிழ் வளர்த்த தலைநகராம் மதுரையிலேயே முதல் கிளையைத் தொடங்கினர். பின்னர்க் கோவை, குடந்தை, திருச்சி ஆகிய இடங்களில் கழக நூல் விற்பனைக் கிளை நிலையங்கள் ஏற்படுத்தப்பெற்றன. இந் நிலையங்களின் தோற்றம் பாடநூல் வெளியீட்டுத் தடையால் உண்டாகிய பேரிழைப்பை முழுமையும் ஈடுசெய்ய இயலாது ஒழியினும், ஓரளவேனும் ஈடு செய்யமுடிந்தது.

மற்றும் நூற்பேழைத் திட்டமென ஓர்அரிய திட்டத்தை உருவாக்கினார் திரு.வ.சு. அத் திட்டமும் இலக்கண இலக்கிய நூல்களின் விற்பனைக்கு ஓரளவு உதவுவதாயிற்று. "பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூற்பேழை", "தமிழர் சமய இலக்கியப் பேழை", பிற்கால இலக்கண இலக்கியநூற்பேழை, மாணவர் நூற்பேழை என்பவை அந் நூற்பேழைகளாம். இவ் வகையில் வேறு சில நூற்பேழைகளும், சிற்றிலக்கியப் பாதுகாப்புத் திட்ட வெளியீட்டு வரிசையும் வெளிக்கொணர வ.சு. அவர்கள் ஆரா விருப்புடன் உள்ளனர். அவற்றின் வெற்றி பொதுமக்கள், கற்றோர், அரசு ஆகியோர் அரவணைப்பில் அன்றோ உள்ளது!

உன்னிப்பாகப் பார்த்து ஒவ்வொன்றையும் எப்படையும் ஒருவராலேயே செய்துவிட முடியும்? தெரிந்துவினையாடும் திறம் ஒருவருக்கு வாய்த்திருந்தால் அல்லாமல் ஒரு நிறுவனத்தைக் கட்டிக் காத்துக் கவினுற வளர்த்தல் அருமையாம். அத் திறத்தில் திருவருளாலும்தம் தேர்ச்சியாலும் சிறந்து ஓங்குபவர் திரு.வ.சு. கழகத்திற்கு இத்துணை வளர்ச்சியும்

புகழும் உண்டாகியிருக்கின்ற தென்றால், அதற்கு அடிப்படையாக இருந்து அரும்பணி செய்பவர்களும் அவர்கள் அயரா உழைப்பும் செயலாண்மையும் எல்லாம் கரணியங்களாம். அவ் வகையில் பேறு பெற்றவர் திரு. வ. சு.

கழகப் பொது மேலாளராக இருந்தவர் மூத்தமருகர் திரு. இரா. கலியாணசுந்தரர்; அனைத்து நிறுவனங்களின் இயக்கங்களையும் இனிது கண்காணிக்கும் பயிற்சியும் செயல் திறனும் மீக்கூர்ந்தவர். கழகம் செய்துவரும் அரிய பணிக்கெனறே கல்லூரி விடுத்துப் பணியேற்றுக் கொண்ட இளந்தைப் பருவ முதலே தம்மை ஆளாக்கிக் கொண்டவர். தம் தந்தையார் வழியே வந்த இனிய பண்பாடுகளும், பட்டறிவுகளும் பின்னே தம் பெருமை மிகு மாமனாரிடம் பெற்றுக்கொண்ட இடையறா நடை முறைத் திறன்களும் தமக்கென்றமைந்த தெளிவும் கூர்ப்பும் திறமும் எல்லாம் கழகச் செல்வமாகக் காத்தோம்பிக் கவின் செய்து வந்தது. இவ் வண்ணம், இவர் இதனால்இதனை இனிது செய்து முடிப்பார் என்பதைத் தெள்ளிதின் உணர்ந்து அவ் வுணர்வை உறுதியாக்கிக் கொண்டுள்ள உயர்வு கழக மானிகைக்கு வாய்த்த வன்மையான அடித்தளமாம். இன்னும் கழகக் கிளையின் மேலாண்மையாளரா, அச்சக மேலாண்மையாளரா, நூல் கட்டடப் பகுதியினரா, விற்பனைப் பகுதியினரா, விற்பனைப் பகுதியினரா, எழுத்தரா, கணக்கரா ஏவலரா, பணியாளர்களா - இவர்களெல்லாம் தேர்ச்சித்துணையாக அமைந்து குறிப்பறிந்து கடனாற்றுபவர்களாகவே வாய்க்கப் பெற்றுள்ளமை கழகத்திற்கு வாய்த் நல்வாய்ப்பேயாம். இவ்வாறல் தான்,

"மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண்ட டனையர் என் இளையரும்"

என்னும் பிசிராந்தையார் பொன்மொழிக்கு ஒப்ப வ.சு. அவர்கள் அமைந்து அரும்பணி செய்தற்கு இயல்கின்றதாம்.

# 23. புதுவழி புதுக்குநர்

("வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்னும்
வழக்குக்கு இழுக்கும் உண்டோ")

**- தாயுமானவர்**

திரு.வ.சு. பலதிறப் புதுவழி புதுக்கிய புகழாளர் ஆவர். அவற்றுள் இவண் உரைக்கப்பெறுவது சொற்பொழிவு நூல்கள் வெளியீடு பற்றியதேயாகும்.

'பிரசங்கமும்' 'உபந்யாசமும்' நாட்டில் நிகழ்ந்து கொண்டிருந்த நாளிலே சொற்பொழிவு நிகழ வழி செய்தார் வ.சு. அதிலும் அச் சொற்பொழிவுகளை அச் சொற்பொழிவாற்றும் மேடையிலேயே நூல் வடிவில் வழங்கவும் வழி செய்தார். அவ் வகையில் தமிழ் ஒரு புதுத்துறையில் வளம் பெற்றுப் பொலிவதாயிற்று.

நெல்லையில் திரு. பால்வண்ண முதலியார் என்பார் ஒருவர் இருந்தார். அவர் இயற்றிய நூல் 'சொற்பொழிவு ஆற்றுப்படை' என்பது. திரு. வி.க. அவர்களின் தலைமையுரைகள் "தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு" என்னும் பெயரால் நூல் வடிவு கொண்டன. டாக்டர்.வ. சுப. மாணிக்கனார் இயற்றிய வள்ளுவம் பன்னிரு சொற்பொழிவுகளைத் தாங்கிய அரிய ஆய்வு நூலாகும்.

"இவை யாண்டும் யார் முன்னும் பேசப்பட்டனவல்ல. யானே திருவள்ளுவரை முன்வைத்துப் பேசினாற்போல் எழுதிய கற்பனைச் சொற்பொழிவுகள். இஃதோர் இலக்கியப் புதுநெறி" என்று வள்ளுவ நூலாசிரியர் வரைவது இவண் நோக்கத் தக்கதாகும்.

'பாம்பறியும் பாம்பின கால்' என்பதுபோல் இலக்கியப் புது நெறி கண்ட அவர் திரு.வ.சு. அவர்கள் நடாத்திவரும் சொற்பொழிவு நூல் வெளியீட்டுப் புதுநெறி குறித்து ஆய்ந்து அரிய கருத்துகளை வழங்குகிறார் :

“புலவர்களின் சொற்பொழிவுகளை உடனடியாகக் கேட்டு விடும் இறந்த காலப் பொருளாகாமல், நிகழரும் எதிரரும் பயன் கொள்ள அச்சுயிர் ஏற்றி நூற்பிறவியாக்கி வாழ்விக்கின்றனர் கழகத்தார். அதனால் தமிழ் வளர்கின்றது. யாதொரு நிலையம் தமிழை வளர்க்குமோ வாழ்த்துமோ அந் நிலையம் வளர்க் வாழ்க என்று பாராட்டுவது நம் தமிழ்ப் பிறப்பின் பயனாகும்.

“இப் பொழிவுகளைத் தமிழுக்குத் தொடக்கத் திறனாய்வுகள் என்று கூறலாம். இவற்றால் தமிழ் இலக்கியங்கள் பரவும் எனவும் திறன்கலை வளரும் எனவும், எதிர்பார்க்கலாம். சொற்பொழிவு என்பது ஆகுபெயராய் இன்று ஒரு நூல்வகையைச் சுட்டும் வழக்குப் பெற்றுவிட்டது. ‘கோவைச் சொற்பொழிவைக் கேட்டேன்’ என்ற நடையோடு, கோவைச் சொற்பொழிவைப் படித்தேன் என்று புது நடையும் இந் நாள் தோன்றலாயிற்று. கலம்பகம், உலா, தூதுமுதலான செய்யுள் வகைபோலச் சொற்பொழிவு என்பது உரைநடை வகைகளில் ஒரு கூறாகத் தோன்றியது கண்டும் அதனைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வளர்ப்பது கண்டும் அவ் வளர்ச்சியில் பங்காளிகளாக நீங்கள் இவண் வந்து கூடியிருப்பது கண்டும் பெருமித உவகை கொள்கிறேன்.” என்பது அவர்கள் இப் புதுத் துறை குறித்து இயம்புவதாகும். “நாக்கடிப்பாக வாய்ப்பறை அறைந்து சாற்றக் கேண்மின் சாற்றக் கேண்மின்” என்று சொல்லப்பெற்ற சொல்லும் ஏட்டில் எழுதி வைக்கப் பெற்றமயால்தான் இன்றும் தன்னைப் பறையறைந்து காட்டி, வாழ்ந்து கொண்டிருக்கிறது.

நலங்கிள்ளி நவின்ற வஞ்சின மொழியும், பெருங் கோப்பெண்டு கூறிய கையறுநிலை மொழியும், சேரமான் கணைக்கால் இரும்பொறை செப்பிய மானமொழியும் கணியன் பூங்குன்றனார் உரைத்த பொருள்மொழியும் பிறபிறவும் இன்றும் நம் செவியாரக் கேட்கவும், கண்ணாரக் காணவும் வாய்த்தமை அவை பாட்டாகி ஏட்டிலே இடம் பெற்றமையாலேயே ஆம். ஆகலின் கூற்றையும் ஆடல் கொண்டு ஆற்றலொடு நிலைத்து ஒன்றா உலகத்தில் ஒன்றாகிப் பொன்றாமல் நிற்பது ஒலிவடிவன்று, வரிவடிவேயாம். இதனை வளம் பொழியும் இளந்தை நாளிலேயே உணர்ந்து செயலாற்ற ஏக்கம் கொண்ட பெருந்தகை வ.சு.

1939 இல் சென்னை, சிந்தாதிரிப்பேட்டை உயர்பள்ளியில் தமிழ்த் தென்றல் திரு.வி. கலியாணசுந்தரனார் தலைமையில்

பத்துப் பாட்டு மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டில் ஆண்பாற் புலவர் ஐவரும் பெண்பாற்புலவர் ஐவருமாகப் பதின்மர் பத்துப் பாட்டுக்களையும் பற்றிச் சிறப்புரை யாற்றினர்.

கேட்டவர் கிளர்ந்தனர். கேளாரும் வேட்டனர்; அக் கூட்டத்திற்குத் திரு.வ.சு. அவர்களும் சென்றிருந்தார். சொற்பொழிவின் நயமும் கருத்து வளமும் அவர்களைக் கவர்ந்தன. ஆகலின் ஏனையரைப்போல் நன்றாக இருக்கிறது என்ற அளவில் நிற்படாமல் இவ்வரிய சொற்பொழிவுகளை எழுத்துருவில் வடித்துத் தந்தால் எத்துணைப் பயனாம்? ஏற்பாடு செய்தவர்கக்கும் ஏற்றுக்கொண்டவர்க்கும் எத்தகைய நிலைபேறாம்? பின்வரும் கால்வழியினருக்கும் பெரும்பயன் அன்றோ என்று எண்ணினர். அதனை நிறைவேற்றுதற்கு அவாவினர்.

அச் சொற்பொழிவில் பங்கு கொண்ட புலவர்களைப் பல்கால் அணுகி எழுத்து வடிவில் அப் பொழிவை ஆக்கித் தருமாறு வேண்டினர். வேண்டியும், அம் முயற்சி பயனின்றி ஒழிந்தது. ஆனால், அப் பட்டறிவு வாளா ஒழிந்துவிடவில்லை. புதுநெறி புதுக்கத் தூண்டியது. பலரைத் தூண்டித் துலக்கிய தோன்றல் வ.சு. அவரைத் தூண்டித் துலக்கியது இச் சிந்தாதிரிப் பேட்டை பத்துப்பாட்டு நிகழ்ச்சி.

கழக வழியாக இலக்கிய மாநாடுகளைக் கூட்டுவது என்றும், மாநட்டுக்கு முன்னரே தலைவர் உரை, சொற்பொழிவாளர்களின் உரைகள் ஆகிய அனைத்தையும் எழுதிப் பெற்று அச்சிட்டு மாநாட்டுப் பேரவையிலேயே நூலை வெளியிடுவது என்றும் திரு. வ.சு. முடிவெடுத்தார்.

இத்திட்டத்தின் நோக்கமும் பயனும் குறித்து ஒரு நீண்ட கண்ணோட்டம் செலுத்தினார் வ.சு. இத்தகைய மாநாடுகள் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ்ப் பெருநூல்கள் இறந்துபடாமல் சிறந்து நிலவுதற்கும், தமிழ்ப் பெரும் புலவர்களைத் தமிழ்ப் பெருமக்களுக்கு அறிவுறுத்துதற்கும், தமிழ் நூற்றொகைகள் ஓரிடத்து ஒருங்கு வெளிப்படுதற்கும், பண்டைப் பெரும்புலவர்களின் பேராற்றலும் பேருதவியும் நன்கு வெளிப்பட்டு அவர்களை நன்றி மறவாது போற்றுதற்கும் அவர்தம் அடிச்சுவடு பற்றி இஞ்ஞான்றைப் பெரும் புலவர்கள் புத்தம் புதிய பெருநூலாக்கித் தமிழ்த்தாயினுக்குப் புத்தணி புனைதற்கும் துணைபுரியும்” எனத் தேர்ந்தார். அத் தேர்ச்சித் துணையால் திறமான பணியில் இறங்கினார்.

*சொற்பொழிவு நூல்களைச் சுவைமிக்க விருந்தாகத் தர விழைந்தார். தாய் ஆக்கும் சுவையமுதென்னத் தேர்ந்து தேர்ந்து தெளிந்து உள்மெலாம் அள்ளூறி அணுக்கராய் நின்று அரவணைத்து ஊட்டினார். அவ் வூட்டுதலால் உண்பார் ,ன்பங்கண்டு உண்ணெகிழ் தொண்டராய் உவந்தார். அவ் வுவப்பு வெளிப்பாட்டு உரை, உந்தி எழுந்து வந்த நயம் உன்னுந் தோறும் உன்னுந்தோறும் இன்பம் பயப்பதாம்.*

*"கதலிக் கனியை உரித்துண்ணும் வகை அறியா மதலைச் சிறுவர்க்குப் பெற்றோர் தோல் உரித்துப் பழமெடுத்துப் பரிந்தூட்டிச் சுவை காட்டுவது போலவும், மாங்கனியின் தீஞ்சுவை அறியாதார்க்கு அதன் தோலும் கொட்டையும் போக்கித் துண்டு துண்டாய் அரிந்து தந்து சுவை காட்டுவது போலவும், தெங்கங்காய்ச் சுவை தெரியார்க்கு அதன் நார் உரித்து உடைத்துச் சுவை நீரும் பருப்பும் எடுத்துக் கொடுத்துச் சுவை காட்டுவது போலவும் பயன் விளைக்கும் என்பது எம் கருத்து!*"*

*இலக்கியம் மட்டுமே அன்றித் தமிழ்மக்கள் அரசியல் அறிவும், வரலாற்றுத் தெளிவும், சமயப்பற்றும் கொள்ளுதல் வேண்டி அரசியல் மாநாடு; தமிழக வரலாற்று மாநாடு, சமய மாநாடு ஆகியவற்றையும் கூட்டிச் சீரிய நூங்லகளை வழங்கியுள்ளார் வ.சு.*

*கழகம் இதுகாறும் பத்தொன்பது மாநாடுகளைக் கூட்டியுள்ளது. அவை நற்றிணை முதலாகிய எட்டுத்தொகை நூல்களுக்கும் எட்டு மாநாடுகள், பத்துப்பாட்டிற்கு ஒரு மாநாடு; பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுக்கு ஒரு மாநாடு! சிற்றிலக்கியங்களுக்கு ஆறு மாநாடுகள், அரசியல் மாநாடு ஒன்று, தமிழக வரலாற்று மாநாடு ஒன்று, மெய்கண்ட சாத்திரமாநாடு ஒன்று.*

*இவற்றுள் புறநானூற்று மாநாடு, பத்துப்பாட்டு மாநாடு, ஆறாவது சிற்றிலக்கிய மாநாடு ஆகிய மூன்றும் இரண்டு இரண்டு நாள்களும் மெய்கண்ட சாத்திர மாநாடு* ஐந்து நாள்களும் நிகழ்ந்தன.*

---

* சிற்றிலக்கியச் சொற்பொழிவு ஆறாவது மாநாட்டு நூல் - பதிப்புரை.

* நெல்லையில் நடைபெற்ற இம் மாநட்டுச் சொற்பொழிவுகள் மட்ம நூல்வடிவம் பெறவில்லை.

மாநாடுகளில் பெரும்புலவர்கள் இருபதின்மர் தலைமை ஏற்று உரையாற்றினர். செந்தமிழ் நாவன்மையாளர் 159 பேர்கள் பங்கு கொண்டு சொற்பொழிவாற்றினர். இலக்கிய மாநாடு, சாத்திர மாநாடு ஆக இருவகை மாநாடுகளிலும் 140 நூல்கள் ஆராயப்பெற்றன. 'இவையன்றிக் கந்தர் சட்டிச் சொற்பொழிவு' தவத்திரு. ஞானியாரடிகள் பொழிவுத் தொகுப்பாகவும், கழகப் பொன் விழாவின்போது அறிஞர்கள் ஆற்றிய பெரிய புராணப் பொழிவு 'பெரியபுராணச் சொற்பொழிவுகள்' என்னும் பெயராலும் வெளிவந்தன.

முதல் சிற்றிலக்கிய மாநாட்டில் உலா கலம்பகம் தூது ஆகியனவும் இரண்டாம் சிற்றிலக்கிய மாநாட்டில் பிள்ளைத் தமிழும், மூன்றாம் சிற்றிலக்கிய மாநாட்டில் பரணி பள்ளு குறவஞ்சி ஆகியவையும், நான்காம் சிற்றிலக்கிய மாநாட்டில் கோவையும், ஐந்தாம் சிற்றிலக்கிய மாநாட்டில் அந்தாதியும், ஆறாம் சிற்றிலக்கிய மாநாட்டில் வெண்பா நூல்களும் ஆராய்ந்து பொழியப்பெற்றன.

சென்னையில் 7 மாநாடுகளும், நெல்லைலயில 11 மாநாடுகளும் மதுரையில் 1 மாநாடும் ஆக இம் மாநாடுகள் நடத்தப்பெற்றன.

இலக்கிய மாநாடு, சமயம் முதலிய மாநாடுகள் ஆகியவை நிகழும்போதே அம் மாநாட்டுச் சொற்பொழிவு நூல்கள் பொது மக்கள் பெற்றுப் பின்னும் படித்தற்கும் ஆய்தற்கும் ஏற்ற நல்விருந்தாகச் செய்வித்ததுடன் அவ்வத் துறைக்கு மேலும் ஆக்கம் நல்கும் அரிய தீர்மானங்கள் சிலவற்றை நிறைவேற்றுதற்கும் வாய்ப்பாக இருந்தது.

சான்றாகக் கலித்தொகை மாநட்டிலே நிறைவேற்றப்பெற்ற தீர்மானங்கள் வருமாறு :

முதல் தீர்மானம் : சில நாட்களுக்கு முன்னே முதன் முதலாகச் சென்னையில் பத்துப்பாட்டு மாநாடு கூடி ஒரு நல்ல உணர்ச்சியை ஊட்டிற்று. இப்போது கலித்தொகை மாநாடு கூடிப் பெருங்கிளர்ச்சியைப் பெருக்கிவிட்டது. இப்படியே சங்க நூல்கள் பலவற்றுக்கும் பல மாநாடுகளை அடிக்கடி கூட்டித் தமிழகத்துக்கு மாட்சிமை தேட வேண்டும். இதுவும் மாவட்டங்கள் தோறும் அப்படிச் செய்ய வேண்டும். மேலும் அந்தந்த மாநாட்டின் சொற்பொழிவுகளை முன்னதாகவே அச்சிட்டு அவ்வக் கூட்டத்திலேயே வழங்க வேண்டும் என்பது.

இரண்டாவது தீர்மானம் :- தமிழ்க் கலைகளின் தொடர்பாக இத்கைய கூட்டங்கள் சென்னையில் திரளான கூட்டத்துடன் முறையாகவும் அடிக்கடியும் நிகழ வேண்டியிருப்பதனால் தமிழ் உணர்ச்சியோடு கூடிய இடவசதி இக் கூட்டங்கட்கென்றே தனியாள் அமைந்திருக்க வேண்டும். ஆதலால் சென்னையில் 'சங்க நூல் மண்டபம்' என்னும் அழகிய பெயருடன் ஒரு நல்ல விரிவுரை மண்டபம் தோற்றுவித்தல் வேண்டும் என்பது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் கிளை அமைப்புகளுள் ஒன்றான தென்னிந்திய தமிழ்ச்சங்கச் சார்பிலே இம் மாநாடும், பிற மாநாடுகளும் கூட்டப்பெற்றன. சங்கச் செயலாண்மையர் வ.சு. அவர்கள் மாநாடுகளைத் திட்டமிட்டுக் கூட்டிச் சிறப்புற நடாத்தியதுடன் வரவேற்பும் நன்றியும் தக்காங்கு நிகழ்த்தும் பொறுப்பும் மேற்கொண்டார்.

எத்தனை மாநாடுகள் கழகம் நடாத்தியுள்ளது! எப்படி ஒரு மனிதர் திட்டப்படுத்தித் திருத்தமாகக் குறைவற நடத்துகிறார் என்பது வியப்பாக இருக்கும். திறனும் செயலாற்றலும் உடையோர் எவரோ அவரைத் தேர்ந்து தக்காங்கு பயன்படுத்தி அவர் திறனும் செயலாற்றலும் நாட்டுக்கு நலந் தருமாறு செய்வித்தலில் இணையற்ற பெருமகனார் வ.சு. அவர்கள். ஆகலின் அவர்க்கு இச் செயல்களெல்லாம் எளிதாக நிறைவேற்ற முடிந்ததாம்.

நெல்லையில் நிகழ்ந்த அனைத்து இலக்கிய விழாக்களிலும் செஞ்சொற் புலவர் திருக்குறள்மணி திரு. அ. க. நவநீத கிருட்டிணன் அவர்கள் எடுத்துக்கொண்ட சீரிய பங்கினை இன்று திரு. வ. சு. அவர்கள் சொல்லிச் சொல்லிப் பாராட்டுவர். அத்தகைய தொண்டர்களை ஆட்கொள்ளத் தேர்ந்தவர்கரு அருஞ் செயல் என்பதொன்றும் உண்டோ?

## 24. விழவறா விழுப்புகழ்

*(விழைவு - விருப்பு, விருப்பால் தோன்றி விருப்பால் வளர்ந்து விருப்பால் நிறைந்து விருப்பு உண்டாக்கிக் கொண்டே இருப்பது விழா! ஒரு விழாவின் பயன் - காலமும் பணமும் மக்கள் உழைப்பும் எடுத்துக் கொள்ளும் விழாவின் பயன் - யாதாக இருக்கவேண்டும்? அது, விழுப்பமாக இருக்க வேண்டும்! அவ் விழுப்ப விழாக்கள் நிறைவேறிய பின்னரும்நினைவகலா விழாக்களின் பெருக்கத்து எல்லையே ஓர் அமைப்பின் - நாட்டின் - பெருக்கத்து எல்லை.)*

மதுரைமாநகரை ‘விழாநகர்’ என்பர். “விழவு நின்ற வியன் மறுகு” என மதுரைத் தெருக்களும், “விழவறா வியலாவணம்” என்று பூம்புகார்த் தெருக்களும் இலக்கியப்புகழ் பெறுகின்றன. அவ்வாறே கழகம் ‘விழவறா விழுப்புகழ்’ நிலையமாகத் திகழ்ந்து வருதல் கண்கூடு.

விழாக்கோடலின் நோக்கம் என்னை? விழாக்கோடலின் நோக்கம் பலவாகலாம். ஆனால், அனைத்து விழாக்களின் பொது அடிப்படையும், மக்களை ஒன்றுபடுத்துதலும் உவகையூட்டுதலும், புதுத்தொடர்புகளைப் பெருக்கி உவகை வளர்த்தலுமாம். திரு.வ.சு. அவர்கள் கழகத்தை விழவறா விழுப்புகழ் நிலையமாக்கி வருகின்றனர். அவர்கள் எடுத்துள்ள விழாக்கள் பொழுதுபோக்கு, வேண்டாவெற்றொலி, அறிவுக்கு ஒவ்வாச்செலவு இன்னவை சிறிதும் தலைகாட்டாச் சிறப்புடையனவாம். தமிழைப் பரப்ப, தமிழ் இனத்தை வளர்க்க, தமிழ்நாட்டை உலகிடை உயர்த்த எடுப்பனவே அவ் விழாக்கள்.

திரு. வ. சு. எடுத்துள் விழாக்களைப் புலவரைப் போற்றும் விழாக்கள், நூல் வெளியீட்டு விழாக்கள், மொழி வளர்ச்சி விழாக்கள், கழகச் சீர்த்தி விழாக்கள், சமயச் சால்பு விழாக்கள் என்னும் ஐங்கூறுகளுள் அடக்கலா. பிற பிற பெயர்களால் விழாக்கள் எடுக்கப் பெறினும் அவையும் இவற்றுள் அடங்கும். எல்லா விழாக்களையும் எடுத்தெழுதின் விரியுமென்றஞ்சிக் குறித்த சில விழாக்களை மட்டும் குறிப்பாம்.

ஊர்தொறும், பள்ளிதொறும் திருவள்ளுவர் கழகம் நிறுவப்பெறுதல் வேண்டும் என்றும், மொழிபெயர்க்கப் பெறாத உலக மொழிகளில் எல்லாம் என்றும், மொழிபெயர்க்கப் பெறாத உலக மொழிகளில் எல்லாம் திருக்குறள் மொழிபெயர்க்கப்பெறுதல் வேண்டும் என்றும், திருக்குறள், தமிழர் ஒவ்வொருவர் கையிலும் இருத்தல் வேண்டும் என்றும், திரு. வ. சு. கருதினார். இக் கருத்தைத் தம் உள்ளார்ந்த பேரன்பர் திரு. காழி சிவ. கண்ணுசாமிப்பிள்ளை அவர்களிடம் தெரிவித்தனர். இருவரும் கலந்துரை யாடியதன் விளைவாகத் "திருவள்ளுவர் திருநாட் கழகம்" தோன்றியது. இத் திருநாட் கழகமே, நாடெல்லாம் திருவள்ளுவர் கழகங்கள் பெருக்கமாகத் தோன்றிப் பணி செய்தற்குத் தூண்டியது. வள்ளுவர் விழாக்கள் ஆங்காங்கு எடுக்கவும் ஏவியது.

கழக மாளிகை திருநாட் கழகப் பணிமனை ஆயிற்று. ஆட்சியாளர் திரு.வ.சு. அவர்கள் திருநாட் கழகப் பொறுப்பாளராகப் பணியேற்றினார்; விழாக் கடமைகளை மேற்கொண்டார்.

தமிழ்ப் பேராசிரியர் கா. நமசிவாய முதலியார் தலைவராகவும், பாரிப்பக்கம் கண்ணப்ப முதலியார் செயலாளராகவும், காழி. சிவ. கண்ணுசாமிப் பிள்ளை, டி. செங்கல்வராய பிள்ளை, மா. பாலசுப்பிரமணிய முதலியார் ஆகிய மூவரும் துணைச் செயலகளாகவும். டி. சிவராம சேதுப்பிள்ளை, திரு.வி. கலியாண சுந்தரனார், டாக்டர் என். கிருட்டிணசாமி ஐயங்கார், ச. சச்சிதானந்தம்பிள்ளை, ரெவரெண்ட் எச். ஏ. பாப்ளி ஆகிய வைரும் துணைத் தலைவர்களாகவும், புலவர் மயிலை சிவமுத்து, தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், பரலி சு. நெல்லையப்பர், புலவர் மே. வீ. வேணு கோபாலப்பிள்ளை, புலவர சிவ. அருணகிரிநாதர், மணி கோடீசுவர முதலியார், டி. செங்கல்வராயன், பி.சி. மாணிக்கவாசக முதலியார், ஆர். எஸ். சாம்பசிவசர்மா, இ. த. இராசேசுவரி அம்மையார் ஆகியோர் உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றுத் திரு நாட்கழகப் பணி புரிந்தனர்.

1935 மே 18, 19 ஆம் நாள்களில் சென்னை, பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் மறைத்திரு மறைமலையடிகளார் தலைமையில் முதல் 'திருவள்ளுவர் விழா' நிகழ்ந்தது. அவ் விழாவை ஒட்டித் திருவள்ளுவர் நினைவுமலர்ஒன்று வெளியிடப்பெற்றது. அம் மலரின்கண், திருக்குறள் பாக்களும்,

திருமயிலைத் திருவள்ளுவர் திருக்கோயில், அதிலுள்ள திருவள்ளுவர் திருவுருவம், இவற்றின் படங்களும், அந்நாள்வரை திருக்குறளைப் பதிப்பித்தல், உரை எழுதுதல், ஆராய்ந்து கட்டுரை வரைதல், பிறமொழிகளில் பெயர்த்தல் ஆகிய பல்வேறு துறைகளில் திருக்குறளுக்குத் தொண்டாற்றியுள்ள அறிஞர் பெருமக்களின் உருவப் படங்கள் முதலியனவும், திருக்குறள் பயின்ற வெண்பா நூல்களில் இருந்து ஒவ்வொரு செய்யுளும், தமிழிலும் பிறமொழிகளிலும் வெளியிடப் பெற்ற திருக்குறள் பதிப்புகளைப்பற்றிய விளக்கக் குறிப்புகளும், தமிழ் நாட்டறிஞர்களும் பிற நாட்டறிஞர்களும் கூறிய புகழ்ப் பூந்துணர்களும் இசைப்பாக்களும், விழாத்தலைவர் மறைத்திரு மறைமலையடிகளார் ஆற்றிய தலைமையுரையும் வரவேற்பாளர், பேச்சாளர், சொற்பொழிவுக்குறிப்புகளும் கண்கவர் வனப்புடன் அச்சிடப்பெற்றிருந்தன.

திருநாட்கழகத்தின் இரண்டாம் ஆண்டுவிழா 4-6-36 இல் சென்னை, பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் முதுபெரும்புலவர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் தலைமையில்நிகழ்ந்தது. மூன்றாம் ஆண்டு விழா 22-5-37 இல் இராமநாதபுர மாவட்டம் பாகனேரியில் கோவை சிவக்கவிமணி. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகச் சார்பில் 1968 அக்டோபர்த் திங்கள் 14, 15 ஆம் நாள்களில் சென்னை, திருமயிலை இராசேசுவரி திருமணமண்டபத்தில் திருவள்ளுவர் விழா பெருஞ்சிறப்புடன் நிகழ்தற்கு ஏற்பாடு செய்தார் வ. சு. இவ் விழாவை ஒட்டித் திருவள்ளுவர் நூற்காட்சி ஒன்றும் அமைத்தார். அக் காட்சியில் திருக்குறள் பதிப்புகள் எத்தனை உண்டோ அத்தனையும் தொகுத்து வைக்கப் பெற்றிருந்தன. அரு முயற்சியால் பதினாறுவகை அயன் மொழிபெயர்ப்பு நூல்கள் ஆங்குத் தொகுத்து வைக்கப் பெற்றிருந்தன. திருக்குறள் பற்றிய பல்வேறுபட்ட நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள், திருக்குறள் பதிப்பாளர், உரையாசிரியர், ஆராய்ச்சியாளர், மொழிபெயர்ப்பாளர், திருக்குறள் எண்வகை நினைவுக் கலைஞர்ஆகியோரின் படங்கள், திருக்குறள் நெறியில் வாழ்ந்தவர் படங்கள், திருக்குறள் பரிசுப்பதிப்புகள், திருக்குறள் விளக்க அட்டைகள் முதலியவை கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன. விழாவிற்கு வருகை தந்திருந்த அனைவரும்

காட்சியைக் கண்டு வியந்தனர். கழிபேருவகையுடன் பாராட்டினர். அதற்கு முன் அத்தகைய அருங்கலைச் செல்வத் தொகுப்பை அறிஞர் பெருமக்கள் கண்டதிலர். ஆகலின் அத் தொகுப்பின் அருமையை நெஞ்சாரப் போற்றினர். வ.சு. அவர்களை வாழ்த்தினர்.

தமிழக ஆளுநர் மாண்பமை சர்தார் உச்சல்சிங் அவர்கள் திருவள்ளுவர் விழாவைத் தொடங்கி வைத்தார். முதல்நாள் விழாவிற்குச் சட்ட அமைச்சர் திருமிகு செ. மாதவன் அவர்கள் தலைமையேற்றார். பொதுப்பணி அமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திருக்குறள் நூற்காட்சியைத் திறந்து வைத்துத் திருக்குறள் கட்டுரைப்போட்டி, புத்துரைப்போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கினார்.

தவத்திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள் திருக்குறள் போலவே ஈரடியால் ஆங்கிலத்தில் யாத்த திருக்குறள் மொழி பெயர்ப்பு நூலைத் தமிழ்நாடு காங்கிரசுத்தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் வெளியிட்டார். இரண்டாம் நாள் விழாவுக்குத் தமிழகக் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமை ஏற்றார். முன்னாள் தமிழக முதல்வர் திரு. எம். பக்தவத்சலம் திருவள்ளுவர் திருநாள் மலரை வெளியிட்டார்.

விழாவின் தொடக்கத்தில் திருநாட்கழகப்பொறுப்பாளர் திரு. வ.சு. கழகம் தோன்றிய வகை, அது செய்தவரும் வள்ளுவப் பணிகள் ஆகியன குறித்து விரித்துரைத்து வரவேற்றார். இறுதியில் நன்றியுரையும் வழங்கினார்.

நாடகத்தமிழுக்கு இணையற்ற தொண்டுசெய்த ஏந்தல் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, தமிழின் மூலங்காட்டி உண்மை உணர்த்தியவர் ஆவர். ஆராய்ச்சித்துறையிலும் மெய்ப்பொருள் துறையிலும் சீரிய தொண்டாற்றியவர். அவர்தம் பெருவிழாக் கொண்டாடி, நினைவுமலர் வெளியிடுதல் கடனெனத் தமிழ்மக்கள் சார்பில் திரு. வ. சு. நினைத்தார். அந் நினைவு பெருவிழா வாயிற்று.

29-10-57 இல் சென்னை இராசாசி மண்டபத்தில் பேராசிரியர் நினைவுவிழா நடைபெற்றது. சென்னை மாநில முதல்வர் திரு. காமராசர் தலைமை தாங்கினார். கல்வியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் மணங்கமழும் மலரை வெளியிட்டுச் சிறப்புரை யாற்றினார். சுந்தரம்பிள்ளை அவர்களின் சிறப்புகளையும் ஆராய்ச்சித்திறங்களையும் தொண்டுகளையும்

விரித்துத் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் மு. வரதராசனார், திருவாட்டி மேரி மாசிலாமணி அம்மையார், திரு. கே. கே. பிள்ளை, திரு. இரா. பி. சோதுப்பிள்ளை ஆகியோர் உரையாற்றினர்.

திரு. ஔவை டி.கே. சண்முகம் அவர்கள் 'நீராரும் கடலுடுத்த' எனத் தொடங்கும் மனோன்மணீயத் தமிழ்வாழ்த்துப் பாடலையும், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களைப் பற்றிக் கவிமணி அவர்கள் பாடிய பாடல்களையும் பாடி இன்புறுத்தினார். கழக ஆட்சியாளரும், தென்னிந்திய தமிழ்ச்சங்கச் செயலாளரும் ஆகிய திரு.வ.சு. அவர்கள் நினைவு மலரின் சிறப்புகளை எடுத்துரைத்து, நிகழ்ச்சியில் பங்கு கொண்டவர்களுக்கு நன்றியுரைத்தனர்.

கழகத்தின் ஆயிரத்து எட்டாவது நூல் வெளியீட்டு விழா 20-8-61 ஆம் நாள் நிகழ்ந்ததைப்பற்றி அறிவோம். அவ்விழாவைச் சார்ந்து மொழிமாநாடு, இலக்கியமாநாடு, சமயமாநாடு, ஆகிய மும்மாநாடுகள் செம்மையுற நடைபெற்றன. டாக்டர். மு. வரதராசனார் மொழிமாநாட்டுத் தலைமையையும், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் இலக்கியமாநாட்டுத் தலைமை யையும், தவத்திரு. குன்றக்குடி அடிகாளர் அவர்கள் சமயமாநாட்டுத் தலைமையையும் ஏற்றுச் சிறப்பித்தனர்.

1008 ஆவது வெளியீட்டு விழா மலரைத் திரு. சி. சுப்பிரமணியம் வெளியிட்டார். அம் மலரில் திருவள்ளுவ நாயனார், சமயச்சான்றோர் நால்வர், சந்தானகுரவல்நால்வர், அம்மையப்பர், அம்மை அம்பலவாணர் திருவுருவப்படங்களும் கழகத்தால் நடாத்தப்பெற்ற பல்வேறு மாநட்டுத் தலைவர்கள், சொற்பெருக்காற்றிய புலவர் பெருமக்கள், கழக நூல் ஆசிரியர்களின் உருவப் படங்கள், கழக நூல்களுக்குக் கிடைத்த பரிசுகள், சான்றிதழ்களின் படங்கள் எலிசபெத் அரசியார்க்கு வழங்கிய போப் திருக்குறள் பரிசுப்படம் ஆகியனவும் தேர்ந்தெடுத்த புலவர் பெருமக்களால் எழுதப்பெற்ற 66 ஆராய்ச்சிக்கட்டுரைகளும் அமைந்து தித்திக்கும் தேனடையாகத் திகழ்கிறது.

"தமிழ்க்கருவூலம் - அறிவுப்பூங்கா - வரலாற்றுப் பொழில்"- என்றெல்லாம் பாராட்டப் பெறுவது சென்னை இலிங்கிச் செட்டித் தெருவில் அமைந்துள்ள மறைமலையடிகளார் நூல்நிலையமாகும். மறைமலையடிகளார்

தம் ஆராய்ச்சிக்கெனத் தேர்ந்து தெளிந்து தொகுத்த நூல்களுடன் கழகம், தொலைநோக்குடன் தொகுத்து வைத்த அரிய நூல்களையும், கொண்டு திகழ்கின்றது. இந் நூலகத் தொடக்கவிழா 24-8-58 ஆம் நாள் சென்னை மாநில ஆளுநர் திரு. விட்ணுராம் மேதி அவர்கள் தலைமையில் நடந்தது. அமைச்சர் திரு. பக்தவத்சலம் நூல் நிலையத்தைத் திறந்து வைத்தார். நூலக நுண்கலைச் செல்வர் பேராசிரியர் டாக்டர் அரங்கநாதன் அவர்கள் நூலகப்பணி குறித்து அரும்பேருரை ஆற்றினர். அன்று மாலையில்சைவப்பெரியார் திரு. சச்சிதானந்தம் பிள்ளை தலைமையில்மறைமலையடிகளார், கா.சு. பிள்ளை, சோமசுந்தர நாயகர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, திருவரங்கனார் ஆகியோர் திருவுருவப்படங்கள் திறந்து வைக்கப்பெற்றன விழாவின் இறுதியில் பேரறிஞர்அண்ணா அவர்கள் கலந்து கொண்டு கொட்டும் மழையின் இடையே வெள்ளமெனத் திரண்ட மக்கள் கேட்டு உவப்புற ஆற்றிய உரை மறக்க ஒண்ணாததாம்.

வ.சு. அவர்கள், விழாவின் இறுதியில் நன்றியுரைத்து நயம்பட மொழிந்தனர். திருவுருவப்படங்களில் அமைந்திருக்கும் பெரு மக்கள் ஐவருக்கும் உரிய அணுக்கத் தொடர்புகளை அருமையாக எடுத்துரைத்தனர்.

தவத்திரு, மறைமலையடிகளார் பல்லாவரத்தில் வாழ்ந்த திருமனையை அவர்கள் நினைவுச்சின்னமாக்க விரும்பினர். அதற்கு ஆகும் முயற்சிகளில் ஊன்றினர். நடுவணரசு, தமிழக அரசு, கழக நிறுவனம் ஆகியவற்றின் பொருளுதவியால் 'மறைமலையடிகள் கலைமன்றம்' என்னும் பெயரில் நினைவு நிலையம் ஆக்கினர்.

கலைமன்றத்திறப்புவிழா 12-7-62 இல் மதுரை திருஞான சம்பந்தர் மடத்துத் தலைவர் அருட்டிரு சோமசுந்தர ஞானசம்பந்த அடிகளார் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. கலைமன்றம் அமைந்த வகையினைத் திரு.வ.சு. விளக்கியுரைத்து வரவேற்றார். மாளிகை கலைமன்றமாக உருவாகியவகையை எடுத்துரைத்து, "இம் மாளிகையைச் சிறந்த கலைக் கூடமாக்கியும், சைவசித்தாந்த வகுப்பு, திருக்குறள் வகுப்பு, தேவார திருவாசக இசைவகுப்புகள், இசை, நாடகம் பற்றிய ஆராய்ச்சிகள் முதலியன நடக்கும் ஆராய்ச்சிக் கூடமாகவும் ஆக்கவேண்டும் என்று விரும்புகிறோம்" என்று தம் வேட்கையையும் உரைத்தனர். அமைச்சர் திரு. பக்தவத்சலம்

அவர்களை கலைமன்றத் திறப்புவிழா நிகழ்த்திச் சிறப்புரையாற்றினார்.

பொருள்களில் பொன்னுக்குத் தனிச்சிறப்பு உண்டு. அது போல் விழாக்களில் பொன்விழாவுக்குச் சிறப்புண்டு. நம் நாட்டில் ஓர் அமைப்பு - அதிலும் ஒரு கூட்டமைப்பு - தன் பொன்விழாக் கொண்டாடுகின்றது என்றால், அது கட்டாயம் பொன்னன்ன பெருந்தகையர்களைக் கொண்டு பொலிவோடு இயங்குகின்றது என்பது வெளிப்படை,

1920 ஆம் ஆண்டில் தொடங்கியது சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம். அதன் பொன்விழா 1970 இல் வந்தது. திசம்பர்த் திங்கள் 18,19, 20 ஆகிய மூன்று நாள்களிலும் சென்னை இராசேசுவரி திருமணமண்டபத்தில் கழகப் பொன்விழா பொலிவோடு நடை பெற்றது. அவ் விழாவின் சார்பில் அமைக்கப்பெற்ற கலைக்காட்சியும் நூற்காட்சியும் 18-12-70 முதல் 27-12-70 முடிய வைக்கப் பெற்றிருந்தன.

விழாவுக்கு வந்திருந்த பெருமக்களை வள்ளல் திரு. நாகமகாலிங்கம் அவர்கள் வரவேற்றனர். "சைவசித்தாந்தக்கழகம் பொன்விழாவும் மணிவிழாவும் முத்துவிழாவும் எடுத்துப் புகழ் சிறக்க வேண்டும். அந்த விழாக்களில் எல்லாம் திரு. சுப்பையாபிள்ளையும் பங்கு கொண்டு வாழவேண்டும் என்று அருட்பெருஞ் சோதித்திருவருளை வேண்டுகிறேன்" என வேண்டுதல் உரைத்து, "தமிழ்நாடும் தமிழும் உயர வேண்டுமானால் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தமிழ்நாடு முழுவதும் கிளைகளைப் பரப்பி உலகில் உள்ள எல்லா அறிவுத்துறைகளிலும் பல்லாயிரக்கணக்கான தமிழ்நூல்களை வெளியிட வேண்டும். அந்த நூல்களைப் படித்துப் பயன்பெறும் பழக்கம் தமிழ்மக்களிடையே பரவ வேண்டும்." என்று தம் வேட்கையுரைத்து வந்திருந்த பெருமக்கள் பேருவகை கூர வரவேற்றார்.

தமிழக ஆளுநர் திரு. சர்தார் உச்சல்சிங் துவக்கவுரை ஆற்றினார். நாவலர் நெடுஞ்செழியன் தலைமையுரை யாற்றினார். அப்பொழுது, "இந்த நூற்பதிப்புக் கழகம் இல்லாது இருந்திருக்குமேயானால்? என்ற ஒரு கேள்வியைப் போட்டுக்கொண்டு அப்படி ஏற்படுகின்ற நிலையை எண்ணிப் பார்ப்போமானால், எவ்வளவு அரும்பெரும்நூல்கள் எல்லாம் வெளிவராமல் பேயிருக்கும் என்பதை நாமெல்லாம் எண்ணிப் பார்ப்போமானால், இந்த நூற்பதிப்புக் கழகத்தினுடைய

இன்றியமையாமையை நாமனைவரும் அறிவோம்'' என்று கூறி அதனை விளக்கியுரைத்துத் திரு.வ.சு. அவர்களின் செயல் திறனைப் பாராட்டினார். 'திருத் தொண்டர் மாக்கதை' நூலை வெளியிட்ட தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெரியபுராணப் புரட்சிகளையும் சிறப்புகளையும் விரித்துரைத்தார்.

திரு. வ.சு. அவர்கள் "என் அடிப்படையான ஆர்வ நோக்கம் பெரியபுராணத்திற்குக் கட்டாயம் ஓர் ஆராய்ச்சிக்கூடம் ஏற்பட வேண்டும் என்பதுதான். அதை நிறைவேற்றுவார்களேயானால் இப்போது என்னை வாழ்த்தினோர் வாழ்த்தெல்லாம் என் வாழ் நாளை நீட்டிக்கச் செய்யும் என்று உண்மையாகவே நம்புகிறேன்'' என்று கூறி நன்றியுரைத்தார்.

அன்றுநிகழ்ந்த மாலை நிகழ்ச்சிக்கு அறநிலைய அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா தொடக்கவுரையாற்றினார். சட்டப் பேரவைத் தலைவர் திரு. கா. கோவிந்தன் தலைமையேற்று விரிவுரையாற்றினார். பேரறிஞர் பலர்சிறப்புரையாற்றினர்.

19-12-70 ஆம் நாள் சமயமாநாடு நடந்தது. அதில் இலங்கை திருமதி. இரத்தினநவரத்தினம் தொடக்கவுரையாற்றினார். தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தலைமையேற்றார். அறிஞர் பெருமக்கள் அறுவர் பேருரையாற்றினர்.

20-12-70 ஞாயிறு காலையில் தவத்திரு சுந்தரஅடிகள் தலைமையில்சமயமாநாடு தொடர்ந்து நடைபெற்றது. அன்று மாலை டாக்டர் மு.வ. தலைமையில்இலக்கிய மாநடு நிகழ்ந்தது. உயர்நீதிமன்ற நடுவர். திரு. பு. ரா. கோகுலகிருட்டிணன் பொன் விழா மலரை வெளியிட்டார். விழாவில் கழகப்புலவர் திரு. ப. இராமநாதபிள்ளையின் பணிநலம் பாராட்டிப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழியும் வழங்கப்பெற்றது.

கழகச்சார்பில் திரு.வ.சு. தோற்றுவித்த அற நிறுவனங்களுள் ஒன்று திருநெல்வேலி, தென்னிந்திய தமிழ்ச் சங்கமாகும். அதன் சார்பிலேயே திருவள்ளுவர் தமிழ்க்கல்லூரி நடைபெற்று வருகின்றது. இச் சங்கத்திற்கெனக் கட்டப்பெற்ற கட்டத் திறப்புவிழா 11-2-66 ஆம் நாள் திருநெல்வேலியில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தலைமையில் நிகழ்ந்தது.

"திருநெல்வேலியில் சொந்தக் கட்டிடம் இல்லை என்ற குறை இப்பொழுது நீங்கியது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்'' என்னும் பூரிப்புக்கலந்த வரவேற்புரையை வ.சு. அவர்கள் வழங்கினார்கள். 'தமிழ் வாழக் கழகம் தேவை' என்பதை

*வலியுறுத்திக் கூறினார் கட்டடத்தைத் திறந்துவைத்த சட்டமன்றத் தலைவர் திரு. செல்லப் பாண்டியன்.*

*“வணிகத்திலும் பலவகையுண்டு. புத்தகம் வெளியிடுவது சிறந்த தொழில். 5 ரூபாய் கொடுத்து நான் திருக்குறள் வாங்குகிறேன் என்றால் நான் கொடுக்கும் தொகை குறைவு. பெற்றுக் கொள்ளும் அறிவு அதைவிடப் பன்மடங்காகும்” என்று வலியுறுத்தினார் சிவஞானமுனிவர் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றிய தவத்திரு குன்றக்குடியடிகளார்.*

*சாத்தான்குளம் திரு. அ. இராகவன் அவர்கள் கலை ஆர்வலர். அருங்கலைப்பொருள்களை அரிதின்முயன்று பெருக்கமாகத் தொகுத்து வைத்துள்ளவர். விழாவின் நிகழ்ச்சிகளுள் ஒன்றாகக் கழகச் சார்பில் அவர்கு ‘நுண்கலைச்செல்வர்’ என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்க ஏற்பாடு செய்திருந்தார் திரு. வ. சு. “புலமிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனாம்” என்பதுபோல், தொகுப்புக்கலைச் செல்வராகத் திகழும் திரு. வ. சு. அவர்களுக்கு இவ்வெண்ணம் தோன்றியதில்ஒன்றும் வியப்பு இல்லையன்றோ?*

*கட்டடத் திறப்பு விழாவையொட்டி நடைபெற்ற நூற்காட்சியுடன் ‘நுண்கலைச்செல்வர்’ இராகவன் அவர்கள் தொகுத்து வைத்திருந்த அரும்பொருள்களும் இடம் பெற்றிருந்தன. அக் காட்சி 12-2-66 முதல் 23-2-66 வரை பொதுமக்கள் காட்சிக்குத் திறந்து வைக்கப்பெற்றிருந்தது. அறிவறிந்த நன் மக்கள் எண்ணாயிரவர்க்கு மேலும் இக் காட்சியைக் கண்டு களிப்புறும் வாய்ப்புக் கிடைத்தது.*

*“இந்த அபூர்வமான நூற்காட்சியைப் பார்த்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன். திரு. சுப்பையாபிள்ளை அவர்கள் தம் வாழ்க்கையையே தமிழுக்கு அர்ப்பணித்துத் தமிழ் உலகிற்குச் செய்திருக்கும் இந்தப் பெரும்பணியை என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை” என்று காட்சியைக் கண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மோ. ம. இராசேந்திரன் பாராட்டுகிறார்.*

*“கவனக்குறைவால் அடுத்தடுத்துத் தன் செல்வங்களை யெல்லாம் இழந்துவரும் தமிழ்ச் சமுதாயத்தில் கலைச் செல்வங்கள் பலவற்றையும் தேடிச் சேர்த்துப் பாதுகாத்துக் காட்சியாக வைத்து நமக்கெல்லாம் ஊக்கமும் நம்பிக்கையும்*

ஊட்டும் திரு. சுப்பையா பிள்ளை அவர்களுக்குத் தமிழர் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர்" என்று தமிழகக் கல்வித்துறை இயக்குநர் திரு.நெ.து. சுந்தர வடிவேலு குறிப்பிடுகிறார்.

31-7-67 இல் சென்னைக் கோகலே மண்டபத்தில் பேராசிரியர் கா.சு. பிள்ளை ஆராய்ச்சி மன்றத் துவக்கவிழா அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் டாக்டர் ராசா சர் முத்தையா செட்டியார், கோவை வள்ளல் திரு. நா. மகாலிங்கம், டாக்டர்கே. கே. பிள்ளை ஆகிய பெருமக்கள் உரையாற்ற நிகழ்ந்தது.

14-9-67 இல் திருநெல்வேலியில் திருவரங்க நிலையத் திறப்பு விழா தவத்திரு குன்றக்குடி அடிகளார் சீரிய தலைமையில் நடைபெற்றது. நாவலர் இரா. நெடுஞ்செழியன் சிறப்புரை யாற்றித் திருவரங்க நிலையத்தைத் திறந்து வைத்தார்.

தமிழ்க்கலை தொடர்பான கூட்டங்கள் சென்னையில் அடிக்கடி நிகழ வேண்டியது இருத்தலால் தமிழ் உணர்ச்சியோடு கூடிய இடவசதி அமைந்த சங்கநூல் மண்டபம் என்னும் பெயருடைய விரிவுரை மண்டபம் ஒன்று தோற்றுவித்தல் வேண்டும் என்று கலித்தொகை மாநாட்டிலே கொண்டுவந்த தீர்மானம் அதுகாறும் நிறைவேற்றப் பெறாமையால் அதனைக் கழக வழியாகத் தாமே நிறைவேற்றுதல்தலையாய கடன் எனத் தேர்ந்தார் திரு. வ. சு. ஆதலால் வள்ளலார்தம் ஒன்பதாம் அகவையில் உரையாற்றிய சோமுசெட்டியார் வளமனையே,. தம் முயற்சியால் மறைமலையடிகள் நூல்நிலையமாக விளங்கி வருதலால் அந்நிலையத்தின் மாடியிலேயே விரிந்து பரந்த மாமண்டபம் நிறுவுவது என்று திட்டமிட்டார். அதற்குத் தகவமைந்த பெயராக 'வள்ளலார் திருவருள் மண்டபம்' என்று பெயர் சூட்டுவது எனவும் தீர்மானித்தார்.

திருவருள் மண்டபத்தை 27-3-72 இல் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்கள். தொழிற்செல்வர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் விழாத் தலைமை ஏற்றார்கள். வள்ளலார் அருளிய அருட்பாவில் இருந்து திரட்டப்பெற்ற திருவருட்பாப் பெருந்திரட்டு என்னும் நூலைத் திரு. பா. நடராசன் அவர்கள் வெளியிட்டு விரிவுரையாற்றினார். அழகரடிகள் மண்டபச் சிறப்பை எடுத்துரைத்தார். வழக்கம்போல் வரவேற்பும் நன்றியும் திரு.வ.சு. அவர்கள் நிகழ்த்தினார். வள்ளலாரைப்பற்றிய அரிய நூற்காட்சி ஒன்றும் அமைக்கப்பெற்று விருந்தாக அமைந்தது.

*"1876 ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 15 ஆம் நாள் தோன்றியவர் தவத்திரு மறைமலையடிகளார். அவர்தம் நூற்றாண்டு விழா தமிழுலகெங்கும் கொண்டாடப்பெற்றது. அவர்புகழ் வளர்த்தலைப் புனிதக் கடனாகக்கொண்ட காக ஆட்சியாளர் எத்தனை எத்தனை துறைகளில் நினைவு கூர்ந்திருப்பார்! "தனித்தமிழ்த் தந்தை மறைத்திரு மறைமலை யடிகளார் நூற்றாண்டுப் பிறந்தநாள் புகுமுக ஆண்டும், செந்தமிழ்ச் செல்வியின் பொன் விழா ஆண்டும் ஒரே காலத்தில் தொடங்குவது அம்மை அம்பலவாணர் அருட்குறிப்பே ஆகும். எனவே, இப் பொன்விழா ஆண்டினைக் குறிக்கும் ஐம்பதாவது சிலம்பு ஒவ்வொரு பரலிலும் அடிகாளர் வரலாறு இடம் பெறுதல் வேண்டும் என்ற என் விருப்பத்திற்கு இசைந்து அடிகளாரின் புகழ் பரப்பும் மாண்புமிக்க மாணவர் திருக்குறள் பீடம் அழகரடிகள் மறைத்திரு மறைமலையடிகளார் வரலாற்று மாட்சி என்னும் தலைப்பில்எழுதியனுப்பிய முதல்கட்டுரையே வெளியிடப்பெறுகின்றது. இதனால் ஐம்பதாவது சிலம்பு முழுதும் தனித்தமிழ்த் தந்தை அடிகளாரின் புகழ்மணம் கமழும் என்றால்அது மிகையாகாது" என்று உரைக்கின்றார். திரு. வ. சு. அவ் வண்ணமே மாறா மணங்கமழும் நானம் செறிந்த மாணிக்கச்செப்பாக ஐம்பதாம் சிலம்புப் பரல்கள் கமழ்ந்தன.*

*28-1-77 ஆம் நாள் மறைமலையடிகள் நூற்றாண்டு விழா சென்னை இராசேசுவரி திருமண மண்டபத்தில் நிகழ்ந்தது. முன்னாள் உயர்நீதி மன்ற நடுவர் திரு. மகாராசன் வரவேற்புரைத்தார். அடிகளாரின் அருமை பெருமைகளைக் கூறிய அவர் "சவுக்கடி கொடுக்க வேண்டிய இடத்தில் சவுக்கடி கொடுத்தும், பன்னீர் தெளிக்க வேண்டிய இடத்தில்பன்னீர் தெளித்தும் பேச்சுத் தந்திரங்களைக் கையாண்டு பெரும்புகழ் ஈட்டியவர் மறைமலையடிகளார். ஆயிரக்கணக்கான மக்களின் மனக்கல்லைப் பிசைந்து கனியாக்கி, இறைவனுடைய வான்கருணை வெள்ளத்தில் ஆழ்த்திய பெருமை அடிகளாருடையது" என்றார்.*

*உயர்நீதிமன்ற நடுவர் திரு. மோகன் தொடக்கவுரை யாற்றினார். விழா ஏற்பாடு செய்த வ. சு. அவர்களை, "நான் மறைமலையடிகளாரைப் பின்பற்றுகிறேன் என்று சுப்பையாபிள்ளை அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அவர்கள் பின்பற்றத்தான் வேண்டும். அவர்கட்கு இப்போது 80 வயத நடக்கிறது. 80 வயது இளைஞராகிய அவர்கள் நூறாண்டு*

வாழ வேண்டும். ஏனென்றால் மறைமலையடிகளைப் போன்ற தலைவர்கள், அவருடைய உயர்ந்தகருத்துக்களைக் கொண்டவர்கள், நம் நாட்டிலே அடிகளாருடைய கருத்துமூலமாக நடமாடுகின்றார்கள் என்றால், அதற்குக் காரணம் தாமரைச் செல்வர்அவர்கள் செய்த சீரிய பணிதான் என்று சொல்வேன்" என்றார். பின்னே பேரறிஞர்கள் ஐவர் சீருரையாற்றினர். கவின்மிக்க நூற்றாண்டு விழா மலரைக் கல்வித் துறைச் செயலர் திரு. அரங்கபாசியம் அவர்கள் வெளியிட்டார்கள். தவத்திரு அழகரடிகள், திரு. மறை திருநாவுக்கரசு, திரு. ந. ரா. முருகவேள், திரு. கோவை இளஞ்சேரன், திரு. சிறுவை நச்சினார்க்கினியன் ஆகிய மறைமலையடிகளாரின் தொண்டர் ஐவரைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தினார் தவத்திரு. குன்றக்குடியடிகளார்.

செல்வியின் பொன்விழா 29-1-77 இல் நிகழ்ந்தது. தில்லிப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் சாலை இளந்திரையன் வரவேற்புரைத்தார். "இவ் விழா மூன்று நல்லோர்கள் பணிக்குப் பொன்விழா என்றுதான் நான் கருதுகிறேன். ஒருவர் பவளவிழாக் கண்டுவிட்ட தாமரைச் செல்வர் பெரியவர் சுப்பையாபிள்ளை அவர்கள். இன்னொருவர் என்னுடைய அன்புக்கும் நன்மதிப்புக்கும் உரிய நண்பர் கழகத்துப் பொது மேலாளர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள். இன்னொருவர் என்னுடையஅன்புத் தம்பி இந்த நாட்டிலே எந்தப் பணி ஆழமாக அமைதியாகத் திட்டமிட்டுச் செய்யவேண்டுமென்று நான் கருதுகிறேனோ அப் பணியிலே தனிச் சிறப்புப் பெற்றிருப்பவராகிய திரு. முத்துக்குமாரசாமி அவர்கள்" என்று செல்வியின் பொன்விழாக் காணச் சீர்மையாய் உழைத்துவரும் மும்மணிகளைப்பாராட்டி விழா மணிகளை வரவேற்றார். முத்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தொடக்க வுரையாற்றினார். சிலம்புச்செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை ஏற்றார்கள். "இந்த விழா தாமரைத்திரு. சுப்பையாபிள்ளை அவர்களுக்குத் தமிழ்ப்புலவர்கள், தமிழில் நம்பிக்கையுடையவர், தமிழ்ப் பற்றுடையவர் எல்லாரும் சேர்ந்து நன்றி தெரிவிக்கும் விழாவாக நாம் எண்ண வேண்டும்." என்று வேண்டினார். பொன்விழா மலரைத் தமிழ்நாடு அறநிலையத்துறை ஆணையர்திரு. எம். கே. பாலசுப்பிரமணியம் அவர்கள் வெளியிட்டார். இராசா சர். முத்தையா செட்டியார் அவர்கள் பாராட்டுரை வழங்கினார்.

டாக்டர் வ.செ. குழந்தைசாமி அவர்கள் தம் பாராட்டுரையிடையே, "இன்று தமிழகத்தில்மூன்று பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அவற்றுள் இரண்டைவிடச் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் மூத்தது. தமிழ்ப்பணியில்- தமிழ் நூல்கள் வெளியிடுவதில் சென்னைப் பல்கலைக் கழகத்தைவிடச் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் மூத்தது என்று கூறுவது உண்மையே தவிர உயர்வு நவிற்சி ஆகாது" என்றார்.

மேலும் அவர், "ஊதிய அடிப்படையில்நூல்களை வெளியிட வேண்டும் என்று சுப்பையாபிள்ளை அவர்கள் கருதியிருப்பார்களானால் இந்த 1600 நூல்களில் ஒன்றுகூட வெளிவந்திருக்காது. ஊதியத்தைக் கருதாமல் - கொள்கைக்காக - தனதுமொழி வளரவேண்டும் - தனது இனம் வாழவேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு நூல்களை வெளியிடுவது என்ற கொள்கை ஓர் அரசாங்கத்திற்கு இருக்கலாம். ஆனால் ஒரு தனி நிறுவனம் இத்தகைய பணிகளைச் செய்தது என்றால், நான் அறிந்த வரையில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைத் தவிர வேறு இல்லை. அதற்கு நன்றி சொல்லத் தமிழ்மக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்றார், கழக ஆட்சியாளர் திரு. வ.சு. இரண்டு விழாக்களிலும் தக்காங்கு நன்றியுரைத்துப் பேசினார்.

மறைமலையடிகள் நூல்நிலையத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவு விழா மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் 4-11-79 காலையில் திரு. ஏ.எம். சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் சீருற நிகழ்ந்தது. அறிஞர்கள் பலர் உரையாற்றினர். மறைமலையடிகள் நூல்நிலைய நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி நன்றி கூறினார்.

மாலை நிகழ்ச்சி, உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு.எம். எம். இசுமாயில்அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. அடிகளார் நூலகம், அதனைப் போற்றும் முறை, அடிகளார் நூல்களைக் கற்ற முறை ஆகியவற்றை அருமையாக விரித்துரைத்துச் சீரியதோர் வரவேற்புரையாற்றினார் வரவேற்புக்குழுத் தலைவர் உயர்நீதிமன்ற மேனாள் நடுவர் திரு. மகாராசன் அவர்கள். விழாவைத் தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாசு பட்வாரி அவர்கள் தொடங்கிவைத்தார்கள். தொழில் நுட்பப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. பி. சிவலிங்கம் அவர்கள் மறைமலையடிகளார் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் எழில்மிக்க விழாமலரை வெளியிட்டுச் சிறப்புரை யாற்றினார். கழக நூலாசிரியர் புலவர் இரா. இளங்குமரன் அவர்களுக்குக் 'கழக இலக்கியச்செம்மல்' என்ற பட்டத்தையும், கழக நூல் விற்பனைப்பாணியாளர் திரு. சி.த. செல்வராசு நூல் கட்டடப்பகுதிப் பணியாளர் திரு. சி.த. செல்வராசு நூல் கட்டடப்பகுதிப்ப ணியாளர் திரு. கோ. பார்த்தசாரதி ஆகிய இருவருக்கும் 'கழகப் பணிவலவன்'என்னும் பட்டமும் பரிசும் வழங்கிப் பொன் னாடை போர்த்தினார் அமைச்சர். கழகப்பொது மேலாளர்திரு. இரா. கலியாணசுந்தரம் அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள்.

இவையெல்லாம் வ.சு. அவர்கள் கொண்டாடிய விழாக்களில் குறிப்பிடத்தக்க சிலவேயாம்; முற்றமுடிந்த செய்திகள் அல்ல. அவற்றைப் பட்டியலிட்டுக் காட்டவே பக்கங்கள் பலவாம்.

நூல் வெளியீட்டு விழாக்கள், நூற்பேழை அறிமுக விழாக்கள் புலவர் நினைவு விழாக்கள் ஆண்டுதோறும் எடுக்கப்பெறும் தவத்திரு. மறைமலையடிகளார் விழாக்கள், அவ்வப்போது கூட்டம் பெறும் ஆய்வுக்கருத்தரங்குகள், நூற்காட்சி கண்காட்சிகள் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் தனித்தனியே காண்பதாயின் அதுவே ஒரு பெருநூலாகும்.

ஒரு விழா எடுக்கவே எத்தனை அல்லவர்கள்! அயராத முயற்சிகள்! விழாவுக்குத் தக்கவர்களைத் தேர்ந்தெடுத்தல், உடன்பாடு பெறுதல், கலந்து கொள்ளச்செய்தல், விழாவுக்குரியவர் வந்த பின்னும் அவர் உரை கேட்பவர்கரு உவப்பாக - கொள்கைக்கு முரணாததாக - தரத்தில் குறையாததாக இருக்க வேண்டுமே என்ற கவலை. இவ்வளவும் பின்னிப்பிணைந்து கிடக்க இத்துணை விழாக்களை எத்தடையும் எக்குறையும் இல்லாமல் திரு. வ.சு. எப்படி நடத்துகின்றார் என்றால்அவர், செயல்மாண்புக்கு வேறு சான்று வேண்டுவதில்லை.

ஒரு மலர் வெளியிடவேண்டும் என்றால்அதற்குப் பன்னூறு பேர்களிடம் கடிதத்தொடர்பு கொள்ளவேண்டும். நினைவூட்டல் கடிதமும் எழுதவேண்டும் அவ்வாறே விழாக்களில் தலைமை ஏற்கவும் உரையாற்றவும் தக்காரைப் பன்முறை எழுதியும் நேரில்சென்றும் தொடர்புகொண்டு கடனாற்ற வேண்டும். ஒரு விழா நிகழ்ச்சி ஏற்பாட்டின்போதே

மற்றொரு விழாவுக்கு - மாநாட்டிற்கு - கூட்டத்திற்கு - மலருக்கு ஏற்பாடும் நடந்துகொண்டே இருக்க வேண்டும்! அம்மம்ம! இவற்றைக் கழக ஆட்சியாளர் தம்அகவை முதிர்விலும் எப்படிச் செய்து முடிக்கின்றார் என்றால், இவரால் இவ்வாறு செய்யாமல் இருக்க முடியாது என்பதே மறுமொழியாகும். மற்றும் தொட்டவையெல்லாம் துலங்கச்செய்தலில் வல்ல வ.சு. அவர்களின் பார்வையில் பட்டவர்கள் எல்லாம் பாராட்டும் பணி செய்யப் பழக்கப்பட்டவர்கள்; வெற்றிகள் அமைந்து கிடக்கும் ‘மையம்’ இது.

# 25. தேடித்தொகுத்தலும் பேணிக்காத்தலும்

*(தொகுத்தலை கலை, தொல்பழமையானது; தொல் காப்பியர்க்கு முன்னரே அக் கலை அரும்பி வளர்ந்து விட்டது. தொகுப்பாக அமைந்த மரங்கள் 'தோப்பு' ஆகும்! தோப்பிலா ஊரே இருந்தது இல்லை, தமிழகத்தில் முன்னாளில்! 'தோப்பூர்' என்று ஊர்ப்பெயர்களும் இருந்தன. தொகுத்து வைக்கும் பொருள் தொகை! தொகையறியாக் குடும்பம், வகையறியாது கெடும்! கலைத்தொகுப்புக் கவிந்த ஓரிடம் திருக்கோயில்! அக் கலைச் செல்வத்தைத் தொகுத்துக் கவினுறக் காப்பது கடவுள் தொண்டு.)*

"கழக ஆட்சியாளர் திரு.வ.சு. அவர்கள் தொகுப்புக்கலை திருவாளர்! திட்டமிட்டுத் திறமாகத் தொகுக்கும் தேர்ச்சியாளர் ஆகையால் இவற்றையெல்லாம் எப்படித் தொகுத்து வைக்க இயன்றது?" என்று நோக்குவார்வியக்கும் வண்ணம் அரிய நூல்களையும் பொருள்களையும் தொகுத்து வைத்துள்ளார். அவர்கள் எழுதியுள்ள பதிப்புத்துறையில் பட்டறிவு, படந்தொகுத்தலில் பட்டறிவு, திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் என்னும் தொடர் கட்டுரைகளால் அறியலாம். அவர்கள் தொகுத்திருக்கும் அருங்கலைச் செல்வங்களுக் கெனவே முனைவர்பட்டம் வழங்கிப் புகழ கொள்ளுதல் சான்றோர் கடமை.

பதிப்புத்துறைக்கு எவ்வாறு அண்ணல் திருவரங்கனார் வழிகாட்டியாக இருந்தாரோ, அவ்வாறே அவர் படத்தொகுப்புக்கு நூல் தொகுப்புக்கும் வழிகாட்டியாக இருந்துள்ளார் என்பதை நெடுஞ்சாரப் பல்கால் நினைவுறுத்தி உருகிநிற்பார் திரு. வ.சு. அரங்கர் தொகுத்து வைத்த அரிய கடிதங்கள் இதழ்களை யெல்லாம் பெருமிதத்துடன் பாராட்டுவார்.

திருவரங்கனார் ஈழத்தில் இருந்த காலையில் அங்கிருந்த விவேகானந்தர் கழகத்தில் பெரும் பங்குகொண்டு தொண்டாற்றினார். அந்நாளில் தவத்திரு விவேகானந்தர். இராகிருட்டிணர், அபேதானந்தர் ஆகியவர்களின் திருவுருவப்படங்களில் பலவற்றை வாங்கிப் பாளையங் கோட்டையில் உள்ள வீட்டின் மாடியில் மாட்டி இருந்தனர். பின்னர் மறைமலையடிகளார் தொடர்பு உண்டாகவே, அவர்தம் பலநிலைத் திருவுருவப்படங்களையும் அவர்தம் ஆசிரியர் சைவசித்தாந்த சண்டமாருத சோமசுந்தர நாயகர் திருவுருவப்படத்தையும் வரவழைத்து அழ அமைத்தனர்.

கழகம் தோன்றிய பின்னர்த் திருநெல்வேலிக் கழகத் தலைமை நிலையத்தில் ஓவியர் நெல்லையா அவர்களைக் கொண்டு மெய்கதேவர், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிக்கு ஆகிய சந்தானகுரவர் நால்வர் திருவுருவப் படங்களை திருவள்ளுவர், அப்பரடிகள், திலகவதியார், தண்டபாணி அடிகள், சிவஞானமுனிவர், குமரகுருபர அடிகள் ஆகியோர் திருவுருவப் படங்களையும் பெரிதாக எழுதச் செய்தார்.

சென்னைப் பெத்துநாய்க்கன்பேட்டை காசிவிசுவநாதர் கோயிலில் எழுந்தருளியுள்ள கூத்தப்பிரான், சிவகாமியம்மை, மணிவாசகர் எழிலுருவங்களைச் சித்த மருத்துவப் பெரும்புலவரும், மறைமலையடிகள்பால் மட்டற்ற அன்பருமாகிய திரு. ஆனந்தம் அவர்கள் படம் பிடித்து வைத்திருந்தனர். அதனைக் கழக அமைச்சர் அரங்கனார் சிறிதும் பெரிதுமாகப் படங்கள் எடுத்து மூவண்ணந்திகழ ஓவியமாய் இதழ்களில் வெளியிட்டும், படமாக விற்றும் பரப்பினர். அவ்வாறே திருமயிலைத்திருவள்ளுவர் திருக்கோயிலில் காணும் திருவள்ளுவர் திருவுருவை நெல்லை ஓவியர் நெல்லையா அவர்களைக்கொண்டு அழகொழுக எழுதிப் படமாக்கிப் பரப்பினார். இவையெல்லாம் படந்தொகுத்தலில் திரு. வ. சு. அவர்களுக்குக் கிடைத்த முன்னோடி வாய்ப்பும், உடன் இருந்து செய்யும் வாய்ப்பும் ஆம்.

1938 ஆம் ஆண்டில் மூர் அங்காடியில் உள்ள பழைய புத்தகக் கடை ஒன்றில் ‘சரசாங்கி’ என்னும் நாடக நூல் ஒன்று வ. சு. அவர்களுக்குக் கிடைத்தது. சேக்சுபியரின் ‘சிம்பலின்’ என்னும் நாடகத்தைத் தழுவிய அந்நூல், திருவள்ளூர் இராம சலசலோசனச் செட்டியார் அவர்களால் இயற்றப்பெற்றது.

பெரும் புலவர்கள் பலரின் சாற்றுக்கவிகளுடன் கண்டஅந் நூலின் சிறப்பறிந்து நாடகப்பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களைக் கண்டு திரு.சலசலோசனச் செட்டியார்அவர்களைப் பற்றிக் கேட்டனர். அவர்தம் புலமைச் சிறப்பையும், அவர் தம் முன்னோர் புலமைச் சிறப்பையும் விரித்துக்கூறி அந்நூலை வெளியிடுமாறு சம்பந்த முதலியார் அவர்கள் தூண்டினர்.

அந்நூலை அச்சிட வேண்டுமாயின் ஆசிரியர் உருவப்படமும் வரலாற்றுக் குறிப்பும் வேண்டுமென வ. சு. கருதினர். ஆகலின் கழக நூலாசிரியர்களில் ஒருவராகிய சேலை திரு. சகதேவ முதலியார் அவர்களுக்கு எழுதினர். அவர் ஆங்கு வினவி அறிந்து சென்னை மண்ணடிக்கெதிரில் பிராட்வேயில் உள்ள அம்மிக்கல், ஆட்டுரல் விற்கும் திரு. மகாதேவ செட்டியரையோ, ஐயப்பச் செட்டித்தெரு 39 ஆம் எண் வீட்டில் இருக்கும் பாலசுப்பிரமணியன் செட்டியாரையோ கண்டு கேட்பின் கிடைக்கும் என்ற செய்தியைத் தெரிவித்தனர்.

வ.சு. அவர்கள் திரு. பாலசுப்பிரமணியன் செட்டியார் அவர்களைக் கண்டு கனிவோடு வேண்டினர். மயிலாப்பூரில் தம் உறவினர் ஒருவர் வீட்டில் படம் இருப்பதாகச் சொல்லி அததனை வாங்கிக் கொண்டுவந்து தந்தார். அதனைப் பெற்ற மகிழ்ச்சியைச் சொல்லச் சொல்லும் உண்டோ? "உரிய வழியில் முயலாதிருப்பின் இளமையிலேயே பெரும்புலமை பெற்று மறைந்த தமிழ்ப் பெருமகனார் ஒருவரின் உருவப்படத்தைத் தமிழகம் இழந்திருக்கும்" என்று கூறும் அவர்கள் உரையே அவர்கள் அன்று கொண்ட மகிழ்வைக் காட்டும்.

தமிழ் ஆங்கில மருத்துவ அகராதியைத் தொகுத்து அச்சிட்ட அறிஞர் திரு. தி. வி. சாம்பசிவம்பிள்ளை அவர்கள், காவல் துறையில்சி. ஐ.டி. கண்காணிப்பாளராகப் பணி செய்தவர். மேலைநாட்டுக் கிறித்துவப் பெரியார்கள் இயற்றிய தமிழ் ஆங்கில அகராதிகளைக் கண்டு தமிழ் ஆங்கில மருத்துவ நூல்களையும் இயைபுநூல் (Chemistry) செடிகொடிநூல் (Botany) ஆகியவற்றையும் அரிதில் தேடி அமைத்து ஆராய்ந்து 'அ முதல் ஔ' முடிய ஒரு பாகமாகவும், 'க முதல் கௌ' முடிய இரண்டாம் பாகமாகவும் 1752 பக்கங்களில் வெளியிட்டார். அதனை வெளியிடுதற்குத் தமக்குத் தஞ்சையில் இருந்த இரண்டு வேலி நிலங்களையும் விற்று விட்டார். அத் தொகையும் பேதாமையால் எடுத்த பணி இடையறவு படும் நிலையில்

சென்னை மாநில அரசு சிந்தாதிரிப் பேட்டையில் ஒரு வீடு அமைத்துக் கொடுத்து பொருளுதவியும் புரிந்தது. அகராதியில் மூன்றாம் பாகத்திற்குரிய படிவங்கள் அச்சிட்டு முடியும் நிலையில் திடுமென இயற்கை எய்தினார். அவர்தம் உடைமைகளை எல்லாம் அரசினர் எடுத்து வந்து சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஓர் அறையில் வைத்துப் பூட்டினர். அதன்பின் அதனைக் கருதுவார் இன்றி அமைந்தது.

இச் செய்திகளைத் திருவருள் துணையால் 1966 இல் கழக ஆட்சியாளர் அவர்கள் அறிந்தனர். மருத்துவ அகராதி எந்த அளவில் அச்சிடப்பெற்றிருக்கிறது என்பதை அறிய விரும்புவதாகச் சென்னை மாவட்ட ஆட்சியாளரிடம் வேண்டினர். அவ்வறை தூசி தும்பு ஒட்டடை படிந்து கிடந்தது. அதனைத் தூய்மை செய்து உள்ளே செல்ல, ஒரு கள்ளிப்பெட்டி நிறைய மருத்துவ நூல்களும் நிகண்டு நூல்களும் செல்லுக்கு இரையாகிச் சிதைந்து கிடந்ததைக் கண்டு நோவுற்றனர். ஓர் இரும்புச்சட்ட அடுக்கில் (Steel rack) அச்சிட்ட அகராதிப் படிவங்கள் சில படிகளும், இறுதியில் 2174 எண்ணுள்ள பக்கம் வரை அச்சிட்ட படிவங்களும் இருந்தன. அதன் ஓர் அடுக்கில் பள்ளியிறுதிச் சான்றிதழ் ஒன்று இருந்தது. அதில் திரு. தி. வி. அண்ணாமலைப்பிள்ளை, அம்மாப்பேட்டை, (தஞ்சை மாவட்டம்) என்ற முகவரி காணப்பெற்றது. அதைக்கண்டு இவர்சாம்பசிவம் பிள்ளையின் தம்பியராக இருக்கவேண்டும் என்று ஊகித்தனர். உடனே அண்ணாமலைப் பிள்ளை அவர்கட்கு, ‘ஐயா, யான் திரு. தி. வி. சாம்பசிவம்பிள்ளை அவர்களுடைய படமும் வரலாறும் பெறுவதற்கு முயன்று வருகின்றேன். தாங்கள் அவருடைய தம்பியராக இருத்தல் வேண்டுமென்று தெரிகிறது. படமும் வரலாறும் தருவீர்களாயின் தங்கட்கு நன்றி மிகவும் உடையனே ஆவேன்” என்று கடிதம் வரைந்தனர். அக் கடிதம் கிடைத்ததும் அவர்கள் வியப்புற்றுத் தாம் சாம்பசிவம்பிள்ளை உடன்பிறந்தார்தாம் என்றும், அண்மையில் சென்னைக்கு வரும்போது படத்தினை எடுத்து வருவதாகவும் மறு மொழி எழுதினர். அவர்கள் எழுதியபடி படத்தைக் கொண்டு வந்து சேர்ந்தனர். வரலாற்றுக் குறிப்பும் கூறினர். இவ்வகையில்திரு. சாம்பசிவம்பிள்ளை அவரகளின் படமும் வரலாறும் தமிழ் உலகம் அறிய வாய்ப்பு உண்டாயிற்று.

அப் பெருமகனார் உழைப்பையும் உணர்வையும் நெஞ்சார நினைந்து நெக்குருகி ஆட்சியாளர் கூறும் உரை பொன்

னெழுத்தில் பொறிக்கத்தக்கதாம். 'தலைமுறை தலைமுறைக்கும் நீடுபயன் தரக் கூடிய செய்தற்கரிய பெரிய தொண்டில் ஈடுபட்டு, அரசு அரவணைப்பில் இருக்கவேண்டிய துன்பநிலை எய்திப் புகழுடம்பை விட்டுச் சென்ற பெருமகனாரை மறக்கலாமா? அவருக்கன்றோ சிலை எடுக்க வேண்டும்? சித்த மருத்துவ மனைக்கு அவர் பெயரையன்றோ சூட்டுதல் வேண்டும்? சென்னையில் அவர் மறைந்த சிந்தாதிரிப்பேட்டைக்கு அவர் பெயரை இடுதலும் வேண்டும்!'

தமிழ் ஆங்கில அகராதியை வெளிப்படுத்திய டாக்டர் மிரான் வின்சுலோ அவர்கள் உருவப்படம் பெற ஆட்சியாளர் பெரிதும் விரும்பினர். அவர் அரும்பாடுபட்டு 976 பக்கங்களில் அகராதியைப் பிழையற வெளியிட்டுப் பெருமை எய்திய பெருமகனார். அவ்வகராதி வெளிவந்த ஈராண்டுகள் கழித்துத் தம் நாடாகிய அமெரிக்காவுக்குச் செல்லும் வழியில் நன்னம்பிக்கை முனையில் இறையடி அடைந்தார். அவர் புகைப்படத்தைப் பெறுவதற்கு எழுதிக் கொண்டே இருந்தனர். மறைமலையடிகள் நூல்நிலைய நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களைக் கொண்டு அமெரிக்கா, இலண்டன், இலங்கை, இந்தியா ஆகியவற்றிலுள்ள நூலகங்கள், திரு மறைச் சங்கங்கள், கிறித்துவ மன்றங்கள் ஆகியவற்றில் 40 இடங்கட்கு எழுதினர். அவற்றில் வெளிநாடுகளில் இருந்து எண்மரிடமிருந்தும், இந்தியாவில் மூவரிடமிருந்தும் மறுமொழிகள் வந்தன. இலங்கையில் இருந்து எதுவும் வரவில்லை. நியூயார்க்கிலுள்ள மிஷனரி ரிசர்ச்சு சொசையற்றி தன்னிடத்துள்ள (A Century in Ceylon) என்னும் நூலிலுள் படத்தை வெட்டியனுப்பிப் பரூவகை தந்தது. அப் படத்தைப் பெற்ற மகிழ்ச்சியைப் பல ஆயிர ரூபா கொடுப்பினும் யான் படம் கிடைத்தபோது பெற்ற இன்பத்தைப் பெறமாட்டேன் என்பது எனது நெஞ்சறிந்த உண்மை.

'நாடிய பொருள் கைகூடும்'

'எண்ணிய எண்ணியாங் கெய்து! எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்'

என்ற முதுமொழிகள் நினைவிற்று வந்து இன்பத் அளித்தன" என்று குறிப்பிடுகின்றனர் ஆட்சியாளர். இவ்வாறே, 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' இயற்றிய கால்டுவெல் பெருமகனார் திருவுருவப்படத்தைத் தூத்துக்குடி கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியில் இருந்தும், திருக்குறள், நாலடியார்,

*திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த டாக்டர் ஜி.யு. போப் அவர்கள் படத்தையும், மொழி பெயர்த்தற்காகத் தம் கைப்படச் சீர் பிரித்து வைத்திருந்த திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களையும் நெல்லை மாவட்டம் சாயர்புரம் போப் உயர்நிலைப் பள்ளியில் இருந்தும், தமிழ் போர்ச்சுக்கீசு அகராதி இயற்றிய தத்துவ போதகர் இராபர்ட் டி நொபிலி அவர்கள் படத்தை மதுரை நொபிலி அச்சகத்தில் இருந்தும், தேம்பாவணி முதலிய நூல்கள் இயற்றிய வீரமாமுனிவர் படத்தை அச்சிடப்பெற்ற நூல்களில் இருந்து பெரிதுபடுத்தி எழுதியும், நன்னூல் பாயிரத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும், சீவகசிந்தாமணி நாமகன் இலம்பகத்தை நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பித்தும் தொண்டு செய்த என்றி பவர் அவர்கள் திருவுருவப்படத்தை மதுரை இறையியற் கல்லூரிப் பேராசிரியர் அவர்கள் வழியாகப் பெற்றும், ஆங்கிலத் தமிழ் அகராதி, ஆங்கிலத்தமிழ்ப் பழமொழி அகராதி ஆகியவற்றைத் தொகுத்து வெளியிட்ட பீற்றர் பெர்சிவல் அவர்கள் உருவப்படத்தைச் சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்தும், 1868 ஆம் ஆண்டுவரை அச்சிடப்பெற்ற தமிழ்நூல்களுக்கு முதல் முதல் இனவாரியாக விளக்கப்பட்டியல் அச்சிட்ட யோவான் மர்டாக் அவர்கள் படத்தைச் சென்னை, கிறித்துவ இலக்கியக் கழகத்தில் இருந்தும், இராமாநுசக் கவிராயரிடம் பயின்று திருக்குறள் 63 அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த துரு ஐயர் அவர்கள் படத்தை வேப்பேரி பெண்டிக் மகளிர் உயர்பள்ளித் தலைமை யாசிரியை செல்வி திலகவதி பால் அவர்கள் வழியாகவும், துருஐயர் மொழிபெயர்த்த 63 அதிகாரங்களுக்கு மேலுள் 70 அதிகாரங்களையும் என்றி பவர் மொழிபெயர்த்த நன்னூல் பாயிரத்திற்கு மேலுள்ள எழுத்து சொல் அதிகாரங்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நிறைவு செய்தும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆராய்ச்சிக் காக அறக்கட்டளை நிறுவியும் தொண்டு செய்த யோவான் லாசரசு அவர்கள் படத்தை அவர்கள் பெண்மக்கள் வழியாகவும், தமிழ் ஆங்கிலத்தமிழ் அகராதியைத் தொகுத்து வெளிப்படுத்திய பெப்ரிசியசு அவர்களிடத்தைச் சென்னை வேப்பேரி டயோசிசன் அச்சகத்தில் இருந்தும், இந்திய மொழிகளையெல்லாம் மதிப்பீடு செய்து* (Linguistic Survey of India) *என்ற தலைப்பில் பதினொரு தொகுதிகள் வெளியிட்ட கிரியர்சன் அவர்கள் படத்தைக் கல்கத்தாவிலுள்ள நாட்டுப் பொதுமை நூலகத்தில் இருந்தும், தென்னிந்தியக் குலமும்*

குடியும் என்னும் தலைப்பில் ஏழு தொகுதிகளைப் படங்களுடன் வெளியிட்ட தர்ஸ்டன் அவர்கள் படத்தைக் கல்கத்தாவிலுள்ள நாட்டுப் பொதுமை நூலகத்தில் இருந்தும், தென்னிந்தியக் குலமும் குடியும் என்னும் தலைப்பில் ஏழு தொகுதிகளைப் படங்களுடன் வெளியிட்ட தர்ஸ்டன் அவர்கள் படத்தைச் சென்னை அரும்பொருட் காட்சிக் கையேடு (Museum Hand Book) என்ற நூலில் இருந்தும், திருக்குறளையும், கைவல்ய நவநீதம் என்னும் நூலையும் இலத்துன்மொழியிலும் செருமன் மொழியிலும் மொழி பெயர்த்த டாக்டர் கிரால் படத்தைத் தரங்கை மிசியோன் சரித்திரம் என்ற நூலில் இருந்தும், ஆங்கிலத்தில் உள்ள (Human Anatomy) யை மனுஷவங்காதி பாதம் என்று தான்யேல் சாப்மென் என்பவர் தமிழில் மொழிபெயர்த்ததையும், (Surbery)யை இரண வைத்தியம் என்று சொசுவா டன்வர்த் என்பவர் தமிழில் மொழி பெயர்த்ததையும் (Hoopers Physician's Vademeeum) என்ற நூலை வைத்திய சாகரம் என்ற வில்லியம் பவுல் என்பவர் மொழிபெயர்த்ததையும் செப்பஞ்செய்து விளக்கப்படங்களுடன் வெளியிட்ட டாக்டர் கிறீன் அவர்கள் படத்தை இலங்கைத் தமிழ் விழா மலரில் இருந்தும், தமிழ் இலத்தீன் இலக்கணத்தையும், தமிழ் இலத்தீன் அகராதியையும் வெளியிட்ட சீகன்பால்க் அவர்கள் படத்தைத் தரங்கம்பாடி மிசியோன் சரித்திர நூலில் இருந்தும் சென்னைப் பல்கலைக்ழகப் பேரகாராதியை உருவாக்க முதல் ஆசிரியராக அமர்த்தப்பெற்ற சே. எச்.சாண்டலர் படத்தை அன்பர் ஒருவரிடமிருந்தும், 'The Dravidian Element In Indian Culture' என்னும் நூலை எழுதிய கில்பர்ட் சிலேட்டர் படத்தைச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருந்தும், தவத்திரு ஈராசு பாதிரியார், பாப்லிதுரை ஆகியவர்கள் படங்களை அவர்களிடமே கேட்டுப்பெற்றும் தொகுத்தனர். அவற்றைப் பெரிய படமாக எழுதியும் நிழற் படமாக எடுத்தும் காட்சியில் வைத்தனர்.

இத் தமிழ் அறிஞர்களின் படங்களைத் தேடித் தொகுப்பதற்கு எத்துணை விடாப்பிடியான முயற்சி, எத்துணை நேரப்போக்கு, எத்துணைப் பொருட் செலவு வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். அவ்வாறு எண்ணிப் பார்க்கும் மனம் கழக ஆட்சியாளர் ஆர்வத்தையும், செயல் திறத்தையும், அயரா உழைப்பையும் அவரைச் சார்ந்தோர் சீர்மையையும் தெள்ளிதின் உணரும்.

*ஆட்சியாளர் அவர்கள் திருக்குறளில் முதல் 13 அதிகாரங்களை ஆங்கிலத்திலேர மொழிபெயர்த்த எல்லிசு, தமிழ் இலக்கணத்தை ஆங்கிலத்தில் எழுதிய இரேனியசு, தமிழ் ஆங்கில அகராதி எழுதிய ராட்லர், நீதிநெறி விளக்கத்தை ஆங்கிலத்தில் பெயர்த்த எச். ஃடோக்சு, வெற்றிவேற்கயைனைப் பெயர்த்த தெயிலர், சிவஞானபோதம், சிவப்பிரகாசம் ஆகியவற்றைப் பெயர்த்தகோசிங்டன், தமிழ் ஆங்கில அகராதி, ஆங்கிலம் தமிழ் அகராதி ஆகியவற்றை அமைத்த லெவிசு பால்டிங், பாவலர் சரித்திர தீபகம் இயற்றிய சே. ஆர். ஆர்னால்டு, தருக்க சாத்திரம் இயற்றிய வில்லியம் நெவின்சு, தமிழ் ஆங்கிலப் பழமொழி அகரவரிசை தொகுத்து வெளியிட்ட சென்சன்* 'Tales and poems of South India' *என்ற நூலைஎழுதிய எட்வர்டு சூவிட் இராபின்சன், தென்னிந்திய நாட்டுப் பாடல்களைத் தொகுத்து ஆங்கிலத்தில் விளக்கத்துடன் மொழி பெயர்த்த சார்லசு இ. கோவர் ஆகியோர் உருவப் படங்களைப் பெறுவதற்கு நாளும் பொழுதும் நன்கனம் முயன்று வருகின்றனர். அவர்கள் எடுத்த பணி இடையறவு பட்டது இல்லை. தமக்கென வாழாது உலகுக்கென உன்னி உன்னி உயர்பணி செய்தவரும் அவர்கள் எண்ணத்தை நிறைவேற்ற ஊழ் முந்து நிற்கக் காண்டும் ஆகலின், அவர்கள் எதிர்பார்பவற்றுடன் எதிர்பாரா நலங்களும் எய்துதல் ஒருதலை!*

*அவர்கள், அரிய பெரிய காட்சி அமைக்கும் வகையில் படங்களையும் நூல்களையும் திரட்டுவதற்கு வாய்த்த வாய்ப்புகளை அவர்களே தெள்ளிதின் விளக்கியுள்ளனர்:*

*“1924 ஆம் ஆண்டில் தொடங்கி இன்றுகாறும் இடையறவு படாமல் கழகம் நடத்திவரும் திங்கள் வெளியீடாகிய ‘செந்தமிழ்ச் செல்வி’ படந் தொகுப்பதற்குச் சிறந்த வாயிலாக அமைந்திருக்கின்றது.”*

*“சங்க இலக்கியச் சொற்பொழிவு நூல்கள், சிற்றிலக்கியச் சொற்பொழிவு நூல்கள், தமிழக வரலாற்றுச் சொற்பொழிவு நூல், அரசியல் அறிவுச் சொற்பொழிவுநூல், பெரியபுராணச் சொற்பொழிவு நூல் ஆகியவற்றை மாநாடுகள் நடத்தி வெளியிட்டதும் படம் தொகுப்பதற்கு வாயிலாக அமைந்தது.*

*“பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு, திருவருட்பாப் பெருந்திரட்டு, விடுதலை வீரர் ஐவர், தமிழ்ப் புலவர்களின் வரலாறுகள், அரசியல் தலைவர்களின் வரலாறுகள், அறிவியற் புலவர்களின் வரலாறுகள் முதலியவற்றை வெளியிடு முகத்தான் படந்தொழுப்பதற்கு வாயில் ஏற்பட்டது.*

“1008 ஆவது வெளியீட்டுவிழா மலரும், கழகத் திருவள்ளுவர் விழா மலரும், கழகப் பொன்விழா மலரும் படந் தொகுப்பதற்கு வாயிலாக அமைந்தன.

“இந்தியாவின் அடிமைத் தளையினை நீக்கி உரிமை வாங்கிக் கொடுத்துப் பெரும் புகழோடு மறைந்த காந்தியடிகள், விடுதலைக்குழைத்து விடுதலை பெற்றபின் இந்திய முதலமைச்சராக 17 ஆண்டுகள் புகழ்பெற ஆட்சி செய்து மறைந்த பண்டியத சவகர்லால் நேரு, தமிழ்மொழிக் கேற்பட்ட தீங்கினை நீக்கவும், தமிழ்மக்கள் முன்னேற்றத்திற்குத் திட்டங்கள் வகுக்கவும் முயன்று தமிழக அரசைக் கைப்பற்றி அதன் முதலமைச்சராக இரண்டாண்டுக் காலம் வீற்றிருந்து புகழோடு மறைந்த சி.என். அண்ணாதுரை ஆகிய மூவரும் பிரிந்தவுடன் உலகப் பெருமக்களும், அரசியல் தலைவர்களும், தமிழ்ப் புலவர்களும் வரைந்தனுப்பிய இரங்கலுரை இரங்கப் பாக்களைத் தொகுத்து முறையே உரிமையின் பரிசு, உலகப் பேரொளி, தமிழ்ப் பேரொளி என்ற தலைப்புக்களில் வெளியிடப்பெற்ற மூன்று நூல்களும் படம் தொகுப்பதற்குச் சிறந்த வாயில்களாக அமைந்துள்ளன.

மறைமலையடிகள் நினைவு விழாக்களும், நூல் வெளியீட்டு விழாக்களும், கழகக் கட்டிடத் திறப்பு விழாக்களும், தமிழ்ப் பெரும் புலவர் விழாக்களும் இவை போன்ற பிற விழாக்களும் படத்தொகுப்பதற்கு வாயில்களாக அமைந்துள்ளன.

மறைமலையடிகள் நூல்நிலையமும், சிவஞானமுனிவர் நூல் நிலையமும், மறைமலையடிகள் கலைமன்றமும், குமரகுருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளியும், திருவள்ளுவர் புலவர் கல்லூரியும் படத் தொகுப்பதற்கும் காப்பதற்கும் வாயில்களாக அமைந்துள்ளன.

“கழகம் இதுகாறும் வெளியிட்டுள்ள பலதுறை நூல்களும் படந் தொகுப்பதற்கு வாயில்களாக அமைந்தன. என மூத்த மருகரும் கழகப் பொது மேலாளருமான திரு. இரா. கலியாண சுந்தரம் (பி.எஸ்ஸி), என் இளைய மருகரும்மறைமலையடிகள் நூல்நிலையத்தின் நூலகருமான திரு. இரா. முத்துக்குமாரசாமி (எம்.ஏ., பி.லிப்), என் நெருங்கிய உறவினரும் மகனாரும் ரிசர்வ் பாங்கு அலுவலருமான திரு. அ. சண்முகம் (பி.எஸ்ஸி) ஆகிய மூவரும் படப்பிடிப்புத் திறனைக் கைவரப்பெற்றவர்களாக அமைந்துள்ளனர்.

*திரு. வ. சு. அவர்கள், ஒரு படத்திற்காக எப்பாடு பட்டு விடாப்பிடியாக நின்று எய்தப் பெறுவார்களோ, அவ்வளவு முயற்சியும் ஆர்வமும் நூல்களைத்தொகுத்தல், புலவர் கடிதங்களைத் தொகுத்தல் ஆகியவற்றிலும் செலுத்துவர். அறிஞர் சேம்சு ஆலன்' நூல்கள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்து வெளியிட வேண்டும் என்னும் ஆர்வம் கொண்டனர். ஒரே ஒரு நூல் கிட்டிற்றில்லை. அந் நூலைப் பெற அரிதின் முயன்றனர். எங்குச் சென்றாலும் அந் நூல் நினைவாகவே தேடினர். அறிஞர்களிடத்தெல்லாம் உசாவினர். அந் நிலையில், தம் நூலகம் முழுவதையும் விலைக்கு எடுத்துக்கொள்ளுமாறு ஒரு நூலகத்திற்கு உரியவர் வேண்டினார். தாம் தேடும் நூல் அவண் உளதா என்பதை வினாவி அறிந்தார் திரு. வ. சு. அந் நூல்உள்ளது எனவும், ஆனால் அஃது ஓர் அன்பர் கைவயம் எளதெனவும் கூறினார் நூலக உடைமையர். அந் நூலையும் சேர்த்துத்தருவதாயின் நூல்நிலையம் முழுவதையும் எடுத்துககொள்கிறேன் என்றும், முதற்கண் அந் நூலை வாங்கிக் கொண்டு வருதல் வேண்டும் என்றும் ஆட்சியாளர் அவர்கள் கூறினர். அவ்வாறே அந் நூலைக் கொணர்ந்தார்அவர். ஒருநூலுக்காக ஒரு நூலகத்தையே வாங்கினார் வ. சு. எனின் அந்த ஆர்வத்திற்கும் தொண்டுள்ளத்திற்கும் ஒப்பாதல் உயர்வாதல் ஒருவர் உள்ளத்தை உரைக்க ஒல்லுமோ?*

*இந்திய வரலாற்றுப் பேராசிரியர் வி. அரங்காச்சாரியார் எம். ஏ; எல்.டி., அவர்கள் அத் துறையில் மிக்க தேர்ச்சியாளர். கல்வெட்டு ஆய்வில் ஒள்ளியர். தென்னாட்டுக் கல்வெட்டுகளை அட்டவணை எனப் பெயரிய மூன்று நூல்களை வெளியிட்டுள்ளனர். அவர்கள் தம் ஆராய்ச்சிக்கெனத் தொகுத்த ஆங்கிலநூல்கள். கல்வெட்டு நூல்கள் ஆகிய பலவும் சேர்ந்தது அவர்தம் நூல் நிலையம். அதனை அவர்தம் திருமகனார் 'சோஷாத்திரி' அவர்களிடத்திருந்து விலைக்கு வாங்கி மறைமலையடிகள் நூல்நிலையத்தில் சேர்க்கப் பெற்றுள்ளது. எத்துணைப் பொன் கொடுப்பினும் கிடைத்தற்கரிய அந் நூல்கள் ஒருங்கே கிடைக்கப்பெற்றது, ஆட்சியாளர்அவர்களின் தொகுப்புத் திறத்திற்கும், மறைமலை யடிகளார்நூல்நிலையப் பெருமைக்கும் இணையற்ற சான்றாகும்!*

*அரங்காச்சாரியார் நூலகம் ஒன்றுதானோ மறைமலையடிகளார் நூலகத்துடன் இணைந்தது! ஊற்றுச் சுரந்து ஆற்றைப் பெருக்கும்; அவ்வாற்றுப் பெருக்கோ கடலை*

நிரப்பும். அது போல் நூலகங்கள் பலப்பல மறைமலையடிகள நூலகத்தோடு கலந்து கருவூலமாகத் திகழ்கின்றன. அவற்றுள் குறிப்பிடம் தக்கவை பேராசிரியர் செல்வக் கேசவராய முதலியார் நூலகம், தேவார இசைமணி சுந்தர ஓதுவார் நூலகம், திருவாளர் வி. சங்கர நாராயண பிள்ளை நூலகம், திருவாளர் நடேச சாயக்கர் நூலகம், திருவாளர் தி.க. இராசேசுவரன் நூலகம் என்பவையாம்! இவற்றொடும், அரங்கானரும் தாமும் இளந்தைப் பருவந் தொட்டே அரிதின் முயன்று தொகுத்த நூல்களும் இடம் பெற்றுத் தவத்திரு மறைமலையடிகளார் நூலகத்தை மணிமலையாக்கி மாண்புறச் செய்கின்றன.

படங்கள், நூல்கள் தொகுப்பதுடன் புலவர்கள் அறிஞர்கள் கடிதங்களையும், கையெழுத்துக்களையும் இடையறவின்றித் தொகுத்துக் கொண்டே வருகின்றனர். எங்கும் காண்டற்கரிய வரலாற்றுச் சிறப்புடைய கடிதங்கள் திருவருள் துணையால் கழக அமைச்சர் திருவரங்கனார் காலந்தொட்டே தொகுத்துப் பேணி வைக்கப் பெற்றிருக்கின்றன. அவற்றால் தமிழ்வரலாற்றுலகும் இலக்கிய உலகும் பெருஞ்சிறப்பான பயன் கொள்ளுதல் ஒருதலை. அக் கடிதங்களை மட்டுமே ஆய்வுப் பொருளெனக் கொண்டு பண்டாரசர் பட்டம் பெறுதற்குத் தக்க கருவூலமாகத் திகழ்கின்றது. அக் கடிதங்களில் காணக்கிடைக்கும் அரிய குறிப்புக்களை எல்லாம் தனி நூலாக்கி வெளியிடின் ஆராய்ச்சி உலகம் பெரும்பயன் கொள்ளும்.

திருவரங்கனார் வரலாற்றுச் சிறப்புடைய கடிதங்களைத் தொகுக்கும் முயற்சியை மேற்கொள்ளாதிருந்திருப்பாரானால் அக்கடிதங்களைப் பேணிக் காத்தலும் அவ்வழியில் தொடர்ந்து செல்லுதலும் திருவாளர் வ. சு. அவர்கள் மேற்கொள்ளாது இருந்திருப்பாரானால், திருவாங்கூர் தீர்வைத்துறை ஆணையராகத் திரு.டி. பொன்னம்பலம் பிள்ளை இருந்தார் என்பதையோ அவர் தமிழ்மேல் தணியாப் பற்றாளராகவும், தேர்ச்சியாளராகவும் திகழ்ந்தார் என்பதையோ, தொல்காப்பிய உரைகள் அனைத்தையும் ஒரு கொத்தாக ஆங்கிலத்தில் பெயர்க்க விரும்பினார் என்பதையோ, தமிழ்நாட்டுக் குறுநில மன்னர்களும் பெருவள மடங்களும் நிலக்கிழார்களும் துணைபுரியமுன்பாராது வாளா விருந்தனர் என்பயையோ, பரோடா மன்னர் அத் திருப்பணியை மேற்கொண்டு உதவ முன்வந்தார் என்பதையோ, இப் பணி உதவிக்குப் பரோடா அமைச்சர் வி.பி. மாதவராவ் துணைநின்றார் என்பதையோ நாம்

*அறிந்து கொள்ள வாய்ப்பு உண்டா? அவ்வாறே 1933 திசம்பர் 23, 24 ஆம் நாட்களில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் தமிழன்பர் மாநாடு என்னும் பெயரல் வடமொழி ஆக்க மாநாடு ஒன்று நடந்தது என்றோ, அம் மாநாட்டின் அழைப்பிதழ் பெற்ற தனித்தமிழ்த் தந்தை தவத்திரு மறைமலையடிகளார் "தூய தமிழை வளர்க்க விரும்பாத எந்தத் தமிழ்க் கூட்டத்திலும் கலந்து கொள்வதற்கு எமது மனம் இடந்தரவில்லை" என்று மறுத்து எழுதினார் என்றோ அறிவோமா?*

*புதைபொருள் ஆராய்வும், கல்வெட்டும் செப்புப் பட்டயமும் பிறவுமே வரலாற்றுச் சான்றுக்கு உறையுள் என்ற அளவோடு நிற்காமல் கடிதங்களும் கைகண்ட வரலாற்றுச் சான்றே என்பதைத் தெளிந்து தொகுத்துப் போற்றிவரும் கழகக் கண்மணிகளாம் இரட்டை உடன் பிறந்தார்களும், அவ்வழியில் நின்று, போற்றி வரும் கழகத்தவர்களும் ஆராய்ச்சியாளர், அன்பர்கள் போற்றுதற்கு உரியர். அறிவறிந்த ஆராய்ச்சிப் பெருமக்கள் இத் தொகுப்பைப் பற்றிக் கூறிய போற்றுதல் மொழிகளில் ஒரு பகுதி வருமாறு : இவை கழகப்பொன்விழா, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற மூன்றாவது கருத்தரங்கு (அண்ணாமலை நகர்), சென்னைப்பல்கலைக் கழகத் தமிழ்த்துறை நடாத்திய இரண்டாவது பொதுநிலைப் பத்து நாள் கருத்தரங்கு, வள்ளுவர்கண்ட அரசியல் 2 நாள் கருத்தரங்கு (மதுரை) ஆகியவற்றில் வைக்கப்பெற்ற நூற்காட்சி பற்றிய கருத்துரைகளில்சில.*

*"மருத்துவம் முதலான அறிவியல் துறைகள் சென்ற நூற்றாண்டிலே தமிழில் அச்சாகி இருப்பதைக் காணக் காணத் தமிழில் முடியுமா? என்ற அநாகரிக வினாவிற்கு இனியும் இடமுண்டோ?' என்ற எதிர்வினா எழலாயிற்று."*

**– டாக்டர்வ. சுப. மாணிக்கம்**

*வெறும் புத்தக வெளியீட்டாளர்களாக மட்டும் ஒடுங்கி விடாமல் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களி லெல்லாம் கூடிய கருவிகளைக் கொண்டெல்லாம், தமிழ் மக்களுக்கு ஊட்டி வரும் கழகம்."*

**– டாக்டர் சாலை இளந்திரையன்,**
**– டாக்டர் சாலினி இளந்திரையன்.**

*இலக்கியங்களின் விளக்க அட்டைகள் அனைவரும் முதலிய இனிய நாட்களில் தத்தம் வளமனைகளில் கட்டி அனைவர்க்கும் அறிவு நலம் கொளுத்தப் பயன்படும்.''*

**- டாக்டர் சொ. சிங்காரவேலன்.**

*“கண்காட்சியில் மறைமலையடிகள் பகுதி கருத்துக் கடலாகவும் சிந்தனைக் கூடமாகவும் ஒளிர்ந்தது. மேலைநாட்டில் செச்சுபியருக்குச் செய்யப்பட்டுள்ள சிறப்பினை நம் மறைமலையடிகளாருக்குக் கழகம் பல்வகையில் செய்துவரும் பான்மை மேன்மையானதாகும்.''*

**- மது. ச. விமலானந்தம்**

*“தங்கள் கழக நூற்காட்சியில் தமிழ் பற்றிய பல ஆங்கில நூல்கள் அணி செய்து விளங்கின. இதைக் கண்டு யான் பெருமிதம் எய்தினேன். ஆங்கிலத்தில் மட்டுமின்றிப் பிரஞ்ச, செர்மன், உருசிய மொழிகளிலும் தமிழ் பற்றிய நூல்கள் வெளிவருதல் வேண்டும். இப் பெருந்தொண்டினைத் தங்கள் நூற்பதிப்புக்கழகம் ஒன்றாலேயே செம்மையுற இயற்ற முடியும்.''*

**- தா. ஏ. ஞானமூர்த்தி**

*“இத்தகைய நூற்காட்சியானது தமிழகமெங்கும் சிறந்த திருவிழாக் காலங்களை ஒட்டியேனும் அமைக்கப்பெறின் தமிழர்கள் தம் மொழிச்செல்வ மேன்மையைப் புரிந்து கொள்வர்.''*

**- செ. வைத்தியலிங்கன்.**

*“இதுகாறும் காணாத மாமேதைகளைக் கண்டு இன்புறும் பேறுபெற்றேன். இந்தி எதிர்ப்புப் பற்றிய கடிதத்தொகுப்புகள் இன்றைய தேவைக்கேற்ப இளைஞர்களுக்குத் தமிழுணர்வை ஊட்ட வல்லன. அவை நூலாக வரின் தமிழுலகம் நற்பயன் எய்தும்''.*

**- டாக்டர்இரா. சாரங்கபாணி**

*“அக் காட்சி கழக வெளியீடுகள் பலவற்றையும் பரப்பி வைத்துககாட்டும் ஒரு விளம்பர உத்தியாகலாம் என நினைத்துச்சென்ற பலரும் தங்கள் கண்முன்னே விலைமதிப்பற்ற தமிழ் நவமணிகளை - பொற்கலங்களைப் பரப்பி வைத்து ஒளிவீசச் செய்திருந்த காட்சியைக் கண்டு வியந்து நின்றனர். நயந்து போற்றினர்.''*

**- அ. மா. பரிமணம்**

*“தமிழ்த் தாத்தா உ.வே. சா. தாம் இற்றை ஞான்று வண்டமிழ் வளர்க்கும் வ. சு. ஆக உலவுகின்றார் கொல்.”*

**– சா. தே. கிறிஸ்டோபர்**

*“நூற்காட்சி, கழகம் ஒரு பல்கலைக்கழகம் என்பதை மெய்ப்பித்துக் காட்டுவதாக அமைந்திருந்தது.”*

**– மு. சதாசிவம் எம். ஏ.**

*“கழகக் கண்காட்சியில் காணாதன கண்டேன். பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் நூற்காட்சியமைத்து உலகம் முழுவதும் தமிழ்மொழியைப் பரவச் செய்ய வேண்டும்.*

**– பேராசிரியர் வ. பெருமாள்.**

*“இந்தக் காட்சி எல்லா வகையிலும் பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. இதன் பயனை எடுத்துசசொல்வதாக இருந்தால் ஒரு புராணமாக விரியும்”.*

**– நீதிபதி எசு. மகாராசன்.**

*மறைமலையடிகள் நூல்நிலைய 20ஆம் ஆண்டு நிறைவு விழாவின்போது திரு. மகாராசன் அவர்கள் திரு. வ.சு. அவர்களின் தொகுப்புத்திறம் குறித்து ஓர் அரிய செய்திகைய விரித்துரைத்தனர்.*

*“200, 300 ஆண்டுகளுக்கு முன் அச்சிட்ட நூல்களை யெல்லாம் இந்த நூலகத்தில் பார்க்கலாம். ஒவ்வொன்றையும் இவர்கள் எப்படிப் பெற்றார்கள் என்பதற்குத் தனிவரலாறே உள்ளது.*

*“1554 இல் லிஃப்பனில் முதல் தமிழ்நூல் அச்சிடப்பெற்றது. 1578 அக்டோபர் 20 இல் கொல்லத்தில் அச்சிடப்பெற்ற தம்பிரான் வணக்கம்* (Doctrina Christam) *வியன்னாவில் ஒரு குறுநில மன்னரிடம் இருந்து பின்னர் 1951 இல் அமெரிக்கா விலுள்ள ‘ஹார்வார்டு’ பல்கலைக்கழகத்தில் சேர்ந்தது. 1952 இல் வெளியான அந்தப் பல்கலைக்கழக இதழில்அந்த நூலின் வரலாறு வெளியிடப்பெற்றுள்ளது. இவ்வாறு சுப்பையா பிள்ளை அவர்கள் பலருக்குக் கடிதங்கள் எழுதி ஒவ்வொன்றாகச் சேர்த்துள்ளார்கள். இவற்றைப்பற்றித் தனித்தனி வரலாறே எழுதலாம்”.*

*நடுவர் தீர்ப்பே ஒவ்வொரு நூல் தொகுப்புப் பற்றியும் தனித் தனி வரலாறே எழுத வேண்டும் என்றுள்ளபோது நாம் இந்த வரலாற்றின் இடையே எத்துணைதான் விரிய*

எழுதினாலும் அவர்கள் தொகுப்பு முயற்சிச் சிறப்பை முற்ற முடியக்காட்டியது ஆகாமை வெளிப்படையாம்.

பணிகள் தொடர்பாக அவர்களைப்பற்றி எழுதும் ஒவ்வொரு பகுதியும் விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும் என்று பண்டைச்சான்றோர் பகர்ந்தவாறே ஆம் என்பதும் உண்மையாம்.

தேடித்தொகுத்த அரும்பொருள்கள் கோடியாக இருந்தாலும் அவற்றை இனங்காணாவாறு குவித்து வைத்தோ, மூலையிலே கட்டி ஒதுக்கி வைத்தோ ஆவதால் பயன் என்ன? "எனதென தென்றிருக்கும் ஏழை பொருளை யானும் எனதென தென்றிருப்பன்" என்பது போலவே உடையவருக்கும், உடையவர் அல்லாத பிறர்க்கும் பயனின்றி வாளா ஒழியவே செய்யும்! ஆகலின் தொகுத்தலில் எவ்வளவு அக்கறை வேண்டுமோ, அவ்வளவு அக்கறை அவற்றைப் பேணிக்காத்தலிலும் வேண்டும். பேணிக்காத்தலில் எவ்வளவு அக்கறை வேண்டுமோ அவ்வளவு அக்கறை அவற்றைப் பிறர் கண்டுகளித்துக் கருந்தனம் ஈதென்று பயன்கொள்ளச் செய்தலிலும் வேண்டும். இம் மூன்றும் இணையாக்கால் தேடித் தொகுத்தலின் நலம் எட்டுணையும் இல்லையாம். முக்காலிக்கு எக்கால் முதன்மையானது என்பதற்கு வரும் விடையே இதற்கும் உரிய விடையுமாம்.

"ஆரா யினுமிந்தத் தென்காசி மேவுபொன் னாலயத்து
வாரா ததோர் குற்றம் வந்தாலப் போதைக்கு வந்ததனை
நேரா கவேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே"

என்று கோயிலுக்கு யாதொரு குற்றமும் வாராமல் காப்பர் அடியைத் தன் முடியில் சூடிக்கொள்வதாகப் பாண்டியன் பராக்கிரமன் தன் தொண்டுள்ளம் துலங்கப் பாடுகின்றான். இத்தகைய பாண்டியன் வழியில் வந்த வரதுங்கராமபாண்டியன் மகப்பேறு இன்றி மடிந்தபோது அவன் தொகுத்து வைத்திருந்த அரிய ஏட்டுச் சுவடிகள் எல்லாம் கரிவலம் வந்த நல்லூர்திருக்கோயிலில் சேர்ப்பிக்கப்பெற்றன. அச் சுவடிகளையெல்லாம் வேதற்தெளிந்தவர் விரித்தவாறு ஓமத்தீயில் எரித்து விட்டார்களாம். எப்படிப் போற்றினார்கள் கொடிய அப் பாவிகள்! ஆற்றிலே பதினெட்டாம் பெருக்கிலே விட்ட சுவடிகள், கறையானுக்கும் தீக்கும் இரையானவை எத்தனை எத்தனை?

டாக்டர் சாமிநாதையர் அவர்கள், ஏடு தேடி அரும்பாடுபட்டுத் தொகுத்த ஏந்தலாவர். அவற்றைப் போற்றிப் புரந்த புலமைச் செல்வரும் புகழாளரும் ஆவர். அவர் நெல்லைக்கு ஒருமுறை சென்றார் சுவடிதேடி. வழிவழிப்புலவர் குடும்பத்தில் அப்பொழுது வக்கீல் ஒருவர் இருந்தார். பழம் புலவர் வீடாயிற்றே என்று ஐயர் அணுகிச்சென்று சுவடிபற்றிக் கேட்டார். என்ன அருமையான பதில் கூறினார் வக்கீல் ஐயா!

“எங்கள் வீட்டில் ஊர்க்காட்டு வாத்தியார் புத்தகங்கள் வண்டிக்கணக்காக இருந்தன. எல்லாம் பழுதுபட்டு ஒடிந்து உபயோகமில்லாமல் போய்விட்டன. இடத்தை அடைத்துக் கொண்டு யாருக்கும் பிரயோசனமில்லாமல் இருந்த அவற்றை என்ன செய்வதென்று யோசித்தேன். ஆற்றிலே போட்டு விடலாம் என்றும், ஆடிப்பதினெட்டில் சுவடிகளைத் தேர்போலக் கட்டி ஆற்றில் விடுவது சம்பிரதாயம் என்றும் ‘சில முதிய பெண்கள்’ சொன்னார்கள். நான் அப்படியே எல்லா ஏடுகளையும் ஓர் ஆடி மாதம் பதினெட்டாம் தேதி வாய்க்காலில் விட்டுவிட்டேன்.”

வக்கீல் ‘வேரறிவு மிக்க’இவ் வுரையைக் கூறும்போது உடன் இருந்தார் ஒரு புலவர். அவர் திருகூடராசப்பக் கவிராயர் என்பார். குறவஞ்சி பாடிய புலவர் வழியிலே வந்தவர். அவர்கூறினார்: “நான் (இங்கு) வந்திருந்த சமயத்தில் கடைசித்தடவையாக ஏட்டுச்சுவடிகளை வாய்க்காலில் போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் அதைப் பார்த்தேன். கடைசியில் மிஞ்சியிருந்த சில ஏடுகளைக் கொண்டுபோன ஒரு பையன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்து (வக்கீலை அறைந்திருக்கவேண்டியது பாவம். சிறுவன்தானே, அடிபட்டால் அழுது கொண்டு ஓடக் கூடியவன்) அந்தக் கட்டைப் பிடுங்கி உள்ளே பீரோவின் மேல்வைத்தேன் என்று சொல்லி அத்தனை ஐயரவர்களிடம் எடுத்துத்தந்தார். அச்சுவடியே திருப்பூவணநாதர் உலாவை உலாவரச் செய்தது ஆகும்.

கலைச் செல்வத்தை அழிப்பாரைக் கன்னத்தில் அறையக் கூடியவர்கள் வழி வழியாக வந்திருந்தால் அவை ஓரளவு காப்பாற்றப்பெற்றிருக்கும். ஆனால் கறையான் அழிவு, தீப்பகை, படைக்கொள்ளை ஆய கொடுமைகளை என்ன செய்வது? போற்றிக் காத்தலைப் புனிதமான கடமையாக - தெய்வத் திருப்பணியாக - மேற்கொண்டவர்க்கே இயலும்! அவர்களா லேயே போற்றிக் காக்கப்பெறும். அவ் வகையில் போற்றத்தக்க

*பெருந்தகை- பொற்றகட்டில் வயிர எழுத்தால் எபதி முத்துக் கோவை எழிலுறுத்தி வைக்கததக்க பெருந்தகைப் புகழுக்குரியவர் திரு.வ.சு.*

*"தேடித்தொகுத்தலும் பேணிக்காத்தலும்" என்பது திரு. வ.சு. அவர்கள் எழுதிய ஒரு கட்டுரை. அதில், "தேடித்தொகுக்க வேண்டியவை ஏட்டுச் சுவடிகள், பழம்பதிப்பு நூல்கள், பழைய இதழ்கள், புலவர் வரலாறுகள், கடிதங்கள், படங்கள், பலதுறை களில்புகழ்பெற்ற பெருமக்கள் வரலாறுகள், கட்டுரைகள் நிறைந்த மலர்கள், கலைப்பொருள்கள் முதலியனவாகும். இவற்றைத் தேடித் தொகுத்தால் மட்டும் போதாது. தொகுத்தவற்றைப் பிறர்க்குத் தொடர்ந்து பயன்படுமாறு பேணிக்காத்தலும் வேண்டும்" என்கிறார்.*

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்

சொல்லிய வண்ணம் செயல்"

*என்பதற்கு ஏற்பக் கட்டுரையாகக் கற்பார் கருத்துக்கு முன்வைக்கும் அளவில் நிற்பவர் எனின் 'எளிய'வாம்! ஆனால், தாமே சொல்லிய வண்ணம் செய்து நிலைநாட்டிவரும் அரிய செயலாண்மையர் சொல்லாமல் எவர் சொல்வது? பட்டறிவால் வந்த பயன்மொழி இது.*

*ஏட்டுச் சுவடிகள் ஒருபுறமிருக்க அச்சிடப்பெற்ற பழந்தமிழ் நூல்களைத் தேடித் தொகுத்துப் பாதுகாப்பதிலும் நம்மவர் கட்கு அக்கறை இல்லை; அங்ஙனம் பழைய நூல்களைத் தொகுத்துவரும்பழம் புத்தக வணிகர் திரு. சி. என். செயவேலு அவர்களிடமிருந்து அரிய பல நூல்களை வெளி நாட்டறிஞர்கள் பன்மடங்கு விலைகொடுத்துத் தம்நாட்டு நூலகங்கட்கு வாங்கிச் செல்கின்றனர். ஆனால், அவற்றை நம் தமிழ்நாட்டுச் செல்வர்களோ, நூலகங்களோ, திருமடங்களோ, அவ் வணிகர் குறிப்பிடும் மிகுவிலை கொடுத்து வாங்குவதில்லை என்பது மிகவும் வருந்துதற்குரியது! இவ் வருத்தத்திற்கு அடியான உருக்கம் தந்நலத்தின் பாற்பட்டதோ? பொதுநலத்தின் - தமிழினத்தின் - ஏன்? உலகற் தழீ இய நலத்தின் பாற்பட்டதோ?*

*"சிலர் தமக்கு வரும் மலர்களை எடைபோட்டுப் பழையதான் விலைக்கு விற்றுவிடுகின்றனர். சிலரிடம் தாள் தாளாகப் பிரிந்து கிடக்கும் பழைய நூல்கள், கட்டஞ்செய்து பேணுதற்கு வாய்ப்பு இல்லாமல் ஒழிக்கப் பெறுவதைக் கண்டுவருகின்றேன். பழைய கல்லூரிகளிலும் பள்ளிகளிலும்*

சிதைந்த நிலையில் இருக்கும் பழைய நூல்களும் இதழ்களும் ஒழிக்கப்பெற்றுள்ள செய்தி அறிவேன். டாக்டர் போப் துரைமகனார் தாம் மொழிபெயர்ப்பதற்குக் குறிப்பெழுதி வைத்திருந்த திருக்குறள் நாலடியார் திருவாசகம் ஆகிய தமிழ் மூலப்படிகள் மூன்றும் மேலுறையும் முகப்பும் இல்லாமல் சிதைந்த நிலையில் ஒழிப்பதற்கு எடுத்துவைக்கப் பெற்றிருந்தபோது யான் சென்று கேட்டமையால் கிடைக்கப் பெற்றனவாகும்" என்கிறார் திரு.வ.சு. தாம் தொகுத்தவற்றைக் காப்பதற்குரிய வாய்ப்புகள் என்ன? எனின் அவர்களே கூறுகின்றனர்: "நூல்களைக் கட்டஞ் செய்தற்கெனத் தொழிற்கூடமும், நூல்களை அச்சிடுதற்கென அச்சுக்கூடமும் கழகத்திலே இருக்கின்றமையால்எந்த நிலையில் நூல்களோ மலர்களோ இதழ்களோ கிடைக்கப் பெறினும் செம்மை செய்து அவை போற்றப் பெறுகின்றன. திரும்ப அச்சிட வேண்டிய பயனுள்ள பழைய நூல்களும் அச்சிட்டு வெளியிடப் பெறுகின்றன."

வ.சு. அவர்களின் தொகுப்புப்பயனை ஒரு சான்றால் விளக்கலாம். எழுதிய ஆசிரியரிடமே இல்லாத நூல், வெளியிட்ட பதிப்பகத்தினிடமே இல்லாத இதழ், புலவர் வழியிலே வந்த குடும்பத்திலே இல்லாத புலவர் படம் - மறைமலையடிகள் நூல் நிலையத்திலே உண்டு; அதுவும் நினைத்தவுடன் கையிலே உள்ள கனியென - கட்டிப்பாகென எடுத்துச் சுவைக்கத்தக்க நிலையிலே உடனே தேடி வந்து நிற்கும்நிலையும்உண்டு.

"அவர் (திரு.வ.சு.) பலர் கருதுகின்றவாறு தமிழிலும் ஆங்கிலத்திலும் தமிழ்ச் சார்பான பொத்தக அல்லது நூல் வெளியீட்டாளர் மட்டுமல்லர். இதுவரை அச்சேறாத ஏட்டுச்சுவடி, கையெழுத்துச் சுவடித் தொகுப்பாளரும், புது நூல் இயற்றுவிப்பாளரும், புலவர், வெளிநாட்டுத் தமிழ்த் தொண்டர் முதலியோர் வரலாற்றுத் தொகுப்பாளரும், அவர் கையெழுத்துப் படித் தொகுப்பாளரும், அவர் உருவப்படத் தொகுப்பாளரும், பெரும்புலவர் கடிதப் போக்குவரத்துத் தொகுப்பாளரும், மாநாடுகளின் நடவடிக்கைத் தொகுப் பாளரும், நின்றுபோன பழைய செய்தித்தாள், கிழமையன், மாதிகை, காலண்டிதழ், ஆண்டு மலர் முதலிய தொகுப்பாளரும், பிறமொழிகளில் மொழிபெயர்க்கப் பட்ட திருக்குறள் நாலடியார் திருவாசகம் முதலிய நூற்றொகுப்பானரும் ஆவர்."

**– பாவாணர்**

# 26. உலகுவக்கும் ஒரு பணி

*("தாம் இன்பம் அடைகின்ற கல்வியால் உலகமும் இன்பம் அடைவதைக் கண்டு களிப்புறும் கற்றோர் மேலும் அதனையே விரும்புவர்." திருக். 399)*

திருவள்ளுவரைப் பெற்றதால் தமிழர் பெற்ற பெருமைக்கு எல்லை இல்லை. எவ்வொன்றுக்காக இல்லை என்றாலும் திருக்குறளைத் தந்த ஒன்றற்காகவே உலகம் தமிழர்க்குப் பெருங்கடப்பாடு உடையதாகும்.

"திருக்குறள் பிறந்த மண்ணுக்குப் போய் அறிவுரை கூறுவது போன்ற அறியாமை ஒன்றும் இல்லை" என்றும், 'மாந்தனே! நீ வாழப் பிறந்தவன்; தெய்வ நிலைக்கு ஏறத்தக்கவன்! என்று தட்டிக்கொடுத்து நம்பிக்கையூட்டி உயர்த்தும் ஒரே நூல் திருக்குறளே' என்றும் மேலை நாட்டவரும் போற்றியுரைக்கும் பெற்றியது திருக்குறள்.

"திருக்குறளை மூலத்தில் படிப்பதற்காகவே தமிழைக் கற்க வேண்டும்" என்று ஆர்வத்தை எழுப்புவதும் திருக்குறளே! உலகிலேயே - சமய நூல்கள் சிலவற்றைத் தவிர - பொது நூல் வரிசையில் மிகுதியான மொழிபெயர்ப்புப் பெற்றதும் திருக்குறளே! அத் திருக்குறளைக் கொஞ்சும் குழந்தையெனக் கொஞ்சி, பெற்ற தாயெனப் போற்றி, வணங்கும் தெய்வமென வாழ்த்திசைத்து வருபவெர் தமிழ்ப்பெருங்காவலர் வ. சுப்பைபிள்ளை அவர்கள் ஆவர். தாம் பெற்ற திருக்குறள் இன்பத்தை உலகும் பெற்று இன்புறத் தொண்டாற்றுவது தலையாய கடனெனக் கொண்டார்.

திரு. வ.சு. அவர்கள் பாளையங்கோட்டை தூயசவேரியர் உயர்பள்ளியில் பயின்று கொண்டிருந்த நாளையிலேயே திருக்குறளை அறிவார். அரங்கர், கொழும்பில் இருந்து அருமையாய் எழுதிய கடிதங்களில் திருக்குறள் அறிவுரைகள் கமழும், அதனால் அந் நூலைப் பயில வேண்டும் என்னும் ஆரவம் அப்பொழுதே இவருக்கு அரும்பிது.

திரு. வ. சு. பயின்ற பள்ளியில் அடுத்தடுத்த வகுப்பில் பயின்ற மாணவர் சொல்லின் செல்வர் திரு. சேதுப்பிள்ளை. அவர் குடியிருப்பும் இவர் வீட்டுக்கு அண்மையிலேயே இருந்தது. அன்றியும் பிள்ளைப்பருவ விளையாடல்களில் ஒன்றுபட்டும் ஆடினர். அத்தகைய அன்பு நண்பர் சேது நான்காம் படிவத்தில் பயிலும் போது அவருக்குத் திருக்குறள் உரையொடு கூடிய நூல் ஒன்று பரிசாகக் கிடைத்தது. அந் நூலை வைத்துச் செப்பறை அடிகளாரிடம் முறையாகப் பாடமும் கேட்டார். அவர் தொடர்பும் தோழமையும் சுப்புவுக்குத் திருக்குறள் அன்பை வளர்த்தது.

சேதுப்பிள்ளை பயின்று பட்டம் பெற்றார். நாவன்மை சிறந்து விளங்கினார். 1920 ஆம் ஆண்டுக் கோடைவிடுமுறையில் நெல்லைக் கூத்த நயினார்பிள்ளை வீட்டுமாடியில் நெல்லை மாணவர் மன்றச்சார்பில் 'திருவள்ளுவரும் திருக்குறளும்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். அப் பொழிவு செவிக்கு இன்பமும் சிந்தைக்கு விருந்துமாய்ச் சுவைபெற இருந்தது. அப் பொழிவு முடிந்தபின்னே, "உங்கள் உரை அருமையாய் அமைந்திருந்தது. அதனை நூல்வடிவில் கொண்டுவர வேண்டும் என்பது என் விருப்பம். ஆகலின் அதனை விரைந்து எழுதுங்கள்" என வேண்டுகோள் விடுத்தார். அத் தூண்டலால் வெளிப்பட்ட நூலே, திருவள்ளுவர் நூல்நயம் என்னும் சீரிய நூலாகும்.

இயல்பாகவே திருவரங்கர்க்குத் திருக்குறள் ஈடுபாடு மிக்கிருந்ததால் சிவஞானமுனிவர் இயற்றிய 'சோமேசர் முதுமொழி வெண்பா' நூலைத் திரு. வா. மகாதேவமுதலியார் உரையுடன் வெளியிட்டார். அது கழகத்தின் மூன்றாம் வெளியீடாகும். திருக்குறளுக்குப் புத்துரை காணவேண்டும் என்னும் வேட்கையால் மறைமலையடிகளார் நன்மாணவர் நாகை சொ. தண்டபாணிப்பிள்ளை அவர்களைத் தூண்டி எழுதுமாறு வேண்டினார். அதனைப் பல்கால் முயன்று தூண்டித் தம் எழுத்தரை விடுத்தும், தாமே சென்றும் உரையெழுதிச் செப்பமாக அச்சிட முயன்றார் திரு. வ. சு., ஆசிரியர் உடல் நலிவும் பின்னே நலிவு தீராது உலகில் இருந்தே அவர் விடுதலை பெற்றதும் அந்நூல் அறத்துப்பால் அளவுக்கே உரையுடன் வெளிவரச் செய்தன. இணையற்ற அருமையான அவ்வுரை முற்றும் வெளிப்பட வாய்ப்பின்றிப் போனமை தமிழுக்கு அமைந்த தீயமேயாகும்! அவ்வளவு அருமையது அது.

'முருகேசர் முதுநெறிவெண்பா' 'இரங்கேச வெண்பா', 'சிவசிவ வெண்பா' 'திருத்தொண்டர் வெண்பா' 'வள்ளுவர் நேரிசை', 'வடமலை வெண்பா', 'தினகரவெண்பா', 'முதுமொழிமேல் வைப்பு', 'திருமலைக்கொழுந்து வெண்பா', 'திருமலைவெண்பா', 'திருப்புல்லாணி மாலை' என்னும் பெயரிய குறள் விளக்க நூல்கள் பலவும் அடுத்தடுத்துக் கழகவழியே வெளிக்கொணர்ந்த வ.சு. அவற்றைத் தொகுதிகளாகவும் வெளியிட்டார்.

கழகப் பதிப்புத்துறைக்குத் தொடக்க நாளிலேயே வாய்த்த கலைத்திறம் வல்லால் திரு. கோவிந்தராசமுதலியார் என்பதை அறிவோம். அவரும் திரு. வ. சு. அவர்களும் கலந்துரையாடி, $13\ ^1/_2$ X $19\ ^1/_4$ செ. மீ. அளவில் ஒவ்வொரு பக்கத்தில் ஒவ்வோர் அதிகாரம் அமையுமாறு திருக்குறள் மூலப்பதிப்புக் கொண்டு வந்தனர். தாளுறைக்கட்டப்பதிப்பு, துணிக்கட்டுப்பதிப்பு, இரு பக்கமும் பஞ்சுவைத்து ரெச்சைன் துணியால் கட்டப்பெற்ற பரிசுப் பதிப்பு என முத்திறப்பதிப்புகளில் அம் மூலப்பதிப்பு வெளிப்பட்டது. பொன்துகள் கொண்டு உலகப்படமும் திருக்குறள் என்னும் பெயரும் பொறிக்கப்பெற்ற அவ்வெழிற் பதிப்பு காண்பாரைக் கவர்ந்தது. கற்பாரை வயப்படுத்தியது. அப் பதிப்பினைக்கண்ட தவத்திரு எச். ஏ. பாப்லிதுரை 3-10-1924 இல் கார்டியன், யங்மென் ஆப் இந்தியா, கிறித்தியன் பேட்ரியட், எரால்டு அகிய நான்கு கிறித்துவ சமய இதழ்களுக்கும் ஆங்கிலத்தில் தமது பாராட்டுரையை எபதினார்.

"தமிழ் நூல்கள் பதிக்கப்பெறத் தொடங்கிய நாள்தொட்டு அழியாப்பெரும் புகழ்படைத்த அரிய நூலாகிய திருக்குறள் அதன் சிறப்பிற்கு ஏற்ற அழகிய பதிப்பினை தன்முறையாகப் பெறுவது இதுவேயாகும்."

"இச் சைவ சித்தாந்தக்கழகம் உலகிற்கு உகந்ததொரு பெரிய நன்மையை விளைத்தது என்பது நன்கு போதரும்" என்பதுஅவர் வரைந்த உரைகளுள் ஒரு பகுதி. திரு.வ.சு. அவர்களுக்கு நேரே கடிதமும் எழுதினார் திரு. பாப்லி.

"தனது பெருமைக்கு ஏற்ப இவ்வரும் பெருநூல் சிறந்த பதிப்பினை இதுவரை பெறாது இருந்ததைப்பற்றி நினைந்து யாம் அடிக்கடி வருந்தியது உண்டு. எனவே, இக் குறையினை நீக்குவான் கருதித் தங்கள் கடிதம் முன்வந்தது நமக்கு அளப்பிலா மகிழ்வை விளைவிக்கிறது. திருக்குறள் போன்றதொரு நூல் அழகிய பதிப்பில் மக்களிடம் இருக்கவேண்டியது மிகவும்

இன்றியமையாததாகும். திருக்குறளை இவ்வழகிய பதிப்பில் கிடைக்கப் பெற்றோமே ஈதல்லவோ நாம் பெற்ற பாக்கியம் என்று கருதும்படி எம்மால் இயன்ற அளவு தெரிவிப்போம் என்று தாங்கள் உறுதியாக நம்பலாம்.''

''புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்பார்'' என்னும் கம்பர் பொன்மொழி இந் நன்மொழியுடன் ஒப்பிட்டு. உவகை கொள்ளற்குரியதாம். திருக்குறள் வெளியீடு ''உலகிற்கு உகந்ததொரு பெரிய நன்மையை விளைத்தது'' என்னும் அவர்மணிமொழியை உளங்கொண்டால் திருக்குறள்பணி, உலகுவக்கும் ஒரு பணி என்பதன் உட்கிடை தெளிவாகும்.

பேராசிரியர் கா.சு. பிள்ளை 'திருக்குறள் பொழிப்புரை' யைத் திரு.வ.சு. அவர்களே சென்று சொல்லச் சொல்ல எழுதி வெளியிட்ட செய்தி 'வியத்தகு வெளியீடுகள்' என்னும் பகுதியில் நாம் கண்டதே.

''தமிழ்மக்கட்கு அழியாப்புகழ் தேடித்தந்த உலகப் பொதுமறையாம் திருக்குறளை எத்தனை எத்தனை வடிவங்களில் அச்சிட்டுக் கட்டஞ் செய்து அணிபெறக் காண வேண்டுமோ அப்படியெல்லாம் காண வேண்டும் என்று அவர்அடிக்கடி எழுதுவதுண்டு'' என்று கூறும் வ. சு. மேலும் பல அளவுகளில் மூலப் பதிப்புகள் வெளியிட்டார். அவ்வளவில் அமையாமல் மேலும் சிறிய அளவில் ஒரு மூலப்பதிப்பு வெளிக் கொணர்ந்தார்.

9 x 6 செ.மீ அளவில் இடப்பக்கம் ஐந்து குறளும் பலப்பக்கம் ஐந்து குறளுமாக அமைத்து வெளியிட்டார். சட்டைப்பையில் வைத்துக்கொள்ளக்கூடிய அவ்வளவு சிறிய அளவில் அமைந்த நூல் தமிழுலகில் அதுவே முதன்மையானதாகும். இப் பதிப்பின் பல்லாயிரம் படிகள் தமிழ் மக்கள் கையில் அழகு செய்தன.

மாணவர்கள் தம் வயதுக்கு ஏற்ற நிலையில் படித்து, வரப்படுத்திக்கொள்வதற்கு வாய்ப்பாகக் குறிப்பிட்ட பாக்களைத் திரட்டித் தொகுப்பு நூல்களாகப் பல நூல்கள் வந்தன. இன்னும 'திருக்குறள் முச்சீர்மணிகள்' 'நாற்சீர்மணிகள்' என்பனவும் தேர்ந்து தேர்ந்து வ.சு. அவர்களால்தமிழ்ச் சிறுவர்களுக்குப் 'பாட்டன் எடுத்துத்தரும் பழம்பொரு' ளெனத் தரப்பெற்றன.

''அற்றால் அளவறிந்து உண்க''

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்"

"மறந்தும் பிறன்கேடு சூழற்க"

"கற்றிலன் ஆயினும் கேட்க."

*இவை முச்சீர் மணிகளுள் சில.*

"அருளாட்சி ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு"

"அருள்கெடுத்து அல்லல் உழப்பிக்கும் சூது"

"எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண் பவர்"

"வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள்."

*இவை நாற்சீர் மணிகளுள் சில. இவ்வாறு முச்சீர் மணிகளுள் 227. நாற்சீர் மணிகளுள் 174 தேர்ந்து அகரவரிசையில் அமைத்துப் பொழிப்புரையுடன் தனித்தனி நூலாக வெளியிட்டார் திரு.வ.சு.*

*திருக்குறளின்மேல் கொண்ட பற்று - ஏன் - காதல் இவ்வாறெல்லாம் பணிசெய்ய ஏவியது. 43 x 17 செ. மீ. அளவு வெண்மையான தாளில் நாற்புறமும் சிவப்பு பச்சை நிறங்களில் பூவரும்பு கட்டிப் பெரிய எழுத்துகளில் 'அறிவுடையார் எல்லாம் உடையார்' "எனைத்தானும் நல்லவை கேட்க" என்பன போலத் தேர்ந்தெடுத்த 36 குறள்மணிகளைத் தனித்தனியே கொண்ட திருக்குறள் நீதி அட்டைகளைப் பள்ளிகளும், மன்றங்களும், விழாப் பந்தர்களும் கொண்டு கவின்சிறப்பும் பயன்சிறப்பும் மல்க அச்சிட்டு வழங்கினார். மேலும் 32 முழுக்குறளைத் தேர்ந்து 45 15 செ. மீ. அளவில் பட அச்சுமுறையில்* (Offset) *இரு வண்ணங் களில் அச்சிட்டுத் திருக்கோயில் முதலிய இடங்களில் திகழ வாய்ப்புச் செய்தார்.*

*9 x 6 செ.மீ. அளவில் அமைந்த திருக்குறள் மூலபதிப்புப் பற்றி முன்னரே கண்டோம். அதனினும் சிறிய அளவில் குறளை அதன் பெயருக்கு ஏற்பக் கொணர வேண்டும் என்ற ஆர்வம் இவர்தம் இளந்தைக் காலத்திலேயே உண்டாகியிருந்தது. 1920 இல் உண்டாகியது அது.*

*திரு. சி. பி. சுப்பையாபிள்ளை என்பார் ஒரு வழக்கறிஞர். அவர் மனைக்குத் திரு.வ.சு. சென்றிருந்தார். அவர் தம் கைக்குள் ஒன்றை வைத்து மூடி மறைத்துக்கொண்டு, "தம்பி, என் கைக்குள் இருப்பது என்ன, சொல்லும் பார்ப்போம்" என்றார். அதற்கு வ.சு. "என்ன அண்ணா, எனக்குக் குறி சொல்லத் தெரியாதே!"*

என மறுமொழி கூறினார். அவர் தம் கையைத் திறந்து சேக்சுபியர் இயற்றிய ஒதல்லோ நாடகம்'' என்பதைக் காடினார் அது 5 x 4 செ. மீ. அளவில் இருந்தது. அதனைக் கண்டு வியந்தார் வ.சு., அதே அளவில் சேக்சுபியர் நாடகங்கள் எல்லாமும் வெளியிடப்பெற்றுள்ளன என்னும் செய்தியையும் வழக்கறிஞர் வழியே அறிந்தார். நம் தெய்வத்திருக்குறள் இதே அளவில் வெளிவந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்' என்றார் வ.சு., வழக்கறிஞர் சுப்பையாபிள்ளை நம் சுப்புவை வியந்து பாராட்டித் தட்டிக்கொடுத்தார். இந்த இளந்தை ஆர்வத் தூண்டலே 1942 இல் 6 x 4 செ. மீ. அளவிலான திருக்குறள் மூலத்தைக் கொணரச் செய்ததாம். அவ்வாறு கொண்டு வருவதற்கு உதவியவர் திரு. காஞ்சி மணிமொழியார் என்பதும் குறிப்பிடத் தக்கது. இதே குறளைத்தான் கலைவாணர் என். எசு. கிருட்டிணன் அவர்கள் பணம் என்ற படத்தில் "இதோ உலகம் பாருங்கள்'' என்று தம் வலக்கைப் பெருவிரல், சுட்டு விரல்களுக்கு இடையே வைத்துக் காட்டுகிறார்.

இந் நூலின்கண் திருக்குறளைப் பக்கத்துக்கு ஓரதிகாரமாக அமைக்க இயலவில்லை. இரண்டு பக்கங்களில் ஓர் அதிகாரம் ஒரே பார்வையில் பார்க்குமாறு அமைக்கப்பெற்றது. குறளின் முதல் அடி நான்கு சீர்களையும்இரண்டிரண்டு சீர்களாக இரண்டு வரிகளும், இரண்டாம் அடியிலுள்ள மூன்று சீர்களை ஓரடியாகவும் மூன்றடிகளில் அமைக்கப்பெற்றது. இதுவே, பொதுமக்களால் "தீப்பெட்டிக்குறள்'' என்று உவமைக் கண்கொண்டு சொல்வும் பெற்றது. அதனைப் பையில் வைத்துககொண்டு போவாரிடம் பெருவேட்கைப் பஜகக் குடியர்கள் 'தீப்பெட்டி கொடுங்கள்' என்று கேட்டு நாணமுற்ற நிகழ்ச்சிகளும் உண்டு. குறியருள் மிகக் குறியரைத் தீரக்குறியர் என்பதுபோலக் குறள்களுள் இது தீரக் குறள் என்பது சாலும்!

திருக்குறள் பரிமேலழகர் உரை 1937 இல் வெளிவந்தது. அதன் பரிசுப் பதிப்பு மேலைநாட்டுக் கிறித்துவ மறைநூல் போன்ற அட்டைக்கட்டுடன் கவின் மிக இருந்தது. தமிழில் இதுவரை எந்த நூலும் இவ்வாறு உயர்ந்த கட்டம் செய்யப்பெறவில்லை என்று கற்றறிந்தோர் போற்றினர்.

ஒருமுறை கோவைப்பெருமகனார் திரு. இரத்தினசபாபதி முதலியாரைத் திரு.வ.சு. அவர்கள் கண்டு, "ஐயா! தங்களுக்குத் திருக்குறள்'' என்று சொன்னார். அவரிடம் அவ்வுரைப் பதிப்புகள் பல முன்னமே உண்டு. எனினும் இவ்வுரைப்

பதிப்பைப் பார்த்து வியப்புற்றார். கட்டிப்பிடித்துத் தழுவினார். "இதுகாறும் தமிழில் எந்தப் புத்தகத்தையும் இத்தகைய அழகிய கட்டடத்தில் பார்க்க வியப்புற்றார். கட்டிப்பிடித்துத் தழுவினார். "இதுகாறும் தமிழில் எந்தப் புத்தகத்தையும் இத்தகைய அழகிய கட்டடத்தில் பார்க்க வில்லை. அந்தக் குறையினை நீர் நீக்கிவிட்டீர். அதற்காக உமக்குத் தமிழ்மக்கள் பெரிதும் கடமைப் பட்டுள்ளனர். புகை வண்டி முதல் வகுப்பில் செல்லுங் காலங்களில் கிறித்தவப் பாதிரியார் சிலர் அழகிய திருமறை நூலைத் தம் கையில்வைத்துப் போற்றிப்படித்து வருதலைக் கண்டு இதைப்போல் நம் தெய்வத் திருக்குறள் உயர்ந்த கட்டம் செய்யப்பெற்று வரவில்லையே என்று நினைப்பதுண்டு. அந்தக் குறையினை நீர் போக்கியதற்கு என்ன கைம்மாறு செய்யமாட்டுவேன் என்று வியந்து மகிழ்ந்து கூறினார். அப் பதிப்பின் சீர்மை அத்தகைத்து.

திருக்குறளுக்கு ஒரு தெளிவுரை எழுதுதல் வேண்டும் என்றும், உரையும் பாட்டம் எதிரெதிராக இணைப்பக்கங்களில் இருக்குமாறு அமைத்தல் வேண்டும் என்றும், குறள் ஈரடிகளுக்கு ஏற்ப அதன் தெளிவுரை மூன்றடிக்கு மிகாமலும் குறையாமலும் இருத்தல் வேண்டும் என்றும், அதனை இவ்விவ்வெழுத்தால் அச்சிடல் தகும் என்றும் அதன் அமைப்பு இத்தகையது என்றும் திரு.வ.சு. அவர்களும், அப்பர் அச்சக மேலாளர் திரு. கோவிந்த ராசமுதலியார் அவர்களும் திட்டப்படுத்திக்கொண்டு டாக்டர் மு. வரதராசனார் அவர்களைக் கலந்துரையாடினர். அதற்கு முன்னரே மு.வ. கழக நூலாசிரியராகப் பல நூல்களை எழுதித் தந்தவர் ஆகலின், திருக்குறள் தெளிவுரையையும் திரு.வ.சு. வேண்டியாங்கு எழுதித்தர இசைந்தார். அதுவே திருக்குறளை மூவாத்திருக்குறள் ஆக்கி, கழகத்துக்கும், அவருக்கும் 'மூவா' விழுப்புகழ் ஆக்கித் தந்துவரும் மு.வ. தெளிவுரை நூலாகும்.பத்து நூறாயிரம் படிகளுக்குமேல் தமிழ் உலகில் எந்த ஒரு நூல் தான் விற்பனையாகியுள்ளது!

திருக்குறள் மூலம், உரைப்பதிப்புகளே அன்றி ஆராய்ச்சி நூல் பதிப்புகளும் தேர்ந்து வெளிக்கொணர்ந்தார் திரு.வ.சு. திருக்குறள் பகுதிப்பதிப்புகளும், மாணவர்க்கேற்ற பாடத் தொகுப்புகளும் கொணர்ந்தார். "தெய்வப்புலவர் திருவள்ளுவர்", "திருவள்ளுவரும் சிவப்பிரகாசரும்", "திருவள்ளுவர் கதை", "வள்ளுவர் சொல்லமுதம்", "முதற்குறள் உவமை", "திருக்குறள் இன்பம்", "திருக்குறள் சிந்தனை" முதலியவையும் பிறவும் அவ்வகையில் வந்தன.

போப்பையர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திருக்குறள், துரு ஐயர், இலாசரசு ஆகியோர் ஆங்கிலத்தில் பெயர்த்த திருக்குறள், சுத்தானந்த பாரதியார் இயற்றிய Tirukkural Coupletws ஆகிய நூல்களை வெளியிட்டார்.

எங்கும் எளிமையாகக் குறளைப் பரப்பவிரும்பித், திருக்குறள் தாலாட்டு, திருக்குறள் காவடிச்சிந்து, திருக்குறள் நூற்றெட்டு, சிறுவர்க்கான திருவள்ளுவர் நாடகம், வானொலியில் வள்ளுவர் ஓவியம், வளர்புகழ் வள்ளுவம், திருக்குறள் நாடகம் என இன்னபல நூல்களை வெளிப்படுத்தி வள்ளுவர் புகழை நாளும் பரப்பி வருகின்றார்.

மற்றும் ‘குறள்கூறும் சட்டநெறி’ காலத்துககேற்ற புதுத்துறை பூத்த வெளியீடாகும். ‘திருக்குறள் சொற்பொருள் அகர வரிசை’ என்னும் நூலும் ஆய்வாளருக்குப் பெரும்பயன் தரும் நூலாகும். ‘திருக்குறள் குறுந்திரட்டு’, ‘திருக்குறள் பெருந்திரட்டு’ என்பவை பள்ளிமாணவர்க்குப் பயன்படுபவை.

இனித் திருக்குறள் வகையில் ஆட்சியாளர் திரு.வ.சு. செய்துள்ள பிறபணிகளை நோக்குவோம்.

1008 ஆவது நூல் வெளியீட்டு விழாவின்போது அமைச்சர் திரு.எம். பக்தவத்சலம் அவர்கள். “முன்பெல்லாம் என்னைப் போன்ற படிக்காதவர்களுக்குச் சைவசித்தாந்தக் கழகம் என்றால் அவர்கள் வெளியிட்ட திருக்குறள் டைரிதான் தெரியும். அது ஆண்டுதோறும் வெளியிட்டுவரும் திருக்குறுள் டைரி ஓர் அரிய பணி. அது ஒன்றே போதும். குழந்தைக்குத் தேனில் சேர்த்து மருந்து கொடுப்பதுபோல அன்றாடமும் திருக்குறள் படிப்பதற்கு இந்த டைரியால் வாய்ப்பு ஏற்படுகிறது. டைரி எழுதும் பழக்கம் ஒரு ஃபாசனாக இக்காலத்தில் உள்ளது. அன்றாடம் டைரியில் என்ன எழுதுவது என்று பார்ப்பார்கள். அப்போது குறள் கண்ணில் படும். குறளையும் பார்க்கிறோம். அதை மனத்தில் இருத்திக்கொள்கிறோம். இத்தகைய சீரிய பணியை அவர்கள் செய்து வருகிறார்கள்” என்றார்.

திருக்குறள் நாட்குறிப்பு வெளியிடும் எண்ணம் எவ்வாறு தோன்றியது? தூண்டியவர் யார்? அல்லது தூண்டியது யாது? என்பதை அறியும் ஆவல் உண்டாதல் இயற்கை.

சில ஆங்கில நாள்காட்டிகளிலும் நாட்குறிப்பு ஏடுகளிலும் ஒவ்வொரு நாளுக்கும் உரியதாக, ஆங்கில நூல்களில் இருந்து தேர்ந்தெடுத்த அறிவுரையோ அறவுரையோ

விளங்க வெளியிடுவது வழக்கமாக உள்ளது. அறிஞர் சேம்சு ஆலன், நாளுக்கு ஒரு நற்கருத்து அறிந்துகொள்ளுமாறு எழுதிய நூல் Daily Meditations என்பது ஆகும். அதனைக் கழகம் ‘நாள்வழி நற்சிந்தனைகள்’ என்ற பெயரால் வெளியிட்டுள்ளது.

புனாவில் இருந்த திருவாட்டி தி. திருநாவுக்கரசு அம்மையார் என்பார் தமிழ்நூல்களில் இருந்து நாள் ஒன்றுக்கு ஓர் அறிவுரையோ அறவுரையோ அமைந்த நாட்காட்டியோ நாட்குறிப்போ வரவில்லையே என வருந்தினார். எனவே திருக்குறளில் இருந்து நாள் ஒன்றுக்கு ஒரு குறளாகத் தேர்ந்து திருக்குறள் நாட்குறிப்பு (Tirukkural a gem for each day) அச்சிடக் கருதினார். அவர் தேர்ந்த குறள்களுக்கு ஆங்கில ஆக்கமும் இயற்றினார். இது வெளிவந்தது 1915 இல் ஆகும்.

“நாட்குறிப்புக்கு வேண்டிய பிற குறிப்புகள் எவையும் அதன் கண் கொடுக்கப்பெறவில்லை எனினும் அந்நூலே கழக வழித் திருக்குறள் நாட்குறிப்பை வெளியிடுதற்கு வழிகாட்டி யாயிற்று என்பது உண்மை. அதனால் முதற்கண் அவ் விழுமிய அருட்பண்புடைய அம்மையார்க்கு நன்றி” தெரிவித்துக் கொள்கிறார் திரு. வ.சு.

“உலகப்பொதுமறையாம் திருக்குறளை நாட்குறிப்பின் வழியாகப் பரப்புதலே சிறந்த முறையென யானும் என் அருமைத் தமையனார் திருவரங்கனாரும் கருதினோம்” என்கிறார் வ.சு.

1932 ஆம் ஆண்டு திருக்குறளில் இருந்து 366 குறள்மணிகளைத் தேர்ந்து அமைக்கப்பெற்றது திருக்குறள் நாட்காட்டி. அக் குறள்களும் ஓர் ஒழுங்குபெற்றனவாகவும் இல்லை. பின்னர் 1933 ஆம் ஆண்டில் திருக்குறள் தொடக்கத்தில் இருந்து முறையாக 365 குறள்களும் 1934 ஆம் ஆண்டில் அடுத்த 365 குறள்களும் 1935 ஆம் ஆண்டில் அடுத்த 365 குறள்களும் அமைக்கப்பெற்றன. 1936 இல் எஞ்சிய 235 குறள்களையும் அமைத்து மிகுந்த 131 பக்கங்களுக்குக் கலித்தொகையில் அமைந்துள்ள குறள் அமைப்புடையவற்றைத் தொகுத்து அமைத்துக் கொள்ளப்பெற்றன. இவ்வகையால் திருக்குறள் முழுமையும் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறையாகச் சுழற்சி வகையில் 12 சுற்றுச் சுற்றி நாட்குறிப்பு உலாக்கொண்டு, சிறக்கின்றதாம். நாட் குறிப்புப்போலவே திருக்குறள் நாட்காட்டியும் எழில்காட்டி இலங்கி வருவது நாடறிந்ததே.

வ. சு. அவர்கள் ‘திருவள்ளுவர் திருநாட் கழகம்’ தோற்றுவித்து அதன் பொறுப்பாளராக அமைந்து விழாக்கள்

கொண்டாடியதையும் மலர் வெளியீடு செய்ததையும் முன்னரே அறிந்தோம். அவ்வாறே கழகச் சார்பில் 1968 இல் திருவள்ளுவர் திருநாள் விழாக் கொண்டாடி 'மலர்' வெளியிட்டதையும் அறிந்துள்ளோம்.

தமிழகத்தில் இன்று சிறப்பாக விளங்கும் திருவள்ளுவர் கழகங்களைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர் திருக்குறள் எண் வகை நினைவுக்கலைச் செல்வர் திரு. தி.ப. சுப்பிரமணியதாசு ஆவர். அவர் 1934 ஆம் ஆண்டு தம் அருமை மைந்தன் 10 அகவையுள்ள இராமதாசை அழைத்துக்கொண்டு சென்னைக்கு வந்தார். தந்தையைப்போலவே அந்த இளைஞனும் திருக்குறள் தேர்ச்சியாளனாக விளங்கினான். திருக்குறள் பதின்வகை நினைவாளனாகிய (தசாவதானியாக) அச் சிறுப்பெரியார் கழக ஆட்சியாளர் உள்ளத்தைக் கவர்ந்தார். தந்தையும் மைந்தரையும் அழைத்துப் பல மன்றங்களிலும் பள்ளிகளிலும் நினைவுக்கலை நடாத்தச் செய்வித்துப் பரிசும் பாராட்டும் பெறுவித்தார். இவ்விளைய மாணவர், "தமிழ்ப் புலவர் கல்லூரியில் பயின்று தமிழ்ப்பணி செய்தற்கு வேண்டும்" என்று அறிவுறுத்தினார். அவ்வாறு பயின்று தமிழ்ப்பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார் அந்த மாணவர் திரு. இராமதாசு என்னும் திருத்தக்கதேவர்.

முகவை மாவட்டம் காரைக்குடியைச் சார்ந்த கண்டர மாணிக்கம் ப.சு. வித்தியாசாலையில் 5 ஆம் வகுப்புப் படிக்கும் மாணவன் இரா. ஈசுவரன் என்பான் திருக்குறள் எண்திறல் தேர்ச்சியாளனாகத் திகழ்வது அறிந்து அவனைத் தக்காங்கு பாராட்டியும் செந்தமிழ்ச்செல்வி இதழில் பாராட்டுத் தெரிவித்து விளம்பரப்படுத்தியும் தம் திருக்குறட்பேரன்பை வெளிப்படுத்தியுள்ளார் திரு.வ.சு.

திருக்குறளைப் போற்ற வேண்டுவது போலவே திருக்குறளுக்குத் தொண்டு செய்தவர்களையும் போற்றுதல் கடமை எனக் கொண்டவர் திரு.வ.சு. அதனால் திருக்குறளை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்த டாக்டர் போப் திருவுருவம் அஞ்சல்தலையில் வர வேண்டும் என்பதை நடுவணரசும், தமிழக அரசும் அறிய அறிக்கை விடுத்தார். தமிழக அறிஞர்களையும் தூண்டினார். நினைவுகூர வேண்டிய தமிழ்ப் பெருந்தொண்டர் போப் என்பது உண்மையன்றோ!

அவ்வப்போது திருக்குறள் தொடர்பான போட்டி வைத்துப் பரிசுகள் வழங்கியுள்ளார் திரு.வ.சு. திருக்குறள்

தெளிவுரை வரைந்த முனைவர் மு.வ. பெயர்சிறக்கப் பரிசுத்திட்டம் ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளார்.

ஆண்டுதோறும் தமிழ்ப்பேரறிஞர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் திருக்குறளைப்பற்றி ஆய்வுநூலை எழுதச்செய்வது என்பதும் அவர் எழுதித்தரும் ஆய்வுநூலை அச்சிட்டு மு.வ. பரிசுச் சொற்பொழிவு விழா நிகழ்த்தி அவ் விழாவில் ஆய்வாளரை உரையாற்றச் செய்து நூலை வெளியிடுவது என்பதும் அப் பரிசுத் திட்டமாகும். நூற்பரிசாக ஆய்வுரை எழுதிய அறிஞர்க்கு 500 ரூபாயும் நூல் விற்பனையில் பத்து விழுக்காடு வார ஊதியமும் வழங்கப்பெறும். இத் திட்டத்தின்படி தவத்திரு அழகரடிகளாரால் ‘திருக்குறள் அறம்’ என்னும் ஆய்வுநூல் மட்டும் வெளியிடப்பெற்றது. பொருள்பற்றி ஆய்வுநூல் எழுதப் பேராசிரியர் மா.பா. குருசாமி அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு வ.சு அவர்கள் செய்துள்ள திருக்குறள் பணிகள் மிகப் பலவாகும். இவற்றையெல்லாம் ‘திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும்பணி’ என்னும் தொடர்கட்டுரையில் அவர்கள் விரித்து எழுதியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவநெறிக்கொள்கையில் அழுத்தமும் அம்மை அம்பலவாணர் வழிபாட்டில் திளைத்தலும் உடையவர் தவத்திரு மறைமலையடிகளார். சிவநெறித் தமிழ்க்கோட்பாடே வள்ளுவம் என்பது அவர்கள் துணிவு. ‘வள்ளுவநாயனார்’ என்பதே அவர்தம் வாய்மொழி. அவ்வாறாகவும் திருவள்ளுவர் திருநாள் கழகத்தலைமைப் பொழிவிலே, “உலகிலுள்ள வேறுபடு சமயத்தவரும் நாட்டவரும் இனத்தவரும் ஒன்றுபட்டு நன்னெறி நின்று இன்புற்று வாழப் பொதுமறை ஒன்று வேண்டும். அம் மறை திருக்குறளே. ஆகலின் அவரெல்லாரும் திருவள்ளுவரையும் அவர் குறளையும் உலகத்தலைமைப் பொதுக் குருவென்றும் பொதுமறை என்றும் ஏற்றுக்கொள்வராயின் யாம் அவ்வொற்றுமை நலங்கருதித் திருவள்ளுவரைப் பொதுமையாளர் எனவும் திருக்குறளைப் பொதுமமறை எனவும் கூறுவேம். திருவள்ளுவர் திருக்குறள் பற்றிய எம்முடைய தனிக்கருத்துக்களைக் கூறமாட்டேம்” என்றார்.

தமிழகத்திலுள்ள மூன்று பல்கலைக்கழகங்களிலும் பட்டமளிப்பு விழாவுக்கு வந்து பட்டம் பெறும் ஒவ்வொருவருக்கும் திருக்குறள் தெளிவுரை தெய்விகப்

பேரவையின் சார்பில் வழங்கப்பெற்றது. பின்னே தேவாரம் திருவாசகம் போன்ற சைவ சமய நூல்களை வழங்குதல் வேண்டுமென நிறுத்திவிட்டனர். தேவார திருவாசகம் திரு.வ.சு. அவர்கள் விரும்பாதவையா? தலைமேல் கொள்ளத் தக்கவை என்பது வெளிப்படை. ஆயினும், "எந்நாட்டினர்கரும் எம்மொழியினர்க்கும் எச்சமயத்தினர்க்கும் எக்காலத்துக்கும் ஏற்றதாகிய திருக்குறளைத் தவிரப் பட்டமளிப்புப் பரிசுக்குகந்ததொரு வேறு எந்தத் தமிழ்நூலும் இல்லை என்பது எவரும் ஒப்புக் கொள்ளக்கூடியது ஒன்றாகும்," என்கிறார் திரு.வ.சு. அவர் தம் திருக்குறள் காதல் அத்தகைய விழுமியது என்க.

'வள்ளுவர் புகழை உலகம் அறியவேண்டும்' என்பது தம் வள்ளுவக்காதலே எனினும், வள்ளுவ அறத்தால் வையகம் உய்ய வேண்டும் என்பதே வ.சு. அவர்களின் உட்கிடை என்பது வெளிப்படை.

திருக்குறள் தொடர்பான கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், மலர்கள் ஆகியனவும் பல்வேறு பதிப்புகள், பல்வேறு மொழிகளில் இதுகாறும் வெளிப்பட்டுள்ள மொழி பெயர்ப்புகள், திருவள்ளுவரைப்பற்றி வரையப் பெற்றுள்ள ஓவியங்கள், திருவள்ளுவர் பெயரால் இலங்கும் மன்றங்கள் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் எங்கும் என்றும் கண்டறியாவகையில், காட்சிப் பொருளாகவும் கருவூலமாகவும் தொகுத்துள்ள வ.சு.வின் நோக்கம் உலகுக் கென்றே தோன்றிய அவ் வுலகநூல் உலகோர் கூட்டுண்டு உய்யும் ஒரு பேரமுதமாக வேண்டும் என்பதேயாம். மேலை நாடாக இருப்பின் அவர் தொகுத்து வைத்துள்ள இவ்வருங்கலைக்காட்சிப் பொருளைக் கண்காட்சியாக வைத்தே பலகோடிப்பொருளை ஈட்டிக் கொள்ளமுடியும்! இவர்தம் காட்சியமைபேபா 'காசிலா'க் காட்சி யமைப்பு, காண்பார் கொண்டுசெல்லும் கருத்துப்பயனே கட்டணம் இறை, பரிசு, எல்லாம்!

திருக்குறள் காட்சியை உலகம் திளைக்க வைக்க வேண்டும் என்னும் 'தீராக்காதலர்' திரு.வ.சு. ஆதலால் அதனை அதற்கேற்ற சூழலில் - அமைப்பில் வைப்பதே அருமை என உணர்ந்து உணர்ந்தவாறே கடனாற்றி வருகிறார். வள்ளுவப் பெருந்தகை வளர்புகழுக்கேற்ப வனப்புற அமைந்துள்ள வள்ளுவர் கோட்டத்தில் ஐந்து முறை திருக்குறள் கண்காட்சி வைக்கப்பெற்றுள்ளது. நீலத்திரைக்கடல் ஓரத்திலே நிற்கும்

*வள்ளுவர் நினைவுத் திருக்கோயில் பாறையில் திருக்கோயில் கால்கோள் விழாவின்போது ஒருமுறை காட்சியமைக்கப் பெற்றது. நடமாடும் வள்ளுவர் நினைவாலயம் இவ்வருங்காட்சி என்பதைக் கண்டோர்அனைவரும் விண்டு மகிழ்ந்தனர்! வ.சு. அவர்களின் வள்ளுவக்காதல் நூற்பதிப்பாகும்; காட்சியாகும்; கலைக்கோயிலாகும்; கவின் தமிழ் மாளிகையுமாகும்!*

# 27. மறைமலை மருகர்

*(மரம், மரத்தில் இருந்து வித்து, வித்தில் இருந்து மரம், இவ்வாறு வழிவழித்தொடர்ந்து வருவதே மரபு; 'வாழையடி வாழையென' வருவதும் மரபே! மரபு பேணிக் காப்பார் மருகர். மரபுப்புகழ் மருகர் புகழாம்; மருகர் புகழ் மரபுப் பெருமையாம். இது தொல்பழவழக்கு.)*

அறிஞர் சாக்ரடீசுக்கு ஒரு பிளேட்டோ; மார்க்கசுக்கு ஓர் ஏங்கல்சு; இராமகிருட்டிணருக்கு ஒரு விவேகானந்தர்; காந்தியடிகளுக்கு ஒரு நேரு; மறைமலையடிகாளருக்கு ஒரு தாமரைச் செல்வர் வ.சு.

கிழமைமுறையால் அரங்கரின் தம்பியாராகிய வ.சு. மறைமலையடிகளார்க்கு மருகரே! ஆயின் இங்கு அக் கிழமை முறை ஒன்று கொண்டு மட்டும் மருகராகப் போற்றினோம் இல்லை. வழி வழியாக மறைமலையார் தொண்டு நிலைபெறுத்தும் வித்தகச்செயலாண்மை வீறென்று கொண்டே அவரை மருகர் எனக் குறிப்பிட்டோம் என்க.

இளமையிலேயே உண்டாகிய அடிகளார் தொடர்பு, அரங்கர் திருமணத்தால் அமைந்த நெருக்கம், நூல்வெளியீட்டால் அமைந்த அணுக்கம் இன்னவெல்லாம் உலகில் பொதுப்பொருளானவை! எவர்க்கும் வாய்க்கத்தக்க வழிமுறைகள். ஆனால் சிறப்புப் பொருளாக அமைந்தது அடிகளார் திருப்பெயர் உலகம் உள்ள வரை நிலைக்கச் செய்துவரும் திருவளர பணிகளே.

திரு.வ.சு. அவர்கள், அடிகளார் மங்கலப்புகழ் பரப்பும் முரசறை முதுகுடி வள்ளுவப் பெருந்தகை; அவர் முழக்கும் முரசம், செந்தமிழ்ச்செல்வி; அடிகளார் திருப்பெயரும் ஒளிக் கருத்தும களிநடம் செய்யாதொழிந்த ஓரிதழ்தானும் உலவியது உண்டோ? இப் பணிணை இடையீடு இன்றிச் செய்து வருவார் எவர்? செப்பருங்குணத்து இச் சுப்பையவேள் ஒருவரே! ஆகலின் 'மறைமலை மருகர்' அவர் என்க!

*மறைமலையடிகள் தாம் வாழ்ந்த பல்லாவரத்தில் 15-9-50 இல் அம்மை அம்பலவாணர் திருவடி நீழலை அடைந்தார். அவர்கள் பிரிவுக்கு முன்னர் 9-9-50 இல் தம் உடைமைகளைக் குறித்து விருப்ப ஆவணம்* ஒன்று எழுதினார். அதன் நிறைவேற்றற் செயற்குழுவினராக எழுவரைக் குறிப்பிட்டு இருந்தார். அவர்கள் திரு.வ.சு. திரு. அ. கனகராயர், திரு.க. சொக்கலிங்கம், பண்டிதர்திரு. ஆனந்தம், திரு.ந.ரா. ஆடலரசு, திரு. ந.ரா. முருகவேள், திரு. கூத்தரசு ஆகியோர்.*

*உடைமை உரிமை என்னும் நிலைமை எழும்போது எவர்க்கும் பற்றுதல் உண்டாவது இயற்கை. உண்மை கடந்த நிலையிலும் உணர்ச்சி பெருகி அரவணைக்க முந்தும். அதிலும் அவ் வுடைமைக்கு உரிமைப்பட்டவர் என்பவர் நிலையோ சொல்லவேண்டுவது இல்லை. ஆதலால் அடிகளார் எழுதிய விருப்ப ஆவணம் நல்ல நினைவோடு எழுதப்பெறவில்லை என்று அவர்தம் மக்கள் வழக்குத் தொடர்ந்தனர். அவ் வழக்கு உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றது. அடிகளார் செவ்விய நினைவோடே இருந்தனர் என்பதை அவர் மறைவுக்கு முன்னிரு நாள்வரை கண்டு அளவளாவி வந்த பெருமக்களால் மெய்ப்பிக்கப்பெற்றது. அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் முனைவர் மு.வ. ஆவர். நடுவரே 'மு.வ' அவர்களின் வாக்கு மூலத்தைச் சுட்டிக்காட்டி உறுதிப் படுத்தி அடிகளார் நன்னினைவோடுதான் விருப்ப ஆவணம் எழுதினார் எனத் தீர்ப்பு வழங்கினார். நடுவர் சுட்டிக்காட்டிய செய்தியைக் காண்க.*

"However, the evidence of this doctor (Dr. Srinivasalu Naidu) is not very helpful in regard to the condition of the patient (Swami Vedachalam) on 9-9-1950. As against that evidence the petitioners have examined pandi Varadarajan, Tamil Prof. in Pachaiappa's College with the qualification of M.O.L. M.A., Ph.D., and who knew the Swamiar since 1928. During his illness this Panidit visited the Swamiar four days prior to his death. He also attended the death of the Swamiar. During that visit, the Pandit introduced to the Swamiar some friends who accompanied him. The Swamiar answered the Pandit's queries regarding his health. The Pandit stayed with the Swamiar for about 10 minutes. The Pandit stayed with the Swamiar for about 10 minutes. The Pandit has given evidence that the Swamiar was able to understand things and was fully conscious in this state of evidence, I am not convinced that the Swamiar must have been in a comatose condition or was not possessed of mental faculties at the time when he executed his will".

இதற்குப் பின்னர் அடிகள் குடும்பத்தினர் அவ் வழக்குச் செல்லாது என்று மேல்முறையீடு செய்தனர். அம் மேல்முறையீட்டு வழக்கிலும் முன்பு செய்யப்பெற்ற முடிவே சரியென்று ஒப்புக் கொள்ளப்பெற்றது.

அடிகளார் அறக்கட்டளை நிறைவேற்றற் செயற்குழு உறுப்பினர்கள் திரு. ஆடலரசைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தனர். அடிகளார் விரும்ப ஆவணத்தில் தம் மணிமொழி நூல்நிலையத்தைப் பொதுமக்களுக்குப் பயன்படும்படி சென்னையில் நடத்த வேண்டிய பொறுப்பும் தம் நூல்களை வாரமுறையில்அச்சிட வேண்டிய பொறுப்பும் கழகம் ஏற்றுக்கொண்டார் ஒப்படைக்கப் பெறுதல் வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளவாறு செயல் நடவடிக்கை மேற்கொள்ளப் பெற்றது. நானிலச் செல்வமாகிய அந் நூற்கருவூலத்தை வாளா பூட்டி வைப்பதோ, வந்த விலைக்கு விற்று அழிப்பதோ வையகப் பேரிழப்பே அன்றோ! ஆதலால் அவ்வகையில் உருவாகியதே தவத்திரு மறைமலையடிகளார் நூல்நிலையமாகும்.

“ஆங்கில அமெரிக்க நாட்டு வாணிகப் பெருமக்களைப் போலக் கூட்டாக வாணிகம் செய்து உழைப்பிலும் ஊதியத்திலும் பங்கு கொண்டு ஊதியத்தில் ஒரு பகுதியை நல்லற வழிகளுக்கு நாளும் செலவிட்டு வாழ்தல்வேண்டும்” என்று அறிவுறுத்தியவர் தவத்திரு அடிகளார். நம் நாட்டு வணிகர்கள் கல்வியின்னைமயும் ஒற்றுமை இன்மையும் அந்நோக்கம் சிறிதுமின்மையும் துணிந்து கேடு செய்தலும் ஆகிய தன்மைகளைக் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டி, அவர்வருந்தினார். அவர்தம் ‘விழைவை’ ‘விளைவு’ ஆக்கிய விழுப்புகழாளர் திரு.வ.சு. அவர்கள்.

அடிகளார் தொகுத்து வைத்திருந்த நாலாயிரம் நூல்களுடன் கழகம் தொகுத்து வைத்திருந்த ஐயாயிரம் நூல்களையும் சேர்த்து 24-8-58 இல் இலிங்கிச்செட்டித் தெருவில் நூல்நிலையம் தொடங்கியதை ‘விழவறா விழுப்புகழில்’ கண்டுள்ளோம்.

இவ்விடத்தில் மறைமலையடிகள் நூல்தொகுப்பின் அருமை, அது பயன்பட்டுவரும் அருமை, அதைப் பயன்படுத்தி வருவோர் கருத்து ஆகியனபற்றிக் காண்டல் வேண்டும்.

“அவர் நூல்களையெல்லாம் முற்கால ஊழிகளின் காலங் கடந்த மதிப்புடைய கருத்துகளின் திருவுருக்கள் என்றே கருதினார். அவற்றை அந் நிலையிலேயே பயன்படுத்துவதற்கு

அவர் விதிர்விதிப்புக் கொண்டார். தாம் பயன்படுத்தியபின், அவர் இதனைச் சேர்த்துத் தொகுத்து வைத்த முறை சுவையுடைய கனி கிழங்குகளைத் திரட்டி வைத்து சபரியின் செயலையே நினைவூட்டுவதாகும். சீராமன் இலக்குமணன் ஆகியவர்கள் சேவையில் ஈடுபட்டு அவர்களுக்கு அளிப்பதற்காகவே சபரி அவற்றைத் தொகுத்து வைத்தான். மறைமலையடிகள் இத்தொகுப்பைத் திரட்டியதும் இதுபோலப் பொதுமக்கள் சேவையை உளத்தில் கொண்டேதான் என்பது குறிப்பிடத்தக்கது.

அடிகள் ஏடுகளைத் திரட்டிச் சேர்த்தவகை கடவுளின் திருவுணவுக்காகக் கண்ணப்பர் உணவு தேர்ந்தெடுத்துச் சேர்த்த முறையை ஒப்பதாகும். முதலில் தாம் தின்று சுவைபார்த்துக் கடவுளுக்கு ஏற்றதென்று கருதாத எதனையும் கண்ணப்பர் கடவுளுக்குப் படைக்க முன்வந்தது இல்லை. மறைமலையடிகள் செயலும் இது போன்றதே. தொகுதியிலுள்ள நூல்களில்அவர் முற்ற முழுக்க வாசிக்காதது, வாசித்து, இது மக்களுக்கு அளிக்கும்தகுதியுடையது என்று அவர்தேர்ந்தெடுக்காதது ஒன்று கூடக் கிடையாது.

ஏடுகள் ஒவ்வொன்றுக்கும் அவர்தனித்தனியாக அட்டை உறையிட்டுத் தூசிபடாமல்உன்னிப்பாகக் காத்து வைத்த முறையையும், ஏடுகள் ஒவ்வொன்றையும் வரிவரியாக முழுதும் வாசித்துப் பயன்படுத்திய பின்னும் புத்தம் புதியனபோல அவற்றைப் பேணி வகையையும் காண்போர் வியப்படையாமல் இருக்க முடியாது. ஏடுகளை அவர் வருங்காலப் பொதுமக்கள் பயனீடு நோக்கியே பேணி வைத்திருந்தார் என்பதற்குச் சான்றுகள் தேவைப்படுமேயானால், அதற்கு இஃது ஒன்றே போதியது ஆகும். புத்தகங்கள் ‘பயனீட்டுக்கேஉரியவை’ என்ற எனது நூலகத்துறையின் முதல் ஒழுங்கை அடிகள் தம் நோக்கத்தில் அன்றே கொண்டிருந்தார் என்பது தெளிவு

என்று மறைமலையடிகள் நூல்நிலையத்திறப்பு விழாவின்போது நூலக நுண்கலைச் செல்வர் முனைவர் தாமரைத்திரு. எஸ். ஆர். அரங்கநாதன் அடிகளார் நூற்றொகுதியின் அருமை குறித்துக் கூறியுள்ள உரைமணிகள் உன்னுதோறும் உயர்வற உயர்ந்து செல்வதாம். நூலக ஏந்தலைஅன்றி எவரே இவ்வாறு நுண்ணிதிற் கூற இயலும்? அப் பெருமகனாரே அடிகளாரின் நூலகத்தின் தனியுயர் சிறப்பை உள்ளங்கைக் கனியெனக் காட்டுகின்றார்.

*“நம்கால இந்திய வாழ்விலே அடிகளின் இவ் வியத்தகு சிறப்புக்கு இணையாக இரண்டே இரண்டு செய்திகளைத்தான் நம்மால்எடுத்துக்காட்ட முடியும். ஒன்று சென்னையிலேயே சர்.பி.எஸ். சிவசாமி ஐயர் தொகுத்து வைத்த சீரிய ஏட்டுத்தொகுப்பு. அவர் தம்ஏட்டுத் தொகுப்பில் ஒன்று கூட வாசிக்காது விட்டு வைத்தவர் அல்லர் உண்மையில் அவர் புத்தகக் கடையிலேயே முழுவதும் வாசித்துப்பார்த்துவிட்டுப் பிறருக்குப் பயன்படும் தகுதியுடையதாய் இருந்தால் மட்டுமே அதை வாங்கி அந் நோக்கத்துக்காகச் சேமித்து வைப்பது வழக்கமாம். தம் ஏட்டுத்தொகுதி தமக்குப்பின் மெய்யாகவே பொதுமக்கள் சேவைக்குச் செயல்முறையில் வழங்கப்படுமா என்பது பற்றி வாழ்வின் பிற்பகுதியில் அவர் எவ்வளவோ கவலைபிபட்டதை நான் அறிவேன்.*

*“நூல் தொகுதிகளின் மிகமிகப் பெரிதான மற்றொன்று உண்டு. அந்நாட்களில் தேசத்தில் பல பல்கலைக்கழகங்களின் நூலகங்களில் இருந்துவந்த நூல்தொகுதிகளைவிட அது மிகப் பெரிதாகவே இருந்தது. இதனைச் சேமித்தவர் கல்கத்தாவுக்குரிய சர். ஆஷ்டோஷ் முகர்ஜி ஆவர். 1934 இல் நான் சென்று இதனைப் பார்வையிட அழைக்கப்பட்டிருந்தேன். புத்தகங்கள் பெரும்பாலனவற்றினும் ஓரங்களில் சர் ஆஷ்டோஷ் கைப்படக் குறித்த குறியீடுகளும் ஓரக்குறிப்புகளும் நிரம்பியிருப்பதை நான் கண்டேன். இந்தப் புத்தகங்களைப் பொதுமக்கள் சேவைக் குரியன வாக்குவது எவ்வாறு என்பதே அவர் வாழ்வுக்குப்பின் பெருமாட்டி முகர்ஜிக்கும் அவர் புதல்வருக்கும் உரிய மிகப்பெருங் கவலையாம் இருந்தது. நல்லகாலமாக கல்கத்தாவிலுள்ள தேசிய நூலகம் அத் தொகுதியை ஏற்றுப் பேண முன்வந்தபின் இந்தக் கவலை எளிதில் தீர்ந்தது.*

*“மறைமலைத் தொகுதிபற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். சர். பி. எஸ். சிவசாமியையரையோ, சர். ஆஷ்டோஷையோ போன்றரவலல்லர் அவர் - அவர் செல்வ வளமிக்க வழக்கறிஞராய் வாழவில்லை. ஏழைக் கல்வியாசிரிய ராகவே வாழ்ந்தார். சென்னை கிறித்தவக் கல்லூரியில் - நான் பயின்ற கல்லூரியும் அதுவே - இந்திய மொழியரங்கத்தின் தலைவராய்ப் பணியாற்றியவர். ஆயினும் நாம் ஒப்பிட்டுக்காட்டிய மூன்று ஏட்டுத் தொகுதிகளிலும் மிகவும் வாய்ப்பு வளமிக்க தொகுதி மறைமலையின தேயாகும்.”*

இன்னும் மறைமலையடிகளார் நூற்றொகுதியின் அருமை குறித்துக் கூறவும் வேண்டுமோ?

பால் தூயதாக இருத்தலுடன் அது வைக்கப்பெற்ற கலமும் தூயதாக இருத்தல் வேண்டும். அவற்றுடன் அப் பாலைப் பருகுதற்கு அமரும் சூழலும் அமைவுடையதாக இருத்தலும் வேண்டும். அவ்வாறே சீரிய நூலாக இருப்பினும் சிந்தைகவரும் புறவனப்புகளும், செவ்விதின் வைத்துப் போற்றியும் எடுத்துப் படித்தும் பயன்கொள்ளத்தக்க வாய்ப்பான வளநிலையமும் வேண்டும்; இம் மூன்றன் கூறுகளுடன் அந் நூற்றொகுதியை, அன்னையினும் பரிவுகூர்ந்து அவரவர் விருப்பும் குறிப்பும் அறிந்து எடுத்து உதவும் உழுவலன்பாளரும் உதவியாளரும் இருத்தலும் வேண்டும். நூல்நிலையத்தின் வெற்றிக்கு இவையெல்லாம் தனித்தனிச் சிறப்புக்குரியனவே என்பதும் நாம் அறிந்ததே.

மறைமலையடிகள் நூல்நிலையம் அமைந்துள்ள கட்டடம் பழஞ் சிறப்பினது; வள்ளலார் தம் ஒன்பதாம் அகவையிலேயே சொற் பொழிவாற்றியது; சோமுசெட்டியார் என்பவர்க்குரியது. திருவருளாலே வள்ளலார் கண்ட சமரச சன்மார்க்க சங்கத்தையே பொது நிலைக் கழகம் என்னும் பெயரால் அமைத்து அரும்பணி செய்த வரும், வள்ளலார் பாக்கள் மருட்பாக்களே என்பார் முன்னே அருட்பாக்களே அவை என்பதை மெய்ப்பித்து அக் கொள்கையாளரைச் சூறையில் பஞ்செனப் பறக்க வைத்தவரும் ஆகிய மறைமலையடிகளார் திருப்பெயர் விளங்கும் நூலகம் வைத்தற்கு அவ்விடம் வாய்த்து திருவருட்செயலேயாம். இக் கட்டடத்தின் தொல் புகழ் இவ்வாறாக, அதன் நிகழ்புகழும், எதிர்புகழும் உலகோர் கூட்டுண்ணும் அருங்கலைச் செல்வ விருந்தகமாக அமைந்துள்ள தாம். வள்ளலார் பெயர் சிறக்க இரண்டாம் மாடி அகல்பரப்பு வள்ளலார் திருவருள் மண்டபப் பெயர் தாங்கிச் சொற்பொழிவு மண்டபமாய்த் திகழ்கின்றதாம். இக் கட்டடத்தை எப்படித் திட்ட மிட்டார் திரு.வ.சு. நூலக பேரறிஞர் அரங்காதரே அரங்கனார் திருத்தம்பியின் திட்டத்தை விளக்குறிார் :

"மறைமலையடிகளாரின் உடனுழைப்பாளர்கள் - சிறப்பாகத் திரு. சுப்பையாபிள்ளையவர்கள் - எவ்வளவோ ஆர்வத்துடனும் இடைவிடா அருமுயற்சியுடனும் இந் நிலையத்திற்குரிய திட்டங்களை நுணுக்க விரிவாகத் திட்டமிட்டு வந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு இக் கட்டடத்தைப்

பார்வையிடுவதற்காக அவர் என்னை அழைத்தபோது இந்தப் பழைய கட்டடத்தைத் தம் புதிய பயனீட்டுக்காக என்னென்ன வகையில் திருத்தியமைக்கலாம் என்பதுபற்றிய என் கருத்துரைகளைக் கேட்க அவர் எவ்வளவு ஆர்வமுடையவராய் இருந்தார் என்பதை நான் மறந்துவிடவில்லை. அச்சமயம் அவரிடம் காணப்பட்ட ஆர்வத்துடிப்பு வருங்காலத்தில் இந்நிலையம் இலக்கிய வளர்ச்சிக்கும் பண்பாட்டுக்கும் உதவும் முறையில் என்ன என்ன நடைமுறைகள் திட்டமிடப்பட இருக்கின்றன என்பது பற்றி அவர் விளக்கத்தின் உறுதித் 'தொனி' யாகிய இவற்றை நான் இன்னும் என் மனக்கண்முன் காண்கிறேன். நூலகத்தில் நுழையும்போதே நுழைபவர் முன் காட்சிதரும் பொன்வேய்ந்த அம்பலவாணர் திருவுருவின் குமிண்சிரிப்பு திட்டமிடப்பட்ட இந்நூலகத்தின் சேவையையும் அதன்மூலம் இயக்கப்படவிருக்கும் புத்தறிவுப்படைப்பின் அலையெழுச்சியையும் குறித்துக்காட்டுவதாகும்.''

ஏறத்தாழ இருபது இரண்டு ஆண்டுகளின் முன்னே ஒன்பதாயிரம் நூல்களுடன் தொடங்கிய இந் நூலகம் இன்று எந்நிலையில் உள்ளது? நூல்களால் விரிந்தது. நூற்பேழைகளால் அட்டளைகளால் விரிந்தது. எடுத்துப் படிப்போர் வாங்கிச் செல்வோர் எண்ணிக்கையால் விரிந்தது. ஆயும்பெருமக்கள் எண்ணிக்கையால் விரிந்தது. ஆய்வுப்பயனாலும் நனி விரிந்தது. ஒரு நூலகத்தின் சிறப்புக்கு இனி என்ன வேண்டும்?

இன்று ஏறத்தாழ 35,000 நூல்களுடன் விளங்குகிறது மறைமலையடிகள் நூலகம். கடல்போல் விரிந்து கன்னிமாரா நூலகத்திலும், மலையெனக் குவிந்த பல்கலைக்கழக நூலகத்திலும் காண்டற்கு அரிய நூல்கள் எல்லாம் கைம்மேல் கிடைக்கிறது மறைமலையடிகள் நூல் நிலையத்திலே! இச் சிறப்பெல்லாம் எங்கே போய்ச் சேர்கின்றது! தாமரைச்செல்வர் திரு.வ.சு. அவர்களிடமே பேய்ச்சேருதல் உண்மையாம்.

மற்றை நூலகங்கள் புதிய நூல்களை மட்டுமே வாங்கும்! இங்குப் பழமைக்குப் பழமையும் புதுமைக்குப் புதுமையும் ஆகிய நூல்களும் வாங்கப்பெறும். அவற்றுள்ளும் எத்துணைப் பதிப்புகள் உண்டோ அத்துணையும் உண்டு. ஒரோ ஒரு நூலை அரிதினும் அரிய நூலை வாங்குதற்காக - ஒரு நூலகத்தையே விலைக்கு வாங்கிய சீர்மை வேறு எந்நூல் நிலையத்திற்கு உண்டு? திரு. வ. சு. அன்றி எவருக்குத் தாம் உண்டு? நூலகம் நூலகமாக வாங்கிச் சிற்றாறு பலவாய் முக்கூடலாய் - ஐயாறாய் -

*ஆரம்பெறல் அமிழ்து விளை ஆழியாயப் பெருகிய பேறு இந்நூலகம் அன்றி எந்நூலகத்திற்கே உண்டு? வ.சு. அன்றிப் பிறர் எவருக்கே இப் பேறு உண்டு? இந் நூலகச்சிறப்பு - பயன் - பயன்படுத்தினோர் கருத்து ஆவனவெல்லாம் மறைமலை யடிகள் நூல்நிலைய அறிக்கைகள் 20 ஆம் ஆண்டு நிறைவு விழாமலர்ஆகியவற்றால் அறிந்துகொள்க.*

*இனி மறைமலையடிகள் திருவாழ்விடமாக இருந்த பல்லவ புரத்து மாளிகையைக் கலைமன்றமாக்கிப் பயனுறுத்திய செய்தியை அறிவோம்.*

*அடிகளார் மறைந்தபோது, கல்கி ஆசிரியர் திரு. ஆர். கிருட்டிணமூர்த்தி அவர்கள் மறைந்த மாமலை எனப் பெயரிட்டு இரங்கல் வரைந்தார். அதில் "அடிகள் வாழ்ந்திருந்த இல்லத்தையும் அவர் அதில் சேர்த்த நூல்நிலையத்தையும் தமிழ்மக்கள் முயன்று உரிய காணிக்கையை அவர் குடும்பத்தார்க்குக் கொடுத்துப் பெற்றுத் தமிழகத்தின் பொதுவுடைமை ஆக்கவேண்டும். அடிளின் இல்லம் தமிழர்களுக்கு ஒருபுனித யாத்திரைப்பதியாக விளங்க வேண்டும்" என்று வேட்கை எழுப்பி ஒரு வேள்வியாகக் கொள்ள வேண்டியிருந்தார். அவ்வாறே பேறு பல இதழாரும் அறிஞர்களும் கருதினர். திரு.வ.சு. அவர்களைச் சொல்ல வேண்டுமா?*

*அடிகளார் மாளிகையை அரசு எடுத்துக்கொள்ளுமாறு திரு. வ.சு. வேண்டினார். அப்பொழுது கல்வி நிதி அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் "அரசு அவ்வாறு வாங்கி நினைவு மன்றம் நடத்துதற்கு இல்லை! ஆனால், தக்கதொரு பொதுநிலையம் முன்வந்து வாங்குவதானால்அரசு பொருளுதவி செய்யும். நடுவண் அரசின் உதவி பெறவும் நான் பரிந்துரை செய்வேன்" என்றார். பழம் நழுவிப் பாலில் விழுவது எப்படி? இப்படித்தான்!*

*கட்டட மதிப்பீட்டாளர் 40,000 ரூபா தரலாம் என மதிப்பிட்டனர். அதில் நடுவண் அரசு 25,000 ரூ வழங்கிது. தமிழக அரசு 10,000 ரூ வழங்கியது. எஞ்சிய 5,000 ரூபாயைக் கழகம் ஏற்றுக்கொண்டது. பின்னும் சில ஆயிர ரூபாக்கள் செலவிட்டுச் சீர்செய்ய நேர்ந்தது. இந்நிலையில் மறைமலையடிகள் கலைமன்றம் உருக்கொண்டு 12-7-62 இல் திறப்பு விழாவும் நிகழ்ந்தது.*

பல்லாவரம் சாவடித்தெருவில் உள்ளது கலைமன்றம். அதன் முகப்பில் அழகான தோட்டம் உள்ளது. இடப்பால் சொற்பொழிவு மேடையும், வலப்பால் வட்டவடிவ நீர் நிலையும் உள. கலைமன்றக் கட்டடத்தின் உட்பக்கம் நுழைந்ததும் நான்கு பக்கச் சுவர்களிலும் அடிகளாரின் 12 திருவுருவப் படங்கள் அழகுற உள்ளன. மற்றை அறைகளில் புலவர் பெருமக்கள் திருவுருவப் படங்கள் அணிபெற நிறுத்தப்பெற்றுள. அடிகளார் பயன்படுத்திய மேசை, நாற்காலி, கட்டில், பாதக்குறடு ஆகியவையும் உள.

காட்சிக் கூடத்தில் அடிகளார் பயன்படுத்திய பொருள்களின் போலிகைகளும்; அடிகள் பயன்படுத்திய சிவமணிமாலை, மூக்குக் கண்ணாடி, பெருக்கக் கண்ணாடி, வெளியூர்களுக்குச் செல்லுங்கால் எடுத்துச் செல்லும் வழிபாட்டுப் பிள்ளையார்திருவுருவம், பற்றுக் குறடு முதலியனவும்; இசைத்தட்டுகள், நாட்குறிப்பேடுகள், அச்சிட்ட நூல்கள், கையெழுத்துப் படிகள் ஆகியவையும் உள்ளன. மேலும் அடிகளார் தாம் இயற்றிய நூல்களை மீண்டும் அச்சிடும் போது பிறமொழிச் சொற்களுக்குத் தூய தமிழ்ச் சொற்களைப் பெய்தமைத்தற்குப் போலிகைகள், தம் கைப்பட அழகாக எழுதிய அட்டைக் கடிதங்கள், தாள்கள் ஆகியவை கண்ணாடிச் சட்டம் இடப் பெற்றுத் தொங்கவிடப் பெற்றுள்ளன.

இந்தி எதிர்ப்பு இயக்கம் தோன்றிய நாள் தொட்டு வெளியிடப்பெற்ற அறிக்கைகள், கடிதங்கள், துண்டு வெளியீடுகள், நூல்கள் ஆகியனவும் உள்ளன. காண்பவர் கருத்தை வயப்படுத்தி அடிகளாரொடும் அணுக்கமாக்கித் தம்மை மறந்து தனிப்பேரின்ப வெள்ளத்தில் நீத்வல்ல அருமையான அமைப்புடையது கலைமன்றம்.

கலைமன்றத்தைக் கண்டுகளித்த பெருமக்கள் கருத்துகள் பார்வையாளர் குறிப்பேட்டில் கவினுறக் காட்சியளிக்கின்றன. அவற்றுள் ஒன்று, அடிகளாரின் அன்பான மாணவர் அழகரடிகள் எழுதியது ஆகும்:

“பல ஆண்டுகள் கழித்து இங்கு வாயிலில் நுழையும்போதே, புதுமை கமழும் உயர்உலகில் புகுவது போன்ற உணர்ச்சியும்,தமிழன்னையின் திருவோலக்க மண்டபத்தில் நுழையும் விதிர் விதிர்ப்பும், அடிகளாரின் திருவடித்தூள்களில் உகளப் புகும் புளகாங்கிதமும் அம்பலவாணர் அம்மை

எழுந்தருளியுள்ள அருள் வெளி மாட்சியில் அடையும் திளைப்பும் எய்திப் புதுமையுற நேர்ந்தது."

டாக்டர் கலைஞர் அவர்கள் இம் மன்றத்தைக் கண்டு களிப்புற்றார். அக்காலையில் மன்றத்தைக் கனிவுடன் காட்டிக் காட்டி மகிழ்ந்த மறைமலைமருகர் வ.சு. அவர்கள் சில வேண்டுதல்கள் விடுத்தார். அவ் வேண்டுதல்பயனே சைதாப் பேட்டையில் அமைந்துள்ள மர்மலாங் காலம் மறைமலை யடிகள் பாலமென விளங்கியதும், சுற்றுலாக் காட்சியிடங்களுள் மறைமலையடிகள் கலை மன்றம் இடம் பெற்றதும் ஆகும்.

"அடிகளார்க்குச் சிலை எழுப்ப வேண்டும்; அதனை இந்த இடத்தே எழுப்பவேண்டும்; அதன் அமைப்பும் சூழலும் இவ்வாறு இருத்தல் வேண்டும்" என்று மாநகராட்சிக்கும், அரசுக்கும் கோரிக்கை விடுப்பார் வ.சு. அடிகளார் பெயரால் கல்லூரி வேண்டும்; தனித்தமிழ் ஆய்வுத் திணைக்களம் வேண்டும்; நகர்க்கு அடிகளார் பெயர்சூட்ட வேண்டும் என்றெல்லாம் வலியுறுத்துவார்;

செந்தமிழ்ச் செல்வியாம் முரசம் வழியே ஒலியெழுப்புவார். பயன் என்ன? சென்னையிலோ அடிகளார்க்குச் சிலை; அடிகளார் தோன்றிய நாகையிலே சிலை; மதுரையிலே மாநகராட்சி உயர்பள்ளிக்கு அடிகளார் பெயர் - இன்னவெல்லா ஆங்காங்குள்ளாரால் தோற்று விக்கப்பெறுகின்றன; புகழ்பாடுகின்றன.

ஒரு நூறாயிரம் மக்கள் எல்லா வாய்ப்புகளுடனும் வாழும் வகையில் குடியிருப்பு, தொழில்துறை, வணிகத்துறை, கல்விக் கூடங்கள், கலைக்கூடங்கள் மருத்துவ விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள், கலைக்கூடக்ஙள் மருத்துவ விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள், கூட்டுறவு வணிக நிலையங்கள், பேருந்து நிலையங்கள் இன்பிற வாய்ப்புகள் நிரம்பியதாய்ச் சென்னைக்கும் செங்கற் பட்டுக்கும் இடையேயுள்ள காட்டாங் குளத்தூரில் மறைமலை நகர் உருவாகி வருகின்றது. ஆங்கே கழக ஆட்சியாளர் திரு.வ.சு. பங்கு என்ன? அங்கேயும் மறைமலை பெயர் விளங்கச் சீரியதோர் நூல் நிலையம் எழுப்பி அங்கு வாழ்வார்க்குக் கலைச் செல்வங்களை வாரி வழங்கப் போகின்றார்!

மறைமலைக்கு ஆண்டுதோறும் விழா, அணிமிக்கவிழா! பெரும் புலமையாளர் பங்கு - இவையெல்லாம் தட்டின்றி நடத்தி வரும் வ.சு.வை மறைமலை மருகர் என்பது எவ்வளவு பொருத்தம்!

## 28. அறம் வளர் திறவோர்

*(அறம் விரிந்த பொருளுடையது; காலந்தோறும் புதுப்புது விளக்கமும் விரிவும் பெற்று வருவது; "தந்நலம் துறந்து பிறர்நலம் புரிந்து வாழ்வதே அறம்" என்னும் அடிப்படை என்றும் மாறாதது அறம். அறம் வளர் திறம், அருளாளர் கடைப்பிடி.)*

அறச்செயல் நாட்டில் நிகழவேண்டும் என்னும் நோக்கிலே அவ் வகைக்குச் செலவிடப்படும் அல்லது வழங்கப்படும் தொகைக்கு வரிவிலக்கும் அளிக்கிறது அரசு என்றால், அது தழைக்க வேண்டும் என அரசு விழைகின்றத என்பதே காரணமாம். திரு.வ.சு. தாம் புகுந்த துறையே - நூற்பதிப்புத் துறையே - அறத்துறை; அத் துறையிலும், மாசு மறுப்புகா மாண்புநூல் வெளியிட்டு, உள்ளொளி பரப்பும் செய்கை இறைமைச் செய்கை! கொடுமை ஒழித்துச் செம்மையாக்குதல் செங்கோல் என்று பாராட்டப் பெறுமானால், இச் செவ்விய நூல் வெளியீட்டுப்பணி திருவருட் செங்கோல் திகழச் செய்யும் தெய்வப்பணியே என்பது போதரும். அவ்வாறாகத் திரு.வ.சு. செய்துள்ள ஒளிவளர் நூலகப் பணியையும் - கலைமன்றப் பணியையும் கண்டோம். இனி எஞ்சிய சில அறப்பணிகளைக் காண்போம்.

"இதனை இவ்வாறு செய்திருக்கலாமே!" "இவ்வாறு செய்திருந்தால் இன்னும் தகுதியாக இருந்திருக்குமே!" என்றெல்லாம் பின்னே எண்ணுமாறான அல்லது பிறர் எண்ணுமாறான செயல் செய்தறியாச் சீர்மையர் திரு.வ.சு. இதனை இவர் சூட்டியுள்ள அறநிறுவனப் பெயர்களே வெளிப்படுத்தும்.

நெல்லைக்கு மாறாச் சிறப்புத் தந்த இருமொழிப் பேரறிஞர் தவத்திரு. சிவஞான முனிவர். "வடமொழிக் கடலும் தென் மொழிக் கடலும் நிலைகண்டுணர்ந்தவர்" என்று பாராட்டப் பெறுபவர். அவர் திருப்பெயர் விளங்கச் 'சிவஞான முனிவர்' நூல் நிலையத்தைக் கழகத் தொடக்க நாளிலேயே திருவரங்கனாரும் திரு. வ.சு.வும் தேர்ந்து அமைத்தனர். பின்னே அந்நிலையத்தைச் சிறக்க வளர்த்து வருகிறார் திரு.வ.சு.

*நூல்நிலையம் பயன்படுதலைச் பொறுத்துத்தானே அதன் வெற்றியுள்ளது? ஆகலின் அப் பயன் இயல்பாய் அமையுமாறு தமிழ்ப் புலவர்கல்லூரி ஒன்று தொடங்கினார். அக் கல்லூரிக்கு எவர் பெயரைச் சூட்டுவது? ‘புலவர்’ எனின், அவர் திருவள்ளுவரே என்பது திருவள்ளுவமாலை. ஆகலின், அதனைத் திருவள்ளுவர் செந்தமிழ்க் கல்லூரி என நிலைநாட்டினார்.*

*நாட்டின் நலம் இளையோர் வாழ்வைப் பொறுத்தே அமைகின்றது என்பது எவரும்அறிந்ததே. ஆதலால் குழந்தைக் கல்விக்குத் தம்மால் கூடும் தொண்டு செய்தல் வேண்டுமெனக் குறிக்கொண்டார் வ.சு., அதனால் கிளர்ந்தது குமரகுருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளி. ஐந்தாம் அகவையிலே கந்தர் கலிவெண்பாப் பாடிக் குமரனை வழிபட்ட அக் குமரகுருபரர் பெயரில் குழந்தைகள் பள்ளி - மழலையர்பள்ளி - அமைத்தது எத்தகைய நுண்தேர்ச்சி!*

*மகளிர், கல்வியும் தொழில் தேர்ச்சியும் பெறுதலே நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்னும் சீர்த்தியை நல்கும் என்பதைத் தேர்ந்தவர் திரு.வ.சு. ஆதலால், மகளிர்க்குத் தையல் பயிற்சிப் பள்ளி தொடங்கினார். அதற்கு எப்பெயர் சூட்டுவது? தம் தவப்பெருந் தந்தையார்க்கே தனித்தமிழ்த்தந்தையாம் பேற்றை அருளிய தமிழ்த்தாயின் தவமகள் - திருவரங்க நீலாம்பியைர் பெயரைச் சூட்டினார். இப்போது அது ‘நீலாம்பிகையார் பல்துறைப் பயிற்சிப் பள்ளி’ யாக நடைபெறுகின்றது.*

*உயர் தமிழ் மாண்பை உலகம் அறிய வேண்டுமானால் அருந் தமிழ் நூல்களை ஆங்கில ஆக்கம் செய்தல் வேண்டும் என்னும் ஏரார்ந்த எழுச்சியால் ஒரு மன்றம் தொடங்கினார். திரு.வ.சு. அம் மன்றத்திற்குக் ‘கா.சு. பிள்ளை ஆராய்ச்சி மன்றம்’ என் பெயர் சூட்டினார். கழகத்தின் முதற்பெரும் பேராசிரியர், தாகூர் சட்டக்கல்விப் பெரும்பரிசாளர், ஆங்கிலும்அருந்தமிழும் அமைந்த தேர்ச்சியர் கா.சு. அவர் பெயர்த்தகுதிக்கு வேறு என்ன வேண்டும்!*

*கழக அமைப்புமுறைச் சேமிப்பால் அறம் வளர் பணியில் கழகம் ஈடுபட்டு நாடு நலம் பேணியது. ஆனால், “இன்று வந்துவிட்டதோர் இடையூறு மீனவன் ஆணையாலே” என்பதுபோல் வருமானவரித் துறையாரால் அறநிறுவனச் செயல்கள் அனைத்தும் ஆட்டம் கொடுக்கத் தொடங்கின.*

பொதுமக்கள் "இலவசச் சேவைக்கே செலவிடப்படுகிற சைவசித்தாந்த நூல் வெளியீட்டுக் கழகத்தின் சேமிப்பிலும் தன் 'தசைப் பங்கை' விடாப்பிடியாகக் ககோரும் மைய வருமானக் குழுமத்தாரின் (Central Board of Revenue) கண்மூடிக்கண்டிப்பு, உண்மையில் நாட்டுநல முன்னேற்றத்துக்கு உகந்ததன்று என்பது அவர்கள் எண்ணிப்பார்ர்துணர வேண்டிய செய்தியாகும்.

சட்ட சபை அரசாங்க வரிசையில் இருப்பவருள் நாட்டியல் வாதியாகிய எவரேனும் இதில் குறுக்கிட்டு ஒரு நல்ல ஆணை பிறப்பித்து உதவ வேண்டும் என்றே கருதுகிறேன். பொதுமக்கள் சேவைக்கு என ஒதுக்கி வைக்கப்படும் நிதிகளிலும் பொரு நிதித்துறையினர் இறையுரிமை பற்றி எண்ணுவதென்பது தட்டான் தன் மனைவிக்குரிய நகை செய்வதிலும் மறைவாகப் பொன் எடுத்துக் கொள்ள முனைந்த பழங்கதையுடனொத்த பரிசே இஃதாகுமன்றோ" என்று உண்மை நிலையை இடித்து அறிவுறுத்துகிறார் நூலாகக் கலைஞர்டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதன் அவர்கள். வருவாய்த்துறை வன்பிடியுள் சிக்கிப் பட்டபாடும், அச் சிக்கலை அருமுயற்சியால் திரு.வ.சு. அவிழ்த்து வெற்றிகொண்ட சீரும் அறியத் தக்கனவே.

கழக அறநிறுவனங்கள் தென்னிந்திய தமிழ்ச்சங்கம், தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கம் ஆகிய இரண்டற்கும் கழக மிக்க ஊதியத்தில் பேர்பாதி ஒதுக்கப்பட்டு வருகிறது என்பது நாம் அறிந்ததே. அத் தொகைக்கு வருமானவரி விதிப்பது இல்லை. அந்நிலை 1954 - 55 வரை இருந்தது. ஆனால், பின்னர்ச் சட்டத்தில் ஏதோ ஒருதிருத்தம் இருப்பதாகக் காட்டி 1955 முதல் 58ஆம் ஆண்டு முடிய மூன்றாண்டுகளுக்கும் வரிவிதித்து அதனைக் கட்டுமாறு ஆணை பிறப்பித்தனர். அதன்பேரில் வரிவிதிப்பதுவருமானவரிச்சட்டத்திற்கு முரணாகும். அதனால் வரிவிலக்கு அளிக்வேண்டும் என்று உதவி ஆணையரிடம் மேல்ாமுறையீடு செய்தார்வ.சு.

உதவி ஆணையரும்அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் பின் உயர்முறைமன்றத்துக்கு வரிவிதிப்பை நீக்குமறு கோரிவிண்ணப்பம் விடுத்தார். அதற்குள், நான்கு ஆண்டுகளுக்குமாக ரூ.52,000 வரிகட்டுமாறு ஆணை பிறப்பிக்கப் பெற்றுப் பகுதி பகுதியாக அத்தொகை கட்டி முடிக்கப்பெற்றது.

அவ்வளவில் நில்லாமல் 1953 - 55 வரையுள்ள இரண்டு ஆண்டுகளுக்குரிய கணக்கைத் தணிக்கை செய்து முடித்திருந்தும், மீண்டும் வரிவிதிப்பாணைக்கு உட்படுத்துதற்

காக அக் கணக்கை அனுப்புமாறும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில் தோற்று வித்த அறநிலையத் தொண்டுகளைத் தொடர முடியாத இக்கட்டுச் சூழ்ந்துவிட்ட நிலைமை தோன்றியது. அதற்காகவும், திரு.வ.சு. உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க நேர்ந்தது. அப்பொழுது, கழக வழக்கறிஞர் திரு. இராசகோபால் முதலியார்அவர்களுடன் வருமான மேல்முறையீட்டு வழக்கில் பெயர்பெற்ற திரு.எம். சுப்பராயர் அவர்களும் உதவிக்கு வந்தனர். வழக்கு இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கும்போது ஒருதிருப்பம் நேர்ந்தது.

திரு.வ.சு. அவர்கள் திருநெல்வேலிக்குச் சென்றார். அங்கே இரா. ந. குற்றாலிங்கம் பிள்ளை என்பார் அடிகளாரொடு ஆவிஉலகத் தொடர்பு கொண்டார். அவர் அக் கலையில் முன்னரே வல்லவராகத் திகழ்ந்தார். கழக அறப்பணிகளுக்கு உண்டாகிய இக்கட்டுகளை ஆவியுலகத் தொடர்பாளர் அடிகளார்க்கு அறிவிக்க அவர் அஞ்சவேண்டா! திருவருள் துணையிருக்கிறது; தமிழக அரசின் நிதியமைச்சர் திரு.சி. சுப்பிரமணியம் அவர்களிடம் வழக்கு நிலைகளை எடுத்துரைக்கவும்; அவர்கள் முன்வந்து வரிவிலக்குப் பெறுதற்குரிய வழிவகைகளைச் செய்து கொடுப்பார்கள் என்று உரைத்தருளினார். அதன்படி அமைச்சர் அவர்களைத் திரு.வ.சு. அவர்கள் கண்டார்.

அமைச்சர் நிகழ்ந்ததை அறிந்துகொண்டு உதவ முன்வந்தார். விண்ணப்பமும், முறையீட்டு மன்ற நடவடிக்கைகளும், அவற்றின் தீர்ப்புகளும் அமைச்சர் சி.சு. அவர்களுக்கு ஒரு படியும் நடுவணரசு வருவாய்த்துறை அமைச்சர் திரு. பி. கோபாலரெட்டி அவர்களுக்கு ஒரு படியுமாக இரு படிகள் தரப்பெற்றன. பின்னர் அப்போது நடுவணரசு அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தவரும் கழகப்பணிகளை நன்கறிந்திருந்தவருமாகிய டாக்டர் ப. சுப்பராயன் அவர்களைக் கண்டும் நிலைமையைக் கூறினர். அவரும் உதவ முன் வந்தார்.

நேரேசென்று திரு. கோபாலரெட்டி அவர்களைக் காணுமாறு திரு. வ. சு. அவர்களிடம் அமைச்சர் திரு. சி. சு. அவர்கள் கூறினர். அதன்படி தில்லிமாநகர்க்குச் சென்றார் திரு. வ. சு அவர் சென்ற வானூர்தியிலேயே வந்த தென்னெற்றி விசுவநாதன் அவர்கள் செய்தியை அறிந்துகொண்டு தாமும் உதவுதற்கு முன்வந்தார். 'நடுவணரசு'ப் பணி அமர்த்தல் ஆணையகத்தில் அப்பொழுது உறுப்பினராக இருந்ததிரு.

சிவசண்முகம் அவர்களும் துணைக்கு நின்றார். இந்நிலையில் திரு. கோபாலரெட்டி அவர்களைப் பேட்டி கண்டனர். அவர்வருவாய்த்துறைச் செயலர் திரு. குருவில்லா அவர்களைக் காணுமாறு பணித்தார். அவரைப் பார்த்த போது உரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதாக ஒப்புதல் தந்தார்.

1959 திசம்பரில் திரு. கோபாலரெட்டி சென்னைக்கு வந்தார். அவரிடம் மீண்டும் திரு.வ.சு. சென்று நினைவூட்டினார். அவர் சென்னை வருமானவரித் தலைமை ஆணையரிடம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிட்டார். தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்ட அவர் மீண்டும் தில்லி வருவாய்த்துறைத் தலைமைச் செயலரைப் பார்த்து வரிவிலக்கு ஆணை பெற்றுக்கொள்ளுமாறு குறித்தார்.

மீண்டும் 1960 சனவரித் திங்களில் தில்லிக்குச் சென்று தலைமைச் செயலரைக் கண்டார். அவர், "நீங்கள் தமிழுக்கும், சமயத்துக்கும் உண்மையான தொண்டுபுரிந்துகொண்டு வருகின்ற படியால், தனித்த முறையில் உங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப் பெறுகின்றது. இவ்வாணை சிலநாள்களில் சென்னையிலுள்ள தலைமை வருமானவரி ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் பெறும்; இனிக் கவலை வேண்டா; மகிழ்வுடன் கழகத்தொண்டு ஆற்றிவருக" என நல்லுரை வழங்கி வழியனுப்பினார்.

அவர் கூறியவாறு நடுவணரசு ஆணை வரவே வரிவிலக்கு வாய்ப்புக் கிட்டியது. வருமானவரி ஆணையர் தொடர்ந்திருந்த வழக்குகள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன. வாங்கியிருந்த மிகை வரியையும் திருப்பிக்கொடுக்கக் கட்டளையிட்டார். அது முதல் ஆண்டுதோறும் கழகம் அறத்துக்கு ஒதுக்கும் தொகைக்கு வரி விதிக்கப் பெறுவதில்லை.

எதிர்பாராத இவ்விடையூற்றை விலக்கிக்கொள்வதற்கு எத்தனை பாடுகள்! எத்தனை முயற்சிகள்! எத்தனை மனத்துயர்கள்! விலக்காணை பெற்ற அளவில் பட்ட துயரெல்லாம் பறந்துபோதலுடன் வெற்றி மகிழ்வும்ஏற்படுதல் இயற்கைதானே! ஏனெனில், வழிவழியாகத் தழைக்கவேண்டிய அறச்செயல் தடையின்றி நடக்க வாய்த்தது அல்லவோ, அதனால்!

'கவனக்குறைவால் அடுத்தடுத்துத் தன் செல்வங்களை யெல்லாம் இழந்துவரும் தமிழ்ச் சமுதாயத்தில் கலைச்

செல்வங்கள் பலவற்றையும் தேடிச்சேர்த்துப் பாதுகாத்துக் காட்சியாக வைத்து நமக்கெல்லாம் ஊக்கமும், நம்பிக்கையும் ஊட்டும் திரு. சுப்பையா பிள்ளை அவர்களுக்குத் தமிழர் பெரிதும் கடமைப்பட்டுள்ளார் என்று சிவஞான முனிவர் நூல்நிலையத்தைக் கண்ட சென்னைப் பல்கலைக்கழகுத் துணைவேந்தர் திரு. நெ.து. சுந்தர வடிவலு பாராட்டுகிறார்.'

"ஒரு வாசக சாலையைத் திறக்கிறவன் ஒரு சிறைச்சாலையை மூடுகிறான் என்பது நல்லறிஞர்களின் வாக்கு. இந்தச் சிவஞான முனிவர் நூல்நிலையத்தைத் திறந்துவைத்த திருநெல்வேலித் தமிழ்ச் சங்கத்தினர் இதனை மெய்ப்பித்துக் காட்டியிருக்கின்றனர்" என்கிறார் அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்.

பல்கலைக்கழகங்கள், மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆகியவை நடாத்தும் புலவர் தேர்வுக்குப் புலமையிற் சிறந்த பேராசிரியர்களைக் கொண்டு வகுப்பு நடாத்துகின்றது திருவள்ளுவர் புலவர் கல்லூரி அதன் பெருமைக்கு நிலைக்களமாக இருந்த பெருமக்களுள் திரு. புன்னைவனநாத முதலியார் குறிப்பிடத்தக்கவர்.

புலவர்களுக்குப் பாடம் கற்பித்த அளவில்நில்லாமல் அனைத்துப் புலவர் கல்லூரிமாணவர்க்கும் பொதுத்தேர்வும் நடாத்துகின்றது புலவர் கல்லூரி. அவர்களை ஊக்கப்படுத்து முகத்தான் பரிசு வழங்கிப் பாராட்டுகின்றது.

குமரகுருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளி 1967 ஆம் ஆண்டில் நேரு பெருமகனார் பிறந்த நாளாகிய நவம்பர்14 இல் தொடக்ககப் பெற்றது. குழந்தைகளுக்கெனத் தனிநூல் நிலையமும் ஆங்குளது. விளையாட்டுப் பொம்மைகள், கருவிகள் ஆகியவை குழந்தைகள் விருப்புக்கு ஏற்றவண்ணம்உள்ளன. தேர்ச்சிமிக்க ஆசிரியைகளும் தாய்மைத் தன்மையோடு பேணும் ஆயாக்களும் தேவாரம் ஓதுவித்தற்கென ஆசிரியர் ஒருவரும் உளர்.

தையற்பள்ளி தையற்கலையைக் கற்பிப்பதுடன் மகளிர் வாழ்க்கைநெறி, குடும்பம்பேணல், சமய ஈடுபாடு ஆகியவற்றைக் பெற்றுச் சிறக்கவும் வழிசெய்து தொண்டாற்றுகின்றது. அதனைப் பல்வகைத் தொழிற்பயிற்று நிலையமாக்க ஆர்வம் கொண்டுள்ளார் திரு. வ.சு. ஆடற்கலை, இசைக்கலை, ஓவியக்கலை, குழந்தை பேணற்கலை, முதலுதவிக்கலை,

தட்டச்சுக்கலை, சுருக்கெழுத்துப் பயிற்சிக்கலை - இன்னபிறவெல்லாம் நீலாம்பிகையார் பல்துறைப் பயிற்சிப் பள்ளியிலே பயிற்றப்பபெற வேண்டும் என்பது அவர்தம் உட்கிடை.

கா.சு. பிள்ளை மன்றத்தின் இயக்குநராகத் திகழ்ந்தவர் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிப்புலமையும் ஒருங்கமைந்த திரு. இர. பாலகிருட்டிணமுதலியார் ஆவர். இம் மன்றத்தின் வழியாகப் பதிற்றுப்பத்து, குறுந்தொகை, ஐங்குறுநூறு, புறநானூறு ஆகியவையும் திருக்குறள், நாலடியார் தவிர்த்த பதினெண்கீழ்க் கணக்கு நூல்களும் ஆங்கில ஆக்கம் பெற்றன.

மக்களுக்கு அளப்பரும் வளப்பங்களை இயற்கை அருளியுள்ளது. எண்ணருங் கருத்துகளையும் ஏற்றமிக்க கலைச் செல்வங்களையும் உலகத்து அறிஞர்கள் வழங்கியுள்ளனர். இவ்வனைத்தும் பெற்று நலஞ்சிறந்தோங்கும் ஒருவர் நானிலத்துக்குச் செய்யும் கடன் என்ன? பட்ட கடனைத் தீர்க்காத கடனாளியாக வாழ்ந்து போவதா? வழிவழி வருவார்க்கு வைப்பகம் தொகுத்து வைத்து என்றும் பெயர் சிறக்க - வழி வழி வாழ்த்த - என்றும் வாழும் இசை வாழ்வில் நிலைப்பதா? இப் பெருஞ்செயல் செய்வார் பெற்றிமை பேசுதற்கு அரிதே.

# 29. பேராசிரியப் பெருநிலை

*(ஆசிரியப் பெருநிலை அரியது; அதிலும் பேராசிரியப் பெருநிலை பிறங்கும் மலையன்ன மாண்பினது; இறைவன் 'மூர்த்தங்களில்' ஒன்று குரு மூர்த்தம்! இறைவனாவான் எவன்? குருவனே இறைவன் ஆகின்றான்! 'குருபரன்' பெயர் நுட்பச் சீர்மை குறிக்கும் செய்தி அது.)*

தாமரைச்செல்வர் திரு.வ.சு. பலநிலைப் பேராசிரியர்; அவர் நூல்களும் கட்டுரைகளும் வடித்தலால் நூலாசிரியர்; ஆட்சிப் பொறுப்பு ஏற்று அவ்வப்போது அறிவுறுத்தி, கற்பிப்பன கற்பித்துச் சீர் செய்தலால், போதக ஆசிரியர்; கழகப் பலநூல்களையும் பதிப்பிக்கும் பொறுப்பைச் செவ்விதின் நிறைவேற்றி வருவதால் பதிப்பாசிரியர்; அரிய கலைச் செல்வங்களாம் நூல்களையும், ஓவியங்களையும், இன்ன பிறவற்றையும் தொகுத்துப் போற்றுதலால் தொகுப்பாசிரியர்; செந்தமிழ்ச் செல்வியில் ஆசிரிய உரைகள் எழுதுதலும் வெளியிடுதலும் உடைமையால் இதழாசிரியர்; இவ்வாசிரியத் திறங்கள் ஆங்காங்குக் குறிக்கப் பெற்றுள. இப் பகுதியில் செல்வியில் தொடக்கநாள்முதல் இன்றுவரை அவர் ஆற்றிவரும் இதழாசிரியப் ப்ணிகுறித்துக் காண்போம்.

செல்வியின் முதற்சிலம்பின் முதற்பரல் 1923 ஆம் ஆண்டு ஒலித்தது. அந்நாள் தமிழர் திருநாளாம் தைத்திங்கள் முதல் நாள் ஆகும். அந்நாளே, நிறைமலையாம் மறைமலையார் திருவள்ளுவர்நாளெனத் தெரிந்துரைத்த திருநாளுமாகும். 1947 ஆம் ஆண்டுமுதல் ஆவணித்திங்களை முதலாகக் கொண்டு செல்வி ஒலி செய்கின்றாள்.

மொழிநலங்கருதி முகிழ்த்த இதழ்கள் மிக அரியன. அவ்வரியனவற்றுள்ளும் ஓராண்டு ஈராண்டு நடைபயிலு முன்னரே தலைசாய்த்து நிலை ஒய்ந்தவை மிகப்பல. அவற்றுள்ளும் மூன்று இதழ்களே ஐம்பான் ஆண்டு கடந்தும் நடையிடுபவை. அவற்றுள்ளும் ஒன்றே - செந்தமிழ்ச்செல்வி ஒன்றே என்றுங் குன்றா இளமை எழிலுடன் புதுப்புது அணிகளும் புனைந்து 'பொலிவோடு' விளங்கிவருகின்றாள்.

செந்தமிழ்ச்செல்வி தோன்றுதற்கு முன்னரே அழகு நடை செய்தது செந்தமிழ். அது செல்வி பிறப்பதற்கு இருபத்தோர் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி வளர்ச்சி நிலையில் திகழ்ந்தது. செல்வி தோன்றிய ஈராண்டுகளுக்குப் பின்னே பிறந்தது தமிழ்ப் பொழில்! செந்தமிழுக்கும் தமிழ்ப்பொழிலுக்கும் நடுப்பிள்ளையாய்க் கிளர்ந்தாள் நல்ல செல்வி.

செந்தமிழ் நாற்பது யாண்டுகள் நயத்தகு நடை செய்தான். 'நாற்பதில் நழுவல்' 'ஐம்பதில் அசதி' 'அறுபதில் ஆட்டம்' என மாந்தர் வாணாள் முறைப்படி அமையலானாள். இடையிடை நின்றும் வந்தும் உலவினாள். முத்திங்கள் இதழாக இப்பொழுது முறை கொண்டுவிட்டது.

தமிழ்ப்பொழில் வெளியீடு அதன் மூன்றாம் துணரிலேயே, பொழிலின் வெளியீடுகள் தாழ்த்து வெளிவருவதற்குரியவை 1. போதிய அளவு கட்டுரைகள் வேண்டும் காலத்தின்மை. 2. பொழில் வெளியீட்டிற்கென்றே முழுநேரமும் செலவிடத் தக்க தொண்டரின்மை என்னும் இசைகளேயாம்" என்னும் செய்தியுள்ளது. "மேற்கூறிய குறைகள் இரண்டும் இவ்வாண்டில் எய்துதற்கு இடமில்லைஎன்பது ஒருதலை" என்னும் உறுதியும் அதிலேயே உள்ளது. ஆனால் அதன் 2, 3 மலர்களும் 4, 5 மலர்களும் 6, 7, 8 மலர்களும் 9 - 12 மலர்களும் சேர்ந்து சேர்ந்து ஓரிதழாக வெளிப்பட்டனவே யன்றி 'மாதிகை' யாக வந்தில.

இவற்றால் தமிழ் வாழ்வையே தம் வாழ்வாகக் கொண்டு இயங்கும் இதழ்களுக்கு ஏற்படும் நோய்களையும் தடைநிலைகளையும் உணரமுடியும். இச் சீர்கேடாம் நிலையிலும் தன் 55 ஆம் சிலம்பு செவ்விதின் இசையொலி எழுப்ப இயலுகின்றாள் செல்வி எனின், அதற்குப் பொறுப்பாசிரயராகிய திரு.வ.சு. அவர்களின் திறமும், கழக அமைப்பின் அருமையுமே என்பது விளங்கும்.

செந்தமிழைத் தொடங்கியது மதுரைத் தமிழ்ச் சங்கம்; அதன் தலைவர் பாலவனத்தம் குறுநிலமன்னர் பாண்டித்துரைத்தேவர். இதழாசிரியர் இரா. இராகவ ஐயங்கார்; மதுரைத் தமிழ்ச்சங்கச்சார்பிலே 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' நடந்து வந்தது. அதிலே புகழ்வாய்ந்த பேராசிரியர்கள் பணிபுரிந்தனர். பாண்டியன் புத்தகசாலை என்னும் பெயரால் அரிய பெரிய நூலகம் இருந்தது. ஏடு தேடித் தொகுத்தற்கு எனவே புலவர்கள் சிலர் இருந்தனர். ஏடுகள்

ஆய்வதிலேயே ஈடுபட்ட பதிப்புப் புலவர்கள் சிலர் இருந்தனர். இதழ் அச்சிடுதற்குத் தமிழ்ச்சங்க முத்திராசால என்னும் பெயரிய பெரிய அச்சகம் இருந்தது. நாடு தழுவிய நற்றமிழ்ப் புலவர்களைக் கூட்டுதற்குக் கல்விக்கழகம் என ஓர் அமைப்பும் இருந்தது. இவற்றுக்கு மேலாகத் தமிழ்ச்சங்கம் தனக்கெனக் கட்டிட வாய்ப்பும், அள்ளித்தரும் வள்ளலர்களையும் கொண்டிருந்தது. இவ்வனைத்தும் திரண்டிருந்தபான்மையே செந்தமிழைச் சீர்மையாகக் கொணர வாய்த்த வாய்ப்புகளாம். ஆனால், செந்தமிழ்ச் செல்விக்கு இவ் வாய்ப்புகள் தொடக்கத்தில் இருந்தனவோ?

கழகம் கூட்டுப்பங்கு நிறுவனம்; ஆட்சிக்குழுவினர் மோதல், பங்குசேர்த்தல் பாடு, தனக்கெனச் சொந்த இடம் இல்லாமை, தனக்கென அச்சகம்இல்லாமை, நன்கொடை தண்டுதல் - புரவலர் போற்றல் என்பவை இன்மை; சீரிய நூலகமோ, நிலைத் துப பணி செய்யும் புலவர்களோ இன்மை - இவ்வளவு இடர்களுக்கும் இன்மைகளுக்கும் இடையேதான் செல்வி தோன்றினர்ள! வளர்ந்தாள்! இவ்வளவு முரண்களையும் மோதி அழிக்க ஒரோ ஓர்அரணாக வ.சு. இருக்கிறார். அவ்வளவே வெற்றியின் நிலைக்களம்.

முதற்சிலம்பு முதற்பரல் முதற்கட்டுரை ‘தமிழகம்’. அக் கட்டுரையிலேயே வானநூல் (Astronomy), நிலநூல் (Geology) தொல்லுயிர்நூல் (Biology), தொலைநோக்காடி (Telescope) நடுக்கோடு (Equator), நெருப்புவண்ணப்பாறை, (Igneous Rock) அடுக்குப்பாறைகள் (Stratifies Rocks), ஆதிகாலம் (Archaic) என்னும் கலைச்சொல்லாக்கஙகள் கால் கொள்கின்றன. அடுத்தது தமிழ் என்னும் தலைப்புடைய நிலைமண்டில ஆசிரியப்பா. இதன் வாழ்த்துப்பா தாப்புலிப்பா என்னும் வகையைச் கேர்த்து எனக் கூறப்பபெறுகிறது. நீட்டொலிப்புணர்ச்சி, எடுத்தொலிப்புணர்ச்சி, குவித்தொலிப் புணர்ச்சி என்பவையே தீர்க்க சந்தி. குண சந்தி, விருத்த சந்தி என வடமொழியில் வழங்கப்பெற்றதெனவும் கூறப்பெறுகிறது. இப் பா அடுத்த இதழிலும் தொடர்கிறது. தமிழ் என்னும் சொல் விளக்கம் நான்கு இதழ்களுக்குத் தொடர்கிறது. செல்வியின் முதற்பரலில்இப் பாடலுக்குப்பின்னே தமிழ்ப்ப்வுலமை வரலாறு தொடங்குகிறது. திருநான்மறை விளக்கம், மேல்நாட்டுத் தத்துவ ஆராய்ச்சி வரலாற்றின் சுருக்கம், நீதிவிளக்கம், திருமுருகாற்றுப்படை யாராய்ச்சி ஆகியவற்றுடன் இததுழ நிறைகின்றது. தமிழ் ஒருகண்ணும் சைவம் மற்றொரு

கண்ணுமாக விளங்கும். என்று இதழாசிரியர்கூறுவதை முதல் இதழே மெய்ப்பிக்கின்றது. ஓவியங்களும் மதிப்புரைகளும் முதல் சிலம்பிலேயே பங்கு கொடு விடுகின்றன. முதல்சிலம்பிலேயே, சென்னைச் சர்வ கலாசாலை சீர்திருத்தம், வித்துவான் பரீட்சை, பண்டிதர்கட்குப் பேதனை பண்டிதர்களின் நிலைமை நாணயங்கள், இத்து மத தர்ம போதனை, ( பண்டிதர்களின் நிலைமை, நாணயங்கள், இந்துமத தர்ம பாதுகாப்பு மசோதா, சிக்கனம் அம்மைகுத்தல், வேளாளர் சங்கம், தமிழர் சங்கம், திருக்கோயில் சீர்த்திருத்தம், வேளாளார் சங்கம், தமிழர் சங்கம், திருக்கோயில் சீர்த்திருத்தம், வேளாளர் கல்வி அபிவிருத்தி சங்கம், சாத்தூர் தமிழ்ச சங்கம், தூத்துக்குடி சைவ சித்தாத் சபை ஆகியவை பற்றிய சித்தாந்த சபை ஆகியவை பற்றிய குறிப்புகளும் சான்றோர் சிலர் மறைவுக்கு இரங்கல்களும் வெளிவந்துள்ளன. இக் குறிப்புகளால் செல்வியின் இனிய தொண்டுள்ளம் நன்கு வெளிப்படுகிறது.

குறிப்பாக, புலவர்களுக்கு வித்துவான் தேர்வு வேண்டும் என்றும், பண்டிதப் பயிற்சி வேண்டும் என்றும், அவர்கள் ஊதியம் உயர்தல் வேண்டும் என்றும் ஒலிக்கிறது. ‘அரசு வெளியிட்ட ஓரணா, இரண்டணா நாணயங்களில் தமிழ் தவிரமற்றெல்லா முதன்மையான பொழிகளும் காணப்படு கின்றன. அரசியலார் தமிழ்மொழியை நாணங்களில் சேர்க்காமல் இருப்பது சிறிதும் பொருத்தமாகத் தோன்றவில்லை’ என்று முறையிடுகின்றது.

செல்வியின் ஓராண்டு நிறைவை இதழாசிரியர் இனிதின் உரைக்கிறார். “நமது செல்வி காலத்தாழ்வு என்னும் பேய் பிடியாமலும் கைப்பொருளின்மை என்னும் பறவை பறவாமலும் எடுப்பார் யீபடிப்பார் இலரென்னும் இலம்பாடு மேவாமலும் செழுங்குடிப்பிறந்த செல்வப்பாவையாய்ச் சிறந்து ஓராட்டைப்பருவம் உற்றனள். செல்வர் பலரும் அவளுக்கு அடியுறையாகிய அரும்பொருளை அயிர்ப்பின்றி வழங்கினர். புலவர் பலரும் தந்தம் தகுதிக்கு ஏற்பப் பிள்ளைப் பணியணிந்து கொள்ளை மகிழ்வு கொண்டனர். செல்வியும் மழலை மொழிந்து சான்றோர் மடிமீது அமர்ந்தனள். இனி இவள் ஓடி உலாவும் பருவத்தினள் ஆதலின் தனது ஒள்ளொளியை யாண்டும் பரப்புவள் என்பதற்கோர் ஐயமில்லை என்பது அவ்வுரை. அவ்வுரை இன்றுவரை ஐயமின்றி ஒள்ளொளி பரப்பி உயர்ந்து வருதல் உண்மையே.

*செல்வி இரண்டாம் சிலம்பில் இலக்கண விளக்வுடை, இலக்கண விளக்க உரையாளர், இலக்கண விளக்கவுரையாளர் நூலாசிரியரே, இலக்கண விளக்க உரையாளர் யார்? இலக்கண விளக்க உரைச்சமாதானம், இலக்கண விளக்க உரைச்சமாதானப் போலித்தோற்றம், இலக்கண விளக்க உரையாளர் வரலாற்று மயக்க மறுப்பு, இலக்கண விளக்க உரையாளர் வரலாற்று மயக்க மறுப்பு, இலக்கண விளக்க உரை வரலாற்று மயக்க மறுப்பின் மேற்குறிப்பு என மறுப்பும், மறுப்புக்கு மறுப்புமாய்க் கட்டுரைகள் தொடர்கின்றன. ஆகலின் 'மறுப்பு எழுதும்முறை' என்னும் தலைப்பிட்டு வசையிலா மறுப்பே வடுவிலா மறுப்பு" என அறிவுறுத்த ஓர் உண்மை நாடுவோன் கிளர்கின்றார். இவ் விரண்டாம் சிலம்பின் இறுதிப் பக்கத்திலே வ.சு. அவர்களின் பெயரால் ஒருகுறிப்புள்ளது இது:*

*"இலக்கண விளக்க நூலுரையாசிரியர்:"*

*நமது செல்வி பல்வகைப் பொருட்கும் இடமமைக்க வேண்டியிருப்பதாலும் இலக்கண விளக்க நூலுரையா சிரியரைப் பற்றிய ஆராய்ச்சிப் பொருள் பலஇதுவரை வெளிவந்திருக்கின்ற மையாலும் இது குறித்த மறுப்புக்கள் இனிச் செல்வியில் வெளியிடக்கூடாமையினை அன்பர்களுக்குத் தெரிவிக்கின்றோம். வ.சு."*

*.இதுவே செல்வியின் பதிப்பாசிரியர் நிலையில்* (Published by V. Sunniah) *என்று குறப்பிடப்பெறுவதை அல்லாமல் முதன் முலாகச் செல்வியில் குறிப்பிடப்பெறும் இடம் ஆகும் (2:54)*

*ஐந்தாம் சிலம்பில் திரு.வ.சு. அவர்களின் பலதிறப்படைப்புகள் சுடர்கின்றன. அவற்றுள் முதலாவது எல்லாம் ஐந்தே என்னும் கட்டுரை. அது 1927 ஆம் ஆண்டு பிப்ரவரித் தங்கள் 5, 6 ஆம் நாள்களில் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் திரு. பா. வே. மாணிக்கநாயக்கர்அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுச் சுருக்கமாகும் (49) அதே பரலில் யாண்டு பலவாயினும் நரையின்மை என்னும் தலைப்பில் புறநானூற்றுச் சொல்ஓவியம் வரை ஓவியமாக விளக்கம் பெறுகிறது. அதற்கு மூலவர் திரு.வ.சு. அவர்களே. இவ்வாறு இல்லறமாண்பு மக்கட்பேறு பண்டை வீரப்பெண்மணிகள், காதற்சிறப்பு, வீரச்சிறப்பு, பாரிவள்ளல், வள்ளுவர் மனைமாட்சி;, தலைவி தலைவன் பெயரைக் கிளி வாயாற் சொல்லக்கேட்டு இன்புறுதல்' என்பவை ஒன்றில்ஒன்று கருத்து விளக்கம் விரிந்து ஒப்புமையும்செறிந்து ஓவியமும் ஆகியுள்ளன.*

"தமிழ்நூல்பேணல்" என்னும் தலைப்பில் தமக்கு உவகையானதும் விரும்பி ஈடுபட்டுள்ளதும் ஆகிய துறையைத் திரு.வ.சு. விளக்கியுள்ளார். தமிழ் நூல் பேணுமுறைகள் நான்கனைக் குறித்துரைக்கிறார். அவற்றுள் முதன்மையானது, தமிழ்நூல் அகராதி ஒன்று எழுதப்படல் வேண்டும் என்பது. அதனைத் தகவுற விளக்குகின்றார் :

"தமிழ் நூல்களில் இப்போது கிடைக்கப் பெறுவனவற்றிற் கும், பெயரளவாய்க் கேட்கப்படுவனவற்றிற்கும் விளக்கம் எழுதப்படல் வேண்டும். தமிழ் நூல் ஒவ்வொன்றையும் எடுத்து அதன் ஆசிரியர் பெயர், அதனைப் பதிப்பித்தவர் பெயர், அந்நூல் கூறும்போது, எழுதப்பட்டால், எத்தனை பதிப்புகளைப் பெற்றிருக்கின்றது.

எந்த நூலில் அஃது எடுத்தாளப் பெற்றிருக்கின்றது, யாரிடம் இப்போது கிடைக்கப்பெறும் என்னும் குறிப்புகளை எழுதி அகராதி வரிசையில் அமைக்க வேண்டும். அநேக நூல்கள் பெயர் தெரியாமலே மறைந்து ஒழிகின்றன. மேனாட்டார் தம்முடைய நூல்களுக்கு 30,000, 40,000 பக்கங்களில் அகராதி எழுதி வைத்திருக்கின்றனர்; ஆண்டுக்கொருமுறை அதனைப் புதுப்பித்தும் வருகின்றனர். முதற்கண் நூற்பெயர் மறையாதிருப்பதற்கு இஃதோர் சிறந்த வழியாகும்."

தமிழ் இலக்கிய அகராதி, தமிழ்ப்புலவர் அகராதி எனச் சில நூல்கள் இப்பொழுது வெளிவந்திருப்பினும் திரு.வ.சு. அவர்கள் கூறுமாப்போல ஓர் அகராதி வெளிப்படவில்லை. இம் முயற்சி இன்னும் புதிது மேற்கொள்ளவேண்டிய முயற்சித் தூண்டலாகவே உள்ளது. மற்றவை, தமிழ்மொழியில்உள்ள நூல்களெல்லாம் எப்போதும் தட்டின்றிக் கிடைக்கவேண்டுவது குறித்தும், பொருள் வளமுடையார் தமிழ்நூல்கள் வாங்க வேண்டும் இன்றியமையாமை குறித்தும் தமிழ்மக்கள் தம்மிடமுள்ள அருஞ்சுவடிகளைத் தக்காரிடம் தந்து பதிப்பிக் உதவ வேண்டுதல் குறித்தும் குறிப்பிடுவனவாம்.

"கலைப்பொருட்டால்வாங்கா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால்நூல்தருவார்இல்"

என்னும் குறள் போலிகை ஒன்று இக் கட்டுரையில் சுடர்கின்றது. புலவர் வரலாறு - படிக்காசுப் புலவர், சடங்குகள், திருக்கோயில் களில் அரிவையர் ஆடல், மாணவர்களுக்கோர் அறிவுரை என்னும் கட்டுரைகள் தொடுத்துக் காணப்பெறுகின்றன. (176-91)

*தமிழ் அறிவியற் சொற்கள் குறித்த திரு.பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் சொற்பொழிவுச் சுருக்கம் ஒன்றும் இத்தொகுதியில் திரு.வ.சு. எழுதியுள்ளார். 'ரேடியம்' என்பதைக் 'கதிரி' எனத் திறமாக விளக்கிப் பெயரிட்டுள்ளார்:*

*"ரேடியம்* (Radium) *என்ற இருட்டிலும் ஒளிகாட்டும் பொருள் சில ஆண்டுகளுக்கு முன்னர்த்தான் ஐரோப்பிய நாட்ல் கண்டு பிடிக்கப்பட்டது. அதற்கு முன் ரேடியம் என்ற ஒரு சொல் இருந்தது இல்லை. ஆனால், ரேடியேட்* (Radiate) *(மின்னு) என்ற சொல் இருந்தது. அதிலிருந்து* (That which Radiats)*ட மின்னும் தன்மையுடையது ரேடியம்என்று அதற்குப் பெயர் கொடுத்தார்கள். அதுபோல் நாம் கதிர் (ஒளி) என்ற சொல்லைக் 'கதிரி' என இகரவிகுதி கொடுத்து ரேடியம் என்னும் ஆங்கிலச் சொல்லைத் தமிழ்ப்படுத்தலாம். இப்படியே எல்லா அறிவியற் சொற்களையும் தூய தமிழாக்கலாம். இரவல் பெறுமாறு வறுமையுடைய மொழியன்று நமது உயர்மொழியம் தமிழ்மொழி."*

*தம் இருபத்தைந்தாம் அகவையிலேயே செந்தமிழ்ச் செல்வியின் பதிப்பாசிரியப் பொறுப்பினை ஏற்றுச் செவ்விதில் புலவர் புகழுக்கு இடமாகப் போற்றி வளர்த்தார். முப்பதாம் அகவையில் திறமான கட்டுரைகளையும் அறிவுரைகளையும் மொழிபெயர்ப்புகளையும் மொழி வளர்ச்சி முறைகளையும் தாமே செய்ய முனைப்புடன் ஈடுபடுவதுடன் பிறரும் செய்விக்குமாறு அறிவுறுத்துகிறார். (சிலம்பு 5) இதன் வளர்ச்சி செல்வியின் 47 ஆம் சிலம்பிலே இவர்தம் 75 ஆம் அகவையிலே வெள்ளமெனப் பெருகுகின்றது. வளரும் தமிழை வளர்ப்பது எப்படி? என்று மொழிநலத்துக்கு ஆகும் முழுத்த கடமைகளை யெல்லாம் முனைப்பாக ஆய்ந்து முழக்குகிறார். பல்வேறு வளர்ச்சித்திட்டங்களையும் பட்டறிவால் தெளிந்து பறையறைகின்றார்.*

*"தேடித் தொகுத்தலும் பேணிக் காத்தலும்" (47 : 3) வெளிப்படுகிறது. "திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி" வெள்ளமெனப் பெருகின்றது. (சிலம்பு 47 -8) "கழகம் ஆற்றிய வரலற்று நூற் சிறப்புப்பணி" வளர்கிறது (48) "இந்தி எதிர்ப்பு இயக்கத் தொடக்க முதல் தாம் செய்த தொண்டு" தொகுத்து உரைக்கப்பெறுகிறது (49) நூற்பதிப்பகங்கள் மடியும் காரணம் ஆராயப்பெறுகிறது. (49) தவத்திரு மறைமலை யடிகளார் சீர்மைகள் விரிகின்றன. (50 - 51) இவையெல்லாம்*

தனித்தனி நூலாதற்குரிய படைப்புகள். தொடர் கட்டுரைகளாக வெளிப்பட்டவை, "பட்டறிவு வழங்கிய பழக்குலைகள் இவை" என்பது தகும். செல்வியின் பதிப்பாசிரியர் நிலை, ஆரிசரியர் நிலையாகி அருமை செய்யும் பெருமையும் ஈது.

நோக்கையும் போக்கையும் வரையறுத்து விட்டுப் புனல்சாயப் புல்சாயுமாறு போலவோ சுழற்காற்றில் அலைசருகு போலவோ தான்தோன்றிப் போக்கில் செல்வி சென்றது இல்லை. அரசியல் நன்மை கருதி ஆரவாரம் காட்டாமல் அமைந்த கொள்கைப் பணியில் சிறந்து விளங்குதல் செல்விக்கு என்றும் இயல்பு.

# 30. புலவரைப் போற்றும் புகழ்மை

*("புலவரோடு அளவளாவும் இன்பத்தைப் பார்க்கிலும் நனி இன்பம் விண்ணுலகில் உண்டாயின் அதனை ஷயும் ஒருமுறை பார்த்து வருவோம்" என்றார் ஒருபுலவர் தோழராம் புலவர். "போற்றுதல்என்பது புணர்ந்தாரைப் பிரியாமை" என்றார் இன்னொரு புலவர் பெருமகனார்.)*

கழக ஆட்சியாளர் திரு. வ.சு. அவர்கள் புலவர் தோழராகத் திகழ்ந்ததைப் பரக்க அறிந்துள்ளோம். புலவர்களை ஊக்கமுறுத்திப் புகழாளர்களாக்கிய புகழ்மையையும் ஆங்காங்கு அறிதுள்ளோம். புலவர் புகழ்பாடிய சீர்த்திகளையும் எடுத்த விழாக்களையும் குறிப்பாய் அறிந்துள்ளோம். இவண் புலவர்களைப் போற்றிச் சிறப்பித்த சில நிகழ்ச்சிகளைக் காண்போம்.

புலவர் புகழ்பெருக்குதலும், புலவர்க்கு விழாக்கோடலும் புலவரைப் போற்றுதலே எனினும், அதனினும் அவர்களுக்கு உற்றுழி உதவுதல் தலையாய போற்றுதலாம். அதிலும், பொருள் முடையும் நோய்த்துயரும் உடையராயும், உதவிப்போற்றும் உழையராம் உள்ளன்புடையார் இலராம் போதும் உதவும் உதவி உண்டே அஃது ஒப்பிலாதுயர்ந்த போற்றுதலாம்.

திருக்குறள் அறத்துப்பாலுக்கு விருத்தியுரை எழுதிய நாகை சொ. தண்டபாணிப் பிள்ளை கடவுள் வாழ்த்து முதல் 30 அதிகாரங்களுக்கு உரை எழுதிவந்தார். பின்னே எழுத்துப்பணி தொடர முடியாமல் இருமல்நோயால் பெரிதும் வருந்தினார். இராயப்பேட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பெற்றார். உரையெழுதும் காலத்திற்குத் திங்களுக்கு ரூ. 35 தருவது என்றும், உரை முடிந்தபின்னர்க் கணக்கிட்டு ஒரு தொகை தருவது என்றும் உறுதி செய்யப்பெற்றது. அவ்வாறே நோயுற்ற போதும் தொடர்ந்து அத்தொகை அவர்க்குத் தரப்பெற்று வந்தது. இது 1921 ஆம் ஆண்டு எனில் அந்நாளில் 35 ரூபா மதிப்பு எத்தகையது என்பது புலப்படும்!

மாதத்தொகையுடன் மருந்துச்செலவும், பிறவகைச் செலவுகளும், திரு.வ.சு. அவர்களே திருசங்கர்கம்பெனி சார்பில் செலவிட்டார். நலம்பெற்று மனை திரும்பினார் நாகையார். பணியைத் தொடர்ந்தார்; பிணியும் விடாது தொடர்ந்து பின்னியது; அறத்துப்பால் உரையை முற்றுவித்து மேலும் நான்கு அதிகாரங்களுக்கு உரை எழுதிய அளவில் ஓய்ந்தது. அவர் இருமலொடும் போராடி இறையடி எய்தினார். தொகைக்கணக்கோ ஊதியத்திற்கு இருமடங்கைத் தாண்டி நின்றது. ஆனால், புலவரைப் போற்றும் புகழ்மைக்கு இடனாகி நின்றது.

ஊதியம் நோக்கிய வாணிகத்தின் அளவின் நில்லாது கைம்மாறு வேண்டாக் கடப்பாடு நாடி உயர்ந்து செல்வது பெறுவதற்கரிய மக்கட் பிறவியைப் பெற்றார்க்குச் சிறந்து காட்டிற்று என்று இவர் ஒப்புரவை விளக்கும் பகுதி கருதத் தக்கது. 7-11-1944 இல் பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் கழக ஆட்சியாளர் திரு.வ.சு. அவர்களுக்குப் பேராசிரியர் கா.சு. பிள்ளை அவர்களைப் பற்றிக் கூர்ந்த பரிவால் ஒரு கடிதம் விடுத்தனர்.

"அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை எம்.ஏ, எம்.எல். அவர்கள் நோயுற்று உடல்நலிவால் பதவியினின்று 1.7.1944 இல்விலக வேண்டியதாயிற்று. அவர்கட்குச் சிறிது நேரம் பேசவோ எழுதவோ நடக்கவோ முடியாது. கைந் நடுக்கம் மிகுதியாய்விட்டது. அவரைக் காணுந்தோறும் கவலை பெரிதாகிறது. அவர்கள் தாம் இப்போதிருக்கும் நிலையில் எங்கே போவது எவ்வாறு வாழ்வது என்ற கவலையில் செய்வதறியாது திகைத்த வண்ணம் இருக்கின்றார். சிதம்பரத்தை விட்டுப் போவதற்கே உடல் இடந்தருமோ என்ற கவலையும் அச்சமும் அடைகின்றார்" என்று அவர்தம் நிலைமையை விளக்கி எழுதினார். இக் கடிதச் செய்தியை அறிந்த வ.சு. வருந்தினார். "அக் கடிதம் எனது நெஞ்சத்தை நீராய் உருக்குவதாயிற்று" என்றார் திரு.வ.சு.

இதற்கு ஒருதிங்களுக்கு முன்னரே அரங்கனாரைப் பரிந்த அலக்கண் தவிராமல் இருந்தார் வ.சு. எனினும் இறந்தார்க்கு உருகி இருப்பார்க்கு உதவாமல் ஒழிதல் உயிரிரக்கச் செயலன்றே? அந்நாளைக் கழகத்தலைவர் திரு.ப. சிதம்பரப் பிள்ளை அவர்களிடம், கா.சு. பிள்ளைக்கு உதவுதலைப் பற்றிக்

*கலந்தார்: 'நீர் திரு. கா. சு. பிள்ளைக்கு என்னென்ன உதவிகள் செய்யவேண்டும் என்று கருதுகிறீரோ அத்தனைக்கும் நான் ஒப்பம் பாடுகிறேன் என்று கனிந்துருகிக் கூறினார் சிதம்பரனார்.*

*திரு. வ. சு. அவர்கள் 'ஔவை' அவர்களுக்குக் கா.சு. அவங்களைத் தொடர்வண்டியில் முதல் வகுப்பில் ஏற்றித் தக்க துணையோடு நெல்லைக்கு அனுப்பி வைக்குமாறு கடிதம் எழுதித் தொலைவரைவுச் செய்தியும் விடுத்தார். அவ்வண்ணமே கா.சு. அவர்கள் நெல்லைக்கு வர, நெல்லைச் சந்திப்பிலே இருந்து வரவேற்றுக் கழக நிலையத்தில் தக்க வாய்ப்புடன் தங்குதற்கு ஏற்பாடு செய்தார். அவர்க்கு உதவி செய்தற்குப் பணியாள்கள் இருவர் அமர்த்தப் பெற்றனர். நோய்க்கூறு அறிந்து மருந்து கொடுத்தற்கும் மருத்துவரை ஏற்பாடு செய்தார். ஏறத்தாழப் பத்துத்திங்கள் செய்துவந்த மருத்துவத்தாலும் பேணிக்காத்த முறையாலும் நோய்நீங்கி நலம்பெறுவதுபோன்ற நிலைமை ஏற்பட்டது. ஆனால், எதிர்பாரா நிலையில் 30-4-45 இல் இயற்கை எய்தினார். அவருக்குச் செய்யவேண்டிய இறுதிக் சடங்குகளை எல்லாம் திரு.வ.சு. அவர்களே முன்னின்று செய்தார். நடுகல் விழாவும் நடாத்தினார். அவர் பெயர் என்றும் விளங்கக் 'காசு.'ப் பிள்ளை ஆராய்ச்சி மன்றத்தையும் தோற்றுவிந்தார். புலவரைப் போற்றும் புகழ்மைக்கு இஃதொரு சீரிய சான்றாகும்.*

*பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் பெயரால் வைத்துள்ள நாடகப் பரிசுத்திட்டம் டாக்டர் மு.வ. அவர்கள் பெயரால் வைத்துள்ள திருக்குறள் பரிசுத்திட்டம் டாக்டர்தணிகைமணி அவர்கள் பெயரால் வைக்கப்பெற்றுள்ள திருமுறைப் பரிசுத் திட்டம் ஆகியன புலவரைப் போற்றும் புகழ்மைகளே!*

*1961 இல் நடைபெற்ற கழகத்தின் 1008 ஆவது நூல் வெளியீட்டு விழாவின்போது வெள்ளியில் சமைக்கப்பெற்ற அம்பல வாணர் திருவுருவம் கழக நூலாசிரியர் புலவர் இளவழகனார், சித்தாந்த பண்டிதர் ப. இராமநாத பிள்ளை, புலவர் அரசு, பெருமழைப்புலவர் பொ. வே. சோமசுந்தரனார், பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார், திரு. சிவசைலம்பிள்ளை, கருப்பக்கிளர்சு. அ. இராமசாமிப் புலவர் ஆகிய எழுவர்க்கும் வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பாராட்டியதும்,*

1970 இல் நடைபெற்ற கழகப் பொன்விழாவின்போது, கழக நூலாசிரியர்கள் உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, பெருமழைப்புலவர் பொ. வே. சோமசுந்தனார், ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார், மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர், சட்ட நூல்அறிஞர் மா. சண்முக சுப்பிரமணியம், குழந்தை நூலாசிரியர் என். கே. வேலன், அறிவியலறிஞர் பி. எல். சாமி ஆகிய எழுவர்க்கும் அம்பலவாணர் திருவுருவம் பொறித்த தட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தியதும், கழகப்புலவர் சித்தாந்தபண்டிதர் ப. இராமநாத பிள்ளையின் பணிநலம் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி ரூ. 1001 கொண்ட பொற்கிழி வழங்கியதும்,

1973 இல் நடைபெற்ற திரு.வ.சு. அவர்கள் பவள விழாவின் போது கழக நூலாசிரியர் முதுபெரும்புலவர் கு.கோதண்டபாணிப் பிள்ளை, செந்நாப்புலவர் இரா. இளங்குமரன் ஆகிய இருவருக்கும் கவின்மிகு தட்டம் வழங்கிப் பொன்னாடை போர்தியதும், 1979 இல் தவத்திரு. மறைமலையடிகள் நூல்நிலைய இருபான் ஆண்டு நிறைவு விழா நிகழ்ந்தபோது கழக நூலாசிரியர் புலவர் இரா. இளங்குமரனுக்குக் ‘கழக இலக்கியச் செம்மல்’ எனப் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தியதும் ஆகிய இவையெல்லாம் திரு.வ.சு. அவர்கள் புலவரைப் போற்றும் புகழ்மைகளேயாம்.

இன்னும் புலவர் பெருமக்களுக்குக் கழக மாளிகையும் வள்ளலார் திருவருள் மண்டபமும் தங்கல் மாளிகையும் விருந்தோம்பும் வளமனையாகவும் திகழ்வதும் புலவர்களுக்கும் அறிஞர்களுக்கும் முறையாக வேண்டும் நல்லுதவிகளை யெல்லாம் நாளும் தொடர்ந்து முழுத்த அன்பொடும் எத்தகைய எதிர்நோக்கும் இன்றி வ.சு. அவர்கள் செய்து வருவதும் அவ் வுதவிகளையும் சொல்லிக் காட்டலோ நினைவூட்டலோ இல்லாமல் புலவர் பெருமக்களுக்கு இவ்வுதவி செய்ய வாய்த்ததே என்று பெருமைப்பட்டுக் கொள்வதும், இக்கழக அமைப்பே அன்றோ எண்ணற்ற புலமைப் பேறுடையாரை யெல்லாம் உரிமையால் கொண்டாட வாய்ப்புச் செய்கின்றது என்று வாயாரச் சொல்லி நெஞ்சார நினைவு கூர்வதும்; புலவர் வரலாறுகள், படங்கள், கையெழுத்துகள், நூல்கள் ஆகியவற்றையெல்லாம் கண்ணின் மணியெனப் போற்றிக்

காத்தும் கண்காட்சியாக வைத்துக் காட்டியும் பெருமைப் படுத்துவதும் ஆகிய இன்னவெல்லாம் திரு.வ.சு. அவர்கள் புலவரைப் போற்றும் புகழ்மைகளேயாம்.

புலவரைப் போற்றும் புகழ்மைக்கு முடிமணியான ஒரு செய்தியை உரைத்து இப் பகுதியை நிறைப்பாம்.

ஒரு பேரமைப்போ, பல்கலைக்கழகமோ செய்ய வேண்டிய அரும்பணியை ஒருமாதமாக நின்று செப்பமாகச் செய்து முடித்த செவ்வியர் தணிகைமணி செங்கல்வராயபிள்ளை. அவர்கள், சைவத்திருமுறைகள் பன்னிரண்டு ஆதல் போல, முருகவேளுக்கும், பன்னிருதிருமுறை கண்டவர்கள்; 'ஒளிநெறிச் செல்வர்' என்னும் பெருமைக்கு உரியவர்கள்.

தணிகைமணி அவர்கள் சைவத்திருமுறைகள் முதல் எட்டனுக்கும் ஒளிநெறியும் (Concordance), ஒளிநெறிக் கட்டுரைகளும் வரைந்தவர்கள். 'ஒளிநெறி' தமிழுலகில் வெளிப்பட்டும் ஒளி செய்ய இயலா நிலையில் ஒடுங்கி இருந்ததும் அதனை அறிந்து திரு.வ.சு. அவர்கள் ஒளியேற்றிக் களியுவகை அடைந்ததும் நாம் முன்னரே அறிந்துகொண்ட செய்திகளாம். தம் எண்பத்து ஏழாம் அகவையிலும் கூனிக்குறுகி நடக்கமுடியா நிலையில் இருந்து கொண்டும் 'இருந்தமிழே உன்னால் இருந்தேன்'. என்று தொண்டு செய்துவரும் அப் பெருமகனார்க்குத் தாம் செய்யத்தக்கது என்ன, என்ன, என்று பல்கால் எண்ணினார் வ.சு. மேனாட்டிலே இத்தகைய பெருமகனார் பிறந்திருப்பாரேல் நாம் பெற்ற பேறு எனக் கொண்டு எப்பொழுதோ நோபெல் பரிசே தேடிவந்திருக்கும். இந் நாட்டின் நிலைமை இருந்தவாறு என்னே என்று ஏங்கினார்; வெதும்பினார். ஓர் உறுதி கொண்டார்.

தணிகைமணி அவர்கள் செய்த பணிகளையும் தள்ளாத முதுமையிலும் செய்துவரும் தொண்டுகளையும் அந்நாள் கல்வியமைச்சர் மாண்புமிகு. நெடுஞ்செழியன் அறியுமாறு செய்தார். தணிகை மணி அவர்கள் திருமனைக்கே அமைச்சரை அழைத்துச் சென்று அவர் செய்துவரும் பணிகளை நேரில் காணச் செய்தார். அவர்கட்கு டாக்டர் பட்டம் வழங்குவது முற்றிலும் தகவுடையது என்பதை அமைச்சர் உணருமாறு செய்வித்தார். ஆதலால் மதுரைப் பல்கலைக் கழகத்தில் தணிகைமணி அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கத் தாம் பரிந்துரைப்பதாகக் கூறினார். அவ்வாறே பரிந்துரைத்தார்.

திரு.தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் துணைவேந்தராக இருந்தார். அவருக்கும் தணிகைமணி அவர்களின் பணி தெரிந்ததே. ஆகலின், பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் ஒப்புதல் பெற்று 1-9-1969 இல் டாக்டர் பட்டம் வழங்குதற்கு முடிவு செய்யப்பெற்றது. அவ்வாறே மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிலே தமிழக ஆளுநர் மேதகு உச்சல்சிங் அவர்கள் தணிகை மணி அவர்களுக்கு டாக்டர் பட்டம் (D. Litt) வழங்கினர். 'ஒரு பல்கலைக்ழகம் செய்ய வேண்டிய பெரும்பணியை அவர்கள் ஒருவரே தனிமையாகச் செய்துள்ளனர்' என்று பல்கலைக்கழகத் துணை வேந்தர், அப் பல்கலைக்கழக வேந்தருக்கு நடுவணரசுக் கல்வியமைச்ர் மேதகு வி.கே. ஆர். வி. இராவ், தமிழகக் கல்வி அமைச்சர் மேதகு இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலையிலே பணிநலம் பாராட்டியுரைத்தார். அது "What a University has to do he has done single handed" என்பது.

இப் பாராட்டைத் தணிகைமணி தாம் பெறுவோம் என்பதை நினைந்தும் அறியார்; நினைக்கத்தக்க நிலையிலும் அவர் அக்காலையில் இல்லை! ஆனால், நினைக்கத்தக்கதை நினைந்து நிறைவேற்றினார் திரு.வ.சு. அதனை நினைக்கிறார் தணிகைமணி.

"தாங்கள் என்பொருட்டு எடுத்துக்கொண்ட முயற்சியையும் அதன் முடிவையும் நினைக்கும்போது தாங்கள் எண்ணிய எண்ணியாங்கு முடிக்கவல்ல திண்ணியர் என்பது நன்கு விளங்குகின்றது. எனது சிறிய பணியைப் பெரிதாக மதித்து நினைத்தற்கு அரிய ஒரு மதிப்பை எனக்கு அளித்துள்ளீர்கள். தங்கள் உதவியில்லா விட்டால் தேவார ஒளிநெறி நூல்களும் கட்டுரை நூல்களும் வெளிவந்திரா என்பது திண்ணம். தாங்கள் இம் முயற்சியை இறைவன் திருவருளை நம்பியே எடுத்துக்கொண்டபடியால் தாங்கள் நினைத்தபடியே எல்லாம் நல்லவண்ணம் நிறைவேறிற்று என்பது கண்கூடாகப் புலப்படுகின்றது.

"பெரிய நன்முயற்சிகளை நன்கு முடிக்கவல்ல தங்கள் பேராற்றலை மிகவும் வியந்து பாராட்டுகிறேன்" என்று 6-9-69 இல் கடிதம் எழுதிப் பாராட்டுகிறார் தணிகைமணி. இவ்வாறு புலவரைப் போற்றும் புகழ்மையாளர் புகழ் பெறுதற்கு ஐயமும் உண்டோ?

புலவரை ஏன் போற்றுகிறார் வ.சு; அவர்கள் புலமைத் திறத்தால் நாடு பயன்கொள்ள வேண்டும் என்னும் நாட்டத்தால் தானே! ஆனால் புலவரைப் போற்றுதல் தம் உயிர்ப்பான கொள்கைக்கு ஊறு விளைப்பதாக இருப்பின் அப் போற்றிப் புரந்ததற்கு வருந்தித் தம் கருத்தை மாறறிக்கொள்ளும் ஆற்றலும் வ.சு. அவர்களுக்கு உண்டு.

அருட்கவி சேதுராமனுக்கு எவ்வளவு விளம்பரம் செல்வியில்! அவர் படைப்புக்கு எத்துணைப் பாராட்டுகள்! எத்துணைத் திருக்கோயில்களுக்கு அழைத்துச் செல்லுதல்! ஆனால் என்ன? அவர் தனித்தமிழ்க் கொள்கையை உதறினார்; அக் கொள்கையை மறுக்கவும் தொடங்கினார். அவரை மேலும் போற்றுவதோ தமக்குத் தகவு? நேரேயே மறுத்தெழுதி அமைந்தார்! மனத்திற்றோன்றியதை மறைப்பதும், மனமறிந்து பொருந்தாக் கூட்டைப் பொருந்தி வாழ்வதும்புலவரைப் போற்றுதலாகது என்பதே வ.சு.வின் புகழ்நெறி! இந் நெறியை என்றும் எந் நிலையிலும் அவர் தவறவிட்டதே இல்லை! இது மறைமலையாராம் புகழ்ப் புலவரைப் போற்றுதல் தானே!

# 31. பேரும் புகழும்

(நிலைபேறற்ற இவ்வுலகிலே நிலைப்பது ஒன்றே காண்; அஃது
ஒப்பிலாது ஓங்கி உயரும் புகழேயாம்.

**– திருக்குறள் – 233.)**

*“நல்ல நிலையிலே தம்மை நிறுத்திக்கொள்பவர் யார், அந்நிலையிலே இருந்து மேலும் மேலும் உயர்த்திச் செல்பவர் யார், தம்மைத் தம் நிலையிலே யிருந்து கீழே இறக்கிக்கொள்பவர் யார், எவருக்கும் தலைமையினராகத் தம்மைச் செய்ய வல்லவர் யார், அவர் தாமேதாம்!” என்பார் ஒருவர். அவ்வாறு தம்மை நல்ல நிலையிலே நிறுத்தி, மேலும் மேலும் உயர்த்தித் தலைமையராய் ஆக்கிக் கொண்ட பெருமகனார் திரு.வ.சு. என்பது தெளிவாக அறிந்த செய்தியாம். அத் தகவினால் அவர் பெற்ற பேரும் புகழும் பற்றி நாம் இவண் அறியலாம்.*

*கழக வழியாக வெளிவந்துள்ள குழந்தைகளுக்கான நூல்கள், முதியோர் கல்வி நூல்கள், புதுநெறி புதுக்கிய பலதுறை நூல்கள், நூல் கட்டட அமைப்பு ஆகியவற்றுக்குத் தமிழக அரசும், நடுவண் அரசும், அனைத்திந்திய அச்சக மாநாட்டினரும் வழங்கிய பரிசுகளும் பாராட்டுகளும் சான்றிதழ் களும் பலப்பல. அவை திரு. வ.சு. அவர்கள் செயலாண்மைக்கு வாய்த்த சான்றுகள். இனி அவர்கள் மொழிநலம் பேணியும் சமயநலம் பேணியும் தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தையும் சைவசித்தாந்த சங்கத்தையும் தோற்றுவித்து அறப்பணிகள் சிறப்புறச் செய்தனர் அன்றே! ஆதலால், தூத்துக்குடி சைவசித்தாந்த சபையினர் சைவப்பணிநலம் பாராட்டியும் சைவ நூல் வெளியீட்டுத் திறம் போற்றியும், தவத்திரு அடிகளார், கா.சு. பிள்ளை முதலாய சைவநெறி நன்மக்களுக்குப் பணிசெய்து வரும் அணிநலம் ஏத்தியும் ‘சித்தாந்தக் காவலர்’ என்னும் செம்மொழிப் பட்டம் வழங்கினர்.*

*தமிழ்க்காவலர் முது பெரும் புலவர், மாணவர் மன்றத்தலைவர் திரு. மயிலைசிவமுத்து அவர்கள்,*

1969ல் குடியரசுத் தலைவர், டாக்டர் சாகிர் உசேன் அவர்கள் கழக ஆட்சியருக்கு ‘பத்மஸ்ரீ’ (தாமரைச் செல்வர்) விருது வழங்குதல்

**கழக ஆட்சியர் நடுவணரசில் பத்மஸ்ரீ (தாமரைச் செல்வர்) பட்டம் பெறுதல்**

**கழக ஆட்சியர் தமிழரசின் தமிழக முதல்வரிடம் 'செந்தமிழ்ச் செல்வர்' பட்டத்திற்குரிய கேடயம் பெறுதல்**

**காஞ்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களுடன் கழக ஆட்சியர்**

**பல்லாவரம் மறைமலையடிகள் கலை மன்றத்தில் தந்தை பெரியாருடன் கழக ஆட்சியர்**

**நடுவணரசு முன்னாள் நிதியமைச்சர்**
**மாண்புமிகு டாக்டர் சி.சுப்பிரமணியம், டி.லிட்., அவர்கள்**
**கழகத்துக்கு உற்ற காலத்தில்**
**உதவி வரும் பெருந்தகையாளர்**

செம்மொழியாம் நம்மொழிக்கும் சிறப்பாக மாணவர் உலகுக்கும் திரு.வ.சு. அவர்கள் செய்துவரும் சீரிய செந்தமிழ் நூற்பணிகளையும், மொழி நலத்திற்கும் வளர்ச்சிக்கும் முட்டுப்பாடும் முட்டுக்கட்டையும் வரும்போதெல்லாம் முனைந்து நின்று தமிழ்க்காவல் புரிந்து வரும் தகுதி மிக்க தொண்டு நலம் வியந்தும் 'தமிழ்நூற்காவலர்' என்னும் தகவார் பட்டம் த்ந்து பாராட்டுச் செய்தனர்.

இப் பட்டங்களுக்கும் பாராட்டுகளுக்கும் முத்தாய்ப்பு வைத்தாற் போன்றது 1969 ஆம் ஆண்டு குடியரசு விழாவின்போது குடியரசுத் தலைவர் டாக்டர் சாகிர் உசேன் அவர்களால் வழங்கப் பெற்ற 'தாமரைச் செல்வம்' (பத்மஸ்ரீ) என்னும் பட்டமாகும்.

அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும், அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்' என்பவை தமிழ் நிலம் ஆண்ட தகுதி வாய்ந்த மன்னர்தம் மொழிகள், ஆனால் அறிவுடையவன் ஆட்சி மேற்கொள்ளும்போதுதானே அறிவுடையவன் மதிக்கப்பெறுவான்? அறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்தார். அறிவுநூல் புலம் வித்திவிளைக்கும் அறிவுச் செல்வர் வ.சு. தேடி அழைக்க்ப பெற்றுப் பட்டம் சூட்டப் பெற்றார்.

“தமிழில் என்ன இருக்கிறது? என்று கேட்பவர்கள் ஒரு முறை கழகத்திற்குப் போய்வந்தால் என்ன இருக்கிறது என்பது புரியும்” என்று கூறியவர் அறிஞர் அண்ணா. அமெரிக்க நாட்டு ஏல் பல்கலைக் கழகத்தில்தாம் சிறப்பாகத் தமிழ் கற்பித்தததது கழக ஆட்சியாளர் திரு.வ. சுப்பையா பிள்ளை அவர்கள் உதவியால்தான் என்று பாராட்டியவர் அறிஞர் அண்ணா. ஆகலின் பட்டத்தையோ, பதவியையோ பாராட்டையோ விரும்பாத கழக ஆட்சியாளர் அவர்களுக்குத் தாமே விரும்பி நடுவண் அரசுக்குப் பரிந்துரைத்துத் தாமரைத் திரு (பத்மஸ்ரீ) என்னும் பட்டத்தை வழங்கச் செய்தார்.

தாமரைத்திரு என்னும் பட்டம் கழக ஆட்சியாளர் அவர்கள் அன்னைத்தமிழ் நலத்திற்கு அரும்பாடுபட்டதற்கு வழங்கப்பெற்ற பட்டம். தந்நலங்கருதாத் தொண்டுக்கு வழங்கப்பெற்ற பட்டம். தமிழ் இனத்திற்கு வழங்கப்பெற்ற பட்டம். ஆதலால் ஆட்சியாளர் பெற்ற தாமரைத் திருவினைத் தாமே பெற்றதாகப் புலவர் உலகம் மகிழ்ச்சி கூர்ந்தது. தமிழ் அன்பர்கள் மகிழ்ந்தனர். தம் மகிழ்ச்சியை நேரிடையாகவும்,

அஞ்சல்வழியாகவும்தெரிவித்தனர். பாராட்டு விழாக்களும் பல இடங்களில் எடுக்கப்பெற்றன. பொன்னாடை போர்த்திப் புகழ்மாலை சூட்டப்பெற்றன. அவற்றுள், தமிழக அரசுத் தலைமைச்செயலக முத்தமிழ் மன்றம், தமிழ்வட்டம், சைவவேளாளர் பேரவை, தூத்துகுடி சைவ சித்தாந்த சபை, திருநெல்வேலி நெல்லையன்பர்கள் கழகம், அருணகிரி இசைக்கழகம், திருவள்ளுவர் கழகம், திருவாமாத்தூர் முருகதாசர் செந்தமிழ்க்கழகம் ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

குடியரசுத் தலைவரவர்கள் வழங்கிய பாராட்டிதழில் காணும்ஆங்கிலச் செய்தியின் தமிழாக்கம் வருமாறு :

## பத்மஶ்ரீ

**திரு. வயிரமுத்துப் பிள்ளை சுப்பையா பிள்ளை**

திரு.வ.சுப்பையாபிள்ளை (71) தமிழ்மொழி வளர்ச்சிக்காகச் சிறந்த தொண்டு செய்து புகழ்பெற்ற பதிப்பாளர் ஆவர். பண்டைத்தமிழ் இலக்கியங்களைக் கற்பதற்கு அவர் ஆற்றிய தொண்டு மிகவும் போற்றுதற்குரியது. திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்தநூற்பதிப்புக் கழக மட்டிப்பின் சென்னைக் கிளை நிலையத்தின் முகவராக 1921 பதிப்புத் துறையில் அவர் தமது பணியைத் தொடங்கினார். பின்னர் அதன் அமைச்சராகி இப்போது அதன் ஆட்சியாளராக இருக்கின்றார். பொதுமக்களிடையே பண்டைத்தமிழ் இலக்கியங்களை மக்கள் விரும்பத்தக்க பதிப்புக்களாகக் கொண்டுவருவதற்கு அவரே காரணராவார். வெளிநாட்டு அறிஞர்களுக்கும் ஆங்கிலம் பேசும் உலக மக்களுக்கும் தமிழ்மொழி தமிழ் இலக்கியங்களின் வளத்தையும் செல்வத்தையும் அறிமுகப்படுத்தும் வகையில் ஜி.யு. போப் துரைமகனார் ஆங்கில ஆக்கஞ்செய்த திருக்குறள் நாலடியார் ஆகிய இரண்டு நூல்களையும் சங்க இலக்கிய இன்கவித்திரட்டு, நீதிநூற்பத்து ஆகிய நூல்களையும் சிறந்த முறையில் பதித்து வெளியிட்டு உள்ளனர். ஜேம்ஸ் ஆலன் எழுதிய சிலஅரிய நூல்களைத் தமிழாக்கஞ் செய்து வெளியிட்டிருப்பதோடு சட்ட வல்லுநர் சிலர் உதவிகொண்டு சட்டவியல், தீங்கியல் சட்டம், சட்டமன்ற நடைமுறை ஆகிய நூல்களை வெளியிடுவதற்கு அவரே பொறுப்பாளராவார்.

‘திரு. பிள்ளை அவர்கள் தாமே சில நூல்களுக்கு ஆசிரியராவார். குழந்தைகட்கான நூல்களை முதன்முதலில்

வெளிக்கொணர்ந்து அத் துறையில் முந்நூறுக்கு மேற்பட்ட நூல்களை அழகுற அச்சிட்டு வெளியிட்ட பெருமை அவருக்கே உரியது. தமிழ்மொழி இலக்கிய ஆராய்ச்சியாளர்கட்குப் பெரும்பயன் தரக்கூடிய அரும்பெரும் நூல்களைத் தொகுத்து மறைமலையடிகள் நூல் நிலையம் ஒன்றைச் சென்னையிலே அமைத்திருப்பதற்கு அவரே காரணராவார்.

"திரு. பிள்ளை அவர்கள் தமிழ் வளர்ச்சி மன்ற உறுப்பினராகவும், தமிழக அரசுத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சித் துறையில் கருத்துரை வழங்குநர் குழுவில் ஓர் உறுப்பினராகவும் இருக்கின்றார்."

தனித்தமிழை வளர்த்துவரும் தகவாளர் ஆகிய வ.சு. அவர்களுக்கு வடமொழியில் வழங்கப்பெற்ற பட்டம் உவகை தருவதாய் இல்லை. எனினும் ஏற்றுக்கொள்ள நேர்ந்த குறிப்பினை அவர்களே குறிப்பிடுகின்றனர்: "தனித்தமிழ் வளர்த்துவரும் யான் எங்ஙனம் வடமொழியில் பட்டத்தை ஏற்பது எனத் தயங்கினேன். ஆனால், திருக்குறளை உலகெங்கும் பரப்பும் முயற்சியிலி ஈடுபட்டேனுக்குத் திருவள்ளுவர் 2,000 ஆண்டிலே இப்பட்டம் கிடைப்பது திருவருட் குறிப்புப்போலும் என்று கருதுவதாலும் கழகத்தின் தமிழ்நூல் வெளியீட்டுத் தொண்டினை உலகறியச் செய்யும் வாய்ப்பு இதனால் ஏற்படும் என்பதாலும் ஒப்புக்கொள்ள வேண்டியவனானேன்."

பாரதமணி (பாரத ரத்னா) என்னும் பட்டத்தைப் பெறுதற்குரிய தகுதி தமக்கு இருந்தும், தாமரைத்திரு என்னும் பட்டம் பெற்ற காலையில் தமக்கு அப் பட்டம் வருதற்குக் காரணராய் இருந்தவர்கட்கு உள்ளங் கொள்ளை கொள்ள நன்றியுரைக்கும் சீர்மை எண்ணுந்தோறும் இன்பம் பயப்பதாம். 'என்றும் பணியுமாம் பெருமை' என்னும் பொன்மொழிக்கு எடுத்துக்காட்டுமாம்.

"தமிழ் நூல் வெளியீட்டுத் துறைக்காகவே என்னைப் படைத்து நாளும் கணமும் தோன்றாத் துணையாக விருந்து எனது பணி சிறக்க அருள்புரிந்துவரும் எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற் கண் எனது வணக்கம். அடுத்து என்னை ஈன்று வளர்த்த தாய் தந்தையர்கட்கும், எனக்குக் கல்வி புகட்டி இவ்வரும் பெருந்துறையில் ஈடுபடுத்திய என் அருமைத் தமையார் (முயற்சியின் உரு) திருவரங்கனார் அவர்கட்கும் அன்பு கலந்து வணக்கம்.

“என் தமையனார் புத்தக வாணிகத்திற்காகத் ‘திருசங்கர் கம்பெனி’ என்ற நிலையத்தைத் தொடங்கி நடத்தி வந்தனர். அதனைக் கண்டு பங்குசேர்த்துக் கூட்டுக்கழகமாக நடத்துதல் நலம் பயக்கும் என்று கூறி ஊக்கமூட்டிய காந்தியவழி வாழ்ந்துவரும் சைவத்திருவாளர் திரு. தி.சு. விசுவநாதபிள்ளை பி.ஏ. அவர்கட்கு எனது தலைதாழ்ந்த வணக்கம்.

“பின்னர்த் தனித்தமிழ் நெறியில் உறைத்துநின்று பதிப்புத் துறையில் பணியாற்றுவதற்கு வழிவகுத்துககாட்டிய மறைத்திரு மறைமலையடிகளார் திருவடிகட்கு என் நெஞ்சார்ந்த வணக்கம்.

அடுத்துப் பல துறைகளில் நூல்களை யான் விரும்பிய வண்ணம் ஆக்கியுதவிப் புகழ் விளைத்துவரும் கழக நூலாசிரியர்பெருமக்கட்கெல்லாம் எனது உளமிகு நன்றி தெரிவிக்கின்றேன். வினையாற்றுந் தகுதியறிந்து யான் கழக நலத்துக்கு ஆற்றிவரும் பணிக்கு உறுதுணை நல்கி ஊக்கமூட்டிவரும் கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு மிகவும் கடப்பாடுடையேன்.”

தாமரைத்திரு அல்லது தாமரைச் செல்வம் என்னும் பட்டம் நடுவண் அரசால் அறிவிக்கப்பெற்றதும் மகிழ்வு கூர்ந்த அன்பர்களும் நண்பர்களும் ஆங்காங்கு விழாவெடுத்துப் பாராட்ட விழைத்தனர். அஞ்சல் வழியாகவும், தொலைவரிச் செய்தியாகவும் வாழ்த்துத் தெரிவித்தும் மகிழ்ந்தனர்.

“தாங்கள் அடைந்துள்ள மேன்னைமயும் முன்னேற்றமும் தமிழ்மகன் ஒவ்வொருவனையும் விம்திதமும் பெருமையும் கொண்டு வீறுநடை போடச் செய்யும்.”

“தமிழ்த் தாய்க்கு நேரும் ஆபத்துகளைத் தலைமையேற்றுப் போர் நடாத்தித் தவிரித்தும் தகர்த்தும் தந்நிகரில் வெற்றி பெற்று வாகைமாலை சூடிச் செருக்கு நடைபோடும் வீரத் தளபதியர் ஒரு சிலருள்ளும் தாங்கள் ஓங்கியுயர்ந்த ஒருவர்.”

தாங்கள் இதுவரை ஆற்றியுள்ள அழிவற்ற அரும்பணிக்காகத் தங்கட்குப் பொற்சிலை ஒன்று எடுத்தாலும் பொருந்தும் என்று அனைவரும் பொங்கு மகிழ்வுடன் கூறுவர்.

“வெளிநாடுகளில் இனி அமையும் உலகத்தமிழ் மாநாடு களிலும் தாங்கள் வரவேற்கப்பெற்று, ஓர் உயர்ந்த உலகப் பட்டமும் அடைவதற்குரியது தங்கள் அரிய தொண்டு.”

- இவ்வாறெல்லாம் மகிழ்ந்தெழுதிப் பாராட்டினர். 1-3-69 இல் தமிழ் வட்டச் சார்பில் தாமரைத் திரு.வ.சு. அவர்களுக்கு உட்லண்சு விடுதியில் ஒரு பாராட்டு விழா நிகழ்ந்தது.

தாமரைத்திருவின் தனிப்பெருமையைச் சங்கநிதி பதுமநிதி இரண்டும் என்னும் தேவாரத் திருப்பாடல் காட்டும். அத்தாமரைத்திரு முதலாம் சிறப்புகளைப் பெற்றும், இந்தியத் துணைக் கண்டத்திலேயே இணையற்ற நிறுவனமாகச் சைவ சித்தாந்தக் கழகத்தைச் செய்தும் விளங்குவதற்குத் திரு.வ.சு. அவர்களின் உயர்வற உயர்ந்த உயர்வு போற்றுதற்குரியதாம். உயர்மன்ற நீதிபதி திரு. எம். எம். இசுமாயில்தலைமை தாங்கினர். சட்டத் துறைச் செயலர் திரு.டி.எஸ். இராமலிங்கம் பிள்ளை வரவேற்றுப் பணிநலம் பாராட்டினார். காந்தியக் கவிஞர் திரு.எஸ்.டி. சுந்தரம் பாராட்டுரைத்தார். திரு.வ.சு. நன்றியுரைத்து அறிஞர் ஆண்ணா அவர்களின் பேருள்ளத்தைப் பாராட்டினார்:

“புலவர்களெல்லாம் போற்றும் பெரும்புலவராய் விளங்கிய தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் வழியில் நின்று ஆற்றி வரும் சிறியேனது தமிழ்த்தொண்டைப் பாராட்டி மிகவும் பரிவோடு மைய அரசினர்க்கு மதித்துரைத்துப் பத்மஸ்ரீ (தாமரைச் செல்வம்) என்னும் பாராட்டுப் பட்டத்தைக் குடியரசு நாளன்று வழங்குமாறு செய்த தமிழ்ப் பேறொளி பேரறிஞர்அண்ணா அவர்கட்கு எனது உளங்கனிந்த வணக்கம்.”

26-3-69 இல்சைவ வேளாளர் பேரவையின் சார்பில் பாராட்டு விழா நிகழ்ந்தது. அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றப் பொருளாளர் திரு. ஆ. சுப்பையா தலைமை தாங்கினார். திரு. ஆர்.வி. அரசு வரவேற்றார். திரு. மீ.ப.சோமு அவர்கள் திரு.வ.சு.வின் பணித்திறம் பாராட்டி, மெய்ப்புப் பார்க்கும் மேன்மையை வியந்தார். “அப்பளத்தில் கல்கிடந்தால் எப்படிப் பல்லை உடைத்துவிடுமோஎன்று கல் இல்லாது அப்பளம் இடுவது போல ஓர் அச்சுப் பிழைகூட இருக்கக்கூடாது என்று பாடுபடுகிறார் என்றார். சட்டத்துறை ஆணைக்குழுச் செயலுறுப்பினர் திரு. மா. சண்முகசுப்பிரமணியம், தமிழ்ப் பேராசிரியர் திரு.க. வடிவேலாயுதம் ஆகியோர் பாராட்டினர். திரு. நெ. வள்ளிநாயகம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பேரவையின் சார்பில் வ.சு. அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பெற்றது, விழா எடுத்த பெருமக்களுக்குத் தக்கவாறு நன்றியுரைத்தார் திரு.வ.சு.

*18-5-69 இல் தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் சார்பில் வ.சு. அவர்களுக்குப் பாராட்டு விழா நிகழ்ந்தது. தருமை ஆதீனம் தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் தலைமை யேற்றார். திரு. அங்கப்ப பிள்ளை பாராட்டுரை வழங்கினார். நன்றியுரைத்தார்திரு.வ.சு.*

*20-5-69 இல் நெல்லைச் சந்திப்பு திருத்தருமபுர மடத்தில் நெல்லையன்பர்கள் பாராட்டுவிழா நடாத்தினர். அண்ணாமலைப் பல்கலைக் கழக மேனாள் பேராசிரியர் திரு.கோ.சுப்பிரமணியபிள்ளை தலைமை தாங்கினார். சிவநெறிச் செல்வர் திரு. நெ. சுப்பிரமணியம் பொன்னாடை போர்த்தினார். இந்துக் கல்லூரி முதல்வர் திரு. சோமசுந்தர முதலியார் வாழ்த்துரைத்தார். வழக்குரைஞர் திரு. பட்சிராசன், பேராசிரியர் கு. பரமசிவம், மேலப்பாளையம் நகர்மன்றத் தலைவர் திரு.எல்.கே.எம். அப்துல் ரகுமான், பேராசிரியர் ஆ. அருளப்பன், புலவர் ந. பாலம்மாள் ஆகியோர் பாராட்டிப் பேசினர். நெல்லைத் திருவள்ளுவர்கழகத்தார், சைவ வேளாளர் கல்வி அபிவிருத்தி சங்கத்தார், நெல்லைஅருணகிரி இசைக் கழகத்தார் ஆகியோர் சார்பில்பாராட்டு இதழ்கள் படிக்கப் பெற்றன. நெல்லையன்பர்கள் அனைவர் சார்பிலும் 21-5-69 இரவில் ஒரு பாராட்டு விருந்து நடத்தினர்.*

*ஒத்த உணவு தேர்ந்து ஒருசிறிதுண்ணும் நாவடக்கச் செல்வராகிய வ.சு. அவர்கள் விருந்து கண்டு திக்குமுக்காடிப் போனார். ஆனால், விருந்துப் பாட்டுக் கேட்டு வியந்து போனார்! அது :*

"பதுமத் திருசேர் பைந்தமிழ்மருத்துவர்
சுப்பையா யாப்பிள் ளையைப் போற்றி
உண்டாட் டயரும் இந்நாள் உணவே
உப்பே உள்ளிக் கிச்சடி, உருளை
வறுவல்நற்சுவை வளஞ்சேர் கோசு
செம்முள் ளங்கி சீர்ப்பட் டாணி
தம்முள் துவண் தனிச்சுவைத் துவட்டல்
நறும்பருப் புருண்டை வழுதுணைப் பிட்டலை
முக்கனி யமிழ்தம் மூரிவெண் சோறே
அப்பளம் பருப்பே ஆவின் நெய்யே
தெங்கம் பால்சேர் துங்குழம் புடனே

எங்கும் மணங்கமழ் மிளகுச் சாறே
சீரமைஅரிசி பருப்புத் தேங்கூழ்
கார வடையே கட்டிசேர் தயிரே
நெல்லைச் செல்வர் நாமே
வல்ல மட்டும் வாய்க்கவுண் போமே"

என்பது.

திருவாமாத்தூர் முருகதாசர் செந்தமிழ்க் கழகச் சார்பில் 6-6-69 இல் ஒரு பாராட்டுவிழா நிகழ்ந்தது. புலவர் திரு. தி. மு. சங்கரலிங்கம் வரவேற்றார். சிரவணபுரம் கௌமார மடாலயத் தலைவர் தவத்திரு சுந்தர சுவாமிகள் தலைமை தாங்கிப் பொன்னாடையும் போர்த்தினார். புலவர் ந. ஆறுமுகம், திரு. தி.சே. சாமிநாதபிள்ளை, கௌமார மடாலயத் தலைவர் திரு.தி.செ. முருகதாச ஐயா ஆகியோர் வ.சு. அவர்களின் செம்பணி குறித்துப் பாராட்டினர். விழா எடுத்தவர்களுக்கு உள்ளார்ந்த நன்றி தெரிவித்து உவகை கூர்ந்தார் திரு.வ.சு.

நெல்லைத் தமிழினத்தமிழ் இலக்கியக் கழகச் சார்பில் 7-9-69 இல் பாளையங்கோட்டை சைவ சபையில் பாராட்டு விழா எடுக்கப்பெற்றது. கழகச் செயலர் ஆதி. சீனிவாசன் வரவேற்றார். பாவலர் இரா. சு. முத்து வாழ்த்துப்பா வழங்கினார். திரு.சி.சு. மணி பொன்னாடை போர்த்தினார். திருவாளர்கள் ந. சொக்கலிங்கம், சு. மாமன்னன், கா.ப. அருணாசலம், சி.சு. மணி ஆகியோர் பாராட்டுரைக்க மறுமொழி யுரைத்தார்திரு.வ.சு.

பேராசிரியர் ஆர். சனார்த்தனம் நாயுடு அவர்கள் மறைமலையடிகள் நூல்நிலையத்தில்30 சொற்பொழிவுகள் ஆங்கிலத்தில் நிகழ்த்தினார். அதன் நிறைவு விழாவும், வ.சு. அவர்கள் தாமரைச் செல்வம் பெற்றதற்குப் பாராட்டு விழாவுமாக 6-10-69 இல் முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் நிகழ்ந்தது. விழாத் தலைமை தாமரைச்செல்வர். நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் ஏற்றார். திரு. சி. செயராமன் வரவேற்றார். திரு. வேங்கடசாமி நாயுடு, திரு.சு. சங்கரராசு நாயுடு, திரு. அ.மு. பரமசிவானந்தம், திரு. எம்.எம்.பட் ஆகியோர் பணிநலமும்உரைநலமும் பாராட்டினர். விழாக்கொண்ட பெருமக்கள் நன்றியுரைத்தனர்.

தமிழக அரசு தமிழ்ச் சான்றோர்களில் சிறந்தார்க்குப் பட்டம் வழங்கிப் பாராட்ட விழைந்தது. அதனால் 15-1-79 இல் வள்ளுவர் கோட்டத்தில் நிகழ்ந்த திருவள்ளுவர்

*விழாவின்போது தமிழுக்குச் சீரிய தொண்டு செய்துவரும் பெருமக்கள் திரு. தி.சு. அவினாசிலிங்கம், மொழிஞாயிறு திரு. ஞா தேவநேயப்பாவாணர். பன்மொழிப்புலவர் திரு.கா. அப்பாத்துரை, இசைப்பேரறிஞர்திரு. ம.ப. பெரியசாமித்தூரன், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் திரு.வ. சுப்பையா ஆகிய ஐவரையும் தேர்ந்து செந்தமிழ்ச் செல்வர் என்னும் பட்டம் வழங்கியது. அவ்வை நடராசன் அவர்கள் பட்டம் பெற்றோர் தகவுரைக்க, தமிழக முதல்வர் மாண்புமிகு ம. கோ. இராமச்சந்திரன் அவர்கள் பொன்னாடை போர்த்திப் பொற்பதக்கம் அணிவித்துச் சிறப்புக் கேடயம் வழங்கினார்.*

*திரு.வ.சு. அவர்களுக்கு அரசு வழங்கிய தகவுரை வருமாறு: “சித்தாந்தக் காவலர் சுப்பையா பாளையங்கோட்டையில் 22-9-1897 இல் திரு. வயிரமுத்து சுந்தரத்தம்மையார் இவர்களின் நன்மகனாகப் பிறந்தார். பிறந்த ஊரில் உள் தூய சேவியர் உயர்நிலைப் பள்ளியிலும் நெல்லை இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்று தேர்வு எழுதி நிறைவுற்றார்.*

*“மறைமலையடிகள் மருகரும் தம் தமையானருமான திருவரங்கனார் 1920 இல்திருநெல்வேலியில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகமென்னும் கூட்டுப்பங்கு நிறுவனம் ஒன்றைப் பதிவு செய்து தொடங்கவே இவர் சென்னைக் கிளை நிலையத்தின் முகவுரானார். ‘செந்தமிழ்ச் செல்வி’ என்னும் திங்கள் ஏட்டினை 55 ஆண்டுகளாக அதன் ஆசிரியராக இருந்து நடத்தி வருகின்றார்.”*

*“தம் தமையனார் நெல்லையில் 1924 இல் நிறுவிய சிவஞான முனிவர் நூல்நிலையத்தையும், மறைமலையடிகளார் விருப்ப ஆவணத்தின்படி இவர் சென்னையில் 1958 இல்நிறுவிய மறைமலையடிகள் நூல்நிலையத்தையும், பல்லாவரத்தில் அடிகள் வாழ்ந்த மாளிகையைக் கலைமன்றமாக்கி அதனையும் சிறப்புற நடத்தி வருகின்றார்.*

*இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும், 1800க்கு மேற்பட்ட பலதுறைநூல்களை வெளியிட்டுப் பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றுள்ளனர். இவர் பல்வேறு இலக்கிய மாநாடுகளும் பெரு விழாக்களும் நடத்தி மலர்களும் நூல்களும் வெளியிட்டுள்ளார். இவர் புலவர் வரலாறுகள், படங்கள், பழந்தமிழ் நூல்கள் - சிறப்பாகத் திருக்குறள் பற்றிய அனைத்து நூல்கள், பழைய இதழ்கள் ஆகியவற்றைத் தொகுப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றார்.*

"இவர் சங்ககால இலக்கண இலக்கியங்களையும், பிற்கால இலக்கண இலக்கியங்களையும், சமய நூல்களையும் பேழையில் அமைத்துத் தருவது தனிச் சிறப்புடையதாகும். பேரறிஞர் அண்ணா அவர்களின் பரிந்துரையின்படி 1959 இல் இவருக்கு மைய அரசு தாமரைச் செல்வர் (பத்மஸ்ரீ) என்னும் விருதினை வழங்கியது."

"இங்ஙனம் பல்லாற்றானும் பைந்தமிழ்ப்பணி ஆற்றிவரும் திரு.வ. சுப்பையா அவர்களைப் பாராட்டி இத் திருவள்ளுவர் திருநாளில்தமிழ்நாடு அரசு செந்தமிழ்ச் செல்வர் என்னும் விருதினை வழங்கி மகிழ்க்கிறது".

இவையெல்லாம் செய்த தொண்டுகளை மதித்து அமைப்புகளும், மைய மாநில அரசுகளும் வழங்கிய பட்டங்களும் பாராட்டுகளும் ஆகும். இனி அகவைச் சிறப்பால் எடுக்கப்பெறும் பாராட்டுகளைக் காணலாம்.

திரு.வ.சு. அவர்களுக்கு மணிவிழா, பவள விழா முத்துவிழா என்பவை எடுக்கப்பெற்றுள.

அறுபதாம் அகவை நிறைவைக் கொண்டாடும் மணிவிழா 1957 செப்டம்பர்த் திங்களில் கொண்டாடப்பெற்றது. கழகப் புலவர் ப. இராமநாதபிள்ளை அவர்கள் திரு.வ.சு. அவர்களின் வரலாற்றுச் சுருக்கத்தை வரந்து செல்வியில் (சிலம்பு32) வெளியிட்டுள்ளார். மணிவிழா நினைவாக மறைமலையடிகள் மணிமொழிகள் அதே சிலம்பில் மின்னுகின்றன. மணிவிழாச் செல்வைப் பாட்டும் உரையும் பயில வாழ்த்தினர். பேராசிரியப் பெருமக்கள், அமைச்சர்கள், பல்வேறு அமைப்புகள் வழியாக வரப்பெற்ற வாழ்த்துகள் கழக ஆட்சியாளர், வ.சு. அவர்களின் 'மணிவிழா வாழ்த்துகள்' என்னும் தலைப்பில் பளிச்சிடுகின்றன. (சிலம்பு 32:73 -80)

வ.சு. அவர்களின் பவள விழா சென்னை, மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் 1973 ஆகஃச்டு 4, 5, ஆகிய இரண்டு நாள்களிலும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

பவள விழா என்பது புதிது படைத்துக் கொண்ட ஒரு விழா, வெள்ளிவிழாவும், பொன் விழாவும், மணி விழாவும், முத்து விழாவும் நாடறிந்தவை. அவை முறையே 25, 50, 60, 80 ஆண்டுகளின் நிறைவுக் குறியாகக் கொண்டாடப் பெறுபவை. பவள விழாவோ 75 ஆண்டு நிறைவுக் கெனப் படைத்துக் கொள்ளப்பெற்றது. ஆகலின் திரு.வ.சு. அவர்களுக்கு

எடுக்கப்பெற்ற விழாவே முதலும் முதன்மையும் அமைந்தது ஆகும். இப்பொழுது பலஅமைப்புகள் பவள விழாக் கொண்டாடுகின்றன. பெருமக்கள் பவள விழாக் கொண்டாடுகின்றர் இதுவ.சு. அவர்கள் மன்பதைக்கு வழங்கிய புதுவிழா!

இராசேசுவரி திருமண மண்டபம் 'மணவிழாக் கோலம்' கொண்டிருந்தது. 75 யாண்டு நிரம்பிய இளைஞரையும், விழா வெடுக்க விழைந்து வந்த பெருமக்களையும் வருக வருக என வரவேற்பது போல வண்ணத் திருமாளிகையின் வளமார்ந்த வாயில் எழிலுடன் இலங்கியது. தாமரைச் செல்வர் பவள விழா என்பது பவளவண்ண எழுத்துக்களால் பொறிக்கப் பெற்றிருந்தது. வாழையும் கமுகும் வகைபெறு தழைகளும் வண்ணத் தாள்களும் வாயில் தொட்டு அரங்கம் வரையும் வனப்புற விளங்கின. வேலைப்படமைந்த தென்னை யோலைத் தொங்கல்கள் பக்கமெல்லாம் அழகு செய்தன. பவளவிழாச் செல்வரின் பெயரன் பெயர்த்தியர் பனிநீர் தெளிந்தனர். முந்துற வந்து சந்தனம் தந்தனர்; கற்கண்டும் உரோசா மலரும் கனிவுடன் வழங்கிக் களித்தனர்.

அரங்கில் அமர்ந்த அவையோர் உள்ளமும் நோக்கும் தென்பால் இருந்த விருந்தறைமேல் படர்ந்தன. அறுசுவை விருந்துகளே கண்ட அவ் விருந்துக கூடம், அமிழ்தினும் இனிய அருந்தமிழ் விருந்து மாளிகையாய் இலங்கியது. அரும்பாடுபட்டுத் தொகுத்து வைத்த கருவூலமாகிய காட்சிக் கூடம், அருந்து அமிழ்து என ஏவிக்கொண்டிருந்தது.

காட்சியரங்கில் தம்மை மறந்து நின்றவர் பலர்; தனியே ஓர் இடத்துநின்று தணியா ஆர்வத்தால் நோக்கியவர் பலர்; கால்கடுக்க நின்றும், மண்டியிட்டு நின்றும், கால்மடக்கி அமர்ந்தும் குறிப்புகள் எடுத்துக்கொண்டவர் பலர்; அவருள்ளும் நம்பியரினும் நங்கையர் மிகப் பலர்!

சரியாக மாலை 6-30 மணிக்கு விழாத் தொடங்கியது. இசைப் பேரரசி சேலம் செசயலக்குமி தமிழ் வாழ்த்துப பாடினார். தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா நடுநாயகராய் அமர, செட்டி நாட்டரசர் இராசா சர். முத்தையா செட்டியார் அவர்களும், அமைச்சர்களும், நடுவரவர்களும், பவள விழாச் செல்வர் அவர்களும் இருபாலும் அமர்ந்தனர்.

பவளவிழாக் குழுவின் தலைவர் நலத்துறை அமைச்சர் திரு.க. அன்பழகன் வரவேற்புரை வழங்கினார். எளிதில்

காண்டற்கு அரிய எழில் விழா ஈதென்று பவளவிழாச் செல்வரின் பணிநலமும் அணிநலமும் பாராட்டி ஆளுநர் விழாவைத் தொடங்கி வைத்தார். செட்டி நாட்டரசரும், முதல்வர் கலைஞர்மு. கருணாநிதி அவர்களும், கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், உயர்மன்ற நடுவர் திரு. எஸ். மகராசன், கல்வித்துறை இயக்குநர் எஸ்.வி. சிட்டிபாபு ஆகியோர் பவளவிழாச் செல்வரைப் பாராட்டினர். பவளவிழா மலரை வெளியிட்டு நயமிகுத் தேத்தினார் நாவலர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்ற புலவர் ஆ. பழனி அவர்களின் 'அனிச்ச அடி' என்னும் நூலை வெளியிட்டு, நூலாசிரியர்க்குக் கழகச் சார்பில் பொற்கிழியும் பொன்னாடையும் வழங்கினார் கலைஞர் அவர்கள். திரு.வ.சு. அவர்கள் நயத்தக நன்றி யுரைத்தார்.

5-8-73 காலை 9-30 மணிக்கு உயர்மன்ற நடுவர் திரு. பு. ரா. கோகுல கிருட்டிணன் அவர்கள் தலைமையில் விழாவின் இரண்டாம் பகுதி தொடங்கியது. டாக்டர்மெ.சுந்தரம் அவர்கள் வரவேற்புரைத்தனர். மேனாள் முதல்வர் திரு. மீ. பக்தவத்சலம், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்திரு. நெ. து. சுந்தர வடிவேலு, டாக்டர் திரு.சி. பாலசுப்பிரமணியம், திரு. மா. சண்முக சுப்பிரமணியம், மொழிப் பேரறிஞர் திரு பாவாணர், நூலக இயக்குநர்திரு.வே. தில்லை நாயகம், டாக்டர் திரு. ஒளவை து. நடராசன், குழந்தைக் கவிஞர்திரு. அழ. வள்ளியப்பா ஆகியோர் வாழ்த்துரைத்தனர். பவளவிழா நினைவாக வந்திருந்தோர் அனைவருக்கும் ஊற்றெழுது கோலுடன் (ballpoint pen) கையேடும் அன்பளிப்பாக வழங்கப்பெற்றது.

நண்பகல் இடைவேளைக்குப் பின், 4 மணிக்கு மீண்டும் விழாத் தொடர்ந்தது. சேலம் செயலக்குமியார் இன்னிசை மணிவரை நிகழ்ந்தது. டாக்டர் பா. நடராசன் அவர்கள் சென்றார். டாக்டர்ந. சஞ்சீவி அவர்கள் பதிப்பு கட்டளைத் தகவுற விளக்கி வந்திருந்தோரை வர டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், தாமரைத் திரு டாக்டர் வ. செ. குழந்தைசாமி, திருவாட்டி சௌந்தரா கைலாசம், டாக்டர்க.ப. அறவாணன், தவத்திரு சுத்தானந்த பாரதியார் ஆகியோர் பாராட்டினர்.

கழக நூலாசிரியர் முதுபெரும் புலவர் இராவ்சாகேப் கு. கோதண்டபாணிப்பிள்ளை, புலவர்இரா. இளங்குமரன் ஆகிய இருவர்க்கும் கழகச் சார்பில் ம. பொ. சி. அவர்கள் பொன்னாடை போர்த்திப் பரிசு வழங்கினர். விழாவில்

பங்குகொண்ட அனைவருக்கும் சந்தனமாலை சூட்டப்பெற்றது. அதனைக் கொண்டு செல்லுதற்கு வாய்ப்பாகப் பவள வண்ணப்பை வழங்கப் பெற்றது. விழாச் செல்வர் நன்றி கூற நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிது நிறைந்தது.

வ.சு. அவர்களின் முத்துவிழா 7-10-77 இல் சென்னைப் பவழக்காரத் தெரு, வணிக வைசிய திருமண மண்டபத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. நெல்லை சிவத்திரு. இராமலிங்க தேசிகர் சடங்குகளை முறையாக நடாத்தி முத்து விழாச் செல்வர்களுக்குச் சிவதீக்கையும் செய்து வைத்தார்.

சடங்குகள் அனைத்தும் தமிழ்முறைப்படியும், சிவாகம நெறிப்படியும் திருமுறை தமிழ்மறை இசைப்பாடல்களுடனேயே நடைபெற்றன. திருமுறை இசைச் செல்வர்கள் திரு. கூத்தாக, திரு. புண்ணிகோடி ஆகியோர் திருமுறை இசைத்தனர். விழாவை ஒட்டி மாலைப் பொழுதில் நிகழ்ந்த வரவேற்பின் போதும் இவர்களின் இன்னிசை நடைபெற்றது.

விழாவில் உற்றார் உறவினர்களும், அறிஞர்களும் பெரு மக்களும் திரளாகக் கலந்துகொண்டனர். நாடெங்குமுள்ள சிறந்த திருக்கோயில்களில் எல்லாம் சிறப்பு வழிபாடு செய்தற்கு ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தன. பல திருக்கோயில்களில்இருந்து திருவருட்பொருள்கள் விழாவிற்குக் கொணர்ந்து வழங்கப்பெற்றன. வாழ்த்துச் செய்திகள் நிரம்ப வந்தன. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 56, பரல் 2 “கழக ஆட்சியாளர் வ. சுப்பையா பிள்ளை முத்து விழாச் சிறப்புமலர்” என்னும் பெயரோடு வெளிப்பட்டது.

# 32. பலர்புகழ் பண்புகள்

*(இனிய செயல்களோடு நன்மையையும் விரும்பிச் செய்து பிறர்க்குப் பயன்படுதல் உடையாரது பண்பினை உலகத்தார் கொண்டாடுவர்.*

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.")

**– (திருக். 994)**

*பரங்குன்றப் பெருமான் பக்கலை அடைந்தார், கடுவன் இளவெயினனார் என்னும் புலவர். அவர்கடப்பம் பூமாலையணிந்த முருகனை விளித்து, "யாம் இரப்பவை, பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்அருளும் அன்பும் அறனும் மூன்றும்" என்று வேண்டினார். வேண்டிப் பெறத்தக்க பெருமைக்குரிய பொருள்கள் முன்னவை மூன்றும் அல்ல; பின்னவை மூன்றுமே யாம் என்பதை அவர் திருவாக்கு வெளிப்படுத்துகின்றது. அப் பண்புகளை மதித்துப் போற்றிப் பயன் கருதாத் தொண்டிலே தலையிட்டார் யாவரோ, அவர்புகழும் உலகப்புகழாம்! அவவரே உலகமாம்!வரே சான்றேராம்.*

*தாமரைச் செல்வர்க்கு அமைந்த நயத்தக்க பண்புகள்தாம் எத்தனை எத்தனை! அவற்றையெல்லாம் பரக்கக் கூறியுள்ளோம். இவண் தொகுத்துச் சிலவற்றைக் கூறுவாம் :*

**சிவன்கழல் மறவாச் சீர்மை**

*அம்மை அம்பலவாணர் அடிப்போதுகளை நொடிப்போதும் மறவாத தமிழ்நெஞ்சும் ஓயாது ஓதும் திருநாவும் உடையவர் திரு.வ.சு., பத்தராய்ப் பணிவார் என்றும், பரமனையே பாடுவார் என்றும், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர் என்றும், முப்போதும் திருமேனி தீண்டுவார்என்றும், முழுநீறு பூசிய முனிவர்என்றும் தம்பிரான் தோழர் கூறும் தொகையடியார் இலக்கணம் அனைத்தும் வகையாய் அமைந்தவர்.*

**பெற்றவரைப் பேணும் பெருமை**

*பெற்றவர்களைத் தெய்வமெனப் போற்றிப் பணிசெய்து கிடப்பது நம் பண்பாடு. அப் பண்பாடு காக்கப்பெறும் இடத்தே, கலைகமழும், கனிவு தவழும், கடவுள் தங்கும்! இவனை மகவாகப் பெற்றோமே! நம் பேறே பெறு!' எனப் பெற்ற நெஞ்சங்கள் திளைக்கும்; இவர்க்கு மகவாகப் பிறந்தோமே, எம் பேறே பேறு எனப் பிறந்தநெஞ்சம் களிதுளும்பும்', இஃதியற்கை! இவ்வியற்கை, திருவிளையாடல்புரியும் கோயிலாகத் திரு.வ.சு. குடும்ப வாழ்வு அமைந்தது! அன்னையார்க்கு அருந்துணை யாகும் ஒரே ஓர் கடப்பாட்டுக்காகவே, தாம் பல்லாண்டுகள் சென்னையில் வாழ்ந்துகொண்டு, தம் கையால் உணவு ஆக்கி உண்டுகொண்டும், தம் அருமைக்கிழத்தியாரைத் தாயார்க்கு உசாத்துணையும் அசாத்துணையுமாய் ஆக்கி வைத்திருந்தார்! குழந்தையைப் போழ்திலேயே தந்தையை இழந்து நின்ற நிலையும், அருமைத் தாயாரும் அண்ணல் அரங்கரும் குடும்பப் பொறையைத் தாங்கிக் காத்ததும், உன்னி உன்னி உருகும் உளத்தர் திரு.வ.சு. இத்தகு நன்மக்களைப்பெற்ற பெற்றவர்க்கு என்னகுறை? மக்கள்பெறும் மாண்பெலாம் அவர் மாண்பாகப் பெருகும்!*

**சுற்றம் தழுவல்**

*ஒருவர் செல்வத்தைப் பெற்றதன் பயன் சுற்றத்தார் சுற்றப்பட ஒழுகுதல் என்பார் திருவள்ளுவர். தாமரைச் செல்வர்க்கு வாய்த்த சுற்றம் பெரிது. தம் குடும்பவழிச்சுற்றம், தமையனார் அரங்கனார் வழிச்சுற்றம், தவத்திரு அடிகளார் வழிச்சுற்றம், கழகவழிச்சுற்றம் இன்னபலவகைச் சுற்றங்கள் சூழ வாழவேண்டிய பேறு வாய்த்தது. அவ்வவர்க்குக் காலத்தால் செய்யவேண்டிய சொற்றுணையும், பொருள் உதவி முதலாம் நற்றுணையும் நல்லவும் பொல்லவுமாகிய நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு உதவும் நயத்துணையும்; வேலை வாய்ப்புச் செய்தல், படிப்புக்கு உதவுதல், விருந்துபேணுதல் முதலாம் நறுந்துணையும் அட்டியின்றி ஆர்வத்தோடு செய்தலால் கற்றத்தார் சுற்றப்பட ஒழுகும் திருவாளராகத் திகழ்கிறார் திரு.வ.சு.*

*"என் சின்னஞ்சிறு பருவந்தொட்டே என் இளைய மாமனாரை நன்கு அறிவேன். அவர் என் படிப்புக்கு உதவவுவார். நூல்கள் வாங்கித் தருவார். சட்டைத்துணிகளும், வாங்கித்தருவார். என் அன்னையின் மேலும் அளவிலா அன்பு*

கொண்டிருந்தார். அடிக்கடி என் நலங்களை அறிந்துகொள்வதிலும் என் முன்னேற்றத்தில் பங்குகொண்டு உதவுதலிலும், ஆர்வம் காட்டிவருகிறார். மீண்டும் பெறவேண்டும் என்று கருதாமலே எனக்கு வேண்டும் போதெல்லாம் வேண்டும் தொகையைத் தட்டாமல் வழங்கியுள்ளார். என்மேல் கொண்ட பற்றில் எள்ளளவும் குறையாமல் என்மக்கள் பாலும் பேரன்பு கொண்டுள்ளார். இளமைதொட்டே அவர் செய்துள்ள உதவிகள் நினைக்க இன்பமானவை. அத்தகைய பெருந்தகையர் அரியர். அவர் உறவால் யான் என் வாழ்வில் அடைந்துள்ள - அடைந்து வருகிற பேறுகள் மிகப்பல" என்கிறார் வ.சு. அவர்களின் உடன்பிறந்த குப்பம்மாள் அவர்கள் தம் ஒரே அன்புச் செல்வர் திரு.சு. திருஞானம்பிள்ளை. நெஞ்சார்ந்த இம்மொழி சுற்றந் தழுவும் பெருங்குணத்திற்குச் சீரிய எடுத்துக் காட்டாகும்.

**அயராமுயற்சி**

தாமரைச்செல்வர் திரு.வ.சு. அறியாதது மடிமை என்னும் சோம்பல்! 'மடிமை குடிமையைக் கெடுக்கும்.' எத்தகைய வளமும் வாய்ப்பும் இருப்பினும் மடிமையுடையார்மாண்புறார்' என்பதை அழுத்தமாக உணர்ந்தவர் திரு.வ.சு. படிப்பு நாளிலும் முயற்சி! பணியில் புகுந்த நாளிலும் முயற்சி! தமக்குப் பவளவிழாக்கண்ட நாளிலும் முயற்சி! அயரா முயற்சி! 'நாற்பதில் நழுவல்' என்பதை நழுவச்செய்தவர் திரு.வ.சு. 'ஐம்பதில் அசதி' என்பதை அயரச் செய்தவர் திரு.வ.சு., அறுபதில் ஆட்டம் என்பதை ஆட்டமுறக் கண்டவர் திரு.வ.சு., எண்பதில்தூக்கம் என்பதைத் தூக்கத்திற்கு அனுப்பிய தோன்றல் திரு.டவ.சு.

நூல்களை விற்பதற்காக ஊர் ஊராகச் சுற்றிய நாள் உண்டு. பேருந்துநிலையம், தொடர்வண்டி நிலையம் ஆகியவற்றிலேயே படுத்துக் கண்ணர்ந்த நாள் உண்டு! வேண்டிய ஒருவர் திண்ணையிலே படுத்துக்கொண்டே, வளர்ச்சித் திட்டங்களைப் போட்டுக் கிளர்ச்சியாகப் பணியாற்றிய நிகழ்ச்சிகள் உண்டு. ஓய்வற்ற வேலைக்கு இடையே என்னைப்பார்த்து இதனைப் வைக்கவேண்டும் என்று சொல்ல வரவேண்டுமா? இருந்தன்மையால்பல நல்லோர் கேட்க நடந்ததுண்டு. ஏறித்தெருத்தெருவாக நூல்விற்ற காலமும் முயற்சிக்கு அணுவளவும் குறையாமல் இன்றும் திகழும் பெருமையும் உண்டு. 'நீங்கள் அழைத்திருக்கலாமே! மூன்றாம் மாடிக்கு ஏறிவர

## கழக ஆட்சியாளர் வ.சுப்பையா பிள்ளையைச் சென்னை பாரதி இளைஞர் சங்கம் பாராட்டியது 6.12.1975

**கழக ஆட்சியாளரும் துணைவியாரும்**
**வலப்புறம் உயர்நீதி மன்ற நீதிபதி எஸ்.கிருட்டிணசாமி ரெட்டியார்**
**இடம்புறம் : சீர்காழி கோவிந்தராசன்**

## கழக ஆட்சியாளர் முத்துவிழா
## (7.10.1977)

ஆட்சியரும் மனைவியாரும் திருமுழுக்கு ஆடுதல்

வேண்டுமா? என்று வினாவுவார்க்கு, 'முடிந்ததால் தானே வருகிறேன்' என்று சொல்லிச் சொன்னவரைத் திணறவைத்த அயரா முயற்சியும் உண்டு.

**ஊதியம் கருதா உழைப்பு**

கழகம் தொடங்கிய நாள் முதல் 1944 ஆம் ஆண்டுவரை சென்னை முகவராகப் பணிசெய்தவர் தாமரைத் திருவினர். இவர் தொடக்கச் சம்பளம் ரூ. 35. 1927ஆம் ஆண்டுடி முதல் படிப்படியே உயர்ந்து 1944 வரை ரூ. 85 மட்டுமே பெற்றுவந்தார். இந்த மாதச் சம்பளம் அன்றிவேறு எவ்வூதியமும் எதிர்பாராமல் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டார். ஓர் அமைப்பினை வளர்க்கக் கருதுவார்க்கு வளமான எடுத்துக்காட்டாகும் இவர்கள் செயல்! 'அமைப்பை வளர்த்துவிட்டால் அதுவே தம்மை வளர்த்தல் ஒருதலை; மாறாகத் தம்மை வளர்க்த் தொடங்கிவிட்டால் அமைப்பு அமைப்பாகவே இராது' என்பது இவர்கள் உறுதிப்பாடு. இவ்வுறுதிப்பாட்டில் அன்றும் தவறியதில்லை; இன்றும் தவறியது இல்லை.

பொது அமைப்புகளும் கூட்டுப்பங்கு நிறுவனங்களும் நம் கண்காண எத்தனை எத்தனை சுரண்டல் களமாகக் - கொள்ளை நிலையமாகக் காட்சி வழங்குகின்றன! அவை வெற்றி பெற்ற அமைப்பாகத் திகழ்கின்றனவா? விரல்விட்டு எண்ணத்தக்க அளவில் கூட நம்மால் அத்தகைய அமைப்புகளைக் காணமுடியுமா? ஏன் முடியவில்லை? தம்மை வளர்த்தல், தம்மையே வளர்த்தல்என்னும் நோக்கத்தில் ஊறித் திளைப்பவரிடம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனத்தின் நிலைஅப்படித்தானே இருக்க முடியும்!

**விடுமுறை விரும்பாமை**

தொண்டிலே முனைந்தவர்க்கு விடுமுறையும் ஓய்வும் தொல்லையே போலும்! இரவும் பகலும் ஆய்வுக் கூடமே தஞ்சமாக இருந்த எடிசன்மேல் பேரன்புகொண்ட நண்பர் ஒருவர் ஆய்வுக்கூடத் தாழ்க்கோலை எடுத்துக்கொண்டு வெளியூர்க்குப் போய்விட்டார். சில நாள்கள் சென்று, நன்றாக ஓய்வெடுத்துக் கொண்டிருப்பார் நண்பர் என்னும் மகிழ்ச்சியில் திரும்பிய அவர் துடிதுடித்துப போனார். எடிசனைக் கட்டிலோடு கட்டிலாகக் கண்டார். காய்ச்சல் வாட்டிக் கொண்டிருந்தது. புலம்பிக் கொண்டிருந்தார் எடிசன்!

*நண்பர் வருந்தி மன்னிப்புக் கேட்டார். தாழ்க்கோலை எடுத்துக்கொண்டு ஆய்வுக்கூடம் சென்று கதவைத் திறந்தார் எடிசன். காய்ச்சல் பறந்தது. நண்பர் வியந்துபோனார். எடிசனுக்கு நலம் எது? நோய் எது? உழைப்பே உடல்நலம்! ஓய்வே நோய்! என்பதை உணர்ந்துகொண்டார். இவ் வெடிசனார் மறுபதிப்பே திரு.வ.சு.*

*அரசு அலுவலகமா, பள்ளிகளா, எத்தனை விடுமுறை நாள்கள்? இவர் பிறந்தநாள் - அவர்மறைந்தநாள் - இவற்றுக்கெல்லாம் விடுமுறை. எவர் நினைவு நாளோ அன்று அவரைப் பற்றித் தெரிய வேண்டாவா - அவர் புரிந்த தொண்டைச் செய்ய வேண்டாவா - அவர்நினைவே இல்லாமல் விளையாட்டு வேடிக்கைகளில் பொழுது போக்கி வெட்டித்தனமாக்கும் விடுமுறைகளால் என்ன பயன்? என்று அடுக்கடுக்காக வினாக்களைத் தொடுப்பார் செயல் வீரர் திரு.வ.சு.*

*“ஓய்வு என்பது ஒருவேலையை மாற்றி மற்றொரு வேலை பார்ப்பதே.” வேலையே இல்லாமல் இருப்பது ஓய்வு ஆகாது. உழைத்து அலுத்துப்போன உடலுக்கு ஓய்வு கட்டாயம் வேண்டும். உடற்பொறியின் தேய்மானத்தை ஈடுபடுத்தக் கட்டாயம் ஓய்வு வேண்டும். ஆனால், வேலையே இல்லாமல் விடுமுறையில் பொழுதைக் கழிப்பது உடலைப் பாழ்படுத்தும் என்று அறிவுரை கூறுவார்ஆட்சியார். ஆதலால் அவர் பாராட்டுகு உரிமையாக விளங்வேண்டியவர் ‘விடுமுறைத் தூங்கு மூஞ்சிய’ராக இருத்தற்கு இயலாது. எள் என்னுமுன் எண்ணெயாக இருப்பவராக இருத்தல் வேண்டும்.*

**நினைத்தவை நிறைவேற்றல்**

*நல்லனவே எண்ணல், எண்ணிவற்றைத் திண்ணியதாய் நிறைவேற்றல் என்பது திரு.வ.சு. வின் கடைப்பிடிகளுள் ஒன்று; தலையாய ஒன்று. எங்கும் காணற்கரிய அருங்கலைச் செல்வங்கள் பல கழகக் காட்சியமைப்பில் உண்டு என்றால் ஆட்சியாளரின் இக் கடைப்பிடியால் பெற்ற நலமேயாம். அவற்றைப் ‘படந்தொகுத்தலில்பட்டறிவு’ என்பதில் கண்டுள்ளோம். இங்கே ஒன்று :*

*வ.சு. பாளையங்கோட்டையில் படித்துக்கொண்டிருந்த காலம். ஒரு நாள் தம் உறவினர் வழக்கறிஞர்திரு. சி.பி. சுப்பையா பிள்ளையினிடம் கைக்குள் அடங்கும்படியான செகப்பிரியர்*

இயற்றிய ஒதெல்லோ நாடக நூலைக் கண்டார். அப்பொழுதில் நம் தெய்வத் திருக்குறள் இதே அளவில் அச்சிடப் பெறின் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணினார். அப்பொழுது கழகம் தோன்றப்போகிறது என்பதும் தெரியாது. கழகத்தில் பணிபுரியப் போகிறோம் என்பதும் தெரியாது. ஆனால் திருக்குறளைப் பற்றி எண்ணிய எண்ணம் கைகூட நாட்டவர்புகழ நிறைவேறிற்று அன்றோ! அம்மட்டோ? திருக்குறள் 'குறும்' பதிப்புக்கு முன்னோடியான அந்நூல் காட்சியில்இடம்பெற வேண்டும் என்று எண்ணிக்கொண்டே இருந்தார்வ.சு. 1959 இல்அது நிறைவேறியது.

1959 இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அரிய நூற்காட்சி ஒன்று நடந்தது. பல்வேறு அமைப்புகள் பங்குகொண்ட அக்காட்சியில் பச்சையப்பன் கல்லூரி அமைத்திருந்த காட்சிப் பகுதியில்தம்மைக் கவர்ந்த ஒதெல்லோ நாடகநூல் அளவிலானபன்னிரு நூல்கள் இருக்கக் கண்டார்.

அவற்றைக் கண்டு மகிழ்ந்த வ.சு. பச்சையப்பன் கல்லூரி நூலகர் திரு. செங்கல்வராயன் வழியே அந் நூல்கள் பித்தரபுரம் அரசருடையவையென்றும் அவர் பேரர் ஆங்குப் பயில்கின்றார்என்றும் அவர் கொணர்ந்து தந்தவையே அவை என்றும் அறிந்தார். அவரிடம்தம் வேட்கையை உரைத்து அந் நூல்களுள் ஒன்றாகிய "அதென்சு நகரத்துத் தைமதன்" (timon of Athens) என்னும் நாடக நூலைப் பெற்றுக்கொண்டார். அதற்குப் பின்னே கழகும் வைக்கும் காட்சிகளில் எல்லாம் அந்நூலை வைத்து, இந்த நூல்மான் மிகச் சிறிய அளவிலுள்ள கழகத் திருக்குறள் பதிப்பைக் கொண்டுவருவதற்கு வழி காட்டியது என்று அச்சிடப்பெற்ற குறிப்பு வைக்கப் பெறலாயிற்று. நினைவதுநல்கவேண்டும்; அது நிறைவேற வேண்டும் என்றால் நினைத்ததன் வண்ணமாகவே அவர் இருத்தல்வேண்டும் அன்றோ? அது வ.சு. அவர்களுக்கு இயற்கை ஆயிற்று.

**நாடியபொருள் கைகூடும்**

நாடியபொருள் கைகூடும் என்பது திரு.வ.சு. அவர்கள் நாடோறும் கூறும் நயவுரையாகும். அவர்கள் நாடிய பொருளெல்லாம் நாளும் கூடக் கண்டுணர்ந்தஉணர்வே இதனை வாயாரக் கூற வைக்கின்றது. பெருமைமிகு எலிசபெத்துப் பேரரசியார்இந்தியாவுக்கு வந்தார். அவருக்குப்

போப்பையர் மொழிபெயர்த்த திருக்குறள் பதிப்பை எழில்மிகு கட்டஞ் செய்து வழங்க உன்னினார். அதனை வைத்து வழங்கற்கு ஏற்ற வனப்புறு பெட்டகம் வேண்டுமென எண்ணிச் சென்னை மலைச்சாலையிலுள்ள விக்கேடாரியா கலைப்பொருள் அங்காடி சென்றார். ஆங்கே இந்நூலைவைத்து வழங்கற்கு என்றே திட்டமிட்டுத் தேர்ந்த கலை வல்லார் ஒருவர் கட்டளைபெற்றுச் செய்துவைத்ததுபோல் வனப்புறு புகழ்மிகு பெட்டகம் கண்ணுறக் காட்டிக் கவின்செய்தது! அரசியார் பெற்ற அன்புப் பொருள்களுள் அணிமிகு மணியாய் அழகுறுத்தியன அப்பேழையும் புகழ்மிகு நலும் என்னின், நாடிய பொருள் கைகூடும் என்பது மெய்ம்மையே யன்றோ!

**வெற்றியின் மையம்**

தமிழ்மொழிமேல் அன்புடையார் அனைவரும் தம் அன்பர் எனப் போற்றும் பொதுநிலைப் புகழாளர் திரு.வ.சு. அவர் தொடர்பினர் ஒரு சமயத்தார் அல்லர்; ஒரு குலத்தார் அல்லர்; ஒரு குடிவழியார் அல்லர்; ஒரு நெறியார் அல்லர். ஆயினும் அனைவரையும் ஒப்பமதித்து அவ்வர் நிலையே சாலும் எனக் கொள்ளும் பெருநெறியைப் பற்றிக்கொண்டவர் அவர்.

பல்வேறு பட்டவர்களையெல்லாம் கழக நூலாசிரியராகக் கொண்டு சிறப்புறுதலுக்கு அமைந்த அடிப்படை என்ன? என்று அவர்களிடம் வினாவிய வினாவுக்கு அவர்கள் அளித்த விடை:

இறைவன் எத்தனையோ வியத்தகும் ஆற்றல்களை எங்கெங்கோ எவரெவரிடமோ படைத்துள்ளான். அவ்வாற்றல் உடையவர் தனிவாழ்வுபற்றிக் கவலைப்படாமல் அவரிடம் அமைந்துள்ள ஆற்றல் நாட்டுக்குச் சிறிதும் குறையாமல் கிடைக்கச்செய்வது கடமை என மேற்கொண்டேன் என்பது. இம் மேற்கோளே இத்தனை வெளியீடுகளுக்கமைந்த வெற்றியின் மையமாகும்.

ஆம், ஒருவர் தனிவாழ்வு அவரொடும் மடியும். ஆனால் அவர் புலமையும் ஆற்றலும் அவ்வாறு மடிந்துபோனால் நாட்டுக்கு அன்றோ இழப்பு! எத்தகைய பெருநோக்கு ஆட்சியாளர் நோக்கு!

**தெரிந்து வினையாளல்**

எதனை எவரைக்கொண்டு செய்யவேண்டுமோ அதனை அவரைக்கொண்டு செய்வித்தல் செயல்திறனாகும். ஒரு

செயலின் வெற்றி அதற்கு அமர்த்தப்பெற்ற பொறுப்பாளரைப் பொறுத்ததேயாம். அவ்வமர்த்தத் தேர்ச்சியில் திரு.வ.சு. மிகத்திறம் பெற்றவர் ஆவர்.

அச்சகப் பொறுப்புக்குத் திரு. கோவிந்தராச முதலியரைத் தேர்ந்தார். அவர் வழியில் இவர் நின்றார். இவர் வழியில்அவர் நின்றார். இவர் வழியில் அவர் நின்றார். இவரும் அவரும் செயலில் ஒன்றாயினர். அரசினர் பரிசும் அச்சக அமைப்பின் பரிசும் ஓடித் தேடி வந்தன. அது கோவிந்தராசனார் சிறப்பா அவரைப் பொறுப்பாளர் ஆக்கிய ஆட்சியாளர் சிறப்பா?

எந்தநூல் எவர் எப்பொழுது அச்சிட்டார் - அது விற்பனைக்கு எங்கே கிடைக்கும்? எவரிடமும் கிட்டாத அரியநூல் எவ்வெவரிடம் உண்டு? இப்படிப்பட்ட செய்திகளையெல்லாம் விரல் நுனியில் வைத்திருப்பார்போல் ஒருவர் உளர். அவர் திரு. செல்வராசன்; நூல் விற்பனைப் பிரிவுப் பொறுப்பாளர் - அருங்காட்சி அமைப்புக்கு அவர்பட்டிருக்கும் பயன் பெரிதாகும்.

எந்த நூலில் எத்தனை படிகள் உண்டு - எந்த நூலை எப்பொழுது அச்சிடவேண்டும் - என்னென்ன வகையில் அட்டை கட்டலாம் - எப்பணியை விரைந்து செய்யவேண்டும் - எதனைத் தாழச்செய்யலாம் - இவையெல்லாம் கையில் கனியென வைத்துக் கொண்டு கடனாற்றவல்ல திரு. பார்த்தசாரதி, நூல் கட்டடப்பகுதிப் பொறுப்பாளர்.

“இத்தளிர் இன்று தளிர்த்தது, இப்பூ இன்று அரும்பியது, என்று முந்துறக் கண்டு சொல்லிச் சொல்லிப் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை பேரன்புக்கு ஆட்பட்ட தவத்தமிழ்ச் செல்வர் சாமிநாதையர்போல் ஆட்சியாளர்க்கு உவப்பானவற்றைத் தேர்ந்து தேர்ந்து செய்யவல்ல பொதுமேலாளர், மேலாளர்கள், நூலகர்கள், எழுத்தர்கள் பணியாளர்கள், வீட்டு வேலைக்காரர்கள். யான் கண்டனையா என்ற பெரும் புகழ்ப் பிசிராந்தையார் ஆவார். இவ்வகையில் ஆட்சியாளர் திரு.வ.சு.”

**தேர்ந்து செய்தல்**

செய்வன திருந்தச் செய்யவேண்டுமாயின் தேர்ந்து செய்யும் திறம் கட்டாயம் வேண்டும். தேர்ந்து செய்தலில் தனித் திறவோர் திரு.வ.சு.

அறிவியல் அறிஞர் கோ. து (G.D.) நாயுடுவுக்கு ஒரு பாராட்டுவிழா, சென்னையில் நடாத்தப்பெற்றது. வரவேற்புக் குழுவில் வ.சு. இருந்தார். பேரறிஞர் அண்ணா தலைமையில் விழா நிகழ்ந்தது. வரவேற்பிதழ் அமைப்புப் பொறுப்பை வ.சு. ஏற்றுக் கொண்டிருந்தார். அறிவியல்பெருமக்களாகிய என்றிபோர்டு, தாமசு ஆல்வா எடிசன், லூதர் பர்பாங்கு ஆகிய மூவர் திருவுருவப் படங்களையும் வாழ்த்திதழில் வளைய அமைத்து, அவற்றின் நடுவே நாயுடுவின் திருவுருவப் படத்தை வரையச் செய்திருந்தார். "இம் முப்போரறிஞர்களின் மூளைக் கூர்ப்பும் ஒருங்கே பெற்ற பெருமகனார் இவர்" என்னும் பாராட்டு மொழியை வாழ்த்திதழில் பொறிப்பித்திருந்தார். விழாத் தலைவரான அண்ணா, விழா நாயகர் நாயுடு, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதர் முதலிய பெருமக்கள் அனைவரும் வாழ்த்திதழ் அமைப்பைப் பெரிதும் போற்றினர். வ.சு. தேர்ந்து செய்யும் திறத்திற்கு ஈதொரு சான்று.

**எதிரதுபோற்றும் ஏற்றம்**

தமிழ்நாட்டில் ஆட்சிமொழி தமிழாகவே இருத்தல் வேண்டும். பயிற்றுமொழியும், சட்டமன்ற மொழியும், பிற பிறவும் தமிழாகவே இருத்தல் வேண்டும் என்னும் எண்ணம் நாட்டில்உருவாகாத நாளிலேயே உணர்ந்து உருப்படியான பணி செய்தவர் திரு.வ.சு.

ஆட்சிமொழிக்காவலர் திரு. கீ. இராமலிங்கனார் துணை கொண்டு நாடு உரிமை பெறுவதற்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே - ஆட்சிச்சொல் அகரவரிசை, நகராட்சிமுறை ஆகிய நூல்களை வெளியிட்டார்.

ஓய்வுபெற்ற மாவட்டப் பதிவாளர் திரு.செ. முத்துவீராசாமி நாயுடுவைக் கொண்டு "ஆவணங்களும் பதிவு முறையும்" என்னும் நூலை எழுதச்செய்து வெளிப்படுத்தினார்.

சட்டப்பேரறிஞர் திரு.மா. சண்முகசுப்பிரமணியம் அவர்களால் வெளிப்படுத்தப்பட்ட சட்டத்தொடர்பான நூல்கள், தமிழே நீதி மன்ற மொழிகயாக இருத்தல் வேண்டும் என்னும் உந்துதலால் ஏற்பட்ட படைப்புகள் ஆகும்.

"அறிவியற் கலைகள் தாய்மொழியில் பயிற்றப் பெற்றால்தான் அது தாய்ப்பால்போல் குழந்தை நலத்திற்குப் பயன்படும். இல்லையேல் புகட்டுப்பால் போலவே என்றும் இருக்கும். பொதுமக்களுக்கும் அறிவியல் ஒட்டுறவாக இராது"

என்னும் அழுத்த உணர்வால் அறிவியல் அறிஞர் குழுவை அமைத்து முன்னோடியாக ஆராய்ந்தவர் திரு.வ.சு. அறிவியல் வளர்ச்சி நாட்டமே திரு.என்.கே. வேலன் படைப்புகளுக்கும், திரு.பி.எல். சாமி இயற்றிய அரிய படைப்புகளுக்கும் தூண்டுதலாக இருந்தது. அன்றியும், தமிழில் பொன்னில் பதித்தமணியெனப்பொதிந்து கிடக்கும் அறிவியற் கருவூலத்தைத்தமிழரும்கண்டு கழிபேருவகை கொள்ளவும் தூண்டியது.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில்தேவாரம் திருவாசகம் முழங்கவேண்டாவா? திருவாய்மொழி ஓதவேண்டாவா? தமிழில் மலர் வழிபாடு நிகழ வேண்டாவா? என்னும் பேரார்வ வெளியீடுகளே மலர்வழிபாட்டு நூல்களும் போற்றி நூல்களுமாம்! தமிழில்வழிபாட்டை அரசு கொணர்தற்கு முன்னோடியாக இருந்து செய்தியாகவும் அறிக்கையாகவும் வெளியிட்டுத் தூண்டியவரும், நூலை வெளிப்படுத்தி வழிகாட்டியவரும் ஆட்சியாளர் வ.சு. அவர்களே! அரசு ஆட்சிக்குக் கழக ஆட்சி செய்தது இஃதென்க.

குழந்தைகளுக்கு ஏற்ற நூலா, முதியோர்கல்வி நூலா, வீட்டு நூலகத்திற்கு ஏற்ற நூலா - தொகுப்புத் தொகுப்பாக ஆக்கிக் குழந்தைக் கல்விக்கும், முதியோர் கல்விக்கும், வீட்டு நூலகத் திட்டத்திற்கும் அரவணைப்புத் தந்தவர், வருவதுணர்ந்து வளமாகச் செயலாற்றவல்ல வ.சு. அவர்களே!

**அறங்காவலர்**

நூற்பதிப்புக்கழகமாகத் தொடங்கியது சைவசித்ததாந்த நூற்பதிப்புக்கழகம். ஆனால் தொடங்கும்போதே அதன் வேர் அறத்தொடு தொடர்புடையதாக இருந்தது.

அறங்காவலராக வருபவர் அறிவோராக இருந்ததால் மண்ணுள் புதையுண்டு கிடந்த அந்த அறவேர் நீராலும் உரத்தாலும் வளம்பெற வழிகண்டார். அறவுணர்வில்லார் புகுந்திருந்தால் அறவேரைக் கல்லியிருப்பார்! அடிமரமும் ஆட்டங்ககாண வைத்திருப்பர்! பயன்மரம் உள்ளூர்ப் பழுக்குமாறு பாடுபட்டிருக்கமாட்டார்.

“கோயில் சிலையினைப் பூசை செய்வோர் கொண்டு விற்றலைக்” குறிக்கிறார் நாட்டுக்கவி பாரதியார். நாட்டு நடை முறையில் எத்தனை அறங்காவலர் கொள்ளையர் உருவில் நடமாடிக் கொண்டுளர்! எவரோ வைத்த பொருளை

வாரியுண்டு ஏப்பமிடும் அறங்காவலர் அவர்! இவரோ தாமே திட்டமிட்டு அறநிறுவனங்களை நிறுவி அதன்பயனை எவ்வளவு மிகுதியாக இந்த மன்பதை கொள்ளக்கூடுமோ, அள்ளிக்கொள்ளக்கூடுமோ, அவ்வளவுக்கு வாங்கி, அவ் வழங்கும் இன்பமே தன் இன்பமாய், அவ்வின்பத்தைப் பெறுவார் இன்பத்தைப் பார்ப்பதே தம்பேறாய் விளங்கும் அறங்காவலர்.

சிவஞான முனிவர் நூல்நிலையம், மறைமலையடிகள் நூல் நிலையம், மறைமலையடிகள் கலைமன்றம் - இவற்றின் பார்வையாளர் ஏடுகள் என்ன பறையறைகின்றன? இந்த அறங்காவலர் அரும்புகழையேயாம்.

**கழகமே மூச்சும் பேச்சும்**

“செய்யும் தொழிலே தெய்வம்” என்னும் தொடர் இப்பொழுது பழமொழிபோல வழங்குகிறது. ஆனால்அதனைத் தம் உயிர்மூச்சாகக் கொள்வது அருமையேயாம்!

கழகம் வேறு தாம் வேறு என எந்நிலையிலும் எப்பொழுதிலும் பிரித்துக்காண இயலாத தற்கிழமைப் பொருட்டாளராக இயங்குபவர் திரு.வ.சு. கழகத்திற்கு எத்துணையோ இடர்ப்பாடுகள், மோதல்கள், பிடுங்கல்கள், முட்டுப்பாடுகுள், வழக்குகள், அவற்றை யெல்லாம் வென்று வீறுடன் திகழ்பவர் திரு.வ.சு.

எத்தனையோ உரிமை அன்பை இழந்ததுண்டு. எத்தனையோ உறவையும் புறக்கணித்ததுண்டு. எத்தனையோ வசைகளை வாங்கிக் கொண்டதுண்டு. ஆனால் எவ்வெவற்றை இழக்க நேரினும், எவ்வெவ்விடர்களைச் சந்திக்க நேரினும் கழகத்தை - அதன் நல்வாழ்வை - அதன் வளர்ச்சியை, இழக்கத் துணியாத உரவோர் திரு.வ.சு.

கழக வாழ்வா? எம் வாழ்வா? என்னும் ஒரு வினா எழுப்பப் பெறுமானால் ‘எம் வாழ்வான்று, கழக வாழ்வே’ எனப் பளிச்செனச் சொல்லும் பண்பாட்டுக்கொள்கலம் திரு.வ.சு.

எல்லாம் துறந்தும் தமிழ் துறவா இளங்கோவைப்போல் எண்ணத்தக்க சீராளர், கழகத்தை இழக்க நினைத்தும் பார்க்க முடியாத’ இத்தாமரைச் செல்வர். அவர்பேச்சும் மூச்சும் கழகமே. “வழுக்கி வீழினும் சொல்லும் நா கழகமே”.

**நாட்டுநல நாட்டம்**

நாட்டில்மழை பொய்த்தது. நலிவு மிகுந்தது. வறுமையும்நோயும் வாட்டின. அந்நிலையில்நாட்டுநலங்கருதித் திருமுறை ஓதுதலில் தேர்ந்த ஓதுவார்களைக்கொண்டு மழைவேண்டிப் பாடுவித்தார். மழை வேண்டல், மழையே வா என்னும் நூல்கள் வெளியிட்டார். வானம் வறத்தலைச் சிறப்பொடு பூசனையால் சீராக்கச்செய்த செய்தி ஈது!

**தெய்வமணம் பரப்பல்**

முந்தையோர் அருட்பாடல்களை மதித்துப் போற்றுவதுடன் இக்காலத்துத் திருவருளால் கிளரும் அருட்பாடல்களையும் பரப்புதல் வேண்டும் என்னும் வேட்கையாளர் வ.சு., ஆதலால் திருவருளில் தோய்ந்து இன்னிசை பாடவல்ல அருட்கவி சேதுராமன் அவர்களைச் சென்னையில் பல திருக்கோயில்களிலும் திருவிசை எழுப்பத்தாமே அழைத்துச் சென்றார். அவ்விசைப்பாக்களைச் செந்தமிழ்ச் செல்வியில் வெளியிட்டு நிலைபெறுத்தினார்.

**தமிழிசை போற்றல்**

மொழிப்பற்றாளர் வ.சு. விற்குத் தமிழிசை நாட்டம் இருத்தல் இயற்கையே! பொருநையாற்று மணற்பரப்பில் பாரதியார் இசைத்த பாடலைத், தாம் உடன் இருந்துகேட்ட பேற்றை எண்ணி வியப்புறுவார்வ.சு. வேதநாயகம் பிள்ளை, நாவலர் பாரதியார் ஆகியோரும் உடன் இருந்து கேட்டவர்கள்! நெல்லை சுந்தரமூர்த்தி ஓதுவார் பண்ணிசை கேட்டுக் கண்ணீர் உகுத்துக் கனிந்த காட்சியை, இன்றும் உருக்கத்தால் காட்டும் ஒள்ளியர் வ.சு. அவர் எவ்விழாவுக்குச் செல்லத் தவறினாலும், தமிழிசை மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த பெருமகனார் அரசர் அண்ணாமலையார் தமிழிசைச் சங்க விழாவுக்கும் பண்ணாராய்ச்சிக் கூட்டத்திற்கும் செல்லத் தவறாச் செவ்விய நோன்பாளர். இந் நோன்பின் வெளிப்பாடே மலர் வழிபாட்டுப் பாடல்களை இசைத்தட்டில் கொணரத் தூண்டிய தாம்! இசைக்கு உருகுதலும்இறைவழிபாடுதானே! புரியா இசையில் உருக்கம் உண்டாகுமோ?

**இந்தி எதிர்ப்பு**

"விரும்பிக்கற்பார் கற்கட்டும்; கட்டாயப்படுத்த வேண்டியது என்ன? அப்படிக் கட்டாயப்படுத்தக்கூடிய மொழி

எதுவாக இருக்கவேண்டும்? நம் மொழியில் இல்லாத கலைவளங்களை யெல்லாம் பெறுவதற்கு வாய்ப்பாகவும், உலகெல்லாம்ஒருங்கு தொடர்பு கொள்ளுதற்கு உதவுவதாகவும் இருக்குமானால் நம் மொழிவளமும, நலமும் கருதி, ஏங்றறுக்கொள்ளக்கூடியதாம். இந்நாட்டிலே இருப்பவருள் ஒரு பெரும்பாலர் பேசுகிறார் என்பதற்காக - வடவர் ஆதிக்கம் வலுப்பதற்காக - நம் தலையிலே வெட்டிச்சுமையை வைக்கவேண்டமா?" என்னும் உணர்வு மீக் கூர்ந்தவர் திரு.வ.சு. ஆதலால் தொடக்க முதலே இந்தியை எதிர்த்து வந்துளார். எதிர்ப்பு இயக்கங்களில் பங்கு கொண்டுளார். மூவேந்தர் கொடியைப் படைத்துத் தந்துளார். துண்டு அறிக்கைகளும்,. செய்திக் குறிப்புகளும் அவ்வப்போது வெளியிட்டுள்ளார். ஒரு நூல் வெளியீட்டுக் கழகப் பொறுப்பாளர் இத்தகைய முனைப்பில் இருந்து பணி செய்துள்ள பான்மை இவ்வொருவர் வாழ்விலே காணக்கூடியதேயாகும்.

**ஆங்கிலக் கொள்கை**

"ஆங்கிலத்தில் நன்றாகப் படிக்கக்கூடிய ஆற்றல் உடையவர்க்கு அப் பயிற்சியை அழுத்தமாகப் பெறவதற்கு ஆங்கிலவர்களையே ஆசிரியர்களாகக் கொண்டு கற்பிக்கும் மேனிலைக்கல்லூரி ஒன்று கட்டாயம் ஏற்படுத்தவேண்டும். நாட்டில் உள்ள பேரார்வலர்கள் - பெருந்திறனாளர் ஆங்கே பயிற்சி பெகற வேண்டும். அரசின் உதவியால் ஆங்கத் தங்கிப் புலமையை வளர்த்துக்கொள்ளவும் வேண்டும். அத்தகையவர்கள் தாய்த்தமிழ்மொழியிலும் பற்றும் பயிற்சியும் உடையவராய் விளங்குதல் வேண்டும். இத்தகையவர்களால் தான் தமிழ்மொழி துறைதோறும் ஆக்கம்பெற முடியும். இக் கருத்தில்அரசும் அறிஞர் பெருமக்களும் தலையிட்டு ஆய்வு மேற்கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று தமக்குள்ள ஆர்வத்தை ஆட்சியாளர் கூறுவார். நோக்குவவெல்லாம் அவையேபோறல் என்பது காதல் துறை! அக் காதல்துறையைக் கன்னித் தமிழ்த்துறைக்குக் கொண்டு வளம்பெறுத்த நினைவு கூர்பவர்திரு.வ.சு. இதனை அறிஞர் உலகம் கருதுமாக! அரசு துணை நிற்குமாக!"

**தோற்றம்**

மிக வளர்த்தி என்றோ குட்டை என்றோ சொல்லமுடியாத அளவிட்ட உயரம்; சிவப்பு என்றோ கருப்பு என்றோ கூறமுடியாத பொதுநிறம்; தடிப்பு என்றோ ஒல்லி என்றோ

குறிக்க முடியாத நேர் உடல். படர்ந்தும் அகன்றும் வழுக்கையால் ஏறிய நெற்றி; எதனையும் ஊடுருவித் துளைத்துக் காணவல்ல கூரிய கண்கள்; எப்பொழுதும் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் அமைந்தநோக்கு; அகன்று ஒடுங்கி அமைந்த ஒற்றை நாடி; நுண்ணியதாகக் கேட்கத்தக்க எஃகுச் செவி; அளவிட்டு எடுத்து வைக்கும் அமைந்த நடை. இவை வ.சு. அவர்களின் வடிவமைப்பாகும்.

**உடை**

எளிமையான தூயவுடையே விரும்பி அணிவார். காலம் மாறி வந்துளது. நிலையும் மாறி வந்துளது. ஆனாலும் உடையில் மாற்றம் புகுந்தது இல்லை.தூய வெண்மையான நான்கு முழ வேட்டி; சந்தன வண்ணத்தில் கழுத்துப்பட்டி இல்லாத முழுக்கைச் சட்டை; கழுத்தில் தொங்கலாகப் போட்டு முன்னே இணையாகத் தொங்கிக்கொண்டிருக்கும் துண்டு. இவற்றையே காலமெல்லாம் மாற்றாமல் உடுத்துவந்துள்ளார்.

**உணவு**

உடையைப்போலவே உணவிலும் சீரிய கட்டுப் பாட்டாளர் வ.சு. பசியில்லாமல் உண்பது என்றும் இல்லை, கட்டாயத்திற்காகவும், உணவுக்கொள்கையை விட்டுத்தருவது இல்லை. பெருங்கூட்ட உணவுகளில் விருந்துகளில் பெரும்பாலும் ஒதுங்கிவிடுவதே வழக்கம். விடுதிப்பக்கம் எட்டிப்பார்ப்பதும் இல்லை. வீட்டுணவு கிடைக்க வாய்ப்பில்லாத இளந்தைப்பருவத்திலும் உருக்குமணி அடுப்பு வைத்துத் தாமே ஆக்கி உண்டார். கீரை உணவை மிக விரும்புவார். கீரை வகைகளை மாற்றி மாற்றிச் சமைக்கச்செய்வதுண்டு. வாடியும் உலர்ந்தும் போகத காய்களில் விருப்பு மிகுதி. மேனாட்டுக் காய்கறிகளில் சுவை காண்பதுண்டு. உடலுக்கு ஏற்று வராத காய்கறி, கிழங்குகள் எத்தகைய சுவையுடையன ஆயினும் அறவே ஒதுக்கிவிடுவார். உறைப்பு, புளிப்பு, உப்பு, இனிப்பு இவற்றை விரும்புவதே இல்லை. குறைந்த அளவிலேதான் இச் சுவையைச்சேர்ப்பார். மிளகுநீர் நன்கு பிடிக்கும். எண்ணெய்ப்பண்டம் உண்பது இல்லை. இட்டிலியே காலைக்கும் இரவுக்கும் உரிய உணவு. அதற்குப் பனைவெல்லத்தூளைத் தொட்டுக் கொள்வார். நெய் விரும்பிச் சேர்ப்பார். பழவகைகளில் கனிந்த வாழைப்பழம், ஆப்பிள் திரட்சை ஆகியவற்றை உண்பதுண்டு. பெயர்பண்ணினாற்போல இனிப்புப்பண்டமோ, உரொட்டியோ, மிட்டாயோ எடுத்துக்

கொள்வார். அரிசிச்சோறு குழைவாக இருக்க வேண்டும். இட்லி மெல்லிதாகவும்மெதுவாகவும், புளிக்காமலும் இருத்தல் வேண்டும். புதினா,. கறிவேப்பிலைத் துவையல்பிடிக்கும். காபி தேநீர் முதலியவற்றையோ புகைவகையையோ, வெற்றிலை பாக்கையோ அவர்கள் தொட்டதே இல்லை.குழந்தைகளுக்கு விரும்பும் உணவெல்லாம்தந்து சீரழிப்பதைக் கண்டிக்த் தவறுவது இல்லை.

**உடற்பயிற்றி**

பள்ளிப்பருவத்தில் உடற்பயிற்சிகளில் ஈடுபாடுகாட்டியது உண்டு. 'சடுகுடு' 'கிளித்தட்டு' 'நொண்டியடித்தல்' போன்ற விளையாட்டுக்களையும், பந்தாட்டங்களையும் ஆடியது உண்டு. இளந்தைப் பருவம் கடந்த பின்னர்க் கைக்கொண்ட உடற்பயிற்சிகள் மூன்றே. அவை ஆசனப்பயிற்சி, ஓட்டம், நடை என்பவை. நாள்தோறும் மாடிமேல் ஏறிக் குறித்த ஆசனங்களைத் தவறாமல் செய்வார். பள்ளிகளில் நடப்பது போல உட்காருதல், கை கால் நீட்டிச் சுருக்குதல் ஆகிய பயிற்சிகளையும் செய்வார் மாடியிலேயே சுற்றிச்சுற்றித் தாம் ஓடுவதுடன், தம் இல்லக் கிழத்தியாரும், குழந்தைகளும் இத்தனை சுற்றென்று எண்ணிக் கொண்டு ஓடிவரச்செய்வார். இவ்வோட்டம், நெடுங்காலம் தவறாமல் செய்த பயிற்சி, இவர் தம் உடல்நலத்தை இன்றளவும் காக்கின்றது எனலாம். அகவை முதிர முதிர இப்பொழுது கொள்ளும் உடற்பயிற்சி நடை ஒன்றுமேயாம். "மூளை உழைப்பாளர்க்குக் கட்டாயம் உடற்பயிற்சி வேண்டும். மறைமலையடிகளைப் பின்பற்றுங்கள், உடற்பயிற்சி செய்யுங்கள்" என்று அறிவுறுத்துவார் திரு. வ.ச. மூச்சுப்பயிற்சி வேண்டும் என்பதையும் விரும்பிக் கூறுவார்.

**படுக்கையும் இருக்கையும்**

தாமரைச்செல்வர் சாய்மானக் குறிச்சியைப் பயன்படுத்துவபது இல்லை. இடையே பள்ளம் விழும் மடக்குக்கட்டிலைப் பயன்படுத்துவதும் இல்லை. இருப்பதற்கே ஆயினும், படுப்பதற்கே ஆயினும் ஒத்த தளம் அமைந்த நாற்காலி, கட்டில்களையே பயன்படுத்துவார்.

நேரே நிமிர்ந்து உட்கார்வது தவிரித்துக் கூனி வளைந்து ஒரு நாளும் அமர்ந்திரார். அமரவும் படுக்கவும், மரத்தால் அமைந்த நாற்காலியையும் மரப்பலகை பரப்பிய கட்டிலையுமே பயன்படுத்துவார். இவற்றைப் பயன்படுத்துற்கும் கொள்கையும்

கடைப்படியும் கொண்டிருத்தல், திட்டமிட்ட அவர்கள் வாழ்வுக்கு எடுத்துக் காட்டாகவே அமையும்.

**படம்பாராமை**

நாடகத்தை விரும்பும் திரு.வ.சு. திரைப்படத்தைப் பார்ப்பதே இல்லை. சென்னை முகவராகப் பணிசெய்தபோது ஓரிரு முறை திரு. காழி. சிவ. கண்ணுசாமிப்பிள்ளை வற்புறுத்தலால் அவருடன் படத்திற்குச் செந்றதுண்டாம். அரங்கில் சென்றளதும் உறங்கிப்போவதே வழக்காம். துணைக்காகப் போனதை அன்றிப் பட விருப்பத்தால் போனது இல்லையே!

திருநெல்வேலி சுந்தரஓதுவார்மூர்த்தி மிக அன்பர். மதிப்புக்கும் உரியவர். அவர் பட்டினத்தார் என்னும் படத்தில் நடித்திருந்தார். அப் படத்தை அவரே வற்புறுத்தியும் போய்ப் பார்க்க வில்லையாம்.

**சிக்கனம்**

கட்டுப்பாடுடையவர்கள் வாழ்வு சிக்கன வாழ்வாகவே அமையும். காந்தியடிகளும், தந்தை பெரியாரும் சிக்கனச் சீர்மையரே. அவர்கள் சிக்கனம் நாட்டுநலம் கருதியதாகவே அமைந்தது. தாமரைச் செல்வரும் சிக்கன வாழ்வினரே. வேண்டாத வகைக்குத் தம் ஒரு காசும் போய்விடக்கூடாது என்பதில் உன்னிப்பாகவே இருப்பார். நெல்லுக்குப்போகும் நீர் புல்லுக்குப் பொசிந்தால்புல்லைவளர்த்து, நெல்லைக் கெடுக்கவே உதவியாம். ஆதலால், நல்ல உழவன் கடமை, நெல்லுக்கு மட்டுமே நீர் பயன்படுமாறு செய்தலாம். இக் கொள்கையில் தோய்ந்தவர்அவர்.

ஆனால் செய்யத்தக்க செலவைக் குறைப்பதே இல்லை. கடன் பட்டும் கடமைபுரியும் கடன் மேற்கொண்ட நிகழ்ச்சிகள் உண்டு. கையிருப்பைக் கணக்கிட்டுக்கொண்டு பயனுள்ள செயல்களில்ஈடுபடுவதில்லை. வருமானம் ஒன்றையே கருதிவிலை போகும் நூல்களை வெளியிட அவர்கள் ஒரு நாளும் நினைத்தும் இல்லை. மொழிநலம் பயக்கும் நூலாயின் எத்தகைய முட்டடிப்பிலும் எத்தகு நெருக்கடியிலும் வெளியிட்டே தீர்வர். இந்நூல் விலைபோகாதே! என்று எழுதிய ஆசிரியர்களே சொல்லிய நூல்களையும் தாமரைச்செல்வர் வெளியிட்டுள்ளார். இவ்வகையில் சிக்கனத்தைப் பார்ப்பது இல்லை.

சிக்கனம் வேறு, கருமித்தனம் வேறு, செய்யவேண்டிய செலவுக்கும் கையை உதறிவிடுவதே கருமித்தனம். அதனைத் திரு.வ.சு. அறியார். அவர்எதிப்பாராமல்செய்யும் உதவிகளை - மீண்டும் நினைத்துப்பார்த்து நன்றி வர்வார்என்று எண்ணாமல்செய்யும் உதவிகளை - நினைக்கும்போது, அவர்உள்ளத்தின் உயர்வும் -வள்ளன்மைநிலையும் ஒருங்கே புலப்படும்.

**எளிமைபோற்றும் இயற்கை**

உடையிலே எளிமை, உணவிலே எளிமை. உரையிலேயும் எளிமை. எழுத்து நடையிலேயும் எளிமை. எவரும் காணவரின் எளிதாகக் காணல், எங்கும் பகட்டிக்கொள்ளாமல்எளிதாகச் சென்று கண்டு வருதல், எளியவர்அன்பையும் அரவணைத்தல், ஊழியர்கள் மையத்திலும் எளிமையாகக் காட்சி தருதல்- இவை யெல்லாம் ஆட்சியாளர்க்கு இயல்பாய் அமைந்தவை.

பகட்டாகத் தம்மை ஒருவர் மதிப்பினும், அதற்கு நாணும் நனி எளியர் அவர்! அது ‘போலி’ என உள் நகைக்கும் உரவோர் அவர்.

**கண்டிப்பு**

கடமையில் கண்டிப்பானவர் திரு.வ.சு. கடமையில் உறவையும் நட்பையும் உரிமையையும் பின்னிப் பிணைத்து, வழவழா ஆக்கிக்கொள்ளார். அலுவலில் கண்டிப்பாக இருப்பார். அதே வேளை கனிவாகவும் இருப்பார். கண்டிப்பின் அடித்தளம் கனிவே என்பதைக் கண்டிக்கப் பெற்றவரும் உணருமாறு இருப்பார். கண்டிப்பு சிலவேளைகளில் கடிதலாகவும் மாறும்! அப்பொழுது கண்டிக்கப் பெற்றவர்க்கு இன்னொருவர் - முன்னே கண்டிப்புக்கு ஆட்பட்டவர் சொல்வார் - ஆட்சியாளர் கண்டித்துப் பேசி விட்டாரா? உன் மேல்அவர்க்குக் கனிவு வந்துவிட்டது என்பது பொருள். நீ நன்றாக இருக்கவேண்டும்; முன்னுக்கு வரவேண்டும் என்று அவர் முடிவு செய்துவிட்டார்” என்பர். கண்டிக்கப்பெற்ற வரும் அஃதண்மையென விரைவிலே உணர்ந்தும் கொள்வார். தந்தையின் கண்டிப்பும்தாயின் கனிவும் உடைமையால்ஒரு தாயுமானவர்அவர் என்பது அவரிடம் நெடுங்காலம் பணிசெய்து வருவார் கூறும் நன்மொழியாகும்.

**ஒரு வருத்தம்**

*"விலைவாசி கூடுகின்றது; அக்கூடுதலைக் காட்டிக் கூட்டம் திரண்டு போராட்டம் செய்கின்றனர். அரசு சம்பளத்தை உயர்த்துகின்றது. இங்கே வேலை பார்ப்பவர்களுக்கும் விலைவாசி கூடத்தான் செய்கின்றது. அதற்கு ஏற்றபடி சம்பளத்தை உயர்த்த முடியவில்லை விருப்பூதியமெனத் தரவும் இயலவில்லை. ககம் கூட்டுப்பங்கு நிறுவனம். ஆக்கந்தரும்நூலையன்றிப் பணத்திற்காக மற்றை நூலைவெளியிடாத நிறுவனம்; அறநிலையங்கள் பலவற்றையும் காக்கவேண்டிய நிறுவனம். பங்காளிகளுக்கு 6 விழுக்காட்டுக்குக் கூட ஆதாயம் தர இயலாத நிறுவனம். இந்நிலையில் தொழில்புரிபவர் சம்பளத்தை எப்படிஉயர்த்த முடியும்? இதுதீராத சிக்கலாகவே உள்ளது. போதாது என்று உணர்ந்தும் நிறைவேற்ற முடியாத ஒன்றாகவே உள்ளது" என்று பல்கால் ஆட்சியாளர் வருந்திக் கூறுவர். உண்மையான இவ் வருத்தத்திற்குத் தீர்வு ஏற்படின் ஆட்சியாளரினும் அலுவல்புரிவார் உவப்புறுவர் என்பது உண்மை.*

**பொறுத்தலும் மறத்தலும்**

*புலவர்கள் புலமை மிக்கவர்கள்; அதே பொழுதில் குழந்தை போலக் கரவின்றி மனத்திற்குத் தோன்றியதை அப்படி அப்படியே சொல்லவும் கூடியவர்கள். பொருள்முடையால்அப் பொருட்காதல் மீக் கூர்ந்தவர்கள். அத்தகையவர்கள் சிலவேளைகளில் கடுமையாக நடந்துகொள்வது இயற்கை. கண்டித்து எழுதிவிடுவதும் உண்மை! உணர்வுப் பெருக்கில் நின்று உரைப்பார்க்கு உணர்வுப் பெருக்கான உரையே மறுமொழியாயின் ஒன்றுபடுதல்உண்டோ? இத்தகைய பொழுதில் "இவர் தன்மை இருந்தவாறு இது? என் தீயூழ் இவரிடம் இது கேட்க வைத்திருக்கிறது என்று தம்மைத் தாமே நொந்துகொண்டு திரு.வ.சு. ஒதுங்கிவிடுவது உண்டு. நிகழ்ந்ததைப் பொறுத்து மறந்துவிடவும் செய்வர். பின்னே நான் இப்படி நடந்துவிட்டேனே என்று வருந்தும் நிலைக்கு ஆளானவர் தாமே உறவாட வருவதுண்டு. அவ் வேளையில் முன்னைய நிகழ்ச்சியை மறந்து மும்மடங்கு கெழுதகைமையொடு தழுவிக் கொள்ளல் ஆட்சியாளர்க்கு இயல்பு. அம்மட்டோ! அவர்க்கும் பழைய உரிமை அன்பால், உரிமையும் பாராட்டும் செய்து உவப்பதும் உண்டு.*

"பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று"

என்பதை உணர்ந்த உணர்வின் விளைவு ஈது.

**வெறுத்து ஒதுக்குபவை**

இழிந்த இசைத்தட்டுப்பாடல்களைக் கேட்டல், பண்பாட்டைக் கெடுக்கும் பாழ்நூல்களைப் படித்தல் ஆகியவை இவர்கனவிலும் கருதாதவை.

சீட்டு விளையாடுதல், பரிசுச்சீட்டு நடத்துதல், அதனை வாங்குதல், குதிரைப்பந்தயத்திற்குப் போதல், ஏமாற்று ஆட்டங்களில் ஈடுபடுதல் ஆகியவை இவர்களால் வெறுத்து ஒதுக்கப்படுபவை.

வீண்பேச்சுப் பேசுதல், வாளா பொழுதைக்கழித்தல், கேலி கிண்டல் நையாண்டி பண்ணுதல் ஆகியவற்றில் என்றும் ஈடுபட்டறியார்.

தக்கவர் தொடர்பை அன்றிப் பிறர் தொடர்பு வலிய வரினும் வலக்காரமாக நீக்கிவிடுவார்.

பொதுப்பணத்தைச் சுருட்டல், பொறுப்பைத் தட்டிக் கழித்தல், வட்டம்போட்டுக் கூச்சலிட்டு வேலைநிறுத்தம் செய்தல், அதிகாரிகள் முறைகேடாக நடத்தல், ஆசிரியர்கள் வழிகாட்டியாக இல்லாமை, அரசியல்தலைவர்களின் ஏமாற்று ஆகியவைஇவரால் வெறுத்து ஒதுக்கப்பெறுபவையாம்.

**தொகுப்பு**

'தொகுப்புக்கலை' என ஒருவர்முனைவர் பட்டத்திற்கு ஆராய்ச்சி மேற்கொள்ளலாம். அவ்வாய்வுக்கு மூலப்பொருளாக விளங்கத் தக்கவர் திரு.வ.சு.

எத்தனை எத்தனை தொகுப்புகள்! தொகுப்பு ஆர்வத்தில்இன்றும் அவர் ஒரு குழந்தை.

தொகுத்ததைப் பேணி வைத்தலில் ஒரு சரியான கருமி. தொகுத்ததை ஒழுங்குபடுத்திவைத்து அழகு காண்டலில் ஒரு கவின்கலைச்செல்வர்! தொகுத்ததை அனைவரும் கண்டு களிக்கக் காட்சியாக வைத்துக் காட்டுதலில் ஒரு பேருள்ள வள்ளல்.

அந்தக் காட்சியைக் கண்டு கழிபேருவகை கொள்வார்க்கு ஊடே ஊடே திரிந்து அதனைத் தொகுத்த அருமையை நகை முகத்தோடு விளக்குதலில் தொண்டர்சீர்பரவுவார்.

கொங்குதேர்வாழ்க்கைஅஞ்சிறைத் தும்பியாகக் கலைச் செல்வத்தைத் தொகுத்து வைத்துள்ள வ.சு. அவர்களுக்கு அத்தனை பல்கலைக்கழகங்களும் பாராட்டு முகத்தான் முனைவர்பட்டம் வழங்கலாம்.

தொகுப்பு வகைகள்தாம் எத்துணை எத்துணை! நூல்களா? படங்களா? கடிதங்களா? கையெழுத்தா? இவை எல்லாமும்; இன்னும் ஒன்று! கடிதங்களின் முகவரியிட்ட உறைத் தொகுப்புங் கூட உண்டு! அவற்றுள்ளும் ஆய்வுக் குறிப்புகள் உண்டு! இத்தொகுப்புகளைக் கவின்கலைக் காட்சியாக்கி வைத்துள்ள அழகே தனியழகு!

**‘நூற்காட்சி’**

பள்ளிகளில் நூற்காட்சி வைத்துப் பயிலும் வேட்கையைப் பச்சிளம் பருவத்தே தூண்டவேண்டும் என்பது பட்டறிவு மீக்கூர்ந்த வ.சு. அவர்களின் பேராவல். ‘நாற்றங்காலிலேயே நன்றாக வாராத பயிர் நட்டபின்னர் நன்றாக வளருமோ?’ என்னும் தெளிவால், பள்ளி நூற்காட்சித் திட்டத்தைத் தொடங்கினார். ஆர்வத்தால் நடாத்தினார். அரசின் அரவணைப்பும், பள்ளிகளின் அரவணைப்பும் இயைந்து உதவினால்தானே பெரும்பயன் விளையும்? அஃதின்மையால், ஆர்வம் அமைவதாயிற்று. படிக்கத் தூண்டுதலே பள்ளியின் பணி என்னும் விழிப்பு, கற்றோர்க்கு உண்டாகும் போது நூற்காட்சித் திட்டத்தின் அருமை கட்டாயம் புலப்படும்.

**பேச்சு**

வேண்டும் கருத்தையெல்லாம்அள்ளிக்கொட்டும் பேச்சு, ஆர்வத்தின் உந்தல், ஆக்கமே நினையும் நெஞ்சின் வெளிப்பாடு - எல்லாம் புலப்படும்பேச்சு, கொச்சையும் வழுவும் கலவாத நடை, உணர்ச்சிப் பெருக்கும் உள்ளத்தில்உறுத்தலும், உழைத்த உழைப்புக்கு ஏற்ற பயன் இல்லையே என்னும் ஏக்கமும் எல்லாம் கூடிய தடையற்ற பேச்சு, உள்ளளத்தில் உள்ளதை ஒளியாமல் மறையாமல் கேட்பவர் நினைப்பைப் பற்றியும் கவலைப்படாமல் கொட்டித் தீர்க்கும் ஆர்வப் பேச்சு, இவை ஆட்சியாளர் பேச்சு.

**எழுத்து**

*எந்த எழுதுகோலைக் கொண்டு எழுதினாலும், எந்த நிலையில் இருந்து எழுதினாலும், எந்த அகவையில் எழுதியது என்றாலும் மாறாமல் ஒன்றுபோலவே அமைந்து தமக்கென்றே அழுந்திப் போய்விட்ட கையெழுத்து! எத்தனை நூறாயிரங் கடிதங்கள் எழுததியதோ அந்தக் கை! கடிதத் தொகுப்புக் கட்டுக் கட்டாகத் தொகுத்து வைத்துள்ள அந்தஏந்தல் எழுதிய கடிதங்கள் கழகத் தொடர்புடைய புலவர்கள் பெருமக்கள் இல்லங்களிலெல்லாம் கட்டுக் கட்டாக இருக்கும். கழக ஆட்சியாளரைப் போல் கடிதத்தால் கடமையை நிறைவேற்றிக் கொள்ள வல்லவர்கள் அரியர்! நாளைக்கு முப்பது நாற்பது கடிதங்கள் எழுதுவார் போலும்.*

**ஒழுங்கு**

*திரு.வ.சு. ஒழுங்கர்; ஒழுக்கத்தை மதிப்பவர்; ஒழுக்க மின்மையைக் கண்டிப்பவர். ஏன்? அவர் ஓர் ஒழுங்கர்.*

*எந்தப் பொருள் எங்கே எந்த நிலையில் இருக்க வேண்டுமோ, அந்தப் பொருள் அங்கே அந்த நிலையில் இருப்பதே ஒழுங்கு! யார் எதை எப்படிச் செய்தல் வேண்டுமோ, அதை அவர் அப்படிச் செய்தல்ஒழுங்கு! வீட்டை அலுவலகமாகக் கருதுதல் ஒழுங்கன்று! அவ்வாறே அலவலகத்தை வீடாகக் கருதுதலும் ஒழுங்கன்று. இரண்டு இடங்களும் இரண்டன் பணிநடைமுறைகளும் வேறுபட்டவை. குடும்ப உரிமையன்பு கொஞ்சிக் குலவுதல் பணிக்கு நல்லதே! ஆனால், அது குடும்பமே ஆகிவிடக்கூடாதே! ஆதலால் குடும்பத்திலேயே அலுவலகப் பணி செய்தால் அவர் அலுவலராகவே இருத்தல் வேண்டும். இப்படி எத்துணைப்பேர் கருதுவர்? திரு.வ.சு. கருதுவார்.*

*அவருக்குத் தலைவர் - ஆட்சித் தலைவர்- இலர். அவரே ஆட்சித் தலைவர்! ஆனால் மனச்சாட்சி அவர்க்குத் தலைவர். ஆதலால் அதற்கு மதிப்புந் தந்து எடுத்த பணிக்கு இணை யில்லாப் பெருமை சேர்க்கின்றார். இவ்வாறு அன்றி அவரால்வேறு வகையில் இருக்க இயலாது! ஏனெனில், அவர்தம் உணர்வொடும் உயிரொடும் ஒன்றிப்போன நடைமுறை இது.*

**குடும்பக் கட்டுப்பாடு**

*எங்கும் சிவப்பு முக்கோணப் படங்கள், அறிக்கைகள், விளக்கங்கள், விளம்பரக்ஙள். இவை இன்னவென அறியாத காலத்தே இத் திட்டத்தைத் தாமே விரும்பி ஏற்றுக்கொண்டவர் திரு.வ.சு. அவருக்கு அமைந்த துணையாக வாய்ந்தவர் 'அப்பனுக்கு ஏற்ற அம்மை.'*

*இரண்டே பிள்ளைகள்; இனி மக்கள் போதும்! இதற்கு மருத்துவமா? மாத்திரையா? மனக்கட்டுப்பாட்டில்வாராத குடும்பக் கட்டுப்பாடு குறைபாடே! அறிவறிந்தஅவர்கள், குடும்பக்கட்டுப்பாட்டை மனக்கட்டுப்பாட்டால் காத்தனர். தங்கள் அளவில்சிக்கெனப் பிடித்த கொள்கை தம் அன்புக்குரிய குடும்பங்களிலும் தவழ ஆர்வமுற்றனர். பலர் அடிக்கடி குழந்தைகளைப் பெற்றுத் தவழவிட்டுக்கொண்டு இருப்பதைக் கண்டு அறிவுரை கூறுவதுண்டு. 'எப்படி இத்தனை பிள்ளைகளைக் காக்கப் போகின்றீர்கள்? இவர்களை ஆளாக்கிவைக்கப் போகின்றீர்கள் - இதனோடாவது நிறுத்திக் கொள்ளுங்கள்' என்று வ.சு. கூறுவார். கண்டித்தும் கூறுவார். இதனை வரவேற்றவரும் உண்டு. இவரா நம் குடும்பத்தைக் காக்கப் போகிறார்? நமக்குத் தெரியாதா? என்று உள்ளே புழுங்கிக் கொண்டவர்களும் உண்டு. இத்தகையவர்களுள்ளும், 'அன்றே அறிவு சொன்னார், அதைக் கேட்டிருந்தால் இப்பொழுது இவ்வளவு துன்பப்பட மாட்டோம்' என்று இன்று சொல்பவர்களும் உண்டு. காலம் கடந்து நினைத்தால் என்ன? நினையாமல் போனால் என்ன? எல்லாம் ஒன்றே!*

**மெய்ப்புப் பார்த்தல்**

*எத்தனைமுறை துருவிப் பார்த்தாலும் ஏமாற்றக் கூடியது மெய்ப்பு. ஆனால், அதனைஅறப்பார்த்தலில் தேர்ச்சிமீக் கூர்ந்தவர் திரு.வ.சு. அச்சகத்தல் ஒருமுறை மெய்ப்புப் பார்க்கப் பெறும். மூலப்படியுடன் ஒப்பிட்டுக் கழகப் புலவர்களால் மெய்ப்பு ஒருமுறை பார்க்கப்பெறும். நூலாசிரியர் அல்லது பதிப்பாசிரியராலும் ஒருமுறை பார்க்கப்பெறும். இத்தனை முறை பார்த்தாலும் இறுதியாக ஒரு பார்வை தாம் பாராமல் எந்த ஓர் ஆங்கில நூலும், தமிழ்நூலும் அச்சிடுதற்குக் கட்டளை தருவதில்லை வ.சு. பிறர் கண்களை ஏமாற்றிய பிழையும் இவரிடம் தப்பிப் பிழைப்பதும் இல்லை.*

*கழகப் புலவராக இருந்து மெய்ப்புப் பார்த்த திரு.மு. சதாசிவம் சொல்கின்றார் :*

*“கழக நூல்கள் பிழையின்றி வருவதற்கு முக்கிய காரணம் ஐயா அவர்களே. புலவர்கள் மூவர் திருத்தியபின்னும் ஏதாவது அச்சுப்பிழை இருக்கிறதா என்று துருவிப்பார்த்துப் பிழை கண்டுபிடித்துக் காட்டும்போது நாங்கள் வியந்திருக்கின்றோம். அவர்களுடைய ஆழ்ந்த இலக்கண அறிவையும் கண்டு போற்றியிருக்கின்றோம். ஐயா அவர்கள் படுக்கையில் கூடப் பிழை திருத்துவதற்குரிய அச்சுப்படிகள் எப்போதும் இருக்கும். தூக்கம் வரும் வரையிலும் பிழை திருத்துவார்கள். தூங்கி எழுந்ததும் பிழை திருத்துவார்கள். உடல்நலமில்லாது போனாலும் வெளியூர்களுக்குச் சென்றாலும் பிழை திருத்தும் படிகளைக் கையிலே வைத்துகொண்டிருப்பார்கள்!”*

*கழகவழி 1700-க்கு மேல் நூல்கள் வெளிவந்துள. அவ்வளவும் இவர்களால் மெய்ப்புப் பார்க்கப் பெற்றவையே. ஆயினும் இன்றுவரை கண்ணாடி போட்டுக்கொள்ளாமை வியப்புத்தானே!*

**பெயர் சூட்டும் பெற்றிமை**

*பெயர் சூட்டுதல் என்பது ஒரு தனிக்கலையாகும். நூலின் அக அழகும் புற அழகும் நன்றாக இருப்பதுடன் பெயரும் உளம் கவருமாறு அமைதல் தனிச்சிறப்பாகும். பதிப்புக்கலையில் தம்மைப் பதித்துக்கொண்ட பான்மையால், ஆட்சியாளர் அவர்களுக்குப் பெயர் டேட்டும் பெற்றிமை இய்லபாகப் பழகிப்போன கலைத்திறம் ஆயிற்று.*

*மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்துப் புரவலராகவும் திகழ்ந்த பாண்டித்துரைத்தேவர் ‘சைவமஞ்சரி’ என்றொரு நூலும் பன்னூல் திரட்டு என்றொருநூலும் தொகுத்து வெளியிட்டிருந்தார். அந் நூல்களைவிரிவாக்கிக் குறிப்புரையும் தந்து சிறந்த முறையில் கழகவழி வெளியிட்டனர். முன்னதற்குச் ‘சிவநெறிச் செய்யுள் திரட்டு’ என்பதும், பின்னதற்குப் ‘பன்னூல் பாடல் திரட்டு’ என்பதும் பெயர்.*

*அற நூல்களில் காணும் உவமைகளைத் தொகுத்து மூன்று மடலங்களாக வெளியிட்ட தமியேன் நூலுக்கு உவமைவழி அறநெறி விளக்கம்’ என்றும், பெருமக்களின் பள்ளிப்பருவ நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி விளக்கும் ஒரு நூலுக்குப் பள்ளிப் பருவ நிகழ்ச்சிகள் என்றும் பெயர் சூட்டிய பெருமை திரு.வ.சு. அவர்களேயே சாரும்.*

சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் என்றெல்லாம் பெயர் விளக்கம் செய்தவர்கள் ஆட்சியாளர் அவர்களே.

சென்னை செமினி திரைப்படப்பிடிப்பகத்தின் முன்னே அமைந்துள்ள ‘பிளை ஓவர் பிரிட்சு’ என்னும் பாலத்தின் பெயரை அதன்மேல் போய்க்கொண்டு இருக்கும்போதே இதைப் ‘பறந்தோடிப்பாலம்’ என்று சொல்லலாம் என்றார் திரு.வ.சு.

பேரறிஞர் கமில் சுவலபெல் என்னும் பேரறிஞர்க்குரிய பெயர்ப் பொருண்மையை அவர் வழியே அறிந்து “நிரம்ப அழகிய கமிலர்” எனப் பெயர் சூட்டித் தாமும் உவந்து அவரும் உவக்கச் செய்தார். அவர் அப் பெயரை ஏற்றுப் போற்றி வருவதும், தமிழில் கையெழுத்திடுவதும் கண்கூடு. ஒரு நிரம்ப அழகிய தேசிகர் பெயர் ஒரு செக் நாட்டு அறிஞர் பெயரால் ஒட்டிக் கொண்ட பெருமை வ.சு. பெயர் சூட்டும் பெற்றிமையால் வாய்த்ததேயாம்.

நெல்லை மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்த பெருமகனார் சிவஞானமுனிவர் பெயர் விளங்க, நெல்லையிலே ‘சிவஞான முனிவர் நூல் நிலையம்’, குமரகுருபரர் பெயர் விளங்கக் குமரகுருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளி’, தனித்தமிழ்த் திருவாட்டி நீலாம்பிகையார் பெயர் விளங்க நீலாம்பிகை பல்துறைப் பயிற்சிப் பள்ளி இன்னவையெல்லாம் பொருத்தம் கண்டு போற்றிவைத்த பெயர்கள் அல்லவோ!

எத்தனை பேர் தாங்கள் பெற்ற பிள்ளைக்குப் பேர் தேடி அலைகிறார்கள்? இவரோ மக்கட்பெயர் அகரவரிசை, இல்லப் பெயர் அகரவரிசை என்றெல்லாம் நூற்கொடை செய்தவராயிற்றே!

**வடிவமைப்பு வனப்பர்**

அலுவலகத்தில் இன்ன இன்ன அமைப்புச் செய்ய வேண்டும்; நூல்நிலையத்தில் இன்ன இன்ன வசதி செய்ய வேண்டும். இப்போழையின் அமைப்பு இப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் எண்ணி எண்ணித் திட்டப்படுத்துவார். முன்வடிவாக (போலிகையாக) வரைந்து காட்டுவார்; முன்வடிவாகச் செய்து காட்டச் செய்து திருத்துவார். ஒவ்வொரு சிறு பகுதியிலும், கலைமணம் கமழ

விரும்புவார். உறங்கும் வேளையில் காணும் கனவும் இதுவாகவேஇருக்கும். ஒன்றைப் புதிதாகச் செய்ய எண்ணிவிட்டால் அதன் வண்ணமாக இருப்பதே திரு. வ.சு.வின் இயல்பு. இத் திறத்தால் உருவாக்கப் பெற்றவையே பல்வகை நூற்பேழைகள்.

ஒரு பேழையில் எத்தனை தட்டுகள் இருக்க வேண்டும், ஒரு தட்டில் எத்தனை அட்டைப்பெட்டிகள் இருக்க வேண்டும், அட்டைப்பெட்டி ஒன்றில் எத்தனை நூல்கள் இருக்க வேண்டும், அந்த நூல்கள் எல்லாம் எவ் வகையால் ஒத்த உயர அமைப்பில் துலங்கவைப்பது, அந்நூல்கள், நூலடங்கிய பெட்டிகள் ஆகிய வற்றின் முதுகமைப்பு எப்படி இருத்தல் வேண்டும் என்றெல்லாம் பல்கால் எண்ணிப் பலப்பல திருத்தங்கள் செய்து குறையிலா நிறைவுடன் ஆக்கித் தந்து உவப்புறுவார்! இவ் வகையில் வ.சு. ஓர் வடிவமைப்பு வனப்பர் ஆவார்.

கோவை திவான் பகதூர் இரத்தின சபாபதி முதலியார் திருக்குறள் ஆர்வலர்; பல்வேறு பதிப்புகளையும் வாங்கிப் போற்றும் பண்பினர். அவரைத் திரு. வ. சு. கண்டார். தாம் திருக்குறள் பதிப்பொன்று கொணர்ந்திருப்பதைக் கூறினார். அப் பதிப்பு, தம்மிடம் இருப்பதைக் கூறி வாளா விருந்தார் சபாபதியார். வ.சு. அவர்கள் தாம் கொணர்ந்த திருக்குறள் பதிப்பைக் காட்டினார். அதன் அச்சும் அட்டைக்கட்டு வனப்பும் சபாபதியாரை ஆட்கொண்டன; அமர்ந்திருந்தவர் எழுந்தார். அப்படியே ஆர்வத்தால் வ.சு.வைத் தழுவிக் கட்டிக்கொண்டு களி கூர்ந்தார். உவகை மீதூரப் பதிப்புச் சிறப்பைப் பாராட்டினார். வ.சு. அவர்களின் வடிவமைப்பு வனப்புக்கு வாய்த்த சான்றுகளுள் ஈதொன்று.

**நினைவும் மறதியும்**

‘பஞ்சலட்சணம் என்னும் நூலைப்பற்றிக் கேள்விப் பட்டுள்ளேன். படித்தது இல்லை’ என்று ஒருமுறை தாமரைச் செல்வரிடம் கூறினேன்.

“பஞ்சலட்சணத் திருமுக விலாசம்” என்பது அதன் பெயர். வில்லியப்பிள்ளை என்பவரால் இயற்றப்பெற்றது. மதுரையில் குருசாமிக் கோனார் என்பவரால் வெளியிடப்பெற்றது” என்றார்கள். அவர்நினைவாற்றல் எனக்கு மிக வியப்பாக இருந்தது.

*நன்றாக நினைவு வைத்திருக்கிறீர்கள் என்றேன். ஏதோ இது நினைவில் வந்தது. ஆனால் எனக்கு நினைவாற்றலே கிடையாது. மிக மறதி உண்டு. வைத்த பொருளைத் தேடுவதிலேயே பெரும் பொழுது போய்விடுகின்றது. அதிலும்அகவை முதிர முதிர மறதியும் முதிர்ந்து வருவதை மிக உணர்கின்றேன். தாழ்க்கோலையோ எழுதிய குறிப்பையோ எங்கேயோ வைத்து விட்டுத் தேடு தேடு என்று தேட நேர்கின்றது. மற்றவர்களை ஏவியும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. எனக்கு அது பெருங்குறை" என்று கூறினர்!*

*இந்த மறதிக்கு இடையேயும் இத்தனை செயற்கருஞ் செயல்களைச் செய்துள்ளார்கள் என்றால், நல்ல நினைவுத்திறமும் வாய்க்கப் பெற்றிருந்தால் எத்தகைய செயல்களையெல்லாம் செய்திருப்பார்களோ என எண்ணினேன். நினைவாற்றல் மிகப் பயன்படுவதே; ஆனால், வெறும் நினைவாற்றலால் என்ன பயன், செயலாற்றல் இல்லாதபோது!*

**உயிரிரக்கம்**

*'உயிருடைமைக்கு அடையாளம் உயிர் இரக்கம்: கண்ணோட்டம் காட்டுவதே கண்: கண்ணோட்டம் இல்லாத கண்புண்ணே. உயிரியல் என்பது அருளியலே.*

*உயிருடையவரே உயிர்மேல் இரக்கம் காட்டல் கடமையாக இருக்கவும், உயிர்தந்த இறைவனுக்கு உயிர்ப்பலியூட்டல் ஒவ்வுமோ? பெற்ற தாய்க்கே பிள்ளையைப் பலியூட்டுவதோ?*

'மைந்தருள் ஊமை மகனை ஒருமகன்
வாளால் அரிந்து கறி சமைத்தால்
தந்தையும் உண்டு களிப்பதுண்டோ?'

*என்று வினாவினார் கவிமணி! அவர் அருளுள்ளம் அழுது பாடிய பாட்டு இப் பாட்டு. திரு.வ.சு. அழுது பாடவில்லை. அழுது வடிந்த எருமையைக் கொலையில் இருந்து காக்கத் துணிந்து முயன்றார். இம் முயற்சி வெற்றி கண்டது. எருமைப்பலி ஒழிந்தது; அருமைப் பணி - ஆருயிர்ப் பணி - வென்றது.*

*எருமைப்பலி நிறுத்தம் கழகப்பணியோ? கடவுள் பணி! கழகத்தைக் கடவுட் கழகம் ஆக்கும் திறத்திற்கு ஒருசான்று ஈது.*

**ஆவியுலகத் தொடர்பு**

ஆவியுலகு வாழ் மறைமலையடிகளார் முதலிய பெருமக்கள் தாம் செய்யத்தக்க செயல்களைச் செய்வதற்கு வழிகாட்டியாகவும், தூண்டுதலாகவும், அவற்றைத் துலங்கச் செய்பவர்களாகவும் இருப்பதை உணர்ந்தார் வ.சு., அவ் வுணர்வைப் பலர் ஏற்று கொள்ளாது ஒழியினும் தமக்குச் செவ்வையாகத் தோன்றியமை ஒளிவு மறைவு இன்றி வெளியிட்டார். ஆவியுலகத் தொடர்பான நெல்லை திரு.ந. குற்றாலிங்கம்பிள்ளை வழியே கருத்தறிந்து சில அரிய செயல்களில் ஈடுபட்டு வெற்றிகண்டார். இதனை அவருக்குக்கூட இதைப்பற்றி முன்பு அவ்வளவாக நம்பிக்கை இல்லை. அவருக்குத் தனி அனுபவம் வந்து அவரே அதன்படி நடந்து பார்த்த பிறகுதான் மறைமலையடிகள் தம் உள்ளே நின்று விளக்குவதையும், அவர் சொல்வதெல்லாம் நடந்தேறி வருவதையும் அனுபவத்திற் கண்டு அதன்படி நடந்து வருகின்றார்'' என்று குறிப்பிட்டார் மதுரை ஆதீனம் சோமசுந்தர அடிகளார்.

**ஒன்றே ஒன்று**

கழக ஆட்சியாளர் தாமரைச்செல்வர் வ.சு. அவர்கள் குணநலங்களையும், கழகப் பணிகளையும் அணி அணியாகப் புகழும் அறிஞர் பெருமக்களும் அரசுத்துறைப் பெருமக்களும், பொதுநிலை பெருமக்களும் உளர். அவர்கள் பாராட்டுகளெல்லாம் இதுகாறும் வெளியிட்ட கழக மலர்களில் இடம்பெற்றுள. ஆங்குக் கண்டு அகமகிழ்க. ஆயின் ஒரு சிலர் சில குறைகளை அங்கும் இங்கும் மறைவாகவும் முனகலாகவும் கூறுவதைக் கேட்டதும் உண்டு அப்பொழுது எல்லாம் நினைவுக்கு ஒன்றே ஒன்று வரும்! குறைச் சொல்லித் திரியும் இவர்களில் எவராவது, அல்லது இவ்வளவு பேரும் சேர்ந்தாவது இப் பெருமகனார் இந்த மொழிக்கு நாட்டுக்கும் இனத்துக்கும் செய்துள்ள தொண்டில் ஒரு நூற்றி ஒரு பங்காவது செய்தது உண்டோ? உண்டோ? என்பதேஅது குறை சொல்ல எவருக்குத்தான் முடியாது! கால்பட்டாலும் குற்றம், கைப்பட்டாலும் குற்றம்' என்ற பழமொழி யாருக்கு தெரியாது?

## 33. விழுமிய வேட்கை

*(நெஞ்சின் வெளிப்பாடு, ஒளிவு மறைவு இல்லாமல் கூறும் சொல்லே. அன்புடையாரை அவர் தம் புன்கணீர் வெளிப்படுத்துவதுபோல் உள்ளத்து வேட்கையை உணரச்சி பொங்கக்கூறும் உரையே வெளிப்படுத்தும். எவ்வெவர் எத்தகையர் என்பதை வெளிப்படுத்த அமைந்த வெளிப்படைச் சான்று சொல்லைப் போல் ஒன்றில்லை.)*

கழக ஆட்சியாளர் பெருகிய வேட்கையர்; விழுமிய வேட்கையர். ஆக்கமெலாம் தழைக்க வேண்டும்; அருமையெலாம் செழிக்க வேண்டும்; கலைகளெல்லாம் கமழ வேண்டும்; கருதியவெலாம் முடியவேண்டும் - என்னும் பெருவேட்கையர்; விழுமிய வேட்கையர்.

அவரைக் கண்டு உரையாடிய எவரும் ஒருசில நொடிகளுக்குள்ளே அவர்தம் உள்ளத்து ஊற்றெடுத்து வெள்ளமெனப் பாயும் உணர்ச்சிப் பெருக்கில் ஒன்றிப்போவர்! எத்தனை முறை சந்தித்தாலும் அத்தனை முறையும் முன்னே உரைத்தோமே - என்றும் எண்ணாமல் வேட்கையைப் பொழிந்து தள்ளுவார். அவ்வேட்கையிடையே அவர்கள் கொண்ட ஏக்கமும் உவர்ப்பும் ஒருங்கே வெளிப்படவும் செய்யும்! எங்கும் எவரிடமும் எதிர்காலத்தில் எய்த வேண்டிய வேட்கையை உரைக்கும்போது,

“இன்றுசெலினும் தருமே; சிறுவரை
நின்று செலினும் தருமே, பின்னும்
முன்னே தந்தனன் என்னாது துன்னி
வைகலும் செலினும் பொய்யல னாகி”

வழங்கிய பிட்டங்கொற்றனையும் மட்டந்தட்டும் நிலையில் நாட்டு நல வேட்கையை நாட்டுவார்! எத்தனைமுறை சொன்னாலும் அத்தனைமுறையும் அவர்களுக்கு அஃது ஆர்வப் பெருக்கே! நூற்றில் ஒருவருக்காவது, நூற்றில் ஒரு பங்காவது உணர்வைத் தூண்டி உருப்படியான செயலாக்க உதவாதா

*என்னும் உள்ளுணர்வே அஃது என்பது ஆர்வலர் நெஞ்சில் கட்டாயம் பதிந்துபோகும்! அயலவரைப்பற்றி அக்கறை என்ன!*

*"தமிழ்ப் புலவர்கள் பலருக்குத் தமிழ் உணர்ச்சி இல்லையே! என்ன ஐயா இவர்கள் படித்த தமிழிடத்தில் பற்றில்லாமல் வாழ்கின்றார்களே! தமிழ் நூல்கள் பலவற்றை வாங்கவேண்டாவா? மாணவர்களையெல்லாம் வாங்குமாறு ஊக்குவிக்க வேண்டாவா?" என்று உணர்ச்சி பொங்க உரைப்பார்கள். இது கழகக்காவலர் வேட்கை நிலை கேட்ட ஆர்வலர் ஒருவர் உரை.*

*"அச்சுத்தாள் திருத்துவதில் இருந்து நூற்கட்டஞ் செய்தல் வரை ஒவ்வொரு பணியிலும் முழுநிறைவே குறிக்கோளாய் உழைத்துவரும் கழகக்காவலரவர்களைக் கண்டுபேசும் வாய்ப்பினைக் கழிந்த பதினாறாண்டுகளில் பலமுறை பெற்றிருக்கின்றேன். அப்போதெல்லாம் - வேறெப்போதுமே - பெருமைப் பட்டியலையோ, வாணிகப் பேச்சுக்களையோ அவர் விவரிக்க நான் கண்டதில்லை. தமிழின் இன்றைய நிலை என்ன? அன்றைய மேன்மை என்ன? தமிழர் - சிறப்பாகத் தமிழாசிரியர் ஆற்ற வேண்டிய பணிகள் எவை? தமிழ்ப் பகைவர் எவ்வாறெல்லாம் - எங்கெல்லாம் - சூழ்ச்சிகளை - வஞ்சனைகளைப் புரிந்து வருகின்றனர்? மாற்று மருந்தென்ன - இப்படித்தான் எங்கள் உரையாடல் வளர்ந்திருக்கின்றது. இல்லை இல்லை, என்னிடம் கழகக்காவலர் பேசியிருப்பார்கள். செய்து முடித்தவை பற்றி எண்ணாமல் - மகிழாமல் - இறும்பூது எய்தாமல், செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து உழைத்து ஆராமை கொள்ளும் செயல்வீரர் கழகக் காவலர் ஒருவரே"*

*- இது கழகக்காவலரொடும் அழுந்தி நின்று உறவாடி யுண்மை யுணர்ந்து பறையறைந்த பழையர் ஒருவர் உரை.*

*"இக்கால இளைஞர்கள் தமிழின் உயர் நிலையையும் உயர் தன்மைகளையும் அறியாது அலைதலைக் குறித்து மிகவும் வாடினார். இந்திய அரசும், தமிழக அரசும், தமிழ் வரலாறு, தமிழ்ப் பண்பாடு ஆகியவை பற்றிய ஆய்வுக்குப் போதிய ஆதரவு தரவில்லை என்று குறிப்பிட்டு எங்களைப் போன்றவர்கள், இந்த உண்மைகளைப் பொதுமக்களுக்கு எடுத்துணர்த்தி அரசினரை நெறிப்படுத்த வேண்டும் என்றும் உரிமையுடன் கேட்டுக் கொண்டார். தமிழ் நலன், தமிழ்ப்பண்பாட்டு வளர்ச்சி முதலியவற்றுக்கான முயற்சி களைப்பற்றி அவர் விரித்து வந்தபோது அவரது உடம்பில் ஏறியிருந்த முதுமை கழன்று*

விழுந்துவிட அவரது உடம்பேகூட இளமை கொண்டு நிமிர்வது போல இருந்தது! அவருடைய பேச்சிலே அத்தனை மிடுக்கு! அத்தனை பேரார்வத் துடிப்பு! பார்க்க வந்த புத்தகத்தைக் கூட மறந்து சுப்பையாய் பெரியவரின் உயிர் கலந்து மிளிர்ந்த ஆர்வச்சீர்மையில் திளைத்திருந்தோம்.''

- இது, ''இக் காலத்தில் ஒருவரை நாம் அடிக்கடி காணும் இடத்தை வைத்தும், அவர் ஆர்வம் கொண்டு பேசுகிற செய்திகளை வைத்துமே அவர் இன்னார் என்பதை அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. நாங்கள் இதனையே ஆளறி நெறிமுறையாக வைத்திருக்கின்றோம்'' என்று கூறும் இணையர் கழகக் காவலரைக் கண்டுரைத்த கற்கண்டுரை!

தாமரைச் செல்வர் தம் விழுமிய வேட்கையை அவரொடும் உரையடி மகிழ்ந்தோர் அறிவர். அவர்தம் அன்புச் செல்வியாம் 'செந்தமிழ்ச் செல்வி'ப் படிப்பாளர் அறிவர். அவ்வப்போது வெளிப்படுத்தும் அறிக்கைகளை நோக்குவோர் அறிவர். அவர்கள் வேட்கையுரைகளுள் சிலவற்றைத் தொகுப்பாக இவண் அகழ்ந்து வைப்போம்:

**வளருந்தமிழை வளர்ப்பதற்கு நிலையான அமைப்பு**

''இலக்கண இலக்கியச் சொற்களையே அல்லாமல் பல்கலைச் சொற்களையும் கொண்ட தமிழ் - தமிழ் ஆங்கில அகரவரிசை நூல் ஒன்றை ஆக்குவதற்கும் அதனை மேன்மேலும் வளர்ப்பதற்கும் பலதுறை வல்ல அறிஞர்களைக் கொண்ட நிலையான குழு ஒன்றை அமைத்தல் வேண்டும். அந்தக் குழு பல்கலைக் கழகத்திலேதான் இயங்குதல் வேண்டும். அதற்குத் தமிழக அரசு ஆண்டு தோறும் ஏற்படுத்தும் வரவு செலவு திட்டத்தில் தமிழ் வளர்ச்சிக்கெனப் போதுமான தொகையினை ஒதுக்குதல் வேண்டும்''.

**திருத்தமான விரிவான தமிழ் அகராதி தொகுத்து அச்சிடுவதற்குச் செய்ய வேண்டுவன:**

''ஒரு நிலையான பதிப்பாசிரியர் குழுவும் அதற்கொரு மேற்பார்வைக் குழுவும் அமர்த்தப்பெறுதல் வேண்டும். அகராதிப் பதிப்புக்குழு பணிசெய்வதற்குரிய தகுந்த இடம், பல்கலைக்கழகத்திலேயே ஒதுக்கப்பெறுதல் வேண்டும். அந்த இடமும் நூல் நிலையத்தை ஒட்டியதாகவே இருத்தல் வேண்டும்.

**தொகுப்புப்பணி**

*"பழங்காலந்தொட்டுத் தமிழில் வழங்கி வந்த ஒரு பொருட் பல சொற்களிற் சில தமிழினின்றும் பிரிந்துபோன தெலுங்கில், கன்னடத்தில், மலையாளத்தில், துளுவில் வழக்காற்றிலும் தமிழில் வழக்கில் இல்லாமலும் இருக்கின்றன. இருமொழிப் புலமையுடையவர்களை அம் மொழிகள் பேசும் நிலங்களுக்கு அனுப்பி அவற்றைத் தொகுத்துவரச் செய்தல் வேண்டும். பண்டைத்தமிழ் மக்கள் வடநாடு வரை பரவி இருந்தார்கள் என்று வரலாறு கூறுவதால் வடநாட்டு மொழிகளில்விரவி உருமாறிக் கிடக்கும் தமிழ்ச் சொற்களைக் கண்டு பிடித்து எடுத்தல் வேண்டும்.*

*"நம் தமிழகத்திலும் வெளிமாநிலங்களிலும் உள் கல்வெட்டுகளை யெல்லாம் ஆராய்ந்து தமிழ்ச்சொற்களைத் திரட்டுதல் வேண்டும். ஓவியக்கலை, சிப்க்கலை, கட்டிடக்கலை, மருத்துவக்கலை, சோதிடக்கலை, வானநூற்கலை, இசைக்கலை, நாடகக்கலை, நாடடியக்கலை, கப்பற்கலை போன்ற பலதுறைக் கலைகளிற் காணப்படும் சொற்களையெல்லாம் ஆய்ந்து எடுப்பதற்குரிய ஏற்பாட்டினனைச் செய்தல் வேண்டும். வணிகம், பயிர்ரத் தொழில், தோட்டம், காடு, மலை, ஆறு, கடல் ஆகியவற்றைச் சார்ந்து வழங்கப்பெறும் சொற்களையெல்லாம் தொகுத்தல் வேண்டும். சிற்றூர்களிலும், சேரிகளிலும் பல்வேறுவகைக் கைவினைஞர்களிடத்திலும் வழங்கப்பெறும் சொற்களையெல்லாம் திரட்டுதல் வேண்டும்".*

*"நம் தமிழகத்திலும் வெளிமாநிலங்களிலும் உள்ள கல்வெட்டுகளை யெல்லாம்ஆராய்ந்து தமிழ்ச்சொற்களைத் திரட்டுதல் வேண்டும். ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை, மருத்துவக்கலை, சோதிடக்கலை, வானநூற்கலை, இசைக்கலை, நாடகக்கலை, நாட்டியக்கலை, கப்பற்கலை போன்ற பலதுறைக் கலைகளிற் காணப்படும்சொற்களையெல்லாம் ஆய்ந்து எடுப்பதற்குரிய ஏற்பாட்டினைச் செய்தல் வேண்டும். வணிகம், பயிர்த் தொழில், தோட்டம், காடு, மலை, ஆறு, கடல் ஆகியவற்றைச் சார்ந்து வழங்கப்பெறும் சொற்களையெல்லாம் தொகுத்தல் வேண்டும். சிற்றூர்களிலும், சேரிகளிலும் பல்வேறுவகைக் கைவினைஞர்களிடத்திலும் வழங்கப்பெறும் சொற்களையெல்லாம் திரட்டுதல் வேண்டும்".*

*"நம் தமிழகத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்கட்கும் தமிழ் - தமிழ் - ஆங்கில அகராதி, ஆங்கிலத் தமிழகராதி, கலைச்*

சொல்அகராதி, கலைக்களஞ்சியம், தமிழ்நாட்டு வரலாறு ஆகியவற்றைப் பிரித்துக் கொடுத்து அவை ஒவ்வொன்றுக்கும் நிலையான பதிப்புக் குழுவினையும் அமைத்து அவையெல்லாம் சரியானபடி நடைபெறுவதற்குத் திட்டம் அமைத்து ஆண்டுதோறும் போதுமான பொருளுதவியும் தமிழகவரசு செய்தல் வேண்டும் என்பது தமியேனது விருப்பம்."

**தமிழாசிரியர்கள் செய்ய வேண்டுவன:**

*(1) பட்டம் பெற்ற தமிழ்ப்புலவர்களும், பேராசிரியர்களும், கற்றது கைம்மண்ணளவு என்ற முதுமொழியினை உளங்கொண்டு மேலும் தமிழ் இலக்கண இலக்கியங்களைத் துறைபோகக் கற்றல்; ஆராய்ந்து பலவகை நூல்கள் எழுதுதல்.*

*(2) பிறமொழிகளில் ஏதேனும் ஒன்றைக் கற்றல், ஆங்கிலத்தைச் சிறப்பாகக் கற்றல்.*

*(3) பிறமொழிகளிலுள்ள அரிய நூல்களைத் தமிழாக்கஞ் செய்தல், தமிழ் நூல்களை ஆங்கில ஆக்கம் செய்தல்.*

*(4) தமிழ்நெறி சமயநெறியோடு பிணைப்புற்றது என்பதை ஒவ்வொருவரும் கருதி இரண்டையும் இருகண்ணெனப் போற்றுதல்.*

*(5) இசை, சிற்பம், சித்தமருத்துவம், வான நூல், ஏட்டுச் சுவடி படித்தல், கல்வெட்டு, நிலஅகழ் ஆய்வு முதலிய துறைகளில் ஈடுபட்டுப் புதிய நூல்கள் எழுதுதல், பழைய நூல்களைச் செப்பனிட்டுப் பதித்தல்.*

*(6) தமிழாசிரியர்கள் ஒருவருக்கொருவர் பகைமை, பொறாமை காட்டாமல் அன்பாகப் பழகித் திட்டமிட்டுத் தமிழ்ப்பணி செய்தல்.*

*(7) தங்கள் பெயர் பிற மொழியில் இருப்பின் மாற்றித் தூய தமிழ்ப்பெயர் அமைத்தல், தங்கள் குழந்தைகட்கும் அப்படியே செய்தல்.*

*(8) தங்கள் இல்லங்கட்குப் பெயர் இல்லாவிடின் தூய தமிழ்ப்பெயர் ஒன்றை அமைத்துப் பெயர்ப் பலகை மாட்டுதல்.*

*(9) இல்லச் சடங்குகளையும் நாள்வழிபாட்டையும் தமிழிலேயே நடத்துதல், தமிழாசிரியர்களே சடங்குகளை நடத்தக் கற்றுக்கொள்ளுதல்.*

*(10) தங்கள் ஊரிலுள்ள நாள்வழிபாட்டையும் தமிழிலேயே நடத்துதல், தமிழாசிரியர்களே சடங்குகளை நடத்தக் கற்றுக்கொள்ளுதல்.*

*(11) மாநாட்டு அறிக்கைகள், வரவேற்புகள், திருக்கோயில் விழா அறிக்கைகள், திருமணம் முதலிய சடங்குகளின் அழைப்புகள் முதலியவற்றைத் தூய தமிழில் எழுதுமாறு செய்தல், எபதிக் கொடுத்தல்.*

*(12) தங்கள் ஊரிலுள்ள தெருக்கள், முடுக்குகளுக்குத் தூய தமிழ்ப்பெயர்களை இட்டு வழங்கச்செய்தல்.*

*(13) இசை மேடைகளிலும் வானொலியிலும் தமிழ்ப்பாடல்களையே பாடச்செய்தல்.*

*(14) வீடுதோறும் ஒரு நூலகம் கட்டாயம் இருக்குமாறு செய்தல், திருக்குறளும் திருவாசகமும் இருத்தல் முதன்மை.*

*(15) தூய தமிழ் பரவுதற்கு மறைலையடிகளார் எழுதிய நூல்களைப் பள்ளி, கல்லூரி நூல்நிலையங்களிலும் பொது நூலகங்களிலும் வாங்கி வைக்கச் செய்தல். ஒவ்வொருவரும் கட்டாயமாக அவற்றைக் கற்கும்படி செய்தல்.*

*(16) தமிழ் வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு கழகம் நடத்திவரும் இலக்கியத் திங்கள் வெளியீடாகிய செந்தமிழ்ச் செல்வி பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பொது நூலகங்களிலும் கட்டாயம் இடம் பெறச் செய்தல்.*

*(17) தூய தமிழ்வளர்ச்சிக்குத் துணைபுரியும் தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டு, வடசொல் தமிழ் அகரவரிசை, கட்டுரை வரைவியல் ஆகிய நூல்கள் தமிழ்மக்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கச் செய்தல்.*

*(18) சென்னைக்கு வரும்போது பல்லாவரத்திலுள்ள மறைமலையடிகள் கலைமன்றத்தையும், சென்னை இலிங்கச்செட்டித் தெரு 261 இலுள்ள மறைமலையடிகள் நூல்நிலையத்தையும் பார்வையிடல்."*

இவை தமிழ் வளர்ச்சிக்காகத் தமிழாசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் எனக் குறித்தார் வ.சு. இவற்றை அச்சிட்டுப் பல்லாயிரக் கணக்கில் தமிழாசிரியர்களுக்கு நேரிலும், தேர்வுத்தாள் திருத்துதல் மையங்களிலும் வழங்குதற்கு ஏற்பாடு செய்தார்.

இவ்வாறே தமிழ்நாட்டு வரலாற்றுக் கலைக்களஞ்சியம் தொகுப்பது பற்றியும், தமிழகத்தில் நிலையான இந்தி எதிர்ப்பு இயக்கம் இருத்தல் வேண்டியதுபற்றியும், தமிழ்ப் பயிற்றுமொழிபற்றியும், திருக்கோயில்களும் தமிழர் வாழ்வும் என்பதுபற்றியும், வீட்டு நூலகத் திட்டம்பற்றியும், தேடித் தொகுத்தலும் பேணிக்காத்தலும் என்பதுபற்றியும் பிற பிறவற்றைப்பற்றியும் எண்ணற்ற அறிக்கைகள் விடுத்து உணர்வுண்டாக்க முயன்றுள்ளார் திரு.வ.சு.

பேசும் உணர்ச்சிமிக்க பேச்சுகளுக்கு வரிவடிவச் சான்றே அவர்தம் அறிக்கைகள் என்பது வெளிப்படை. அவற்றை யெல்லாம் விரிவாகக் காண விரும்புவோர் செந்தமிழ்ச் செல்வித் தொகுதிகளை முறையே திருப்பிக் கண்டுகொள்வார் களாக!

செந்தமிழ்ச் செல்வியைத் தம் தலைமகளாகத் - தவமகளாகக் - கருதுபவர் திரு.வ.சு. அச் செல்வி பிறந்தநாள் தொட்டு இதுகாறும் அதற்குப் பூட்டுவன வெல்லாம் பூட்டிப் பொலிவுறுத்தி வளர்த்து வருதலில் பேரார்வம் உடையவர் அவர். ‘தமிழ் அமைப்புகளெல்லாம், தமிழ்ப்பற்றாளர் இடத்தெல்லாம் செந்தமிழ்ச் செல்வி நடை பயில வேண்டாவா?’ என்று ஏங்கியுரைக்கும் அவர்தம் இனிய ஏக்கம் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தோர்களேனும் கடைப்பிடியாகக் கொண்டிருந்தால் பல்லாயிரம் இதழ்கள் இன்று செலவாகும் நிலையேற்பட்டிருக்கும். கனிதந்தால் கனியுண்ணவும் வல்லிரோ என்னும் நாவரசர் நன்மொழியும் கேட்டுப் பயனுறாத் தமிழகம் அன்றோ ஈது; இதனை இடித்துரைத்து எழுச்சிகூரச் சான்றோர்கள் முனைய வேண்டும்! இவ்வொன்றற்கு மட்டுமோ வேண்டும்? எத்துணைச் செயல்கள் உள்ளன! ‘காப்பன காத்துக், கடிவன கடிவார் எவர்?’

“செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க செய்யாமையானும் கெடும்” என்பதனை வலியுறுத்த வல்லார் எவர்? நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்’ என்று உரைத்து நெறி நிறுத்த வல்லார் எவர்? மொழிநலம், இனநலம், முட்டறுத்துக் காக்க வல்ல நல்லார் எவர்? தமிழறிந்த - தமிழாய்ந்த சான்றோர் ஒன்றுபட்டு நின்று புறப்பகை ஒழித்து அகத்திறம் பெருக்கி வசியும் வளனும் கெழுமப் பாடுபடாக்கால் எதிர்காலத்து இம் தமிழகத்தின் நிலை என்னாம்? ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும் நன்றே

செய்யவும் வேண்டும்; நன்றும் இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும் இன்னே செய்யவும் வேண்டும் என்னும் பொன்னெறியைத், தமிழ்ப் பகைவர் எல்லாம்ஒன்றுபட்டு நின்று கெடுக்கச் சூழும் இக்கால நிலையில் உள்வாறு உணர்ந்து ஒன்று பட்டு நின்று உருத்தெழுந்து ஊன்றி உழையாக்கால் இவர்கள் தமிழைப் பயின்று தமிழால் வாழுதலால் என்ன பயன்? நன்றி மறந்து மரத்துப்போன இவர்களுக்கு இவ்வேளை எழுச்சி யுண்டாக்கி நிலைபெறுத்தாக்கால் எவ்வேளையும் பயனில்லா தொழியும் என்று இவர்கள் சொல்லும் உணர்வு மொழிகள் இளைஞர் உள்ளங்களில் - அறிஞர் நெஞ்சங்களில் ஊன்றினால் எத்தகைய விழுமிய செயல்களெல்லாம் எழுந்தோங்கும்! இதனைத் தமிழ் நெஞ்சங்கள் எண்ணித் தலைப்படுமாக!

**புலவர் பாடும் புகழொடும்வாழ்க!**

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று கூறி மெய்யுணர்ந்த பழவடியார் இறும்பூதெய்தினார். அவ்வாறு இறும்பூதெய்தித் திருவருட் செயலை எண்ணித் திளைத்துத் தொண்டு செய்யும் பெருமகனார் தாமரைச் செல்வர்அவர்கள். ஆவியும், உடலும் உடைமை எல்லாமும் அன்னைத் தமிழுக்கும் அம்மை அம்பலவாணர் திருவடிகட்கும் ஒப்படைத்துத் திருவருள் தொண்டுகளில் தோய்ந்து நிற்கும் அவர்களின் பெறற்கரும் பெருமாண்பைத் தமிழுலகம் முற்றும் உணர்ந்திருந்தால் இதற்குள் எத்துணை ஏற்றங்களையெல்லாம் எய்தியிருக்கும்! அவர்கள் வழியிலே சென்று உழைப்பாரை, அவர்கள் பணிகட்கு ஊக்கமும் ஆக்கமும் தருவாரை அவர்களேயோ தேடிச் செல்ல வேண்டும்? பொன்னினும் சிறந்தபொழுதினைப் போக்கி நூல்களின் விற்பனைக்கும் வெளியீட்டுக்குமாக அலைந்தோ உழல வேண்டும்? அவர்கள் தனி வாழ்வின் நலங் கருதியது ஒன்றோ அவர்கள் தொண்டு? தமிழலகம் தழுவிய அவர்கள் தொண்டினைத் தமிழ் நெஞ்சங்கள் அனைத்தும் மார்தட்டி முந்து நின்று தழுவிக்கொள்ளுதல் கடமை அன்றோ! அக் கடமையை உணர்ந்து செயலாற்றும் நாள்களே அவர்களுக்கு மாறா இன்பம் நல்கும் மாணிக்க நாள்கள்! அந் நாள்கள் விரைவில் அமைந்து அவர்களை மகிழ்விக்குமாக!

"நூற்றிதழ் அலரி நிரை கண்டாற்போல நூறு பல்லாண்டு உரையும் பாட்டும்" உடையோராகத் தாமரைச்செல்வர் வாழ்வாராக!

# 34. உரைமணிமாலை

*(பொன்னும் மணியும் பவழமும் பொருந்தித் தோன்றி மாலையாகப் பொலிவுறுதலைக் காட்டினார் சங்கச் சான்றோர் பிசிராந்தையார்! இருபதாம் நூற்றாண்டுச் சான்றோர்கள், 'வயிரமுத்து' வழங்கிய மாமணிக்கு ஒப்பிலா மணிமாலை சூட்டுகின்றனர்; இவை உரைமணி; தொடுத்து வருவது பாமணி; நிறைவோ கருதுவார் கருத்துமணி.)*

## மறக்க இயலா மனிதர்

*அவரிடம் ஒருநாள் பழகியவர்கள்கூட வாழ்நாள் உள்ளவரையில் அவருடைய இனிமையான பண்பையும் மென்மைக் குணத்தையும் அறிவாழத்தையும் மறக்க இயலாது. சிறிது காலமே ஆயினும் அவருடன் பழக நேர்ந்ததை நான் பெரிய பாக்கியமாகக் கருதுகின்றேன்.*

**– திரு. ஓ.வி. அளகேசன்.**

## அருமைக்கு ஒருவர்

*தமிழ்நெறிக்கும் சிவநெறிக்கும் அருந்தொண்டாற்றிவரும் பிள்ளையவர்கள் சிறந்த இதழாசிரியர்; பதிப்பாசிரியர்; நூற்பயிற்சிமிக்க நுண்ணறிவாளர்; நாநயமிக்க நாவலர்; சைவம் தழைக்க வைத்த தகைமையாளர்; தமிழ் காத்த காவலர்; நேர்மை பிழையா நிருவாகி; இத்தனை சிறப்புகளும் ஒருங்கே ஒருவரிடம் அமையும் அருமையைப் பிள்ளைபால்காண்கின்றோம்.*

**– டாக்டர் பா. நடராசன்.**

## பற்றுக்குப் பற்றானவர்

*இவருடன் சிறிது நேரம் உரையாடினல் தமிழ்ப்பற்றும் கழகப்பற்றும் காலத்துக்கும் நம்மை ஒட்டிக்கொள்ளும். ஆர்வமும் ஊக்கமும் நமது சொத்தாகிவிடும். இடையறா உழைப்பு இவரது வெற்றியின் இரகசியம்.*

## மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்

*அரசின் ஆணையும் அரவணைப்பும் இல்லாத அந்த நாளிலேயே ஆட்சிச்சொல் அகரவரிசை, அழைப்பிதழ் எழுதுமுறை, மக்கட்பெயர் அகரவரிசை, இல்லப்பெயர் அகரவரிசை, மலர் வழிபாட்டு வரிசை, தமிழ்த்திருமணம் ஆகிய நூல்களை வெளியிட்டு இன்றைய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் திரு. பிள்ளையவர்கள்.*

**- திரு.சை. வே. சிட்டிபாபு.**

## வேறுபட்டாலும் விரும்புதல்

*அவருடன் கருத்து வேறுபாடு கொண்டவர்களும் அவர்தம் முயற்சித் திறனை மறவாமல் போற்றுவது கேட்டிருக்கிறேன்.*

**- டாக்டர் மு. வரதராசனார்.**

## ஒரு பல்கலைக் கழகம்

*கழகம் பல்கலைக்கழகமாக விளங்குதல் போலவே பிள்ளை அவர்களும் பல்கலைக்கழகமாக விளங்குகின்றனர். பிள்ளையவர்களுடைய அயராத ஊக்கமும் முயற்சியும் பணியும் வியக்குந்தோறும் வியக்குந்தோறும் வியப்பிலடங்காத நிலையிலுள்ளன.*

## ஒரு நிறுவனம்

*தனி மனிதராகவே இல்லாமல்ஒரு நிறுவனமாகவே கருதத்தக்க சிறப்புடைய மாந்தர் உலகில் சிலரேயாவர். அத்தகு விழுமியோர் தந்நலங் கருதாமல் உழைப்போர், அயரா முயற்சியுடையோர்; அவர்களுடைய உழைப்பும் ஆர்வமும் அவர்கட்குத் தளராத இளமையையும் நீடிய வாழ்வையும் தரும் என்று கூறுவது மிகையன்று. இத்தகு மாந்தரையே திரு.வ.சுப்பையா பிள்ளை அவர்களின் நல்லியல்புகளில் காண்கிறோம்.*

## பொழுதெல்லாம் கழகம்

*நானறிந்த வரையில் அவர்களுக்கு ஏறத்தாழ நாள் ஒன்றுக்கு நான்குமணிநேர ஓய்வுதான்; மீதப் பொழுதெல்லாம்*

*அவர்கள் சிந்தனையில் நிறைந்து நிற்பது கழகம். கழகம் ஆற்ற வேண்டிய பணி - இவை பற்றிய எண்ணங்கள்தாம்.*

## தமக்குவமை இல்லாத் தனித்தகை

*கழகத்தின் இப் பெரிய சிறப்புக்கு அரிய பெரியார் ஒருவர் உளர். என்றும் தமிழ் நினைப்பினர், தூய தமிழ் எண்ணத்தினர், தமிழே போல் தமிழ்ப்புலவர் உருவங்களைப் போற்றுபவர், தமிழ்த் திட்டம் கற்பனையில் வகுத்து வகுத்தபடி செயல் கண்டு வருபவர், தமிழ்மையுடையனவற்றைத் தொகுத்து வகுத்துப் பதிப்பதில் தமக்குவமையில்லாத் தனித்தகை; அவர் தாம் தாமரைச் செல்வர் தமிழ்த்திரு வ. சுப்பையாபிள்ளை அவர்கள்.*

**– டாக்டர் வ.சுப. மாணிக்கனார்.**

## தமிழே இறைமை

*இறையன்புக்கு அடுத்து யான் இவரிடம் கண்டது தனித்தமிழ்ப்பற்று. இவரிடம் இறையன்பு மிக்குளதா? தமிழ்ப்பற்று மிக்குளதா? என்று கூட யான் சில சமயம் ஐயப்படுவதுண்டு. சிவமே அன்பா? அன்பே சிவமா? என்பதை ஆராய்ந்து அன்பே சிவம் என்று தெளிந்துரைத்தார் திருமூலர். 'தமிழே இறைமை' என்று கொண்டதை யான் இவரிடம் கண்டேன்.*

**– டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்.**

## மூதிளஞ் சிங்கம்

*சுப்பையா பிள்ளை மூதிளஞ் சிங்கம், சிவப்பழம், திருநீறு துதைந்த நுதல்; ஆயிரம் ஆயிரம் நூல்களின் சுமையால் வணங்கிய முதுகு; வணங்கிய வாய்; அச்சமற்ற நெஞ்சுரம்; செம்மையான செயல்வீறு - சிக்கனச் செம்மல் - அளவறிந்து பேசும் ஆற்றல் படைத்த சுப்பையா பிள்ளையைக் காண்பதே எனக்கும் களிதுள்ளும் மகிழ்ச்சி.*

## தனித்தமிழ் மணவாளர்

*அப்பரும் சம்பந்தரும் தோன்றியிராவிட்டால் மறைகளும் முறைகளும் மறைந்தே போயிருக்கும். திருவரங்கம் பிள்ளையும் சுப்பையா பிள்ளையும் தோன்றியிராவிட்டால் தமிழ்க்*

கருவூலங்களும், சைவசித்தாந்தப் பெருநூல்களும் பேழை பேழையாக நமக்குக் கிடைக்குமா? வீடுதோறும் தனித்தமிழ் மணம் கமழுமா? சுப்பையா பிள்ளையின் மூளையில் தனிப்பெரும் திறமை உள்ளது.

## அறிஞரை ஊக்கும் ஆற்றல்

அறிஞரை ஊக்கும் ஆற்றல் படைத்த அன்புத் திருவாளர் சுப்பையா பிள்ளையால் தமிழ் உயர்ந்தது. சைவம் உயர்ந்தது. சோம்பல் அயர்ந்தது. இருள் பெயர்ந்தது. தமிழகம் பொலிந்தது - தமிழர் பெருமை சிறந்தது.

**- கவியோகி சுத்தானந்த பாரதியார்.**

## சிக்குவார் சீர்த்தி

அவர்கள் ஆர்வக் கனவில் முயற்சித்துடிப்பில் தன்னம்பிக்கைத் தறுகண்மையில் சிக்கும் பேறுபெற்ற தமிழர் எவரும் ஆர்வத்தால் அரிய செய்வர். முயற்சியின் முகடெய்துவர்; தன்னம்பிக்கை பெற்று அவர் ஆரவத்தைத் தம் செயலாக்கி வெற்றி பெறுவர்.

**- பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்.**

## பிரிப்பறு பிணைப்பு

கழகம் வளரத் தாம் வளர்ந்து தாம் உயரக் கழகம் வளர்த்துத் தனிமாண்பு பெற்றவர்; உயிர் வேறு உணர்வு வேறு எனப் பிரித்தறிய இயலாதவாறுபோலத் திரு. வ.சு. வேறு கழகம் வேறு எனப் பிரித்துக் காண இயலாதவாறு பிரிப்பறப் பின்னிப் பணைந்து நிற்கும் பெருமகனாராவர்.

## வரலாற்றின் பொன்னேடு

இவர் ஒருவரே தம் புன்னகை பூத்த முகத்தானும் யார் மாட்டும் இன்புறூஉம் இன்சொல்லானும் பகை நட்பாய்க் கொண்டொழுகும் பண்பானும் அமைப்புத் திறனாலும் அய்லவிலா உழைப்பானும் ஓர் அரசு அதன் மொழிக்குச் செய்ய வேண்டியவை அனைத்தையும் அரைநூற்றாண்டுகளுக்கு மேல் ஆற்றி வந்துள்ளமை நம் தமிழக வரலாற்றில் பொன்னெனப் போற்றிப் பொறிக்கத்தகுங்ம பொற்புறு செயலாகும்.

## தானைத்தலைவர்

*இந்தியக் கூட்டரசின் ஒரே மொழியாக இந்தி ஆட்சி செலுத்தப்போகின்றது என்பதனை அறிந்தவுடன், செந்தமிழ் மொழியின் சீர் உரிமை காத்திட, போர்எனப் புகலு;ம புனைகழல் மறவராய்ப் போர்ப்படை அமைத்துப் புறப்பட்ட தானைத் தலைவரும் தண்டமிழ்க் காப்பாளராம் சுப்பையா அல்லரோ!*

– டாக்டர் சி. இலக்குவநனார்.

## மணி ஒலி

*காலை ஆறு அல்லது ஆறரை மணிக்குத் தொலைபேசி மணி ஒலித்தால் கழக மேலாட்சியாளர் என்று தெரிந்து கொள்வேன். காலை நான்கு மணிக்கு எழுந்து அச்சிடப்பெறும் நூல்களின்* Proof *ஐ அவர்களே சரிபார்ப்பது வழக்கம். எனவே, அதில் ஏதாவது சொற்களை மாற்றவேண்டியிருந்தாலோ, வேறு திருத்தங்கள் செய்ய வேண்டியிருந்தாலோ தொலைபேசியில் அவர்கள் கேட்பது வழக்கம். இவ்வாறெல்லாம் எழுத்தாளர்களை ஊக்கி உருவாக்கும் வெளியீட்டாளர்களைக் காண்பது அருமையன்றோ!*

## ஓய்விலா உழைப்பு

*நான் அவர்களை வீட்டிலும்கழக அலுவலகத்திலும் பல தடவைகள் பார்த்திருக்கின்றேன். எப்பொழுதும் அவர்கள் 'சும்மா' இருந்ததைக் கண்டதே இல்லை.* Proof *திருத்தம், கடிதம் எழுதுதல் போன்ற வேலைகளைச் செய்துகொண்டே இருப்பார்கள். உடல்நலத்திற்காக ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் கூறியபொழுது அவர்களது விடை 'ஓய்வு நமக்கு ஏது' என்பதுதான். அவர்களுக்குத் தெரியாத ஒன்று ஓய்ந்திருப்பது என்பதாம்.*

## பாராட்டும் விரும்பாப் பண்பு

*பாராட்டுதல்களை எதிர்பார்த்துப் பணியாற்று வோர்களைப் பாராட்டினால் பயனுண்டு. அவர்களும் அதனால் இன்னும் அதிகமாக ஊக்கம் பெறுவார்கள். ஆனால் திரு.வ.சு. பிள்ளை அவர்கள் பாராட்டுதல்களைச் சிறிதும்*

*எதிர்பாராதவர்கள். நாம் அளிக்கும் ஊக்கம் எதுவும் அவர்களுக்குத் தேவையில்லை. நாம் அளிக்கும் ஊக்கம் எதுவும் அவர்களுக்குத் தேவையில்லை. நாம் பாராட்ட வேண்டும் என்றோ நீரிலே மீன் நீந்துன்கிறது? பறவைகள் பறக்கின்றன? நீந்துவது மீனின் இயல்பு. பறப்பது பறவைகளின் இயல்பு. அதுபோல் தமிழ்ப்பற்றும், தமிழ்த் தொண்டுள்ளமும் திரு.வ.சு. பிள்ளையவர்களுக்கு இயல்பாய் அமைந்த நீர்மைகள்.*

**- திரு. மா. சண்முக சுப்பிரமணியம்.**

## தமிழாட்சிக் கால்கோள்

*ஆட்சிச்சொல்அகரவரிசையைக் கழகம் வெளியிட்டதே, தமிழகத்தில் தமிழாட்சி நடைபெறுவதற்குக் கால்கோள் செய்ததாக அமைந்தது.*

## கல்லைக் கனியாக்க வல்லவர்

*கல்லையும் கனியாக்க வல்லவர்கள் ஆதலின், எளிதில் இயங்கா இயல்புடைய என்னையும் இப் பணியில் ஈடுகொள்ள வைத்தது எனக்கே வியப்பளிக்கும் செய்தியாக என்றும் இருந்துவரும் பாங்கினதாகும்.*

## கழகம் தோன்றாதிருந்தால்

*திரு. பிள்ளையவர்களைக் காணும்போதெல்லாம், நினைக்கும் போதெல்லாம் அவர்களது அசைக்கலாகாத அன்னைமொழிப் பற்றும் தணிக்கலாகாத தனித்தமிழ் ஆர்வமும் என் நெஞ்சத்தை ஈர்த்து இன்புறுத்தும். தமிழ்த்தாய் செய்த தவப்பயனாய் அவர்கள் தமையனார் திரு.வ. திருவரங்கம் பிள்ளையவர்களும் திரு. பிள்ளையவர்களும், அறுபது ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைத் தோற்றுவித்திராமல் இருந்தால் இத்தனை இலக்கிய இலக்கண அறிவுசால் நூல்களை இவ்வளவு திருத்தமான முறையில் இத்துணை அழகழகான வடிவங்களில் தமிழுலகம் எங்ஙனம் பெற்றுப் பயனடைய இயன்றிருக்கும் என எண்ணி எண்ணி இறும்பூது எய்துகின்றேன்.*

**- திரு. கீ. இராமலிங்கனார்.**

## நூல் காக்கும் நோன்மை

*தமிழ்மொழியில் தோன்றிய எந்த நல்ல நூலும் அழிந்து போமாறு விடக்கூடாது என்பது பிள்ளையவர்களுடைய உறுதியான கொள்கை. இறந்து போகத்தக்க நிலையில் இருந்தனவும், பிற பதிப்பாளர்கள் யாரும் வெளியிடக் கனவிலும் எண்ணாதனவுமாக இருந்த பல நூல்களைப் பிள்ளை அவர்கள் உலகில்நிலைபெறுமாறு செய்திருக்கின்றார்கள்.*

**– கருப்பக்கிளர் சு. அ. இராமசாமிப் புலவர்.**

## கழகக் காதல்

*கழகம் என்றால் சுப்பையா பிள்ளை என்று பொருள்; சுப்பையா பிள்ளை என்றால் கழகம் என்று பொருளாகும். தெளிவாகக் கூறுவதானால் கழகத்தின்மீது திரு. பிள்ளையவர்கள் தம் பெற்றோர்களைவிட அதிகமான அன்பையும், மனைவியைவிட அதிகமான காதலையும், மக்களைவிட அதிகமான பாசத்தையும் வைத்திருக்கிறார்கள் என்றால் அஃது ஒரு சிறிதும் மிகையாகாது.*

**– நுண்கலைச் செல்வர் அ. இராகவன்.**

## மேற்கை வெல்லும் கிழக்கு

*மேலைநாட்டு அச்சு, கட்டுக்கோப்பு, அமைப்பு முதலிய வற்றை விஞ்சும் வகையில் தமிழ்நூல்களை அச்சிட்டுத் தவழ விட்ட பெருமை பிள்ளை அவர்களுடையதே.*

**– பேரா. அ.மு. பரமசிவானந்தம்.**

## தமிழ்த்தாயின் தவப்புதல்வர்

*திரு.வ.சுப்பையா பிள்ளை அவர்கள் இந்த வயதிலும் இளமை உள்ளத்தோடு எறும்புபோல் சுற்றிச் சுற்றி உழைக்கும் உழைப்பை எண்ணும்போது இவரினும் சிறந்த தமிழ்த்தாயின் தவப்புதல்வர் யார்? என்றே எண்ணத்தோன்றுகின்றது. இவரைப்போல் இன்னும் பத்துப்பேர் தமிழ்நாட்டில் இருந்தால் இந்த நாட்டின் வருங்கால வாழ்வு வையகம் வியந்து போற்றத்தக்கதாக விளங்கும்.*

**– டாக்டர்ந. சஞ்சீவி.**

## எண்செயல் ஏந்தல்

*அவர்கள் ஓய்வாகச் சிறிது நேரம் உட்காரந்திருந்ததை நான் பார்த்ததில்லை. பேசிக்கொண்டே பிழைதிருத்துதல், அச்சகத்துப் பணியாளர்க்கு ஆணையிடுதல், மேலாளருக்கு ஆலோசனை கூறுதல் முதலிய அட்டாவதானங்கள் செய்வதையே பார்த்திருக்கின்றேன்.*

**- திரு. மு. சதாசிவம்.**

## கண்டித்துத் திருத்துதல்

*உறவினராயினும் உயிர்த்தோழராயினும் குற்றங்கண்ட விடத்துப் பணியாளரைக் கடுஞ்சொற்கூறிக் கண்டித்துத் திருத்துமுறை ஒவ்வொரு செயற்குழுவிலும் நான் நேரிற் கண்டதாகும்.*

## முறைதிறம்பா நேர்மை

*ஆட்சியாளர் முறைதிறம்பா நேர்மையர் ஆகலின், எக்காரணம் கருதியும் உணமைக்கு மாறான செயலுக்குச் சிறிதும் செவிசாய்ப்பது இல்லை.*

## அரசும் அமைச்சும்

*எங்கள் கழக ஆட்சியாளர் செயற்குழுவினைச் செம்மையாக நடத்தும் முறை பெரிதும் பாராட்டற்பாலதாகும். செயற்குழு நடத்தும் பொழுதெல்லாம் நெறிபிறழா மாநில மன்னனது மதி நுட்பமும் அளனறிந்து ஆன்றமைந்த சொற்பயிலும் அமைச்சனது சொல்வன்மையும் ஒருங்கே ஆட்சியாளரிடம் அமைவன வாகும்.*

**- சித்தாந்தமணி வே. மா;ணககவாசகம் பிள்ளை.**

## சங்கநூற் பரப்புநர்

*சங்க நூல்களை வெளியிட்ட பெருமை மகாமகோ பாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களைச் சார்ந்ததுபோல அவற்றைத் தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்தி நாடு முழுவதும் பரப்பிவரும் பெருமை திரு. பிள்ளை அவர்களைச் சார்ந்ததாகும் என்பேனாகில் அது புனைந்துரையன்று.*

**- பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரன்.**

## தமிழ்த்தாத்தா

*அடியார்தம் அருட்பெரும் வாழ்க்கையைப் பராவ அன்றொரு சேக்கிழார். தமிழ்த்தாயின் தவப்புதல்வர்தம் அருந்தமிழ் பணியை உலகிற் கெடுத்துக்காட்ட இன்றொரு தமிழ்ச்செல்வர் ஆம், தமிழ்த்தாத்தா திரு.வ. சுப்பையாபிள்ளை.*

**– திருமதி பு. பா. உமாமகேசுவரி.**

## தமிழ்க்கு வழிபாடு

*தாமரைச் செல்வரைப் பாராட்டுவது தமிழன்னைக்குப் புரியும் வழிபாடு.*

## நற்பணி நாயகர்

*வெளியீட்டுத் துறையை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் வைத்துக்கொண்டு தரத்தைப் பாதுகாப்பதுதான் நல்ல பணி. தரத்தைப் பொருட்படுத்தாது எப்படியாவது எண்ணிக்கையைப் பெருக்க எல்லாவகையான நூல்களையும் போட்டுக் குவிக்காமல் இருப்பதற்கே நாம் திரு. சுப்பையாபிள்ளை அவர்களைப் பாராட்ட வேண்டும்.*

**– திரு. அகிலன்.**

## கன்னித் தமிழ்க் காவலர்

*அவரைப்போல உழைப்பும் உள்ளன்பும் உயிராற்றலும் தணியாத தமிழ் வேட்கையும் நிறைந்த பெரியோரது திருப்பணியினால்தான், கன்னித் தமிழ்க்கோயில், காலத்தின் படை எடுப்பில் இருந்து மீண்டும் நிற்க முடிகிறது எனில் அது மிகையாகாது.*

## தமிழ்க் கோயில் அறங்காவலர்

*எழுபதைத் தாண்டிய முதியவர்! இதயத்தால் இளையவர! தோல்வியில் துவளாத உள்ளம்! வெற்றியில் மலைக்காத திட்பம்! நிறுவனங் காக்கும் கடமையுணர்வு! பொதுப் பொருள் காக்கும் துணிவு! வருவது தெரிந்துரைக்கும் வாய்மை! சென்றதை நினைக்கும் செம்மை! இத்தகைய பண்பாட்டுச் செல்வங்களோடு விளங்கி முத்தமிழ்க்கோயில் காக்கும் ஓர் அறங்காவலர்க்குச் செந்தமிழ்நாடு பெரிதுங் கடப்பாடுடையது.*

**திரு. எஸ். டி. சுந்தரம்.**

# தனியாளுமைத்திறன்

*திரு. சப்பையா அவர்களுக்கென்றே சிலதனித்திறன்கள் உண்டு. அறிஞர்களிடம் அவர் பழகும் முறை, அவர்களைக் கண்டவிடத்துக் கனிய உரையாடி அவர்களை விருந்தோம்பு கின்ற பெரும்பண்பு, அவர்களின் அறிவு வெளிப்பாட்டிற்கு அவர் துணை நின்றுதவும் பாங்கு, அவர்களின் அறிவு நுட்பத்தை உணர்ந்துகொண்டு அவர்களை முறையாக ஈடுபட வைத்துத் தமிழுக்கு அவர்களின் அறிவு பயன் பெறும்படி செய்யும் உணர்வுத் திறன், எவ்வெத் துறையில் தமிழ்மொழி தொய்ந்து கிடக்கின்றதோ அவ்வத் துறையில் ஈடுபட்டு உழைக்கும் அறிவாற்றல், எத்திறத்தாரையும் அன்பாலும் அணுகுவதாலும் கவர்ந்திழுக்கும் பேச்சாற்றல், அறிஞர்களின் மடல்களையும், கையெழுத்துப்படிகளையும், படங்களையும் வரலாற்றுக் குறிப்புகளையும் பெறற்கரும் பெருங்களஞ்சிய மாகக் கருதிப் பேணிக் காக்கும் திறன், துவளாத நெஞ்ச,தூங்காத உணர்வு, துயர்களுக்கு அஞ்சாமல் ஈடுகொடுக்கும் வலிய வினையாற்றல், அயராத உழைப்பு - இன்னபிற திரு. சுப்பையா பிள்ளை அவர்களின் தனியாளுமைத்திறன்களாகும்.*

**– தென்மொழி பெருஞ்சித்திரனார்.**

# உலகப் பொது மொழி

*திரு.வ. சுப்பையா பிள்ளை அவர்களைப்போல் நாலு சுப்பையா பிள்ளைகள் தமிழுக்குக் கிடைத்துவிட்டால்தமிழ் உலகப் பொதுமொழியாகிவிடும்.*

# நடமாடும் புத்தகசாலை

*மெல்லிய உருவம்! எளிய தோற்றம்! அகத்தியரை விடக் கொஞ்சம் உயரம்! சிரித்த தமிழ் முகம்! தெளிவான திட்ட வட்டமான தெளிந்த பேச்சுக்கள், தமிழுக்கு இன்னும் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டுக்கொண்டே இருக்கும் தமிழ் நெஞ்சம்! பழந்தமிழ்ப் புத்தகங்களையே தூக்கியதால் சிவந்த கரங்கள்! தூங்கிய நிலையிலும் தமிழ்க்கனவு! திரு. சுப்பையா பிள்ளை அவர்களை நினைக்கையில்நமக்கு இப்படிப் பல எண்ண அலைகள் தோன்றுகின்றன. நூல்கள் அடுக்கிய மகிழுந்தில் அவர் செல்லும்போது அவர் நடமாடும் ஒரு புத்தக சாலையாகவே நமக்குத் தோன்றுகின்றார்.*

**– திரு. ஆறு. அழகப்பன்.**

# கொங்கு தேர் வாழ்க்கை

*திரு.வ. சுப்பையாபிள்ளை அவர்கள் அருமையான அச்சிட்ட பழைய தமிழ்நூல்களை மிகவும் அரிதின் முயன்று, தேனீ தேனை மலர்கள்தொறும் தொலைவு பாராமல் சென்று சேகரிப்பது போல் விடா முயற்சியுடன் திரட்டி வைத்திருக்கின்றார். இதற்காக அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்று கருதுகின்றேன். ஜெர்மனி நாட்டில் ஆவே நகரில் அச்சடிக்கப்பட்ட தமிழ் நூல்களையும் மேலைநாட்டுத் தமிழறிஞர் ஜி.யூ. போப் அவர்கள் கையாண்ட நூல்களையும் இன்னும் இதுபோல் பலவற்றையும் அவர் சேகரித்து வைத்துள்ளார். இவற்றை அவருடைய தந்நலத்திற்காக இல்லாமல் பிறரும் பார்த்துப் படித்து ஆராய்ந்து மகிழும் வண்ணம் காட்சிக்கு வைத்து அருமையாகப் பேணி வருகின்றார்.*

**– திரு. மா. சு. சம்பந்தன்.**

# செந்தமிழ்ச் செயல் வீரர்

*திரு.வ. திருவரங்கம் பிள்ளை அவர்களின் கனவுகளை நனவாக்கிய திரு.வ.சு. தம் தமையனார் அமைச்சர் வ. தி. என்ற மலை மறைந்ததும் மயங்கிச் சோர்ந்துவிடாமல் வீறுடன் வினை செய்த வ.சு. வை மறப்பது எங்ஙனம்? செந்தமிழ்ச் செயல் வீரர் வ.சு. வாழ்க! வாழ்க! என வாழ்த்தி மகிழ்கின்றேன்.*

**– வித்துவான் வீரசிவம்**

# 35. பாமணி மாலை

திருநெல் வேலிச் சைவ சித்தாந்த
    நூற்பதிப்புக் கழகம் போலும்
ஒருநல்ல தமிழ்வளர்க்கும் நிறுவனமும்
    கண்டதில்லை உலகில் அந்த
உரைமல்கு நிறுவனமும் முப்போதும்
    தமிழுக்கே உழைக்கத் தக்க
பெருநல்லான் தமிழ்ப்புலவன் சுப்பையன்
    போற்பிறரைப் பெற்ற தில்லை.

நூலெல்லாம் விளையுமங்கே நூறாயி
    ரக்கணக்கில் நூல்ஒவ் வொன்றின்
மேலெல்லாம் அழகுசெய்யும் சுப்பையன்
    மிகுதிறமை அதுவு மன்றிக்
காலெல்லாம் சிலம்பொலிக்கத் தமிழரசி
    உலகரங்கு காணும் வண்ணம்
தோலெல்லாம் சுளைப்பயன்கொள் புதுப்புதுநூல்
    தோற்றுவிப்பான் அந்த மேலோன்.

**- பாவேந்தர்.**

புலவர் தமக்குப் புகலிடமாய் அன்னார்
நலனுற வேண்டுவன நல்கும் - நிலவுபுகழ்ச்
சுப்பையா மால்போல் துணையாவார் நெஞ்சேகேள்!
இப்புவியில் வேறொருவர் இல்.

**- பண்டித அ. பொன்னுசாமி பிள்ளை.**

சைவம் ஒருகண் தமிழ்மறுகண் என்றக்கால்
ஐய! அவை ஒவ்வொருகண் ஆம்உனக்கே - மெய்யாய்ப்
பழகமே லாம்பயனைப் பாலிக்கும் அண்ணால்
கழகமே உன்னிரண்டு கண்.

கன்னித் தமிழ்க்குக் காகமே ஆதாரம்
அன்ன கழகத்துக் காதாரம் - இந்நிலத்தே
சுப்பையனார் செய்ததிருத் தொண்டாகும் ஆதலினால்
எப்போதும் வாழ்க் இனிது.

– **கவிஞர் அரங்க சீனிவாசன்.**

அச்சிட்டு நூல்பரப்பி ஆற்றல் தமிழ்த்தேர்க்கும்
அச்சிட்டார்சுப்பையா அன்புடனே - தூக்கணநல்
மெய்ச்சிட்டுபோன்றுநூல் மேல்கட்டு வோர்வாழ்க
அச்சிட்ட நூலினும்பல் லாண்டு.

பதிப்பித்துப் பன்னூல் பரப்பியே தில்லைப்
பதிப்பித்து பூண்பரன் நூலைப் - புதுப்பித்துப்
புத்துரைகள் கண்டுதவிப் பூத்தசெந் தாமரையார்
பத்தரைமாற் றுத்தங்கம் பார்.

– **பேரா. வீ. ப. கா. சுந்தரம்.**

திருவரங்க வேள்கண்ட சீர்க்கழகம் பாரில்
மருவரங்க மெங்குமிசை மன்னி - யுருவிளங்கச்
செய்த பெருமை திருவரங்க வேட்கிளையான்
துய்யன்சுப் பையனதே சொல்.

– **சிவத்திரு. தத்புருட தேசிகர்.**

இப்புவியில்சுப்பையவேள் இருப்பதனால்
  சித்தாந்தக் கழகமென்னும்
கைப்பிள்ளை காளையாய்க் கைப்பொருளும்
  மெய்ப்பொருளும் கவினப் பெற்றுச்
செப்புகிற புகழ்க்கெல்லாம் சேரிடமாய்ச்
  சிந்தனையாற் சிறக்கக் காண்டும்
எப்படி? யாம் இவருளத்தை எண்ணத்தின்
  நிலையதனை இயம்ப வல்லேம்.

– **முதுபெரும்புலவர் ச. தண்டபாணி தேசிகர்.**

மதிப்பித்தற் குரியதக வுடையார்
  மலிவித்தார்மகிழ்தமிழ்நூல் அவர்தாம்
புதுப்பித்தார் பழந்தமிழ்நூல் அதனால்

புதுப்பித்தர்எனச்சொல்வேன் அவரை
பதிப்பித்தார் பலவகை நூல் அதனால்
பதிப்பித்தர் எனக்குறித்தல் பொருந்தும்
குதிப்பித்தார் உளத்துவகை குவித்தார்
குலவுதமிழ்ச் சுப்பையா குரிசில்.

**- கவிஞர் கோவை. இளஞ்சேரன்.**

முத்தமிழ் வாழ்வே முதற்குறிக்கோள் என்றுள்ளம்
வைத்த வ. சுப்பையா வாழியரோ - நத்தளவும்
முத்து விழவயரும் மூவிரு பத்தேழிற்
புத்துயிர் கொண்டு புகுந்து.

**- மொழிஞாயிற்று பாவாணர்.**

சங்கத்தார் மூவர் சமயத்தார் நால்வருடன்
இங்கொத்தோர் மேனி எடுத்ததெனத் - துங்கமகன்
தோன்றினான் தோன்றித் துணிந்து தமிழ்வளர்க்க
ஊன்றினான் என்றும் உளம்.

ஓலைச் சுவடி உறைந்த பொருளெல்லாம்
மேலைப் புலத்தார் வியக்குவணம் - நூலையிவன்
வண்ணவண்ணக் கட்டமைப்பா வைத்தான் திருப்பணியை
எண்ண எண்ண நெஞ்சமினிக் கும்.

**- அனிச்ச அடி திரு. ஆ. பழநி.**

எப்பையா தமிழ்வளரும் எங்கையா
தமிழ் நூல்கள் என்று கேட்டுச்
செப்பையா விடையென்றே இடக்காகச்
சிரிக்கின்ற சிறுமை மிக்க
தொப்பையா வயிற்றினிலோ ராயிரத்தெட்
டடியடித்த தூய னான
சுப்பையா வேளோரா யிரத்தெட்டு
நல்லூழி தொடர்ந்து வாழி.

**- பேரா. ந. சேதுரகுநாதன்.**

பாலென்றால் ஆவின்பால், பண்பில் அண்ணா,
பலநாட்டார் விழைந்துதவும் கொற்கை முத்து,

காலென்றால் பொதியிற்கண் தென்றற் காற்று,
கவியென்றால் கம்பன்கவி, இனிமை கன்னல்,
சூலென்றார் யானைச்சூல், சுவைக்குப் பாட்டு
தொல்சிறப்பு மொழியென்றால் தமிழே யாகும்;
நூலென்றால் கழகத்து நூலேர யென்று
நுவலச்செய் வெளியீட்டு வேந்தே வாழி!

அடிநாளில் மருத்தவத்தைக் கற்றி ருந்தால்
ஆயிரத்தோ டொன்றாக உலக மக்கள்
துடிநாடி ஆராய்வாய், தமிழுக் குற்ற
தொற்றுபிணி இளைப்பிற்குத் தொண்டு செய்யாய்
குடிநாளில் மொழியின்நோய் போக்க என்றே
கொணர்ந்ததுவோ தெய்வமுனை இலங்கைநின்றும்
முடிநாடாக் காவலான! மூத்ததோர் ஏறே!
மும்மைத்தமிழ் மருத்துவனே வாழி! வாழி!

சுழன்றும் தமிழலகம் சுப்பையாப் பிள்ளை
முழங்கும் தமிழ்ப்பற்றின் மூள - வழங்கும்
பலபல ஊழியவண் பைந்தமிழுக் கென்று
நிலவுக நின்று நிலத்து.

# 36. நறுமலர் நாயகர்

## அணி வாயில்

பூவெனப் படுவது பொறிவாழ் பூவெனல்
பாவலர் வழக்கில் பயில்பழ மொழியே;
தேமலர் தம்முள் மாமல ராவது
தாமரை எனவே சாற்றுவர்சான்றோர்;
நற்குடிச் சிறப்பை நயப்பவர் ஒப்பிலாப்
பொற்புறு தாரைக் கொப் பெனக்கூறுவர்;
போற்றுவார் வாழ்த்துரை சாற்றுவ தாயின்
நூற்றிதழ்த் தாமரைத் தோற்றமேய்ந் தென்பரால்;
திருவளர் தாமரை தெய்வ இருக்கையாய்
மருவிய தோற்றம் மதித்திடத் தகுமே;
இன்னவாம் தன்மைய எழில்திரு ஒருவரைத்
துன்னிய தென்னின் அன்னவர் பெற்றிமை
உரைத்திட ஒண்ணுமோ ஒண்டமிழ்ச் சான்றீர்!
வரையிலாப் பொதுநல 'வசு'வாம் அவரே;
வயிர முத்தரும் சுந்தரத் தம்மையும்
செய்தவப் பேற்றால் சிறக்கப் பிறந்து
தண்டமிழ் அன்னை தலைமக வாகித்
தொண்டால் உயர்ந்த துலங்கிய அரங்கர்க்
கிளையவ ராகி முதுபணி செய்தவர்;
மங்கையர்க் கரசியார் மகிழ்மண வாளராய்த்
தங்கிய நல்லறம் தழைத்திட வாழ்பவர்
அன்னவர் நலனெலாம் நன்னர்அறிந்தனர்,
முன்னரே பரவி மொழிந்துள்ள அன்பால்;
விரிவுறப் பெருகி நிரம்பிய அவற்றை
உரிமையால் சுருக்கி உரைக்குவென் கேண்மின்:

## மணி மாளிகை

அஞ்சா நெஞ்சத் தடலே றனையர்;
அரசு புகழும் அறிவுறு பெருமான்;
அருங்செய லாற்றும் பெருந் திற லாண்மையர்;
அமிழ்தத் தமிழே ஆருயி ராயவர்;
அறனறிந் தானறமைந் தொழுகும் அண்ணலார்;
ஆட்சித் தமிழுக் கடிகோல்ஆட்சியர்;
இளையருள் இளையர் எழுச்சி கூர்தலில்;
உழைப்பிற் கொருதாம் ஆகிய உரவோர்;
எடுத்துக் காட்டாய் இலங்கும் வாழ்க்கையர்;
எடுத்த செயலை இனிது முடிப்பவர்;
எண்ணியஎண்ணியாங் கெய்து திண்ணியர்;
'ஒளிநெறி' காட்டும் ஒள்ளிய செல்வர்;
ஒளிவளர் கதிரை ஒத்திடும் ஒருவர்;
கருவிலே திருவுறு கட்டமை தீரர்;
கல்லையும் கனியாய் அமைத்திடும் காட்சியர்;
கழகச் சிலைவடி கலைவல சிற்பியர்;
கவின்தமிழ் உணர்வைக் கருதி வளர்ப்பவர்;
குறள்நெறி பரப்பும் குரிசில், கோமகன்;
சாந்தில் தொடுத்த தீந்தேன் அன்பர்;
சிவநெறி தழைக்க உழைக்கும் செம்மல்;
செந்தமிழ் வளர்க்கும் செவிலித் தாயர்;
செயற்கருஞ் செய்கைச் செந்தமிழ் மாமணி;
சொன்மா றாத நன்மா மணியர்;
தக்கார் பலரைத் தடுத்தாட் கொண்டவர்;
தகுதி யறியும் தலைவருள் தலைவர்;
தண்டமிழ் காக்கும் தகவுறு தாத்தா;
தமிழ்மகள் பெற்ற தவப்பெரு மைந்தர்;
தமிழுயர் வொன்றே தம்முயிர்ப் பாயவர்,
தமிழே வாழ்வாம் தகைசால் பெரியர்;
தனித்தமிழ் வளர்க்கும் தனிப்பெருந் தகையர்;
திட்டமிட்டுத் தெளிந்துசெய் திருவர்;
தொகுப்புக் கலைக்குத் தொல்வர வானோர்;

தொல்காப் பியர்வழித் தோமில் குணத்தர்;
தோன்றிற் புகழொடு தோன்றிய தோன்றலர்;
நாட்டு நலனில் நாட்டமீக் கூர்ந்தவர்;
நூலக ஆட்சி மேலக வார்வர்;
நூறா யிரருள் நுவலும் ஒருவர்;
பகுத்தருங் காட்சிப் படுத்தலில் பழமையர்;
பயன்கரு தாமல் பணிசெயும் பான்மையர்;
பயனில சொல்லா நயன்மிகு நாவினர்;
பழந்தமிழ் நூல்களின் பாது காவலர்
பிழையறப் பதிக்கப் பிறங்கிய பெற்றியர்;
புதுக்கலை புனையும் புகழ்வளர் மேதை;
புலவருள் புலவர்; புரவலர் புரவலர்;
பேரா சிரியர்க்கும் பேரா சிரியர்;
மறுமலர்ச் சிக்கு வித்துடு மாண்பர்;
மறை மலை புகழ்க்கு நிறைநிலை மருகர்;
மனிதருள் வாய்த்த தலையாம் மனிதர்;
முத்தமிழ் வளர்க்கும் முத்துநேர் முனைவர்;
முதுவருள் முதுவர் முட்டறு புலமையர்;
முன்னறி வார்ந்த மூதறி வாளர்
வரலாற் றியலில் வளமாய் வார்பவர்;
வள்ளுவம் வளர்க்கும் வான்புகழ் ஆர்வலர்;
வாழ்வாங்கு வாழும் வள்ளுவ வழியர்;
வெளியீட் டியலின் வித்தகக் கலைஞர்.
இன்னவை யெல்லாம் இவர்தம் பவழ
நன்னர்விழாமலர்நயத்தகு நறுமணிப்
பேழையுள் எடுத்துப் பெய்தவை;
வாழியர் தாமரை வளர்மலர் எனவே.

**பின்னிணைப்பு**

# 1. புலமையர் வழங்கிய புகழுரை

## 1. அறிஞர்களுக்கு வாழ்வளிக்கும் அருமை உள்ளம்

*(உரைவேந்தர், சித்தாந்த கலாநிதி,*

**ஔவை சு. துரைசாமிப் பிள்ளை**

***தமிழ்த்துறைத் தலைவர், தியாகராயர் கல்லூரி. மதுரை.)***

நெல்லையிலிருந்து நேற்று நண்பகல் இங்கு வந்து சேர்ந்தேன். மணிவிழா சிறப்புற இனிது நடைபெற்றது. நெல்லை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்திரசேகரன் அவர்கள் கழகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார். கல்வித்துறை ஆய்வாளர் (Central Education Officer) திரு.கே. ஆர் மாணிக்கம் அவர்கள் தங்கள் உள்ளன்பின் உருவாய பொற்கிழி வழங்கிப் புகழ் புரிந்தார். சைவத்திரு. மாணிக்க வாசகம் பிள்ளை அவர்கள் பாராட்டு மலரைப் படித்தளித்தார். பேராசிரியர் அருளப்பன், திரு. நவநீத கிருட்டிணன் முதலியோர் பாராட்டியுரைத்தனர். எல்லாம் மிக்க சிறப்புடன் நடைபெற்றன. எனினும் நீங்கள் இல்லாமை எனக்குப் பெருங்குறையாக இருந்தது. எதிர்பாராத வகையில் நிகழ்ந்த இன்னாமை காரணமாக நீங்கள் இல்லாமை நேர்ந்தது எனது தவக்குறை.

“கால வேற்றுமையால் கருத்து வேற்றுமை தோன்றுவது இயல்பு. எனினும், உள்ளத்தில் தோய்ந்து ஊடுருவி நிற்கும் உண்மையன்பு ஒருவாற்றானும் மாறாது” என்னும் உயரிய உண்மை உங்கள்பால் ஒளிவிட்டுத் திகழ்வது காண என்மனம் நீராய் உருகி விட்டது. செந்தமிழ்ப் பெருந்தொண்டும் சீர்த்த மனப்பண்பும் உருக்கொண்டாற்போல் விளங்கும் உங்களது தூய அன்பு நினைக்குந்தோறும் எனக்குப் பெரியதோர் இறும்பூது நல்குகின்றது. அதனால் என் உள்ளத்திற் பிறந்தநன்றியுணர்வு என்னுயிரோடே கிடந்து பின்னிப் பிணைந்து நிற்கின்றது. பெருகி வரும்அன்பினார் என் புன்மை தோய்ந்த உள்ளம் புகழ்ந்து வாழ்த்துகின்றது உங்களை; ஆனால்,

புனையின் புல்லென்றது ஈர்த்துப் பிடித்து ஆட்கொள்ளும் இன்பச் செயலன்றோ இம் மணிவிழாப் பாராட்டு. இனி எற்றைக்கும் உங்கள் இன்ப அன்புறவில் இருந்து மகிழ்வேன்.

“அன்று உங்கள் அருமை யண்ணலின் அன்பிற் பிணிப்புற்ற என் தமிழறிவு உங்களது உயரிய தூய நட்பால் சிறந்து நீங்கள் அன்பு கனிந்து பாராட்டுமளவை அடைந்தமைக்குக் காரணம் நீங்களே என்பதையும் நான் மறவேன்; மறந்தால் கெடுவேன் என்பதையும் நான் நன்கறிவேன். செந்தமிழ்த்தாயின் திருவருளால் உங்கள் பணி சிறந்து மேன்மேலும் உயர்வதாக. தமிழறிஞர்கட்கு வாழ்வளிக்கும் உங்கள் உள்ளம் பனிபடு இமையமால்வரையினும் பெரிது; நிலத்தினும் பெரிது; நீரினும் ஆரளவின்று. அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயண்ணல் திருவருளால், அவனது அருள்போல் பெருகிய வையை மணலினும் பல்லாண்டு வாழ்க”.

## 2. தமக்குவமையில்லாத் தனித்தகை

**(டாக்டர் வ. சுப. மாணிக்கம்,** *எம்.ஏ., பி.எச்.டி.*
*தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணமலைநகர்.)*

*ஏதாவதொரு தமிழ்நூல், தமிழ்பற்றிய நூல் வேண்டும் என்றாலும், தமிழ்பற்றிய செய்தி வேண்டும் என்றாலும், தமிழ்ப் புலவர் உருவப்படம் வேண்டும் என்றாலும் கழகத்துக்கு எழுதுங்கள் என்ற அளவிற்குக் கழகப் புகழ் தமிழ்நாட்டிலும், அயல்தமிழ் நாட்டிலும், தமிழரிடையேயும், அயல் தமிழரிடையேயும மண்டிக் கிடக்கின்றது. கழகத்தால் தமிழ் வளர்ந்தது; தமிழால் கழகம் வளர்ந்தது என்ற சதுரப்பாடு நாடறியும்.*

*திட்டமிட்டுத் தமிழை வளர்த்தது கழகம். புற அழகு வளர்த்துத் தமிழ் ஏட்டினை வனப்பித்தது கழகம்; சொற்பொழிவு மாநாடுகள் கூட்டிப் புத்திலக்கியம் கண்டது கழகம்; விற்பனை பாராது, தமிழ் விலையற்றது என்ற கற்பனையில் எந்த நூல்களையும் பதிப்பித்த துணிவுடையது கழகம். ஆங்கிலப் பதிப்பு நிலையங்கள் தமிழ்நாட்டிலிருந்தும் தமிழ்பற்றிய நுண்ணிய ஆங்கில நூல்களை வெளியிட விரும்புவதில்லை. உலகிடைத்தமிழ் பரப்பும் விழைவோடும், ஆங்கிலத்தில் தமிழை எழுதுவோரை ஊக்கும் உணர்வோடும் இவ்வகை ஆங்கிலப் பனுவல்களை உலகத் திருமேனி வனப்பில் பதிப்பித்தது கழகம்.*

*திருக்குறள் எல்லார்க்கும் பொதுவாதல் போல எல்லா ஆசிரியர்க்கும் இடங்கொடுக்கும் பொதுக்கழகம் இக் கழகம். செந்தமிழே தமிழ் என்ற ஒருயிர்க் கொள்கையயை எந்நிலையிலும் போற்றி இன்றுவரை மறைமலை நூல்நிலையத்தை, தூய தமிழைக் கட்டிக் காப்பது நம் கழகம். பள்ளி நூலா, சிறுவர் நூலா, விளக்க நூலா, அறிவியல் நூலா, சிற்றிலக்கியமா, சங்க இலக்கியமா, பேரிலக்கணமா, எந்த*

*நூலினத்தைக் கழகம் வெளியிடவில்லை? கழகம் பதியாத தமிழ் நூல்வகை ஒன்று உண்டுகொல்?*

*கழகத்தின் இப் பெரிய சிறப்புக்கு அரிய பெரியார் ஒருவர் உளர்; என்றும் தமிழ் நினைப்பினர்; தூய தமிழ் எண்ணத்தினர்; தமிழே போல் தமிழ்ப்புலவர் உருவங்களைப் போற்றுபவர்; தமிழ்த் திட்டம் கற்பனையில் வகுத்து, வகுத்தபடி செயல் கண்டு வருபவர்; தமிழ்மை யுடையனவற்றைத் தொகுத்து, வகுத்துப் பதிப்பிப்பதில் தமக்குவமையில்லாத் தனித்தகை. அவர்தாம் தாமரைச் செல்வர் தமிழ்த்திரு வ. சுப்பையாபிள்ளை அவர்கள்.*

*தமிழுக்குப் பின்தான் கழகம் தோன்றியது என்றாலும் தமிழோடு ஒப்பக் கழகம் என்றும் வாழ்கதில். 1500 நூற் குழந்தைகளை ஈன்ற கழகக் காதலர் திரு. சுப்பையாபிள்ளை அவர்கள் நூற்றிதழ் அலரி நிரை கண்டாற் போல், நூறு பல்லாண்டு உரையும் பாட்டும் உடையோராய் வாழ்கதில்.*

## 3. உழைப்பின் மணிமுடியாட்சி

*(ஆட்சியாளர் மணிவிழாவின்போது* **இளவழகனார்** *அனுப்பிய வாழ்த்து)*

நம் தமிழகத்தில் தோன்றிய நன்மக்களில் தமிழகத்துக்கு ஆக்கமாய் விளங்கி ஒளியளிகும் மணிபோல்வார் மிகச் சிலரே. அச் சிலருள்ளும், நம் கழக ஆட்சியாளரவர்கள் ஒரு தனிவகையைச் சார்ந்த சிறப்பாளர். ஆற்றல் வாய்ந்த செம்மணி.

தமிழன்பும் சிவநேயமும் மிக்கு, ஆக்க நோக்கமும் அரிய வெற்றியுஞ் சிறந்து, அழுத்தமுந் திருத்தமும் அமைந்து, நன்கு வேரூன்றித் தழைத்து, நாடு முழுதுந் தண்ணிழல் பரப்பித் திகழுங் கூட்டு வாணிப நூற்பதிப்புக்கழகம், உலகுக்கு ஒரு ஞாயிறே போன்று தமிழகத்துக்கு நம் "சித்ததாந்த நூற்பதிப்புக் கழகம்" ஒன்றே ஒன்றுதான் என்பது எவரும் அறிந்தது.

இதற்கு விதை வழங்கியவர் நந்தமிழ்ப் பெருங் குரவர் ஆசிரியர் மறைமலையடிகளாரும் ஊன்றி முளைப்பித்தவர் ஆன்ற பெருந்தொண்டர் அவர் மருகர் திருவரங்கனாரு மென்றால், அதனைக் காலமறிந்து நாளும் உழைப்பு நீர் வார்த்து வருபவர் - அரங்கனார் இளவலார் - உழைப்பின் உருவம், சிக்கனத்தின் சின்னம், உறுதியின் குன்றம், ஒருமையின் திட்பம், ஊக்கத்தின்ன உறையுள், அறிவின் சுடர், தொழிலின் பொழில், கொள்கையின் வயிரம், ஆட்சியின் கவின் - நம் அருமைக் கழக ஆட்சியாளர், நூற்பதிப்பின் மன்னர், தமிழகத்தின் திரு, வ. சுப்பையா பிள்ளை அவர்களேயாவர்.

தமிழகத்தின் நூற்பதிப்புக்களில் முதன் முதல் அழகு ஏற்றியதும், இலக்கண இலக்கிய சமய நூற்பதிப்புக்களிலும் தொழில் முறையில் ஆக்கங் காணத் திருப்பங் கண்டதும், மக்கள் அறிவு நிலைகளுக்கும் நாட்டின் உணர்ச்சிகளுக்குந் தக்கவாறு நூல்களை இயற்றிக் கொடுத்து இருபக்கமும் ஆக்கமுகம் எழுப்பியதும், தொழிலில் கூட்டுத்திறன், அறிவுத்திறன், விரைவுத்திறன், செயல்திறன் எனப் பலவினைத் திறங்களை இழைத்துப் பெருமைமிகுத்ததும், நம் சித்தாந்த நூற்பதிப்புக்

கழகமே என்றால், அதன் பெரும் பங்கு மணிவிழாத் தலைவரவர்கட்கே.

ஆசிரியர் மறைமலையடிகளார் வழிநின்று நாளும் தமிழகத்துக்கு ஆக்கந்தேடும் உறுதிப்பாடுடையவர்களில் நம் விழாத் தலைவர், தலை சிறந்தவர். அடிகளார் காலத்திலும் பின்னும், தனித்தமிழ் இயக்கத்துக்கு உறுதிச்சுற்றமாய் இயக்கச்சக்கரமாய்ப் படைத்தளபதியாய்த் திகழ்பவர், செயல்படுபவர் இவர். அடிகளார் கண்ட தனித் தமிழ்ச் சொற்கள், தமிழ் ஆக்கக் குறியீடுகள் அல்லாத எத்தனையோ பல அழகிய தனித்தமிழ் ஆட்சிகளை நம் பிள்ளையவர்கள் கண்டுள்ளனர்.

ஆசிரியரடிகளின் நூற்பதிப்பு நூல்நிலைய அமைப்பு கல்லூரியமைப்பு முதலிய நன்னிணைனவுகளைச் செயற்படுத்தி நிறைவேற்றிப் பயன் கனிவிக்கும் முயற்சிகளும் உடையவர் இவர்.

இணையற்ற உழைப்பும், அவ்வுழைப்பின் ஒவ்வோராணவிலும் நிகரற்ற அறிவும், அவ்வறிவின் ஒவ்வொரு பகுதியிலும் செறிவுற்ற ஆக்கமும் உடையவர் இவ்வாட்சியாளர். உலகியல் அறிவும், அதுவே நேரத்தில் அறிவியல் உள்ளமும், அருள் அடிப்படையும் வியத்தகு முறையில் வாய்ந்தவர். அப்படியே மிகு விரைவிற் பிறரையும் பழக்கி உயர்த்திச் செயற்படுத்தும், புகழ்ப்படுத்தும், பேராற்றலும் மிக்கவர். மொழிப் புலமை மட்டும் உடைய தமிழறிஞர் பலரைநாட்டுக்குப் பயன்படத் திருப்பியும், மூலையிற் கிடந்தோரை முற்றங் கொணர்ந்து இயக்கியும் ஒளி விளக்குகளாக்கிய ஊற்றமும்

உடையவர். ஏனையெல்லாச் செயல்முறைகளையும்விட நூற்பதிப்பு முறை, கருத்துக்களை நாட்டிற் பரவலாகவும் நீளவும் பரவச் செய்யுந் திறன் அமைந்ததாகலின், செய்கைத் திறனமைவுங் கொண்ட இவர் ஏற்று உறுதிப்பணி இயற்றி வருதலால், தமிழகத்தின் ஆக்க நோக்கங்கட்கு இவரனையோர் பெருவாழ்வு இன்றியமையாததாகின்றது. தமிழகம் இவ்விறுவிறுப்பமைந்த ஆடவர் தலைவரின் வாயிலாக எத்தனையோ ஆக்க நோக்கங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. வாழ்க்கை வீரராகிய இவரது நல்வாழ்வுக்கு நாடு மகிழ்ச்சி முகங்கொண்டு வாழ்த்துகின்றது.

வாழ்க்கையில் அறுபதாம் ஆண்டின் நிறைவு விழா, அன்பு கலந்த உழைப்பின் மணி முடியாட்சியை நினைவுறுத்தும்; இனி, யாவர் நலத்துங் கருத்தமைந்த அருள் கலந்த செய்கையின் தண்ணிலா வாழ்க்கையில்நாட்கள் நடக்க வேண்டும்.

திருமிக்க வ. சுப்பையா பிள்ளையவர்களுக்கு மாம்பாக்கம்குருகுலம் பல்லாண்டு கூறுகின்றது. பள்ளிச் சிறுவர் இருநூற்று வரும், இல்லச் சிறுவர் நாற்பதின்மரும், ஆர்வலர் அன்பர்மாணவர்ஆயிரவரும், திரு. பிள்ளையவர்களின் வீர வாழ்வுக்கு, வெற்றி வாழ்வுக்கு, மணிநிலா வாழ்வுக்குப் பல்லாண்டு இசைக்கின்றனர்.

பாலியாற்றின் நன்மணல்பலவினும் இந் நூற்பதிப்பு வீரர் வாழ்நாட்கள் ஊற்றம் மிகுகவென அனைவேம் உள்ளமும் இம் மணிவிழா நாளில் திருவருளைப் பரவி இறைஞ்சுகின்றது. வாழி வ.சு. வெல்க அவர் இல்லம். போற்றி கழகத் தொண்டுகள்.

## 4. கருவிலே திருவுடையார்

**(திரு.பி.எல். சாமி,** ஐ.ஏ.எசு.,

*துணைச் செயலர், புதுவை அரசு, பாண்டிச்சேரி.)*

நான் கல்லூரிப் படிப்பை முடித்து இரு ஆண்டுகள் இருக்கும். எனக்குப் பன்மொழிப்புலவர் அப்பாத்துரை யவர்களின் நட்புக் கிடைத்தது. சங்க இலக்கியத்தில் எனக்குள்ள ஆர்வத்தையும் அறிவியல் கண்ணோட்டத்தில் சங்க இலக்கியத்தை ஆராயுந் திறனையும் கண்டு என்னை ஒரு கட்டுரை எழுதச்சொல்லிக் கழகத் தலைவர்திரு. சுப்பையா பிள்ளையவர்களிடம் அறிமுகப்படுத்திச் செந்தமிழ்ச் செல்வியில் அக் கட்டுரையை வெளியிட வைத்தார். அந்தமுதல் கட்டுரை சங்க இலக்கியத்தில் செடி கொடி நூற் செய்திகள் பற்றியதாகும். திரு. சுப்பையா பிள்ளையவர்களிடம் அறிமுகமானது முதல் அவர்கள் என் கட்டுரைகளைச் செல்வி இதழில் வெளியிட அடிக்கடி கேட்டுத் தூண்டிக் கொண்டேயிருந்தார். உயர்திரு. அப்பாத்துரையார் வழி ஏற்பட்ட அந்த முதல்அறிமுகமே என்னைக் கழக நூலாசிரியர்களில் ஒருவனாக்கும் நற்பேற்றைத் தந்தது. நான் தொடர்ந்து செந்தமிழ்ச் செல்வியில் சங்க நூல்களை அறிவியல் கண்கொண்டு ஆராய்ந்து கட்டுரைகளை வெளியிட்டு வரும்போது திரு. சுப்பையா பிள்ளையவர்கள் ஒருமுறை புதுவையில் எனது இல்லத்திற்கு வந்து நீங்கள் சங்க நூற் செய்திகளை அறிவியலுடன் தொடர்புபடுத்தி விளக்கம் தரும் நூல்களைக் கழக வாயிலாக வெளியிட வேண்டும் என்று தூண்டினார். தொடர்ந்து என்னை நினைவுறுத்தி எழுதச் சொல்லிக் கொண்டிருந்தார். அரசு ஆலவல் செய்யும் என்னை நூலாசிரியனாக்கியது திரு. சுப்பையா பிள்ளையவர்கள் என்றால்அது மிகைக்கூற்று அன்று. அவருடன் அளவளாவும் போது, அவரே சொல்வார்: எங்கேயோ இருந்த உங்களை என்னுடன் நட்புறவு செய்து இத்தகைய நூலை வெளியிடக்கூடிய இலக்கியமும் அறிவியலும் ஒருங்கே கைவரப்பெற்ற உங்களைக் கூட்டுவித்து இறைவனுடையஅரிய செயல் என்று கூறி மகிழ்வார்.

“இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்”

என்ற குறள் கருத்தைக் கடைப்பிடித்துச் செயலாற்றும் திறன் மிக்கவர் கழக ஆட்சியாளர். இல்லையேல் என்னைப் போன்ற வேலைத் தொல்லை மிக்க அரசு அலுவலன் ஒருவன் நூல் எழுத எண்ணியிருக்கவே முடியாது. இந்த ஆற்றல், திறன், திரு.சுப்பையா பிள்ளையவர்கள் கருவிலே பெற்ற திருவாக இருக்க வேண்டும்.

திரு. சுப்பையாபிள்ளையவர்களின் செயல் திறன் என்னை மிகவும் கவர்ந்தது. கடிதங்களுக்கு உடனுக்குடன் மறுமொழி எழுதுவார். அவருடைய செயல்விரைவு, சுறுசுறுப்பு என்னை வியப்பிலாழ்த்தியுள்ளன. அவருடைய தனித்தமிழ்ப்பற்று அளவு கடந்தது. பலமுறை தமிழ்நூல்களை வெளியிடப் போதுமான ஆதரவின்மை, மக்களிடையே விழிப்பின்மை ஆகியவை பற்றிப் பேசி அங்கலாய்த்துள்ளார். நல்ல உயரிய தமிழ்நூல்களை வாங்கு வாரில்லாமையினாலேயே போற்றுவாரில்லை என்று கூறுவார். இருப்பினும் என்றும் தளர்ச்சியை அவர்பால் நான் கண்டதில்லை.

என் நூல்களை வெளியிடும்போது அவரே சொல்வார், இவற்றை ஊதியத்தை எதிர்பார்த்து வெளியிட முடியாது என்று. இருப்பினும் என்னை ஊக்குவித்து இத்தகைய நூல்களைத் தமிழ் மக்கள் வாங்கும் நாள் வரும்; இத்தகைய முயற்சி வீணாகாது என்று கூறி என்னை மேலும் நூல்கள் எழுதத் தூண்டினார். இதன் காரணமாகவே “சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்” என்ற நூலும் வெளிவந்துள்ளது. இந்தஇரு நூல்களும் தமிழ் கூறும் நல்லுலகத்திற்குப் பயன் தந்திருந்தால் அதற்கு அடிப்படைக்காரணர் திரு. சுப்பையாபிள்ளையவர்கள் என்று நான் கூறினால் அது மிகையன்று.

## 5. கல்லைக் கனியாக்கும் தலைவல்லார்

*(ஆட்சிமொழிக் காவலர்*

**திரு. கீ. இராமலிங்கனார்** *எம்.ஏ., தமிழ் மணம், சென்னை.)*

*1936 இல் திரு.வ.சு. பிள்ளையவர்கள் முன்னின்று ஏற்பாடு செய்த கலைச்சொல் ஆக்கக் குழுவில் என்னையும் இரண்டு உட்குழுக்களில் உறுப்பினராகச் சேர்த்திருந்தார்கள். பச்சையப்பன் கல்லூரிப் பழைய கட்டிடப் பெருமண்டபத்தில் குழுக் கூட்டங்கள் நடந்துவந்தபோது, திரு. பிள்ளையவர்கள், உயிர் ஓட்டம் மிக்க மின்கம்பிபோல விளங்கி, நிகழ்ச்சிகளை இயக்கி வந்தது இன்றும் என் நினைவில் இனிக்கின்றது.*

*அப்போது நான் சைதாப்பேட்டை நகராட்சி ஆணையனாகப் பணிபுரிந்து வந்தேன். அக் குழு ஆராய்ந்து முடிவு செய்த கலைச் சொற்களே பின்னால் அத் துறையில் வளர்ச்சி ஏற்பட அடிப்படையாக அமைந்தன என்பது எவரும் அறிந்தஉண்மை.*

*தமிழைத் தம் தாய்மொழி எனப் பலர் அறிய விளம்பிக் கொண்டு வந்ததும், சிலர் தமிழர் மாநாடு என்னும் பெயரில் ஒரு மாநாடு கூட்ட மனம் கூசியவர்களாயத், தமிழ் அன்பர் மாநாடு என்னும் பெயரால் அதுபோது, ஒரு மாநாடு கூட்டியது கண்டு, திரு. பிள்ளையவர்களின் உள்ளக கொதித்து எழுந்ததை நான் அறிந்து அவர்களது தமிழ் ஆர்வத்தைப் பெரிதும் போற்றினேன்.*

*1938 இல் நான் பாளையங்கோட்டை நகராட்சி ஆணையனாக மாற்றப்பெற்றதும் அந்நகரிலே அவர்களது இல்லத்தில் திரு. பிள்ளையவர்களையும், அவர்கள் தமையனார் திரு.வ. திருவரங்கம் பிள்ளையவர்களையும் அடிக்கடி பார்த்து அளவளாவி அகமகிழ்வேன். வடசொல் தமிழ் அகரவரிசை முதலிய பல அரிய நூல்களின் ஆசிரியரும், அருள்திரு. மறைமலையடிகளார் திருமகளாருமான திருவாட்டி நீலாம்பிகை திருவரங்கம் அவர்களையும், அருமைக் குழந்தைகளையும் கண்டு களிக்கும்பேறு அங்கு எனக்குக் கிட்டி*

*வந்தது. தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை என்னும் தொடரை நினைவூட்டும் வகையில் திரு பிள்ளையவர்கள் குடியிருந்த திருக்கோயிலான அகவை முதிர்ந்த அவர்களின் அன்னை பெருமாட்டியாரையும் அங்குச் சேவித்து அளவளாவி அக முவப்பேன்.*

*அண்ணானாரும், தம்பியாரும், பலவகையான தமிழ்ச் செய்திகளைத் திரட்டுவதிலும் பழந்தமிழ் நூல்களைச் சேகரிப்பதிலும் கொண்டிருந்த உந்தும் ஊக்கத்தை அப்போது நேரிலும் அறிவேன். திரு.வ. திருவரங்கம்பிளையவர்களது சட்டையின் மூன்று பைகளிலும் கையெழுத்துத் தாள்களும், அச்சு ஏடுகளும் எப்போதும் அடைபட்டு இருப்பதைக் கண்டு வியப்பேன். சட்டைப் பைகள், அவர்கள் தமிழ்ப்பற்றினைப் போலவே பெரியனவாக இருந்தமையின், அவை கிடைத்வற்றையெல்லாம் கொள்ளும் தகையனவாயிருந்தன.*

*1940 இல் சென்னை, பவழக்காரத்தெரு, கழக அலுவலகத்தில், 'ஆட்சிச்சொல் அகரவரசை'யை ஆராயப் பிள்ளையவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். என் அன்பின் நண்பர்களான திரு. தேவநேயப்பாவாணர், திரு. காழி சிவ கண்ணுசாமிப்பிள்ளை, திரு. க.ப. சந்தோஷம் (கபசம், மகிழ்நன்) ஆகியவர்களைத் திரு.வ. சுப்பையாபிள்ளையவர்கள் கூட்டியிருந்தார்கள். என்னையும் அழைத்திருந்தார்கள். ஆராய்தற்குரிய சொற்பட்டியை என்னை முன்னமே ஆயத்தம் செய்யச்சொல்லிப் பெறு வைத்திருந்தார்கள். ஆய்வின் இடையிடையநோவிற்குச் சுவையான சிற்றுண்டியினையும் பானங்களையும் வழங்கி இன்புறுத்தி வந்தார்கள். மகிழ்ச்சியோடு, பட்டி ஆராயப்பெற்றது.*

இவ்வாட்சிச் சொல் அகரவரிசையைக் கழகம் வெளியிட்டதே தமிழகத்தில் தமிழ் ஆட்சி நடைபெறுவதற்குக் கால்களோ செய்ததாக அமைந்தது. நிகழ்ச்சிகளை ஓரளவு தமிழில் நடத்த விரும்பிய நகராட்சிகளில் நகர்மன்ற உறுப்பினர்களும், பணியாளரும் பார்த்துப் பயன்கொள்ள இவ்வகர வரிசை பெரிதும் வாய்ப்பாகக் கிடைத்தது.

நான் அலுவலாற்றிய நகராட்சிகளில் கடிதப் போக்குவரத்தில் பெரும்பகுதி தமிழில் நடந்து வந்தது அறிந்து, திரு. பிள்ளையவர்கள், நகராட்சி முறை என்னும் தலைப்பில்ஒரு நூல் வரைந்து தருமாறு, பார்க்கும்போதெல்லாம், என்னிடம் கூறிக்கொண்டிருந்தார்கள். அவ்வப்போது எழுதி வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள்.

1951 இல் நான் திருச்சி நகராட்சி ஆணையனாகச் சென்றதும் விடாப்பிடியாக என்னைப் பற்றிக் கொண்டார்கள். 1954இல் ‘நகராட்சி முறை’ உருவாயிற்று.

தமிழக அரசு, தனது ஆட்சியைப் படிப்படியாகத் தமிழுக்கு மாற்றத் திட்டமிட்டதுமே, அலுவலகங்களில் முன்மாதிரியாக வைத்துப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆட்சித் துறைத் தமிழ் என்னும் ஒரு நூல் வரைந்து தர வேண்டுமென்று திரு. பிள்ளையவர்கள் என்னிடம் சொல்லி வந்தார்கள்.

கல்லையும் கனியாக்கும் கலைவல்லவர்களாதலின், எளிதில் இயங்கா இயல்புடைய என்னையும் இப் பணியில் ஈடுகொள்ள வைத்தது, எனக்கே வியப்பளிக்கும் செய்தியாக என்றும் இருந்து வரும் பாங்கினதாகும். எண்ணத்தால் திட்டமிட்ட அளவிலேயே நின்றுகொண்டு, எழுதுவதில் முன்னேற்றம் இல்லாதிருந்தது கண்டு, தம் எழுத்தர்ஒருவரை அன்றாடம் எனது இல்லத்திற்கு அனுப்பி வைக்கலனார்கள். இரண்டொரு மணி நேரம், நான் சொல்லச் சொல்ல, அவர் எழுதிக் கொண்டே வந்தார். எறும்பூரக் கல்லும் குழிந்தது; பத்துத் திங்களில் நூலும் அச்சுப் பொறியேறும் அளவினதாயிற்று.

தமிழில் எழுதி மாட்டப்பெறும் பெயர்ப் பலகைகள் - பெரும் பாலும் வணிக நிறுவனங்களுக்குரியன - பொருத்தமான வடிவில், திருத்தமான மொழியில் பிழையின்றி எழுதப்பெற்றிருப்பதைக் காண்பதுஅரிகதாக இருக்கின்றது. இதைக் கூறிக் கூறித் துன்புறுவார்கள் திரு. பிள்ளையவர்கள்,

தம் எழுத்தர்களைத் தெருவு தோறும் ஏவி, ஆங்காங்கு இடப்பெற்றுள்ள பலகைகளில் க்ாணும் சொல் உருவங்கதைத் திரட்டிவரச்செய்து என்னிடம் ஒரு படியைத் தந்துள்ளார்கள். நல்ல தூய தமிழிலே அப் பலகைகளை அமைப்பதற்கு வணிகர்களுக்கு ஊக்கம் ஊட்டும் வகையில் அச்சிட்டு வழங்க, அப் பெயர்களுக்குத் திருந்திய உருவமைத்துத் தருமாறு என்னைப் பலமுறை பார்த்து வலியுறுத்திக் கூறியபடி இருக்கின்றார்கள். எனக்கும்ம இப் பணியை இனிது முடிக்க அவா உந்தாமல் இல்லை. எனினும் அவர்களது இடைவிடாத தூண்டுகோலே, இத் தொண்டில் என்னை விரைந்து ஈடுபடுத்தி வெற்றியோடு இதனை முற்றுவிக்கத்துணைபுரியும் ஆற்றலுடையதாகும்.

திரு. பிள்ளையவர்களைக் காணுபோதெல்லாம், நினைக்கும்போதெல்லாம் அவர்களது அசைக்கலாகாத அன்னைமொழிப்பற்றும், தணிக்கலாகாத தனித்தமிழ் ஆர்வமும் என் நெஞ்சத்தை ஈர்த்து இன்புறுத்தும். தமிழ்த்தாய் செய்த தவப்பயனாய் அவர்கள் தமையனார் திரு. வ. திருவரங்கம்பிள்ளையவர்களும், திரு. பிள்ளையவர்களும் ஐம்பது ஆண்டுகட்கு முன்பு திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைத் தோற்று வித்திராமலிருந்தால் தோற்றுவித்தும், ஓயாது, முனைந்து இன்றுள்ள அரும்பெரு நிலைக்குக் கழகம் உயருமாறு உழைத்திராமலிருந்தால், இத்தனை இலக்கிய, இலக்கண அறிவுசால் நூல்களை இவ்வளவு திருத்தமான முறையில் இத்துணை அழகழகான வடிவங்களில் தமிழுலகம் எங்ஙனம் பெற்றுப் பயனடைய இயன்றிருக்கும் என எண்ணி எண்ணி இறும்பூது எய்துகின்றேன்.

# 2. புரவலர் வழங்கிய போற்றுரை

### 1. அறிஞர்களுக்கு விண்ணப்பம்

28-1-'72

*அன்புநிறைந்த அறிஞரவர்களே,*

*வணக்ம். கழகம் தொடங்கிய காலமுதல் கழகத்தை நிறுவிய என் தமையனார் திருவாளர் திருவரங்கம் பிள்ளை அவர்கள் தமக்கு வரப்பெற்ற புலவர் பலர் கடிதங்களைத் தொகுத்து வைத்திருக்கின்றனர். அதேபோல் தமியேனுக்கு வரப்பெற்ற கடிதங்களை யானும் தொகுத்து வைத்திருக்கிறேன். தாங்கள் கல்விபயின்ற தங்கள் ஆசிரியன்மார் கடிதங்களும் தங்களிடம் இருத்தல் வேண்டும். அவற்றில் ஒருசிலவற்றைத் தேர்ந்தெடுத்துத் தமியேனுக்கு அனுப்பி வைத்தால் படி எடுத்துக் கொண்டு அவற்றைத் தங்கட்குத் திருப்பி அனுப்பிவைப்பேன். மேனாட்டினர் இங்ஙனம் புலவர் கடிதங்களைத் தொகுத்து அச்சிட்டுள்ளனர். நம் நாட்டிலும் காந்தியடிகள், நேரு பெருமகனார், விவேகானந்தஅடிகள் முதலியோர் கடிதங்கள் நூல்வடிவில் வெளியிடப்பெற்றிருக்கின்றன. அம்முறையில் நம் தமிழ்ப்புலவர் கடிதங்களில் ஒரு சிலவற்றையாவது படங்களோடு அவர்களைத் தமிழ்நாடு மறவா வண்ணம் பதிக்கலாம் என்பது எனது கருத்து. யார் யார் கடிதங்கள் தங்களிடம் இருக்கின்றன என்பதை அன்பு கூர்ந்து இணைத்துள்ள அட்டையில் எழுதி அனுப்பும்படி வேண்டுகின்றேன்.*

*தங்கள் அன்பு மறுமொழி எதிர்பார்க்கும்*

*அன்புள்ள,*

***வ. சுப்பையா***

*கழக ஆட்சியாளர்.*

## 2. பதிப்புத்துறையில் பதித்த பட்டறிவு

31-12-’52

........ உரையின் போக்கு நன்கு அமைந்திருக்கிறது. உரையில் மடை இடையே எழுத்துப் பிழைகள் காணப்பெறுகின்றன. பதவுரையில் பதம்பதமாகப் பார்த்து உரை எழுதப்பட்டிருக்கிறது. தொடர் உரையாகக் குறள் பரி. உரை போல் இருத்தல்நன்று. இனி எழுதுவதை அவ்வாறு எழுதுதல் நன்று. சிறுபிள்ளைகட்குப் பதம் பதமாக எழுதலாம். தொடர் எழுதும்போது பதம் பதமாகப் பிரித்து எழுதி உரை எழுதுதல் நன்று.

மேற்கோள் பாடல்களுக்கு இடம் குறிப்பிடல் வேண்டும். நூலும் செய்யுள் எண்ணும் முதன்மை.

நச்சினார்க்கினியர் உரையை நயமாய் ஒன்றிரண்டு இடங்களில் கண்டித்தல் போதும். நச்சினார்க்கினியர் உரைக்கு மாறுபட்டுத் தாங்கள் எழுதுகிற இடங்களில் நச்சினார்க்கினியர் உரையை அப்படியே எழுதிவிடலாம். நம் உரையைப் படிப்பவர் நச்சினார்க்கினியர் உரைநூலை வாங்கிப் படிக்க வேண்டியதிராது.

அகல உரையில் ஒரே பத்தியாக ஒருபக்கம் இரண்டு பக்கம் எழுதுவதைக் கருத்து முடிவுக்கேற்பப் பல பத்திகளாகப் பிரித்துவிடல் வேண்டும். இல்லையேல் படிப்பவர்கட்கு அயர்ச்சி ஏற்படும். கடின சந்திகளையும் உரைநடையில் பிரித்துவிடவேண்டும். அச்சுக்கேற்றபடி சொற்களைச் - சொற்றொடர்கள்- இடம் விட்டு எழுதுதல் வேண்டும். ஒரு முறை ... உரையைப் படித்து எழுத்துப் பிழைகளைத் திருத்தி அனுப்புவதோடு மேற்குறிப்பிட்ட குறைகளையும் நீக்கித் திரும்பிப் பதிவு செய்தனுப்புமாறு விரும்புகிறேன்.

அருஞ்சொல் சொற்றொடர் பொருள் விளக்க அகர வரிசை வரிஎண் கொடுத்து எழுதிச் சேர்த்தல் வேண்டும். பொருள் அகரவரிசையும் எழுதிச் சேர்த்தல் நன்று.

## 3. நாட்டு நலன் நாடிய நற்றொண்டு

6-11-'65

.....................................................................................................

புலவர்கள் என்மீது தவறாகக் குற்றம்கற்பித்துப் பகை கொள்ளினும் யான் அவர்கள் புலமை நலத்தினை மறப்பதில்லை. எப்போதும் அதனைப் பாராட்டும் இயல்பினன். என் மருமக்கள்மார்கட்கும், அவ்வாறே எனக்குப் பின்னரும் நடந்துவரும்படி தெரிவித்து வருகின்றேன்.

என்மீது அப்பழுக்கற்றபடி நம்பிக்கை வைக்குமாறும் அன்புகாட்டுமாறும் விரும்பி வேண்டுகின்றேன். அதனால், தங்கள் புலமைத் தொண்டு நம் மொழிக்கும் நாட்டுக்கும் பயன் மிகத்தரும். இதுகாறும் செய்த தொண்டு போதும் என்று தாங்கள் கருதுவதானால் இருபாலாரும் வாளா விருந்து காலந்தள்ளலாம். ஆனால் இறைவன் நம்மைக் கொண்டு ஆற்றுவிக்கும் பயனுடைத் தொண்டினால் ஏற்படும் அளப்பில் நன்மைகள் நம் நாட்டுக்குப் பயன்படாமல் ஒழியுமே!

இனி யான விரும்பும் பணிகளைத் தாங்கள் அன்புடன் ஏற்றுச் செய்து எனக்கு மனநிறைவு அளிப்பீர்கள் என்று நம்பிக்கை கொண்டே இவ்வாறு விரித்தெழுதவேண்டிய தாயிற்று. யான் வாழுங்காறும் யான் விரும்பும் பணிகளை ஏற்றுச் செய்துவருவதோடு எனக்குப் பின்னரும் யான் விரும்பி விட்டுச் செல்லும் பணிகளைக் கழகத்துககுச் செய்து வரும்படி வேண்டுகின்றேன்.

அவ்வாறே செய்வதற்குத் தங்கட்குச் செவ்விய நலனும் நீடுவாழ்வும் புரியும்படி அம்பலவாணர் பொன்னடிகளைப் போற்றி வேண்டுகின்றனன்.

தங்கள்அன்புள்ள,

**வ. சுப்பையா.**

## 4. காலங் கணிக்கும் கணியம்

5-8-'71

*பேரன்புமிக்கீர்,*

*வணக்கம். நலம்; நலம் பெருக. தங்கள் அன்பான 4-8-71 கடிதம் கைவயம். நன்றி.*

*இலக்கண அகராதியை முதற்கண் மிகவும் விரித்து எழுதுதல் வேண்டாமென்பதே அதனை விரிவுபடுத்தி வெளியிடலாம். பத்து ஆண்டுகளில் அத்தகைய ஆர்வம் பெருகும் என்ற முழு நம்பிக்கை யுடையயேன்.*

*நம் செல்வம் இப்போது வெளிநாடுகட்குச் செல்வதில்லை. இங்கேயே தங்குவதால் ஊர்திகள் பெருகுவதும், இல்லங்கள் யாண்டும் எடுக்கப்பெறுவதும், பொதுவாக வாணிகமும் தொழிலும் வளர்ந்து வருதலும், பண்டங்கள் விலைஉயர்ந்து வருதலும் காண்கின்றோம். பணம் பெருகிய பின்னரே நம் பழைய இலக்கியங்கள். கலைகள், திருக்கோயில்கள் முதலிய அறநிலையங்கள்மீது நம் மக்கட்கு அளவற்ற பற்று ஏற்படும். பணப் பெருக்கத்தால் அமெரிக்கா போன்ற பிற நாட்டினர் தங்கள் நாட்டு இலக்கியங்களைப் பேணுவது மட்டுமின்றி வெளிநாட்டு இலக்கியங்களையும் வாங்கிப் போற்றுகின்றனர். அத்தகைய எண்ணம் நம்மிடமும் சில ஆண்டுகட்குப்பின் ஏற்படும் என்று உண்மையாகவே நம்புகின்றேன். எனவே நம் பணிக்கு நல்ல எதிர்காலம்உண்டு.*

*தங்கள் அரிய முயற்சிக்கு நல்ல ஆதரவு பிற்காலத்தே கிடைக்கும். தங்கள் நலங்களைக் கோரித் திருவருளை வழுத்தும்,*

*அன்புள்ள,*

***வ. சுப்பையா***

*கழக ஆட்சியாளர்.*

## 5. அருள்நலம் ததும்பும் அறிவுரை

11-4-'72

*பேரன்புடையீர்,*

*வணக்கம். நலம்; நலம் விழைகின்றேன்.*

*தாங்கள் உடல்நலம் குன்றியிருக்கிற செய்தி மிக்க வருத்தந் தருகிறது. யான் அண்மையில் ஏதோ என் மனத்தில்தோன்றிய கருத்தினைத் தங்களிடம் நேரிலும் சொன்னேன். கடிதத்திலும் எழுதித் தெரிவித்தேன். வேலையும் ஓய்வும் கலந்தே வாழ்க்கையில் அமைதல் வேண்டும். கிழமைக் கொருநாள் தனியே எழுத்துப்பணி ஒன்றுமில்லாமல் ஓய்வாக இருத்தல் இன்றியமையாது வேண்டப்படும். முதன்மை இல்லாத வேலைகளை அறவே விட்டுவிடுதல் வேண்டும். பயனில் நட்பையும் அறவே வலக்காரமாய் நீக்கிவிடுதல் வேண்டும். சில குறிப்பான வேலைகளைத் தனியிடம் அமைத்துத் தங்கிப் பிறரறியா வண்ணம் செய்தலும் வேண்டும்.*

*மறைமலையடிகளாரைப்போல் உணவு வகையில் மிகவும் கருத்துச் செலுத்துதல் இன்றியமையாததாகும். உடலிற் சோர்வு ஏற்படும் வகையில் படிப்பதோ எழுதுவதோ கூடா.*

*இனி அன்பு கூர்ந்து அளவோடு வேலைகளைச் செய்து வாருங்கள்.*

*ஞாயிறன்று நம் கழகப் பெரும்புலவரவர்கள் நிறைவு விழா மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. அவர்கள் பிரிவு ஆற்றொணாததே. இறை செயல் என அமைதியுறுகின்றேன்.*

*தங்கள் நலன்களை விரும்பும்,*

*அன்புள்ள*

***வ. சுப்பையா.***

## 6. உயிரொடும் ஒன்றிய உருக்கம்

25-10-77

*என் பேரன்பிற்குகந்த புலவர் பெருமானாரே,*

*இன்று காலை தங்கள் இன்னுயிர்த் துணைவியார் தங்களொடு வாழ்ந்த காலம் முடிவுற்ற துன்பச் செய்தி கிளைமேலாளர்வழி அறிந்து யானும் என் மனைவியும் மக்கள் மருமக்கள்மாரும் ஆற்றொணா வருத்தம் அடைகின்றோம். ஏதோ ஒரு சில முறை தங்கள் மனத்திற்கினிய மாண்புடைத் துணைவியாரை யாங்கள் கண்டபோது அவர்கள் காட்டிய எல்லையில் அன்பினை நினைந்து நினைந்து வருந்துகிறோம். திருவருளின் ஆணையின்படி அன்புருவாம் செல்வியாரை மணந்து, அவர்தம் அன்பிலும் பண்பிலும் பிணிப்புண்டு, அறிவிற்சிறந்த மக்களை ஈன்று, இருபத்தைந்து ஆண்டுகட்குமேல்இனிது இல்லறம் நடத்திய தங்கட்கு எத்துணை வருத்தம் ஏற்பட்டிருக்கும் என்பதை எங்ஙனம் அளவிட்டு உரைக்க முடியும்?*

*எல்லாம் இறைவன் நியதியின்படி நடைபெறுகின்றன என்பது மட்டுமே நமக்கு அமைதி தரும் அருமருந்தாகும். நூல்கள்வழி எல்லாம் அறிந்த தங்கட்குச் சிற்றறிவினனாகிய யான் எங்ஙனம் மேலும் கூறுவது! தாங்கள், மனைவியார் பிரிவு குறித்த மனச் சோர்வினை அகற்றி, அறிவு சான்ற மக்கட்கும் ஆறுதல் கூறி, அமைதி பெறும்படி வேண்டுகிறேன். எல்லோருக்கும் எங்கள் உளம் நிறைந்த ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். தங்கள் எல்லாரையும் விட்டுப் பிரந்த இன்னுயிர் எல்லாம் வல்ல இறைவன் திருவடியில் இன்ப அன்புற்று அமர்கவென யானும் என் மனைவியும் வேண்டிக்கொள்கிறோம்.*

*அன்புள்ள,*

***வ. சுப்பையா.***

## 7. நயத்தகு நன்றியின் கொள்கலம்

1-8-1979

*பேரன்புடையீர்,*

*வணக்கம். தங்கள் அன்பு நிறைந்த கடிதம் கிடைக்கப் பெற்றுப் பெருமகிழ்ச்சியுற்றேன். டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக வருவதற்குரிய வாய்ப்பு இருக்கிறதாக இன்று தெரிந்து மகிழ்கிறேன்.*

*"1920 முதல் பெரும் புலவர்களோடு பழகும் வாய்ப்பு தங்கட்கு இருந்திருப்பதால் தங்கள் வரலாறு விரிவாக வருதல் வேண்டும்" என்று அவர்கள் வலியுறுத்திச் சொன்னார்கள்.*

*என் அருமைத் தமையனார் வரலாறு பீடிகையாகவும், மிகவும் சிறப்பாகவும் அமைய வேண்டும் என்பது எனது கருத்து. அவர்கள் என்னைப் படிக்க வைத்து ஆளாக்கிவிடாவிடின் யான் சிறப்படைவதற்கு வழி கிடையாது அவர்கட்கு எவரும் ஏவாமலே, எவர் துணையும் கிடைக்காமலே மொழி, இனம், நாடு மூன்றுக்கும் உழைக்க வேண்டும் என்ற எண்ணம் உருவானது வியப்பாகும். அதனாற்றான் மறைத்திரு மறை மலையடிகளார் தொடர்பு ஏற்பட்டது. அது திருவருட்செயலே. அவர்கள் 54 அகவை வரையே வாழ்ந்தனர். அது தமிழ்நாடு செய்த தவக்குறைவே எனினும், அவர்கள் வழியைக் கடைப்பிடித்து நடக்கும் பற்றையும் ஆற்றலையும் இறைவன் எனக்குக் கொடுத்திருப்பதுதான் போற்றி மகிழ்தற்குரியது. என்னுடைய வாழ்நாளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவும் திருவருட் செயல் என எண்ணி எண்ணி யான் மகிழ்வதுண்டு. ஏற்பட்ட துன்பியல்நிகழ்ச்சிகள் யான் மகிழ்வதுண்டு. ஏற்பட்ட துன்பியல் நிகழ்ச்சிகள் எல்லாம்நன்மையாகவே முடிந்து புகழ் ஏற்பட்டு வருகின்றது.*

*நூல் நிலைய விழாவைச் செப்டம்பர் முதற்கிழமை நடத்த வேண்டி வரும். மாண்புமிகு முதலமைச்சர் ஒரு கிழமையில்நாள் குறிப்பிடுதல் கூடும். தாங்கள் தமியேன் வரலாற்றைச் சிறந்த முறையில் எழுதத் திட்டமிட்டிருப்பது மிக்க மகிழ்ச்சி தருகின்றது.*

*தங்கள் நலங்களைக் கோரித் திருவருளை*

*வாழ்த்தும் அன்பன்,*

**வ. சுப்பையா**

*ஆட்சியாளர்.*

## 8. தெய்வத் திருவருளில்திளைக்கும் நெஞ்சம்

5-1-1980

*கழக இலக்கியச் செம்மல் அவர்கட்கு,*

*வணக்ம். கழகம் தோன்றுவதற்கும் இத்துணை அளவு வளர்வதற்கும் 1914 இல் என் தமையனார்க்கும் மறைமலையடிகளார்க்கும் திருவருளால் ஏற்பட்ட தொடர்பே காரணமாகும். அப்போதே நூல்களைத் தொகுப்பதில் என் தமையார்க்குப் பெருவிருப்பம் ஏற்பட்டு அவர்கட்குப் பெரும் பொருள் தொகுத்துக் கொடுத்து வந்தனர். 1917இல் மீண்டும் அடிகளாரை இலங்கைக்கு வரவழைத்துப் பெரும் பொருள் தொகுத்துக் கொடுத்தனர். என் தமையனார் ஊருக்கு வரின் வி.பி.பி. யினைப் பெறுவர். அடிகளார் தொடர்பு என் தயைனார்கசு ஏற்பட்டதும, 1920 இல் கூட்டுப் பங்கு நிறுவனம் தொடங்குமாறு 100 பங்குகள் எடுத்து ஆயிர ரூபா அருட்செல்வர் தி.செ. விசுவநாதபிள்ளை அவர்கள் வழங்கியதுமே கழகம் இப்போது பெரும் புகழொடு வளர்ந்திருப்பதற்குக் காரணம். அப்படி இணைப்பு ஏற்பட்டமை திருவருட் செயலே. மேலும் தொடக்க முதல்இன்று வரை தமியேன் கழகப் பணியினைப் பலதுறைகளில் ஆற்றுவது திருவருட் செயலே. தாங்கள் தமியேன் வரலாற்றை எழுத இசைந்து எழுதி வருவதும திருவருட்செயலேயாம்.*

*அண்மையில் கழக நூலாசிரியர்களில் புலவர் கோ. வே. பெருமாள் அவர்களும், புலவர் அரசு அவர்களும், என்.கே. வேலன் அவர்களும் பிரிவுற்றமை என் மனத்தைப் பெரிதும் வருத்துகின்றது. நூலக விழாவிலே எடுக்கப்பெற்ற படம் ஒன்றில் வேலன் அவர்கள் குடையைக் கையில்வைத்து நாற்காலியில் என்பக்கமாக அமர்ந்திருப்பது திருவருட் செயலே.*

*இங்ஙனம்,*

***வ. சுப்பையா.***

## 3. கழக ஆட்சியர் வ.சு. அவர்கள் வரலாற்றில் இடம்பெற்றுள்ள காலக் குறிப்புகள் சில

| | |
|---|---|
| *22-9-1897* | *வ.சு. அவர்கள் பிறப்பு.* |
| *-1900* | *தந்தையார் வயிரமுத்துப் பிள்ளை இயற்கை எய்துதல்.* |
| *-1907* | *திருவரங்கர் ஈழத்திற்குச் செல்லுதல்.* |
| *-1914* | *மறைமலையடிகளார் கொழும்புக்கு முதன்முறை செல்லுதல்.* |
| *-1916* | *வ.சு. அவர்கள் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெறுதல்.* |
| *-1916* | *வ.சு. அவர்கள் கொழும்புக்குச் செல்லுதல்.* |
| *-1917* | *மறைமலையடிகளார் மீண்டும் கொழும்புக்குச் செல்லுதலும் வ.சு. சந்தித்தலும்.* |
| *-1917* | *கொழும்பில் திருசங்கர் கம்பெனி நிறுவுதல்.* |
| *-1918* | *வ.சு. மறைமலையடிகளாரைப் பல்லவபுரத்தில் சந்தித்தல்* |
| *-1918* | *சென்னையில் திருசங்கர் கம்பெனி நிறுவுதல்.* |
| *21-9-1920* | *சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிவு* |
| *பிப்ரவரி 1921* | *சென்னைப் பவழக்காரத் தெருவில் கழகக் கிளை நிலையம் அமைதல்.* |
| *பிப்ரவரி 1922* | *வ.சு.வை மலேரியாக் காய்ச்ல் தாக்குதல்.* |
| *பிப்ரவரி 1923* | *செந்தமிழ்ச் செல்வி இதழ் தொடங்குதல்* |
| *பிப்ரவரி 1924* | *இரத்தாட்சி சைவப் பஞ்சாங்கம் தொடங்குதல்.* |

| | |
|---|---|
| *1925, 1926* | *நெஞ்சில் ஈளைத்துயர்.* |
| *2-9-1927* | *திருவரங்கர் நீலாம்பிகையார் திருமணம்.* |
| *பிப்ரவரி 1932* | *திருக்குறள் நாட்காட்டி வெளியீட்டுத்தொடக்கம்.* |
| *7-7-1935* | *வ.சு. மங்கையர்க்கரசியார்திருமணம்.* |
| *18,19,-5-1935* | *திருவள்ளுவர் திருநாட்கழகம்தோன்றுதலும் முதல் ஆண்டு விழாவும்.* |
| *4-6-1936* | *திருவள்ளுவர் திருநாட்கழக இரண்டாம் விழா.* |
| *22-5-1937* | *திருவள்ளுவர் கழக மூன்றாம் விழா (பாகனேரி).* |
| *-1937* | *பலிவிலக்குச் சங்கம் தோற்றுவித்தலும், வலிவிலக்குப் போர் வெற்றியும்* |
| *29-8-1937* | *தமிழ்ப்பாதுகாப்புக் கழகம் தோற்றுவித்தல்.* |
| *-1943* | *தமிழறிஞர் கழகம் தோற்றுவித்தல்.* |
| *28-4-1944* | *திருவரங்கர் பெரும் பிரிவு.* |
| *5-11-1945* | *நீலாம்பிகையார் பெரும் பிரிவு.* |
| *4-10-1948* | *அப்பர் அச்சகத் திறப்பு விழா.* |
| *9-9-1950* | *மறைமலையடிகள் இறுதி முறி எழுதுதல்.* |
| *15-9-1950* | *மறைமலையடிகள் பெரும் பிரிவு.* |
| *18-10-1950* | *சிவஞானமுனிவர் நூல்நிலையம் திறப்பு விழா.* |
| *27-4-1951* | *நான்காவது தமிழ்மாநாட்டுக்கா யாழ்ப்பாணம் செல்லுதல்.* |
| *2-5-1951* | *பெரியம்மை தாக்குதலால் யாழ்ப்பாணம் மருத்துவமனை சேர்தல் (42 நாட்கள்)* |
| *14-6-1951* | *யாழ்ப்பாணத்திலிருந்து நெல்லைக்குத் திரும்புதல்.* |
| *2-9-1952* | *அன்னை சுந்தரத்தம்மையார் இயற்கை எய்துதல்.* |
| *8-6-1953* | *பாளையங்கோட்டையில் இருந்து குடும்பத்தைச் சென்னைக்கு அழைத்து வருதல்.* |
| *11-6-1956* | *மூத்தமகளார் வடிவழகி திரு. இரா. கலியாண சுந்தரர் திருமணம்.* |
| *20-9-1957* | *ஆட்சியாளர் மணிவிழா.* |

| | |
|---|---|
| *24-5-1957* | *மனோன்மணீயம் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை விழா, சென்னை.* |
| *24-8-1958* | *மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்பு விழா, சென்னை.* |
| *24-6-1959* | *இளையமாளார் வயிரமணி திரு. இரா. முத்துக் குமாரசாமி திருமணம்.* |
| *20-8-1961* | *கழகத்தின் 1008 ஆம் நூல் வெளியீட்டு விழா.* |
| *12-7-1962* | *மறைமலையடிகள் கலைமன்றத் திறப்பு விழா, பல்லாவரம்.* |
| *11-2-1966* | *தென்னிந்திய தமிழ்ச் சங்கக் கட்டிடத் திறப்பு விழா, நெல்லை.* |
| *31-7-1967* | *கா.சு. பிள்ளை ஆராய்ச்சி மன்றத் துவக்கவிழா, சென்னை.* |
| *14-9-1967* | *திருவரங்க நிலையத் திறப்புவிழா, நெல்லை.* |
| *14-11-1967* | *குமரகுருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளித் துவக்க விழா, நெல்லை.* |
| *14,15-10-1968* | *கழகச் சார்பில்திருவள்ளுவர் விழா, சென்னை.* |
| *26-1-1969* | *ஆட்சியாளர்தாமரைச்செல்வர் (பத்மஸ்ரீ) விருது பெறுதல்.* |
| *1-9-1969* | *தணிகைமணி செங்கல்வராய பிள்ளை டாக்டர் பட்டம் பெறுவித்தல்.* |
| *18-20-12-1970* | *கழகப் பொன்விழா, சென்னை.* |
| *27-3-1972* | *வள்ளலார்திருவருள்மண்டபத் திறப்புவிழா.* |
| *4,5-8-1973* | *கழக ஆட்சியாளர் பவளவிழா.* |
| *28-1-1977* | *மறைமலையடிகள் நூற்றாண்டு விழா.* |
| *29-1-1977* | *செந்தமிழ்ச் செல்வியின் பொன்விழா.* |
| *15-1-1979* | *ஆட்சியாளர் தமிழக அரசால் 'செந்தமிழ்ச் செல்வர்' என்னும் பட்டம் வழங்கப் பெறுதல்.* |
| *4-11-1979* | *மறைமலையடிகள் நூல்நிலைய 20 ஆம் ஆண்டு நிறைவு விழா.* |
| *24-1-1983* | *இயற்கை எய்துதல்.* |

## 4. கழகம் நடத்திய மாநாடுகள், விழாக்கள் முதலியன

9-3-1940 கலித்தொகை மாநாடு.

7-11-1940 குறுந்தொகை மாநாடு.

15-12-1940 அகநானூறு மாநாடு.

21-27-5-1941 மெய்கண்ட சாத்திர மாநாடு, நெல்லை.

12-2-1942 ஞானியாரடிகள் பெரும்பிரிவு நினைவுவிழா.

22-2-1942 நற்றிணை மாநாடு.

21-2-1943 முதல் தமிழ் உணர்ச்சி மாநாடு, சென்னை.

25,26,12 -1943 இரண்டாவது தமிழுணர்ச்சி மாநாடு, சேலம்.

19,20-2-1944 புறநானூறு மாநாடு.

10-10-1946 கலைச் செல்லாக்கம்பற்றிய சிறப்பு விழா.

13-10-1947 பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை நடுகல்விழா.

2-8-1948 திருவரங்கனார், நீலாம்பிகையம்மையார்இருவர்க்கும் நடுகல் விழா.

4-10-1948 அப்பர் அச்சகத் திறப்பு விழா

17-9-1950 மறைத்திருமறைமலையடிகள் நினைவுக் கூட்டம்.

9,10-2-1952 பத்துப்பாட்டு மாநாடு, திருநெல்வேலி.

18-9-1952 ஆட்சியாளர் அன்னையார் இறுதிச் சடங்குவிழா.

13-2-1953 அரசியல்மாநாடு, திருநெல்வேலி.

20-12-1953 தமிழ் ஆட்சி மொழி மாநாடு, சென்னை.

24-1-1954 வரலாற்று மாநாடு, திருநெல்வேலி.

30-5-1954 தமிழ் ஆட்சிமொழி மாநாடு, தூத்துக்குடி.

| | |
|---|---|
| *31-5-1954* | *தமிழ் ஆட்சிமொழி மாநாடு திருநெல்வேலி* |
| *27-2-1955* | *பரிபாடல் மாநாடு, திருநெல்வேலி.* |
| *24-2-1955* | *ஐங்குறுநூறு மாநாடு, மதுரை.* |
| *11-12-1955* | *பதிற்றுப்பத்து மாநாடு, சென்னை.* |
| *12-2-1956* | *பதினெண் கீழ்க்கணக்கு மாநாடு, நெல்லை.* |
| *16-1-1958* | *முதலாவது சிற்றிலக்கிய மாநாடு, சென்னை. (உலா, கலம்பகம்,தூது)* |
| *19-4-1959* | *இரண்டாவது சிற்றிலக்கிய மாநாடு, நெல்லை. (பிள்ளைத் தமிழ் நூல்கள்)* |
| *13-3-1960* | *மூன்றாவது சிற்றிலக்கிய மாநாடு, நெல்லை. (பள்ளு பரணி, குறவஞ்சி)* |
| *30-4-1961* | *நான்காவது சிற்றிலக்கிய மாநாடு, நெல்லை. (கோவை நூல்கள்)* |
| *20-8-1961* | *கழக 1008 வது நூல் வெளியீட்டு விழா, சென்னை (பன்னிரு திருமுறைப்பெருந்திரட்டு வெளியிடல், மொழி மாநாடு, பாராட்டு விழா நூற்பட்டி வெளியிடல்)* |
| *21-8-1961* | *இலக்கிய மாநாடு, சென்னை (1008 வது வெளியீட்டு விழா மலர் வெளியிடல்)* |
| *22-8-1961* | *சமய மாநாடு, சென்னை* |
| *22-10-1961* | *சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை வரலாற்று நூல் வெளியீடு, நெல்லை.* |
| *7-2-1962* | *சட்டவியல் வெளியீட்டு விழா, சென்னை.* |
| *30-3-1962* | *சூளாமணி உரை வெளியீட்டு விழா, சென்னை.* |
| *6-5-1962* | *ஐந்தாவது சிற்றிலக்கிய மாநாடு, நெல்லை (அந்தாதி நூல்கள்)* |
| *12-7-1962* | *மறைமலையடிகள் கலைமன்றத் திறப்பு விழா, பல்லாவரம்.* |
| *17-3-1963* | *பெருங்கதை வெளியீட்டு விழா, சென்னை. சட்டமன்ற நடைமுறை வெளியீடு, சென்னை.* |
| *21-1-1964* | *தீங்கியல்சட்டம், திருவாசக விளக்கவுரை வெளியீட்டு விழா, சென்னை.* |

| | |
|---|---|
| *12,13-4-1964* | *ஆறாவது சிற்றிலக்கிய மாநாடு. (வெண்பா நூல்கள்)* |
| *சித்தாந்த* | *கலாநிதி ஔவை சு. துரைசாமிப் பிள்ளை மணிவிழாப் பாராட்டு, நெல்லை.* |
| *16-8-1964* | *உலகப்பேரொளி, அண்ணல் நேருவின் அமுத மொழிகள் வெளியீட்டு விழா, சென்னை.* |
| *25-12-1964* | *நீலகேசி உரை வெளியீட்டு விழா, சென்னை.* |
| *11-2-1966* | *தென்னிந்திய தமிழ்ச் சங்கக் கட்டிடத் திறப்பு விழா (சிவஞானமுனிவர் நூல் நிலையம்) நெல்லை* |
| *27-11-1966* | *"மழைவேண்டல்" நூல் வெளியீடு, சென்னை* |
| *12-2-1967* | *தில்லைபாதி நெல்லைபாதி வெளியீட்டு விழா, நெல்லை* |
| *31-7-1967* | *பேராசிரியர் கா.சு. பிள்ளை ஆராய்ச்சி மன்றத் திறப்பு விழா, சென்னை.* |
| *14-9-1967* | *திருவரங்க நிலையத் திறப்பு விழா (நெல்லைக் கழக விற்பனை நிலையம்), நெல்லை* |
| *21-12-1967* | *"குறள் கூறும் சட்டநெறி" "சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்" வெளியீட்டு விழா சென்னை.* |
| *14-10-1968* | *"திருவள்ளுவர் விழா"* "Thirukkural Couplets", *திருவள்ளுவர் திருநாள்விழா மலர் வெளியீடு, சென்னை.* |
| *22-3-1969* | *சட்டத் தமிழ் வெளியீட்டு விழா, சென்னை.* |
| *27-3-1969* | *"மார்ட்டின் லூதர் கிங்" வெளியீட்டு விழா, சென்னை.* |
| *21,22-12-1969* | *தணிகைமணி திருமுறைப்பரிசளிப்பு விழா, சென்னை (சம்பந்தர் தேவாரத் திறனாய்வு நூல் வெளியிடல்)* |
| *8-2-1970* | *"தமிழ்ப்பேரொளி" வெளியீட்டு விழா* |
| | *சங்க இலக்கண இலக்கியப் பேழை அறிமுக விழா, சென்னை.* |

| | |
|---|---|
| 15-2-1970 | சங்க இலக்கண இலக்கியப் பேழை அறிமுக விழா, நெல்லை. |
| 8-3-1970 | சங்க இலக்கண இலக்கியப் பேழை அறிமுக விழா,திருச்செங்கோடு |
| 9-3-1970 | சங்க இலக்கண இலக்கியப் பேழை அறிமுக விழா, சேலம் |
| 8-4-1970 | சங்க இலக்கண இலக்கியப் பேழை அறிமுக விழா,காஞ்சிபுரம் |
| 17-4-1970 | சங்க இலக்கண இலக்கியப் பேழை அறிமுக விழா, மதுரை |
| 8,9-8-1970 | டாக்டர் மு.வ. பரிசுச் சொற்பொழிவு, சென்னை. |
| | "திருக்குறள் அறம்" நூல் வெளியிடல், மறைமலையடிகளஎ 19 ஆவது ஆண்டு நினைவு விழா, சென்னை. |
| 9-8-1970 | 'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்' வெளியீட்டு விழா சென்னை. |
| 18,19,20,21-12-70 | கழகப் பொன்விழா சென்னை. |
| | அ. நூற்காட்சித் திறப்பு. |
| | ஆ மொழி மாநாடு. |
| | "Grand Epic of Saivism" வெளியிடல். |
| | சமய மாநாடு, சென்னை. |
| | பெரிய புராணச் சொற்பொழிவு நூல் வெளியிடல் |
| | கழகப் பொன்விழா மலர் வெளியீடு. |
| 7-2-1971 | மதுரையில் கழகப் பொன்விழா. |
| 14-2-1971 | திருநெல்வேலியில் கழகப் பொன்விழா. |
| 12,20,21-2-72 | முப்பெரும்புலவர் விழா, நெல்லை, மதுரை, திருச்சி. |
| 27-3-1972 | வள்ளலார் திருவருள் மண்டபத் திறப்பு விழா, சென்னை. (மறைமலையடிகள் நூல்நிலையம் 2வது மாடி) |

| | |
|---|---|
| *2-4-1972* | *தணிகைமணி திருமுறைப் பரிசு, இரண்டாவது விழா, சென்னை. "அப்பர் வரலாற்றாய்ச்சியும் தேவாரத் திறனாய்வும்" வெளியீடு.* |
| *12-9-1972* | *தணிகைமணி வ.சு.செ. வரலாற்று நூல் வெளியிடல், சென்னை.* |
| *30-9-1972* | *வாய் பல் மருத்துவ நூல் வெளியீடு, சென்னை.* |
| *4-3-1974* | *கழகத்தின் திருச்சிக் கிளைநிலையத் திறப்பு விழா, திருச்சி.* |
| *9-3-1975* | *மழை வேண்டல்விழாவும், "மழையே வா" நூல்வெளியீடும், சென்னை.* |
| *14-8-1975* | *கழகத்தின் முபபெருவிழா (மறைமலையடிகள் 99 வது பிறந்த நாள்விழா, செந்தமிழ்ச் செல்வி பொன்விழா புகுமுகவிழா, பேராசிரியர் அன்பழகன் எழுதிய "தமிழ்க்கடல் அலைஓசை" வெளியீட்டு விழா) சென்னை.* |
| *3-12-1975* | *பள்ளி மாணவர் பல்வகை நூல்கள் பேழை அறிமுக விழா, சென்னை.* |
| *4-1-1976* | *நரம்பு மருத்துவம் வெளியீட்டு விழா, சென்னை* |
| *28,29-1-1-77* | *மறைமலையடிகள் நூற்றாண்டு விழாவும், செந்தமிழ்ச் செல்வி பொன் விழாவும், சென்னை.* |
| *2,3-4-1978* | *மூன்றாவது திருமுறைப் பரிசுச் சொற்பொழிவும், ஐந்து அரிய நூல்கள் வெளியீட்டு விழாவும், சென்னை.* |
| *15-2-1979* | *அருட்செல்வர் தி.செ. விசுவநாதபிள்ளை பி.ஏ. அவர்களின் திருவுருவப் படத்திறப்பு விழா, நெல்லை.* |
| *4-11-1979* | *மறைமலையடிகள் நூல்நிலைய 20 ஆம் ஆண்டு நிறைவு விழா.* |
| *30-6-1981* | *கண் பாதுகாப்பு, தோல்பாதுகாப்பு நூல்கள் வெளியீட்டு விழா, சென்னை.* |

# சிறப்புப் பெயர் அகவரிசை


அங்கப்ப பிள்ளை 212
அசலனி மக்கள் 113
அஞ்சலகப் பணி 11
அண்ணா. அறிஞர் 28, 133, 151. 207, 208, 211 212 215, 228
அண்ணாமலை நகர் 154
அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 116, 201, 212, 274
அண்ணாமலைப் பிள்ளை 146
அண்ணாமலையார் 105 106, 232
அணைந்த பெருமாள் பிள்ளை 64
அதென்சு நகரத்துத் தைமன் 225
அப்துல் ரகுமான் எல்.கே.எம். 213
அப்பர் அச்சகம் 32 55, 91, 111, 113, 115, 167
அப்பரடிகள் 83, 111, 113, 144
அப்பாத்துரையார் க்ா. 69, 202, 214, 278, 279அபேதானந்தர் 143
அம்மாப்பேட்டை 146
அமெரிக்கா 1, 147, 156, 208, 287
அமைச்சர் 29
அரங்கநாதன் டாக்டர் 133, 177, 179, 186
அரங்க பாசியம் 139
அரங்காச்சாரி வி. 151
அரச கோபாலாச்சாரியார் 68
அரசியல் மாநாடு 125 126
அரசு, புலவர் 85 119, 202, 291
அரசு ஆர் வி. 212
அரசு தலைமைச் செயலகம் 208
அரத்தூன் சாலை 115
அருணகிரி இசைக் கழகம் 208, 213
அருணகிரிநாதர் 129
அருணந்தி சிவாசாரியார் 36, 143
அருணாசலம் கா.ப. 214
அரும்பொருட்காட்சிக் கையேடு 148
அருளப்ன் ஆ.213, 273
அவிநாசிலிங்கம் செட்டியார் தி.சு. 58, 101, 214
அழகரடிகள் 138, 139, 182
அழகிய சுந்தரம் பிள்ளை தூத்துக்குடி 12
அழகிய சுந்தரம் பிள்ளை வழுதூர் 10
அழைப்பிதழ் எழுதுமுறை 97, 254
அறநெறிச்சாரம் 45
அறவாணன் க.ப. 219
அறிவுநூல் வாணிகம் 17 -19, 29
அனிச்ச அடி 218
அனைத்திந்திய அச்சக மாநாட்டினர் 207
அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் 212
ஆக்சுபோர்டு 81
ஆங்கில ஆக்க நூல்கள் 86, 87
ஆங்கிலத் தமிழ் அகராதி 148

ஆங்கிலத் தமிழ்ப் பழமொழிஎவ்வாறுகெடும்? 90
அகராதி 148 இந்துக்கல்லூரி, நெல்லை 212,
ஆங்கிலத் தமிழ்ப பழமொழி215
அகராதி 148 இந்துத்தாள் 99, 114
ஆட்சி 26 இயற்றமிழ் இலக்கணம் 68
ஆட்சிச்சொல் அகரவரிசை 228,இரங்கேச வெண்பா 163
254 282 இரண வைத்தியம் 149
ஆட்சித்துறைத் தமிழ் - 283 இரத்தின சபாபதி முதலியார்
ஆடலரசு ந. ரா. 174. 175 கோவை 167, 245
ஆண்டியப்ப பிள்ளை 42, 43 இரத்தின நவரத்தினம் 135
ஆய்வு நூல்கள் 117 இராகவன் அ. 136
ஆயிரத்தம்மன் கோயில் 94 இராசகோபால் பிள்ளை 42, 43,
ஆயிரத்தெட்டாவது நூல்61, 63
வெளியீட்டு விழா 115, 132 இராசகோபலாச்சாரியார் 96 98
ஆர்னால்டுட சே. ஆர். 149 இராசகோபால் முதலியார் 187
ஆரணி 59 இராசசேகரன் தி.க. 59
ஆலால சுந்தரஞ் செட்டியார்இராசபாளையம் 43
ஜ்ப 74 இராசாக்கண்ணனார் 85
ஆவணங்களும் பதிவுமுறையும் இராசாசி மண்டபம் 116, 132
228 இராசேசுவரன் தி.க. 153
ஆவிடையம்மாள் 42 இராசேசுவரி திருமண
ஆளநி நெறிமுறை 250 மண்டபம்
ஆளுடையபிள்ளையார் 43 திருமயிலை 134, 138, 141, 216, 217
ஆற்றுப்படை 21 இராசேசுவரியம்மையார் 129,
ஆறுமுகத்தம்பிரான் 89 132
ஆறுமுகநாவலர் 112 இராசேந்திரன் மோ.ம. 136
ஆறுமுகம் ந.213 இராட்லர் 149
ஆனந்தர் டாக்டர் 57 இராசகவ ஐயங்கார் இரா. 192
ஆனந்த விகடன் 114 இராபர்ட் டி நொபிலி 147
ஆ௵டோ௵ முகர்ஜி 178 இராசகவ ஐயங்கார் இரா. 192
இசுமாயில் எம்.எம். 211 இராபர்ட்டி நொபிலி 147
மஇந்திய இசைத்தட்டுஇராமகிருட்டிணர் 143, 173
நிறுவனம் 107 இராமச்சந்திரன் ம.கோ. 214
இந்தி எதிர்ப்பு 47 இராமசாமி ஐயர் சி.பி. 99
இந்தி பொது மொழியா? 98 இராமசாமிக் கவுண்டர் அ. 98
இந்தியக் கூட்டரசு 108 இராமசாமித் தெரு 43
இந்தியா 147, 226 இராமசாமிப் புலவர் க.அ.75,76,
இந்தியால் தமிழ்202

இ ர ா ம ச ா மி ரெ ட் டி ய ா ர்
ஓமந்தூர் 111, 114
இராமதாசு 170
இராமநாதத பிள்ளை 64, 75, 135, 202, 216
இராமநாதன் செட்டியார் மீ. பொன். 76
இராமலிங்கதேசிகர் 219
இராமலிங்கம்பிள்ளை டி.எஸ். 211
இராமலிங்கனார் கீ.72, 203, 228, 280
இராமாநுசக் கவிராயர் 148
இல்லப்பெயர் அகரவரிசை 97, 244, 254
இலக்கண அகராதி 287
இலக்கண விளக்கம் 194
இலக்குமணன் 176
இலக்குமணப்பிள்ளை 42
இலக்குவனார்சி 108
இலங்கை 12 147, 149, 291
இலண்டன் 147
இலண்டன் மாநகர ஆசிரியர் கல்லூரி 11
இலண்டன் மாநகரம் 13
இலத்தீன் 148
இலாசரசு 168
இலிங்கிச்செட்டித் தெரு 31, 133, 176
இளங்கண்ணனார் 119
இளங்குமரன் 141, 203, 219
இளங்கோ 231
இளஞ்சேரன் கோவை 139
இளந்திரையன் சாலை 139, 154
இளம்பழையன் மாறன் 7
இளவழகனார் 85, 202, 276
ஈசுவரன் இரா. 171
ஈராசு பாதிரியார் 149
ஈழத்துச் சிவானந்த அடிகள் 98
ஈழம் 58, 143
உச்சல்சிங் சர்தார் 131, 135, 205
உட்லண்சு விடுதி 211
உமாபதிசிவம் 143
உயர்ந்தமனிதர் 5
உயர்நீதிமன்றம் 103
உரிமையின் பரிசு 151
உருக்குமணி அடுப்பு 234
உலகப்பேரொளி 151
உலகுக்கு ஒருமாமணி 19
உவமை அகரவரிசை 97
உவமைவழி அறநெறி விளக்கம் 243
ஊர்க்காடு 158
எங்களூர்ச் சந்தை 47, 49
எட்டுத் தொகை மாநாடு 125
எட்வர்ட் ஜூவிட் ராபின்சன் 87, 150
எடிசன் 223, 224
எரால்டு 163
எருமைப்பலி 246
எலிலுசு 149
எலிசபெத்து 226
என்றி பவர் 148
என்றி பேர்டு 228
ஏகாம்பரேசுவரர்கோயில் 102
ஏங்கல்சு 173
ஏல் பல்கலைக்கழகம் 208
ஐங்குறு நூறு 190
ஐசக் நியூட்டன் 66
ஐயப்பச்செட்டித் தெரு 144
ஐயம் பெருமாள் 8, 9, 40
ஐயாறு 181
ஐவன் கோ 86
ஓதெல்லோ 166, 225
ஒப்பியன்மொழி நூல் 68
ஒளிநெறிக் கட்டுரைகள் 77

ஒளிநெறிச் செல்வர் 204
ஒளிநெறி நூல்கள் 204
ஒற்றியூர் 113
கட்டுரை வரைவியல் 68, 253
கடற்கரை 101
கடுவன் இளவெயினனார் 220
கண்காட்சி 173
கண்ணப்ப முதலியார் பாரிப்பாக்கம் 129
கண்ணப்பர் 177
கண்ணப்பன் அமைச்சர் 102
கண்ணுசாமிப் பிள்ளை காழி சிவ 31, 32, 33, 129, 235, 282
கணபதி, யாழ்ப்பாணம் 59
கணபதியாபிள்ளை 116
கணியன் பூங்குன்றனார் 123
கதிரி 197
கதிரேசன் செட்டியார் பண்டித மணி, மு. 98
கந்தசாமி முதலியார், தூ.சு. 99
கந்தசாமியார் சோழவந்தான் 37
கந்தர்சட்டிச் சொற்பொழிவு 85, 126
கபாலுசுவரர் கோயில் திருமயிலை 41
கம்பன் 78
கமில் சுவலபெல் 244
கரிவலம் வந்தநல்லூர் 157
கருணாநிதி கலைஞர், மு.131, 183, 218
கல்கத்தா 148
கல்கி ஆர. கிருட்டிணமூர்த்தி 181
கல்விக் கழகம் 192
கலித்தொகை 170
கலித்தொகை மாநாடு 126
கலியாணசுந்தரனார் திரு.வி. 46, 122 124, 129
கலியாணசுந்தரம், இரா. 61 62, 63 66, 121, 139, 141, 151
கலிவரின் யாத்திரை 73
கலிவுணர் 166
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 132, 246
கழக இலக்கியச் செம்மல் 141, 203
-கழகக் காவலர் 28, 249
கழக நூல் விற்பனை நிலையங்கள் 120
கழகக் காவலர் 28 249
கழக நூல் விற்பனை நிலையங்கள் 120
கழகப் பணிவலவன் 141
கழகப் பதிப்பு 36, 37
கழகப் பாடநூல்கள் 119
கழகப் பொன் விழா 126, 134, 203
கழகம் 26, 274, 284
கழக விதி 21
கன்மிமாரா நூலகம் 186
கனகசபைப் பிள்ளை 87
கனகராயர் அ. 174
காட்டாங்குளம் 183
காதல் துறை 233
காசிவிசுவநாதர்கோயில் 144
காசிவிசுவநாதன் செட்டியார் மு. பாகனேரி 22, 56
காஞ்சி மணிமொழியார் 166
காந்தியடிகள் 11, 95, 150, 173, 236, 284
கூாப்பியச் சுருக்க நூல்கள் 85
காமக்கூர் சுந்தர முதலியார் 104
காமராசர் கே. 132
கார்டியன் 163
காரைக்குடி 171
கால்டுவெல் 85, 147
கால்டுவெல் உயர்பள்ளி தூத்துக்குடி 147

கிரால் 148
கிரியர்சன் 148
கிருட்டிணசாமி ஐயங்கார் 129
கிருட்டிணசாமி முதலியார் 87, 89
கிருட்டிணன் என்.எசு. 166
கிருபானந்தவாரியார் திருமுருக 94, 102
கில்பர்ட் சிலேட்டர் 149
கிறித்தவக் கல்லூர, தாம்பரம 74, 178
கிறித்தவமும் தமிழும் 86
கிறித்தியன் பேட்ரியட் 163
கிறித்துவ இலக்கியக் கழகம் 148
கிறிஸ்டோபர் சா. தே. 155
கிறீன் டாக்டர் 149
கீரமலை 58
கீழ்க்கணக்கு மாநாடு 126
குடந்தை 120
குடியரசுத் தலைவர் 208
கும்பம்மாள் 8,9,40,222
குமரகுருபரர் 83
குமரகுருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளி 151, 189, 244
குமாரசாமி ராசா 114, 115
குருசாமி மா.பா. 171
குருசாமிக் கோனார் மதுரை 145
குழந்தைக் கல்வி 229
குழந்தைசாமி வ. செ. 140, 218
குழந்தைப் பேச்சு 47, 49, 54
குற்ற இயல் 71
குற்றமும் தண்டனையும் 71
குற்றாலம் 60
குற்றாலலிங்கம் பிள்ளை நெல்லை ந. 64, 187, 247
குறவஞ்சி 158
குறள் கூறும் சட்ட நெறி 71
குறுந்தொகை 190
குன்றக்குடி அடிகளார் 132, 135, 137
கூத்ரசு 174
கே.கே. பிள்ளை 132, 137
கேம்பிரிட்சு 81
கைந்நிலை 86
கைவல்ய நவநீதம் 148
கொண்டான் 44
கொல்லம் 156
கொலம்பசு 1
கொழும்பு 10.11.14.20.75
கொழும்பு முதனிலைக் கல்லூரி 11
கொழும்பு மையக் கல்லூரி 38
கோகுலகிருட்டிணன் பு.ரா. 135, 218
கோசிங்டன் 149
கோட்டை 101
கோதண்டபாணிப் பளிளை கு. 69, 98, 203, 219
கோபால ரெட்டி பி. 187 188
கோமதி நாயகம் பிள்ளை தி 21
கோமதி நாயகம் அ. 64
கோவிந்தராச முதலியார் கி.மு. 31 32 110 163 167 227
கோவிந்தராசன் சீர்காழி 107
கோவிந்தன் கா. 85, 86 135
கோவை 58, 1 0
கௌமார மடாலயம், சிவணபுரம் 213, 214
சகதேவ முதலியார் சேலை 144
சங்க இலக்கிய இன்கவித் திரட்டு 85, 209
சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம் 74 243, 279
சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் 74 143
சங்க இலக்கியத்தில் விலங்கின

விளக்கம் 74, 243
சங்க இலக்கியம் 278
சங்கச் சான்றோர் 8, 17.23, 27
சங்க நூல் மண்டபம் 127
சங்க நூற் பேழை 8
சங்கரநாராயண பிள்ளை வி. 15, 153
சங்கரராசு நாயுடு அ. 214
சங்கரலிங்கம் இ.மு. 213
சங்கரவடிவு இரா 61
சங்கரவடிவு அம்மையார் ஆ.42
சங்கராச்சாரிய சுவாமிகள் 104
சங்குப் பிலவர் தி 86
சந்சிதானந்தம் பிள்ளை ச. 129, 133
சஞ்சீவி ந. 218
சட்ட இயல் 71, 209
சட்டத் தமிழ் 71
சட்டமன்ற நடைமுறை 209
சண்முகம் அ. 151
சண்முகம் ஔவை 132
சண்முகம் மி. 120
சண்முக சுப்பிரமணியம் மா. 71, 203 , 212, 218, 229
சதாசிவச் செட்டியார் கயப்பாக்கம் 84
சதாசிவம் மு.77, 87, 156, 242
சந்திப்பு 101
சந்திரசேகரன் 273
சந்தோசம் (மகிழ்நன்) க.ப. 86
சபரி 176
சமணமும் தமிழும் 86
சதய மாநாடு 125
சமரச சன்மார்க்க சங்கம் 179
கமற்கிருத நாமாவளி 104
சரசாங்கி 144
சகர்லால் நரூே 95
சனசக்தி 110
சனார்த்தனம் நாயுடு ஆர். 214
சாக்ரடீசு 173
சாகிர் உசேன். டாக்டர் 207
சாண்டலர் சே.எச். 149
சாத்தான்குளம் 136
சாம்பசிவ சர்மா 129
சாம்பசிவம் பிள்ளை தி.0வி. 145, 146
சாமி பி.எல். 73, 74, 203, 229, 278
சாமிநாத ஐயர் டாக்டர்உ.வே. 130, 155, 157, 227
சாமிநாத பிள்ளை 214
சாயர்புரம் 147
சார்லசு இ கோவர் 150
சாரங்கபாணி இரா. 155
சான்சன் 1
சிங்காரவேலன், சொ. 155
சிட்டிபாபு, எஸ்.வி. 218, 254
சித்தாந்தக் காவலர் 207
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 276, 277
சிதம்பரநாதன் டாக்டர் அ. 116
சிதம்பரம் பிள்ளை ப. 56, 201, 202
சிந்தாதிரிப் பேட்டை 124,145,146
சிம்பலின் 144
விலேடை விளக்க அகரவரிசை 75
சிவகாமி விலாச அச்சுக்கூடம் 31
சிவசண்முகம் 188
சிவசாமி ஐயர் பி.எஸ். 178
சிவசிவ வெண்பா 163
சிவசைலம் பிள்ளை 84, 119, 202
சிவஞான சித்தியார் 36
சிவஞான சித்தியார் சுபக்கம் இருவருரை 31
சிவஞான தேசிகர் சோ. 96
சிவஞானம் ம.பொ. 140, 218, 219
சிவஞான முனிவர் 36, 83, 136, 144,

162, 184
சிவஞான முனிவர் நூல் நிலையம் 15, 55, 85, 189, 215, 230, 244
சிவநெறிச் செய்யுள் திரட்டு 243
சிவப்பிரகாசம் 149
சிவபெருமான் 7
சிவமுத்து மயிலை 129
சிவலிங்கம் பி. 141
சிற்றிலக்கியப் பாதுகாப்புத் திட்டம் 121
சிறப்புப் பெயர் அகரவரிசை 75
சிறுப்பெரியார் 10
சிறுமணவூர் முனுசாமி முதலியார் 31
சிறுவர்க்கான திருக்குறள் நாடகம் 168
சிறுவை நச்சினார்க்கினியன் 139
சின்னசாமி பிள்ளை செ. 38, 40
சீகன் பால்க் 149
சீதாமணி சீனிவாசன் 107
சீர்காழி 32
சீராமன் 176
சீவக சிந்தாமணி 148
சீனிவாசன் ஆகி 214
சுட்டுவிளக்கம் 68
சுத்தான்நத பாரதியார் 168, 219
சுந்தர அடிகள் 135
சுந்தர ஓதுவா மூர்த்திகள் 43, 232, 235
சுந்தர ஓதுவார் 153
சுந்தர சண்முகனார் 92
சுந்தர சுவாமிகள் 213
சுந்தரத்தம்மையார் 8,9,55,60,215,281
சுந்தரம் எஸ்.டி.211
சுந்தரம் மெ.218
சுந்தரம் பிள்ளை பேரா.பெ. 131, 132, 133, 202, 218
சுப்பராய செட்டியார் தி.க. 89
சுப்பராயன் டாக்டர் 115, 187
சுப்பிரமணிய தாசு தி.ப. 170
சுப்பிரமணிய நாடார் வி. 113, 114
சுப்பிரமணிய பிள்ளை கா.36, 83, 133, 164, 201, 202, 207
சுப்பிரமணிய பிள்ளை (கா.சு.) ஆராய்ச்சி மன்றம் 137, 185
சுப்பிரமணிய பிள்ளை கோ. 212
சுப்பிரமணியம் சி. 131, 132, 181, 187
சுப்பிரமணியம் தெ. 212
சுப்பிரமணியம் வி. 116
சுப்பிரமணிய முதலியார் சிவக் கவிமணி 59, 130
சுப்பு 73, 162, 166
சுப்புலட்சுமி 61
சுப்பைய வேள் 174
சுப்பையன் 82
சுப்பையா 8,9,108, 215, 216
சுப்பையா கே.வி.135
சுப்பையாப் பெரியவர் 250
சுப்பையா பிள்ளை ஆ.42, 212
சுப்பையா பிள்ளை சி.பி. 166, 224
சுப்பையா, சுப்பையா பிள்ளை வ. 275 - 280, 285 - 290
சுப்ரபாதம் 107
சுவாமிநாதன் ஏ.எம். 141
செகப்பிரியர் 225
செங்கல்வராய பிள்ளை வ.சு. 78, 129, 202, 204, 205
செங்கல்வராயன் 129, 225
செங்கற்பட்டு 191
செந்தமிழ்க களஞ்சியம் 15
செந்தமிழ்ச் செல்வர் 214
செந்தமிழ்ச் செல்வி 25, 31, 95, 96, 97, 102, 150, 171, 183, 191, 192, 197, 198, 215, 219, 231, 250, 253, 254, 279

செந்திலாறுமுகம் பிள்ளை -சைவசித்தாந்த நூற்பிதப்புக்
குல சேகரப்பட்டினம் 13 கழகம் 3, 15, 208
செப்பறையடிகள் 162 சைவ மஞ்சரி 243
செயரான் சி. 214 சைவ வேளாளர் பேரவை 208,
செயலக்குமி சேலம் 107, 217, 218212
செயவேலு சி.என். 159செருமன்சைவன 2
148 சொக்கலிங்கம் க. 55, 174
செல்ப் பாண்டியன் 136 சொக்கலிங்கம் ந. 214
செல்லையா ஜே.வி. 87 சொசுவா டன்வர்த் 149
செல்வக்கேசவராயசொல்லாராய்ச்சிக்
முமதலியார் 152 கட்டுரைகள் 68
செல்வராசன் 227செல்வராஜ்சொற்பொழிவாற்றுப்படை 122
சி.து. 141 சோமசுந்தர ஞானசம்பந்த
சென்சன் 149 அடிகளார் 133, 247
சென்னை 15, 20, 29, 30, 89, 54,சோமசுந்தரத் தம்பிரான் 211
60, 183, 226 சோமசுந்தர நாயகர் 133, 143
சென்னைப் பல்கலைக் கழகப்சோமசுந்தர பாரதியார் 98
பேரகராதி 149 சோமசுந்தரம் பிள்ளை 52
சென்னைப் பல்கலைக் கழகம்சோமசுந்தர முதலியார் 212
140, 225 சோமசுந்தரனார் பெருமழை
சென்னை முகவர் 223, 235 பொ.வே. 75, 76, 202, 203
சேக்கிழார் 7, 95 சோமு மீ.ப. 212
சேக்சுபியர் 144, 155, 166 சோமு செட்டியார் 137, 179
சேஷாத்திரி 152 சோமேசர் முதுமொழி
சேதுப்பிள்ளை இரா.பி. 132, 162வெண்பா 36, 162
சேதுபதி செந்தமிழ்க்சோன்சு தெரு 114
கலாசாலை 192 சௌந்தரா கைலாசம் 219
சேது ரகுநாதன் ந. 86 ஞானசம்பந்தர் 105
சேதுராமன் 206, 231 ஞானப்பிரகாச தேசிக
சேம்சு ஆலன் 151 சுவாமிகள் 104, 106
சேரமான் கணைக்கால்ஞானப்பிரகாசர் மடம் காஞ்சி
இரும்பொறை 123 104
சேனாவரையம் 118 ஞானமூர்த்தி தா.ஏ.. 155
சைதாப்பேட்டை 281 ஞானியாரடிகள் திருப்பாதிரிப்
சைவசித்தாந்த சபை,புலியூர் 84, 126
தூத்துக்குடி 193, 207, 208,டி நோபிலி அச்சகம் மதுரை 147
212சைவசித்தாந்தப் புத்தகடேவிட் காப்பர் பீல்டு 87
நிலையம் 120 டேவிட்சன் தெரு 110

டோனாவூர் 50
தங்கசாலை 102
தஞ்சை 145
தண்டபாணி அடிகள் 144
தண்டபாணிப்பிள்ளை நாகை சொ. 162, 200
தம்பிரான் தோர 156, 220
தம்பு செட்டித் தெரு 31
தமிழ் 2
தமிழ் அகராதிக் கலை 91, 92
தமிழ் அருச்சனை 103, 105
தமிழ் ஆங்கில மருத்துவ அகராதி 145
தமிழ் இலக்கிய அகராதி 196
தமிழ்ச் சங்கம் சாத்தூர் 193
தமிழ்ச் சங்கம் மதுரை 189, 192, 243
தமிழ்ச சங்கக் கல்லூரி மதுரை 37
தமிழ்ச் சங்க முத்திராசாலை 192
தமிழ்த் திருமணம் 254
தமிழ்த் துறை 233
தமிழ்நாடு 5, 103
தமிழ் நூல் பேணல் 195
தமிழ் நூற் காவலர் 207
தமிழ்ப் பல்கலைக் கழகம் 6
தமிழ்ப் பாதுகாப்புச் சங்கம் 96, 97
தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டு 97, 253
தமிழ்ப புலவர் அகராதி 196
தமிழ்ப் புலவர் வரலாறு 193
தூமிழ்ப் பேரொாலளி 151
தமிழ்ப் பொழில் 191
தமிழ் போர்ச்சுகீசு அகராதி 147
தமிழ் மணம் 280
தமிழ் வட்டம் 208
தமிழ் வரலாறு 90
தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சித் துறை 209
தமிழ் வளர்ச்சித்துறை 92, 94
தமிழ் வளர்ச்சி மன்றம் 209
தமிழ் விடுதூது 86
தமிழக அரசு 106, 207, 214, 250
தமிழர் சங்கம் 193
தமிழர் மாநாடு 281
தமிழரசியார் 47, 48, 61-63
தமிழறிஞர் கழகம் 99-101
தமிழன்பர் மாநாடு 281
தமிழன்னை 28
தமிழாசிரியர்கள் 252
தமிழிசை இயக்கம் 103
தமிழிசைச் சங்கம் 232
தமிழுணர்ச்சி மாநாடு 98
தயாசீனசு 4
தர்ஸ்ச்டன் 148
தரங்கை மிசியோன் சரித்திரம் 148
தருமையாதீனம் 212
தனவைசிய இளைஞர் தமிழ்ச் சஙகம் 22
தனித்தமிழ் இயக்கம் 25, 103
தனித்தமிழ் இலக்கியக் கழகம் நெல்லை 214
தனிப்பாடல் திரட்டு 75
தாசு எசு. 87
தாமசு ஆல்வா எடிசன் 228
தாமரைச் செல்வம் 207, 208
தாமரைச் செல்வர் 3, 6, 174, 215, 231, 236, 254
தாமரைத்திரு 208. 210, 211
தாயுமானவர் 83, 237
தான்யேல் சாப்மென் 148
தியாகராசர் கல்லூரி, மதுரை, 273
திரவிடத் தாய் 68

திரவியம் பிள்ளை மா. 20-22, 108, 109
திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் 147
திரிகூடராசப்பக் கவிராயர் 158
திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி 36
திருக்குறள் 75, 147, 148, 160, 161, 171, 172, 190, 209, 225, 226, 253, 275, 279, 285
திருக்குறள் அறம் 171
திருக்குறள் இன்பம் 168
திருக்குறள் கண்காட்சி 173
திருக்குறள் காவலடிச்சிந்து 168
திருக்குறள் குறுந்திரட்டு 168
திருக்குறள் சிந்தனை 168
திருக்குறள் சொற்பொருள் அகர வரிசை 168
திருக்குறள் தமிழ் மரபுரை 90
யீதருக்குறள் தாலாட்டு 168
திருக்குறள் தெளிவுரை 84, 167
திருக்குறள் நாட்குறிப்பு 169
திருக்குறள் நாடகம் 168
திருக்குறள் நாற்சீர்மணிகள் 164, 165
திருக்குறள் நீதியட்டை 165
திருக்குறள் நூற்றெட்டு 168 20*
திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி 171, 197
திருக்குறள் பரிமேலழகர் உரை 167
திருக்குறள் பெருந்திரட்டு 168
திருக்குறள் பொழிப்புரை 83, 84
திருக்குறள் முச்சீர்மணகிள் 164, 165
திருக்கோவையார் ஒளி நெறி 77
திருச்சி 60 120, 282
திருச்சிப் புத்துதூர் ஈபர்
மேற்காணியார் உயர்நிலைப் பள்ளி 67
திருசங்கர் கம்பெனி 15, 20, 22, 41, 56, 89, 201, 210
திருஞானசம்பந்தர் 83
திருஞானசம்பந்தர் குருபூசை 59
யீதருஞானம் பிள்ளை சு. 222
திருத்தக் தேவர 170
திருத்தருமபுர மடம் 212
திருத்தாண்டகம் 53
திருத்தொண்டர் மாக்கதை 135
திருத்தொண்டர் வெண்பா 163
திருநாவுக்கரசர் 105
திருநாவுக்கரசு அம்மையார் தி. 169
திருநாவுக்கரசு மறை 90, 139
திருநெல்வேலி 7, 10, 39,02, 139, 143, 187
திருநெல்வேலி இந்துக் கல்லூரி 14
திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் 21, 24
திருப்பரங்குன்றம் 64
தருப்புல்லாணி மாலை 163
திருப்பெரும் புதூர் இராமானுசசீயர் 103
யீதருமயிலைத் திருவள்ளுவர் கோயில் 130, 144
திருமலைக் கொழுந்து வெண்பா 163
திருமலை வெண்பா 163
திருமூலர் 6
திருவடிப் புகழ்மாலை 30, 36
திருவண்ணாமலை 43
திருவரங்கக் கலம்பகம் 14
திருவரங்க நிலையம் 61, 137
திருவரங்கம் பிள்ளை -

திருவரங்கர், தில்லை நகர் 60
அரங்கர் - 3, 4, 8 - 16, 20 - 22, 26தில்லைநாயகம் வே. 218
30, 37, 38, 40, 41, 43, 51, 54, - 56 64,தில்லைவேல் முதலியார் 60
65, 69, 75, 79, 82, 89 95, 96, 108,திலகவதி பால் 148
109, 115, 133, 143, 144, 153, 169, 174,திலகவதியார் 9,144
179, 199, 201, 210, 125, 274, 276,திவாகர முனிவர் 26
2 8 1 யீ த ரு வ ரு ட் ப ா ப்துரு ஐயர் 148, 168
பெருந்திரட்டு 137 துரைசாமிப் பிள்ளை ஔவை.
திருவள்ளுவர், வள்ளுவர் - 7, 7,சு. 85, 201, 203, 273
13, 23, 30, 144, 161, 221 தூத்துக்குடி 10
திருவள்ளுவர் கதை 168 தூய சவேரியார் உயர்பள்ளி 10,
திருவள்ளுவர் கழகம் 208, 213 38, 39, 43, 161, 215
திருவள்ளுவர் செந்தமிழ்க்தெய்வப் புலவர் திருவள்ளுவர்
கல்லூரி 85, 136, 151, 185, 189 168
திருவள்ளுவர் திருநாட் கழகம்தெயிலர்149
129 - 131 170 தென்;னநிதிய குலமும்
திருவள்ளுவர் திருநாள் மலர் 131குடிஸயம் 148
திருவள்ளுவர் நாள் 191 தென்னிந்திய சைவசித்தாந்த
திருவள்ளுவர் நினைவுமலர் 130சங்கம் 24, 186, 207
திருவள்ளுவர் நூற்காட்சி 130 தென்னிந்திய தமிழ்ச் சங்கம் 24,
திருவள்ளுவர் விழா 130 96, 97, 127, 132, 136, 186, 207
தி ரு வ ள் ளு வ ரு ம்தென்னிந்திய வங்கி விதி 21
சிவப்பிரகாசரும் 168 தேடித் தொகுத்தலும் பேணிக்
திருவள்ளுவரும் திருக்குறளும்காத்தலும் 197, 254
162 தேம்பாவணி 147
திருவள்ளூர் 144 தேவநாதன் 103
திருவாங்கூர் 153 தேவநேயப் பாவாணர்,
திருவாசகம் 147, 160, 253 பாவாணர் 67, 69, 90, 98, 214, 218,
திருவாசக விரிவுரை282தேவார திருவாசகம் 172
15யீதருவாரூர் 58, 102 தேவாரம் 84
திருவாவடுதுறை ஆதீனம் 37 தொண்டை மண்டல
திருவிளையாடற் புராணம் 84 உயர்பள்ளி 98
திருவுந்தியார் 74 தொ ண் டை மா ன்
திருவேங்கடசாமி நாயுடு 214 இளந்தியரையன் 27
திருவைகுண்டம் 42 தொல்காப்பிய ஏட்டுப் பிரதி 37
திருவொற்றியூர் 5 தொல்காப்பியம் 36, 37,118
யீதல்லி 187 தொல்காப்பிய வுரைகள் 153
தில்லிப் பல்கலைக் கழகம் 139 தொல்காப்பியனால் 23

தோப்பூர் 142
நகரவைக் கல்லூரி, சேலம் 98
நகராட்சி முறை 228, 282
நச்சினார்க்கினியம் 118, 285
நச்சினார்க்கினியர் 148
நடராசன் ஔவை சு.து. 214, 218
நடராசன் பா. 138, 218, 254
நடுவண் அரசு 207
நடேச நாயக்கர் 153
நடேச பிள்ளை சு. 59
நமசிவாய முதலியார் கா. 129
நலங்கிள்ளி 123
நவநீத கிருட்டிணன் அ.க. 86, 127, 273
நன்னூல் 147
நாகலிங்கம் 59
நாகை 183
நாயன்மார் 12
நாயுடு கோ. து. 228
நாள்வழி நற்சிந்தனைகள் 169
நாலடிப்பாட்டு 6
நாலடியார் 75, 147, 160, 190, 209
நாவரசர் 254
நாவலர் பாராதியார் 231
நியூயார்க் 147
நிரம்ப அழகிய கமிலர் 244
நிரம்ப அழகிய தேசிகர் 244
நிலவைச் சுற்றிய கதை 73
நீதி நூற்கொத்து 209
நீதி மன்றம் 113
நீலாம்பிகையார் 41, 44, 50, 51, 53, 55, 190, 281
நீலாம்பிகையம்மையார் 224
பலதுறை பயிற்சிப் பள்ளி 185, 244
நூல்கள் 18
நூலக விழா 291
நூற்காட்சி 154, 240
நூற்பதிப்புக் கழகம் 19
நூற்பேழைத் திட்டம் 121
நெடுஞ்செரியன் இரா. 131, 135, 187, 138, 204, 205, 218
நெடுநல்வாடை 69
நெல்லை 7, 20, 29, 30, 42, 5 5, 58, 60, 122, 127, 158, 273
நெல்லைச் சந்திப்பு 202
நெல்லை மாவட்டம் 147, 244
நெல்லையப்ப பிள்ளை மா. வே. 56, 96
நெல்லையப்பர் பரலி சு. 129
நெல்லையன் பர் கழகம் 208
நெல்லையன்பர்கள் 212
நெல்லையா ஓவியர் 143, 144
நேரு பெருமகனார் 174, 284
நோக்கு, நோக்கம் 23
பக்தவத்சலம் மீ. 116, 134, 218
பச்சையப்பன் கல்லூரி 84, 130, 153, 225, 280
ப. சு. வித்தியாசாலை, கண்டர மாணிக்கம் 171
பஞ்சலட்சணத் திருமுக விலாசம் 245
பட் எம். எம் 214
பட்சிராசன் 212
பட்சிராசன் 212
பட்டிடினத்தடிகள் 60
பட்டினத்தார் 83, 235
படந்த தொகுத்தலில் பட்டறிவு
படிக்காசுப் புலவர் 196
பண்டித சவகர்லால்நேரு 15
பண்டிதர் ஆனந்தம் 174
பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை 85
பண்டைத் தமிழர் பொருளியல் வாழ்க்கை 85

பண்ணாராய்ச்சிக் கூட்டம் 232
பணம் 166
பத்துப்பாட்டு மாநாடு 124 - 127
பதிப்பகப் பணி 18
பதிற்றுப்பத்து 85, 190
பதினெண் கீழ்க் கணக்கு 190
பம்மல் சம்பந்த முதலியார் 144
பரங்குன்றம் 220
பரஞ்சோதி முனிவர் 26
பரமசிவம் கு. 86, 212
பரமசிவானந்தம் அ.மு. 214
பராக்கிரம பாண்டியன் 157
பரிதிமால் கலைஞர் 67
பரிமணம் அ. மா. 91, 155
பரிமேலழகர் உரை 285
பரோடா மன்னர் 153
பல்கலைக்கழகங்கள் 172, 250, 251
பல்கலைக் கழக நூலகம் 180
பல்கலைக் கழகப்பணி 18
பல்கலைக் கழகம், மதுரை 290
பல்துறை நூல்கள் 117
பல்லவபுரம் 181, 182
பல்லாவரம் 13, 57
பலி விலக்குச் சங்கம் 94
பவழக்காரத் தெரு 20, 22, 32, 45, 282
பவள விழா 216
பழந்தமிழராட்சி 68
பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூற்பேழை 76, 104
பழமொழி 75
பழமொழி அகரவரிசை 97
பழமொழிக் கதைகள் 47
பழனி ஆ. 218
பழையன் கோட்டை 7
பள்ளி ஆசிரியன் 18
பள்ளிப்பருவ நிகழ்ச்சிகள் 243
பறந்தோடிப்பாலம் 244
பூன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு 116
பன்னூல் திரட்டு 243
பன்னூல் பாடல் திரட்டு 243
பூாகனேரி 130
பாசுவெல் 1, 76
பாண்டிச்சேரி 278
பாண்டித் துரைத்தேவர் 192, 243
பாண்டியன் புத்தக சாலை 192
பாப்ளி எச். ஏ. 129, 149, 163
பாம்புக் கோயில் 64
பார்த்தசாரதி கோ. 141
பார்த்தசாரதி 227
பாரதமணி 210
பாரதியார் 73, 230, 231
பாராட்டு விழா நூற்பட்டி 115
பால்வண்ண முதலியார் 122
பாலகிருட்டிணன் (இளங்கண்ணனார்) 86, 190
பாலசுப்பிரமணியம் சி. 218
பாலசுப்பிரமணியம் சி. 218
பாலசுப்பிரமணியன் எம். கே. 140
பாலசுப்பிரமணியன் செட்டியார் மா. 144
பாலசுப்பிரமணிய முதலியார் மா. 129
பாலம்மாள் . 213
பாலவனத்தம் 192
பாலயாறு 278
பாவலர் சரித்திர தீபகம் 149
பாவாணர் 119, 160, 199, 203
பாவேந்தர் 72, 82
பாளை, பாளையங்கோட்டை 7, 8, 10, 12, 13, 20, 38, 42, 50, 52, 54, 60, 94, 143, 161, 215, 224
பளையங்கோட்டை சைவ சபை 214

பிச்சாண்டியாபிள்ளை 39
பிசிராந்தையார்122, 227, 254
பிட்டங் கொற்றன் 248
பிரகாசம் சாலை (பிராட்வே) 114, 144
பிழை நிக்கி எழுதுமுறை 97
பிழையின்றிப் பேசுக 47, 48
பிளேட்டோ 13
பிளை ஓவர் பிரிட்சு 243
பிறைமுடிப் பெருமான் 9
பீற்றர் பெர்சிவல் 148
புல்லா ரெட்டி 115
புலவர் வரலாறு 75
புறநானூற்று மகாநாடு 126
புறநானூறு 85, 190
புன்வைனநாத முதலியார் பு.சி. 85, 189
பூங்கா 101
பூம்புகார் 128
பூவிருந்தவல்லி 85
பெண்பெருமாள் 7
பெத்துநாயக்கன் பேட்டை 144
பெப்ரிசியசு 148
பெரிய சாமித் தூரன் ம.ப. 214
பெரியபுராணச் சொற்பொழிவு 126
பெரியார் 11, 236
பெருங்கோப்பெண்ட 123
பெருமாள் 7
பெருமாள் கோ. வே. 291
பெருமாள் வ. 156
பெருமான் 7
பேக்கன், பேக்கனார் 32, 33
பொருகை நாடு 7
பொரஜகயாறு 231
பொன்னம்பலம் பிள்ளை டி.153
போப் ஜி. யு. 87, 147, 168, 171, 209, 226
போப் உயர்நிலைப் பள்ளி 147
போற்றித்தாள் 106
போற்றி நூல் 229
பௌத்தமும் தமிழும் 86
மக்கட்பெயர் அகரவரிசை 97, 244, 254
மகாதேவ செட்டியார் 144
மகாதேவ முதலியார் 162
மகாராசன் எஸ். 139, 156, 218
மகாலிங்கம் நா. 134, 138
மகிழ்நன் 282
மங்கையர்க்கு அரசியார் 42 - 45, 47, 52 - 54, 61, 62, 64, 65
மூண்ணடி, சென்னை 144மூணி சி.சு. 214
மணி கோடீசுவர முதலியார் 129
மணிமேகலையார் 88
மணிமொழி நுல் நிலையம் 175
மணிவிழா 276
மதுரை 7, 58, 120, 127, 154, 183
மயில்வாகனர் 13
மயிலம்மை 55
மயிலாப்பூர் 145
மயிலை சிவமுத்து 207
மர்மலாங் பாலம் 183
மரபுத் தொடர் அகரவரிசை 97
மருத்துவக் கல்லூரி 11, 13
மருமக்கள் 286
மலர்வழிபாட்டு நூல்கள் 104, 229, 254
மலர் வழிபாடு 106, 107
மலைச் சாலை 114, 226
மழையே வா 231
மழை வேண்டல் 231
மறைஞான சம்பந்தர் 143
மறைமலையடிகள் 1, 3, 4, 12, 13, 15, 20, 21, 43, 47, 51, 56, 57, 63, 67,

76, 79, 90, 91, 98, 105, 130, 133, 189, 141, 143, 151, 154, 155, 172, 174, 176 179, 181, 183, 191, 197, 198, 206, 207, 210, 212, 221, 235, 246, 253, 276, 277, 288, 290, 291
மறைமலையடிகள் கலைமன்றம 58, 133, 151, 181, 182, 215, 230, 253
மறைமலையடிகள் நகர் 58, 183
மறைமலையடிகள் நூல்நிலையம் 58, 90, 104, 133, 137, 138, 141, 151, 153, 160, 176, 177, 179, 180, 203, 209, 214, 215, 230, 253
மறைமலையடிகள் பாலம் 58
மறைமலை மருகர் 174
மனுஷவங்காதிபாதம் 148
மாணவர் உயர்தரக் கட்டுரை இலக்கணம் 68
மாணிக்க சாமி 83
மாணிக்க நாயகர் பா. வே. 49, 195, 196
மாணிக்கம் டாக்டர் வ.சுப. 87, 122, 154, 274, 290
மாணிக்ம் கே. ஆர். 273
மாணிக்கவாசக முதலியார் முத்து சு. 59, 104
மாணிக்கவாசக முதலியார் ஞுப.சி. 129
மாணிக்க வாசகர் 63
மாதவராவ் வி. பி. 153
மாதவன் செ 131
மாமன்னன் சு, 214
மாயூரம் 102
மார்க்கசு 173
மாவட்ட ஆட்சியர் சென்னை 145
மிரான் வின்சுலோ 146
மின்சாரத்தின் கதை 73
மீனாட்சி சுந்தரம் பிள்ளை 227
மீனாட்சி சுந்தரனார் தெ. பொ. -129, 132, 205, 218
முக் கூடல் 181
முக்கூடற் பள்ளு 86
முகவர் 29
முகவை 171
முத்தம்மாள் 55
முத்தமிழ் மன்றம் 208
முத்தியாலுப் பேட்டை 214
முத்துக்குமாரசாமி இரா. 61, 63, 64, 66, 87, 140, 141, 147, 151
முத்துசாமி 8, 9, 40
முத்து வீராசாமி செ. 228
முத்தையா க.வ. 87
முத்தையா செட்டியார் இராசாசர் 137, 140, 217
முத்யையா பிள்ளை க. பா. 55
முத்துராசாக் கண்ணனார் 92
முத்தொள்ளாயிரம் 86
முதற்குறள் உவமை 69, 168
முதற்றாய் மொழி 68
முதியோர் கல்வி 229
முதுமொழிமேல் வைப்பு 163
முருகதாசஜயா தி.செ. 214
முருகதாசர் செந்தமிழ்க் கழகம் 208, 213
முருகவேள் ந. ரா. 1349, 174
முருகேசர் முதுநெறி வெண்பா 163
முனிரத்தினம் 103
மூலவர் 106
மூவர் 199
மூவேந்தர் கொடி 98, 232
மெய்கண்ட தேவர் 143
மெய்கண்ட சாத்திர மாநாடு 126
மெய் கண்டார் 83
மேட்டூர் அணை 49
மேரி மாசிலாமணி அம்மையார்

*132*
*மேலப்பாளையம் 212*
*மேலைநாடு 5*
*மேற் கரோள் விளக்க அகரவரிசை*
*75*
*மோகன் 139*
*மோகூர் 7*
*யங்மென் ஆப இந்தியா 163*
*யசோதர காவியம் 85*
*யாழ்ப்பாணம் 58, 60*
*யோவான் மர்டாக் 148*
*யோவான் லாசரசு 148*
*லூதர்பர்பாங் கு 228*
*லிஸ்பன் 156*
*லெவிசு பால் டிங் 149*
*வசன நூல்கள் 117*
*வடசொல் தமிழ் அகரவரிசை*
*97, 253, 281*
*வடமலை வெண்பா 63*
*வடமொழி வரலாறு 90*
*வடிவமைப்பு வனப்பர் 245*
*வடிவழகியார்ல 47, 54*
*வடிவேலாயுதம் க. 212*
*வண்ணச் சரபம் தண்டபாணி*
*அடிகள் 81*
*வண்ணனை மொழிநூலின்*
*வகூவியல் 90*
*வயிரமணியார் 47, 48, 54, 61, 64,*
*வயிரமுத்துப் பிள்ளை 8, 9, 40,*
*42, 43, 208, 215, 254*
*வரதராசனார் மு. 82, 84, 87, 119,*
*132, 135, 167, 175, 202*
*வூரதராசனார் மு. பரிசுச்*
*சொற்பொழிவு 171*
*வரதுங்கராம பாண்டியன் 157*
*வரலாற்று மாநாடு 125, 126*
*வருமானவரி ஆணையர் 188*
*வள்ளலார் 5 30, 138, 179*
*வள்ளலார்*
*திருவருள்மண்டபம் 179, 203*
*வள்ளி நாயகம் நெ. 212*
*வள்ளியப்பா அழ. 218*
*வள்ளுவ நாயனார் 172*
*வள்ளுவர் கோட்டம் 173*
*வள்ளுவர் சொல்ல முதம் 86,*
*168*
*வள்ளுவர் திருக்கோயில் 173*
*வள்ளுவர் நேரிசை 163*
*வள்ளுவப் பெருந்தகை 174*
*வளர்புகழ் வள்ளுவர் 168*
*வளனரசு 214*
*வாணிகம் 17*
*வால்ட்டு விட்மன் 2*
*வானமாமலை வைணவ மடம்*
*103*
*வானொலியில வள்ளுவர்*
*ஓவியம் 168*
*விக்டோரியா கலைப் பொருள்*
*அங்காடி 226*
*விட்ணுராம் மேதி 116, 133*
*விசுவநாத பிள்ளை தி.செ. 20,*
*22, 210, 291*
*விசுவநாதம் கி. ஆ. பெ. 140, 189,*
*228*
*விசுவநாதர் 22*
*விசுவநாதன் தென்னெற்றி 188*
*யீவசுவலிங்கம் 59*
*விபுலானந்தஅடிகள் 13*
*விமலானந்தம் மது. ச. 155*
*வியன்னா 156*
*வில்லியப்ப பிள்ளை 245*
*வில்லியம் நெவின்சு 149*
*வில்லியம்பவுல் 149*
*விவேகானந்தர் 143, 173, 284*
*விளையாட்டுப் பந்தயம் 47*
*வீட்டு நூலகம் 229, 253*

*வீரப்பன் இராம. 141*
*வீரமா முனிவர் 147*
*வெண்ணெய் நல்லூர்ச் சடையன் 78*
*வெள்ளூர் 42, 43*
*வெள்ளிவேற்கை 149*
*வேங்கடசாமி நாட்டார் ந.மு. 84*
*வேங்கடசாமி மயிலை சீனி 86*
*வேங்கடாசலப் பெருமாள் பிள்ளை 42, 43*
*வேங்கடராம நாயுடு 115*
*வேடிக்கை மனிதர் 5*
*வேண்டுகோள் பதிகங்கள் 106*
*வேண்மாள் 7*
*வேணுகோபநலப் பிள்ளை மே.வீ. 129*
*வேதநாயகம் பிள்ளை 231*
*வேப்பேரி டயோசிசன் அச்சகம் 148*
*வேப்பேரி பெண்டிக் மகளிர் உயர் பள்ளி 148*
*வேலன் என்.கே. 73, 203, 229*
*வேலூர் 43*
*வேளாளர்கல்வி அபிவிருத்தி சங்கம் 193*
*வைத்திய சாகரம் 149*
*வைத்தியலிங்கம் பிள்ளை 59*
*வைத்திய லிங்கம் செ. 155*
*ஷா. கே. கே. 217*
*ஜேம்ஸ் ஆலன் 87, 169, 209*
*ஸ்டோக்சு 149*
*ஹார் வார்டு 156*
*ஸ்ரீ பால் 94*

# கழக ஆட்சியர்

# பவள விழா மலரின் மாண்பு

“தமக்கென வாழப் பிறர்க்குரி யாளர்”
தமக்கென அமைந்த தகவுறு விழாவும்
நாட்டினுக் கெடுத்த நல்விழா வாகிப்
பாட்டினுக் கிருப்பாய்ப் பைந்தமிழ் மழையாய்க்
காட்டிய புதையலாய்க் கூட்டிய அமுதாய்த்
தேட்டெனச் சிறந்து திகழுதல் மெய்யெனக்
காட்டுமாப் போலக் கவினுற மலர்ந்தது
தண்டமிழ்த் தோன்றல் தாமரைச் செல்வர்
கண்டெனும் மொழியர் கனிவுறு வ.சு.
பவழ விழாமலர் பார்மின் பார்மின்
கடலிடை முத்தும மலையிடை மணியும்
சுடரிடை ஒளியும் சொல்லிடை நயமும்
கழையிடைச் சுவையும் மழையிடைப் பயனும்
புழையிடை இசையும் பொங்கி வழிந்திடின்
அவைகொலோ இன்பம் ஆர்ந்து மகிழ்ந்திடும்?
புவிக்கெலாம் இன்பம்! புதுப்புது இன்பம்!
இன்பக் கொள்ளையாம் இம்மலர் காண்மின்!
சொல்லியல் காட்டிய சுடரிழை என்கோ!
பொருநட்டிறயம் காட்டிய புகழ்நிலை என்கோ!
அருட்டிறம் காட்டிய அருங்கலம் என்கோ!

*பழக்க வழக்கம் பண்பா டின்னவை*
*பொழிந்து பெருகிய புதுவயல் என்கோ!*
*காவியக் காட்சிக் கலைமனை என்கோ!*
*பாவிகப் பண்பின் பாகே என்கோ!*
*வரலாற் றோவியம் வரைஎழில் என்கோ!*
*என்றும் வாடா இம்மலர்*
*நன்றே பொலிக நானிலத் துயர்ந்தே.*

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்